
WHERE JUSTICE CHIMES


தேரூர்ந்த சோழன் யட்சகானம்



















INSTITUTE OF ASIAN STUDIES
Chemmancherry, Chennai - 600 119
INDIA

WHERE JUSTICE CHIMES

தேரூர்ந்த சோழன் யட்சகானம்

General Editors

Dr. SHU HIKOSAKA, Dr. G. JOHN SAMUEL

Editor

Dr. P. SUBRAMANIAM

English Rendering

G.S. BALAKRISHNAN



INSTITUTE OF ASIAN STUDIES

Chemmancherry, Chennai - 600 119

INDIA

WHERE JUSTICE CHIMES

First Edition August 1997, pp. 480

Price - Rs. 400/- US $ 50

Publication No. 52

Published with the financial assistance from the Government of Tamil Nadu for the best translations from Tamil to other language and from other languages to Tamil

Copies can be had from

Publications Division,
Institute of Asian Studies,
Chemmancherry,
Chennai - 600 119.
India.

Phone	:	(Office)	4961662, 4960831
		(Residence)	4960085
Fax	:		91-44-4960959

Composed by **Institute of Asian Studies**, Chennai - 119.
Printed by the **Pavai Printers Pvt. Ltd.**, 142, J.J.K. Road, Royapettah, Chennai - 600 014. Ph. 8532441, 8532973.

CONTENTS

TRANSLITERATION TABLE

Vowels

அ	-	a	உ	-	u	ஐ	-	ai
ஆ	-	ā	ஊ	-	ū	ஒ	-	o
இ	-	i	எ	-	e	ஓ	-	ō
ஈ	-	ī	ஏ	-	ē	ஔ	-	au
			ஃ	-	k̲			

Consonants

க்	-	k	த்	-	t	ல்	-	l	ஜ்	-	j
ங்	-	ṅ	ந்	-	n	வ்	-	v	ஷ்	-	ṣ
ச்	-	c	ப்	-	p	ழ்	-	l̲	ஸ்	-	s
ஞ்	-	ñ	ம்	-	m	ள்	-	ḷ	ஹ்	-	h
ட்	-	ṭ	ய்	-	y	ற்	-	r̲	க்ஷ்	-	kṣ
ண்	-	ṇ	ர்	-	r	ன்	-	n̲			

பதிப்புரை

டாக்டர் **ஜி. ஜான் சாமுவேல்**, டாக்டர் **ஷு ஹிகோசகா** ஆகிய அறிஞர்களின் சீரிய தலைமையில் 1982 இல் தொடங்கி நடத்தப்பெற்று வருவது சென்னை, ஆசியவியல் நிறுவனம். **ஆசிய மொழிகளின்** பழம்பெரும் இலக்கிய, இலக்கணங்களை அடிப்படையாகக் கொண்டு, அம்மொழிகளினிடையே காணப்பெறும் ஒற்றுமைகளை ஆய்ந்து உலகறியச் செய்வது இந்நிறுவனத்தின் தலையாய நோக்கங்களுள் ஒன்று. இதேபோல இம்மொழி பேசும் மக்களிடையே ஊறிக்கிடக்கும் பழக்க வழக்கங்களின் துணைகொண்டு, **ஆசிய நாடுகளின்** பண்பாடுகளையும் வரலாறுகளையும் ஆய்ந்து உலகுக்கு அறிவிப்பது என்னும் உயர்ந்த குறிக்கோளையும் இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இந்த அடிப்படைக் குறிக்கோள்களை நிறைவேற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனத் துறைகளுள் ஒன்று சுவடிஇயல் துறை. உலகளாவிய நிலையில் கிடைக்கும் சுவடிச் செய்திகளின் சுருக்கத்தை உலகறியச் செய்யும் முறையில் விளக்க அட்டவணைகளைத் தயாரித்து வெளியிடும் பணியை முதன்மையாகக் கொண்டது இத்துறை. பழந்தமிழர்தம் எண்ணங்களை, அனுபவங்களை, கருத்துக்களைத் தாங்கிநிற்கும் ஓலைச்சுவடிகளில் இதுவரை அச்சாகாதவற்றைத் தேர்ந்தெடுத்துப் பதிப்பித்து, அச்சிட்டு இன்றைய மக்களிடையே வைப்பதை அடுத்த பணியாக மேற்கொண்டுள்ளது. இந்தப் பணியை மேற்கொள்ளும்போது,

> "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
> சொல்வதிலோர் மகிமை இல்லை
> திறமான புலமையெனில் வெளிநாட்டார்
> அதைவணக்கம் செய்தல் வேண்டும்" (பாரதியார்)

என்ற கோட்பாட்டைக் கடைபிடித்துச் செயலாற்றுவதிலும் உறுதி கொண்டுள்ளது. அதாவது பழந்தமிழர்தம் எண்ணங்களும் அனுபவங்களும், கருத்துகளும் தமிழ் மொழியறியாத வெளிநாட்டினருக்கும் சென்று சேரவேண்டும்; அவர்களும் அக்கருத்துகளை ஊன்றி உணரவேண்டும்; தமிழர்தம் எண்ணங்களையும் அனுபவங்களையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்னும் பெருநோக்கில், சுவடிப் பதிப்புகளை ஆங்கிலமொழிபெயர்ப்புடன் வெளியிடுவது என்பதை நிறுவனம் தன் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இந்தக் குறிக்கோளின்படி, இதுவரை சுமார் 20 சுவடிப்பதிப்பு நூல்களையும் வெளியிட்டுள்ளது. யட்சகான நாடகங்களாகக் கிடைக்கும் சுவடிகளைப் பதிப்பித்து வெளியிடுவது என்று திட்டமிட்டு நிறுவனச் சுவடித்துறை முடிவெடுத்தது. இந்த முடிவின்படி, முதலில் 'நீலியட்சகானம்' என்னும் சுவடி பதிப்பித்து, அச்சிடப்பட்டது. அந்த நூல் 1-1-1995 இல் தஞ்சையில் நடைபெற்ற எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டில், தமிழக முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. இரண்டாவதாக 'சாரங்கதரன் யட்சகானம்' என்னும் சுவடி அச்சிடப்பெற்று, நிறுவனச் சொந்தக் கட்டிடமாகிய, செம்மஞ்சேரி வளாகக் கட்டிடத்திறப்பு விழாவில் 2-3-1996 இல் வெளியிடப்பட்டது. யட்சகான நாடக வரிசையில் மூன்றாவது நூலாகத் 'தேரூர்ந்த சோழன் யட்சகானம்' என்னும் இந்தச் சுவடிப்பதிப்பு வெளிவருகிறது.

பதிப்புச் சுவடி

சென்னை, அரசினர் சுவடி நூலகத்தின் ஆர்.4098 ஆம் எண்ணில் பாதுகாக்கப்பட்டுவரும் சுவடியிலிருந்து எடுத்து வெளியிடப்படுவது இந்நூல். 120 பக்கங்களைக் கொண்ட இச்சுவடி, கடலூர், ஞானியார் சுவாமிகள் மடத்திலிருந்த ஓலைச்சுவடியிலிருந்து 27-11-1952 இல் படியெடுத்துக் கொண்டுவந்து அரசினர் சுவடி நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஞானியார் சுவாமிகள் மடத்திலிருந்த சுவடிகளனைத்தையும் 1982-83 அளவில் சென்னை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டார்கள். அந்த மூலச் சுவடியை ஒப்பிட்டுக்காணலாம் என்று முயற்சிசெய்தபோது அச்சுவடி, அந்த நிறுவனத்தில் கிடைக்கவில்லை.

ஒப்பிட்டு அறிய வேறு சுவடிகள் கிடைக்காத நிலையில், தேரூர்ந்த வாசகம், தேரூர்ந்த நாடகம், தேரூர்ந்த புராணம் போன்ற பலசுவடிகளிலிருந்து வரலாறு பற்றிய குறிப்புகள் மட்டுமே திரட்டப்பட்டன. அக்குறிப்புச் செய்திகள் ஆங்காங்கு ஒப்பிட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு துணையாகக் கிடைத்த சுவடிகளின் பட்டியல் துணைநூல் பட்டியலில் இடம்பெறுகிறது.

கீலக ஆண்டு ஆவணிமாதம் 30ஆந்தேதி . . . ஆரணி, சடையப்ப செட்டியார் குமாரன் பஞ்சடை செட்டியார் படிக்கின்ற . . . . யட்சகானம் . . . மன்னபெருமாள் குமாரன் ஆரிமுத்து எழுதி நிறைந்தது என்பது ஞானியார் சுவாமிகள் மடத்துச் சுவடியின் ஈற்றிலுள்ள செய்தி. இதனால் இந்தச் சுவடியே படியெடுக்கப்பெற்ற சுவடி என்பது அறிய வருகிறது. மூலச்சுவடியின் காலம் முதலியன அறிய இயலவில்லை.

"நீலிகதை யட்சகான வியலாய்
நினைத்துச் சொலத்திரு **வலத்தில்** விளங்கிய
சூல பாணிசுதன் விநாயகர் துணை யுண்டாமே"[1]

"திருமால் மருகன் **திருவலத் தினில்** வாழ்
முருகேசு வரன்பத முளரியைப் பணிவாம்"[2]

"பழையனூர் நீலிகதை மொழியவே **திருவல்லைக்**
கழகு வில்வ நாதரருள் அடியனுக்குண் டாமே"[3]

என்பன நீலியட்சகானத்திலுள்ள இறை வணக்கப் பாடல்கள். இவற்றில் நீலியட்சகானத்தின் ஆசிரியர் தமது ஊரான திருவலத்து இறைவர்களைப் பாடி நாடகத்தைத் தொடங்குகிறார். இதேபோல,

"தேரூர்ந்த சோழன்கதை செப்பவே **திருவலத்துக்**
காரானை முகத்துதிப்பான் என்கணபதி சரணம்" (பா.5)

"வரப்பாருந் **திருவலத்து** வாரணா சரணம்" (பா.5)

---

1. நீலியட்சகானம் - பா.4. 2. நீலி. - பா.5 3. நீலி. - பா. 6.

என்பன போன்று பல பாடல்களில் திருவலத்து இறைவர்களையே பாடுகிறது தேரூர்ந்த சோழன் யட்சகானம். ஆனால் தேரூர்ந்த சோழன் யட்சகானத்தில் ஆசிரியர் பெயர் வீரசைவகுல, ஆதி மகத்தையன் என்பது இடம்பெறுகிறது. நீலி யட்சகானத்தில் ஆசிரியர் பெயர் இல்லை. இருந்தாலும் இரண்டு நூல்களும் திருவலத்தைச் சார்ந்த ஆசிரியர்களால் எழுதப்பெற்றுள்ளன என்பது இறைவணக்கப் பாடல்களால் தெளிவாகிறது. இதே போல சாரங்கதரன் யட்சகானத்திலும்,

"தென்மாதையில் வெள்ளிக் கந்தையன்
வீரசைவன் விளம்புகின்றான்" (பா.6) என வருகிறது.

வேண்டிவிநாயகன், வெள்ளை வாரணன் என்பன போன்ற சில அடிகளும் தொடர்களும் ஒன்றுபடக் காணப்படுகின்றன. எனவே சாரங்கதரன் யட்சகானமும் ஒரே நாடகக் குழுவைச் சார்ந்த, வீரசைவகுல ஆசிரியரால் உருவாக்கப்பட்டுள்ளது என்பதும் தெளிவாகிறது. நடையாலும் சொல் அமைப்புகளாலும் இம்மூன்று யட்சகான நூல்களும் ஒன்றுபட்டுள்ளன, ஆதலின், ஆசிரியர் ஒருவராலேயே இந்த முன்று யட்சகான நாடகங்களும் எழுதப்பெற்றுள்ளன என்று கொள்ளுவதும் பொருந்தும்.

பதிப்புமுறை

இந்நூலுள் 135 பாடல்களும் 39 வசனங்களும் இடம் பெறுகின்றன. பாடல்களின் பெயர்கள், எண்களுடன் ஆய்வுரையில் இடம்பெறுகின்றன. பாடல்களின் வரிகளுக்கு அல்லது அடிகளுக்கு ஏற்றவாறு 5, 10, 15, 20 என எண்கொடுக்கப்பட்டுள்ளது. பாடல்களுக்கான வரிசை எண் இடது பக்கத்திலும், பாடல் வரி எண் வலதுபக்கத்திலுமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இதே போல வசனங்களின் இறுதியிலும் வரிசை எண் கொடுக்கப்பட்டுள்ளது. நூலுக்கான சொல்லடைவில் பாட்டிலுள்ள சொற்களுக்குப் பாட்டு எண்ணும் வரி எண்ணும் கொடுக்கப்பட்டுள்ளது. வசனத்திலுள்ள சொற்களுக்கு வ-1, வ-2 என வசன் வரிசை எண் கொடுக்கப்பட்டுள்ளது.

சுவடிப் பதிப்பு நூல் என்பது அனைத்துத்தர மக்களுக்கும் பயன்படுமாறு வெளிவர வேண்டும். எனவே படியெடுப்போரால் நிகழ்ந்துள்ள பிழைகளைத் திருத்திப் பதிப்பிக்கும் முறை கையாளப் பட்டுள்ளது. இருந்தாலும் ஆய்வு அடிப்படைக்கு உதவுமாறு சுவடியிலி ருந்தவை - பிழையென்று திருத்தப்பெற்றவை - சுவடியிலிருந்தவாறே சுவடிச்சொல் என்னும் பகுதியில் ஒவ்வொரு பாடலின் முடிவிலும். கொடுக்கப்பட்டுள்ளன.

பாடல்களின் பொருளுக்கேற்பச் சுருங்கிய தலைப்புகள் ஒவ்வொரு பாடலுக்கும் கொடுக்கப்பெற்றுள்ளன. அவை சுவடியில் இல்லாதவை என்பதைச் சுட்ட அடைப்புக் குறிக்குள் அமைக்கப்பெற்றுள்ளன. அந்தத் தலைப்புகளை மட்டும் தொடர்ந்து பார்த்தால் கதையின் போக்கு ஓரளவிற்குப் புலனாகிவிடும். மேலும் கதைமாந்தர் ஒருவரின் கூற்றையோ கதைநிகழ்ச்சியின் ஒரு இடச்செய்தியையோ உடனடியாக அறிய விரும்புவோருக்கும் இத்தலைப்புகள் பெரிதும் துணைபுரியக்கூடும்.

ஒவ்வொரு பாடலின் கருத்தும் பொழிப்புரை போலச் சுருக்கமாகப் பாடலின் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. பாடலைமட்டும் படித்துப் புரிந்துகொள்ள இயலாதவர்களுக்கும், தனியே மேடைநாடகமாக உருவாக்க விரும்புவோருக்கும் இந்தப் பொழிப்புரை துணைபுரியக்கூடும். அரிய சொற்களுக்கு வேண்டிய விரிவான விளக்கங்கள் அந்தந்தப் பாடல்களின் கீழே கொடுக்கப்பெற்றுள்ளன.

நன்றி

யட்சகான நாடக நூல்களைத் தொடர்ந்து பதிப்பிக்கும் பொறுப்பை எனக்கு அளித்து, முதல் யட்சகான நூலை உலகத்தமிழ் மாநாட்டில் வெளியிடச் செய்தும், இரண்டாவது யட்சகான நூலை நிறுவனக் கட்டிடத்திறப்பு விழாவில் வெளியிட்டும் சிறப்பித்த, வணக்கத்திற்குரிய டாக்டர் **ஜி. ஜான் சாமுவேல்** அவர்களும் டாக்டர் **ஷு ஹிகோசகோ** அவர்களும் "தேரூர்ந்த சோழன் யட்சகானம்" என்னும் இந்தச் சுவடிப்பதிப்புப் பணியை மேற்கொள்ளுவதில் மிகவும் பொறுமைகாட்டி ஊக்கமளித்து வந்துள்ளார்கள் பொறுமை மிக்க அந்த அறிஞர் பெருமக்களுக்கு என்றும் நன்றியுடையேன்.

பதிப்புப் பணியை மேற்கொண்டபோது சுவடியை முழுமையாகப் படியெடுத்துக் கொடுத்து உதவியவர் செல்வி. **ச. சுமதி** அவர்கள். உரை விளக்கம், குறிப்புரை போன்றவற்றை எழுதுவதிலும், தூயபடியெடுப்பதிலும் துண்ணைநின்றவர்கள் திருமதி. **மேகலா இளங்கோவன்**, திருமதி. **வெண்ணிலா இளவரசு** ஆகியோர். அச்சுப்படிகளைத் திருத்துவதோடு, பதிப்பில் ஆங்காங்கு காணப்பட்ட பாடல் அடி மாறுபாடுகள், குறிப்புரை வேறுபாடுகள் போன்றவற்றையும் திருத்தி உதவியவர்கள் புலவர் **இராதா. ஜெயலட்சுமி** அவர்களும் திரு. **எம். மருதமுத்து** அவர்களுமாவர் நூலை முழுமையாக எழுத்துப் பெயர்ப்பு (**Transliteration**) செய்வதிலும் அச்சுப்படிதிருத்துவதிலும் துணை நின்றவர்கள் டாக்டர் **கே. ஜெயக்குமார்**, திரு. **எம். பரிமணன்**, திரு.**கே. பன்னீர்செல்வம்**, திரு.**சி.அருணாசலம்** ஆகியோர். ஆங்கிலப் பகுதியின் அச்சுப்படி திருத்தப் பணியில் முழுமையாக உதவியவர்கள் டாக்டர். **எம்.எஸ். நாகராசன்**, திரு. **இ. ஸ்ரீ. இராமசாமி** ஆகியோர். கையெழுத்துப் படியிலிருந்தே கணிப்பொறியில் பதிவு செய்யும் பணியை மேற்கொண்டு, அச்சுப்படி திருத்தும் பணி அதிகம் இல்லாதவாறு தூய்மையாகப் பதிவு செய்து கொடுத்து உதவியவர்கள் திருமதி. **நே. உமாராணி**, செல்வி. பா. **நந்தினி** ஆகியோர். சுவடிகளைப் பயன்படுத்திக் கொள்ள இசைவளித்து உதவியவர்கள் அரசினர் சுவடி நூலகக் காப்பாட்சியர் அவர்கள். திருவாரூருக்கு நேரில் சென்று புகைப்படம் முதலியன எடுத்து வந்து நூலைச் சிறப்படையச் செய்தவர் புலவர் **இராதா. ஜெயலட்சுமி** அவர்கள். அனைத்துப் பெருமக்களுக்கும் அன்பு உள்ளங்களுக்கும் என் நன்றியை உரித்தாக்கி மகிழ்கிறேன்.

பூ. சு.

The Editor's Note

The Institute of Asian Studies, the brain - child of Dr.G. John Samuel and Dr. Shu Hikosaka, has been functioning from 1982 with the laudable aim of strengthening the cultural ties between India and the other countries of Asia. A comparative study of the literature in various Asian languages, the in-depth study of old palm- leaf manuscripts and purposeful interaction with other sensibilities are some of the avowed aims of the Institute.

The department of manuscriptology has taken upon itself the arduous task of preparing exhaustive catalogues of Tamil palm- leaf manuscripts, verily the store houses of knowledge, lying scattered in various places and undergoing a slow process of deterioration. Already, descriptive catalogues have been prepared for the palm-leaf manuscripts in the U.V. Cāmināta Aiyar Library, the Tiruvāvaṭuturai Āṭīṉam Library, the Institute of Asian Studies Library and in C.R.I.S., Chennai.

The Institute has also the ambitions plan of bringing out a series of *Yaṭcakāṉam* works with exhaustive commentaries and English translation. The first book in this series, **Nīli Yaṭcakāṉam**, was released on 1-1-95 at the Eighth International Tamil Conference held at Tañcāvūr by the then Chief Minister. **Cārankatara Yaṭcakāṉam** was released on 2-3-1996 on the occasion of the inauguration of the new building of the Institute of Asian studies of Chemmancherry. The present book **Tērūrnta Cōḻaṉ Yaṭcakāṉam** is the third in the series.

The manuscript of this work bears the number R.4098 and is preserved in the Govt. Oriental Manuscripts Library, Chennai. This contains 120 leaves and has been copied from the manuscripts available in the Ñāṉiyār Cuvāmikaḷ Mutt, Kaṭalūr on 27-11-52. In 1982 - 83, all the palm-leaf manuscripts of Ñāṉiyār Cuvāmikaḷ Mutt were made over to the International Institute of Tamil Studies, Madras. An attempt to study the original of **Tērūrnta Cōḻaṉ Yaṭcakāṉam** transferred from the Mutt was not possible since the manuscript was not available for scrutiny.

In the absence of the original palm- leaf manuscript, other sources like **Tērūrnta Vācakam, Tērūrnta Nāṭakam** and **Tērūrnta Purāṇam** were exploited for background information.

The following details are found in the manuscripts salvaged from the Ñāṉiyār Mutt: In the *Kīlaka* year, on the 30th of the *Āvaṇi* month, this *Yaṭcakāṉam* was read by Pañcaṭai Ceṭṭiyār, son of Caṭaiyappa Ceṭṭiyār. The copyist was Ārimuttu son of Maṉṉa Perumāḷ. From the above note, it is evident that the manuscript of the mutt was not the original one. Dating the original manuscript is out of question as no data is available.

The invocatory verses (2 & 3) of both **Nīli Yaṭca Kāṉam** and **Tērūrnta Cōḻaṉ Yaṭcakāṉam** glorify the lord of Tiruvalam. Obviously, both the authors hailed from there. While the author of **Nīli Yaṭcakāṉam** is unknown, the name of the author **Tērūrnta Cōḻaṉ Yaṭcakāṉam** finds mention in the text. He is Āti Makattaiyaṉ belonging to the Vīra Caiva sect. From some of the expressions found in the invocatory verse No.6 of **Cāraṅkatara Yaṭcakāṉam**, it is possible to surmise that all the **yaṭcakāṉams** were authored by Vīra Caiva play- wrights belonging to the same troupe.

The work contains 135 verses and 38 pieces in prose. The verses have been serially numbered and given on the left side, while the number of lines in each verse is given on the corresponding right side. Prose passages have also been given serial numbers. The index has been prepared to help location of words figuring both in verse & prose passages. Separate symbols have been used for their identification.

Editing has been aimed at eschewing mistakes in copying and facilitating easy reading. But the original words / versions have also been given below in the footnotes.

Captions have been given for each verse indicating whether it is a reproduction of the one found in the original or a new one given by the editor. A mere perusal of the captions will give the story - line. Quick location of speeches by various characters also becomes easy.

Below each verse, its gist is given. This will help readers unequal to the task of interpreting them and will also be useful to those who propose to enact the play.

I wish to acknowledge my deep gratitude to **Dr. G. John Samuel** and **Dr. Shu Hikosaka** who have been the moving spirits behind my editing the **Yaṭcakāṉam** series. But for their encouragement and help, these works would not have seen the light of day.

Also my thanks are due to **Miss. Sumati** who undertook the difficult task of copying the Manuscripts word for word. **Mekala Ilankovan** and **Vennila Ilavarasu** helped me in preparing the notes and commentary and in fair copying the manuscripts. Besides correcting the proof, **Vidwan R. Jayalakshmi** & **M. Maruthamuthu** helped me in interpreting the various readings. I wish to thank **Dr. K. Jayakumar, M. Parimanan, K. Panneer Selvam** & **C. Arunachalam** for help in transliteration work and proof reading, and **Dr. M.S. Nagarajan, Mr. E.S. Ramaswamy** for correcting the English version. **Mrs. N. Umarani** and **Miss P. Nandhini** deserve credit for their neat D.T.P. work. Others who obliged me and deserve thanks are the curator of the Government Oriental Manuscripts Library who gave me access to the manuscripts and **Vidwan R. Jayalakshmi** who took the trouble of visiting Tiruvārūr to take photographs.

P.S.

ஆசிரியர்

". . . . . தொண்டை நாடுத-னிலே
நாரி தெய்வத்துக் கேத்து லாவல்ல
நாதர் வாழ்திரு வல்லை மாநகர்
வீர சைவக்கு லாதி மகத்தையன்
விளம்பு கின்றான்" (பா. 13)

என்னும் அடிகளால் நூலாசிரியரைப் பற்றிய சில குறிப்புகள் பெறப்படுகின்றன. தொண்டை நாட்டில் உள்ளது வல்லை மாநகர். அங்கு எழுந்தருளியிருப்பவர் வல்லநாதர். அந்த நகரத்தில், வீரசைவக் குலத்தில் தோன்றிய 'ஆதிமகத்தையன்' என்பவரே இந்நூலாசிரியர் என்னும் குறிப்புகள் இவ்வடிகளால் பெறப்படுகின்றன.

தொண்டை நாட்டின் வடபகுதி வடார்க்காடு மாவட்டம்; தற்பொழுது வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் எனப்படுவது. அம் மாவட்டத்தின் தலைநகராகிய வேலூரிலி ருந்து வடகிழக்கே சுமார் 20 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது திருவல்லை யென்று நூல் குறிப்பிடும் திருவலம். சென்னையிலிருந்து சித்தூர் செல்லும் பேருந்துப் பாதையில் ராணிப்பேட்டை என்னுமிடத்திலிருந்து சுமார் 15 கி.மீ. தூரத்தில் உள்ளது. இது வல்லநாதர், வல்லநாயகி சமேதராய் எழுந்தருளியுள்ள திருத்தலம்.

நாரதர் அளித்த மாம்பழத்தைப் பெறுவதற்காக விநாயகப் பெருமான் அம்மையப்பரை வலம்வரத் தேர்ந்தெடுத்த திருத்தலமாதலின் இது திருவலம் எனப்படுகிறது. வல்லநாதர் திருக்கோயிலில் இடம்பெறும் விநாயகர், கனிவாங்கிய விநாயகர், வரசித்திவிநாயகர் என்னும் பெயர்களால் அழைக்கப்பெறுவதும் வலம்வந்து கனிவாங்கியவர் என்ற பொருளில் தோன்றியதேயாகும். இந்த விநாயகரை,

"தேரூர்ந்த சோழன்கதை செப்பவே திருவலத்துக்
காரானை முகத்துதிப்பா னென்கணபதி சரணம் . . .
வரப்பாருந் திருவலத்து வாரணா சரணம்"

என்று பாடிவணங்குகிறார் ஆசிரியர்.

வில்வமரங்கள் நிறைந்திருந்த இந்த இடத்தில் பெரிய புற்று தோன்றியது. அந்தப் புற்றில் பலரும் பாலூற்றி வணங்கி வந்தனர். அந்த இடத்தில் சுயம்பு லிங்கமாகத் தோன்றியவராதலின் இறைவன் வில்வநாதன் எனவும், தேவி வில்வநாயகி எனவும் அழைக்கப் பெறுகின்றனர். ஆனால்,

"வாகை சேர்திரு **வல்லை** மாநகர்
வாச நேரிழை **வல்ல நாயகி**
மோக னன்வல்ல **நாத** ரிருபத
முளரி பணிவேன் (8. 1-4)

என இறைவன், இறைவியரை **வல்லநாதர், வல்லநாயகி** என்றே பாடுகிறார் ஆசிரியர்.

திருவலத்துத் திருக் கோயிலின் இராசகோபுரம் தெற்குநோக்கி அமைந்தது. முதல் பிரகாரத்தில் கௌரி தீர்த்தம் என்னும் திருக்குளம்; இரண்டாவது பிரகாரத்தில் வடக்கு நோக்கி எழுந்தருளியிருக்கும் கனிவாங்கிய விநாயகர்; அடுத்தது இறைவன் திருக்கோயில்; இங்கு நாகாபரணந்தரித்தவராய்ச் சுயம்பு லிங்கவடிவில் (தானே தோன்றியலிங்க வடிவம்) கிழக்கு நோக்கி அருட்காட்சிதரும் வல்லநாத ஈசுவரர் ஆகிய அருங்காட்சிகள் நம்மை ஆட்கொள்ளுகின்றன. வடக்குப் பிரகாரத்தில், வல்லநாதரின் மூலத்தானத்தின் இடது புறம் வல்லநாயகியாகிய வல்லாம்பிகையின் திருக்கோயில்; அம்மை கிழக்கு நோக்கி அருடகாட்சி தருகிறாள். இறைவனின் கருவறைக்கு முன்னால் மிகப் பிரமாண்டமான வடிவில் நந்திதேவர் வீற்றிருக்கக் காணுகிறோம். ஆனால் அவரின் பார்வை இறைவனை நோக்கி அமையவில்லை, இறைவனைப்போலவே கிழக்கு நோக்கியே அமர்ந்திருக்கிறார்.. கஞ்சனை வென்றுவந்ததற்கு அடையாளமாகக் கிழக்கு நோக்கியே அமருமாறு இறைவன் ஆணையிட அதன்படி வீற்றிருக்கும் திருக்கோலம் இது. இவை திருவலத்துத் திருக்கோயில் பற்றிய செய்திகள்.

நாடக ஆசிரியர் -யட்சகான நாடகத்தின் ஐந்தாவது பாடல் தொடங்கி அனைத்துப் பாடல்களுக்கும் தாளம், பாவகை ஆகியவற்றைச் சுட்டுகிறார் ஆசிரியர். ஆனால் முதல் நான்கு பாடல்களுக்குத் தாளம் முதலிய எதையும் சுட்டவில்லை. அப்பாடல்களை நாடகக்குழுவினர் தங்களுக்குப் பிடித்தமான அல்லது தங்கள் குழுவுக்கே உரித்தான, வழக்கமான பண்களில் பாடிக் கொள்ளட்டும் என்று விடுகிறார். இது நாடக ஆசிரியருக்குள்ள பிறர் உரிமை பாராட்டும் உள்ளத்தை எடுத்துக்காட்டுகிறது. பிற பாடல்களையும் இன்ன இன்ன பண்ணில் பாடவேண்டு:ம என்று கட்டாயப்படுத்தாமல் பாடற் பொருளுக்கேற்ற தாளத்தையும் நடையையும் மட்டுமே குறித்துச் செல்வதும் நாடகம் நடத்துனர்க்கு அவர் அளிக்கும் உரிமையையே எடுத்துக்காட்டும். அவரவர்களுக்கு விருப்பமான பண்களை அமைத்துக் கொள்ளும் உரிமையை வழங்குகிறார்.

விநாயகனையும் முருகனையும், சிவபெருமானையும் பார்வதியையும் போற்றித் துதித்துப்பாடும் ஆசிரியர் அதேபாடலில்,

'ஆலிலை மேல்துயில் அனந்த சயனனே-சரணம்
நந்த பாலனே சரணம்
வாலி மர்த்தனஞ்செய் தீரனே சரணம்" (2)

எனத் திருமாலையும் போற்றிப்பாடுகிறார். இது மதவேறுபாடு கருதாத ஆசிரியரின் பண்பை எடுத்துக் காட்டுவது.

"மேதினிமேற் சுபமெய்தி நீதியுமுள சோழன்கதை
நூதனமாக ஓதினேன்" (3)

என்னும் கூற்று இந்தச் சோழன் கதை இதுவரை கதைப்பாடலாகவும் புராணமாகவும் நாடகமாகவும் பாடப்பெற்றுள்ளது; யட்சகான நாடகவடிவில் முதன் முதலாக இந்த ஆசிரியரே பாடுகிறார் என்பதை உணர்த்துகிறது. முன்பே குறிப்பிட்டது போலத் தாமே இயற்றித் தம் நாடகக் குழுவின் மூலம் தங்கள் ஊரிலேயே முதன் முத்லில் நடத்திக் காட்டியிருக்கிறார் என்பது தெளிவாகிறது.

நாடகத்துள் நல்ல இலக்கியத் தொடர்களைக் கையாளும் ஆசிரியர், வழக்குத் தொடர்கள் பலவற்றையும் ஆங்காங்கு எடுத்தாளுகிறார். இவை நூலாய்வில் தனித்தனியே எடுத்துக்காட்டப் பெறுகின்றன.

நாடகம் எழுதியதன் நோக்கம்

இந்த நிலவுலகத்தை நீதிநெறி தவறாமல் பாதுகாத்து வருபவர்கள் சோழமன்னர்கள். தமிழ்மொழியின் சிறப்பை உலகறியச் செய்பவர்களும் அம்மன்னர்களே. அத்தகு சோழமன்னர் வரலாற்றை மக்கள் போற்றி வரவேற்க வேண்டும்; அதற்காகவே இந்த நாடகம் பாடப்படுகிறது (4) என்னும் செய்தி ஆசிரியர் நாடகம் செய்ததின் நோக்கத்தை வெளிப்படுத்துகிறது.

யட்சகான நாடகத்திற்குச் சுமார் நூற்றைம்பது இசைகள் உண்டு என்ற நிலை மாறி, இன்றைய நாடக பாகவதர்கள் சுமார் இருபது இராகங்களை மட்டுமே நடைமுறையில் கையாண்டு வருகிறார்கள் என்பர். ஆனால் யட்சகான நாடக ஏடுகளில் பெரும்பாலும் தாளங்கள் மட்டுமே குறிப்பிடப் படுகின்றன. நாடக பாகவதர்களின் விருப்பத்திற்கேற்ற இசையைப் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். பாடல்களில் அமையும் எதுகை, மோனைகள், தொடக்க முடிவு ஒலிநயங்கள், சீர்நயங்கள், சீர்தளைகளின் ஓசை நயங்கள் ஆகியவற்றை வெளிப்படுத்தத் தாளங்கள் பயன்படுத்தப் படுகின்றன.

யட்சகான நடையில், அடதாளம், ஏகதாளம், சம்பை, திரிபுடை, துருவம், மத்தியம், ரூபகம் என்னும் ஏழு வகைத் தாளங்கள் இடம் பெறுவதுண்டு. ஆனால் இந்த யட்சகான நாடக நூலுள் நான்கு தாளங்களை மட்டுமே கையாளுகிறார் ஆசிரியர். அதாவது நூலுள் இடம்பெறும் 135 பாடல்களுள் ஒன்பதாம் பாடல் ஒன்று மட்டுமே **அடதாளத்திலானது**. பிறவற்றுள் **ஏகதாளத்தில்** 25 பாடல்களும், **சம்பையில்** 33 பாடல்களும் இடம்பெறுகின்றன. **திரிபுடையில்** அமைந்தவை 26 பாடல்கள். பிற 50 பாடல்களும் பாட்டுநடையை அடிப்படையாகக் கொண்டு பெயரிடப் பெற்றுள்ளன. அந்தப் பாட்டுநடைப் பாடல்களுள்,

திபதை 25, சிந்துவகை 15, தருவகை 4, கந்தபத்தியம் 2, அர்த்த சந்திரிகை 1,கலித்துறை 1, கலிவிருத்தம் 1, சரணம் என்னும் மகுடத்தையுடைய கடவுள்வணக்கப்பாடல் 1 என்னும் வகைகள் இடம்பெறுகின்றன.[1]

1.

1.	அடதாளம்	- பாட்டு எண் -	9	=	1
2.	ஏகதாளம்	- பா. எண் -	6, 10, 14, 18, 22, 29, 37, 45, 47, 50, 68, 70, 72, 76, 84, 86, 90, 96, 99, 106, 109, 115, 117, 119, 132	=	25
3.	சம்பை	- பா. எண் -	5, 7, 11, 16, 19, 28, 34, 38, 41, 46, 51, 59, 67, 77, 81, 85, 89, 91, 93, 95, 97, 100, 102, 104, 108, 114, 118, 122, 124, 126, 128, 130, 135	=	33
4.	திரிபுடை	- பா.எண் -	8, 13, 17, 21, 32, 35,48, 52, 54, 56, 58,64, 66, 78, 80, 82, 92, 98, 101, 105, 110, 116,123, 127, 131, 134	=	26
5.	திபதை	- பா. எண் -	15, 20, 23, 27, 30, 33, 40, 53,55, 57, 60, 63, 65, 69, 73, 79, 83, 87, 94, 103, 107, 121, 125, 129, 133	=	25
6.	சிந்துவகை	- பா,எண் -	12, 26, 31, 39, 44, 49, 61, 62, 74, 75, 88, 111, 112, 113, 120	=	15
7.	தருவகை	- பா,எண் -	25, 42, 43, 71	=	4
8.	கந்த பத்தியம்	- பா.எண் -	3, 24	=	2
9.	அர்த்தசந்திரிகை	- பா.எண் -	36	=	1
10.	கலித்துறை	- பா. எண் -	4	=	1
11.	கலிவிருத்தம்	- பா. எண் -	1	=	1
12.	சரணம் - மகுடம்	- பா. எண் -	2	=	1
					135

The author and his place of birth

From verse 13, it is evident that the author of **Tērūrnta CōlaṉYaṭcakāṉam** was Ātimakattaiyaṉ. He hailed from Vallaimānakar in Toṇṭaināṭu. He was a Vīra Caiva by birth.

Vallaimānakar or Tiruvalam, as it is called in the text, is twenty kilometres away from Vellore in the North Arcot Ampētkar district. If you break journey at Ranipet in the Madras - Chittoor line, half an hour's motoring will take you to Vallaimānakar, which is roughly 15 k.m. away. The presiding deities of Vallaimānakar are Vallanātar and Vallaṉāyaki.

This was the holy spot chosen by Lord Vināyaka to circle his parents and obtain the divine mango fruit brought by sage Nārata. Because of Vināyaka going round his parents in respectful homage, the place came to be known as Tiruvalam as well. The author alludes to the story of the mango fruit in one of his invocatory verses.

The legend behind the emergence of an idol at Vallaimānakar is worth recounting. Amidst the *vilvam* trees, with which the place abounded, there suddenly sprang to view a snake pit which soon became a place of worship for the devout. They began pouring milk as a humble token of their intense devotion. Soon emerged two *liṅkās* (icons) which were identified as those of the lord and his spouse. The lord was called Vilvanātaṉ, while the mother goddess went by the name Vilvanāyaki. The author of the present text chose to call the deities as Vallanātaṉ and Vallanāyaki (vide 8-1-4).

The topography of the shrine

The royal tower of the temple faces the south. In the first courtyard is the holy tank called Kauri Tīrttam. The second courtyard is hallowed by the presence of Lord Vināyaka, who obtained the divine mango fruit. Next comes the principal deity who sits facing the East. In the Northern courtyard is housed the temple of Vallanāyaki. In keeping with tradition, she occupies the left side of Her lord. In front of the magnificent **sanctum sanctorum** of the Lord rests Nanti, the divine bull. Like His master, He is also facing the east. This is in obedience to the dictates of Lord Civaṉ who wanted him to assume that posture in memory of His triumph over the evil- doer Kañcaṉ.

About the work

The author's intention in writing this work was to pay a tribute to the kings of the Cōḻa lineage who were noted for their sense of justice and fairplay. They were also great lovers of the Tamil language and patronised Tamil savants and poets.

Though many others had earlier rendered the story of Maṉunītic Cōḻaṉ either as ballads or purāṇās, it was given to the author to render it in the form of a **Yaṭcakāṉam,** a medley of dance, drama and music. Another significant fact was that the author also participated in the show and sang a few songs. What made the work so appealing was the author's free use of colloquialisms and slang words along with the stock-in-trade terminology. Elsewhere, this aspect has been dealt with in detail.

The author's catholicity of outlook is evident from verse 2 where he eulogises not only Vināyakaṉ, Murukaṉ, Civaṉ and Pārvati, but also pays a tribute to Tirumāl resting on the divine snake.

The use of songs

In ***Yaṭcakāṉams,*** songs were employed to enhance their appeal. Unlike his predecessors, the present author has stipulated *rākās* and *tāḷās* to be followed in given situations. For the first four verses, he has not specified any musical notations. Perhaps they can be sung according to individual whims. From the fifth verse onwards, he has suggested tunes to be followed quite rigidly.


Time was, when nearly 150 different melodies were employed by the **Yaṭcakāṉam** artistes. Today, the number has been reduced to a mere twenty. In the earlier **Yaṭcakāṉam** works, *tāḷās* had been suggested for some songs. But the present writer has enumerated *rākās* as well.

The convention was to limit oneself to seven *tāḷās* namely *Aṭa tāḷam, Ēka tāḷam, Campai, Tiriputai, Turuvam, Mattiyam* and *Rūpakam.* The author of this work has deviated from the accepted practice and employed only 4 *tāḷās.*


Out of 135 verses, which can be set to music, the ninth verse alone is in *Aṭatāḷam*. There are 25 verses in *Ēkatāḷam*, 33 in *Campai* and 26 in *Tiripuṭai*. For the remaining fifty verses, no rigid style has been suggested. Perhaps the artists were free to sing according to their **Mano Dharma**. The verbal conceits like alliteration and assonance employed by the writer often helped in determining the *tāḷa* and the *rāka*. More details on the musical notations are given in the footnotes[1]

1.

No.	Type		Verses		Total
1.	*Aṭa Tāḷam*	- Verse	- 9	=	1
2.	*Ēka Tāḷam*	- Verses	- 6, 10, 14, 18, 22, 29, 37, 45, 47, 50, 68, 70, 72, 76, 84, 86, 90, 96, 99, 106, 109, 115, 117, 119, 132	=	25
3.	*Campai*	- Verses	- 5, 7, 11, 16, 19, 28, 34, 38, 41, 46, 51, 59, 67, 77, 81, 85, 89, 91, 93, 95, 97, 100, 102, 104, 108, 114, 118, 122, 124, 126, 128, 130, 135	=	33
4.	*Tiripuṭai*	- Verses	- 8, 13, 17, 21, 32, 35,48, 52, 54, 56, 58,64, 66, 78, 80, 82, 92, 98, 101, 105, 110, 116,123, 127, 131, 134	=	26
5.	*Tipatai*	- Verses	- 15, 20, 23, 27, 30, 33, 40, 53,55, 57, 60, 63, 65, 69, 73, 79, 83, 87, 94, 103, 107, 121, 125, 129, 133	=	25
6.	*Cintu type*	- Verses	- 12, 26, 31, 39, 44, 49, 61, 62, 74, 75, 88, 111, 112, 113, 120	=	15
7.	*Taruvakai*	- Verses	- 25, 42, 43, 71	=	4
8.	*Kantapattiyam*	- Verses	- 3, 24	=	2
9.	*Artta cantrikai*	- Verse	- 36	=	1
10.	*Kalit turai*	- Verse	- 4	=	1
11.	*Kali Viruttam*	- Verse	- 1	=	1
12.	*Caraṇam-Makuṭam*	- Verse	- 2	=	1
					135



Lord Tiyākēcar



Goddess Kamalāmpikai



The Temple of Tiruvalam

ஆய்வுரை

நாடகம் ஒரு கண்ணோட்டம்

நாடகத்தோற்றம்

மனிதனின் இயல்பூக்கங்களில் ஒன்று போலச் செய்தல். பிறர் செய்வது போலவே தாங்களும் செய்து பார்க்க முற்படும் அச்செயலைக் காண்போர் 'விளையாட்டு' என்பர். காண்போருக்கு அது விளையாட்டு போலத் தோன்றலாம். போலச் செய்வோரின் உணர்ச்சி வெளிப்பாடு, தொடக்கத்தில் முறையின்றி செயற்படுவது போலக் காணப்பட்டாலும், திரும்பத் திரும்பச் செயற்படும்போது ஒரு ஒழுங்கான, படிப்படியான முறையமைப்பைப் பெற்று விடுகிறது. அந்தப் பண்பட்ட நிலையிலமையும் விளையாட்டு, காண்போருக்கு மகிழ்ச்சியூட்டும் ஒரு கலையாகவே அமைந்து விடுகிறது. போலச் செய்யும் விளையாட்டாகிய பண்பட்ட அந்தக் கலையே ஒரு கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு, அதன் பொருள் விளக்கத்திற்கேற்ற பேச்சு நடைகளும் இணைகிறபோது நாடகம் என்ற பெயரைப் பெற்றுவிடுகிறது. இந்த உண்மையால் மனிதனின் இயல்பாகிய போலச் செய்தலே நாடகத்தின் தோற்றம் என்பது புலனாகும். போலச் செய்யும் பண்பு என்பது மனிதத் தோற்றத்தோடு ஒன்றிய ஒன்று ஆதலின் நாடகம் என்பது மனிதப் பிறவியோடு இணைந்து தோன்றிய ஒன்று என்பது வெளிப்படையாகி விடுகிறது.

மனிதப் பிறவியோடு ஒன்றித் தோன்றிய நாடகப் பண்பு அந்த மனிதனின் உணர்ச்சி வெளிப்பாட்டின் வேறுபாடுகள், உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் உடலுறுப்புகளின் முறையான அசைவுகள், அந்த அசைவுகளின் பொருளை யுணர்த்துவதற்கேற்ற பேச்சு நடைகள் ஆகியவை இணைந்து வெளிப்படும் நிலையில் அது ஒரு கலையாக ஏற்கப்படுகிறது. அக்கலையே நாடகக் கலை ஆகிறது. இந்த நாடகக் கலை என்பது, காலத்துக்கும் இடத்துக்கும் பொருந்துமாறு உருவாகிவிடுகிறது; ஆங்காங்கு வாழும் மக்களின் பண்புகளுக்கும் உணர்வுகளுக்கும் பழக்கவழக்கங்களுக்கும் ஏற்ற நிலையிலும் உருவாகிவிடுகிறது. எனவேதான் நாடகமானது காண்போரைக் கவரும் ஒரு கலையாக, அவர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் ஒரு கலையாக, அவர்கள் வியந்து பாராட்டும் ஒரு கலையாக நிலைத்து நிற்கிறது.

மனிதனின் பலவகை உணர்வுகளின் அடிப்படையில் தோன்றிய நாடக உணர்வு, உடலுறுப்புகளின் அசைவுகளுடன் இணைந்து **'நடனம்'** என்ற பெயரைப்பெற்றது; நிகழ்ச்சிகளை விளக்கும் இயல்புக்காட்சிகளாக வளர்ந்து **நடனக்கலை** என்ற சிறப்பையும் பெற்றது. அரங்கநடிப்பில் இசை இணைக்கப்பட்டதோடு, பேச்சும், ஒலி – ஒளிக்காட்சி அமைப்புகளும், வேடப்புனைவுமாகிய பல்வேறு கலைகளும், உத்திமுறைகளும் இணைந்து ஒரு கூட்டுக் கலையாக வளர்ந்தபோதே அது **'நாடகம்'** என்னும் பெயரைப் பெற்றது.

ஆடலும் பாடலும் இணைந்த இசைநாடகமாக நடித்துக் காட்டப்பெற்றவை அரங்கக் காட்சிகளாக மட்டும் அமைந்து காலவெள்ளத்தில் மூழ்கி மறைந்து போயின. ஆனால் கூட்டுக் கலையாக வளர்ந்த நாடகக்கலையோ மேடையில் நடிக்கப் பெற்ற தோடல்லாமல், எழுத்து வடிவில் உருவாக்கப் பெற்றவை **நாடக இலக்கியங்களாக** வாழ்ந்து வருகின்றன.

உலகளாவிய நிலையில் நாடகம்

வாழ்ந்து வரும் நாடக இலக்கியங்களுள் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உருவாக்கப் பெற்றனவாகக் கருதப்பெறும் பண்டைய கிரேக்க நாடகங்களே காலத்தால் முற்பட்டவை எனப்படுகின்றன. அதீனி, அப்பல்லோ, பாலஸ், வீனஸ், ஜூபிடர் முதலான தெய்வங்களைப் போற்றிப் புகழ்ந்து, பாடிப் பரவி, ஆடி வணங்கிய நிலையில் கிரேக்க நாடகங்கள் தோற்றமளித்துள்ளன. ஏஸ் கைலஸ் (Aeschylus) என்னும் கிரேக்க நாடக ஆசிரியர், மனிதனுக்கும் இறைவனுக்கு மிடையே சிக்கலை உருவாக்கி அதனால் நிகழும் போராட்டங்களைக் கருப்பொருளாகக் கொண்ட புராணக்கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு பல நாடகங்களை உருவாக்கியுள்ளார்.தொடர்ந்து மனிதர்களிடையே நிகழும் பலவகைப் போராட்டங்களைக் கருப்பொருளாகக் கொண்டு நாடகங்களை உருவாக்கியவர் சோபாக்கிளெஸ் (Sophocles)என்னும் கிரேக்க ஆசிரியர்.

இக்காலச் சமூக இயல்புகளையும், உயர்ந்த பண்புகளையும் எடுத்துக்காட்டி மக்களின் மனத்தைக் கவரும் நாடகங்கள் பல யூரிப்டெஸ் (Euripdes), அரிஸ்டோ பெர்னஸ் (Aristophernus) ஆகிய கிரேக்க ஆசிரியர்களால் எழுதப்பட்டுள்ளன.

கிரேக்க நாடகங்கள் பெரும்பாலும் செய்யுள் நடையில் இயற்றப்பட்ட துன்பியல் (Tragedy) நாடகங்களாகவே காணப்படுகின்றன. "இதுவரை இருபத்து மூன்று கிரேக்க நாட்கங்களே முழுமையாகக் கிடைத்துள்ளன" என்பர் [1]

ஜப்பான் நாடு எரிமலைகள் நிறைந்தது. அம்மலைகள் சீறி அழிவை ஏற்படுத்துவதனால் அஞ்சி நடுங்கிய மக்கள், எரிமலைகளின் சீற்றம் இறைவனின் கோபத்தால் ஏற்படுகிறது என்று கருதினர். அந்த இறைவனை அமைதிப் படுத்துவதே எரிமலைகளின் சீற்றத்தைத் தடுக்கும் வழி என்று உணர்ந்தனர். சாம்பஸோ (Samboso)என்னும் பாடலுடன் கூடிய நடனத்தை ஆடித் தெய்வத்தை அமைதிப்படுத்தவும் முயன்றனர். இந்த நடனத்திலிருந்து நோ நாடகம் என்னும் கூட்டுப் பாடல் நாடகம் உருவாக்கப்பட்டது.

எகிப்து நாட்டில் ஒசிரிஸ் (Osiris) என்னும் இறைவழிபாட்டிலிருந்தும், ரோம் நாட்டில் டிமிட்டஸ், பாக்கஸ் ஆகிய இறைவழிபாடுகளிலிருந்தும் நாடகம் வளர்ந்துள்ளது. சீனாவில் இசைப்பாடலுடன் கூடிய நடனத்திலிருந்து நாடகம் தோன்றி, சமுதாயச்

---

1. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நாடகம், பக்.3.

சிந்தனைகளை, சமூகத்தில் காணப்படும் வாழ்க்கை நடைமுறைகளை வெளிப்படையாக நாடகமேடைகளில் எடுத்துக்காட்டும் போக்குடையனவாகப் பல நாடகங்கள் உருவாகியுள்ளன. இஸ்லாமியர் நாடகத்தை ஆதரிப்பதில்லை என்றாலும் நபிகள் நாயகம், அன்னை பாத்திமா, அலி போன்றோரின் முடிவை எடுத்துக்காட்டும் போக்குடைய துன்பியல் நாடகங்கள் சிலவற்றை உருவாக்கி உள்ளனர். ஏசு பெருமானின் வாழ்க்கை நிகழ்ச்சிகளும், வேதநூல் கூறும் சில கதைகளும் நாடகங்களாக உருவாகியுள்ளன. இவை கிறித்தவ ஆலய விழாக்காலங்களில் நடிக்கப் பெற்றுள்ளன. சமயப் பற்றுடன் மக்கள் இவற்றைக் கண்டுகளிக்கின்றனர்.

பதினாறாம் நூற்றாண்டில் ஆங்கில மொழியில் பல சிறந்த சீர்திருத்த நாடகங்கள் தோன்றின. கிட் (Kyd) மார்லோ (Marlowe) போன்றவர்கள் கிரேக்க நாடகமுறைகளைப் பின்பற்றித் துன்பியல் நாடகங்களை உருவாக்கினர். லிலி (Lyly). பீல் (Peele) கிரீன் (Green) போன்றோர் இன்பியல் நாடகங்களைப் படைத்தனர். இவர்களின் நாடகக் கருப்பொருள்களையும் நாடகமுறைகளையும் முன் மாதிரியாகக் கொண்டு அவற்றில் ஆழ்ந்த கவனம் செலுத்திய ஷேக்ஸ்பியர் (கி.பி.1564-1616) இன்பியல், துன்பியல்கள் கலந்த இயல்பான, முழுமையான வாழ்க்கை நெறியோடு ஒட்டிய நாடகங்கள் பலவற்றை எழுதி உலகப்புகழ் பெற்றார். அரசியல், மதம், சமுதாயம் என்ற அடிப்படையில் அனைத்து வாழ்வியலிலும் கலந்துள்ள நிறை, குறைகளைச் சுட்டிக்காட்டுவனவாக அவர்தம் நாடகங்கள் அமைந்தன. இந்த நாடகமுறைகள் அனைத்தும் மாற்றம் பெற்ற நிலையில், இருபதாம் நூற்றாண்டின் நாடக ஆசிரியராகிய பெர்னாட்ஷா (Bernard Shaw) வின் நாடகங்கள் உரைநடை உரையாடல்களைக் கொண்டனவாகத் தோற்றம்பெற்றன. அவற்றில் நீண்ட உரையாடல்கள் குறைந்தன; தனிமொழி (Soliloquy) கள் அருகின. அவை வாழ்க்கையோடு ஒட்டி விளங்கின; அதனால் மக்களோடு நெருங்கி விட்ட நிலை அந்நாடகங்களுக்கு ஏற்பட்டது.

கருப்பொருளால் ஷேக்ஸ்பியரையும், நடையால் பெர்னார்ட்ஷாவையும் பின்பற்றிய நாடகங்கள் உலகளாவிய நிலையில் இடம்பெறலாயின. பிரெஞ்சு நாட்டவரான மோலியர் என்பாரின் சமுதாய நடைமுறைகளை எள்ளி நகையாடும், சுவையமைந்த நாடகங்கள் மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றன. குடும்பப் பிரச்சனைகள், சமுதாயப் போராட்டங்கள் ஆகியவற்றைக் கருப்பொருளாகக் கொண்ட நார்வே நாட்டு இப்சன் (1828-1906) என்பாரின் நாடகங்கள் இருபொருள் கொண்ட சொற்றொடர்களால் அமைந்து விறுவிறுப்பை ஊட்டின.

இந்திய நாடகம்

உலகளாவிய நிலையில் தோன்றி வளர்ந்துள்ள நாடக முறைகள் இந்திய நாடகத் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றுக்கு வேறுபட்டவையல்ல. மக்களின் இன்பப் பொழுது போக்குக்குரியனவாகிய ஆடலும் பாடலும் எளியமுறையில் தோன்றிச் சிறிது சிறிதாக முறைப்படுத்தப்பட்டு வளர்ந்த நிலையில் அவை இசைநாடகமாயின. இராஜஸ்தான்,

காஷமீர், குஜராத், சிந்து, பஞ்சாப், மகாராட்டிரம் போன்ற பகுதிகளில் அந்தந்த மொழியில் எழுதப்பெற்ற பாடல்களுடன் கூடிய இசைநாடகங்கள் இன்றும் நடைபெறுகின்றன. அஸ்ஸாமில் அங்கிய நாடகம், மணிப்பூரில் மணிபுரி என்னும் நாட்டிய நாடகம், வங்காளம், ஒரிசா ஆகிய பகுதிகளில் கூத்திரா போன்ற இசை நாடகங்கள் வழக்காற்றில் உள்ளவை.

பரத முனிவரின் 'நாட்டிய சாஸ்திரம்' என்னும் நாடக இலக்கணம் இந்திய நாடகங்களின் பழமையை உணர்த்தும். அதாவது இலக்கணநூல் தோன்றுவதற்கு முன்பே அந்த நாடக அமைப்புகள் இருந்தன என்பது தெளிவாகும், துன்பியல் நாடகம் என்பது இந்திய நாடகங்களில் பெரும்பாலும் இடம்பெறுவதில்லை. நாடக உறுப்பினர்களுள் கொடியவர்கள் அழிக்கப்படுவர். அந்த நிகழ்ச்சி காண்போருக்கு மனநிறைவை அளிப்பதாகவே அமையும். நல்லவர்கள் இறப்பதாக நாடகமுடிவு அமையுமானால் அவர்கள் இறையடியை அடைந்து பெரும் பேற்றினை அடைந்ததாகவே காட்டப்பட்டு இன்ப உணர்வையூட்டுவதாக முடிக்கப்படும்.

சமஸ்கிருத மொழி நாடகங்கள் முழுமையாக இன்பியல் நாடகங்களாகவே தோன்றின. ஆயினும் அவை திருந்திய மொழிநடையில் கற்றறிந்தார் மட்டுமே உணரக்கூடிய நிலையில் எழுதப்பட்டனவாதலின் பொதுமக்களிடம் செல்வாக்கைப் பெறாமல் குறுகிய கால அளவிலேயே நாடக அரங்கங்களிலிருந்து விலகி, இலக்கியச் செல்வங்களாக, நூல்வடிவைப் பெற்றுவிட்டன. அவற்றுள் காளிதாசரின் சாகுந்தலம், விக்கிரம ஊர்வசியம், மாளவிகாக்கினிமித்திரம் ஆகியவை காளிதாசரை உலகப்பெருங்கவிஞருள் ஒருவராகப் பெருமையடையச் செய்துள்ளன. கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த மன்னர் ஹர்ஷவர்த்தனரின் இரத்தினாவளி, நாகாநந்தா, பிரியதரிசிகா ஆகிய நாடகங்கள் நாடக வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நின்றன. ஆயினும் அந் நாடகங்களுக்குப் பிறகு சமஸ்கிருத நாடகங்கள் அருகி விட்டன.

1832 இல் பிரசன்னகுமார்தாகூர் என்பவர் ஷேக்ஸ்பியர் நாடகம் ஒன்றினை வங்காளமொழியில் மொழிபெயர்த்து மேடை ஏற்றினார். ரவீந்திரநாததாகூரின் கோரா, அஞ்சலகம் போன்ற நாடகங்களும் வங்காளமொழியில் இயற்றப்பட்டன. இவை நாடக இலக்கியங்களுக்கு மறுமலர்ச்சி யூட்டின.

தென்னிந்திய நாடகங்கள்

ஆந்திர நாட்டின் வீதிநாடகம், கன்னட நாட்டின் யட்சகானம், கேரள நாட்டின் கதகளி, தமிழ் நாட்டின் தெருக்கூத்து ஆகியவை நாட்டிய நாடகங்களை அடிப்படையாகக் கொண்டவை; இன்றைய நாடகங்களுக்கு முன்னோடிகளானவை.

தெலுங்கு மொழியில் ஷேக்ஸ்பியரின் ஜூலியஸ் சீசர் என்னும் நாடகம் 1876 இல் வாசுதேவ சாஸ்திரி அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு, மேடையேற்றப்பட்டது. **'மஞ்சரிமதுகாரியம்'** என்னும் நாடகத்தை இராமச்சந்திரகவி தெலுங்கில் எழுதினார். தொடர்ந்து வாசுதேவசாஸ்திரியின் **நந்தராஜ்ஜியம்,** வீரேசலிங்கம் அவர்களின்

அரிச்சந்திர நாடகம், சீனிவாசராவ் அவர்களின் **'விஜயநகர சம்ராஜ்யபதனம்'** ஏ.எஸ்.சர்மா அவர்களின் 'மனோரமா' போன்ற பல நாடகங்கள் தெலுங்கு நாடக உலகுக்குப் பெரும்புகழ் ஈட்டித்தந்தன.

கன்னடமொழியில் 'சரலரகலே' என்னும் இசையமைப்புடன் கூடிய **'யட்சகானம்'** என்னும் இசைநாடகம் பெரு வழக்கிலிருந்தது. 1920 முதல் பல வடமொழி நாடகங்களும் ஆங்கில நாடகங்களும் மொழிபெயர்க்கப்பட்டன. கேரூர் அவர்களின் **நளதமயந்தி**, நாராயண ஐயரின் **ஸ்திரி தர்ம ரகசியம்**, ஸ்ரீ என்பாரின் மகாபாரதக் கதை தழுவிய **அசுவத்தாமா, கதாயுத்தம்** போன்றவை, மாஸ்தி என்னும் ஆசிரியரின் **சித்திராங்கதா, யசோதரா, அனார்கலி** ஆகியவை, கைலாசம் அவர்களின் பல சமூக நாடகங்கள், அத்ய ரங்காச்சாரியார் அவர்களின் பல சமூகச் சீர்திருத்த நாடகங்கள் போன்றவை கன்னடமொழி நாடக உலகில் புகழ் பரப்பிவருவன.

மலையாளமொழியில் பழமையான கதகளி, கூடியாட்டம் போன்றவற்றையடுத்துப் போர்ச்சுகீசியரின் சவுட்டு நாடகத்தாக்கம் பெற்றுத் தந்திரக் காட்சி நாடகங்கள் நடத்தப்பட்டன. 1882இல் சமஸ்கிருத **'சாகுந்தலம்'** மொழிபெயர்க்கப் பெற்று மேடையேறியது. தொடர்ந்து 1889இல் ஜானகி பரிணயம், 1890இல் மாளவிகாக்கினி மித்திரம், 1892இல் உத்தரராம சரித்திரம் போன்றவையும் சமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டன. 1893 இல் வர்க்கீஸ் மாப்பிள்ளை என்பவர் சூசையின் வரலாற்றை **'எபிராயக்குட்டி'** என்னும் நாடகமாக இயற்றினார். கோவிந்தபிள்ளை அவர்கள் 'கிங்லீயர்' என்னும் நாடகத்தை மொழிபெயர்த்தார். சி.வி. இராமனின் **மார்த்தாண்ட வர்மா, தர்மராஜா, ராஜராஜ பகதூர்** போன்ற புதினங்கள் நாடக வடிவம் பெற்று மேடையேறின. பத்மநாபன் அவர்களின் **'வேலுத்தம்பி தளவாய்'** என்னும் நாடகம் ஆங்கில ஆட்சியை எதிர்த்த வேலுத்தம்பியின் வரலாற்றை மக்களிடையே அளித்த சிறப்பினைப் பெற்றது. கொச்சப்பன் மாப்பிள்ளை அவர்களின் **மாரியம்மா, ரிதுமதி**, இராமகிருஷ்ணபிள்ளை அவர்களின் **பிரதிமா**, தாமோதரன் அவர்கள் எழுதிய **பாட்டப்பாக்கி,** கிருஷ்ணபிள்ளையவர்களின் **மாதவி, மாயமனுஷன்** போன்ற பல நாடகங்கள் அரசியல், சமூக நாடகங்களாக உருவாக்கப்பட்டன.

போலச் செய்தல் விளையாட்டின் வழி ஆடல், பாடல், நடனம் என்ற நிலைகள் தோன்றி, நடனத்தின் வளர்ச்சி நிலையில் நாடகம் உருவாகியுள்ளது என்ற உலக உண்மை **தமிழ்நாடகத்துக்கும்** பொருந்தும். அதிலும் சமயம் சார்ந்த நடனங்களும் அவற்றின் வளர்ச்சியான புராண, இதிகாசக் கருப்பொருள்களைக் கொண்ட சமய நாடகங்களும் தமிழ் நாடகங்களுக்கு உரியவையாகின்றன. சிறப்பாக நடனம் என்ற சொல்லாட்சி பெரும்பாலும் தொடக்ககாலத்தில் இருந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்க ஒன்று. மேலும் ஐம்பெருங் காப்பியங்களுக்கு முன்பே, **பரதசேனாபதியம், மதிணவாணனாரின்** நாடகவிலக்கணம், **செயிற்றியம், குணநூல், சயந்தம்** போன்ற பல நாடக இலக்கணங்கள் இருந்துள்ளன என்னும் செய்தி தமிழ் நாடகத் தோற்றத்தின் பழமையை அறிய உதவுகின்ற மற்றொரு குறிப்பிடத்தக்க செய்தி. மூன்றாவதாக,

"அவைதாம்,

சாந்திக் கூத்தும் விநோதக் கூத்துமென்
றாய்ந்துற வகுத்தனன் அகத்தியன் றானே"

என்னும் செய்தி அகத்தியரும் நாடக இலக்கணம் வகுத்துள்ளார் என்பதை உணர்த்துகிறது. இலக்கணம் வகுக்கும் அளவிற்கு நாடக இலக்கியங்கள் அகத்தியருக்கு முன்பே மிகுந்திருந்தன என்னும் இச்செய்தியும் தமிழ் நாடகங்களின் பழமையை மட்டுமன்றி அவற்றின் திருந்திய உயர்நிலையையும் எண்ணிப் பார்க்கத் துணைபுரிகின்றது. உரையாசிரியர்கள் இந்த இலக்கணங்களில் ஊறித்திளைத்திருந்தார்கள் என்பது அவர்கள் தம் காப்பிய உரைக்குறிப்புகளால் புலப்படுகிறது.

ஆடல் என்பது கூத்து என்றே வழங்கப்பட்டு வந்துள்ளது. கதை தழுவிய கூத்தையே நாடகம் எனக்கூறினர். இலக்கண நூல்கள் வகைப்படுத்திக் காட்டும் கூத்தின் வகைகளே பெரும் ஆய்விற்குரியனவாகின்றன என்றால் கூத்தும் நாடகமும் எந்த அளவிற்குச் சிறந்திருத்தல் வேண்டும் என்பதை நினைத்துப் பார்க்கலாம். சான்றாக - "இருவகைக் கூத்தாவன - 1, வசைக்கூத்து, புகழ்க்கூத்து 2. வேத்தியல், பொதுவியல் 3.வரிக்கூத்து, வரிச்சாந்திக்கூத்து 4. சாந்திக்கூத்து, விநோதக்கூத்து 5. ஆரியக்கூத்து, தமிழ்க்கூத்து 6 இயல்புக்கூத்து, தேசியக்கூத்து எனப் பலவகைய"[2] என்பர். இருவகைக் கூத்துகளின் பாகுபாடுகளும் பெயர் முறைகளும் அமையும் இத்தன்மையே இவ்வளவு விரிந்த ஒன்று என்றால் பிறவாகிய ஆடல், பாடல், பாணி, தூக்கு, பிண்டி, பிணையல், எழிற்கை, தொழிற்கை என்பனபோன்ற பலவகை உறுப்புகளும் அவற்றுக்காம் விளக்கங்களும் எத்தன்மையில் விரிந்து நடைபெறும் என்பதை நினைத்துப் பார்க்கலாம். ஒவ்வொரு வகைக்காம் விளக்கமு:ம மிகப் பரந்ததாகும். சான்றாக, விநோதக் கூத்து என்பதைக் குரவை, கலிநடம், குடக்கூத்து, காணம், நோக்கு, தோற்பாவை, நகைத்திறம் என ஏழு வகைப்படுத்தி அவற்றிற்காம் விளக்கங்களும் தரப்படுகின்றன.

இந்த 7 வகையுள் ஒவ்வொன்றுக்குமுரிய அறுவகை நிலை, ஐவகைப் பாதம், 16 வகை அங்கக்கிரியை, நான்கு வகை வருத்தனை, முப்பது நிருத்தக்கை போல்வன தொழிற் படவேண்டியவை என்ற விளக்கம் அமைகிறது. இவ்வுட்பிரிவுகளுக்குரிய தொழிற் செயல்முறைகள் மேலும் விளக்கம் பெறுகின்றன. அவிநய முறைகளும் வெகுண்டோன், ஐயமுற்றோன். . . . நஞ்சுண்டோன் போன்ற 24 பண்புடையாளருக்கான அபிநய முறைகள் விளக்கம் பெறுகின்றன. இத்தகு தமிழ் நாடக இலக்கண நூற்பாக்கள், முறைப் படுத்தப்பட்ட நாடக அமைப்புகளின் பழமையை மட்டுமன்றி, நடைமுறை நுணுக்கங்களையும் செயல்முறைகளையும் உணர்த்துவனவாகி உலக நாடக அமைப்புகளுள் தமிழ் நாடகம் முதன்மையிடத்தைப் பெற்று விளங்க வழி செய்திருக்கின்றன,

2. அடியார்க்கு நல்லார் உரை - சிலம்பு - 3 - வரி - 12.

தமிழ் நாடகக் கலை முறையான இலக்கணங்களைப் பெற்றுச் சிறப்பு வாய்ந்திருந்த நிலையில் நாடகக்கரு, கட்டுக்கோப்பு, சாதி, தலைமகன் முதலான நாடக உறுப்பினர் என்னும் இலக்கண வரையறைகள் தெளிவுபடுத்தப் பெற்றிருக்கின்றன. அவற்றுள்,

1. **கரு** - நிகழ்ந்தது, கற்பனையானது, இரண்டுங்கலந்தது எனக் கருப்பொருள் மூவகையில் கொள்ளப்பட்டது. அக்கருப்பொருள் முதன்மைக் கதையாகலாம் அல்லது இணைக்கதையாக இடம் பெறலாம்.

2. **கட்டுக்கோப்பு** - அடைவு, பின்னிடுதல், இணையா இணைக்கை, அடித்தல், செய்கை என்னும் ஐந்து கூறுகளில் நாடகக் கட்டுக்கோப்பு அமையும் இவை முறையே பீசம், பிந்து, பதாகம், பிரகரி, காரியம் எனவும் கூறப்பெறும்.

3. **நிலை** - தொடக்கம், முயற்சி, நம்பிக்கை, தடைநீக்கம், பயன்துய்த்தல் என்பன நாடக நிலைகள்.

4 **தலைமகன்** - உயர்ந்த குணமும் உறுதியுமுடையவன், உறுதியும் ஆவலுமுடையவன், உற்சாகமும் நகைச்சுவையும் உடையவன், இரக்கமும் நற்குணமும் வாய்ந்தவன் என்னும் நால்வகைப் பண்புகளைப் பெற்றவன் நாடகத் தலைமகன். இப்பண்புகள் முறையே தீரோதத்தன், தீர உதாத்தன், தீரலலிதன், தீரசாந்தன் எனப்படும்.

5. **தலைமகள்** - பேதை, மங்கை, மடந்தை என்னும் பருவத்தினள் என்பனவும், முகம், பிரதிமுகம், கருப்பம், விமரிசகம், கிர்வாகம் என்னும் ஐந்து அங்கங்களில் அறுபத்து நான்கு பிரிவுகளும் இலக்கணங்களாகி நடைமுறையில் கையாளப்பட்டு வந்தன.

நாட்டுப்புற ஆடல்களாகிய 1. ஒயிலாட்டம், 2.கரகாட்டம், 3. காவடியாட்டம், 4.கும்மி, 5. கோலாட்டம், 6. தேவராட்டம், 7. பொய்க்கால் குதிரையாட்டம் போன்றவை குறிப்பிட்ட பொருளுடைய பாடல்களுக்கு ஏற்ப ஆடப்பெறும் ஆடல்வகைகளாகும். இவற்றோடு வேற்றுமொழிக் கூத்து வகைகளான 1. கதகளி 2. குச்சுப்புடி, 3. பாகவதமேளா, 4. யட்சகானம் போன்றவற்றின் தொடர்பும் தமிழ் நாடக வளர்ச்சிக்குத் துணைநின்றுள்ளன. இடைக்காலச் சமுதாய அரசியல் சூழல்கள், 1. குளுவ நாடகம், 2. குறவஞ்சி, 3. நொண்டி, 4. பள்ளு, போன்ற பல நாடகங்கள் உருவாகத் துணைபுரிந்திருக்கின்றன.

இராசராச சோழனின் வரலாற்றை உணர்த்தும் இராஜ ராஜேஸ்வர நாடகம், இராஜராஜன் நாடகம் ஆகியவை அரசியல் உணர்த்துவன. அடுத்து புராண, இதிகாசக் கருத்துக்களில் தனிப்பட்ட ஒவ்வொருபகுதிகள் நாடகமாக்கப்பட்டு 'தெருக்கூத்து' என்ற பெயரால் மக்களிடையே நடித்துக் காட்டப்பட்டன.

காசி விசுவநாத முதலியார் அவர்கள் 1867 இல் **'டம்பாச்சாரி விலாசம்'**, 1868 இல் தாசில்தார் போன்ற சமூக நாடகங்களைப் படைத்தார்கள். 1876 இல் Merchant of Venice என்னும் ஆங்கில நாடகம் **'வெனிஸ் வணிகன்'** என்னும் பெயரால் கோபாலாச்சார் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. 1877 இல் இராமசாமிராசு அவர்கள்

'பிரதாப சந்திரவிலாசம்' என்னும் சமூக நாடகத்தை உருவாக்கினார். இருபதாம் நூற்றாண்டின் பல வகையான, பல முறையான சமூக நாடகங்களுக்கு 19 ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளிலேயே வித்திடப்பட்டது. தமிழில் உயர்ந்த நடையில் பரிதிமால் கலைஞரும், கவிதை நடையில் சுந்தரம் பிள்ளை அவர்களும் நாடகங்களைப் படைத்தனர். அடுத்து, சங்கரதாஸ் சுவாமிகள் கற்றவர் நடையைப் பின்பற்றியும், பம்மல் சம்பந்த முதலியார் எளிய நடையிலுமாக நூற்றுக்கு மேற்பட்ட நாடகங்களைப் படைத்து, மேடையேற்றி மக்களை மகிழ்வித்தார்கள்.

தமிழ் நாடகங்களுள் பாடல்கள் நிறைந்து, ஆங்காங்கு பொதுக் கருத்தமைந்த வசனங்கள் அமைந்து காணப்படுவன இசை நாடகங்கள் எனப்பட்டன. இவை பண் (ராகம்), தாளம் இவற்றை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றுள் வணக்கம், வாழ்த்து, கட்டியங்காரன் வருகை, விநாயகர் தோற்றம், அரசன் கொலுவுக்கு வருதல், தேச விசாரணை நடத்துதல், அரசவை நடனம் என்பன முறையாகத் தொடக்கத்தில் இடம்பெறும். தொடர்ந்து நாடகம் நடைபெறும். இவை மங்களத்தோடு முடியும். களம், காட்சிகள் இடம் பெறுவதில்லை. என்றாலும் நாடகங்களின் தொடர்ச்சி நன்கு தெரிவதற்காக அசரீரி, கடிதம், கனவு, சகுனம், தனிமொழி, பொதுவசனம் போன்றவை இடம்பெறும். உணர்ச்சிகளைப் புலப்படுத்த ஏற்ற பண்களும் தாளமும் அமையும்.

இசை நாடகங்களைத் தொடர்ந்து உரைநடையில் அமைந்த உரையாடல்களுடன் கூடிய நாடகங்கள் உருவாகியுள்ளன. இவற்றை அப்போது நவீன நாடகம் என்றனர். இவை களம், காட்சி என்ற பெரும்பிரிவு சிறுபிரிவுகளை யுடையவை. நாடகத் தோற்றம், சிக்கல், போராட்டம், உச்சக்கட்டம், வெற்றி அல்லது தோல்வி என்னும் முடிவு என்னும் படிநிலைகள் முறையாக அமைந்தன. இந்நாடகங்களுள் வழக்குச் சொற்கள் பல இடம் பெறத் தொடங்கின.

யட்சகான நாடகம்

தமிழில் நிகழ்த்தப் பெற்றுவரும் 'தெருக்கூத்து' என்னும் நாடகக் கலையைப் போலக் கன்னடத்திலும் தெலுங்கிலும் நடத்தப்பட்டுவரும் ஒருவகை நாடகக் கலை யட்சகான நாடகம் எனப்படுகிறது. ஆனால் சுக்கிரீவ விஜய யட்சகானம், கருடாசல யட்சகானம் என்பன போலச் சுக்கிரீவ விசயத், தெருக்கூத்து, கருடாசலத் தெருக்கூத்து என்னும் அமைப்பில் தெருக்கூத்து என்னும் சொல்லோடு தமிழ்த் தெருக்கூத்து நாடகங்கள் பெயர்பெறுவதில்லை. கீர்த்தனை, சரித்திரம், நாடகம், மாலையீடு, வாசகப்பா, விலாசம் என்னும் பெயர்களைப் பொருளுக் கேற்பப் பெறுவதே தமிழ் நாடகப் பெயர்களின் அமைப்பாகும். நாடகப் பொருளுக்கேற்பக் கலியாணம், சம்மாரம், தபசு, தூது போன்ற பெயர்களும் ஈற்றில் இடம் பெறுவதுண்டு. பண்பட்ட நிலையில் நிகழ் கலையாக, நாட்டுப்புறக் கலையாக, செம்மைபெற்ற கலையாகத் தமிழ் நாடகங்கள் நடத்தப்பெற்றுள்ளன.

சங்கம வமிசத்தைச் சேர்ந்த ஹரிஹரரும் புக்கரும் கி.பி. 1336 முதல் விசய நகரத்தை உருவாக்கித் தங்கள் தலைநகராகக் கொண்டு அரசாளத் தொடங்கினர். தங்கள் ஆட்சியைத் தமிழ் நாட்டிலும் விரிவடையச் செய்தனர். சங்கம வமிசத்தைத் தொடர்ந்து சாளுவ நரசிம்மர், துளுவ பரம்பரை கிருஷ்ண தேவராயர், மராட்டியப் படைத்தலைவர் ஏகோஜி (கி.பி. 1676) போன்றோர் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டுவந்தனர். இவர்கள் காலத்தில் தஞ்சைப் பகுதியிலும் கன்னடநாடு, ஆந்திரநாடு ஆகியவற்றை அடுத்து அமைந்துள்ள தமிழ் மாவட்டங்களிலும் சிறிது, சிறிதாகக் கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளிலான நாட்டுப்புறக் கலைகள் நடத்தப்பட்டன. கன்னடம், தெலுங்கு மொழிகளில் நடத்தப்பட்ட யட்சகான நாடகங்கள் ஆங்காங்கே நடைபெறத் தொடங்கின. நாளடைவில் அந்த நாடகப் பாடல்களிலும் வசன நடைகளிலும் பேச்சுமொழியிலும் பல தமிழ்ச் சொற்கள் கலக்கப்பட்டன. அதனால் கன்னட, தெலுங்கு நாடகங்கள் தமிழ் மக்களுக்கு நன்றாக விளங்கின.

தியாகராச சுவாமிகள் இயற்றிய நௌகசரித்திரம், பிரகலாத பக்தவிசயம் போன்ற யட்சகான நாடகங்கள் தமிழ் நாட்டில் நடத்தப்பட்டன. ஹொய்சள மன்னரான வல்லாளராசனின் வரலாறு யட்சகான நாடகமாக்கப்பட்டுத் தமிழ் நாட்டின் வட மாவட்டங்களில் நடத்தப்பட்டது. அதன் பயனாய்த் தமிழிலும் **'வல்லாளராசன் யட்சகானம்'** என்னும் நாடகம் உருவாயிற்று. இவ்வாறே தமிழ் நாட்டில் நடத்தப்பட்ட தெலுங்கு, கன்னட யட்சகான நாடகங்களில் தமிழ்ச் சொற்கள் நிறைந்த பாடல் வரிகளும், உரைநடை வரிகளும் ஆங்காங்கு சேர்த்து நடத்தப்பட்டதன் பயனாக நாளடைவில் முழு யட்சகான நாடகங்களே உருவாகியிருக்கின்றன.

யட்சகானம்

நேப்பாலில் 'கந்தருவர்' என்னும் இனத்தவர் வாழ்ந்து வருகிறார்கள். மார்வார் நாட்டு வைசியர்களும் தங்களைக் 'கந்தருவர் என்றே கூறிக் கொள்ளுவர். இசையில் தேர்ச்சிபெற்ற இவர்கள் பாட்டுப் பாடுவதையே தொழிலாகக் கொண்டவர்கள். இவர்கள் பாடும் பாடல் **'கந்தருவ கானம்'** என்றே வழங்கப்பெறுகிறது.

கந்தருவர்களைப் போன்று யட்சர் என்பாரும் ஒரு இனத்தவராவர். கன்னடம், ஆந்திரம் ஆகிய நாடுகளில் இந்த இனத்தவர் வாழ்ந்து வருகிறார்கள். கன்னடநாட்டுக் கிராமப் பகுதிகளில் வாழும் யட்சர் இனத்தவர் ஜக்கினி என வழங்கப்படுகின்றனர். ஆந்திர நாட்டின் சில கிராமப்பகுதிகளில் வாழும் யட்சர் இனமக்கள் ஜக்குலு எனப்படுகின்றனர்.

இந்திய இசைகளாகிய இந்துஸ்தானி, கர்நாடகா ஆகிய இரண்டினும் வேறுபட்ட ஒன்று யட்சகானம். கந்தருவர் பாடுவது கந்தருவ கானம் என்றாற்போல, யட்சர்பாடுவது யட்சகானம் என்றாகியிருக்கிறது. யட்சர்கள் தங்கள் தலைவனாகிய குபேரனுடைய செல்வமானது நிலைக்க வேண்டும்; மேலும் பெருக வேண்டும் என்பதற்காகத் திருமகளாகிய இலக்குமியைப் புகழ்ந்துபாடி வணங்கும் பாடல் யட்சகானம் எனப்பட்டது.

மக்கள் சந்ததி வளரவும், அவர்களுடைய செல்வம் பெருகவும் வேண்டி யட்சகர்கள் பாடுவது **'யட்சணி வித்தியா'** எனப்படும். மக்கள் மரபு தழைக்கவும், அவர்கள் செல்வங் கொழிக்கவும் வேண்டி யட்சதேவதை பூசை நடத்துவர். அந்தப் பூசைக்காலத்தில் யட்சர் இரவு முழுமையும் பாடுவர். அது யட்சகானமேயாகும். தெலுங்கு அந்தணர்கள் நடத்தும் **'யக்க தேவதாபூஜை'** யிலும் யட்சகர் யட்சகானம் பாடிவருகின்றனர். 12 ஆம் நூற்றாண்டு முதல் கன்னடநாட்டில் பாடப்பட்டுவரும் இப்பாடல் **'எட்சகானா'** எனவும் **'யக்கல கானா'** எனவும் வழங்கப்பட்டு வருகிறது. கிராமதேவதையாக விளங்கும் காமவல்லி என்னும் ஈஸ்வரியாருக்குப் பாடித் தொண்டு செய்யும் யட்சர்கள் தேவியின் முன் பாடியவையே யட்சகானம் ஆகும் என்று **'காமேசுவரிபடா'** என்னும் பழம்பெருந் தெலுங்கு நூல் எடுத்துக் காட்டுகிறது. மேலும்,

யட்சகானம் என்பது, தேவசாதியினராகிய யட்சர் பாடியது; கிராமமக்கள் **'யட்சா'** என்னும் ஆண் தேவதையையும், **'யட்சி'** என்னும் பெண் தேவதையையும் பூசை செய்து வணங்கும் போது அந்தக் கிராம மக்கள் பாடிய பாட்டு; பாட்டுகளில் ஒருவகைப்பாட்டு; ஒருவரே வந்து பாடுவது என்னும் பொருளில் **'யக்கல கானா'** எனப்படும் பாட்டு; ஆந்திர நாட்டு ஜக்குலர் பாடும் பாட்டு; ஆந்திர நாட்டு மகளிர் யட்சர் போன்று வேடமணிந்து விழாக்காலங்களில் பாடும் பாட்டு என்னும் பல கருத்துகள் யட்சகானத்தைப் பற்றிக் கூறப்படுகின்றன.

கனரா மாவட்டக் கிராமங்களிலுள்ள பழங்காலக் கோயில் சடங்குகளிலும், காலை, மாலை பூசைநேரங்களிலும், பழைய முறைத் திருமணங்களிலும் இன்றும் யட்சகானப் பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன. யட்சகான இசைப் பாடல்களைக் காலை நேரத்தில் உதய ராகத்தில் பாடிவருகின்றனர். மிகுந்த உழைப்பினால் பெறக்கூடிய ஒன்று யட்சகானப் பயிற்சி.

பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் கன்னடமொழியில் சுமார் முந்நூறுக்கும் மேற்பட்ட யட்சகான நூல்களும், தெலுங்கு மொழியில் சுமார் ஐந்நூறுக்கும் மேற்பட்ட நூல்களும் வழக்காற்றில் இருந்தன. அந்த நூற்றாண்டுகள் **'யட்சகானத்தின் சுவர்ணயுகம்'** என்றே குறிப்பிடப்பட்டன.

மக்கள் மரபு தழைத்துச் செல்வம் கொழிக்க இலக்குமியையும் யட்சதேவதைகளையும் புகழ்ந்து பாடும் பாடலாகத் தோன்றிய யட்சகானம், முதலில் இறைவனது கலியாண குணங்களடங்கிய மிக உயர்ந்த கருத்துகளைப் பாடற் பொருளாக எடுத்துக் கொண்டு பாடப்பட்டது. தொடர்ந்து உயர்ந்த செய்திகளைக் கூறும் கதைகளை விளக்கிச் சொல்லும் யட்சகானப் பாடல் அடங்கிய கதா காலட்சேபமாக நடத்தப்பட்டது. அவ்வாறு ஒரு கதையைப் பாடலாகப் பாடிப் பிரசங்கம் நிகழ்த்தும் போது பாடற் கருத்துக்கேற்ப ஆடவுந் தொடங்கினர். இந்த முறை வளர்ச்சியடைந்து யட்சகானப் பிரசங்கம் என்பது யட்சகான இசை நாடகம் என மாறியது. இறுதியில் பாட்டும் நாட்டியமுமாகிய இசைநாடகம் கதைப் பொருளோடு இணைந்து யட்சகான நாடகமாயிற்று. அந்தக் கதையின் பெயரோடு யட்சகான நாடகம் என்னும் பெயரையும் பெற்றது.

தமிழ் நாட்டில் நடைபெறும் தெருக்கூத்து, ஆந்திர நாட்டில் நிகழும் குச்சுபுடி, வீதி நாடகம், கேரளநாட்டில் நிகழ்த்தப் பெறும் கதகளி, கூடியாட்டம், ராமனாட்டம், கிருஷ்ணனாட்டம், கன்னட நாட்டில் நடந்துவரும் பயலாட்டம் ஆகியவற்றைப் போன்றே யட்சகான நாடகமும் பாட்டாலும் இசையாலும், நடத்து முறையாலும் இடத்தாலும், கருத்தாலும் பழக்கங்களாலும் ஒன்றுபட்ட நிகழ்கலையாக விளங்குகிறது.

தெருக்கூத்து முதலானவற்றைப் போன்று யட்சகான நாடகமும் இரவு முழுமையும் நடைபெறுவதாகும். அதனால் நூற்றுக்கணக்கான பாடல்கள் இடம்பெறுகின்றன. மேலும் நாட்டிய அடைவுகளுக்கேற்ற தாள ஒலியும், அடைவுகளில் சதங்கை ஒலியும், மத்தளம், தட்டு, முகவீணை, சகனாய் போன்ற இசைக்கருவிகளின் ஒலியும் இணைந்து மிகுதியான சத்தத்தை உண்டாக்கிப் பாட்டின் தெளிவைக் கெடுத்துவிடுகின்றன. இசை நுணுக்கமறியாத நாட்டுப்புற மக்கள் உரத்துப்பாடும் நடிகர்களின் பாட்டுக்கும் நடிப்புக்கும் கைதட்டி ஆரவாரம் செய்கிறார்கள். இத்தகு காரணங்களால் யட்சகான நாடகம் இன்று வழக்கிழந்து வருகிறது என்றாலும் உணர்ச்சிமிக்க பாட்டுகளுக்காகவும் நாடக நடைக்காகவும் அன்றைய நாடகம் என்ற முறையில் இன்றும் ஆங்காங்கு நடத்தப்பெற்று வருகிறது.

நாடகப் பொருள் நிகழிடம்

திருவாரூரின் பழமை - அடியவர்கூற்று

ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ
ஓருருவே மூவுருவ மான நாளோ
கருவனாய்க் காலனைமுன் காய்ந்த நாளோ
காமனையுங் கண்ணழலால் விழித்த நாளோ
. . . .
திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாய்க் கொண்ட நாளே! [1]

இந்த யட்சகான நாடகப் பொருள் நிகழ்ந்த இடமாகக் குறிக்கப் பெறும் திருவாரூரின் பழமையைக் குறிப்பது இப்பாடல்; அப்பர் பெருமானின் திருவாக்கில் பிறந்தது. (அப்பர்- கி.பி. 580-660)

இறைவா! நீ திருவாரூரைத் திருக்கோயிலாகக் கொண்டு இங்கு எழுந்தருளியது எப்போது என்பது அப்பர்வினா. மேலும்,

தியாகேசா! நீ, பொன்பாவையொடு மகிழ்ந்த நாளோ? வானவரை வலியமுதமூட்டி நின்ற நாளோ? தழல் பிழம்பாய் நின்ற நாளோ? அலைகடல் நஞ்சுண்ட நாளோ? முப்புரம் எரித்த முன்னோ? பின்னோ? அம்பலத்தை மன்னி ஆடுவான் புகுவதற்கு முன்னோ? பின்னோ? மதிவைப்பதற்கு முன்னோ? பின்னோ? இப்படிப் பல வினாக்கள்.

---

1. திருநாவுக்கரசர் தேவாரம், பதிகம் 247-1.

ஏறத்தாழ கி.பி. ஆறாம் நூற்நாண்டினராகக் கருதப்பெறும் அப்பர் பெருமான் திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் இறைவன் திருக்கோயிலின் பழமையை எண்ணிப் பார்க்கிறார். ஆறாம் நூற்றாண்டுக்கு முன்பே மிகப்பழமை வாய்ந்தது என்பதைப் பலவினாக்களின் மூலம் உறுதிப்படுத்துகிறார். அப்பர் மிகப்பழமை வாய்ந்தது என்று உறுதிப்படுத்துவது தியாகராசப் பெருமானின் திருக்கோயிலை மட்டுமே. அப்படியானால் அந்தத் திருக்கோயில் இடம் பெற்றுள்ள திருவாரூரின் பழமை? . . . .

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூர் திருத்தலத்தைச் சிறப்பித்து எட்டுப் பதிகங்களைப் பாடியிருக்கிறார். அவற்றுள்,

"ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே" என்னும் மகுட அடிகளால் இயன்ற திருத்தொண்டத் தொகை திருவாரூரிலிருந்து பாடியது. அடியவர்களின் சிறப்புக்ளோடு அனைத்து அடியவர்களையும் தொகுத்துப் பாடிய திருத்தலம் என்னும் சிறப்பைப் பெறுவது திருவாரூர் திருத்தலம். திருஞானசம்மந்தர் ஐந்து திருப்பதிகங்களையும், திருநாவுக்கரசர் இருபத்தொரு பதிகங்களையும் பாடியுள்ள பெருமையைப் பெறுவதும் அத்திருவாரூர் திருத்தலமே. இத்தகு அடியவர்களின் கூற்றுகள் திருத்தலத்தின் பழமையை எடுத்துக்காட்டுகின்றன. ஆனால் அதன் பழமையை உணர மற்றொரு அடிப்படைக் காரணமும் உண்டு.

பிருதிவித்தலம்

பஞ்சபூதத்தலங்கள் என்று சில திருத்தலங்களைக் காரண காரியங்களுடன் பகுத்துக் கூறும் வழக்காறு ஒன்று உண்டு. அந்த வழக்காற்றின்படி, திருவாரூர் திருத்தலம் பிருதிவித்தலம் என்று பகுத்துக் கூறப்படுகிறது. மக்கள் கல்லாலும் உலோகத்தாலும் இறையுருவத்தினையமைத்து, வழிபடத்தொடங்கிய காலத்திற்கு முன்பு இயற்கைப் பொருள்களாகிய சூரியனையும் சந்திரனையும் வழிபட்டு வந்தனர், அடுத்து மரங்களையும் மரத்தடிப் புற்றுகளையும் வழிபடத் தொடங்கினர். இயற்கையாகத் தோன்றிய புற்றுகளை வழிபட்ட நிலை உருவ வழிபாட்டுக்கு முந்தியதாகிறது. அதாவது தொடக்க நிலையில் இறைவனது திருமேனியாக - மண்ணை - மண்வடிவான புற்றை வழிபட்டு வந்தார்கள் என்னும் பழைய மரபு வெளிப்படையாகிறது. இந்தப் பழைய மரபுக்கும் திருவாரூர் திருத்தலத்திற்கும் என்ன தொடர்பு? இது ஏன் பிருதிவி (மண், நிலம்) த்தலம் எனப்பட்டது? இத்தலம் மிகப்பழமை வாய்ந்தது என்பது எப்படிப் பொருந்தும்? இப்படி வினாக்கள் எழுவது இயல்பு.

"பூத நாயகர் புற்றிடங் கொண்டவர்
ஆதி தேவர் அமர்ந்தபூங் கோயிலில் . . ." (பெரியபுரா - திருக்கூட் - 1)

என்பது சேக்கிழார் வாக்கு. பூதகணங்களின் தலைவராகிய இறைவன், கறையான் புற்றையே தமது திருக்கோயிலாகக் கொண்டு எழுந்தருளியிருக்கும் இத் திருவாரூரில் விளங்குவது பூங்கோயில் என்னும் ஆலயம் என்று கூறுகின்றன இவ்வடிகள்

"சேமமந்தப் புற்றிடத்திற் சிவனுறையு
மெல்லையது தெரிப்பாம். . . ." (133)

என்று தொடங்கும் திருவாரூர்ப் புராணம் புற்றிடங் கொண்ட செய்தியைத் தருகிறது. திருமாலைத் தலைவராகக் கொண்டு தேவர்கள் பலருங் கூடினார்கள். யமுனையாற்றின் தென்கரையில், சரசுவதி தீர்த்தத்தைச் சார்ந்த 'குரு' என்னுமிடத்தில் (குருசேத்திரம்) யாகம் செய்தனர். சிறிதும் சலிப்பின்றி ஆகுதியைப் பெய்து யாகம் செய்த திருமாலின் முன் 'வைசுரம்' என்னும் ஈசுவரனின் வில் ஒன்று தோன்றியது. தன் யாகத்தை மட்டுமே மெச்சினான் இறைவன் என்று கர்வமடைந்த திருமால், தேவர்கள் அனைவரும் சிதறி ஓடும்படியாகத் துரத்தியடித்துத் தென்திசை நோக்கி வந்தான். தேவர்கள் திருவாரூரை யடைந்தனர். துரத்தி வந்த திருமால், திருவாரூருக்குள் நுழைந்தவுடன் சத்தியின் திறத்தால் சோர்வடைந்து, வில்லின் ஒரு நுனியைத் தரையில் ஊன்றி, மற்றொரு நுனியில் தன் மார்பை வைத்தவனாய்ச் சோர்வினால் உறங்கினான். தேவர்கள் கூடிக் கறையான் உருவாகித் தரையிலிருந்து வில்லின் நாணினை மென்று அறுத்தார்கள். நாண் அறுந்த வேகத்தில் திருமாலின் தலையற்று விழுந்தது. வில்லும் சிதறியோடியது. மண்ணும் விண்ணு மதிர்ந்தது கண்டு தேவர்கள் நடுங்கினர். தேவர்கள் கறையான் உருவத்தில் உண்டாக்கிய புற்றினிடையே சிவபெருமான் லிங்கவடிவமாய்த் தோன்றிக் காட்சியளித்தார். தேவர்கள் வேண்டிக்கொண்டதன்படி திருமாலையும் உயிர்ப்பித்து யாவரையும் மகிழச்செய்தான். புற்றில் தோன்றியருளிய இறைவன் புற்றிடங்கொண்டான் எனவும் வன்மீகநாதன்-(வன்மீகம்-புற்று) எனவும் பெயர்பெற்று யாவராலும் வணங்கப் பெற்றான். அப்போது முதல் திருவாரூரில் புற்றைவழிபடும் மரபு ஏற்பட்டது. மண்ணாகிய புற்றில் எழுந்தருளிய இறைவனின் திருத்தலமாதலின் இது பிருதிவித்தலம் எனப்பட்டது. திருக்கோயில் உருவாக்கப்பட்டதே மிகப்பழங்காலம் என்பது கூறப்பட்டது. எனவே, புற்றிடங்கொண்டது அதனினும் பழமையானது என்பதும் திருவாரூர் திருத்தலமாகிய நகரம் தோன்றியது மிக மிகப் பழங்காலம் என்பதும் மேற்கண்ட வினாக்களுக்கு விடைகளாகின்றன.

திருத்தொண்டர் புராணத்தில் திருவாரூர்

சேக்கிழார் பெருமான் தாம் பாடிய திருத்தொண்டர் புராணத்துள் பாயிரத்தையடுத்து,

"தன்னை யார்க்கும் அறிவரியான் என்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை" என்று மலையின் சிறப்பு பாடுவார். அடுத்து,
"சூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி
நாட்டியல் பதனையான் நவிலல் உற்றனன்"

எனத் தொடங்கி சோழநாட்டின் சிறப்பினைப் பாடுவார். தொடர்ந்து திருநகரச் சிறப்பு என்னுந் தலைப்பில்,

"வன்னி யாறு மதிபொதி செஞ்சடைச்

சென்னி யார்திரு வாரூர்த் திருநகர்" . எனத் திருவாரூர்த் திருநகரைப் பேசுவார். திருத்தொண்டர்தம் புராணத்துள் உணர்தற்கரியவனாகிய எம்பெருமான் எழுந்தருளிய கயிலை மலையைப் பாடியது காப்பிய நடைமுறைகளுக்கேற்ப முதலி லமைந்தது. அடுத்தது நாட்டுப்படலம், நகரப்படலம் என்னும் முறையில் அமைத்துக் கொண்டு முதலில் நாட்டுச்சிறப்பைப் பாடுகிறார். சேக்கிழார் பாடியுள்ள அறுபதுக்கு மேற்பட்ட திருத்தொண்டர்களும் ஒரு நாட்டினர் அல்லர். அப்படியிருக்கச் சோழநாட்டின் சிறப்பை மட்டும் பாட எடுத்துக் கொண்டதன் காரணம் என்ன?

திருத்தொண்டர் புராணத்துள் பாடப்பெறும் திருத் தொண்டர்கள் அறுபதின்மருக்கு மேற்பட்டவர்கள். அவர்களுள் முப்பதின்மருக்கு மேற்பட்ட இறையன்பர்கள் பிறந்து வாழ்ந்த நாடு சோழநாடு. சேக்கிழார் பெருமான் அருண்மொழித் தேவர் என்ற தம் இயற்பெயரோடு, உத்தமச்சோழப்பல்லவன் என்னும் பட்டப் பெயர் பெற்று முதலமைச்சராகப் பணிபுரிந்தது அநபாயச் சோழன் என்னும் சோழமன்னனிடத்தில் - சோழநாட்டில். 'தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கு மடியேன்' என்று இறைவன் அடியெடுத்துக் கொடுக்கச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையைப் பாடியருளியதன் மூலம் திருத்தொண்டர் புராணத்திற்கு மூல நூலைத் தந்த பெருமைக்குரியது சோழநாடு. நம்பியாண்டார் நம்பிகள் மூவர் தேவாரத்தை அபயகுல சேகர சோழனுக்குக் காட்டியருளிய நாடு சோழநாடு. தொண்டைநாட்டில் 32ம், நடுநாட்டில் 22ம், பாண்டி நாட்டில் 14ம், கொங்குநாட்டில் 7ம், மலைநாட்டில் 1 ம் என்ற அளவில் கோயில்கள் விளங்கிய காலம் சேக்கிழார் காலம். சேக்கிழார் காலத்திற்கு முன்பே 190க்கு மேற்பட்ட சிறப்புமிக்க கோயில்கள் விளங்கிய நாடு சோழநாடு.

எல்லாவற்றிற்கும் மேலாக "இவரோ சோழச் சக்கரவர்த்தி; அவரோ தவமுனிவர்; சக்கரவர்த்தி இப்படி முனிவருக்குத் தாமே கவரி வீசத்தகுமோ?" இப்படி ஒருசிலர். "சிவபெருமானே சேக்கிழார் உருவில் காட்சியளிக்கிறார். இவருக்கு இவ்வாறு தொண்டு செய்யும் வாய்ப்பு பெற்ற மன்னர் மிகவும் கொடுத்து வைத்தவர்". இப்படியும் பலர். இத்தகைய சிறப்புகளோடு திருத்தொண்டர் புராணத்தைச் சித்திரைத் திங்கள் திருவாதிரை நட்சத்திரத்தில் அரங்கேற்றி முடிப்பதற்கு இடங் கொடுத்த நாடு சோழநாடு.

திருத்தொண்டத்தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவறறின் பொருளை விரிவாக எடுத்துரைத்து மன்னனைச் சைவ சமயத்தில் பற்று கொள்ளச் செய்தது இந்தச் சோழநாடு மேலும்,

அந்தத் தொண்டர்களுடைய வரலாற்றை மக்கள் எல்லோரும் கேட்டு உணருமாறு ஒரு பெருங்காப்பியமாகப் பாடி வழங்குங்கள்' என்று மன்னவன் வேண்டுகோள் விடுத்தான், அவ் வேண்டுகோளை ஏற்றுச் சேக்கிழார் சிதம்பரத்தையடைந்தார் திருச்சிற்றம்பலத்தில் இறைவன் 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்தான், அதை முதல் தொடராக அமைத்துத் திருத்தொண்டர் புராணத்தை உலகுக்களிக்கும் பெரும் வாய்ப்பினைச் சேக்கிழாருக்கு ஏற்படுத்தித் தந்ததும் சிவத்தொண்டர் மிகுந்த அந்தச்

சோழநாடேயாகுமல்லவா? நாட்டுப்படலம் என்னும் காப்பிய அமைப்பில் நாட்டுச் சிறப்பு' என்னுந் தலைப்பில் சோழநாட்டைப் பாடியதற்கு இவற்றிற்கு மேலுங் காரணங்கள் வேண்டுமா?

பலவகைச் சிறப்புகளின் அடிப்படையில் நாட்டுப்படல அமைப்பில் சோழ நாட்டின் சிறப்பைப்பாடிய சேக்கிழார் பெருமான், அடுத்த படல அமைப்பில் 'திருநகரச்சிறப்பு' என்ற பகுதியை அமைத்துத் 'திருவாரூர்' நகரத்தினைச் சிறப்பிப்பார். சோழ நாட்டைப்பாடிய நிலையே திருவாரூர் நகரத்தைப் பாடுவதற்கும் ஏற்படுகிறது. திருத்தொண்டர் புராணத்துள் பாடப்பெறும் இறைத் தொண்டர்கள் அனைவரும் திருவாரூர் நகரத்தையே சார்ந்தவர்கள் என்று கூறும் வாய்ப்பு இல்லை; திருவாரூர் சோழ நாட்டின் தலைநகரமுமன்று. அப்படியிருக்கத் திருநகரச் சிறப்பு என்னும் படலத்துள் திருவாரூரின் சிறப்பு மட்டுமே பாடப்பெறுவதன் காரணம் என்ன?

சோழ நாட்டுச் சிறப்புகளாகவும், நாட்டுச் சிறப்பில் சோழ நாட்டைத் தேர்ந்து கூறியதற்குரிய காரணங்களாகவும் கூறப் பெற்றவற்றுள் பலவற்றைத் தனக்கே உரித்தாக்கிக் கொண்டது திருவாரூர் திருத்தலம் அதாவது, கணக்கிட்டுக் கூறமுடியாத மிகப் பழங்காலத்திலேயே செஞ்சடைச் சென்னியார் புற்றுகந்தவராகி எழுந்தருளிய திருத்தலம் திருவாரூர். அதனால் இறைவன் வன்மீக நாதர் என்னுந் திருப்பெயரையும் பெற்றார் (வன்மீகம் - புற்று). புற்றாகிய மண்ணைத் தம் இருப்பிடமாகக் கொண்டதனால் பிருதிவித்தலம் என்ற பெயரையும் பெற்றது அத்தலம். திருத் தொண்டர் புராணம் என்னும் வரலாற்று இலக்கியத்தைப் பாடுவதற்கு மூலநூலாகச் சேக்கிழாருக்குக் கிடைத்தது திருத் தொண்டர்தொகை என்னும் வரலாற்றுச் சுருக்க நூல். இந்த மூலநூல் பிறந்த இடம் திருவாரூர் திருத்தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

> 'மன்றல் வார்குழல் வஞ்சியைத் தேடுவான்
> சென்று தேவா சிரியனைச் சேர்ந்தபின்' (தடுத்தாட் - 301)

அந்தத் தேவாசிரியன் என்னுந் திருமண்டபத்தில் அடியார்கள் பலர் கூடியிருந்ததைக் காணுகின்றார்.

> "இவர்க்குயா னடியேனாகப் பண்ணு நாள் எந்நாள்" (தடுத்தாட்.335)

என்று பரமனின் திருத்தாள்களைப் பரவுகிறார்.

> "நீதியா லவர்கள் தம்மைப் பணிந்துநீ நிறைசொன் மாலை
> கோதிலா வாய்மை யாலே பாடென அண்ணல் கூற" (தடுத்தாட். 343)

தியாகேசப் பெருமானின் ஆணையைச் சிரமேற் கொண்ட சுந்தரர்,

> "இன்னவா றின்ன பண்பென் றேத்துகே னதற்கு யானார்?
> பன்னுபா மாலை பாடும் பரிசெனக் கருள்செய்" (தடுத்தாட்.344)

என்று இறைவனை வேண்டுகிறார். இறைவன்,

"தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்"

என்று தொடங்கி இவ்வடியார்களைப் புகழ்ந்து பாடுக என்றருள் புரிகிறார். அவ்வாறே 'மன்னுசீர் வயலாரூர் மன்னவரை வன்றொண்டர், சென்னியுற அடிவணங்கித் 'திருத்தொண்டத் தொகை' பாடியருள்கிறார் இந்த நூலைத் தழுவித் திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் நூலைப் பாடியருளினார் நம்பியாண்டார் நம்பிகள். இவையே திருத்தொண்டர் புராணத்திற்கு மூலநூல்களாயின.

கயிலையம்பதியாருடைய பாகத்தைப் பெற்ற தேவியாரின் உரிமைத் தோழியாகிய கமலினியார், உருத்திர கணிகைமாராம் பதியிலார் குலத்துள் தோன்றிப் பரவையார் என்னும் பெயர்பெற்று இறைத் தொண்டு செய்த பெருமை பெற்றது திருவாரூர்.

புத்தூர் சடங்கவியார் மகளை மணக்கவிருந்த சுந்தரரைத் தடுத்துத் திருவெண்ணெய் நல்லூரில் ஆட்கொண்ட இறைவன், தில்லையம்பதியில் நடராசப் பெருமானைத் தொழுதுநின்ற சுந்தரரை, 'பண்ணையாரூரில் வருக நம்பால்' என வானில் ஒலியுண்டாக்கி அழைத்து,

'மன்னும் புகழ்நா வலர்கோன் மகிழ
மங்கை பரவை தனைத்தந்தோம்' (தடுத். 179)

என்றுகூறிப் பரவையாரைத் திருமணம் செய்து வைத்த திருத்தலம் திருவாரூர்.

சுந்தரர் திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்தார் என்னும் செய்தியறிந்து சினந்திருந்த பரவையாரின் ஊடலைப் போக்கியருளுமாறு வேண்டிவருந்திய சுந்தரருக்கு,

"துன்பம் ஒழிநீ யாமுனக்கோர் தூதனாகி யிப்பொழுதே
பொன்செய் மணிப்பூண் பரவைபால் போகின்றோம்' (ஏயர்கோன்-329)

என்று கூறிய தியாகராசப் பெருமான்,

"ஒருவீதியிலே சிவலோகம் முழுதுங் காண்பது போலத்
திருவீதியினில் திருவடி தோயச் சென்ற நகர்" - திருவாரூர்த் திருநகராகும்.

புற்றிடங் கொண்டதும், மண்தலமாயதும், திருத்தொண்டத் தொகையாகிய மூலநூல் பிறந்ததும், கமலினியார் பரவையாராய்ப் பிறந்து பேறுபெற்றதும், சுந்தரர் சென்று பயன்பெற்றதுமாகிய சிறப்புகள் ஒருபுறமிருகக, 'தேரூர்ந்த சோழன் யட்சகானம்' என்னும் இந்த நாடக நூலின் தலைவனாகிய மனுநீதிச் சோழனின் தெய்வீகத் திருத்தலமாக விளங்கிச் சோழர்களுக்கும் சோழ நாட்டிற்கும் அழியாப் புகழ் தேடித்தந்து விளங்குந் திருத்தலம் திருவாரூரேயாகும். இத்தகு பலவகைக் காரணங்களால் இந்நகரை, நகரச்சிறப்புப் படலத்திற்குரியதாகத் தேர்ந்தெடுத்துப் பாடினார் சேக்கிழார்.

தொன்மையில் மிக்கது, சம்புவின் பாங்கினாள் திருச்சேடி பரவையார் அவதாரம் செய்தது, தொண்டர்க்குத் தூது போய் நடந்த திருவடிகளின் மணம் கமழ்வது என்றெல்லாந் திருவாரூர்த் திருத்தலத்தைச் சிறப்பித்த சேக்கிழார் பெருமான் மனுநீதிச் சோழனின் வரலாறு

படைத்த பெருமைக்குரியது திருவாரூர் என்பதை வெளிப்படுத்த அம்மன்னனின் வரலாற்றையே திருநகரச் சிறப்புப் பகுதியில் முழுமையாகப் பாடிச் சிறப்பித்திருக்கிறார்.


சோழநாட்டில் திருவாரூர்

திரு+ஆர்+ஊர் - திரு-அழகு, செல்வம், தெய்வீகம்; ஆர் - ஆர்தல், நிறைதல், பொருந்துதல்; ஊர்-நாடு, நாட்டின் ஒருபகுதி. அழகும் செல்வமும் தெய்வீகத்தன்மையும் ஒருங்கே நிறைந்து பொருந்தியுள்ள நகர் என்னும் பொருளையுடைய பெயரை இயல்பாகவே பெற்றது ; பெயருக்கேற்ற அனைத்துச் சிறப்புகளும் நிறைந்து நிலைபெற்று விளங்குவது திருவாரூர். இது தஞ்சை மாவட்டத்தின் கிழக்குப் பகுதியைச் சார்ந்தது; தற்போது தனிமாவட்டமாக ஆக்கப்பட்டுள்ளது; காவிரியாற்றின் தென்புறத்தலங்களில் ஒன்று. காரைக்குடி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய நான்கு [illegible]களுக்குச் செல்லும் புகைவண்டித் தடங்கள் சந்திக்கும் சந்திப்புப்பேரூராகும். தஞ்சாவூர்; கும்ப[illegible]ணம் ஆகிய இடங்களிலிருந்து பேருந்தின் வழியாகத் திருவாரூரையடையலாம். மாயவரம் - [illegible]ங்தாங்கிப் புகைவண்டிப்பாதையில் உள்ளது. தஞ்சை - நாகைப் புகைவண்டியிலும் செல்லலாம். [illegible]ந்த நகரின் வடக்குத்திசையில் சுக்கானாறும், தெற்குப்பக்கத்தில் ஓடம் போக்கியாறும் ஓடுகின்றன. சுக்கான் என்பது படகைச் செலுத்தும் துடுப்பு. படகு ஆறு, ஓடம் போக்கும் ஆறு என இரண்டும் படகு, ஓடம் ஆகியவற்றின் பெயரால் பெயர் பெற்றவை. சுமார் 20 கி.மீ. தூரத்திலுள்ள வங்கக்கடலை நோக்கிச் செல்லுவன இவ்வாறுகள். நாகப்பட்டினம் என்னும் துறைமுகப்பட்டினத்திற்கு ஓடங்களில் பண்டங்களைக் கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்டவை இவ்வாறுகள். கடாரங்கொண்ட இராசேந்திரசோழனின் வெற்றியைக் குறிக்குமாறு உருவாக்கிய கிடாரங் கொண்டான் என்னும் ஊரும் திருவாரூரின் கிழக்கில் உள்ளது.

'ஆரூரில் நம்பால் வருக' என வானில் ஒலியுண்டாக்கி அழைத்த இறைவன் கட்டளையை ஏற்ற சுந்தரர், தில்லையம்பதியைத் தொழுது புறப்படுகிறார். கொள்ளிடத்திருநதியைக் கடந்து, சம்பந்தர் பிறந்த கழுமலமென்னுஞ் சீகாழியைத் தொழுது, திருக்கோலக்கா, திருப்புன்கூர் போன்ற திருத்தலங்களைப் பாடித் தொழுது காவிரிக்கரையை யடைகிறார். காவிரியில் நீராடி மயிலாடுதுறை, திருப்புகலூர் முதலான திருத்தலங்களைப் பணிந்து, 'தென்னாவலூராளி திருவாரூர் சென்றடைகிறார்'. இது தில்லைத் திருத்தலத்திலிருந்து திருவாரூர் செல்லும் வழித்தடங்களைக் குறிப்பதாகவும் அமைகிறது.

திருவாரூர் சோழ நாட்டின் தலைநகரா?

"இறைவனின் எளிவந்த தன்மையை வெளிக்காட்டுவது அவன் தம்பிரான் தோழருக்காகப் பரவையார் வீட்டிற்குத் தூது சென்றமையேயாகும். நம்பியாரூரர் வாழ்வு



The Map of Tiruvārūr District

முழுத்தன்மையடைய உதவின பரவையார் பிறந்ததும் இத்திருவாரூரில்தான். இந்த இரண்டு சிறப்புக்களும் பெற்ற திருவாரூர் **ஒருகாலத்துச் சோழர் தலைநகராக இருந்தது என்று கூறி, அடுத்தபடியாக மனு நீதியின் வரலாற்றைப் பேசுவது பொருத்தமாகுமன்றோ?** அறத்தின் நாயகனாகிய ஒருமன்னன் ஆண்ட ஊரில் நம்பியாரூரர் வந்து பயன்பெற்றார்; பரவையார் பிறந்து பயன்பெற்றார். [1]

"சோழர்களின் தலைநகரங்களாக விளங்கிய காவிரிப்பூம்பட்டினம், உறையூர், தஞ்சை, கங்கைகொண்ட சோழபுரம் என்பவற்றுள் ஒன்றை எடுத்து நகரச்சிறப்புப் பாடியிருக்க வேண்டுமே? அவ்வாறு செய்யாமல் என்றுமே சோழர் தலைநகராக இருந்திராத திருவாரூர்ச் சிறப்பை ஏன் பாடவேண்டும்? என்ற வினாத் தோன்றியே தீரும்"[2] இவை அறிஞர் ஒருவரே கூறுங்கருத்துகள் : முரண்பட அமைவன. ஆனால்,

"அரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே" என்னும் கணணகியின் கூற்று மனுவின் நகரமாகிய புகாரே என்னுடைய நகர் என்று கூறுகிறது. "கறவை முறை செய்தோன்-பூம்புனற் பழனப் புகார்நகர் வேந்தன்" என்பதும் சிலம்பு கூறுவது.

"மாணிக்க வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்துத்
திருவாரூருடையார் வீதி விடங்கர்" என்பது விக்கிரம சோழனின் கல்வெட்டுச் செய்தி. இது சோழநாட்டின் பல கூற்றங்களுள் திருவாரூர்க் கூற்றமும் ஒன்று; இக் கூற்றத்தின் தலைநகரே திருவாரூர் என்பதைப் புலப்படுத்துகிறது.

"அன்ன தொன்னக ருக்க்ர சாயினான் . . . .
மின்னு மாமணிப் பூண்மனு வேந்தனே" என்பது சேக்கிழார் கூற்று. திருவாரூர் என்னும் பழம்பதிக்கு அரசனாய் விளங்கியவன் மனு வேந்தன் என்று குறிக்கும் இத்தொடரும் திருவாரூரைத்தன் தலைநகராகக் கொண்டு அரசாண்டான் என்று கூறவில்லை. பழம்பதியாகியதும், சோழ நாட்டின் கூற்றங்களுள் ஒன்றாகியதுமான அந்நகரப் பகுதிக்கு அரசனானான் என்றே புலப்படுத்துகிறது.

'என்றுமே சோழர் தலைநகராக இருந்திராத திருவாரூர்' என்று கூறிய அறிஞரும், திருவாரூர் ஒரு காலத்துச் சோழர் தலைநகராக இருந்தது என்று கூறி (என்று கொண்டு), அடுத்தபடியாக மனுநீதியின் வரலாற்றைப் பேசுவது பொருத்தமாகும்' என்றே அமைதிகாண்கிறார்.

திருவாரூர் புற்றிடங் கொண்டான் எழுந்தருளிய பழம்பெருந் திருத்தலம்; அவ்விறைவனின் வழிபாட்டில் சிறந்து விளங்கிய மனுவின் வரலாறு நிகழ்ந்த திருத்தலம்; சோழநாட்டின் கூற்றங்களுள் சிறப்புமிக்க ஒரு கூற்றத்தின் தலைநகர் என்னும் காரணங்களால் திருத்தொண்டர் புராணத்துள் நகரச்சிறப்பில் இடம்பெற்றதே தவிர, சோழநாட்டின் தலைநகரமாக இருந்தது என்று கூற இயலவில்லை.

---

1. பெரியபுராணம் - ஓர் ஆய்வு - பக். 304, 2. பெரியபுராணம் - ஓர் ஆய்வு - பக் .413.

யட்சகான நாடகத்துள் திருவாரூர்

திருவாரூர் திருக்கோயிலின் கோபுரங்களுள் மிகப் பெரியதும், தலைவாயிலி லுள்ளதுமாகிய கீழைக் கோபுரத்தின் அருகில் வலது பக்கத்தில் எழுந்தருளியிருப்பவர் விநாயகர். இவர் பிற்காலத்தில் இடம் பெற்றவராகக் கருதப்படுகிறார். தலைக் கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றால் அங்கு சிறிய மாடப்பிறைக் கோயில் ஒன்று காணப்படுகிறது. அதில் எழுந்தருளியிருப்பவர் தலவிநாயகர்; வீதிவிடங்க விநாயகர் என்னும் பெயர் பெற்றவர்.

திருவாரூரைச் சிறப்பித்துப் பாடும் நாடக ஆசிரியர்,

"முக்கண் விநாயக மூர்த்தி தயாநிதி
திக்கதிக மான திருவாரூரே" (14)

என்று தொடக்க அடியில் பாடுகிறார். இதில் ஆசிரியர் குறிப்பிடுவது வீதிவிடங்க விநாயகரையே ஆகும். முக்கண் உடையவர், அருட் செல்வமாக விளங்குபவர்; முழு முதற்கடவுளாகப் போற்றப் பெறுபவர் இவ் விநாயகர். இவரது அன்பும் அருளும் ஆதரவும் நிறைந்திருப்பதனாலேயே செல்வச் செழிப்போடு விளங்குகிறது திருவாரூர். கயிலையில் வீற்றிருக்கும் இறைவன், புற்றையே தனது இருப்பிடமாகக் கொண்டு வந்து பிறந்து அருள் புரியும் திருத்தலம் அத்திருவாரூர். மேலும் புற்றுகந்தானின் அருள் நிலைத்திருப்பது; அடியவர்களின் பாவங்களையும், முன்வினைப் பயன்களையும் நீக்கியருள்வது; மனு நீதிச் சோழனுக்குப் பேற்றினையளித்தது; கல்வியுஞ் செல்வமும் சமயப்பற்றும் நிறைந்தது; நால்வகைப் படைகள் நிறைந்து விளங்குவது என்பன திருவாரூரைப் பற்றி நாடக ஆசிரியர் கூறுவன. மேலும், அங்கு மன்னனும் மக்களும், அன்பும் அறிவும் நிரம்பி இறையுணர்வோடு வாழ்ந்து வருகிறார்கள் என்பார்.

திருவாரூர்த் திருக்கோயில்

வடக்கு, தெற்காகச் சுமார் 680 அடியும், கிழக்கு மேற்காகச் சுமார் 850 அடியும் கொண்ட நிலப்பரப்பில் 30 அடி உயரமுடைய திருமதில்களைப் பெற்று விளங்குவது திருவாரூர் திருக்கோயில் 110 x 60 அடி அடித்தளத்தில் 120 அடி உயரமுடைய **கீழைக் கோபுரம்** இக் கோயிலின் தலைமை வாயிலையுடையது. இதன் உச்சியில் பதினொரு கலசங்கள் அழகு செய்கின்றன.

இதே அளவிலமைந்த **மேலைக்கோபுரம்** மேலைத் திருவாயிலையுடையதாக அமைகிறது. வடக்குப் பக்கத்தின் வாயிலாக இடம் பெறுவது **வடக்குக் கோபுரம்.** கீழை, மேலைக் கோபுரங்களைக் காட்டிலும் உயரத்தில் சிறிது குறைந்தது வடக்குக் கோபுரம். இது வடக்குப்புறத் திருவாயிலாகவும் பயன்படுகிறது. இதன் சிகரமும் 11 கலசங்களையுடையது. காலத்தால் மிகவும் பிற்பட்டது தெற்குக் கோபுரம் இந்த நான்கு கோபுரங்களைத் தவிர, கீழைச் சிறிய கோபுரம், இரண்டாம் பிரகாரத்து மேலைக் கோபுரம், கீழைக் கோபுரங்கள் ஆகியவற்றுடன் ஏழு திருக்கோபுரங்களை யுடையது திருக்கோயில்.

இத்திருக் கோயிலின் நடுநாயகமாக விளங்குவது புற்றிடங்கொண்ட இறைவனின் பூங்கோயிலாகும். வன்மீகநாதன் என்பதும் இறைவனின் பெயர்களுள் ஒன்று. இப்பூங்கோயிலுக்குத் தனியாகத் திருச்சுற்று உள்ளது. அனுக்கன்வாயில் என்னும் திருக் கோபுரத்துடன் விளங்குகிறது. இத்திருக் கோபுரமே முதன் முதல் தோன்றியதாகும். இந்தப் பழைய கோபுரத்தினுள் வன்மீகநாதரின் கோயிலோடு வீதி விடங்கனான தியாகேசன் கோயிலும் இணைந்து காணப்படுகிறது. புற்றிடங்கொண்டானின் உற்சவ மூர்த்தியாகிய செப்புத் திருமேனியே **'தியாகராசர்'** என்று அழைக்கப்படுகிறது.

கிழக்குக் கோபுர வாயிலின் வழியே மூன்றாம் பிரகாரத்தின் வடபுறம் **'தேவாசிரியன்'** என்னும் ஆயிரக்கால் மண்டபம் ஒன்று காணப்படுகிறது. கோயில் மண்டபங்களுள் மிகப்பழமையானதும் பெரியதுமான இம்மண்டபம் 210 x 140 அடிபரப்பினையுயடையது; உயர்ந்த மேடையின்மீது அமைக்கப்பட்டது. 324 தூண்களையுடைய முன்புறப்பகுதியை இணைத்தே ஆயிரக்கால் மண்டபம் எனப்படுகிறது. இடையில் 42 தூண் (7 x 6) களைக் கொண்ட தனிமேடை உள்ளது. இம்மண்டபத்தில் உற்சவ மூர்த்திகளை எழுந்தருளச் செய்து இசையும் நடனமும் நிகழ்த்தி வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

தேவாசிரியன் என்னும் இத்திருமண்டபத்தில் வீற்றிருந்த அடியவர்களைக் கண்ட சுந்தரர்,

. . . . 'இவர்க்குயான் அடியேனாகப் பண்ணு நாள் எந்நாள்' என்று பரமர்தாள் பரவிச் சென்று 'திருத் தொண்டத்தொகை' என்னும் அருட்பாடல்களைப் பாடியருளினார். இதனைத் தொடர்ந்து 'தேவாசிரியன்' என்னும் இம் மண்டபத்தில் பல நூல்கள் அரங்கேறியுள்ளன.

தேவாசிரியனைத்தவிர இராச நாராயணன் திருமண்டபம், சபாபதி மண்டபம், சந்திர சேகரர் மண்டபம், கமலாம்பாள் மண்டபம், ஊஞ்சல் மண்டபம், வசந்த மண்டபம் என்பன போன்ற பல மண்டபங்கள் திருக்கோயிலில் இடம்பெற்றுள்ளன.

கோயிலின் மேற்கு வாயிலை ஒட்டி மிகப்பெரிய தீர்த்தக்குளம் ஒன்று உண்டு. இது இப்போது கமலாலயம் என்று அழைக்கப்படுகிறது ஆரூர் திருக் கோயிலையே கமலாலயம் என வழங்கியுள்ளனர். **'கமலாலயச்சிறப்பு** என்னும் **திருவாரூர்ப் புராணம்'** என்னும் நூல் ஒன்றினைச் சிதம்பரம், **மறைஞான சம்பந்த நாயனார்** என்னும் முனிவர் இயற்றியுள்ளார். அதனை டாக்டர் உ.வே.சா. அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள் இது திருவாரூரில் கோயில் கொண்டுள்ள வன்மீக நாதர், கமலாம்பிகை ஆகிய மூர்த்திகளைச் சிறப்பித்துக் கூறுகிறது.

மூன்றாம் பிரகாரத்தின் வடமேற்குப் பகுதியில் இடம் பெறுவது **'கமலாம்பிகை'** திருக்கோயில். இது தனித்த திருமதில்களோடு விளங்குவது; கொடிமரம், கோபுரம், திருச்சுற்று ஆகியவற்றுடன் விளங்குகிறது.

நாடகத்துள் கோயிலும் இறையும்

திருவாரூரின் சிறப்புகளை எடுத்துக்காட்டியவிடத்தில் கூறியது போல முக்கண் விநாயகனும், கயிலை மலைத் தேவனும் திருவாரூரில் எழுந்தருளி யருள்புரிகிறார்கள். புற்றிடமான புராந்தகன் மிகுதியாக அருள்புரிகின்றான். இவை நகரச் சிறப்பில் இடம்பெறும் இறைபற்றிய செய்திகள்.

"புற்றிட மாகிய புண்ணியர் தானே
புத்திர னுண்டாகவிப் போதருள் செய்வார்" (பா.27)

என்று சான்றோர் ஆறுதல் கூறுகிறார்கள்.

"புற்றிட மாகியிப் போதிருந் தெவர்க்கும்
முத்தியைக் கொடுக்குமா மூர்த்தியா ரென்றும்" (பா 60)

விழாக்காலத்தில் இறைவனைப் போற்றிப் பணிகிறார்கள் மக்கள். இவ்வாறு சிற்சில விடங்களில் 'புற்றிடங் கொண்டான்' என்னும் பெயரால் இறைவன் போற்றப்படுவது நாடகத்துள் இடம் பெறுகிறது.

"ஆரூரில் தோற்றுங் - காயனே தியாகராயனே"

"உனைப்போல் தெய்வஞ் - சொல்லவுண்டோ தியாகராயனே"

"என்மீ துமக்குக் கோபமோ தியாகராயனே" (பா.26)

மகப்பேறு வேண்டி மன்னன் துதிக்கும் பாடலுள் இவ்வாறு தியாகராயனே! என்றே போற்றப்படுகிறது.

மகப்பேறு பெற்ற பட்டமாதேவி 'சித்தமுண் டாச்சுதே தியாகருக்கு' என்று போற்றியே குழந்தையைச் சீராட்டுகிறாள். இவ்வாறு நூலுள் பல இடங்களிலும் திருவாரூர் இறைவன் தியாகேசன் என்றே போற்றப்படுகிறான். இவற்றைத்தவிர,

நஞ்சுண்டான் திருநாள் (56), கொன்றைதரித்த தியாகராயரை (56), கொழுந்து மதிமுடியான் (59) வெள்ளியங் கிரியில்வாழ் வேந்தனார், புள்ளிமா னேந்திய புண்ணியர், தாண்டவமாடுந் தயாநிதி (60), என்பன போன்ற பொதுப்பெயர்கள் பலவற்றால் திருவாரூர் இறைவன் நூல்முழுவதும் போற்றப்படுகிறான்.

மிக நீண்ட தெருக்களையுடையதும், தெருக்கள் தோறும் பல இன மக்கள் வாழ்ந்து வருவதுமாகிய திருவாரூரின்,

"கோயில் மண்டபமதின் கோபுரம் விளங்குஞ்
சாயலில் இந்திரன் தனபதி யெல்லாம்
அளகைப் பதியென்ன லாகும்" (பா.15)

என்பர் ஆசிரியர். இவ் அடிகளில் கோயிலும் கோயில் மண்டபங்களும் கோபுரங்களும் குபேரநகரை நினைவூட்டுவனவாகும் என்று சிறப்பிக்கப்படுகிறது.

நாடகப்பொருள்

தேரூர்ந்த சோழன் யட்சகானம் என்னும் இந்த நாடகத்தில் தேரூர்ந்த சோழனாகிய மனு நீதிச் சோழனும், அவனுடைய மகன் வீதிவிடங்கனும் தலைமை உறுப்பினர்களாக இடம் பெறுகிறார்கள். எனவே இந்த நாடகம் ஒரு வரலாற்று நாடகமாக அமைகிறது.

கல்வெட்டில் மனு நீதிச் சோழன் வரலாறு

"மண்முழுதுங் கலிப்ப மனுநெறி வளர்த்து
. . . .
திரிபுவனச் சக்கர வர்த்திகள்
ஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு
அஞ்சாவது . . . . . மாணிக்க வளநஉஉஉ ாட்டு
திருவாரூர் கூற்றத்து திருவாரூருடையார் வீதி விடங்கர்
சித்திரைத் திங்கள் திருநாளில் . . . . .
நம்ஏவலால் பூலோக ராச்சியம் செய்கிற
சூரிய புத்திரன் மனுதன் புத்திரன்
ஏறி வருகிற தேரில் பசுவின்
கன்று அகப்பட்டுப் பிரமாதப் படஅதின்
மாதா வான சுரபிகண்டு துக்கித்து
மனுவின் வாசலில் மணியை யெறிய - அது கேட்டு
மனுதன் மந்திரி இங்க நாட்டுப்
பாலூ ருடையான் உபயகுலா மலனைப்
பார்த்துநீ சென்று இதனை யறிந்து . . . .
வாயிற் புறத்து ஒருபசு மணி
யெறியா நின்றது என்று சொல்ல - அதுகேட்டு
மனுபுறப் பட்டுக் கிடந்த . . . . . படி
வினவித் தன் புத்திரன் ஏறின
தேரிலே பட்டமை அறிந்துஅக் கன்றுக்கு
நேராகத்தன் புத்திரன் **பிரிய விருத்தனைத்**
தேரிலே ஊர்ந்து கொடுக்க வென்று
உபயகுலா மலனுக்குச் சொல்ல அவன்
சதோபத் தோடும் புறப்பட்டுத்தன் செவிகளைத்
தரையிலே குடைந்து கோடுபட்டது கண்டு
துவார பாலகன் புகுந்தது உபய
குலாமலன் தன்செவிகளைக் குடைந்து கொண்டு
. . . . தும்மித னாய்மனு
தானே புறப்பட்டுத் தன்புத் திரனைத்
தானே தேரீலே ஊர்ந்து கொடுக்க
அப்போதே நாமவனை அனுக்கிர கித்து

கன்றுக்கும் மந்திரிக்கும் மனுபுத்தி ரனுக்கும்
ஜீவன் கொடுக்க அதுகண்டுமனஞ் சந்தோஷித்துக்
கன்றினை எடுத்துக்கொண்டு பசுவுக்குக் காட்டிக்
. . . . டாபிஷேகம் பண்ணி
இவனுக்கு உபயகுலாமலன் மகன் **சூரியனை**
மந்திரி யாக்கி இவனுக்குத் தன்புத்திரன்
மாளிகை . . . . . மங்கல . . . மூருங் கொடுத்து . . . .

என்பது மனுநீதிச் சோழனின் வரலாறு முழுமையாக அடங்கியதோர் கல்வெட்டுச் செய்தி
(திருவாரூர்க் கல்வெட்டு – 27)

மேலும் மனுவும் உபயகுலாமலன் என்னும் அமைச்சனும் தவம் மேற்கொள்ளப் புறப்பட்டார்கள். அப்போது அமைச்சனின் வழித் தோன்றலாகிய பாலையூருடையான் சந்திரசேகரன் ஆதிவிடங்கனான குலோத்துங்கசோழ மகாபலி வாணாதிராசனுக்குப் பரம்பரையாக அனுபவித்துக் கொள்ளுமாறு மாளிகையும் மனையும் காணியாக்கித் தருகிறார்கள். அந்த மாளிகையும் மனையும் மனுநீதிச் சோழனால் உபயகுலாமலன் என்னும் அமைச்சனுக்குக் கொடுக்கப்பட்டவை இச்செய்திகளும் அக்கல்வெட்டில் இடம்பெறுகின்றன.

மனு தர்ம சாத்திரம்

மலைய நாட்டில் ஓடிய கிருதமாலையாற்றங்கரையில் தவம் செய்துகொண்டிருந்த மனு என்பவரிடம் இருடிகள் பலருங் அறங்கூறுமாறு கேட்டனர். அவர்களுக்குக் கூறிய 2694 சுலோகங்களடங்கிய சாத்திரமே மனுதர்ம சாத்திரம் எனப்படுகிறது.[1] இதுவே இந்துக்களின் முதல் நீதிநூல் ஆகும். அந்த அறநெறிவழுவாது அரசு மேற்கொண்ட சோழ மன்னன் மனு நீதிச் சோழன் என்று காரணப் பெயர் பெற்றான். அப்பெயரே நிலைக்க, இயற்பெயர் மறைந்து போயிற்று. தமிழ் மன்னர்களின் வரலாறு முறையாக எழுதிவைக்கும் நிலை இல்லாமற் போனதாலோ எழுதிவைத்துச் சுவடிகள் காணாமற் போனதாலோ இவ்வரலாற்றை எடுத்துக் காட்ட இயலாமற் போயிற்று.

சிலம்பில் மனு

மனுவின் வரலாறு பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் இடம்பெறவில்லை. ஆனால்,

"வாயிற் கடைமணி நடுநா நடுங்க
வாவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் – தான்றன்
அரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்
பெரும் பெயர்ப் புகாரென் பதியே" (சிலம்பு 20. 53–56)

"புறவுநிறை புக்கோன் கறவைமுறை செய்தோன்

1. பாகவதம், மச்சபுராணம்.

பூம்புனற் பழனப் புகார்நகர் வேந்தன்" (சிலம்பு 23. 58-59)

"குறைவி லுடம்பரிந்த கொற்றவன் முன்வந்த
கறவை முறை செய்த காவலன்கா ணம்மானை" (சிலம்பு 29 8-9)

என்பன சிலப்பதிகாரத்தில் இடம்பெறுகின்றன. முறை செய்தவன் மன்னன். அவன் ஆண்ட ஊர் புகார் என்பன மட்டுமே கூறப்படுகின்றன. சோழநாடு என்பது பெறப்படுகிறது. மன்னன் பெயரோ திருவாரூர் நகரமோ பிற பெயர்களோ சுட்டப்படவில்லை.

மணிமேகலையில் மனு

"மகனை முறைசெய்த மன்னவன் வழியோர்
துயர்வினை யாளன் தோன்றினன்" (மணிமே-22 210-11)

என்பதும் மனுவின் சிறப்பை உணர்த்துவது. இது மகனை முறை செய்த சோழமன்னின் வழியில் வந்த இவன் இந்தத் தீவினைகளுக்கு உரியவனானான் என்று உதய குமரனைப் பழித்துக் கூறுவது

திருத்தொண்டர் புராணத்தில் மனு

'சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணத்துள் மிகச் சிறப்புடைய ஒரு வரலாறாக அமைவது மனுநீதிச்சோழன் புராணம் . . . . 'இளங்கோவடிகள் காலத்திலேயே வழங்கிவந்த இக்கதையைப் பின்னர் வந்த மூவர் முதலிகளுள் யாரும் பாடவில்லை. . . சோழர்களைப் பற்றிப் பெருமையாகப் பேசும் தேவாரம் இக்கதையைக் கூறவில்லை. திருத்தொண்டத் தொகையிலோ நம்பிகளின் அந்தாதியிலோ இக்கதை இடம் பெறவில்லை. . . என்ன காரணம் என்பதும் விளங்கவில்லை. சிலப்பதிகாரக் காலத்திற்குப் பிறகு, சோழர்களின் பெருமை பேசும்வாய்ப்புடையது என்பதற்காகச் சேக்கிழார் இக்கதையை எடுத்துக் கொண்டிருக்கிறார்' என்பர். [1]

அப்பரும் சுந்தரரும் ஆளுடைப் பிள்ளையும் ஆண்டவனைப் பாடினர்; அடியார்களைச் சிறப்பித்தனர். ஆனால் சேக்கிழார் பெருமானோ அடியார்களின் வரலாற்றைக் கூறும் புராணம் இயற்றினார்; புராண அடிப்படையில் நாட்டைப் பாடினார்; நகரத்தைப் பாடினார்; நீதிநெறி வழுவா மன்னர் குலத்தைப் பாடினார். அவற்றுள் சோழநாட்டிற்கும் சோழ மன்னருக்கும் முதலிடம் அளித்தார். அதனால் சோழமன்னருள் காலத்தால் மூத்தவனும், நீதியால் முன்னிற்பவனுமாகிய மனுநீதிச் சோழனின் வரலாறு முதலில் இடம்பெற்றது. திருவாரூரின் சிறப்புகளைப் பாடிய சேக்கிழார் அதே நகரச் சிறப்பு என்னும் படலத்தில் மனுவின் வரலாற்றைக் கூறுவார்.

"அன்ன தொன்னக ருக்கர சாயினான்
துன்னு செங்கதி ரோன்வழித் தோன்றினான்
மன்னு சீர்அந பாயன் வழிமுதல்
மின்னு மாமணிப் பூண்மனு வேந்தனே" (பா.13)

---

1. பெரியபுராணம் - ஓர் ஆய்வு. அ.ச.ஞா. பக். 302.

என்பது மனுவின் வரலாறு தொடங்கும் முதற்பாடல். மனு சூரிய குலத்தில் தோன்றியவன்; அநபாய சோழன் பிறந்த சூரிய வமிசத்தின் முதல் சோழனாக விளங்கியவன் என்பன இதில் கூறப்படுகின்றன. மனுவின் மைந்தன் ஒருநாள் தேரில் மாடவீதி வழிசெல்ல, இளங்கன்று ஒன்று துள்ளிக்குதித்துத் தேர்ச் சக்கரத்தில் சிக்கி உயிரைவிட்டது என்பது முதலாகிய வரலாறு 37 பாடல்களில் காணப்படுகிறது. ஆனால் யாருடைய பெயரும் சுட்டப்படவில்லை.

கலிங்கத்துப் பரணியில் மனு

குலோத்துங்க சோழன் காலத்தவரும் (1078-1118), திருவாரூரை ஒட்டிய ஊரான தீபங்குடியில் பிறந்தவருமான ஜெயங்கொண்டார்,

"அவ்வருக்கன் மகனாகி மனுமே தினிபுரந்து
அரியகா தலனையாவி னதுகன்று நிகரென்று
எவ்வருக்க மும்வியப்ப முறைசெய்த பரிசும்" (கலிங். 187)

என்னும் அடிகளில் மனுவின் வரலாற்றைத் தொடங்குவார். மனு சூரிய வமிசத்தில் பிறந்தவன் ஆவின் கன்று தன் மகனுக்கு நிகரானதே என்று முறைசெய்தவன் என்று தொடங்குகிறார். தொடர்ந்து மனுவின் வமிசத்தில் முறையே இக்குவாகு, ககுத்தன், மாந்தாதா, முசுகுந்தன், பிருதுலாட்சன், சிபி, சுராதிராசன் ஆகியோர் இராசகேசரி, பரகேசரிகளாய் ஆணை செலுத்திவந்தனர் என்ற வரலாறுகளைப் புலப்படுத்துகிறார். காலனுக்கு இது வழக்கு என்ற கிள்ளிவளவன், காவிரிப்புனல் கொணர்ந்த கவேரன், தூங்கெயிலெறிந்த சோழன், நாககன்னிகையை மணந்த கிள்ளிவளவன், உதியன் சேரலாதன் எனக் குலோத்துங்க சோழன் வரையிலான சோழ பரம்பரையினரை அவர்தம் சிறப்புச் செயல்களடங்கிய அடைமொழிகளோடு தொகுத்துக் காட்டுவார் (கலிங்.188-211).

பழமொழியில் மனு

"சால மறைத்தோம்பிச் சான்றவர் கைகரப்பக்
காலை கழிந்ததன் பின்றையும் - மேலைக்
கறவைக்கன் றூர்ந்தானைத் தந்தையு மூர்ந்தான்
முறைமைக்கு மூப்பிளமை யில்" (பழமொழி -242)

என்பது பழமொழி நானூறு கூறும் கூற்று. 'முறைமைக்கு மூப்பிளமையில்' என்னும் பழமொழிக்குச் சான்றாக மனுவின் வரலாறு எடுத்துக்காட்டப்படுகிறது.

மூவருலாவில் மனு

"சிந்தனை யாவிற்கு முற்றத் திருத்தேரில்
மைந்தனை யூர்ந்த மறவோனும்" (விக்ரம. உலா - 4)

"மனுகுலத்தோன் தந்த பெரிய தனிமைக்கண்" (ஷ - 241)

"மருளப் பசுவொன்றின் மம்மர்நோய் தீர

உருளுந் திருத்தேர் உரவோன்" (குலோத். உலா-2)

"அறவாழி மைந்தன்மே லூர்ந்தோன்" (இராச.உலா.3)

என்பன, மூவருலாவின் பாட்டுடைத் தலைவர்களான சோழ மன்னர்தம் வமிசாவளிகளைக் கூறுங்கால் மனுவின் வரலாற்றை எடுத்துக் காட்டும் அடிகள்.

முக்கூடற் பள்ளில் மனு

"தான்பசுபோல் நின்று கன்றைத்
தேர்க்காலில் விட்டுச் - சோழன்
தன்மகனைக் கொன்றா னுங்கள்
தாணு வல்லோடி" (முக்.பள்ளு - பள்ளியர் ஏசல்)

இது சிவபெருமானின் செயலைக் குறைகூறும் மூத்தபள்ளியின் கூற்று. 'தேர்ச் சக்கரத்தில் தானே கன்றை ஏவி விட்டுவிட்டுத் தேரில் வந்த இளவரசன் மீது பழியைச் சுமத்திக் கொன்றவனல்லவா உங்கள் சிவன்' என்று பழிக்குமாற்றால் அமையும் இவள் கூற்று மனுவின் வரலாற்றை உள்ளடக்கியது.

திருக்குறள் உரையில் மனு

"இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கும் முட்டாச் செயீன்" (547)

என்பது குறள். உலகை அரசன் காக்கின்றான் அரசனை அவனது நெறிமுறைகளே காக்கும். அம்முறைகளில் வழுவாது அரசு செலுத்துவானேயானால் என்பது கருத்து. இதில் முட்டாமற் செலுத்தியதற்குச் சான்று காட்டும் பரிமேலழகர், முட்டாமற் செலுத்தியவாறு - மகனை முறை செய்தான் கண்ணும், தன்கை குறைத்தான் கண்ணுங் காண்க' என்பார்.

இராமாயணத்தில் மனு

சோழ நாட்டினராகிய கம்பர், இராமபிரானின் பிறப்புபற்றிக் கூறும்போது வமிச பரம்பரையைச் சுட்டுமாற்றால்,

"எத்தானும் வெலற்கரியன் மனுகுலத்தே வந்துதித்தான், இலங்கு மௌலி (214)

என்று உத்தானபாதன் மகன் உரோமபதனின் சிறப்பைக் கூறுமிடத்தில், மனுகுலத்தில் பிறந்தவன் என்று குறிப்பிடுகிறார். மேலும்,

"தருமத்தின் கவசத்தான் மனுவென்ற நீதியான்" (734)
"மனுமுதல் மரபைச் செயிர்உறப் புலைச்சிந்தையால்" (1559)
"வல்லைநீ மனுமுதல் மரபி னோயென்" (3733)

என்பன போன்று இருபதுக்கும் மேற்பட்ட இடங்களில் மனுகுலம், மனுமரபு, மனுநெறி, மனுவின்வழி என்னுந் தொடர்களைக் கையாண்டு மனுநீதிச் சோழனின் மரபையும், நீதிநெறியையும் சுட்டிச் செல்லுகிறார்.

சுவடிகளில் மனு

"ஆரூரில் சோழன் வாசலில் சென்றங்
கிசையா மணியசைத்தோன்
தேரேருஞ் சோழன் குமாரனைத் தேர்க்காலில்
சென்று மடியவைத்தோன்
பாரூர் பசுப்பழி யாகவே சோழன்தன்
பாலனைக் கொன்றதனால்
கொன்றாலுஞ் சோழன் குமாரன் தனக்குக்
குறையாப் பதங்கொடுத்தோன்"

என்பது தில்லைச் சிதம்பரநாதன் செந்தில் அந்தாதி. (ஏடு.28)

"கற்றா வாக உருவெடுத்துக் கன்றாய் எமனைப் பணித்தவனே"

(ஆமையர் அம்மானை - வரி-3392) என்பன சில சுவடிச் செய்திகள்.

மனு முறை கண்டவாசகம்

'மனுமுறை கண்ட வாசகம்' என்னும் உரைநடைநூல் இராமலிங்க அடிகளார் அவர்களால் எழுதப்பட்டது. இதில் அனைத்து மக்களும் படித்துப் பயன்பெறும் முறையில் எளிய நடையில் **'மனுவின் வரலாறு'** எழுதப்பட்டுள்ளது.

மகாவம்சத்தில் மனு

'அசேலன் என்பவன அனுராதாபுரத்தில் பல வருட காலம் ஆட்சி செய்தான். சோழ நாட்டிலிருந்து ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக இங்கு வந்த தமிழன் ஏலாரா என்பவன் அசேலனைத் தோற்கடித்து நாட்டைப்பிடித்து 44 வருடம் ஆண்டான். அவன் எதிரிகள், நண்பர்கள் என்ற பேதாபேதமின்றி, நீதியின் முன் எல்லோரையும் சமமாக நடத்திவந்தான். அவன் சயன அறையில், தலைக்கு மேலாக ஒருமணி நீண்ட கயிற்றுடன் கட்டித் தொங்க விடப்பட்டிருந்தது. அவனிடம் நீதி கோரி வருபவர்கள் அந்த மணியை அடிக்கலாம்,

அரசனுக்கு ஒருமகனும் ஒரு மகளும் மட்டுமே இருந்தார்கள் ஒருசமயம் ராஜகுமாரன் ரதத்தில் தீசவாபிக்குச் சென்று கொண்டிருந்தான். அப்போது தாய்ப்பசுவுடன் வீதியில் படுத்திருந்த கன்றின் கழுத்தில் தேர்ச்சக்கரத்தை ஏற்றி, அறியாமல் அதைக் கொன்று விட்டான். துக்கம் தாளாது பசு அரண்மனைக்கு வந்து மணியை அடித்தது . . . தன் மகனுடைய கழுத்தின் மீது தேரை ஓட்டி மகன் தலையைத் துண்டிக்கச் செய்தான் அரசன். என்பது இலங்கை வரலாறு அடங்கிய மகாவம்சம் தரும் செய்தி.[1] இது மனுநீதிச் சோழனின் வரலாற்றுச் செய்தியாகும்

---

1 மகாவம்சம், பிரிவு 21 இல் 13 -18 பத்திகள்

இவ்வாறு விக்கிரமசோழனின் கல்வெட்டுச் செய்தியும், சிலப்பதிகாரம், மணிமேகலையாகிய காப்பியக் கூற்றுகளும் மனு நீதிச் சோழனின் வரலாற்றினைத் தெரிவிக்கின்றன. அடியார்களின் வரலாற்றைப் பாடும் சேக்கிழார், சூரிய வமிசத் தோன்றலாக மனுச் சோழனை எடுத்துக் கொண்டு, நீதி நெறியால் இறையடியார்களுள் ஒருவனாக, முதல்வனாக வரிசைப் படுத்தித் தொடக்கத்திலேயே அவன் வரலாற்றைப் பாடுகிறார். மனு மன்னன் முதலாகக் குலோத்துங்க சோழன் வரையிலான சூரிய வமிசத் தோன்றல்களாகிய சோழ மன்னர்களின் வமிசாவளியைத் தொகுத்துக் காட்டுகிறார் ஜெயங்கொண்டார். இதே அடிப்படையில் வமிசாவளியைக் கூறுகின்றன மூவருலாவும் பிற சோழர் உலா நூல்களும் பிற சிறு நூல்களும், இலங்கை வரலாறு கூறும் மகாவம்சமும் மனுவின் செய்திகளை ஒரே நோக்கில் எடுத்துக் காட்டுகின்றன. கவிச்சக்கரவர்த்தியும் மனுவைப்பற்றியும், மனுநெறியைப் பற்றியும் பல இடங்களில் பேசுகிறார். இவற்றையெல்லாம் ஒருசேர ஆழ்ந்து நோக்கும் போது பெரும்புலவர் பலரும் பாடிய மனுநீதிச் சோழனைப் பற்றிய செய்தி ஒரு வரலாற்றுச் செய்தியே என்பதை உறுதியாகக் கூறலாம்.

பாட்டிக்கதை முதல் பரம்பரைக் கதைகள் பல வழக்காற்றிலுள்ளன என்றாலும் அவை இலக்கியங்களில் இடம்பெற்று விடுவதில்லை. அதேபோல இத்தகு பெரும்புலவர் பலரின் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள மனுவின் செய்தி பாட்டிக்கதையாகவோ பரம்பரைக்கதையாகவோ இருக்க முடியாது.

நாடகத் தொடக்கம்

இசை நாடகங்களின் அடிப்படை அமைப்பிலும், யட்சகான நாடக முறையிலும், எடுத்துக் கொண்ட செயல் இனிதே நிறைவுற இறைவனைத் தொழுது தொடங்குதல் என்னும் பொதுக்கொள்கை அமைப்பிலும் தேரூர்ந்த சோழன் யடசகானம் என்னும் இந் நாடகம் இறைவணக்கத்துடன் தொடங்குகிறது பல கடவுளர்களைப் போற்றிப் பாடித்துதிக்கும் ஆசிரியர் முதலில் ஆனைமுகக் கடவுளாகிய விநாயகனைத் தம் உள்ளத்தில் நிறுத்தித் துதிக்கிறார்

நாடகப் பார்வையாளர்களாகிய மக்களின் கவனத்தை நாடகமேடையின் பக்கம் ஈர்த்து இறையுணர்வில் மகிழச் செய்யும் நோக்கத்தோடு பல கடவுளர்களைத் துதிக்கும் கூட்டுப்பாடல் ஒன்று நாடகத்தின் தொடக்கப்பாடலாக அமைகிறது. கடவுளர்தம் சிறப்புகளைக் கூறித் துதிக்கும் போக்கில் அக்கடவுளர் பற்றிய இயல்புகளும் சமயக் கருத்துகளும் தொகுத்தளிக்கப்படுகின்றன இப்பாடலடிகளை மீண்டும் மீண்டும் இசையோடு பாட, அதைக் கேட்கும் மக்கள் அக்கடவுளர்தம் பெருமைகளில் ஊறித் திளைப்பது இயல்பாகிவிடும் சான்றாக,

சுரேந்திர வந்திதன், அரிசதிவல்லபன், கெசமுகசூர சங்காரன், விக்கினராசன், சிந்துர வதனன், ஐங்கரன், மூஷிகவாகனன், வல்லபைநாயகன், பரம குருபரன், மவுளியணிமனோகரன் என்னும் பத்துவகையான சிறப்புகளை விநாயகன் மீது ஏற்றிக்கூறிப்

பாடப்படும் பத்து அடிகள் நாடகத் தொடக்கத்தில் அமைகின்றன. இவை மக்கள் உள்ளத்தில் விநாயகனின் பெருமைகளைப் பதியவைப்பனவாகின்றன. இவ்வாறே ஆறுமுகங்களும் பன்னிரண்டு திருப்புயங்களுமுடைய அழகன் முருகப்பெருமானும், திரிபுரமெரித்து, உமையம்மையை ஒரு பாகத்திலே யணிந்துள்ள சிவபெருமானும், கண்ணனாகவும், திருமாலாகவும் இராமனாகவும் அன்பர்களைக் காத்த விஷ்ணுவும், இமவான்மகன், திரிபுராந்தகி, மயேஸ்வரி, பார்வதி, கௌரி, சாம்பவி என்னும் பெயர்களைப் பெற்ற உமையம்மையும், வேதபாராயணி, மதுரவாணி, கலைமகள், சரஸ்வதி என்னும் பெயர்களைப் பெற்ற கலைவாணியும் பலவாறு சிறப்பித்துப் போற்றப்படுகிறார்கள். ஆங்காங்கு 'சரணம்' என்ற சொல்லால் அனைவரையும் வணங்கும் முறை மக்களைப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்துவதாக அமைகிறது

நூலின் முதலிரண்டு பாடல்கள் பொதுவான இறைவணக்கப் பாடல்களாக அமைகின்றன. ஆனால் மூன்றாம் பாடல் தொடங்கி முறையே விநாயகன், அரன், கொல்லி நாயகன், திருவலத்து வாரணன், தொப்பையப்பர்,முருகன், வல்லநாதர், வல்லநாயகி, திருமால், ஏகவல்லி, கலைமகள் ஆகியோரைப் போற்றும் துதிப் பாடல்கள் அமைகின்றன. இவை இந்த யட்சகான நாடகத்தைப் பாடத் துணைநிற்றல் வேண்டும் என்ற வேண்டுகோளோடு அமையும் சிறப்பு வணக்கப் பாடல்களாகின்றன. இப்பாடல்களுள் முதலில்,

நீதிநெறிநின்ற சோழன்கதையைப் பாடுவேன்; புதிய யட்சகான வடிவில் பாடுவேன்; மக்கள் யாவரும் தேவாமுதம் என்று மகிழ்ந்து கூறுமாறு பாடுவேன் என்கிறார் ஆசிரியர். இவற்றுள்.

"மேதினிமேற் சுபமெய்தி நீதியுமுள சோழன்கதை
நூதன மாக ஓதினேன்" (பா.3)

"யாவரும் நல்ல வமுதா மெனச்சொல்லி யாதரிக்கக்
காவலனா கியசோழன் கதையட்ச கானமெந்தன்" (பா.4)

என்னும் அவர்தம் கூற்றுகள் நுதலிப்புகுதல் என்னும் உத்தியால் சொல்லப்பட்டவை. சோழன்கதையைப் பாடுவேன்; யட்சகான வடிவில் புதுமையாகப் பாடுவேன்; யாவரும் புகழப்பாடுவேன் என்பனவற்றுள் இன்னநூலைப் பாடுவேன், யட்சகான வடிவில் பாடுவேன் என்பன நுதலிப்புகுதலாகும். ஆனால் யாவரும் அமுதாமெனச் சொல்லிப் புகழப்பாடுவேன் என்பது தற்புகழ்ச்சியாக அமைவது போலக் காணப்படுகிறது. ஆயினும்,

"நூதன மாக ஓதினேன் ஞானமுறும்
போதமூர்த்தி விநாயகர் ஆதர வாலே" (பா 3)

"காவல னாகிய சோழன் கதையட்ச கானமெந்தன்
நாவி லிருந்து புகல்வா யருங்கொல்லி நாயகனே" (பா.4)

என்னும் முடிவடிகள் 'விநாயகனின் ஆதரவால் நூதனமாக ஓதினேன்; எந்தன் நாவிலிருந்து புகல்வாயருங்கொல்லி நாயகனே என அமைகின்றன. அவை அந்த இறைவன்

அருளால் சிறப்புறப் பாடினேன் எனவும், என்நாவிலிருந்து அவனே பாடச்செய்வான் எனவும் கூறப்பட்டவையாதலின் தற்புகழ்ச்சியாகாது,

"வாழ்வு தரும்வல்ல நாத சுவாமிதம்
மகிமை யால்ரா சேந்திர னாகிய
சோழன் கதையட்ச கான மாகவே
சொல்லு வேனே" (பா.8)

என்பதும் இறையருளால் நான் சிறப்பாகப் பாடுவேன் என்று போற்றிய பகுதியே யாகும். நுதலிப்புகுதல் என்னும் இவ்வுத்தி எல்லா மொழி யட்சகான நாடகங்களிலும் கையாளப்படும் முறையேயாகும். தெருக்கூத்து போன்ற பழைய நாடகங்களிலும் இம்முறை கையாளப்படுகிறது.

திருவலத்து இறைவர்கள்

விநாயகன் முதலாகப் பல கடவுளர்களையும் பாடி அவையை நாடகத்தின் பாற் கவர்ந்த ஆசிரியர், நாடகத்தின் ஐந்தாம் பாடல் தொடங்கித் தாம் பிறந்த மண்ணாகிய திருவல்த்தில் எழுந்தருளியிருக்கின்ற வாரணன், விநாயகன், முருகன், வல்லநாதர், வல்லநாயகி, திருமால், ஏகவல்லி ஆகிய கடவுளர்களைத் தனித்தனிப் பாடல்களில் போற்றிப் புகழ்ந்து வணங்குகிறார். இப்பாடல்கள் திருவலத்து மக்களுக்கு மகிச்சியூட்டித் தங்கள் திருத்தலத்து இறைவர்களிடத்தும் அதேசமயம் நாடகத்திலும் ஆழ்ந்த ஈடுபாடு கொள்ளச் செய்வனவாகும். இந்த நாடகத்தை இயற்றித் தமிழ் மக்களிடையே பரப்ப வேண்டும் என்ற நோக்கம் ஒரு புறமிருப்பினும், தம் ஊரில் நடத்திக் காட்டுவதற்காகவே எழுதப்பட்டது என்ற நோக்கம் திருவலத்துக் கடவுளர்மீது பாடப்பெறும் பாடல்களால் வெளிப்படையாகிறது.

கரிய யானைமுகத்தோடு எழுந்தருளியிருப்பவன் திருவலத்து வாரணன். தொப்பையப்பனாகவும், பூர்த்திவிநாயகமூர்த்தியாகவும் எழுந்தருளியிருப்பவன்.

மதியையும் நாகத்தையும் புனலையும் அணிந்த வள்ளலின் மகன்; தேவயானையையும் குறவள்ளியையும் மணந்தவன் திருவல்லை வேலாயுதன். அம்பலத்தில் இன்பமாயங்கள் புரிந்து, திருவல்லையில் தேவியுடன் மலை வடிவமாய் எழுந்தருளியிருப்பவன் வல்லநாதன். தருமதேவதையாக வீற்றிருப்பவள் வல்லநாயகி. கருட ஊர்தியோடு திருவல்லையில் வீற்றிருப்பவன் நாராயணன். கங்காதீரத்திலிருந்து கரிகால சோழனால் அழைத்துவரப்பெற்று திருவல்லை மாநகர் தமக்கே உரியது என்ற உரிமையோடு எழுத்ருளியிருப்பவள் ஏகவல்லியம்மை. நாலு முகராசனாகிய பிரமாவோடு இணைந்திருப்பவள்; தன்னையுணரும் செல்வத்தை அனைத்துலகோருக்கும் அளித்து மகிழ்பவள் திருவலத்துக் கலைமகள். இவை ஆசிரியரின் இறையுணர்வுக்கும் நாடக உத்திக்கும் எடுத்துக்காட்டாய் அமைவன.

நாடகக் கருப்பொருள்

நீதி நெறிதவறாதவன் சோழ மன்னன். குழந்தைச் செல்வமில்லாமல் புற்றிடங் கொண்டானாகிய தியாகேசனைத் துதித்து வருகிறான். வெகு நாளைக்குப்பின் தேவி ஆண்மகனைப் பெற்றெடுக்கிறாள். அழகுங் கல்வியுந் திறனும் ஒருங்கே அமைந்த இளவரசன் கோயில் விழாவிற்குச் செல்லுகிறான்: அவன் சென்ற தேர்க்காலினடியில் விழுந்து ஒரு ஆண் கன்று உயிர்விடுகிறது. தாய்ப்பசு ஆராய்ச்சி மணியை அசைத்துத் தன் வருத்தத்தைத் தெரிவிக்கிறது. நடந்ததை அறிகிறான் மன்னன். கன்றின் உயிருக்கு ஈடாகத் தன் மகனைத் தேர்க்காலில் கிடத்தித் தேரைச் செலுத்துகிறான். இறையருள் பெற்று அனைவரும் பேறு பெறுகிறார்கள். இதுவே நாடகத்தின் கருப்பொருளாகும் வரலாறு.

நிகழ்ச்சிகளில் சில மாறுபாடுகள்

"தான்தன் – அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்"

'கறவை முறைசெய்த காவலன்' என்னும் பெயர்களாலேயே வரலாற்றுத் தலைவனைச் சிலப்பதிகாரம் சுட்டுகிறது. .'மகனை முறை செய்த மன்னவன்' என மணிமேகலை கூறுகிறது.

செங்கதிரோன் வழித் தோன்றிய அநபாய சோழனின் முன்னோன் 'மனுவேந்தன்' என்று தலைவன் பெயரை மட்டும் கூறுகிறது திருத்தொண்டர் புராணம். பரணி, உலா முதலான சிற்றிலக்கியங்களும் மனு என்ற பெயரையும், அவனது நீதி நெறிச் செயலையும் மட்டுமே சுட்டுகின்றன.

சூரிய புத்திரன் மனு என மன்னனையும், பிரியவிருத்தன் என மனுவின் மகனையும் சுட்டுகிற கல்வெட்டுச் செய்தி, இங்கநாட்டுப் பாலூருடையான் உபயகுலாமலன் என்னும் அமைச்சன் பெயரையும், 'சூரியன்' என்னும் அமைச்சன் மகன் பெய்ரையும் கூடுதலாகச் சுட்டுகிறது.

'மனுமுறை கண்ட வாசகம்' என்னும் நூல் மன்னனைச் சுட்டும் மனு என்னும் பெயரோடு மன்னன் மகன் 'வீதிவிடங்கன்' என்ற பெயரைமட்டும் சுட்டிக் கூறுகிறது. மற்றவர்கள் பொதுப்பட தேவி, மந்திரி என்னும் பெயர்களாலேயே சுட்டப்படுகின்றனர் இந்த யட்சகான நாடக ஆசிரியர்,

"தேரூர்ந்த சோழன்கதை செப்பவே" (5)

". . . . . .சுவாமிதம் மகிமையால்
ராசேந்திர னாகிய சோழன்கதை
யட்ச கானமாகவே சொல்லுவேனே" (8)

என்னும் அடிகளில் பாட்டுடைத் தலைவனைத் தேரூர்ந்த சோழன், இராசேந்திர சோழன் என்னும் பெயர்களால் சுட்டுகிறார். நூல் முழுவதும் மன்னனை இராசேந்திர சோழன் என்றே பாடுகிறார்.

சோழ பூபதியின் அமைச்சர் இருவர்; ஒருவன் பெயர் '**சகல கலை வல்லவன்**'; மற்றவன் '**நீதி பூஷணன்** என்று குறிப்பிடுகிறார். அரசமாதேவி **பட்டமாதேவி** எனக் குறிப்பிடப் பெறுகிறாள். மகனுக்கு '**வீதிவிடங்கன்**' என்று திருவாரூர் இறைவன் பெயரையே சூட்டுகிறார்கள்.

தேரூர்ந்த நாடகம், தேரூர்ந்த புராணம், தேரூர்ந்த வாசகம் என்னும் பெயர்களில் பலசுவடிகள் சென்னை, அரசினர் சுவடி நூலகத்தின் பாதுகாப்பில் உள்ளன. கருப்பொருள் ஒன்றேயாயினும் கதைப்போக்கில் இடையிடையே சிற்சில மாற்றங்கள் காணப்படுகின்றன. சான்றாகத் தேரூர்ந்த நாடகத்தின் அமைப்பைக்காட்டலாம்.

தொடக்கத்தில் கட்டியன் தோன்றுகிறான். பிறகு மன்னன் அமைச்சனிடம், திக்குளோர் புகழ நீதி செயமணி கட்டவேணும்; அக்கசாலையரை (கன்னார்) அழைத்துவரச் சொல் என்று கூறுகிறான். அவ்வாறே கன்னார் வருகிறார்கள். நல்லமணி ஒன்று செய்து வரச்சொல்லி, மணி வந்தவுடன் அதை அரசவையில் கட்டி, நாட்டுக்குச் செய்தி தெரிவிக்கிறார்கள். பாளையக்காரன் ஒருவன் இடையிலே படைக்கப் பெறுகிறான். அரசுக்காவல் அவனிடம் ஒப்படைக்கப்படுகிறது. பொன்னப்பன், நாயக்கன், பொதியன், வீரய்யன், போத்தன் போன்றோர் காவலர்களாக நியமிக்கப்பெறுகின்றனர். இவ்வாறு நெறிதவறா அரசுநடத்தி மக்களைக் காக்கிறான் மன்னவன் என்பன நாடகத்தின் படைப்புகளாகின்றன.

"சேரன், சோழன், பாண்டியனென்னும் மூன்று ராசாக்களிலே நடுவான சோழ மண்டலமென்றும் மனுநீதிகண்ட சோழனென்றும் கேள்விப்பட்டோமே அது தானிது வென்று தோணப்படுகிறபடியினாலே இந்தவனத்திலே வேட்டையாடக்கூடாது; மறுவனம் போவோம் அண்ணன் மார்களே" என்று வேற்று நாட்டு வேடுவர்கள் பேசிக்கொண்டு செல்லுகிறார்கள். நாட்டின் சிறப்பைக்காட்ட இப்படி ஒரு இடைநிகழ்ச்சி அமைகிறது அரசமாதேவி 'குங்குமகேந்தியும் மன்னனும் குழந்தைப்பேறு வேண்டித் தவம் மேற்கொள்ளுகிறார்கள்.'

கயிலாயத்தில் தேவர்கள் கூடியிருக்கிறார்கள். ஆரூரில் அரசுபுரியும் சோழனது நீதி நெறியை எவராலும் எடுத்துரைக்க முடியாது என்கிறார் நாரதர். திருமால் முதல் யாவரும் அதை ஆமோதிக்கிறார்கள். தவம் செய்யும் சோழனுக்குக் குழந்தைச் செல்வத்தையளித்துச் சோதிப்போம் என்று முடிவெடுக்கிறான் ஈசன். பாரதத்தில் அருச்சுனன் மகனாகியிருந்த அபிமன்னனைச் சோழன் மகனாகப் பிறக்கச் செய்கிறான். மகன் பிறந்து, வளர்ந்து சகல கலைகளிலும் தேர்ச்சி பெறுகிறான். சிவனும் திருமாலும் அடியவர்களாக மன்னன் அவைக்கு வருகிறார்கள்.

இளவரசன் தியாகரை வணங்கிவரத் தாயிடம் அனுமதிவேண்டுகிறான். அன்னை மறுக்கிறாள். மன்னன் விடைகொடுத்துத் தேரில் அனுப்புகிறான். தேரில் சிக்கிக் கன்று மடியத் தாய்ச்சொல் கேளாது வந்தோமே என்று பெரிதும் வருந்துகிறான் இளவரசன். பிற செய்திகள் யாவும் யட்சகானத்தோடு ஒத்துவருவன. இப்படிப் பலப்பல இடைச் செருகல்களோடு பலசுவடிகள் காணப்படுகின்றன.

நாட்டு வரலாறு, அரசியல் வரலாறு, மன்னர் வரலாறு போன்ற சிறப்புமிகு வரலாற்றுச் செய்திகள் சுவடிகளில் மிகுதியாகக் கிடைக்காத பெருங்குறை தமிழுக்கு உண்டு. அதே நிலை மனுநீதிச் சோழன் வரலாற்றுக்கும் உண்டு. எனவே பல நிகழ்ச்சிகள் ஒவ்வொரு சுவடியிலும் ஒருவகையாக இடம் பெற்றுள்ளன. சான்றாக,

வீதிவிடங்கன் வளர்ந்து பலவகைக் கலைகளிலும் தேர்ச்சி பெறுகிறான்.. அதன்பிறகு இறைவனது திருவிழாக் காட்சிக்குச் செல்லுகிறான் திருவிழாவுக்குச் செல்லும் செய்தி ஒவ்வொரு நூலிலும் ஒவ்வொரு முறையாக இடம் பெறுகிறது.

ஒருநாள் வீதிவிடங்கள் தந்தையிடம் வருகிறான்; வணங்கி நிற்கிறான். தேவையைக் கூறுமாறு தந்தை அன்போடு கேட்கிறான்.

''நமது குலதெய்வமாகியும், இஷ்டதெய்வமாகியும் கமலாலயத்தில் எழுந்தருளியுள்ள தியாகராசப் பெருமானைத் தரிசித்து வரவேண்டுமென்னும் எண்ணமொன்று மாத்திரமுண்டு. இவ்வெண்ணம் இடையூறில்லாமல் நிறைவேறும்படி தேவரீர் திருவுளங்கொள்ள வேண்டும் என்று விண்ணப்பஞ்செய்கிறான்". இது இராம லிங்க அடிகளின் உரைநடை நூலுள் அமைவது. மன்னன் தடையேதும் சொல்லாமல் மகன் எண்ணத்தைப் புகழ்ந்து துணையுடன் வழியனுப்புகிறான்.

முன்பே காட்டியது போல, 'தியாகரை வணங்கிவரத் தாயின் அனுமதி வேண்டுகிறான் மகன். தாய் மறுத்து விடுகிறாள். மீண்டும் வணங்கிக் கேட்கும்போது தந்தையைக் கேள் என்று கூறிவிடுகிறாள். தந்தையிடம் சென்று விடைபெற்றுச் செல்லுகிறான் மகன்'. இது தேரூர்ந்த நாடகம் தரும் முறை. தாய் சொல்கேளாமல் வந்தேனே என்று இறுதியில் வருந்துகிறான் மகன்.

யட்சகான நிகழ்ச்சி

"மற்றுமிருக் கின்றதுரை மக்களுட னேராக
புத்திரன்வெளிப் புறப்பட்டான் அத்தலத்தைப் பார்க்க
வந்துதெரு வீதியினில் மைந்தனுல வியபோது
. . . .
காமனோ மயிலேறுங் கந்தனோ கந்தரிட
மாமனோ சானகி மணாளனிவன் தானோ! (41)

என்றெல்லாம் பெண்கள் மயங்குகிறார்கள். இவ்வாறு உலவிவிட்டுவந்த செய்தியறிகிறான் மன்னன்.

"அறியாத நீ நம்ஸ்ம யறியாம லூரெல்லாம்
வெறிபோலத் திரிவரோ குறியல்ல வென்றான்" (46)

இச்செயல் பெருமைக்குரியது அன்று என்று கடிந்து கொண்ட மன்னனிடம் - தந்தையிடம் - "புத்தி புத்தி என்றுரைத்து, தேவரீர் சமியும் என வணங்குகிறான் மகன். தந்தையும் நல்ல குணமுடையவன் என்று அமைதியடைகிறான். இந்த நிலையில்,

"ஆலமுண்ட தியாகராயர்க்கு - லீலையாய்க் கொடியேற்றிக்
காலையுந்திரு மாலையுந்தெருக் - கோலம்வரவே
பத்துநாள் திருநாளும்" செய்ய ஏற்பாடு செய்திருந்த மன்னன்,
"மகனை யழைத்தே மகுட மணிந்து . . . . .
வீசவெண் சாமரை மிகுபரி கரிதேர்
தேசிக மாகவே செழிப்புடன் தந்து
நீதி பூஷணனைஅந் நேரமே அழைத்து
வீதி விடங்கரை விடாதகை யாய்நீ
கூடவே கொண்டுபோய . . . . பத்துநாளும்

தியாகருக்குத் திருக்கலியாணம் வரையிலான அனைத்து நிகழ்ச்சிகளையும் நடத்தி வாருங்கள் என்று அனுப்பிவைக்கிறான். இவ்வாறு ஒவ்வொரு நூலிலும் பல நிகழ்ச்சிகள் மாறுபட்டவைகளாக இடம்பெறுகின்றன.

நாட்டுப்புறக்கலைகள்

இறைவனுக்கு எடுக்கப்படும் விழாக்களில் ஆண்டுக்கொருமுறையாக ஆண்டுதோறும் நடைபெறும் விழா சிறப்புவிழா எனப்படும். அதைப் பிரம்மோற்சவம் என்பர். அது பத்துநாட்கள் தொடர்ந்து நடைபெறும். புற்றிடங்கொண்ட பெருமானுக்கு நடைபெற்ற அந்தச் சிறப்புத் திருவிழா, நாடகத்தில் இயற்கையாக எடுத்துக் காட்டப்பெறுகிறது. ஒவ்வொருநாளும் ஆதித்தன் பொழுது சென்றபின் தெருவெல்லாந் திருவிளக்கு ஏற்றப்படுகிறது. குத்துவிளக்குகளும், குடத்திலிடும் பெரியவிளக்குகளும் ஏற்றப்படுகின்றன. நாட்டுப்புற மக்களுக்குரிய கலைகளுள் ஒன்று திருவிளக்கு அலங்காரம். அந்தக் கலைப்பண்பாட்டை எடுத்துக்காட்டுவனவாகக் காளவிளக்குகள் ஒளிவிடுகின்றன. அதாவது நாட்டுச் சின்னத்தின் வடிவில் ஒளிவிடும் விளக்குகள் காளவிளக்குகள் எனப்படுகின்றன. (சோழநாட்டிற்குரிய சின்னமாகிய புலிவடிவத்தில் அமைந்த விளக்குகள்) தெருக்களிலெல்லாம் இந்த விளக்கொளி நிறைந்திருந்தது.

இந்த அலங்காரத்தோடு கூடிய தெருக்கள் தோறும் பலவகை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதாவது பாகவதர்கள் எனப்பெறும் இறையடியவர்கள் பலர் ஒன்றுகூடி இறைப்பாடல்களைப் பாடிக்கொண்டு பாட்டுக்கேற்ப ஆடியும் வருவார்கள். ஒரு சிலர் பலவகையான வேடமணிந்து கூத்துகள் பலவற்றை நிகழ்த்திவந்தார்கள். தமிழ்ப் பாவலர் சிலர் சைவ நூல்களுள் சிறந்ததான கந்தபுராணக்கதையை எடுத்துக் கூறி விளக்கினார்கள். அப்போது,

"பரிவும் அன்பும் சிவபக்தியும் மிகுத்தோர்
அரகரா வென்றதை யமுதமாய்க் கொண்டனர்". (57)

இதே போல பாரதக்கதையின் ஒரு பகுதியாகிய சூதாட்டக் கதை ஒரு தெருவில் எடுத்துச் சொல்லப்பட்டது. பலர் அக்கதையைக் கேட்டு உள்ளம் உருகி நின்றார்கள். பாவலர்

சிலர் மாபலிச் சக்கரவர்த்தியை அடக்கத் திருமால் வாமன வடிவங்கொண்டு தம் ஓரடியால் இந்த நிலவுலகத்தை அளந்தார் என்று தொடங்கி அக்கதையை எடுத்துச் சொல்ல மக்கள்பலர் அதைக் கேட்டு உள்ளம் வருந்தினார்கள். நடனமாதரின் சிலம்பொலி ஒருபுறம் இனிய ஓசையுண்டாக்கியது. இத்தகு நிகழ்ச்சிகளால் திருவாரூர் திருத்தலம் தேவருலகு போலக் காட்சியளித்தது என்பன நாடகத்தின் விழாக்காட்சிகள்.

மகன் பிறந்தான் என்ற மகிழ்ச்சியால் பல அறச்செயல்களையும் ஆலயத்திருப்பணிகளையும் மேற்கொண்ட மன்னவன்,

"கவியைப் பாடுவோர் கண்ணை மறைப்பவர்
கம்ப மேறி வினோத மாடுவர்
இவர்கள்தமக் கிரணியம்" (35-9-11)

உதவியதிலும் தவறினானில்லை. நாட்டுப்புறக் கலைகள் நாட்டில் தழைத்தோங்கின என்பதும், அந்தக் கலைஞர்களை எக்காலத்திலும் பாராட்டிப் பரிசளிப்பதில் மன்னன் தவறுவதில்லை என்பதும் இவ்வடிகளில் புலப்படுகின்றன

சோழமன்னனின் திறம்

தேரூர்ந்த சோழன் கதை (5), பழிக்குப் பழிகொடுத்து உயர்ந்த பரகதியி லடைந்த கதை (5), மேதினிமேற் சுபமெய்தி நீதியுமுள சோழன்கதை (3), காவலனாகிய சோழன் கதை (4) என்னும் பெயர்களால் கதையை மக்களுக்கு அறிமுகப்படுத்தும் ஆசிரியர், அம்மன்னனையும் தேவியையும் பலபடப்பாராட்டி மக்களிடையே பெருமைப்படுத்திக் காட்டுகிறார்.

"பாராளு மன்னவன் பணிப்பகை யான
சூரிய வங்கிஷத் துரைசோழ ராசன்
பேரிரா சேந்திரன்" (15)

"புந்திமகிழ் வாகியிந்தப் பூமியோர் சொலியழைக்கப்
பைந்தொடிமின் னார்பெயரும் பட்டமா தேவி" (19)

என்பன மன்னனுக்கும் தேவிக்கும் கொடுக்கப் பெறும் பெயர்கள். மன்னவன் எக்காலமும் தெய்வீக உணர்வு மாறாதவன்; சிறிதும் பொய் பேசாதவன்; ஆறிலொரு கடமையே இறை வரியாகக் கொள்பவன்; புலிக்கொடி விருது பெற்றவன். நாட்டில் வழங்கிவந்த பதினெட்டு மொழிகளையும் பேசும் திறம் பெற்றிருந்த இராசேந்திரன் சைவம், வைணவம் ஆகிய இரண்டு மதங்களையும் போற்றி வளர்த்து வந்தவன். பாடும் புலவர்களையும், வாழ்த்தும் பூசுரர்களையும் என்றுமே விட்டுப் பிரியாதவன் என்பன மன்னனைச் சிறப்பித்துப்பாடும் ஆசிரியரின் கூற்றுகள்.

அவனது ஆட்சியில் மக்களுக்குப் பயமென்பதே இல்லை. நாட்டில் அநியாயமில்லை; கலகம் என்பதே இல்லை. இவ்வாறு பலவகையாக ஆட்சியின் சிறப்பை எடுத்துக்காட்டும் ஆசிரியர், சோழநாட்டில் உள்ள பலவகையான குற்றங்களை

எடுத்துக்காட்டி நாடகம் காணும் மக்களை மகிழ்விக்கிறார். அவை: நாட்டில் மலர்களெல்லாம் பறிக்கப்படுகின்றன; பயிரிலுள்ள களைகள் எடுத்து எறியப்படுகின்றன; வாழைக் குலைகள் வெட்டப்படுகின்றன; கீரைகள் கிள்ளி எடுக்கப்படுகின்றன; தரையிலுள்ள பழைய காரைகள் நொறுக்கி எடுக்கப்படுகின்றன; கரும்புகள் ஆலையில் கொடுத்து நசுக்கிப் பிழியப்படுகின்றன; எள்ளும் இலுப்பைப்பருப்பும் செக்கிலிட்டு ஆட்டிப் பிழியப்படுகின்றன; இரும்பு நெருப்பிலிட்டுப் பழுக்கக் காய்ச்சி மேலும் சம்மட்டிகொண்டு அடிக்கப்படுகிறது; நெல் உரலிலிட்டு உலக்கையால் குத்தப்படுகிறது; நெய் தீயில் வைத்து உருக்கப்படுகிறது; புல் முழுவதும் மாடுகளால் மென்று தின்னப்படுகின்றன; மகளிரின் இடையெல்லாம் மெலிந்து காணப்படுகின்றன. இத்தகு குறைபாடுகளே நாட்டில் காணப்படுபவை என்று காட்டும் இப்பகுதி நாட்டில் இயல்பான நிகழ்ச்சிகளைத் தவிர கொடுமையான செயல்கள் எதுவுமே இல்லை என்பதை உணர்த்தி மகிழ்விப்பதாகிறது.

மக்களுள் வழிதவறிச் செல்வார் யாருமே இல்லை; மக்களின் குறிக்கோளுடைய பொருளுக்கு என்றுமே அழிவு ஏற்பட்டதில்லை; நாளுக்குநாள் தேய்ந்து போகும் சிறுமைத் தன்மை மக்களிடம் என்றும் இருந்ததில்லை; குறிக்கோளற்ற வெறித்தன்மை யாரிடமும் இருந்ததில்லை என்று நாட்டின் சிறப்பைக் கூறும் கம்பர்,

வழிதவறிச் செல்வன வெள்ளமே; குறியழிவன மகளிர் தோள்களில் எழுதப்பட்ட தொய்யிலாகிய குறிகளே; மெலிந்து தேய்வன மகளிர் இடைகளே; மணம் வீசுவன மகளிரின் மலரணிந்த கூந்தலே என்னும் கருத்துப்பட,

நெறிக டந்து பரந்தன நீத்தமே
குறிய ழிந்தன குங்குமத் தோள்களே
சிறிய மங்கையர் தேயு மருங்குலே
வெறிய வும்மவர் மென்மலர்க் கூந்தலே" (பாலகாண்.72)

என்று பாடுவார். இக்கருத்தையடியொட்டியவை ஆசிரியரின் கூற்றுகள். ஆனால் நாடகம் காணும் மக்கள் உணர்ந்து மகிழுமாறு மிகப்பல எளிய செய்திகளும் வழக்காற்றுச் செய்திகளும் பாடலில் எடுத்துக் காட்டப்படுகின்றன.

குழந்தைச் செல்வம்

"மெத்தைமேல் மெத்தையும் வீடுமுப் பரியும்
சித்திரக்கூ டத்திலும் செழித்திருந் தென்ன
பிள்ளையில் லாமனை பேயமனை யாகும்!" (27)

குழந்தையில்லாமல் உண்ணும் உணவு மண்ணுக்குச் சமமாகும். குழந்தையைத் தூக்காதகை மரத்துக்கு ஒப்பாகும். குழந்தையைத் தாங்காத தோள் வெற்று ஓலைக்குச் சமமாகும்.

குழந்தை தொடாத உடல் மரக்கட்டையேயாகும். அதன் மழலை கேளாச்செவி, செவியல்ல; அது செவிடு என்பன குழந்தைச் செல்வமில்லாத மன்னன் கூறுவதாக அமைத்துக்காட்டப்பெறுவன என்றாலும், குழந்தையில்லாக் குறையை மக்கள் தம் வாழ்க்கையில் உணர்ந்தவாறு கூறப்படுவன; மக்களை நாடகத்தில் ஒன்றச் செய்வன; தங்கள் வாழ்க்கையை ஒட்டிப்பார்க்கச் செய்வன. குழந்தைச் செல்வமின்றி வருத்தமடைந்த மன்னன்,

"வஞ்சனை பண்ணாமலென் சஞ்சலந் துலைக்கவொரு
மைந்தனருள் தியாகராயனே" (25)

எனப் பலவாறு வேண்டி இறைவனைத் தொழுது வருகிறான்.

தியாகர் அருளால் மன்னனுக்கு இரத்தினம் போல மகன் பிறக்கிறான். மகிழ்ச்சி யடைந்த மன்னவன் சித்திர மண்டபத்தையடைகிறான். அந்தணர், சங்கமர், அமைச்சர்கள், அரசப்பிரதானியர், படைவீரர் போன்ற அனைவருக்கும், தேச தேசத்து மன்னவருக்கும்,

"சர்க்கரை யும்நவ தானிய விரைகளும்
தமனியமும் பட்டும் " (32)

போன்ற உயர்ந்த பரிசுப் பொருள்களை வாரி வழங்குகிறான்.

"அத்திரு வாரூரி லாலய முண்டாய்
எத்தனை யிருக்குமோ எதுக்குமன் பாக
அபிஷேகஞ் செய்வித் தடிதொழு தேத்தினான்" (33)

"தன்னையாட் கொண்ட தயாள தியாகர்
மன்னு மாலயந் திருமதில் மண்டபங்கள்
கோபுரந் தூண்கள் கொடிக்கம்ப மெல்லாம்
பூபதி பொற்பூச்சுப் பூசுவித் தரனார்
பூசைக் குடங்களும் பொன்னாலுண் டாக்கி"

மேலும் அபிடேகம் முதலான பலவகைச் சிறப்புகளையுஞ் செய்கிறான்.

"தூராதி மன்னவர் வந்து
சுதனுண்டோ வென அவர்க்குக்
காரானை பரிசிவிகை கனமாகக் கொடுப்பான்"
வேதாந்த வேதியர்க்கு விடுவான் ஒருகிராமம். (34)

மகப்பேறு பெற்ற மகிழ்ச்சி மேலீட்டால் மன்னவன் செய்த கொடைகள் இவை. அரசவையோருக்குக் கொடுக்கிறான் நன்றியுடையவன்; அந்தணருக்கும் சங்கமருக்கும் வழங்குகிறான் சமய நெறிகளை வளர்ப்பவன்; ஆலயத்திருப்பணிகளில் கொட்டுகிறான் இறைத்தொண்டில் மூழ்கியவன்; அடுத்த நாட்டவருக்கெல்லாம் அளிக்கிறான் சக்கரவர்த்தி என்பன ஏற்புடையனவே. ஆனால் இவையனைத்தும் யாருடைய பொருள்? ஆறில் ஒருகடமை பெற்ற இறைவரி மட்டுமா? இறைவரிதான் அரசப் பரிவாரங்களுக்கே காணாதே! இத்தகு செலவினங்களுக்கான பொருள் வருவாயை அறிந்தால் இன்றைய அரசு நெறிகளில் நடைபெறும் இத்தகு ஆரவாரச் செயல்கள் தாமாக முடங்கிவிடுமே!

இறைத்திறன்

பார்வதிமனோகரன்; மழுவாயுதம் ஏந்தியவன்; திருக்கழுக்குன்றத்தமர்ந்திருப்பவன்; நஞ்சினால் ஏற்பட்ட தீமையை ஒழித்தவன்; அந்த நஞ்சினைத் தானே தாங்கியவன்; சடாமுடியுடையோன்; திருமாலுக்கும் அருள்புரிந்தவன்; திருச்சிற்றம்பலத்திலே எழுந்தருளியுள்ளவன்; பக்தருக்கும் அல்லாதாருக்கும் பேறு அளிப்பவன்; தாயாகிக் குட்டிகளுக்குப் பாலூட்டியவன்; எச்சிலிட்ட வேடனுக்கு அருள்புரிந்தவன்; வில்லாலடித்தவர்க்கும் கல்லாலடித்தவர்க்கும் அருள்புரிந்தவன் (25-26); புற்றிடமாகிய புண்ணியன் (27) என்பன குழந்தைச் செல்வம் வேண்டி, மன்னன் இறைவனிடம் முறையிடும்போது விளிக்குந் தொடர்களில் அமையும் இறைத்தன்மைகள்.

கொன்றை தரித்தவன்; கொழுந்து மதிமுடியான்; வெள்ளியங்கிரியில்வாழ் வேந்தன்; புள்ளிமானேந்திய புண்ணியன்; பிரமனின் ஒருதலையைக் கபாலமாக ஏந்தியவன்; நீலகண்டத்தன்; தாண்டவமாடுந் தயாநிதி (60); ஆரூர்வாழ் தியாகலிங்கேசன்; சரபாவதாரன்; அம்பரகேசன்; அமுதமுண்டவன்; தென்புலியூரன்;அம்பலவாணன்;சம்புசவுந்தரன்; பாம்பாபரணன்; கனவிலோசனன் (61); என்பன விழாக்காட்சியில் உலாவரும் இறைவனுக்கு அளிக்கப் பெறும் ஆரத்திப் பெயர்கள். இப்பெயர்கள் இறைவனின் வடிவம், செயல்திறன் போன்றவற்றின் காரணப் பெயர்களாகப் போற்றிப் புகழப் பெறுவன.

பலவகை இறைத்திறனை எடுத்துக் கூறும் மன்னவன், இறைவன் தனக்குப் பெருந்துரோகம் செய்துவிட்டான் எனவும் ஐயப்படுகிறான்.

"சொற்பனத் தினிலன்று சுதன்தந் தீரெனக்
கற்பனை யளித்தனையே
கூறின படிபிள்ளை கொடுத்தெனக் குப்பழிக்
காரனை யுதவினையே
கபடம தாயிந்தக் கன்மியை வரவிட்ட
விபர மறிகிலேனே" (88)

என்று ஏங்குகிறான் மன்னன். சிவனே! நெஞ்சில் பலநாளாய்க் கறுவிக் கொண்டிருந்து, மகன் மூலம் இப்பழியை ஏற்படுத்தினீரோ என்றெல்லாம் இறைவனின் தீப்பண்புகளை எடுத்துக் கூறுகிறான்.

வீதிவிடங்கனின் வருத்தம்

தவறு செய்தவர்கள் மனமாரத் தங்கள் தவறுகளை ஏற்றுக் கொள்ளாத காலம் இது. மாறாகத் அத்தவறுகளுக்குக் காரணமாகப் பிறர்மீது குற்றம் சுமத்துவதே வழக்கமாகிவிட்டகாலம். தவறு செய்தவர்களல்லாத பிறர்மீது பழி சுமத்துவதே முடிவாகவும் இடம்பெறுகிற காலம். ஆனால் அன்று திருவிழாக்காட்சியைக் காணச் செல்லும் பெருங்கூட்டத்திற்கு இடையூறு சிறிதுமில்லாமல் தேரில் செல்லுகிறான் இளவரசன். ஆனால் அவன் தேரைச் செலுத்திச் செல்லவில்லை. யார் கண்ணுக்கும்

புலப்படாமல் தானே வந்து தேர்க்காலில் விழுகிறது கன்று. தேர்ப்பாகன் மீது குற்றம் சொல்ல முடியாது; இளவரசன் மீது சொல்லவே முடியாது.

கன்று சத்தமிட்டுக் கதறி உயிர்விடுகிறது. அந்தச் சத்தத்தைக் கேட்டவுடனே இளவரசன் தேரிலிருந்து குதிக்கிறான். கன்று இறந்து கிடப்பதைப் பார்க்கிறான்.

"பாவியி லுமரும் பாவி நானென்று" கதறுகிறான்.
"அம்பிகை பாகருக்கு அன்பு தப்பினனோ
நம்பின பேரை நட்டாற்றில் விட்டனோ"

திருவிழாவில் என்னகுறை நேர்ந்ததோ என்றெல்லாம் பலவாறு தன்னையே நொந்து கொள்ளுகிறான். தருமவான் என்று பெயர் பெற்ற சோழமன்னனுக்கு மகனாகப் பிறந்தேன்.

"பிள்ளை பிறக்கில் பெரும்புகழுண்டாம்

ஆனால், பிள்ளை பிறக்கப் பெரும்பழி யாச்சு" என்று தன்னுடைய தந்தைக்குப் பழி தேடித்தந்துவிட்டதற்காகவும் பெரிதும் வருந்துகிறான்.

மன்னவன் வருத்தம்

செய்தியைத் தூதுவரும் அமைச்சரும் வந்து சொல்லுவதற்கு முன், பசு மணியை ஒலித்து நின்று தனது வருத்தத்தைக் காட்டுகிறது., பசுவிற்காக இரங்கிய மன்னனிடம், இளவரசன் ஏறிச்சென்ற தேரில் நிகழ்ந்த செய்தியைத் தூதுவரும் அமைச்சரும் சொல்லவேண்டிய கட்டாயத்திற் குள்ளாகிவிடுகிறார்கள். பசுவின் வருத்தம் ஒருபுறம் உள்ளத்தை உருக்கும் நிலையில், தன் மகனே அதற்குக் காரணமானான் என்ற செய்தி மன்னனை மேலும் துன்பத்தி லாழ்த்திவிடுகிறது. இந்தச் சூழ்நிலையில் நாடகத்தைக் காண்போர் உருகித் தவிக்கும் நிலையில் பாடல்களை உருவாக்கும் ஆசிரியர், செய்யக்கூடாத செயல்களை -செய்யத்தகாத செயல்களை - இப்பிறவியில் மட்டுமன்றி எப்பிறவியிலும் நினைத்துக் கூடப் பார்க்கக் கூடாது என்ற கருத்தைக் காண்போர் உள்ளத்தில் பதியவைக்கிறார். அத்தகு தகாத செயல்களைப் பட்டியலிட்டு மன்னவன் வாய்மொழி மூலமாக வெளியிடுகிறார்.

"பிள்ளை பிறந்து பெரும்பழி யாச்சு
பிள்ளை பிறந்துநம் பிரபலமே போச்சு"

என்று மகப்பேறு பெற்றதை நினைந்து வருந்தும் மன்னவன், தன் முன்வினைப் பயனையும், இப்பிறவியில் தன்னையறியாது பிழைகள் நடந்துவிட்டனவோ என்பது பற்றியும் எண்ணி எண்ணித், தகாத செயல்களை எடுத்துக் கூறிக்கூறி வருந்துகிறான்.

"பெருத்த பூமியில்முன் பிறப்பினி லேநான்
துரைத்தனஞ் செய்துமா தோஷஞ்செய் தேனோ!. . . .
வெறுமை நீங்கியிட விளையாததுக் கெல்லாம்
இறைகொண்டு குடிகளை யீடழித் தேனோ!

. . . . .வாசனை கற்பித்த வாத்தியார் மனது நோகவுரைத்தேனோ! நொண்டி மொண்டிகளை . . . .யலைச்சல் கொண்டேனோ! நம்பின பேரை நடுக்கானந் தன்னில் . . . கைவிட்டேனோ!! குழந்தைக்குக் கஞ்சியில்லையென்று கூறி, மாலை அரவை வளர்த்துவிட்டேனோ! ஆண்டவன் உடைமையை அனுபவித்தேனோ! எவரிடும் சாபமோ! எழுத்தின் படியோ" என்றெல்லாம் பலவாறு தகாத செயல்களைக் கூறித் தன்னைத் தானே நொந்துகொள்ளுகிறான். இந்த நாடகக் காட்சி தேரூர்ந்த சோழன் கதை முதலான பல சுவடிகளிலும் காணப்படுகிறது. இராமலிங்கரின் 'மனுமுறை கண்ட வாசகம்' என்னும் உரைநடை நூலுள் அடுக்கடுக்கான தொடர்களில் பாடல் நடையில் இச்செய்தி மிகுதியாக இடம் பெறுகிறது.

பட்டமாதேவி வருந்துதல்

மகனால் ஏற்பட்ட பழியை மன்னவன் கூறக்கேட்கிறாள் தேவி. வயிறு பகீரென எரியத் தொடங்கியது; மார்பு திடுக்கிட்டது. வீதி விடங்கரே!

"கண்ணெதிர் வருகையில் கண்தெரி யாதோ
படிப்புஞ் சமத்தும் பழுதாக்கி விட்டீர்!
மாதாசெய் பாவம் மக்களுக் கென்பார்!

பதிதனக் கிசைந்த படிநடவாமல் சதி பண்ணினேனோ! பிறர் குற்றத்தை மனத்தில் வையாமல் வெளியிட்டு விட்டேனோ! யாசித்தவரை வீதியில் தள்ளினேனோ என்றெல்லாம் புலம்புவது மக்கள் உள்ளத்தை உருக்குவதாகும்.

இதே நிலையில் தெருவழியே செல்லும் மன்னவன் முடிவைக் காணும்,

'தேறிய அறிவினோர் சிவபக்தி யுள்ளோர்
கடலைக் கடைந்தவக் காலத்தில் எந்தப்
படிசத்த மாச்சுதோ அப் பரிசே யெல்லோரும் அழுதழுது உருகத் தொடங்கினர்.

நாடகத்தின் ஈற்றிலமையும் இத்தகு கொடூரச் செய்திகள் நாடகங் காண்போரைக் கலங்கவைப்பனவாகும்.

அரியவும் எளியவும்

அரிய இலக்கியச் சொற்கள்பல நூலுள் இடம்பெறுகின்றன. அவை அகராதியின் துணையை நாடவைக்கின்றன.

"அப்பணை தந்தீ ராகில் அரசனை யிந்நாழிகையில்

. .. . அழைத்து வாறோம் (51-5)

என்னுமடிகளில் அப்பணை என்பது தலைவனின் ஆணையைக்குறிக்கிறது. அதாவது கட்டளை, உத்தரவு.

"**ஆட்டிய** னிம்மொழி யறியவுலக மெங்குந்

தோட்டியபி னால்முர சாட்டிவித் தானே" (22-11)

இவ்வடிகளில் மக்களை ஆட்டிவைப்பவனாகிய அரசனை ஆட்டியன் என்கிறார். தோட்டியின்மூலம் முரசறைந்து தெரிவித்த செய்தியைத் தோட்டியினால் முறைசாட்டிவித்தான் என்றமைத்திருக்கிறார்.

'**இணறு** செருகிய கூந்தல்' (20-7)

மணமிக்க மலர் என்பதைக்குறிக்க இங்கு இணறு என்ற சொல் ஆளப்பெற்றுள்ளது. அது 'யிணறு' எனத் தொடக்கத்திலேயே யகர யிகரம் பயன்படுத்தப் பெற்றுள்ளது. அதிகார முடையவற்றை யெல்லாம் செய்து வரும் செயல் வீரர்கள்,

"காறு பாறுகள் செய்யும் காவலர்" (65-26) எனப்படுகின்றனர்.

"பொன்காய்த்த தாபரம்" (55-20) என்பதில் தாவரம், தாபரம் எனப்படுகிறது. 'தயாநிதி **திக்கதி**கமான திருவாரூர் (14-1) என்னுமடியில் தயாநிதியின் அன்பும் ஆதரவும் மிக்க திருவாரூர் எனச் சுட்டத் '**திக்கு**' என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பட்டு உடைவகைகள், பட்டுப் பட்டாவளி (20-12) எனவும், ஆபரணங்கள் பணிதி (20-5) எனவும், கை, பாணி (22-6) எனவும் அரிய சொற்களாக எடுத்தாளப்படுகின்றன. இப்படி நூற்றுக்கணக்கான சொற்கள். அவை அனைத்தும் சொல்லடைவில் இடம் பெறுகின்றன.

ஏராளமான இலக்கியச் சொற்களும் தொடர்களுமாக அமைந்துள்ள நாடகத்தில் எளிய வழக்காற்றுச் சொற்களும் நிறைந்துள்ளன. அவற்றுள் பல ஆசிரியரின் இருப்பிடப் பகுதிக்குரிய வட்டாரவழக்குச் சொற்களாகவும் கொச்சைச் சொற்களாகவும் காணப்படுகின்றன.

ஏறியது	-	எனக்கறுபது வய **தேறிச்சு தின்னம்**	(27-7)
கனவு	-	கண்ட **கினாவது**	(29-1)
செலவு	-	ஆறுபங்காய்ச் **சிலவாக்கி**	(15-24)
பாகவதர்	-	**பாகுதர்** ஆட்டமும்	(57-10)
மாறியது	-	மனத்துயரானது **மாறிச்சு** தென்பாள்	(36-14)
வமிசம்	-	கோத்திரங்குல **வங்கிஷத்தில்**	(27-5)

என்பனபோன்று நூற்றுக்கு மேற்பட்ட கொச்சைச் சொற்கள் இடம் பெறுகின்றன. இன்று, என்றைக்கும், ஒன்றும், கன்று, சேங்கன்று என்பன போன்று னகர ஒற்றுடன் இணைந்து வரும் றகரம் பெற்ற சொற்கள் 'ண' கரமாகி முறையே, இண்ணிந்த, எண்ணைக்கும், ஒண்ணுமில்லை, கண்ணு, சேங்கண்ணு எனவே நூல் முழுமையும் கையாளப்பெறுகின்றன.

'பரமேசு வரனெனும் பசுவது அப்போது
தரைமேல் இழிந்து இமதர்மக் கண்ணுடனே' (69-1-2)

பசுவாகிய ஈசுவரன் எமதர்மனாகிய கன்றுடன் பூவுலகையடைந்தான் என்னும் இப்பாடலடிகளில் எமதர்மன் என்னும் சொல்லில் முதல் எகர உயிர் இகர உயிராகி ஒலிக்கும் முறையில் இமதர்மன் எனப்பேச்சுநடையில் எழுதப்பட்டுள்ளது.

நம்மிட சொல், உம்மிடவாய் சொன்ன (119) என்பன நம்முடைய, உம்முடைய என்னும் பொருளில் வருவன. உடைய எனும் ஆறன் பொருள் இடம் என்னும் சொல்லால் உணர்த்தப்படுகிறது. மேலே எகரம் இகரமானது போலவே, புத்திரன்வெளிப் பிறப்பட்டான் என்பதில் (41) உகரம் இகரமாகிக் கொச்சை நடைபெறுகிறது. கெவுரி மோகனனே (87-11); துரத்தனஞ் செய்து(87-34); **வந்துதிப்**போது (87-25); **துலைக்க**வொண்ணா (87-22); பழியைத் **துலைப்பது** (123-19) என்பனவற்றுள் முறையே கவுரி அல்லது கௌரி என்பதன் உயிர் எகரமாகத் திரிந்து ஒலித்தது. இதேபோலத் தரிசனம், தெரிசனமாகியுள்ளது (56). துரைத்தனம் என்பதன் ஐகாரம் அகரமாகவும், வந்தது என்பதன் அகரம் உகரமாகவும், தொலைக்க என்பதன் ஒகரம் உகரமாகவும் திரிந்தொலித்துக் கொச்சை நடையைப் பெற்றிருக்கின்றன.

"கண்ட மனைத்துஇரு கைகட்டி **நிற்கில்**" (65-30)

"காதை நெறித்துக்கொண்டு கண்ணுட **னேவரில்**" (70-3)

என்பவற்றுள் கைகட்டி **நிற்க** என்பது கைகட்டி நிற்கில் என ஈற்றில் 'இல்' பெற்று, வினையெச்சம் எதிர்மறையாயிற்று. கன்றுடனே வர என்பதும் இதே நிலையில் 'இல்' சாரியை பெற்று வரில் என்றாயிற்று. சலிக்கில் (27-19) என்பதும் இத்தகையது.

"**கொம்பித்** தோளு முருளவே" (71-14)

என்பதில் கொம்பையுடையது என்னும் பொருள்தரும் **'கொம்பி'** என்னுஞ்சொல் ஆளப்பட்டுள்ளது. இது குணத்தையுடையது குணி என்றாற் போன்றது.

'மயிலேறுங் கந்தனோ கந்தரிட மாமனோ' (41-11)

இவ்வடியுள் கந்தன் என்னும் சொல் இரண்டு முறை இடம் பெறுகிறது. அவற்றுள் ஒன்று **'அன்'** ஈற்றையும், அடுத்து வருஞ்சொல் **'அர்'** ஈற்றையும் பெறுகின்றன.

போருக்குரிய வித்தைகளுள் ஒன்று வில்வித்தை. அது யுத்தத்திற்குரியது என்ற பொருளில்,

'கல்வி வித்தையும் **உயித்தியவில்**
வித்தையும்' என அமைகிறது.

பிறமொழிச் சொற்கள்

'கீர்த்தியே பூஷண கிரீடபதி மன்னன்' (16-1) என்னுமடியில் நான்கு சீர்கள் இடம்பெறுகின்றன. அவற்றுள் முதல் மூன்று சீர்களும் சமஸ்கிருதச் சொற்கள். இதுபோல அபகீர்த்தி, சுபகீர்த்தி, சமியும், சரணார்த்தி, சலசம், சுகிர்தம், சுதாகரன், புஷ்பரதம், ரம்யபூசை என்னும் ஏராளமான வடசொற்கள் நூலுள் இடம்பெறுகின்றன. சலாம்செய்து, நிசாரங்கி போன்ற உருது சொற்களும் ஆங்காங்கு ஆளப்படுகின்றன.

பதிப்பில் தெளிவு

"ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே"

என்பது 'திருமந்திரம்' என்னும் நூலின் சிலபதிப்புகளில் காணப்பெறும் விநாயக வணக்கப் பாடல். இதே பாடல் இந்நூலின் விநாயக வணக்கப்பாடலாக இடம்பெறுகிறது. ஆனால் அப்பாடல்,

"அஞ்சு கரத்தனை ஆனை முகத்தனை
யிந்து யிளம்பிறை போலு மிகுத்தனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தனை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே"

என்னும் வடிவில் அமைகிறது. நாடக ஆசிரியர் தம் வழிபாடுகளுக்குரிய பாடலாக இதை மனப்பாடல் செய்து பாடிவந்திருக்கிறார். நூல் எழுதத் தொடங்கும்போது தொடக்கத்தில் தம் வழிபடுகடவுள் வணக்கமாக இப்பாடலை நூலுள் அமைத்துள்ளார். மீண்டும் நூலுக்குரிய கடவுள் வணக்கப்பாடல் ஒன்றினைத் தாமே இயற்றிச் சேர்த்திருக்கிறார்

'அஞ்சு கரத்தனை' என்று தொடங்கும் இப்பாடலில் எயிற்றனை என்பது 'மிகுத்தனை' என்று எழுதப்பட்டுள்ளது. நூலுள் பல இடங்களுள் காணப்பெறும் எழுத்துப் பிழை, சொற்பிழைகளை அடிப்படையாகக் கொண்டு, முகத்தனை என்பதே மனப்பாடத்தில் இருந்து எழுதும்போது மிகுத்தனை என்று எழுதப் பெற்றிருத்தல் வேண்டும் என்று யூகித்து முகத்தனை என்று பாடலில் அமைத்து, சுவடியில் மிகுத்தனை என்றே யிருக்கிறது என்பது கீழே சுவடிச்சொல் என்ற பகுதியில் கொடுக்கப்பட்டது. அறிஞர்கள் மிகுத்தனை என்னும் சுவடிச்சொல்லே அவ்விடத்திற்கு ஏற்புடையதாயின் பொருத்திக் கொள்ளலாம். எவ்வாறாயினும் திருமந்திர நூலில் காணப்பெறுவதினும் இது வேறுபட்ட பாடமேயாகும் இதேபோல 'ஞானக் கொழுந்தினை' என்பதும் ஞானக்கொழுந்தனை" என்று மனப்பாடம் செய்யப்பட்டுள்ளது. இந்தினிளம்பிறை யிந்து யிளம்பிறையாகி யிருக்கிறது.

"காச்சப்பொன் மலையென காந்தியாய் துலங்க
வறபெர்கொட்டியும் மன்னனப் பணையால்
பொறவெர் கொடியிப் புதுமையா யன்றைக்
கதிகால மிப்படி யாக மன்னவனல்" (பா.65.74-77)

என்பன சுவடியிலுள்ள அடிகள். சுவடியிலுள்ளதைச் சிறிதும் மாற்றக்கூடாது; அப்படி மாற்றி அல்லது திருத்திப் பதிப்பிக்கும் உரிமை பதிப்பாசிரியருக்குக் கிடையாது என்று அறிஞர் சிலர் கூறுகிறார்கள். அவர்கள் கருத்துப்படி மாற்றியோ திருத்தியோ பதிப்பிக்க வில்லையென்றால் மேலே உள்ள வரிகளுக்குப் பொருள் விளங்கிக் கொள்ளமுடியுமா என்பதைச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. சுவடியில் உள்ளவற்றை அப்படியே கொடுப்பது தான் மொழியியல் ஆய்வு போன்றவற்றிற்குப் பயன்படும் என்பது அறிஞர்கள் வாதம். சுவடியில் உள்ளவாறே பதிப்பித்திருக்கின்ற முறையைப் பாருங்கள் என்று 'கன்னடியன் போர்' என்னும் நாட்டுப்புறக் கதைப்பாடல் பதிப்பு நூல் ஒன்றினைக் காட்டுகிறார்கள்.

"கடந்த வேத கண்ணுதலோன்
கறைமாமிடத் தோனருழ் போத்தி
தடந்த வேதத் தவசியர்கழ்
சாத்துங் கதையை யழகுபெற
மடந்தை யனையாழ் மயலழகாய்
மன்னரய்போர் சுருபம்ந்தன்னை
படந்தான் னெழுதுங் கதைபாட
பண்ம்பாய் முகவன் காற்ப்பாமே"

என்பது கன்னடியன்போர் என்னும் அந்த நூலின் முதற் பாடலாக அச்சிடப்பட்டு வெளியாகியுள்ளது.

இந்தப் பாடலின் அடிக்குறிப்பாக,

சாற்றும் – சாத்தும் (பே.வ.மா); சுருபம்–வடிவம்; முகவன் – யானைமுகவன் (கணபதி) என்னும் மூன்று சொற்களுக்கான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இதன் படி,வேதகண்ணுதலோன்; வேதத்தவசியர்கழ் என்பவற்றுள் வேத என்பதன் முன் வல்லி னம் வரும்போது எந்தப் புணர்ச்சி முறை சரியானது? தவசியர்கழ் இறுதிப்பன்மை விகுதி இப்படியும் அமையலாமா? 'கறைமா மிடத் தோனருழ் போத்தி' இவ்வடியுள் மிடத்தோன், அருழ், போத்தி என்பன சரியான சொற்களா? இவற்றைப் போலவே, சாத்தும்ங்கதை, சுருபம்ந்தன்னை பண்ம்பாய், னெழுதும்ங்கதை என்பனவற்றிலுள்ள ஒற்றமைப்பை மூவொற்றுடனிலை என்பதா? இப்படியொருவிதி தமிழில் உண்டா? படந்தான்னெழுதும் என்பது போல நெடில் முன் ஒற்றும் இரட்டித்து வருவதுண்டா? காற்ப்பாமே என வல்லின றகர ஒற்றின்முன் வலிமிக்கு வருவதுண்டா? நான்கு அடிப்பாடல் ஒன்றில் இவ்வாறு 12 ஐயங்கள் தோன்றுகின்றன. இதே அடிப்படையில் பதிப்பிக்கப்பட்டுள்ள 172

பக்கங்களையுடைய நூலுள் எத்தனை நூறு ஐயங்கள் தோன்றும்? தொடர்ந்து இந்த நூலை யாராவது படிப்பார்களா? படித்துச் செய்தியைப் புரிந்து கொண்ட பிறகல்லவா பிற ஆய்வு முறைகள்? இந்த நூலில் ஆய்வுக்கு இடமிருக்குமா? இருக்கும். மேலே கூறியவாறு பிழைகளைப் பாகுபடுத்திக் காட்டும் ஆய்வுப்பணிக்கு இந்நூல் முழுமையாக இடந்தரும்! மேலும்,

'மா மா காய் மா மா காய்' என்னும் வாய்பாட்டில் முறையாக அமைந்தது நூலின் முதற் பாடலாகிய இந்த அறுசீர் விருத்தம். அடியளவு ஒத்துவரும் இப்பாடலடிகள்,

'கடந்த வேத கண்ணுதலோன்
கறைமா மிடத்தோ னருழ்போத்தி'

என்ற சீர் அமைப்பில் அமைய வேண்டும். ஆனால் நூலுள்,

"கடந்த வேத கண்ணுதலோன்
கறைமாமிடத் தோனருழ் போத்தி
. . . .
மடந்தை யனையாழ் மயலழகாய்
மன்னரய்பேர் சுருபம்ந்தன்னை"

எனச் சீர்கள் சிதைந்தும், ஐந்து சீர் அமைப்பிலுமாக அமைகின்றன. இவை சுவடியின் அமைப்பு அல்லவே! இப்படி நூல்முழுமையும் ஓரசைச்சீர் விரவியும் ஓரடியில் 4,5,6,7, என்ற அளவில் மாறி மாறிச் சீர்கள் பிரிக்கப்பட்டும் பதிக்கப்பட்டுள்ளன. மேலும்,

சுவடி அமைப்பில் மாற்றமோ திருத்தமோ கூடாது என்ற கொள்கைப்படியானால் இந்த முதற் பாடலின் முதலடி,

'கடநத வெத கணணுதலொன
கறைமாமிடத தொனருழ பொததி'

என்றல்லவா வெளியிட்டிருக்க வேண்டும்? பதிப்பில் மெய்யெழுத்துகள் புள்ளி பெற்றுள்ளன; ஏகார, ஓகார உயிர்மெய்கள் இரட்டைக் கொம்புகள் பெற்றுள்ளன. இவை திருத்தங்களாகாவா?

தொல்காப்பியம் தொடங்கி, தொகைநூல்கள், பாட்டு நூல்கள், காப்பியங்கள் சிற்றிலக்கியங்கள் போன்ற அனைத்து நூல்களும் சுவடி எழுதுவோரால் ஏற்பட்டு விட்ட பிழைகளைக் கண்டறிந்து ஏற்றவாறு திருத்தம் செய்து அல்லது முறையான வற்றைத் தேர்ந்து பதிப்பிக்கப்பட்டவைதானே! சுவடியில் உள்ளவாறே பதிப்பிக்க வேண்டும் என்பார் கருத்துப்படி பதிப்பித்திருந்தால் மேலே குறிப்பிட்ட அத்தனை வகை நூல்களும் இன்று படிப்பாரின்றியே ஒதுக்கப்பட்டிருக்குமே! 'தொல்காப்பியர் முதல் நூலாசிரியர்கள் அனைவருமே தமிழை முறையாக எழுதத் தெரியாதவர்களே' என்னும் ப்ழி அவர்களுக்கு ஏற்பட்டிருக்காதா?

"பாடிய சான்றோர் பீடுநன் குணர
மிகைபடு பொருளை நகைபடு புன்சொலில்
தந்திடை மடுத்த கந்திதன் பிழைப்பும்
எழுதினர் பிழைப்பும் எழுத்துரு ஒக்கும்
பகுதியின் வந்த பாடகர் பிழைப்பும்
ஒருங்குடன் கிடந்த ஒவ்வாப் பாடம் . . . .
மதியின் தகைப்பு விதியுளி யகற்றி . . . .
சுருங்கிய உரையின் விளங்கக் காட்டினன்
பரிமே லழகன் உரிமையின் உணர்ந்தே"[1]

என்பது பரிமேலழகர் உரிய பாடத்தைத் தேர்ந்து, பிழையான பாடங்களைச் சுட்டிக் காட்டியுள்ள திறத்தினை எடுத்துகாட்டும் சான்றோர் கூற்று. பரிமேலழகர் காலத்திலேயே சுவடி எழுதுவோரால் சுவடிகளில் பிழைகள் நேர்ந்துள்ளன என்பதும், பிழைகளைச் சுட்டிக்காட்டியே பரிமேலழகர் உரை எழுதியுள்ளார் என்பதும் இதனால் தெளிவாகிறது. பிழைபட எழுதி விட்டதைத் திருத்தவேண்டிய நிலை, பாடிய சான்றோர்களின் பெருமையை எடுத்துக் காட்டுவதற்காகவே ஏற்பட்டது என்பதும் உணர்த்தப்படுகிறது. பிழைபடவே பதிப்பித்துவிடுவோமானால் நூலாசிரியர்களுக்கு இழிவைத் தேடித்தந்தவர்களாவோம் என்பது இதனால் வெளிப்படையாகிறது.

பதிப்பில் திருத்தம்

சுவடிச் செய்தி என்பது ஏதோ தேவவாககு; அதைத்திருத்துவது பாவம்; அப்படித்திருத்திப் பதிப்பிப்பவர்கள் பெரும்பாவத்திற்கும், பழிக்குமுள்ளாகி விடுவார்கள்; அவர்கள் மொழிக்குத் துரோகம் செய்தவர்க ளாகிவிடுவார்கள் என்றெல்லாம் கருதிவிட வேண்டியதில்லை. 'சுவடிச்செய்தி' என்பது தமிழர்தம் எண்ணங்களே; அவை சுவடிகளில் வடிக்கப்பட்டவை அவ்வளவுதான். அவர்தம் எண்ணங்களின் வடிவங்களை அப்படியே அறிந்து துய்க்குமாறு மக்களுக்கு எடுத்துக் கொடுப்பதே பதிப்பாசிரியரின் பணி. இந்த அடிப்படையில் சுவடிச் செய்திகளைத் திருத்தியோ மாற்றியோ பதிப்பித்துக் கொடுப்பது பதிப்பு அறமாகாது. ஆனால் இன்று நமக்குக் கிடைக்கும் சுவடிகள் - சிறப்பாகத் தமிழ்ச் சுவ்டிகள் - தங்கள் எண்ணங்களைச் சுவடிகளில் வடித்தார்களே அவர்கள் வடித்த வடிவிலேயே கிடைப்பது அருமையாகிவிட்டது. அதாவது கிடைக்கும் சுவடிகள் அவற்றில் உள்ள கருத்துக்கு உரியவர்களால் எழுதப்பட்ட மூல வடிவங்கள் அல்ல. அடுத்தடுத்துப் பலமுறை, பலராலும் படியெடுக்கப்பட்டவற்றுள் ஒன்றே. படியெடுக்குங்காலத்தில், படியெடுப்போரின் கல்வித்திறனுக்கேற்பப் பிழைகளும் மாற்றங்களும் மலிந்துவிட்ட சுவடிகளாதலின் அப்பிழைகள் திருத்தப்பட வேண்டியவை

1. பரிபாடல் - உரைப்பாயிரம்.

யாகிவிடுகின்றன. அப்படியே வெளியிட்டால்தான் நாளுக்குநாள், காலத்திற்குக் காலம் தமிழ் எப்படி வளர்ச்சியடைந்துள்ளது என்பதை ஆய்வு செய்யமுடியும் என்பார்கருத்து ஏற்புடையதே. ஆனால் அந்த மாற்றங்களும் வளர்ச்சிநிலைகளும் படித்துப் புரிந்து கொள்ளுமாறு இருந்தால் அதில் பதிப்பாசிரியர் கைவைப்பது தவறு. படிக்கவே முடியாத நிலை. தமிழ்ச் சொற்களிலே இல்லாத வடிவம்; தமிழில் இப்படி ஒரு வடிவம் உண்டா என்று எண்ணுகின்ற சொல்வடிவம், சொற்றொடர் வடிவங்கள்; இந்தச் சொல்லுக்கு, இந்தத் தொடருக்கு என்னபொருள் என்பதை அகராதிகளின் துணைகொண்டும் அறிய முடியாத சொல்லும் தொடரும் என்பன போன்ற வடிவங்கள் சுவடிகளில் இடம் பெற்றுள்ளபோது பதிப்பாசிரியருக்குச் சிந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிடுகிறது. தம் கடமையை உணர வேண்டியிருக்கிறது. சிந்தித்து, துணைநூல்கள் பலவற்றை ஆய்வு செய்து, நூலின் முன், பின் பகுதிகளை மனத்தில் கொண்டு சரியான வடிவத்தை உறுதிப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது. இத்தகு பதிப்பாசிரியரின் உழைப்பை, நூலைப்படிப்போர் அனைவருமே மேற்கொள்ள முடியாது. முடியாத நிலையில் சுவடி வெளியீடுகள் புறக்கணிக்கப்பட்டுவிடுகின்றன. எனவே பொருள் புரியாத சொற்களையுடைய இடங்கள், முழுக்க முழுக்கப் பிழையானவையே என்று முடிவு செய்யப்பெற்ற இடங்கள் போன்றவை பதிப்பில் திருத்தமோ மாற்றமோ செய்யப்பெற்றன. இருப்பினுஞ் சுவடியிலுள்ள சொற்கள் சுவடிச்சொல் என்ற தலைப்பில் ஒவ்வொரு பாடலின் ஈற்றிலுங் கொடுக்கப்பட்டுள்ளன. திருத்தப் பெற்றவை தவறாயிருப்பின் சுவடிச்சொல்லை இணைத்துச் சரிசெய்து கொள்ளலாம். திருத்திப் பதிப்பிக்க வேண்டிய அவசிய மேற்பட்டவற்றிற்குச் சில சான்றுகள்:

"நாணமொழிநதிடுங் கதையைப் புலவொ
நகைததி ழிபபுரை சொலலாரெனறே"

என்பது சுவடித்தொடர் (பா.13-வரி 4-5) புள்ளியும், உயிர் மெய்க்குறில், நெடில் வடிவங்களும் சரிசெய்யப்பட்டுப் பதிப்பித்தால் இவ்வடிகள்,

நாணமொ ழிந்திடுங் கதையைப் புலவோர்
நகைத்தி ழிப்புரை சொல்லாரென்றே

என அமையும். ஆனால் முன்,பின் தொடர்களுக்கும் இடத்திற்குமேற்பப் பொருள் பொருந்துவதில்லை. எனவே 'நான் மொழிந்திடுங்' என்று பதிப்பித்து உண்மைப் பொருளும், ஆசிரியரின் கருத்தும் தெளிவுபட அமைக்கப்பட்டது.

"புற்றிட மான புராந்தகன் கிருபைச்
சிற்றந் தரிக்குந் திருவா ரூரே" (14-56)

என்னுமடிகளில் புற்றிடம் என்பதற்கேற்ப எதுகை பொருந்துமாறு 'சிற்றம்' என எழுதப்பெற்றுள்ளது. அருளுள்ளம் என்னும் பொருளில் கிருபைச் சித்தம் என்பதே கிருபைச் சிற்றம் என எழுதப்பட்டது. இதனைத் தாள் சுவடியில் படியெடுத்தோர் 'புத்திடம்,

சித்தந்' என எழுதினர். இருவேறு பாடங்களையும் ஆய்ந்து, பொருள்படச் 'சித்தந்தரிக்கும்" எனக் கொள்ளப்பட்டது.

'சந்தியானமும் **போதினும்** நடக்கும்' (15-3)
சினுக்கியான வசனம் பொய்க்கான்' (15-19)

என்பனவற்றுள் சந்தியானமும், சினுக்கியான என்னுந்தொடர்கள் கையெழுத்துத் தெளிவின் மையால் மயங்கி எழுதப்பட்டவை என்பது கருதப்பட்டது. சந்தியான முப்போதினும் நடக்கும்: சிவக்கியான வசனம் எனப்பதிப்பில் ஏற்கப்பெற்றன.

'இருவர்களையுமைந்திரிகளாய் வைத்து' (17-7)

என்னும் அடியுள் ஐந்திரிகளாய் வைத்து என்னும் பொருள் கொள்ள வேண்டிய நிலை பொருந்தாததாயிற்று. 'மந்திரி' என்பதே 'மைந்திரி' என எழுதப்பட்டுள்ளதாதலின் அவ்வாறு அமைக்கப்பட்டது.

'குலைவாழை வெட்டினுங் கொய்யுணுகீரை' (23-35)

என்பது குலைவாழை வெட்டினாலும் கீரை கொய்யுணும் என்னும் பொருளைத் தருவது. உண்மை வடிவம் சிதைக்கப்பட்டுள்ளது என்பதைப் படிப்போர் எளிதில் அறிய முடியாது. பொருளும் தெளிவுபடாது. 'குலைவாழை வெட்டுணும், கீரை கொய்யுணும் என்னும் பொருளில் அமையும் இத்தொடர்களைப் பதிப்பாசிரியர் திருத்தியே பதிப்பிக்க வேண்டியவராகிறார்.

'அருவை யரிடக் குறையில்லாமல் மத்தக் குறையில்லை' (23-42)

என்னுமடியில் அருவை என்பது அரிவை என்பதன் கொச்சைச் சொல் எனவும், அதேபோல மத்தக்குறை என்பதை மற்றக்குறை எனவும் கொள்ளுவது இயல்பாகலாம். அப்படியானால் அரிவையருடைய குறையைத் தவிர வேறு குறையில்லை என்னும் பொருள் பட்டு, நூலாசிரியரின் கருத்தே அபத்தமாகிவிடக்கூடும்.

'அரிவைய ரிடைக்குறை' என்பதே உண்மை. இது திருத்தம் பெறவில்லையானால் மனம்போன போக்கில் பொருள் சொல்லப்படும் வாய்ப்பு ஏற்பட்டுவிடும்.

"நாவி லிருந்து புகல்வா யருங்கொல்லி நாயகனே!" (பா. 4-4)

என்னுமடியில் கொல்லி நாயகனே என்பதற்குக் 'கொல்லி நாயகனெ' என்பது சுவடியமைப்பாகிறது. இத்தொடரைக் கோலவிநாயகனே! எனவும் அமைக்கலாம். இது பொருத்தமுடையதாகவும் இருக்கும். கொல்லிநாயகன் என்பதும் பொருட் பொருத்த முடையதாகிறது. அடுத்த இரண்டு பாடல்கள் விநாயக வணக்கப்பாடல்கள். மேலே உள்ள பாடல் (3) சிவபெருமானின் வணக்கமும் இணைந்த பாடல். அதனை ஒட்டிவரும் இதுவும் சிவபெருமான் வணக்கமே எனக்கொண்டு '**கொல்லிநாயகன்**' என்று வரையறுக்கப்பட்டது. மேலும் இப்பாடல் முறையான கட்டளைக் கலித்துறைப்

பாடலாகவும் இருக்கிறது. அதன் இலக்கண விதிப்படி பிற 3 அடிகளும் நேரசை முதலாய் பதினாறு எழுத்துகளைப் பெற்று முறையாக நிற்கின்றன. நான்காமடியாகிய இதில் கோலவிநாயகனே! என்று கொண்டால் இந்த அடிமட்டும் நேர்முதலாகிய பதினேழு எழுத்து அடியாகிவிடுகிறது. அது பொருந்தாததாகிவிடும். இந்த இலக்கண அடிப்படையிலும் நோக்கக் '**கொல்லி** நாயகனே' என்பதே பொருத்தமுடையதாகிறது. அவ்வாறே கொண்டு ஏற்றவாறு உரையும் எழுதப்பட்டது.

இப்படி நூற்றுக்கணக்கான இடங்கள் திருத்தம் பெறவில்லையானால் நல்ல நூலாக வடிவம்பெறும் வாய்ப்பை இச்சுவடி இழந்துவிடும் என்பது உறுதி.

ஒப்பிடும் பணி

ஒரே நூலுக்கான சுவடிகள் பலவற்றைத் திரட்டி வைத்துக்கொண்டு அவற்றுள் மூலப்படியையோ காலத்தால் முந்திய அல்லது பிழையற்ற, பிழை குறைந்த படியையோ தேர்ந்தெடுத்து எழுதிக் கொள்ளுதல் முதற்பணி. முழுமையாக நூலை எழுதி முடித்த பிறகு பிறசுவடிகளை ஒவ்வொன்றாக ஒப்பிட்டுப் பார்க்கும் போது பலவகையான குறைபாடுகளை நீக்கமுடியும். அப்போது பதிப்பாசிரியருக்குப் பிழைதிருத்தும் பணி இருக்காது. சுவடிச்செய்திகளைத் திருத்திப் பதிப்பிக்கும் பொறுப்பு பதிப்பாசிரியருக்கு ஏது என்னும் பழிச்சொல்லை ஏற்கும் நிலையும் இருக்காது.

ஒரு சுவடியில் பிழையானதாகவோ, கையெழுத்துப் புரியாததாகவோ, பூச்சி முதலி யவற்றால் எழுத்து சீர்கெட்டிருப்பதாகவோ அமைந்து அதனால் ஐயம் ஏற்படுமேயானால் மற்றச்சுவடிகளை ஒப்பிடும்போது அவை தெளிவு பெற்றுவிடும். சரியான சொல்லை அமைத்துவிட முடியும். ஆனால் ஒரு நூலுக்குரிய சுவடியாக ஒன்றுக்கு மேல் கிடைக்கவில்லையானால்தான் பதிப்பாசிரியர் பணி சுமையுடையதாகிறது. எப்படியாயினும் சுவடிச் செய்திகளை, சொற்களை, தொடர்களை அடியோடு நீக்கிவிடாமல் அதேசமயம் தூய பதிப்பாக வெளியிடுவதில் பதிப்பாசிரியர் தம் முழுத்திறனையும் பயன்படுத்துதல் இன்றியமையாத தாகும்.

A Critical Study

The Origin of Drama

The origin of drama can be traced to man's passion for mimicry. A child making faces, a school boy imitating his teacher or an adult his employer are artists in the making. When such disorganised actions are crystallised into a plot or a story, drama comes into being. Drama is an evolved form of pantomime as it contains action and is articulate. Drama ccan be effective or ineffective depending on the nature of the conflict. Conflicts can be between capital and labour, man and woman, flesh and spirit or between good and evil. Man against man, man against nature and man against the supernatural forces are some of the conflicts which have been exploited both in classical and modern drama.

Thus drama is one of the earliest imitative arts. It appeals to two deep rooted instincts of man namely, the craving for entertainment and the desire for edification. Drama has an edge over other literary forms since it is visual and presents a spectacle. To conjure up word pictures vividly, to heighten the action or to convey deep felt emotions, it resorts to songs. The effective rendering of emotions ranging from the intense agony of the spirit to sublime love sometimes calls for the use of symbolism and it is here that dances contribute richly.

Greek and Roman plays

Greek drama, noted for its antiquity dates back to the later half of 5 B.C. It evolved out of the ballad and was a happy fusion of pantomime, music and dance. To start with, Greek drama branched out into the Satyric dance and the stationary dance associated with the festival of Dionysius and the worship of Appolo. A merger of these forms resulted in the Attic tragedy whose exponents were Aeschylus, Sophocles and Euripides. Their plots were invariably drawn from heroic legend. The conflicts between man and God were profitably exploited by Aeschylus. Agamemnon and Penelope were two of his outstanding works. In the plays of Sophocles like Oedipus Tyrannus,"both public and private issues figure, but an attempt is always made to resolve the private crisis". Electra and Helen were the two major works of Euripides. As one imbued with a high sense of drama, he often broke with tradition. Among the writers of comedies, the greatest was undoubtedly Aristrophanes. He had an unerring eye for the ridiculous and satirised even the Gods in his plays, The Birds and the Frogs.

The Roman drama, obviously an offshoot of the Greek, did not make much headway as it fell into a corrupt state. Seneca was the leading playwright of Rome.

Drama in Japan and China

The Japanese drama had its origin in Samboso, a fusion of music and dance employed to appease the Gods who caused frequent volcanic eruptions. In China too, drama originated in musical extravaganzas with the emphasis on dance. The Chinese plays focussed on the burning social problems of the day. Though Islam did not encourage drama, there were some tragic plays dealing with the sad end of Prophet Mohamed, Mother Fatima and Ali.

Drama in England

English drama had an ecclesiastical origin. The early plays were called Mysteries or Miracles. Mystery plays drew their themes from the scriptures, while the Miracles dealt with significant events in the lives of saints and martyrs. Very soon, the Morality plays replaced the Mysteries and the Miracles. The characters in Morality plays were abstractions and represented vices and virtues. The first English tragedy Gorbuduc, authored by Sackwille and Norton was modelled on the tragedies of Seneca. The first two comedies, namely, Gammer Gurton's Needle and Ralph Roister Doister were inspired by the Latin plays of Terence and Plautus.

It was given to Thomas Kyd to popularise the blood and thunder elements which helped to relieve the monotony of the earlier plays. His Spanish Tragedy broke new ground by being violent and extravagant. The other powerful playwright was Christopher Marlowe who chose grandiose themes and treated them with the exuberance and richness that they deserved. Some of his characters like Faustus and Tamburlaine were fired by great and impossible dreams. Faustus thirsted after universal knowledge and Tamburlaine was after fabulous wealth. In fact, Shakespeare was to a great extent influenced by these playwrights.

Shakespeare who wrote comedies, tragedies and historical plays was a master- craftsman who knew his andience well. Though his plays contained physical and moral horrors, they did not rob the average man of his essential faith in life. His utterances have become a portion of the world's "spiritual and intellectual heritage".

It is a big leap from Shakespeare to Bernard Shaw. The contribution of Ben Jonson, Congreve, Oscar wilde, Noel Coward and Somerset Maugham to the

genre called 'the Comedy of Manners' cannot be overlooked. Bernard Shaw drew inspiration from Ibsen, the Norwegian, who had already established himself as a writer of problem plays with his inimitable The Doll's House, Ghosts and An Enemy of the People. Shaw took a leaf from him and wrote plays highlighting evils as varied as war and prostitution. A socialist of the Fabian school, he employed drama to propagate his ideas. His characters often degenerated into puppets lacking individuality as they blindly echoed his ideas.

In France, Moliere attacked social evils through the medium of drama. In spite of the didactic element, Moliere's plays seldom lost their artistry or degenerated into tracts or pamphlets. The saving grace was his keen sense of humour which helped him to create exaggerated situations. He exploited all the standard tricks of the writer of comedies such as diguise, love intrigues, mistaken identity and equivocal situations.

Indian Drama

The genesis of Indian drama can also be traced to man's passion for music and dance. Bharatā's Nāṭya Sāstra, an ancient work on aesthetics, points to the hoary antiquity of the Indian theatre.

By and large, the plays written by the ancients had a happy ending. Some of the conventions followed were healthy and point to a highly developed sense of beauty. War and bloodshed were taboo on the stage. Similarly death and prolonged death scenes were avoided. There was a deliberate attempt to eschew unpleasant subjects and morbidity. After all, men go to the theatre to escape from hard reality. They should not be reminded of the struggles and misery of the work-a-day world.

The early dramas were convention-bound. The dramatist had to operate within the confines of rigid rules. From choosing the theme to plot construction, he had to follow necessarily a set plan. The germinal idea of the play could be based on either what happened in the past or something fanciful and imaginary. The dramatist was also allowed to write plays which contained an admixture of fact and fancy. The hero should fall within four distinct categories, each one being a catalogue of noble and meritorious qualities. No doubt, there was considerable overlapping. Similarly specifications for the heroine had been elaborately spelt out. The story was expected to contain a beginning, conflict, hope, the resolution of the conflict and fulfilment.

Sanskrit Drama

All the dramas written in Sanskrit were invariably comedies except perhaps **Urubhaṅga of** Bāsa which was a tragedy. Kāḷitācā's **Maḷavikāknimitram, Sākuntalam** and **Vikramorvaciyam** were a tribute to the high water mark that Indian art and culture had touched. They faithfully mirrored the Indian ethos. In **Sākuntalam and Māḷavikāknimitram,** the **Vitūṣaka** or the court jester provided comic relief whenever sadness threatened to invade the plays. Many of the verses in the plays lend themselves to pleasing recitation and could be easily set to music. The other famous Sanskrit plays were **Ratṉāvaḷi, Priyatarsika** and **Nākananta** of king Harṣa who ruled somewhere around 7 A.D. Sanskrit drama could not make much headway as its appeal was restricted to highbrows.

Modern drama in India may be said to begin with the translation into Bengali of a play of Shakespeare by One Prasaṉṉakumār in 1832. Rabindra Nath Tagore's Sacrifice, The Post Office and Chitra represent the high peaks touched by drama in the next few years. The other Indian languages also saw the emergence of many playwrights. Translations from English and romantic themes held sway for a considerably long time.

Drama in South India

The street plays of Andhra, the *Yaṭcakāṉam* of Karnataka, the *Katakaḷi* of Kerala and the *Terukkūttu* of Tamilnadu were the forerunners of drama in the south. We shall examine these early attempts, particularly of *Yaṭcakāṉam* and *Kūttu* of various types, later.

In 1876 Vācudēva Sāstri heralded the new drama in Telugu with his translation of Shakespeare's Julius Caesar. The next landmark was the publication of the play **Mañcari matu kāriyam** by Rāmaccantra kavi. The other significant contributions were Vācutēva Sāstri's **Nanta Rājyam,** Vīrēsalingam's **Ariccantira Nāṭakam,** Srinivasa Rao's **Vijayanakara Sāmrājyam** and A.S. Sarma's **Manōrama.**

A *Yaṭcakāṉam* play that had become popular in Karnataka in the early Nineteen Twenties was **Caralakalē.** Many Sanskrit and English plays were rendered into Kannada by enterprising pioneers. Among the original plays that saw the light of day, mention must be made of Kerur's **Naḷa Tamayanti,** *Nārāyaṇa* Aiyar's **Strī Dharma Rahasyam** and adaptations of a few themes from the Makāpārata by 'Sri'. Māsti Veṅkatēca Aiyaṅkar towered above all the writers

and distinguished himself with his immortal works like **Cittirāṅkatā** and **Yacōtarā.** The most powerful and popular playwright was undoubtedly T.P. Kailācam.

Malayāḷam drama also began with translations from Sanskrit. In 1880, **Cākuntalam** and in 1890 **Māḷavikāknimitram** were rendered into Malayāḷam. This was followed by the translation of **Uttararāma caritam.** One Vargheese Māppiḷḷai wrote an original play entitled **Epirāyakkuṭṭi** drawing inspiration from the Bible. Some of the novels of C.V. Raman such as **Mārttāṇṭa Varmā** and **Tharmarāja** were dramatised and staged successfully. Padmanabhan's play Veluttampi Taḷavāy dealt with the grim fight of Vēlu Tampi against British rule. The other outstanding works were Koccappa Māppiḷḷai's **Māriamma** and **Ritumati,** Ramakrishna Pillai's **Pratima** and Damodaran's **Pāṭṭappākki.** Krishna Pillai's **Mātavi** and **Māya maṉuṣar** were also received by the public with great acclaim.

The origin of Tamil drama can be traced to dances and songs with a religious bias. The early plays drew inspiration from the *Purāṇas* and *Ithihāsas.* Even before the advent of the Five great epics, the grammar of drama had been evolved as is evident from works such as **Barata Cēṉāpatiyam,** Mativāṇanār's grammar of drama and similar works like **Ceyiṟṟiyam, Kuṇanūl** and **Cayantam.** Akattiyar had also formulated rules for the staging of plays. This points to the antiquity of Tamil drama. That the commentators of early poetry were familiar with the canons of dramatic criticism is evident from their casual remarks in other contexts.

Dance was known as *Kūttu.* When the *Kūttu* was backed by a strong story line, it was called drama. The elaborate classification and codification of *Kūttu* in ancient works on grammar reinforces the fact that drama as an art form had attaind to maturity and was popular with the public. To cite an example: *Vinōtak Kūttu* had been described under seven heads. The technical details for the rendering of *Kūttu* included not only gestures, but also the facial portrayal of various rasās. How the dancer should convey feelings of fear, doubt and despair had been succintly spelt out. Thus substantial pioneering work on the art of dancing had been done by the Tamils which later on became models for others to follow.

Tamil drama owed a lot to folk arts like *Oyilāṭṭam, Karakāṭṭam, Kāvaṭiyāṭṭam, Kummi, Kōlāṭṭam* etc. which it cleverly incorporated into its core whenever the occasion demanded it. It also drew heavily from *Katakaḷi, Kūccupudi, Bākavata Mēḷā* and *Yaṭcakāṉam* (A detailed account of *Yaṭcakāṉam* follows). Political and social exigencies helped the evolution of various other types of drama such as *Kuḷuva Nāṭakam, Kuravañci, Noṇṭi* and *Paḷḷu.*

Another genre of plays which slowly evolved relied on music for its effect. Called *Icai Nāṭakaṅkaḷ,* they were highly convention - ridden and invariably contained invocation, greetings, the entry of the chorus - like character, court dance and other set items. These plays always ended on a happy note. Though they were not divided into distinct acts and scenes, clarity was achieved by resorting to epistles, dreams, divine voices, omens and soliloquy.

The earliest 'modern' plays in Tamil were **Rāja Rājēswara Nāṭakam** and **Rāja Rājaṉ.** Both had a pronouncedly political bias.

In 1867, Kāci Vicuvanāta Mutaliyār wrote the play **Ṭampāccāri Vilācam.** In 1868 Kōpālācār rendered Shakespeare's 'The Merchant of Venice' in Tamil under the title **Venice Vaṇikaṉ.** This was followed by Rāmacāmi Raju's social play **Pratāpa Cantira vilācam.** The seeds for the evolution of Tamil drama in the Twentieth century were sown as early as the second half of the Nineteenth Century. Paritimārkalaiñar wrote plays in high flown and pedantic Tamil while Cuntaram Piḷḷai resorted to pure poetry. It was given to Caṅkaratāca Cuvāmikaḷ and P. Sampanta Mutaliyār to put drama on a sound literary pedestal.

Yaṭcakāṉam

Yaṭcakāṉam, the folk art popular in Andhra and Karnataka corresponds more or less to the *Terukkūttu* of Tamilnadu. The common denominators are music, dance and drama.

The story of this genre taking roots in Tamilnadu, as a popular form of entertainment, can be traced to Harihara and Bukka of the *Caṅkama* dynasty who founded the Vijayanagar empire. When they extended their suzeranity to a small area of Tamilnadu, cultural interactions between Vijayanagar and Tamilnatu became inevitable. After the fall of the *Caṅkamās,* Kiruṣṇa Tēvarāyar of the Tuḷuva lineage and the Maharaṣtra warrior Ēkōji (1676 A.D) ruled part of Tamilnadu with Tañcāvūr as their capital. During their regime many Telugu and Kannada *Yaṭchakāṉam* plays were staged in the suburbs of Tañcāvūr, Karnataka and Andhra including the border areas where Tamil is spoken. To enable the Tamils to follow the plays, many Tamil words were sprinkled in the text. **Nouka Nāṭakam** and **Prahalāta Pakta Vijayam,** authored by the celebrated Telugu composer Tiyākarāja Cuvāmikaḷ, were enacted in Tamil nadu. The story of the Hoycaḷa King Vallāḷarācaṉ was also staged. In course of time, a *Yaṭcakāṉam* on this theme was attempted in Tamil. When that venture proved very successful, more *Yaṭcakāṉam* plays appeared in Tamil and the art form came to stay.

The Tamils seldom added the suffix '*Yaṭcakāṉam*' to their plays while the Kannada and Telugu writers called their works by names such as **Cukrīva Vijaya Yaṭcakāṉam** and **Karuṭācala Yaṭcakāṉam**, the Tamils substituted words like *Kīrttaṉai, Carittiram, Nāṭakam, Mālaiyīṭu, Kalyāṇam, Tapacu* and *Tūtu* for **Yaṭcakāṉam**.

More about Yaṭcās and Yaṭcakāṉam

Yaṭcās, like the *Kantarvās* of Nepal, are high calibre professional musicians who live in Andhra and Karnataka. They trace their origin to the Gods. There is an apocryphal story to back their claim. When they were created by Lord Piramaṉ, some of them merely sought his protection or *Rakṣā*. The others craved for something to eat (Paṭcaṇam). Thanks to the blessings of the lord, the first group became *Yaṭcās* and the other *Rāṭcacās*.

The *Yaṭcās,* who live in Andhra and Karnāṭaka, call themselves Jakkulu and Jakkini respectively.

Yaṭcakāṉam is different from Hindustani and Carnāṭic music. While Hindustani music traces its origin to *Catyakirama* and Carnatic music to *Mattiyakarma*, *Yaṭcakāṉam* owes its inspiration to *Kantarvakāṉam*. However, it should be noted that *Kantarvakāṉam* belongs to the genre called ***Mārkkam*** and *Yaṭcakāṉam* to ***Tēci***.

The Yaṭcās have Kupera, the lord of wealth, as their leader. *Yaṭcakāṉam* is sung to appease Goddess Lakshmi so that Kupera's wealth will increase by leaps and bounds. ***Yaṭcini Vitya***, mentioned in the Mantra Cāstras, is also classified as *Yaṭcakāṉam*. These songs are sung to obtain progeny and increase prosperity. In fact, songs are sung throughtout the night called **Yaṭcarāttiri** (the night of the Yaṭcās). This practice still obtains among the brahmins of Andhra Pradesh. Even in Karnataka, *Yatcakāṉam* has been popular from very early times and went by the name Yakkalakāṉam.

In the celebrated Telugu work **Kamēsvari Katā**, we find the following account of *Yaṭcakāṉam*. Lord Civaṉ sent a few *Yaṭcās* to serve the village deity Kāmavalli. Before despatching them, Civa instructed Cukkirācāri to teach them divine music, which later on became *Yaṭcakāṉam*.

Civaram Karanth, credited with substantial work on folklore, opines that the songs sung by villagers to please the male deity called *Yaṭcā* and the female one called *Yaṭci* constitute the genesis of *Yaṭcakāṉam*.

Even today, villagers in remote parts of Karnataka are given to singing the story of Pākavatam in the *Yaṭcakāṉam* style at the crack of dawn. The song are rendered in the *Utaya Rāka*. Expertise in *Yaṭcakāṉam* presupposes very hard and disciplined work.

The seventeenth and Eighteenth centuries were the heyday of *Yaṭcakāṉam*. As many as 300 works in Telugu and 500 in Kannada appeared during this period. The hitherto exclusive use of Yaṭcakāṉam was extended to historical events and social themes. Exponents of *Kālaṭcēpam* or religious discourses added one more dimension to *Yaṭcakāṉam* by rendering emotions in the form of dance. They punctuated their speeches with *Yaṭcakāṉam* songs and dance and paved the way for musical extravaganzas and the so-called street plays.

Yaṭcakāṉam, as drama, drew themes from the immortal classics glorifying bravery. The emphasis on martial arts afforded ample scope for the performers to exhibit their histrionic talents.

The claim that the indigenous *Terukkūttu* of Tamilnadu metamorphosed into *Yaṭcakāṉam*, thanks to the influence of neighbouring tongues, is false. *Terukkūttu* and *Yaṭcakāṉam* have common denominations, but distinct identities.

Tērūrnta Cōḻaṉ Yaṭcakāṉam

The scene of action of the **Tērūrnta CōḻaṉYaṭcakāṉam** is Tiruvārūr, a hallowed place which has been eulogised in verse by many Tamil savants. Appar (580-660 A.D.), the great Caivite saint, wonders when the presiding deity of Tiruvārūr Tiyākēca settled there: Tiyakēca, when was it? Was it on the day you enjoyed bliss with your golden spouse? Or, the day the gods were fed with nectar? Perhaps it was the day on which you shone in your divine effulgence! Was it the day on which you consumed the poison from the sea? Before the burning of the three cities or after? Before the cosmic dance or after? Before wearing the crescent or after?

It is evident from Saint Appar's exuberant outburst that the temple was noted for its antiquity.

Tiruvārūr, the town where the temple is housed, is also one of the oldest of holy places with rich associations. Cuntarar's **Tiruttoṇṭattokai,** written under the command of the lord, originated there. While Cuntarar has devoted eight *Patikams* to the praise of Tiruvārūr, Ñāṉa Campantar has sung the praise in five *Patikams*. The third Caivite saint Tirunāvukkaracar has gone many steps further and earmarked twenty one *Patikams* to highlight the divine glory of the place.

It is customary to describe temples in terms of the five elements. Tiruvārūr is associated with the earth or *Prithivi*. When Cēkkiḻār refers to Civaṉ who lives in the raised earth or anthill at Tiruvārūr, he underscores this point. The idea of calling a holy spot *Prithivittalam* has a bearing on the evolution of worship or prayer. Paying obeisance to natural phenomena, including the earth, always preceded the anthropomorphic conception of god.

Tiruvārūrp purāṇam contains an apocryphal story which tells how Civaṉ came to be associated with an anthill. The gods, under the leadership of Tirumāl, performed a sacrifice at Kuruṭcētra on the banks of the Jumuna. The intense fervour with which Tirumal performed the ritual pleased Īsvara, who rewarded him with a bow called *Vaicuram*. This singular recognition turned the head of Tirumāl who forthwith drove the other gods to the south. At Tiruvārūr, thanks to the intervention of the Mother goddess Cakti, Tirumāl was overcome by languor. Planting one side of the bow on the earth and resting his head on the other side, Tirumāl slept for a while. Meanwhile the Gods tried to release Tirumāl's bow which had got enmeshed in the earth. In the violent jerk that followed, Tirumal's head got unloosened and fell on the earth. The bow also got shattered. The violent rumble which arose from the earth and the sky struck terror in the hearts of the Gods. Meanwhile, an idol of Civaṉ emerged from the earth which revived Tirumāl and made the Gods happy. The idol, which arose spontoneously, was hailed by the devout as Vaṉmīkanātaṉ or one who was born out of the anthill. Tiruvārūr also earned the apppellation '*Prithivittalam*'.

Chekkiḻār, whose real name was Aruḷmoḻittēvar, was the chief Minister of Anapāya Cōḻaṉ. In his mighty work **Tiruttoṇṭar Purāṇam,** he outlines the lives of sixty Caiva saints, out of whom, thirty lived in the Cōḻa country. In Nāṭṭuppaṭalam, he enumerates the reasons for the greatness of the Cōḻa country. It was here that the Lord inspired Cuntarar to write **Tiruttoṇṭattokai,** the source book for **Tiruttoṇṭar Purāṇam.** Again, it was here that three Nampi Āṇṭār Nampikaḷs revealed to Anapāya Kula Cēkara Cōḻaṉ the richness of **Tēvāram.** The Cōḻa country contained more than 190 temples exceeding the number of temples in Toṇṭaināṭu : (32), Naṭu Nāṭu(22), Pāṇṭināṭu (14), Koṅku Nāṭu (7) and Malai Nāṭu (1). Perhaps the most important reason for the reputation of the Cōḻa country was the unusual phenomenon of a ruling king condescending to fan a Caiva savant like Cēkkiḻār. The greatest achievement was perhaps the winning over of a Cōḻa king to the tenets of Caivism after exposing him to immortal works like **Tiruttoṇṭattokai** and **Tiruttoṇṭar Tiruvantāti.** The convert king ordered Cēkkiḻār to compile the lives of Caiva saints into a memorable and lasting treatise. Off went the saint to Citamparam and was blessed by the lord with the

first few lines of his projected work. The magnum opus **Tiruttoṇṭar Purāṇam** was released in the month of *Cittirai* under the ageis of the star *Tiruvātirai* in the capital of the Cōḻa country.

Tiruvārūr

Following the literary convention, Cēkkiḻār sings about *Tirunakar* after enumerating the merits of *Tiruṉāṭu* (Cōḻa Nāṭu). The *Tirunakar* is obviously Tiruvārūr.

Tiruvārūr means the beautiful part of a *nāṭu* abounding in material and spiritual wealth. Even today, the glory of the place has not faded.

Tiruvārūr is on the Eastern side of Tañcāvūr district (Recently a separate district called Tiruvārūr district has been carved). It is an important junction for trains whose destinations are Tañcāvūr, Nākappaṭṭiṉam, Kāraikkuṭi and Mayilāṭuturai. Buses ply to Tiruvārūr from Tañcāvūr and Kumpakōṇam.

Two rivers account for the fertility of Tiruvārūr. Cukkāṉāṟu and Ōṭampōkkiyāṟu on the Northern and the Southern side flow into the Bay of Bengal which is 20 km away. There is an important place called Kaṭāramkoṇṭāṉ on the Eastern side of Tiruvārūr reminscent of the triumph of Rājēntira Cōḻa over the ruler of Kaṭāram.

There is conclusive evidence for the fact that Kāvērippūmpaṭṭiṉam, Uṟaiyūr, Tañcāvūr and Kaṅkaikoṇṭa Cōḻapuram were the capitals of the Cōḻa empire at one time or the other. Whether Tiruvārūr, glorified by Cēkkiḻār was ever a capital is a moot point.

Though it was not the capital, it had many meritorious and creditable things to boast of. Paravaiyār, the fervent devotee of Lord Civaṉ, whose original name was Kamaliṉi, hailed from Tiruvārūr. Legend has it that Cuntarar, who was about to wed the daughter of Puttūr Caṭaṅkaviyār, was directed by Lord Naṭarāca to proceed forwith to Tiruvārūr and seek the hand of Paravaiyār. The marriage of Paravaiyār with Cuntarar took place at Tiruvārūr.

Again the lord went as an emissary to Tiruvārūr to clear the misunderstanding in the mind of Paravaiyār that Cuntarar had married Caṅkialiyār at Tiruvoṟṟiyūr. The divine mission added to the glory of Tiruvārūr.

It was Tiruvārūr that brought splendour to the protagonist of **Tērūrnta Cōḻaṉ Yaṭcakāṉam**, king Maṉunīti Cōḻaṉ. Cēkkiḻār, who wrote an impressive account of the king's achievements goes into raptures over the glories of Tiruvārūr. What more proof is required for the repute enjoyed by the place during the Cōḻa regine?

The Temple at Tiruvārūr

The temple at Tiruvārūr is a tribute to the artistry and skill of our ancient architects.

The dimensions of the temple are 680 feet in the North - South direction and 850 feet in the East-West direction. The base measures 110 x 60 feet. The height of the so-called *Kīlak Kōpuram* (Eastern tower) is 120 feet. There are, eleven holy pots on the top. The main entrance figures in this structure.

There is another tower called *Mēlaik Kōpuram* (Western tower) whose dimensions are similar to those of *Kīlaik Kōpuram*. This also has an entrance. The Northern tower is not so tall. There are eleven holy pots on the top. The temple has, in all, seven towers.

The sanctum sanctorum has as its presiding deity Vaṉmīkanātaṉ or the one who arose from the ant-hill. There is one small tower below the old one and adjacent to the sanctum sanctorum of the main deity. This shrine is dedicated to Tiyākēca. The miniature idol of Puṟṟiṭaṅkoṇṭāṉ taken out in holy procession is called Tiyākarācar.

Beyond the third courtyard, on the Northern side is a magnificent thousand - pillared hall called Tēvāciriyaṉ whose dimensions are 210 x 140. Out of 1000 columns, 324 are in the front portion of the hall. There is a platform in between for holding music and dance performances during festive occasions.

Cuntarar's immortal work ***Tiruttoṇṭattokai*** was formally read out by the author in this hall. The hall witnessed the release of many other books.

The other mantaps in the temple are *Rāja Nārāyaṇa Maṇṭapam, Sapāpati Maṇṭapam, Cantracēkara Maṇṭapam, Kamalāmpāḷ Maṇṭapam, Ūñcal Maṇṭapam* and *Vacanta Maṇṭapam*.

The holy tank on the Western side is known today as *Kamalālayam*. Incidentally, the temple itself once went by that name. A holy man called Citamparam maṟaiñāṉa Campanta Nāyaṉār has authored a purāṇa of Tiruvārūr entitled **Kamalālayacciṟappu**. This has been edited and brought out by the late Dr. U.V. Cuvāmināta Aiyar. This book eulogises Vaṉmīka nātar, Kamalāmpikai and other deities of the Tiruvārūr temple.

On the Northern side of the third courtyard is a separate shrine for Kamalāmpikai. An impressive flagstaff and an imposing tower are its distinct features.

In the present text, the presiding deity of the Tiruvārūr temple is referred to by many synonyms. Some of them are : *Nañcuṇpāṉ, Koṉṟai Taritta Tiyākarācar, Koḻuntumatimuṭiyāṉ* and *Tāṇṭavamāṭum Tayāniti*.

The Historical basis of the theme

Tērūrnta Cōlaṉ Yaṭcakāṉam, which tells the story of Maṉunītic Cōlaṉ and his progeny Vītiviṭaṅkaṉ, is based on hisotrical facts. This is evident from the Tiruvārūr inscription No.27, which, after recounting the story of the bereaved cow, mentions the withdrawal of the king and his minister Upayakuḷāmalaṉ from active life. They renounce the world after surrendering their worldly possessions including a palace and a house in favour of the minister's son. In fact, the palace and the house had earlier been gifted by the king to the minister.

The Maṉu Saga

The real name of Maṉunītic Cōlaṉ lies shrouded in mystery. He was named after the great moralist and thinker Maṉu for his unswerwing commitment to justice and fair play. This honorific overshadowed his real name.

Maṉu, the ancient law giver, was doing penance in Malayanāṭu when some women wanted him to spell out what was right and what was wrong. In 2694 slokas Maṉu condensed the quintessence of righteousness. Since then Hindus have been looking up to him for inspiration whenever they are faced with a moral or spiritual dilemma.

In ancient *Caṅkam* literature, there is no referrence to Maṉu. But **Cilappatikāram** makes an oblique reference to a king of Pukār dispensing justice with a high sense of objectivity. But there is no mention of Tiruvārūr.

Maṉimēkalai describes Utaya Kumāraṉ as a descendant of the king "who chastised his son when he committed a serious mistake" (**Maṉimēkalai** - 22.210 - 11). The reference to Utaya Kumāraṉ is made with great disdain.

Though the story of Vītiviṭaṅkaṉ killing the calf was known even during Iḷaṅkōvaṭikaḷ's time, we do not find any allusion to it in contemporary works. Even **Tēvāram** is silent on the matter. There is no reference in Nampiyāṇṭār Nampikaḷ's **Antāti** either. Cēkkilār alone devotes 37 verses in **Tiruttoṇṭar Purāṇam** to Maṉunīti Colaṉ's achievements. Tracing the lineage of Maṉu to Cūrya or the Sun god, Cēkkiḻār mentions the incident of the calf getting run over by the chariot. Here again, the real name of Maṉunīti Cōlaṉ is missing.

A contemporary of Kulōttuṅkac Cōlaṉ (1078-1118) and hailing from a suburb of Tiruvārūr, Jayaṅkoṇṭār has made a detailed reference to Maṉu in **Kaliṅkattupparaṇi** (187). He also traces the descent of Maṉu to the solar dynasty. Mention is made of a king who equated the life of a calf with that of his son. He gives a catalogue of the other kings in the Maṉu lineage such as Ikkuvāku, Kakuttaṉ, Māntātā, Mucukuntaṉ and a host of others.

The story of Maṉu figures in some proverbs as well. To stress the need for righteousness in youth, the example of Maṉu is cited.

Mūvarulā makes a casual mention of Maṉu while drawing the genealogical tree of the Cōḻa monarchs.

In **Mukkūṭaṟ Paḷḷu,** while condeming the double game played by Lord Civaṉ in the Cōḻa Kingdom, there is an implied reference to Maṉu. 'Fie on Civaṉ who made the chariot run over a calf and passed on the blame to an innocent prince'!

The central idea of couplet No 547 of **Tirukkuṟaḷ** can be summarised as follows: The king will protect the world. If he is righteous, that virtue will stand by him.

While commenting on this couplet, Parimēlaḻakar alludes to the king chastising his son for killing a calf as an example of supreme righteousness.

In **Kampa Rāmāyaṇam,** there are more than twenty references to Maṉu. Besides the code of conduct drawn by him, Maṉu's lineage and teachings are frequently alluded to. There is also a pointed reference to Maṉunīti Cōḻaṉ's exemplary rectitude and sense of justice.

Palm-leaf Manuscripts like **Tillai Citamparanātaṉ centil antāti** and **Āmaiyar Ammāṉai** contain references to the bereaved cow ringing the bell of justice.

Saint Rāmaliṅkar in his prose work **Maṉumuṟai Kaṇṭa Vācakam** tells the story of Maṉu in simple Tamil.

The Ceylonese work **Mahavamcam** contains the following story bearing a striking resemblance to the tale of Vitiviṭaṅkaṉ running the chariot over a calf. The names of the characters are different.

Acēla ruled over Aṉurātapuram for a considerably long time. A Tamil from the Cōḻa country called Ēlārā defeated Acēla and ruled the country for 44 years. He was noted for his probity and sense of justuce. A bell hung above his head in his bedroom. People with grievances were free to ring the bell at any hour.

The king's family was limited to a son and a daughter. The prince's chariot, on its way to Tīcavābi, ran over a calf and killed it. When the mother cow rang the bell of justice, the king did not hesitate to drive the chariot over his son's neck.

Wide references to the story of the bereaved cow ranging from inscriptions to established literary works conclusively prove that the theme exploited in **Tērūrnta Cōḻaṉ Yaṭcakāṉam** was based on authentic events. Its historicity thus stands unquestioned.

The Text Proper

Invocation

In keeping with convention, the author of this Yaṭcakāṉam (which has features of the Icai nāṭakam as well), begins his work with invocation. Prayer is offered so that the play would be completed without any hindrance.

First he appeals to Lord Viṉāyaka for His grace. All the meritorious qualities of the god are catalogued. Expressions like Vikkiṉarācaṉ, Ciṉtura Vataṉaṉ, Aiṅkaraṉ, Mūṣikavākaṉaṉ, Paramakuruparaṉ and Vallapaināyakaṉ describe some aspect or the other of the God succintly.

Next he pays obeisance to Lord Murukaṉ with twelve hands, Civaṉ who destroyed the three cities and Viṣṇu, the God of protection, besides Umai, the consort of Civaṉ and Carasvati, the goddess of learning.

The invocation is followed by the author's prologue where he expresses his desire to tell the tale of the Cōḻa king in typical *Yaṭcakāṉam* style. In this attempt, he will try to be as innovative as possible.

The deities of Tiruvalam

The author next sings in praise of the Gods of Tiruvalam because it is the land of his birth. This is likely to strike a tender chord in the minds of the audience hailing from the same place. Vāraṇaṉ, Murukaṉ, Vallanāyaki Ēkavalli and Nāraṇaṉ are some of the gods on whom praise is showered. Vāraṇaṉ is the elephant god with a pot belly. Vallanātaṉ is Lord Civaṉ in the form of a hill. Vallanāyaki is another name for the Goddess of righteousness, Pārvati. Ēkavalli is a synonym for Carasvati. The credit for installing her in Tiruvalam goes to Karikāla Cōḻa. Nāraṇaṉ is the lord who rides the eagle.

A healthy tone is set for the show to follow by such an elaborate prayer. The invocation offers plenty of scope for the display of music.

The Theme of the play

The protagonist is a Cōḻa king setting much store by justice and fairplay. Thanks to the blessings of Lord Tiyākēca, the issueeless king begets a son who grows up into a young man of parts.

Riding a chariot, the prince goes to witness the temple festival. The chariot runs over a calf and kills it. The bereaved mother cow rings the bell of justice quite frantically. The just king comes to its rescue. He equates the calf's

life with the life of his son and punishes him by running the chariot over him. The kind gods intervene and all is well that ends well!

Versions and Variations

The tale of a king meeting out justice to a bereaved cow has been exploited by writers from time immemorial. The germinal idea finds echo even in a Ceylonese work, **Makāvamcam.** There is a folk tale in Malayalam on the same theme entitled 'The Bell of Justice' attributed to a Tampirāṉ.

Though the skelton outline is the same in all the versions, there are variations in detail. Most of the tales have Maṉunīti Cōḻaṉ as the protagonist. Obviously, this was not the real name of the king, but an honorofic conferred on him for his sense of justice and fairplay. **Tērūrnta Cōḻaṉ Yaṭcakāṉam** alone identifies the king as Rācentiraṉ. In some places, he is referred to as Tērūrnta Cōlaṉ.

The queen has no name in **Yaṭcakāṉam.** In some of the other versions also she remains anonymous except in **Tērūrnta Nāṭakam** where she goes by the name Kuṅkunakēnti.

The ministers in the **Yaṭcakāṉam** version are called Cakalakalaivallavaṉ and Nītipūṣaṇaṉ. These names do not occur in the other versions.

The Government Oriental Manuscript library of Chennai has three Manuscripts dealing with the theme of a just king going to the rescue of a bereaved cow. Though the story-line is identical with **Yaṭcakāṉam,** each writer has attempted to embellish it and improve it by drawing freely from his imagination. New characters and incidents have been introduced. The concluding part, however, concurs with **Yaṭcakāṉam.**

In **Tērūrnta Nāṭakam**, there is a character called *Kaṭṭiyaṉ* who functions like the chorus in Greek drama. This character is the invention of the dramatist. The bell - maker, the *pāḻaiyakkāraṉ* and characters like Poṉṉappaṉ, Nāyakkaṉ, Potiyaṉ, Vīrayyaṉ and Pōttaṉ have been created by the author to make his play effective. There is an interlude in the play where some hunters, strangers to the Cōḻa country, pay a tribute to Cōḻa polity. This incident does not figure in any other version. Similarly, the celestial conference, where Nārata and Tirumāl allude to the integrity of the Cōḻa king, has no basis in **Yaṭcakāṉam.** Again, in the Nāṭakam version, the gods make Abimaṉ, son of Arjuna take birth as the king's son. The **Yaṭcakāṉam** is silent on this.

There are three different versions on how the prince set about his journey to the temple of Tiyākēca. In the prose version of Rāmaliṅka Aṭikaḷ called

Maṉumuṟaikaṇṭa Vācakam, the prince approaches his father in all humility and seeks permission to offer prayers to Tiyākēca, the presiding deity of *Kamalālaya*. The king ungrudgingly permits him to go to the temple.

In the Nāṭakam version, permission is sought from the mother which is curtly refused. She directs the prince to the king who does not hesitate to grant the prayer. Later, the prince repents for having disobeyed his mother and attributes all his misfortunes to the defiance of her authority.

In the **Yaṭcakāṉam** version, the Prince returns after strolling through the streets of the city where he becomes the object of admiration of all pretty girls.

The king disapprove's of the jaunt and chastises the prince. He then orders the prince to supervise and conduct the temple festival for ten days seeking help from the minister. The prince, after craving forgiveness of his father, hurries to conduct the festival in a chariot drawn by horses.

Description of folk arts

The description of the Ten day temple festival and the folk arts in **Tērūrnta Cōḻaṉ Yaṭcakāṉam** has been done with such consummate ingenuity that it reads like an integral part of the story - line.

The annual festival held in honour of *Puṟṟiṭaṅkoṇṭa perumāṉ* was typical of Brahmotsavams held in other temples. After sun-set, the streets were brightly lit with lamps, both big and small. The lighting of the *Kāḷa Vilakku* or lamps arranged like the state logo deserve special mention. The logo of the Cōḻas being the tiger, women had taken pains to project the likeness of a tiger.

The Pākavatars rendered the tales from Purāṇās and Ithihācās with great elan and was backed by dance and music. Religious discourses were also held. Actors donning various roles performed *Kūttu* of different types. Tamil savants gave thought-provoking expositions of **Kantapurāṇam.** Elsewhere, speeches were held on the evils of gambling, the story of Yudhistira pledging his wife Traupati coming in handy. The story of the lord appearing as a midget (Vāmaṉa) and demanding three paces of the earth was also narrated. The jingle of anklets added to the ambience that was sweet and heavenly.

Salient features of the play

The author uses the following epithets to describe the theme of the play: **The Tale of Tērūrnta Cōḻaṉ,** To avenge injustice and attain bliss, The just king who brings cheer and The King who plays the sentinel.

Obviously, the king is the chief character and the moving force behind all action. Verse 15 enumerates the qualities of his head and heart. Highly God - fearing, the king's integrity and sense of duty are exceptional. A master of all the eighteen languages spoken in his kingdom, he is noted for his catholicity of outlook. He patronises both Caivism and Vaisṇavism and does not identify himself with any sect or group. His door is always open to poets and saints.

People in his kingdom live sans fear. Acts of injustice and cruelty are unheard of. There are no agitations or rebellions. Harmony and peace prevail everywhere. The normalcy of life is described by the writer with the following illustrations: Flowers in the kingdom are plucked, the weeds are removed, plantain bunches are cut, spinach is gathered, sugarcane is squeezed and gingelly ground, hot iron struck and paddy pounded with the pestle. All the grass is munched by the cows and the waists of young girls are lean and emaciated.

The above poetic outburst of the author of **Yaṭcakāṉam** owes its inspiration to Kampar. While describing the ideal conditions obtaining in Ayodhya, he indulges in a similar poetic fancy: Those which go way ward are the waters of the rivers only, those which fade are the Vermillion marks on the shoulders of women, those which become emaciated are the waists of lasses and those spreading fragrance are the flowers in the locks of ladies.

In his appeal to the lord, the king describes the plight of a person without issues. This expression of personal grief is sure to strike a tender chord in the minds of the audience witnessing the play. The passage soaked in sentiment runs as follows: Food eaten without the company of a child is verily equivalent to mud. Hands which lift not children are wooden. Shoulders devoid of the touch of babes are worse than rough thatches . . . . . Ears unfamiliar with the lisping of children are deaf and stony.

When the king is blessed with a son, he is liberal with his gifts. He celebrates the event by presenting silken robes to ministers, soldiers and brahmins. Verse 32,33 and 34 describe the gift of land etc to his followers. The money spent on the renovation of temples is huge. Special *apicēkams* are performed. Not only are his countrymen benefited, his gifts reach even those living in the neighbouring countries.

All the expenses are borne by him. In other words, he is not spending liberally from the public exchequer. How one fervently wishes that some of our modern administrators take a leaf from him!

The king's righteousness is born of his intense devotion to Lord Civaṉ. While praying to the Almighty for an issue (verses 25,26,27), the king refers to

the many memorable deeds of the Lord and the miracles credited to him. The passages are richly allusive and lent weight to the relevant verses. In some places, the verses touch dizzy heights. Some of the epithets employed to describe Civaṉ are the following: The darling of Pārvati, the wearer of the axe, the resident of Tirukkaḻukkuṉṟam, the one with the matted locks, the one who helped Tirumāl, the presiding deity of Tiruccirrampalam, the one who suckled the young ones, the one who blessed even those who hit him with stones and arrows and the one who has his abode in the anthill.

The lord taken in procession during the festival is also addressed by allusive epithets (verses 60 and 61). Some of them are : The wearer of the *Koṉṟai* flower and the crescent, the resident of *Veḷḷiyaṅkiri*, the one who uses the skull of Piramaṉ as his begging bowl, the kind one given to dancing and the consumer of the deadly poison. Because of the profuse allusions, the **Yaṭcakāṉam** attains to epic dignity. An aura of grandeur surrounds it enhancing its literary merit.

A king who is so devout wonders at a later stage whether the lord has played him the traitor and let him down miserably. Why should He bless the king with a son and later on force the son to become a vile sinner? Was Civaṉ nursing a grudge and waiting for a suitable moment to take revenge? (Verse 88)

The author of **Yaṭcakāṉam** deserves credit for his very realistic portrayal of the king. Though bound by rigid conventions in drawing the character of the king, he is able to avoid stereotyping.

What strikes one most about the character of Vitiviṭaṅkaṉ is his straight forwardness and sincerity. By no strech of imagination can he be blamed for the death of the calf. He was not driving the chariot. The wayward calf actually ran into the wheel and met with its death. But Vitiviṭaṅkaṉ, who is soft and sentimental, takes the blame on himself. He wonders why such a mishap should occur at all! Was there any lapse on his part in conducting the lord's festival? In the case of others, a son adds to their glory and prestige. But Vitiviṭaṅkaṉ had brought disgrace on his family. His sincere repentance has much to commend itself. The cool with which he takes the punishment meted out to him by his father speaks volumes for his highmindedness and gentility.

On hearing the death of the calf, the king is equally saddenned. He wonders why a son obtained after deep penance should experience such a fall. He attributes it to sins committed either in this or in the earlier birth. The pathetic ejaculation of the king runs as follows: Did I do injustice to the physically disable? Did I let down any one who trusted me? Did I deny gruel to children and feed vipers? I do not know whether I have misused the lord's property and belongings. Who has cursed me? Or is it my fate?

The self analysis of the King figures in the other versions as well. Rāmalinkar,in his prose work, **Manumuraikanta Vācakam** exploits all the resources of language to heighten the dramatic effect of the king's monologue.

The queen's reaction on hearing the sin committed by her son is similar to that of her loving lord. She is in a fix as she is unable to make out why such a thing should happen at all. She also indulges in introspection: Did I conspire against my husband? Did I reveal anybody's guilt without withholding it? Did I look down with contempt on the lowly and the lost?

The theory of inevitable consequence echoes frequently in the play. The future condition of sentient beings is determined to a large extent by the quality of their past actions. Man is not a free agent. His acts are settled by earlier causes and nothing can be done to change them or prevent them. This grim determinism, which permeates the play, does not make it sickening. The saving grace of God's mercy reassures man that the best is yet to be.

The Problems of the Editor

Editing a palm- leaf manuscript is an uphill task. Apart from the ravages of time and those wrought by white ants, the writings are quite often indecipherable. The mistakes committed by the copyists, whose mastery of the subject and linguistic proficiency are poor, have to be corrected meticulously. Manuscripts on an identical topic may contain variations. The choice of the correct version rests with the editor. Substitition of the wrong word, wrong syntax, mistakes in grammar, archaic words and non existing words make the job of the editor extremely arduous and time - consuming.

The first aim of any good editor should be to make the text easily intelligible to the common reader. There should be no ambiguity. At the same time, care should be taken not to distort the thoughts and ideas of the original writer. A rapport should be established with him before venturing to edit the text.

Anybody and everybody cannot claim competence in editing. It is a highly specialised job. One should have taken pains to master its intricacies so that pitfalls can be avoided. The work calls for deep scholarship in the subject concerned and wide and varied reading. Correction should never be made for the sake of correction. In deciding on the authentic version, the editor should base his judgement on the distinct stylistic features of the original. He must have a good knowledge of the sentence patterns exploited by the original writer, his pet expressions and favourite turns of phrases. In Western countries much of this work falls to the lot of the computer. Controversies like the authorship of the plays of Shakespeare are resolved by the machine. But even if a machine is

used, the importance of the editor's commonsense approach cannot be belittled. The success of the venture depends to a great extent on the nature of the input, namely the data fed into the computer by the editor. The computer will only interpret the data. It does not have any judgement or discretiȯn. So ultimately, everything depends on the programmer or the editor. The merits of the computer are limited to speed and accuracy.

Let us now examine some of the editorial changes made in **Tērūrnta Cōḻaṉ Yaṭcakāṉam.**

The invocation *Aaintu karattaṉai* etc. has been lifted from **Tirumantiram.** Perhaps the playwright had learnt it by heart and was quoting from memory. Otherwise, how can one account for the variations? Either his memory had failed or he had mastered the verses wrongly.

The *eyiṟṟaṉai* has been rendered as *mikuttaṉai.* The copyist or the author again confuses *mukattaṉai* with *mikuttaṉai.* The editor has substituted *mukattaṉai* for mikuttaṉai. To avoid the charge of arbitrariness, he has clearly stated in the footnotes that the work figuring in the palm- leaf manuscript is *mikuttaṉai.* Those who do not see eye to tye with the editor can retain *mikuttaṉai.* Similarly *ñāṉakkoḻuntiṉai* is more appropriate than *ñāṉakkoḻuntaṉai.* The word *intiṉiḷampiṟai* is to be preferred to *iṉtuyiḷampiṟai.*

Verse 65, as found in the palm-leaf manuscript, is not intelligible. A few changes will have to be effected, if it is to convey sense.

There is one school of thought which maintains that no change should be made by the editor to the version found in the palm leaf. Such a stand is unreasonable. Wherever the text tends to be obscure, it is the bounden duty of the editor to restore intelligibility or readableness.

The advocates of the school, which is against editorial meddling, cite the example of **Kaṉṉaṭiyaṉ pōr**, a folk ballad, published without making any change whatsoever.

The present editor can point to many mistakes in grammar and syntax, not to speak of the other rhetorical lapses in the unedited version of **Kaṉṉaṭiyaṉ Pōr.** In the present form, it is not likely to convey much to the avid reader. The purpose of publishing any book is frustrated if it does not communicate something worthwhile.

From **Tolkāppiyam** onwards, all the epics and minor literature have undergone vetting at the hands of seasoned scholars and commentators before seeing the light of day. If they had been published in the original form, they would have reflected sadly on the writers. Even Parimēlaḻakar, while writing

commentaties, made it a point to highlight the errors of the copyists as he was very anxious to uphold the greatness and prestige of the writers.

In the following verse occuring in **Tērūrnta Cōlaṉ Yaṭcakāṉam**

nāṉamolintituṅ kataiyai . . . . . . (pa. 13 4-5), the editor had to make a few changes to make it intelligible. The changes were mostly semeiotical involving the insertion of dots and marks of elongation. The revised version ran as follows:

nāṉmo lintituṅ kataiyaip pulavōr

nakaitti lippurai collāreṉṟē

Another change that the present editor has made pertains to verses 14 - 56.

puṟṟiṭa māṉa purāntakaṉ kirupaic

ciṟṟan tarikkun tiruvārūrē

The expression *ciṟṟantarikkum* has been changed as *cittantarikkum.*

Again, the editor has made some verbal changes in verses 15-3 and 15-19. Here the problem is illegibility. The substitution of *cantiyāṉa muppotilum* for *cantiyāṉamum potilum* and *civakkiyāṉa vacaṉam* for *ciṉukkiyāṉa vacaṉam* gives a face-light to the verse making the meaning clear.

In verse 17-7, the mistake committed by the copyist is so serious that it totally distorts the meaning. The word *mantiri* has been copied as *maintiri.* The unedited version conveys the meaning 'five wicks' (aintiri) instead of the intended meaning 'minister'. *(mantiri)*

In Verses 23-25 *Kulaivāḻai veṭṭiṉuṅ koyyuṇu kirai* should be rewritten as kulaivāḻai veṭṭuṇum, kirai koyyuṇum if it is to make sense.

Similarly *aruvai yariṭakkuṟaiyillāmal mattakkuṟaiyillai* should read as *arivaiya riṭaikkuṟai.*

Thus 'textual criticism' or the restoration of the original text from manuscripts copied by hand is a Herculean task. The editor has to battle with "corrupted' words or words which have been altered by ignorant miscopying and by deliberate insertions or interpolations. Words which have deteriorated by wear and tear pose a more formidable challenge.

The various stages of editing include recension or bringing the text close to its ancestor or archetype. The manuscript is then fitted into its proper family after perusing other manuscripts, if available. This is followed by correction of errors. The present practice is to prefer the best reading from variant readings and print the plausible emendations of earlier editors as footnotes. Dogmatic assertions are avoided and the door is kept open for future research workers.

A note on the author's vocabulary

The author uses some literary words which have almost fallen into disuse. One has to look up the dictionary to know the meanings of such words.

In verse 51-5, we come across the word *appaṉai.* This is a very obscure word and means 'the order of the leader'. In verses 22-11, the word '*āṭṭiyaṉ*' is used in the sense of a king who has the power to pull the strings of his puppets (subjects). The beating of the drum is conveyed by the expression *muṟai cāṭṭivittāṉ.* This coinage is quite original and deserves commendation.

In *iṇaṟu cerukiya kūntal, iṇaṟu.* refers to fragrant flowers. (20-7).

'*kāṟu pāṟu ceyyum kāvalar*', which is onomatopeic, means action heroes empowered to do deeds. (65-)

To convey the idea that Tiruvārūr is blessed with the patronage and love of *Tayāniti,* the author uses the expression *tayāniti tikkatikamāṉa Tiruvārūr* (14-1). Here the word '*tikku*' functions as a pointer.

For silken robes, the author employs the word paṭṭavali and for jewels paṇiti. *Pāṇi,* the sanskrit word, is used to indicate the hand. Apart from literary words, the author freely uses slang words from the dialects spoken in the area. A few examples will suffice.

kiṉavu for *kaṉavu* (dream) (29-1)

pākutar for *pākavatar* (musician) (57-10)

cilavu for *celavu* (expenses) (15-24)

vaṅkiṣam for *vamicam* (dynasty) (27-5)

kimataṟmaṉ for *ematarmaṉ* (The Lord of Death) (69-1-2)

tulaippatu for *tolaippatu* (losing) (123-19)

tericaṉam for *taricaṉam* (vision) (56)

The text abounds in Sanskrit words. Examples are *apakīrttii, cupakīrtti, cukirtam, cutākaraṉ* and *kīrttiyē pūṣaṇa kirīṭapati* (16-1).

There are some Urudu words as well like *calām* and *nicāraṅki.*


* * *

WHERE JUSTICE CHIMES

தேரூர்ந்த சோழன் யட்சகானம்



Eastern Tower of Tiruvārūr Temple



The Holy Tank Kamalālayam

தேரூர்ந்த சோழன் யட்சகானம்

அத்திமுகத் துத்தமனை
நித்தம் [1]நினை சித்தமே

மனமே! உலகத்து உயிர்களுக்கெல்லாம் முதல்வனாய் விளங்கும் யானைமுகப் பெருமானாகிய விநாயகனை என்றும், எக்காலத்தும் இடைவிடாது நினைத்து வாழ்வாயாக.

அத்தி – யானை. உத்தமன் – நற்குணமுடையவன்; பெரியவன். நித்தம் – எப்பொழுதும். சித்தம் – உள்ளம்.

சுவடிச்சொல் – 1. ஙினை.

Let the mind eternally rest on Lord Vināyakar,
The abode of all virtues.

(விநாயக வணக்கம்)

அஞ்சு கரத்தனை ஆனை முகத்தனை
யிந்து யிளம்பிறை போலு [1]முகத்தனை
நந்தி மகன்தனை [2]ஞானக் கொழுந்தனை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

ஐந்து கைகளையுடையவன்; யானை முகத்தோடு விளங்குபவன்; வளர்பிறையின் இளநிலவினைப்போன்ற ஒளியுடைய முகத்தையுடையவன்; சிவபெருமானின் மைந்தன்; பேரறிவின் ஒளிப்பிழம்பாக விளங்குபவன் என்னும் சிறப்புகளையெல்லாந் தன்னிடத்தில் ஒருங்கே பெற்றவனாகிய விநாயகப்பெருமானை என் அறிவாகிய மனத்திலே நிலைபெறச் செய்து, அவனுடைய திருவடிகளை வணங்குகின்றேன்.

அஞ்சுகரம் – ஐந்துகைகள் – அங்குசம், பாசம், மாம்பழம், யானைக்கொம்பு ஆகியவற்றைத் தாங்கியுள்ள கைகள் நான்கும், துதிக்கை ஒன்றுமாகிய ஐந்து கைகள். இந்து – நிலவு. இளம்பிறை – வளர்பிறையின் பிறைச்சந்திரன். நந்தி – சிவபெருமான். ஞானம்–அறிவு. புந்தி–அறிவு, மனம்.

Obeisance to Lord Vināyakar

1. I salute Lord Vināyakar,
   Who dwells in my mind

Who has five hands and the head of an elephant,
Who is the son of Civaṉ
And infinite wisdom incarnate!

(விநாயகன் முதலான கடவுளர் வணக்கம்)

2. சரணம் சரணம் சுரேந்திர வந்திதா சரணம்
ஹரிசதி [3]வல்லபா சரணம்
கெசமுக சூரசங் காரா சரணம்
விக்கின [4]விநாயகா சரணம் சரணம் சரணம்
சிந்துரவதன ஐங்கரா சரணம் 5
மூஷிக [5]வாகனா சரணம்
கெசமுக சூரசங் காரா சரணம்
வல்லப நாயகா சரணம் சரணம் சரணம்
[6]பரம குருபரா [7]சரணம்
மவுளியணி மனோகரா சரணம் 10
பன்னிரு புசவசீகரா சரணம்
அறுமுக சண்முகா சரணம்
திரிபுர தகன பரசிவா சரணம்
பால விலோசனா சரணம்
கிரிமகள் சகித அரகரா சரணம் 15
சந்திர சேகரா சரணம்
[8]ஆலிலை மேல்துயில் அனந்த[9]சயனனே – சரணம்
நந்த பாலனே சரணம்
வாலி [10]மர்த்தனஞ்செய் தீரனே சரணம்
பாணா சுரசங் காரனே சரணம் 20
இமகிரி [11]குமரி திரிபுராந்தகி சரணம்
மயேஸ்வரி சரணம்
பார்வதி கெவுரி சாம்பவி சரணம்
தேவி சடாதரீ சரணம்
சுரபி பார்பதி சரணம் 25
வேதபா ராயணி சரணம்
கலைமகள் மதுர வாணீ சரணம்
காசினி சரஸ்வதி சரண்ம்

பாதமு பிரமன் . . . . சரணம்
[12]வெண்கம லாசனி சரணம் 30
வேத புராண நாயகி சரணம்
தவள ரூபிணி சரஸ்வதி சரணம் சரணம்.

தேவர்களின் தலைவனாகிய இந்திரனால் புகழ்ந்து வணங்கப்படுபவனே! பகைவர்களை அழிக்கும் வல்லமை வாய்ந்தவனே! கசமுகாசுரன் என்னும கொடியவனை அழித்தவனே! தன்னை வணங்கினோர் துன்பங்களையெல்லாம் நீக்கியருள்பவனே! யானை முகமும் ஐந்து கைகளுமுடையவனே! பெருச்சாளி ஊர்தியை உடையவனே! வல்லபை என்னும் சக்தியின் நாயகனே! முழுமுதற் கடவுளாக விளங்குபவனே! உயர்ந்த திருமுடியணிந்த விநாயகப் பெருமானே உன் திருவடிகளை வணங்குகிறேன்.

ஆறுமுகத்தையுடையவனாய், சண்முகன் என்னும் பெயரையுடையவனே! ஆறுமுகங்களுக்கேற்பப் பன்னிரண்டு புயங்களோடு எங்கள் உள்ளங்களைக் கவரும் அழகு வாய்ந்தவனே! எங்கள் முருகபெருமானே உன் திருவடிகளை வணங்குகிறேன்.

திரிபுரங்களை எரித்த சிவபெருமானே! அடியவர்மீது அருட்பார்வையைச் செலுத்தியருள்பவனே! மலைமகளாகிய உமையம்மையை ஒருபாகத்தில் கொண்ட சிவபெருமானே! பிறையணிந்த சடாமுடியையுடையவனே உன்திருவடிகளை வணங்குகிறேன்.

ஆலிலையையும் ஆதிசேடனையும் படுக்கைகளாகக் கொண்ட திருமாலே! யாதவர் குலக்குமாரனாக விளங்கியவனே! வாலியையும் பாணாசுரனையும் அழித்து அன்பர்களைக் காத்தவனே உன் திருவடிகளை வணங்குகிறேன்.

இமவான் என்னும் பர்வதராசன் மகளாய்ப் பிறந்து, திரிபுரம் எரித்த எம்பெருமானை யடைந்து திரிபுராந்தகி என்னும் சிறப்புபெற்ற அன்னையே! மயேஸ்வரி, பார்வதி, கௌரி, சாம்பவி என்னும் பெயர்களைப் பெற்றவளே! சடாமுடிதரித்த பெருமானையடைந்து சடாதரி என்னும் பெயர் பெற்றவளே! அன்பர்களுக்கு வேண்டியதையளிப்பதில் சுரபி என்னும் பெயர் பெற்ற உமையம்மையே உன் திருவடிகளை வணங்குகிறேன்

நான்கு வேதங்களையும் அறுபத்து நான்கு கலைகளையும் இனிமையாக எடுத்தோதுந் திறத்தால் வேதபாராயணி, கலைமகள், மதுரவாணி என்னும் பெயர்களைப் பெற்றவளே! இந்த நிலவுலகில் சரசுவதி என்னும் பெயர்பெற்றவளே! வேதங்களுக்கும் புராணங்களுக்கும் தலைவியாகி வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பவளே! வெண்ணிற மேனியைப் படைத்த சரஸ்வதியே! உன் திருவடிகளை வணங்குகிறேன்.

சுரேந்திரன் - சுரர் + இந்திரன்; சுரர் - தேவர்; இந்திரன் - தலைவன். வந்திதன் - புகழப்படுபவன், வணங்கப்படுபவன். அரி - பகைவர். சதி - அழிவு வல்லபன் - வல்லோன்; கெசமுகாசுரன் - மரகதமுனி + விபுதை ஆகியோர் மகன்; யானை முகத்துடன் பிறந்தவன்; மதங்கபுரத்தில் இருந்தவன்; அவன் தேவர்களை துன்புறுத்த, விநாயகர் கொம்பை ஏவிக்கொன்றார்.

பெருச்சாளியாகி விநாயகருக்கு வாகனமானான். விக்கினன் - காலரூபி என்னும் விக்கினனின் வலிமையை அடக்கி விக்கினராசன் என்னும் பெயர் பெற்றவர் விநாயகர். தன்னை வணங்கினோரின் விக்கினங்களைப் போக்குபவர்; விக்கினம் - தீமை, இடையூறு, குறைபாடு. சிந்துரம் - சிந்தூரம் - சிகப்பு, யானை. வதனம் - முகம். மூஷிகம் - பெருச்சாளி, மூஞ்சூறு. வாஹனம் - வாகனம், ஊர்தி. கெசம் - யானை. வல்லப நாயகன் - வலிமைபெற்ற தலைவன்; வல்லபை நாயகன் என்றிருப்பது சிறப்பு; வல்லபை - விநாயகரின் சக்திகளுள் ஒருத்தி. பரமகுருபரன் - முதற்கடவுள்; பரமன் - முதன்மையானவன்; பரன் - கடவுள்; பரமகுரு - ஆசாரியருக்கு ஆசாரியர். மவுளி - மௌலி - முடி. மனோகரன் -அழகியவன். புசம் - புயம், தோள். சண்முகன் - ஆறுமுகன். திரிபுரம் - முப்புரம்; தாரகாசுரன் மக்களாகிய கமலாட்சன், தாரகாட்சன், வித்தியுன்மாலி ஆகிய மூவருக்கும் உரிய இரும்பு, வெள்ளி, பொன் ஆகிய உலோகங்களாலான கோட்டைகளையுடைய ஜங்கமபுரம். விலோசனன் - பார்வையுள்ளவன். கிரிமகள் - மலைமகளாகிய உமாதேவி. சகிதன் -சேர்ந்திருப்பவன். சேகரம் - தலையில் அணிதல். அனந்த சயனன் - திருமால். அனந்தன் - அட்டநாகங்களுள் ஒன்று. அவை - அனந்தன், கார்க்கோடகன், குளிகன், சங்கபாலன், தக்கன், பதுமன், மகாபதுமன், வாசுகி என்பன.

நந்தபாலன் - கிருட்டினன்; நந்தர் - யாதவர். மர்த்தனம் - அழிவு, கடைதல். பாணாசுரன்- மாபலியின் குமாரன்; சோணிதபுரம் என்னும் நகரத்திற்குரியவன்; கம்சனின் நண்பன்; கிருட்டிணனால் கொல்லப்பட்டவன். இமகிரிகுமரி - இமவான் என்னும் பர்வதராசனின் மகள். சடாதரீ - சடாமுடியுடையவன் தேவி. சுரபி - தேவபசு, கபிலை. பாராயணி - முறையாகக் கற்றவள். மதுரம்- இனிமை. கமலாசனி - கமலம் + ஆசனி; கமலம் - தாமரை; ஆசனம் - இருக்கை. தவளம் - வெண்மை. ரூபிணி - வடிவமுடையவள். ரூபம் - வடிவம், உருவம்.

சு.சொல் - 1. மிகுத்தனை 2. ஞானகொழுந்தனை 3. வல்லபர் 4. வினாயகா 5. வாஹனா 6. பரகுருபரா 7. சரணமவுளிணி 8. ஆலில்மேல்த்துயில் 9. சயனென 10. மற்த்தனஞ்செய்த்தீரனே 11. குமிரி 12. வெங்கம.

Saluting Vināyakar and the other Gods in the pantheon

2. The supreme God saluted even by Intira, the lord of the divines,
Capable of destroying the enemies,
The killer of Kacamukācuraṉ, the evil one,
The solace of those who surrender,
The elephant-faced, five - handed one
Whose vehicle is the bandicoot,
The lord of the divine force Vallapai,
The first and foremost primordial energy,
The one with a lofty tuft,
I offer my salutations to thee!
God with six faces and twelve hands

Going by the name Ṣaṇmukaṉ
The handsome, bewitching one,
I pay my obeisance to thee!
Lord Civaṉ, the destroyer of the three mythical cities,
The blessed one casting his benign looks on devotees,
Who holds Umai, the daughter of the mountains on one side
Who wears the cresent moon on His matted locks,
I prostrate at Thy feet!
Almighty reclining on the snake and the banyan leaf,
The darling of the Yātavās,
The destroyer of Vāli and Pāṇācuraṉ,
The saviour of the devout.
Let me worship Thee!
Mother Umai,
The daughter of Imavāṉ, the lord of the mountains,
The loving spouse of Civaṉ who destroyed three cities,
Revered mother
With names like Mayēcvari, Pārvati, Kauri and Cāmpavi,
Also called Caṭātari because of wedlock with Civaṉ,
Who sports the matted hair,
The liberal bestower of boons,
Let me offer my prayers to you!
Known as Caracuvati in the mundane world,
Because of her expertise in interpreting the Vētās and arts,
Also called Vētapārāyaṇi, Kalaimakaḷ and Maturavāṇi,
With Her seat on the holy lotus,
May the fair- skinned one accept my prayers!

(சோழன்கதையைப் புதியவடிவில் கூறுவேன் எனல்) கந்தபத்தியம்

3. மேதினிமேற் சுபமெய்தி நீதியுமுள சோழன்கதை
நூதன மாக ஓதினேன் - [1]ஞானமுறும்
போதமூர்த்தி [2]விநாயக ராதர வாலே.

[3]சிங்காரத் தமிழ்நூலை [4]யணைந்து – .சங்கீதத்தொடு
சோழன்கதை தானது சொல்வேன்
பங்காகி யிருக்குமரன் செங்கோலக்கண்
நாயக ரருளது கொண்டே.

அருளும் அடக்கமும் ஞானமுமாகிய முக்குணங்களைப் படைத்து, இளம் யானையின் வடிவந்தாங்கியவனாகிய விநாயகப் பெருமானின் துணையை ஆதாரமாகக்கொண்டு, பரந்த இந்த நிலவுலகத்தில் எல்லா வகையான நன்மைகளோடு உயர்ந்த நீதி நெறிகளைக் கடைபிடித்து அரசு செலுத்தி வந்தவனாகிய சோழனின் வரலாற்றைப் புதிய நாடகவடிவில் கூறத் தொடங்குகிறேன்.

சிவந்த நிறத்தோடு கூடிய அழகிய கண்களையுடையவனும், எல்லா உயிர்களுக்கும் தலைவனும், உடலின் இடது பாகத்திலே உமையம்மையைத் தாங்கியவனுமாகிய சிவபெருமானின் பேரருளைத் துணையாகக் கொண்டு, பல அணிநலன்களையுடைய தமிழ் நூல்களை ஆய்ந்து, சோழனின் வரலாற்றை இசைப் பாடல் வடிவில் கூறத் தொடங்குகிறேன்.

மேதினி – நிலவுலகம். சுபம் – நன்மை. நூதனம் – புதுமை. ஞானம் – அருள், பொறியடக்கம், ஞானம் என்னும் முக்குணங்களுள் ஒன்று; பேரறிவு போதம் – யானைக் கன்று. மூர்த்தி – உருவம். சிங்காரம் – அணி, அழகு. பங்கு – பாகம்; இடதுபாகம். அரன் – சிவபெருமான். செங்கோலக்கண் – செம்மை + கோலம் + கண் – கோலம் – அழகு.

சு.சொல் – 1. ருனமுரும் 2. வினாயக (எல்லா இடங்களிலும்) 3. சிங்கார தமிழ் 4. யனைந்து

Narrating the tale with novelty

3. With the blessings of Lord Vināyakar
The quintessence of supreme knowledge,
Let me venture to tell the story of the Cōḻa King
Noted for his sense of justice and fairplay,
Adopting a new technique of narration.
I crave the help of Lord Civaṉ
The comely red-eyed one
Who keeps his spouse Umai on the left side
To present this tale,
The fruit of extensive study
And exploration of ancient Tamil works,
To the accompaniment of sweet music.

(யட்சகானமாகச் சொல்லக் கொல்லிநாயகன் அருள் வேண்டுதல்) கலித்துறை

4. பூவுல கெங்கும் [1]புரப்போர் தமிழைப் [1]புரப்பவரும்
யாவரும் நல்ல வமுதா மெனச்சொல்லி யாதரிக்கக்
காவல னாகிய சோழன் கதையஷ்ட கானமெந்தன்
நாவி லிருந்து புகல்வா யருங்கொல்லி நாயகனே.

மேருமலையை வில்லாக ஏந்திய எம்பெருமானே! இந்த நிலவுலகத்தை நீதிநெறி தவறாமல் பாதுகாத்து வருபவரும், தமிழ் மொழியைச் சிறப்படையச் செய்து வருபவருமாகிய சோழமன்னனின் வரலாற்றை மக்கள் அனைவரும் சிறந்த தேவாமுதம் என்று போற்றி வரவேற்கும் அளவில், என் நாவின் மூலமாக யட்சகான வடிவில் நீயே கூறியருள்வாயாக.

புரப்போர் - பாதுகாப்போர். காவலன் - மன்னன். கொல்லி நாயகன் - மேருவை வில்லாக ஏந்திய தலைவன். கொல்லி - வில்.

சு.சொல் - 1. புறப்போர்.

Seeking the aid of Kollināyakan̲

4. Lord wielding mount Mēru as his bow!
In telling the tale of the Cō̱la king
In a manner as pleasing as ambrosia,
Let me be an instrument in Thy hands;
The King who upheld justice in his acts
And a fervent patron of Tamil
Adding richly to its glory.

(திருவலத்து வாரணன் துதி) சம்பை

5. தேரூர்ந்த சோழன்கதை செப்பவே திருவலத்துக்
காரானை முகத்துதிப்பா னென்கணபதி சரணம்
பழிக்குப்பழி கொடுத்துயர்ந்த பரகதியி லடைந்தகதை
மொழிக்குத்திரு வலத்தில்வாழ் முக்கணா சரணம்
சிறப்பாகச் சோழன்கதை செப்பவே நல்லவருக்கு
வரப்பாருந் திருவலத்து வாரணா சரணம்.

மேகத்தையொத்த கரிய யானையின் முகத்தையுடைய திருவலத்துக் கணபதியே! திருவலத்தில் எழுந்தருளியுள்ள முக்கண்ணனே! நல்லவர்கள் வாழுந் திருவலத்து வாரணனே! உன் திருவடிகளை வணங்குகிறேன்.

தேரினைச் செலுத்திப் பழிக்குப் பழியாக உயிரைப் பலிகொடுத்து உயர்ந்த சுவர்க்கத்தையடைந்த சோழ மன்னனின் வரலாற்றைச் சொல்ல எனக்கு அருள்புரிவாயாக.

திருவலம் - ஆசிரியரின் ஊர். காரானை - கார் + ஆனை; கார் - கருமை, மேகம். வாரணம் - யானை.

In praise of Kaṇapati of Tiruvalam

5. Lord Kaṇapati with the visage of an elephant,
The three eyed divine,
The presiding deity of Tiruvalam,
The abode of the devout;
Permit me to salute Thee!
Help me tell the tale in *Yatcakāṉam* style of the Cōḻa king
Who ran the chariot in vindictive spirit,
Destroyed the guilty one
And attained to eternal bliss.

(விநாயகர் துதி) **ஏகதாளம்**

6. இப்படிதனி லெனக்குப் பலனருள் செய்யும்
தொப்பை யப்பர் [1]கமலபதம் பணிவேன்
கீர்த்தி தரயெனைக் காத்தருளே செய்யும்
பூர்த்தி விநாயக மூர்த்தியைப் பணிவேன்
பூதல மேற்சுகி பூதர மாகிய
சோதி சுதர்கண நாதனைப் பணிவேன்.

இந்த நிலவுலகத்தில் எனக்கு எல்லாவகையான நன்மைகளையும் அருளிச் செய்யும் தொப்பையப்பராகிய விநாயகனின் மலர்போன்ற பாதங்களைத் தொழுகின்றேன்.எல்லாவகையிலும் பெரும்புகழ்பெறவும், இப்பூவுலக இன்பங்களை யெல்லாம் அனுபவிக்கவும் அருள்புரிந்துவரும் பூர்த்தி விநாயகனை, பூமியைக் காத்தளிக்கும் சோதிமயமான எம்பெருமானின் திருக்குமாரனாகிய கணபதியைப் பலகாலும் தொழுது துதிக்கின்றேன்.

இப்படி - இந்த நிலவுலகு படி - பூமி தொப்பையப்பர் - தொந்தியையுடைய கணபதி கமலம் - தாமரை மலர் பதம் - திருவடி கீர்த்தி - புகழ். பூர்த்தி விநாயகன் - முழு முதற்கடவுளாகிய விநாயகன். சுகி - சுகபோகங்களுக்குரியவன். பூதரம் - பூமியைத் தாங்குதல். சுதன் - குமாரன்

சு.சொல் - 1 கமலப்பதம்.

In praise of Vināyakar

6. I salute Vināyakar, the pot - bellied God,
The offspring of the Effulgent One
Who always comes to my rescue,
Adds to my fame and glory
And helps me savour creature comforts.

(யட்சகானம் பாட முருகன் அருள்வேண்டுதல்) சம்பை

மதிநாகம் புனலணிந்த வள்ளல்சேய் திருவல்லைப்
பதிவாழு மாறுமுகன் பதம்பணிகு வேனே
வானவர்க ளானைக்குற வள்ளி கணவ
னானவனை வல்லைவே லாயுதனைப் பணிவேன்
[1]அருட்சோழ ராசன்கதை [2]யட்சகா னம்புகல
திருவல்லை வாழ்முருகர் பரிவெனக்குண் டாமே.

தக்கன் சாபத்திற்கு அஞ்சி அடைக்கலம் புகுந்த சந்திரனைத் தலையில் அணிந்தவரும், நாக அரசர்கள் விருப்பத்தை நிறைவேற்றப் பாம்பை ஆபரணமாக அணிந்தவரும், கங்கையின் பெருக்கை அடக்க அதனைத் தலையில் அணிந்தவருமாகிய சிவபெருமானின் திருக்குமாரனாகத் தோன்றித் திருவல்லையம்பதியில் எழுந்தருளியிருப்பவன் முருகபெருமான். அவன் தேவர்களின் தலைவனாகிய இந்திரனின் மகளாகிய தெய்வயானையையும், குறவர் மகளாகிய வள்ளியம்மையையும் தேவியர்களாகக் கொண்டிருப்பவன். பராசக்தியால் அளிக்கப்பட்ட வேலாயுதத்தைத் தாங்கியிருப்பவன். அந்த முருகபெருமான், இந்தச் சோழ மன்னன் கதையை யட்சகான வடிவில் பாட எனக்கு அருள்புரிவானாக வேண்டித் தொழுகிறேன்.

புனல் - நீர்; கங்கை. சேய் - குமாரன். ஆனை - தெய்வானை. பரிவு - அன்பு.

சு.சொல் - 1. அருள்சோழ 2. யக்ஷகானம்.

Seeking the blessings of Murukan̲

7. In the temple of Tiruvallai,
The presiding deity is Lord Murukan̲,
The darling son of Lord Civan̲
Who gave refuge to the moon
Fleeing from the curse of Takkan̲,
Who wore the snake as garland

To appease the King of the Nākās
And who kept the flow of Ganges in abeyance,
By sheltering it on His locks!
Lord Murukaṉ, wearing the spear
Has twin spouses,
Teÿvayāṉai, the daughter of Intiraṉ
And Vaḻḻi, the offspring of the head of the gypsies.
May Murukaṉ inspire me
To tell the tale of the Cōḻa king
In true *Yaṭcakāṉam* style!

(வல்லநாதர் துதி) **திரிபுடை**

8. வாகை சேர்திரு வல்லை மாநகர்
வாச நேரிழை வல்ல நாயகி
மோக னன்வல்ல நாத ரிருபத
[1]முளரி பணிவேன்
மாத்தந் தனிலம ரேத்த விருவரும் 5
பாத்தி தஞ்சிடவனற் கோத்திரை யாகவே
பூத்த வன்திரு வல்லை யீசரைப்
போற்றிப் பணிவேன்
அம்ப லந்தனி லின்ப மாயங்க
ளாம்பு ரிந்தவர் வல்லை தனிற்பல 10
வும்பர் போற்றிய [2]வல்ல நாதர்
பாதம் பணிகுவேன்
சொல்லி லேபொரு ளிருக்கும் போல்நல்ல
துணைசெய் வாரெனக் கதிக மாய்த்திரு
வல்லை [3]வாழ்வல்ல நாத சுவாமியை 15
மகிழ்ந்து பணிவேனே
வாழ்வு தரும்[3]வல்ல நாத சுவாமிதம்
மகிமை யால்ரா சேந்திர னாகிய
சோழன் [4]கதையட்ச கான மாகவே
சொல்லு வேனே. 20

எல்லா வகையான செல்வங்களும் நிறைந்துள்ள திருவல்லை மாநகரில் எழுந்தருளியுள்ள வல்லநாயகியையும், வல்லநாதரையும் வணங்குகிறேன். அமரர் முதலானோர் துதிக்க இருவரும் மலை வடிவமாகத் தோன்றித் திருவல்லையில் எழுந்தருளியிருக்கிறார்கள். தில்லைச் சிற்றம்பலத்திலே திரு நடனமாடிப் பலவகை மாயங்களைப் புரிந்த எம்பெருமான் இத்திருவல்லையிலே வல்லநாதராகத் தேவர்கள் துதிக்க வீற்றிருக்கின்றார். சொற்கள் ஒவ்வொன்றும் பொருள்தந்து நிற்பது போலச் சோழன் கதையை யட்சகான வடிவிலே கூற வல்லநாயகியும் வல்லநாதரும் எனக்கு நல்ல துணையாக நின்று புகழைத் தேடித் தருவார்களாக வேண்டி வணங்குகிறேன்.

வாகை - வெற்றி. நேரிழை-பெண் மோகனன் - கணவன். பதமுளரி - திருவடித்தாமரை; உருவகம். முளரி - தாமரை. கோத்திரை - மலை. பூத்தவன் - தோன்றியவன். அம்பலம் - சிற்சபை. உம்பர் - வானோர்.

சு.சொல் - 1. முளரிப்பணிவேன் 2. வில்வனாதர் 3. வாழ்வில்வ னாதர் சுவாமி 4. கதையக்ஷ.

In praise of Vallanātar

8. Let me salute the presiding deities of the prosperous Tiruvallai city,
Vallanāyaki and Vallanātar
In response to the eulogies of the Gods and others,
The divine couple have assumed the form of a mountain.
The Lord who did the cosmic dance at Tillai and performed miracles,
Goes by the name of Vallanātar
And is constantly praised by the Gods.
Like each word ably supported by meaning,
I seek the active help of the Almighty pair
In rendering the tale of the Cōla king
In true *Yaṭcakāṉam* style.

(வல்லநாயகி துதி) **அடதாளம்**

9. நல்ல நாயகி திருவ லத்தினில்
நலங்கு லாவும் நேரிழை
வல்ல நாயகி பாத தாமரை
வணங்கு வேனே
தரும மேசெய்யுந் தரும [1]தேவதை 5
தரும தாய்த்திரு வல்லைப் பாழி

நேரிழை யம்மை பாத பங்கச
பாதம் பணிவேன்.
பசுமை நாயகி யருளி னாற்றென்
திசையிற் சோழன் கதைதச
வசன மதை[2]யட்ச கான விதமாய்
யிசைகு வேனே.

திருவலத்தில் எழுந்தருளி எல்லா வகையான நன்மைகளையும் செய்தருளுபவளும், மருத நிலத்து ஊராகிய திருவல்லையில் எல்லா வகையான தருமங்களையும் செய்யும் தரும தேவதையாகவும், செல்வங்களின் தலைவியாகவும் விளங்குபவளுமாகிய வல்லநாயகியின் திருவருளால் தென்நாட்டுச் சோழ மன்னனின் கதையை யட்சகான வடிவிலே சொல்ல முன் வருகிறேன்.

குலாவுதல் - அளவளாவுதல்; நிறைந்திருத்தல். பாழி - மருதநிலத்து ஊர். பாதபங்கசம்- திருவடித் தாமரை; பங்கசம் - தாமரை. இசைதல் - சொல்லுதல்; பாடுதல்.

சு.சொல் - 1. தேவதி 2. யக்ஷகான.

In praise of Vallanāyaki

9. With the blessings of Goddess Vallanāyaki,
The presiding deity of Tiruvalam,
The embodiment of righteousness,
Liberal with her gifts and blessings
To the people of Tiruvalam
Classified as *Marutam* land,
I venture to tell the tale of the Cōḻa king,
In true *Yaṭcakāṉam* style.

(திருமால் துதி) ஏகதாளம்

10. குணனே [1]திருவலத் தணனே புரவியு
வணனே [2]நாரா யணனே சரணம்
முந்தாய் மொழிய வரந்தா திருவல்லை
நந்தா ழிகர்கோ விந்தா சரணம்
சிவகதை ராசேந் திரன்கதை தனையொரு
நவவிதஞ் சொலமா தவனவ னருள்வானே.

திருவலத்தில் எழுந்தருளியுள்ள அண்ணலே! பிறப்பின்மை, இறப்பின்மை முதலாகிய உயர்ந்த குணங்களையுடையவனாய்க் கருடனை வாகனமாகப் பெற்றுள்ள நாராயணனே! கோவிந்தனே! மாதவனே! சிவனது அருளைப் பெற்ற சோழ மன்னனின் வரலாற்றைத் தாய் மொழியாகிய தமிழில், புதிய வடிவத்தில் எடுத்துக் கூற உனது திருவருள் என்றும் துணையாக இருக்க வேண்டி உனது திருவடிகளில் வணங்குகின்றேன்.

குணன் - குணத்தையுடையவன். புரவியுவணன் - கருடனை வாகனமாகப் பெற்றவன்; உவணன் - கருடன். புரவி - குதிரை, ஊர்தி. நாராயணன் - திருமால்; நாரம் - தண்ணீர்; அயனம்- இடம்; நீரை இருப்பிடமாகக் கொண்ட திருமால். நவவிதம் - புதியவகை ; நவம் - புதுமை. மாதவன் - திருமால்.

சு.சொல் - 1. திருவல்லத் 2. நாறாயணனே.

In praise of Tirumāl

10. Immortal one,
Riding the divine kite,
Revered Nārāyaṇa, Kōvinta, Mātava!
I seek Thine help in telling in tale of the Cōḻa king,
Blessed by Lord Civaṉ,
In the Tamil language
Adopting a new literary form.

(ஏகவல்லி வணக்கம்) **சம்பை**

11. சும்மைமக்க ளெல்லாம்புகழ வெம்மைசேதி திருவல்லை
[1]தம்மதென்னு மேகவல்லி யம்மைபதம் பணிவேன்
கங்கையணை யிருந்துகரி காலனழைத் திடவந்து
தங்கிடுவல்லை யேகவல்லி யம்மையருளெனக் கிதமாமே.

கரிகாலன் என்னும் சோழ மன்னன் வடநாட்டுப் போர்முடித்து வெற்றியுடன் திரும்பியபோது, கங்காதீரத்தி லெழுந்தருளியிருந்த தேவியைத் தன் திருவுளத்துத் தாங்கி வந்து திருவல்லையாகிய இத்திருத்தலத்திலே எழுந்தருளச் செய்தான். அன்று முதலே இந்தத் திருத்தலத்தில் தங்கி இந்த நாட்டு மக்களெல்லாம் போற்றிப் புகழ, இந்த வல்லைத் திருத்தலம் தமக்கே உரியதாகும் என்னும் ஆசை மிகுந்தவளாய் **'ஏகவல்லி'** என்னும் திருப்பெயரோடு வீற்றிருக்கின்றாள். அவள் அருள் என்றும் எனக்கு இன்பத்தை அளித்து வருவதால் அந்த அம்மையின் திருவடிகளை வணங்கித் துதிக்கிறேன்.

சும்மை - ஊர், நாடு, நகரம். வெம்மை - ஆசைக்குரிய. தம்மது - தமக்கே உரியது. ஏகவல்லி - தான் ஒருத்தியே உரிமைக்குரியவள். கரிகாலன் - திருமாவளவன் என்னும்

இயற்பெயருடைய சோழமன்னன்; பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை ஆகியவற்றின் பாட்டுடைத் தலைவன். இதம் - இனிமை, நன்மை.

சு.சொல் - 1. தம்முதென்று.

Paying obeisance to Ēkavalli

11. Let me offer my obeisance to the Goddess
Whose original home was on the banks of the Ganges,
Consecrated here by the devout king Karikālaṉ
And going by the name Ēkavalli,
Much revered and adored by the populace.

(கலைமகள் வணக்கம்) சிந்து

12. நம்பினே னுன்பதமே - சரஸ்வதி
நம்பினே னுன்பதமே
நம்பினே னுன்பத [1] நாலுமுக ராசரோ டன்போடுவாழ்
கலியாணி - கலைவாணி - யுனைப்பேணி
(நம்பினே)

வேத புராணம் வினோதம் பலப்பல 5
பாத மறுபத்து நாலு கலைக்கியாளஞ்
சோதி சந்தத்துத் தோற்றமுண் டாகிப்பின்
போத வெண்டா மரையை......[2]நாவில் - குடிமேவில்
(நம்பினே)

பொன்னுல கோரும் புவியிலுள் ளோர்களும்
பன்னா வரும்வேத பாரக ருங்கல்வி 10
தன்னை யுணர்ந்தகன்ற செல்வ மாகின
ருன்னரு ளேநெஞ்சி லோட
உண்மை தேட - கதைபாட
(நம்பினே)

ஞாலமெல் லாம்புகழ் ராசேந்திர சோழன்வி
சாலம தாய்த்தன்ம சத்தியந் தப்பாமல் 15
பாலம நாண்டு பதம்பெற்ற நற்கதை
கோலம தாயிசை கூறக் - குறைமாற -[3]நிறைவேற

நம்பினே னுன்பதமே [4]சரஸ்வதி
நம்பினே னுன்பதமே.

'நான்முகன்' என்னும் படைப்புத் தலைவராகிய பிரமாவோடு அன்புடன் இருந்துவரும் கலைவாணியே! மங்கள குணமுடைய கலியாணியே! உன் திருவடிகளை விரும்பிப் போற்றி வணங்குகிறேன்.

உலகத்து அறநெறிகளை எடுத்துக் கூறும் வேத நூல்கள், பழைய வரலாறுகளை உணர்த்தும் புராண நூல்கள், பலவகைப் புதுமைச் செய்திகளின் அடிப்படைகள், அறுபத்து நான்கு வகைக் கலைஞானங்கள், புகழ்மிக்க கவிவண்ணங்கள் ஆகியவற்றைத் தோற்றுவித்து வெண்டாமரை மலரில் எழுந்தருளியிருக்கும் நீ என் நாவில் இருந்து அருள் புரிவாய் என்று விரும்பிப் போற்றுகிறேன்.

உன் திருவருளை உள்ளத்தில்கொண்ட தேவர்களும் மக்களும் முனிவர்களும் வேதங்களை உணர்ந்தவர்களும் கல்விச் செல்வத்திற் கரைகண்டவர்களாயினர். அவர்களைப்போல நானும் உலக உண்மைகளைத் தேடிக் காணவும் இந்தக் கதையைப் பாடவும் உன் அருளை விரும்பி வணங்குகிறேன்.

இராசேந்திரன் என்னும் சோழமன்னனோ நாட்டுமக்கள் அனைவராலும் புகழப்படுகிறான். அவன் மிகப்பரந்த உள்ளமுடையவன் ; தருமச் செயல்களையே செய்து புகழ்பெற்றவன்; ஆணைகளை மீறாது நீதி செலுத்தி, இந்த நிலவுலகத்தை ஆண்டு வந்தவன்; இத்தகு உயர்ந்த செயல்களால் பெரும்பேறு பெற்று விண்ணுலகடைந்தவன். அவனது சிறந்த வரலாற்றை அழகுபட, இசைப்பாடல் வடிவில் எடுத்துக் கூறவும், இப்பணியில் குற்றங்குறைகள் ஏற்படாமல் பணி முழுமை பெறவும் உன் திருவடிகளை விரும்பிப் பணிகின்றேன்.

நாலுமுகராசன் - நான்முகன், பிரமதேவன். பேணி - விரும்பி. கலைவாணி - கலைமகள், சரஸ்வதி. வேதம் - 64 கலைஞானங்களுள் ஒன்று. புராணம் - பழைய வரலாறு. வினோதம் - புதுமை. பாதம் - அடிப்படை. சோதி - பெரும்புகழ். சந்தம் - இசை. போதம் - வாழிடம். பொன்னுலகு - தேவலோகம். புவி - பூமி. பன்னவர் - முனிவர்; பன்னசாலையில் வாழ்வோர்; பன்னசாலை - புல்வீடு. பாரகர் - கரைகண்டவர். தன்மசத்தியம் - தன்மம் - தருமம் ; அறச்செயல். சத்தியம் - ஆணை; கட்டளை; உறுதிமொழி, பாலம் - பூமி. பதம் பெறுதல் - இறையடியடைதல்; சுவர்க்கம் புகுதல். கோலம் - அழகு. இசைகூறல் - பாட்டுவடிவில் உருவாக்குதல். நிறைவேற - முழுமை பெற.

சு. சொல் - 1. நாலுமுகுறாசரோ 2. நாவில்க்குடி 3. நிலைபெற 4. ஸரஸ்பதி.

Saluting Kalaimakaḷ

12. I salute Thee Kalaivāṇi, the loving spouse of Piramaṉ,
The embodiment of auspiciousness.

Goddess seated on the lotus
Who has created the Vētās and Purāṇās
The sixty four fine arts and poems galore,
Perennial source of new knowledge,
Linger on my tongue and inspire my utterances.
The Gods, saints, scholars and common men
Whose thoughts rested eternally on Thee
Achieved extraordinary erudition.
May I also seek your blessings
To gain worldly wisdom
And to tell this tale with adeptness.
I prostrate at Thy feet
And seek Thy blessings
To tell the story of king Rācēntiraṉ
Without any literary blemishes;
King Rācēntiraṉ, beloved of the masses,
Liberal minded and author of noble deeds
Who attained to bliss
After a fruitful reign marked by fairplay.

வசனம் – இப்படி மனமிசைந் தற்புதமாக ஒப்பில்லா மணியா ஓங்கியே புவியில் விளங்குங் கொல்லி [1]விநாயகன் முதலாய்க் கணக்கிலாத தெய்வங்களை யெல்லாம் பணிந்து நீணிலந்தன்னில் நிறைந்திடுங் கல்வி வாணரை [2] யேதென வாழ்த்துவே னெனில். (1)

சு.சொல் – 1. வினாயகன் 2. யெதன.

Prose : Thus after paying obeisance to supreme and marvellous deities like Kolliṉāyakaṉ, let me attempt to praise learned men.

(புலவர்களைப் போற்றுதல்) **திரிபுடை**

13. தேசமெங் கும்பிர காச மாம்படி
 காசினி யோரைப் போலவே கல்வி
யீச ரானவர் தமையெல் லாந்தினம் – பூசைபுரி வேனே
[1]நான்மொ ழிந்திடுங் கதையைப் புலவோர்
 நகைத்தி ழிப்புரை சொல்லாரென் றேயவர் 5
தான்மொ ழிந்திடும் மொழிசொல் வேனவர் – சலிகையாலே

ஞானந் தனையுண்டு நாளை வெறுப்பவ
ரரித லோவது போலவே முன்பு
சொன்ன கதைதமிழ்த் துரைகள் வலுவால் - சொல்லுவேனே

அம்பு ராசிமுன் னெரிபோ லக்கை 10
லாச மலைமுன்னி லடுக்கல் போலவுங்
கும்ப முனிநிகர் புலவர்முனையான் - கூறுங்கதை

என்று புலவருக் [2]குபசரணை மொழிந்திது
நற்கதை சொல்லில் [3]மோட்ச மானதில்
நன்றலாமெனக் கூறுவேன் தொண்டை - [4]நாடுதனிலே 15

நாரி தெய்வத்துக் கேத்து [5]லாவல்ல
நாதர் வாழ்திரு [6]வல்லை மாநகர்
வீரசைவக் குலாதி மகத்தையன் - விளம்புகின்றான்.

தொண்டை நாட்டைச் சேர்ந்ததும் **'வல்லநாதேசுவரர்'** என்னும் எம்பெருமான் வல்லாம்பிகை சமேதராகக் கோயிற்கொண்டருளியுள்ளதுமான **'திருவல்லை'** மாநகர் என்னும் திருத்தலத்தில் வாழ்ந்துவரும் வீரசைவக்குல ஆதிமகத்தையனாகிய அடியேன் நாட்டு மக்களெல்லாரும் போற்றிப் புகழும் சான்றோர்களைப் போலக் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கும் புலவர் பெருமக்களைப் போற்றி வணங்குகிறேன்.

புலவர் பெருமக்களின் செல்வாக்கைத் துணையாகக் கொண்டு அச்சான்றவர் நடையிலே இக்கதைப் பாடலைப் பாடுகிறேன். அவர்கள் நான் கூறும் இக்கதைப் பாடலைக் கண்டு எள்ளி நகையாடுவதோ, இகழ்ந்து பேசுவதோ செய்யமாட்டார்கள் இக்கதை முன்பே பலராலும் சொல்லப்பட்ட கதையே ஆயினும், மேன்மக்கள் கல்வியைக் கற்றுத் தெளிந்து, பிறகு அதை வெறுத்துப் பேசுவது என்பது நடைபெறக் கூடாத செயலாகும். அது போலவே எண்ணித் தமிழ்ப் புலவர்களின் துணையால் இக்கதைப் பாடலைக் கூறத் தொடங்குகிறேன்.

கடலின் முன்தோன்றும் தீயைப் போலவும், திருக்கயிலாயமாகிய மலையின் முன் நிற்கும் சிறிய குன்றைப் போலவும் அகத்திய முனிவருக்கு நிகரான பெரும்புலவர்களின் முன்னால் அடியேன் இக்கதையைத் துணிந்து கூறுகிறேன். இது சிவபெருமானின் அருள்பெற்ற சோழ மன்னனைப் பற்றிய கதையாதலால், இக்கதையைச் சொல்லுவதாலும் கேட்பதாலும் மோட்சமடையும் பெரும்பயன் கிடைக்கும் என்ற செய்தியைப் புலவர் பெருமக்களுக்கு உபசாரவார்த்தையாகச் சொல்லி இக்கதையைக் கூறத் தொடங்குகிறேன்.

காசினி - பூமி. இழிப்புரை - இகழ்ந்து பேசுதல் சலிகை - செல்வாக்கு (துணை) அரிதலோ - அரிது அல்லோ - அருமையல்லவா? வலு - பலம், பற்று. அம்புராசி - கடல முன்னில் - முன்னால், எதிரில், அடுக்கல் - சிறுமலை. கும்பமுனி - அகத்தியமுனிவர். முனை - எதிரில். உபசரணை - உபசாரம், வழிபாடு. மோட்சம் - முக்தி, மேலுலகு. நாரி - பெண்.

சு.சொல் - 1. நாணமொழி 2. குபசரனை 3. மோக்ஷ 4. நாடுதனிலெ 5. லாவில்வ 6. வில்லை.

In Praise of poets

13. Permit me, a ViraCaiva by birth
Hailing from the hallowed place called Tiruvallai.
Sanctified by the presence of Vallanātēcuvarar and his spouse Vallāmpikai,
To pay encomium to the learned poets,
Held in great respect by the populace.
Seeking inspiration from the great poets,
I venture to sing the tale in their idioms
Fondly hoping they would not hoot or blame my work
Though the theme is a stale one.
Like a tiny flame before the ocean,
Like an ant-hill before Mount Kailas,
I stand dwarfed before the great poets
Who are as mighty as Akasttiyar
Since the tale is about a Cōḻa king
Blessed by Almighty Civan̲,
Those who tell it or listen to it
Are sure to be beatified.
With this preface, let me begin the narration

வசனம் - இவ்விதம் தெய்வ வணக்கம், புலவோர்கள் அவையடக்கமுங் கொண்டாடி முன்னாளிலே திருவாரூரிலே ராசேந்திர சோழன் குமாரன் தேரூர்ந்து சிவன் பிரசன்னமான கதைக்கு ஆதிக்கிரமம் எப்படியோவெனில் (2)

Prose : Let this be the prologue to the tale of the son of Rācēntira Cōḻan̲ on whom the chariot was driven in the hallowed place Tiruvārūr, where the men were holy and the poets modest.

(திருவாரூர் சிறப்பு) ஏகதாளம்

14. முக்கண் விநாயக மூர்த்தி தயாநிதி
திக்கதிக மான திருவா ரூரே
மூவருந் தொழுமுதல் மூர்த்தி கயிலைமலைத்
தேவ னவதரித்த திருவா ரூரே

புற்றிட மான புராந்தக னதிகிருபைச் 5
[1]சித்தந் தரித்திருக்குந் திருவா ரூரே
பாரினிலே யன்பர் பாவகர் மாதியைச்
சீரண மாக்கிய திருவா ரூரே
தேவபதி ராசேந் திரசோழ னுக்குமுன்
சிவகதி யருளிய திருவா ரூரே 10
[2]செம்மையா யரசேநல்ல சதுர்வேதத்தி னால்பல
தெய்வமுங் குடிகொண்ட திருவா ரூரே
கல்வியுண் டாய்சிவ களைகளுண் டாய்வெகு
செல்வமுண் டாகிய திருவா ரூரே
ஆனைகுதிரை சிவிகை கன்னித் தேரொடு 15
சேனை யதிகமுள்ள திருவா ரூரே
நரபதி யாகிய ராசேந்திர னென்றுர
திரபதி யாகிய திருவா ரூரே.

முக்கண்களை உடையவனும், அருட் செல்வமாக விளங்குபவனும், முதற்கடவுளாகப் போற்றப்பெறுபவனுமாகிய விநாயகப் பெருமானின் அன்பும் ஆதரவும் அருளும் நிறைந்தது திருவாரூர் என்னும் நகரம். மேலும், அந்நகரம் திருமால், பிரமன், உருத்திரன் முதலான தேவர்களே தொழுகின்ற தலைவனாகிய கயிலைமலை நாதன் எழுந்தருளியிருக்கும் சிறப்புக்குரியது; திரிபுரம் எரித்தவனாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் புற்றுவிளங்குவதும், அவனுடைய அருள் உள்ளம் என்றும் நிலைத்திருப்பதுமாகிய சிறப்பினைப் பெற்றது; இந்நிலவுலகத்திலே அடியவர்களாகிய இறையன்பர்களின் பாவம், கருமம் முதலானவற்றை நீக்கக்கூடிய பெருமை பெற்றது; இந்திரனுக்கு நிகரான இராசேந்திர சோழ மன்னனுக்குப் பரமபதத்தை அருளிய பெருமை பெற்றது; நீதி தவறாத செங்கோல் ஆட்சியையும், நான்கு வேதங்களின் ஒலியையும் நிரந்தரமாகப் பெற்று அதன் பயனாய்ப்பல இறையவரருள் என்றும் நிலைத்திருக்கக்கூடியது; கல்விச் சிறப்பும் சைவசமயச் சிறப்பும் மிகுந்து அவற்றின் பயனாய் உயர்ந்த செல்வம் நிலைத்திருக்கக் கூடியது; சிறப்புமிக்க அரச சின்னமாகிய சிவிகையும் (பல்லக்கு) யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை ஆகிய படைகளும் நிறைந்து விளங்குவது; மக்களின் தலைவனாகிய இராசேந்திரன் என்னும் வலிமைமிக்க மன்னவன் வீற்றிருக்கும் பெருமையைப் பெற்றது.

மூர்த்தி - தலைவன். தயாநிதி - அருட்செல்வன். திக்கு - ஆதரவு. மூவர் - திரிமூர்த்திகள்- பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்னும் மூவர். புத்திடம் - புற்றாகிய இடம்.. புராந்தகன் - புரம் + அந்தகன் - திரிபுரங்களை எரித்து அழித்தவன்.. அதிகிருபை - மிகுந்த அருள். சித்தம் - உள்ளம் அன்பர் - அடியவர். பாவ கர்மாதி - பாவம் + கர்மம் + ஆதி; பாவம் - தீச்செயல்கள்; கர்மம் -

அகங்காரச் செயல்கள் ; ஆதி - முதலியன. சீரணமாக்குதல் - நீக்குதல். தேவபதி - தேவர்தலைவன், இந்திரன். சிவபதி - முக்தி. சதுர் - நான்கு. சிவகளை - சைவச்சிறப்பு, அழகு. சிவிகை - பல்லக்கு. கன்னித்தேர் - என்றும் அழியாத தேர். நரபதி - மக்கட் தலைவன், மன்னன். உரம் - வலிமை. திறம் - உறுதி.

சு.சொல் - 1. சிற்றந் 2. செம்மயாய்.

The glories of Tiruvārūr

14. Hallowed was the city of Tiruvārūr
Abundantly blessed by Lord Vināyakar,
The three eyed one, the primordial force
And the patron of the devout.
The presiding deity was Kayilainātan̲
Worshipped even by Piraman̲, Tirumāl and Ruttiran̲
And elevated to the status of their leader.
Blessed by Lord Civan̲, the destroyer of the three cities,
The new town was so surcharged with divine grace
That the faithful got absolved of their sins
And Karmic deeds done in the past.
It was here that Cōl̲a king Rācēntiran̲
Valorous like Intiran attained salvation.
Marked by a polity clean and just
And eternally echoing the four Vētās,
The city retained for ever the odour of sanctity.
The other glories were a deep thirst for knowledge
And an abiding interest in Caiva lores.
The royal emblem was the palanquin,
The army consisted of an elephant force,
Cavalry, infantry and soldering charioteers.
Above all, the city had as its King
Rācēntiran̲, the strong and valiant!

(திருவாரூர் மக்களும் மன்னனும்) திபதை

15. பின்னையு மத்தலப் பெருமையைச் சொல்வேன்
அன்னைத் திரித்துரை யவன்குலத் தவர்கள்
சந்தி[1] யானமுப் போதினும் நடக்கும்
ராசாக்க ளிடத்துமெஞ் ஞானம துண்டு
திரிகுடி யாருமிச் செகமைந்தர் தாமும் 5
பரமனைப் போற்றியே பலித்துவாழ்ந் திருப்பார்.
மற்றுள சாதி மகதேவர் தம்மை
நித்தமும் துதிசெய்து நிறைவுட னிருப்பார்
யோசனைக்கு யோசனை யொவ்வொரு வீதி
வாசமாய்ப் பலப்பல வகைச்சாதி வாழும் 10
கோயில்மண் டபமதின் கோபுரம் விளங்குஞ்
சாயலி லிந்திரன் தனபதி யெல்லாம்
அளகைப் பதியென்ன லாகுமப் பதியவ்
[2]வளம்பெற் றிடுந்திரு வாரூரி லிருந்தும்
பாராளு மன்னவன் [3]பனிப்பகை யான 15
சூரிய வங்கிஷத் [4]துரைசோழ ராசன்
பேரிரா சேந்திரன் பிற்பல உதாரண
சீரிய கீர்த்தியே சிந்தையி லுகந்தோன்
எக்காலந் தானுஞ் [5]சிவக்கியான வசனம்
பொய்க்கான் மிகுதனம் புத்திர ரூபன் 20
தாமதம் தர்ம கதிஇவை நாலும்
பூமியி லுள்ளநற் போதனர் சொலவும்
[6]தேறுமோர் மானிடன் தெட்டாண்மை தன்னை
யாறுபங் காய்ச்சில வாக்கியோர் பங்கு
தான்உண் பதுவெனச் சாஸ்திர வழியால் 25
தான்சொலக் கேட்டவன் தன்னுட தேசம்
பயிரிடும் குடிக்கஞ்சு பங்குதன் பங்கு
தயவுட னொருபங்கு தானாறி லொன்று
கடமைகொண் டேவட கவுதமி [7]யென்றுங்
குடிகொள் வலப்புறங் குணக்குதென் குடக்கு 30

மிடமெலா மாறிலொன் றிறைவாங்கிக் கொண்டு
குடையொரு குடையாய்ச்செங் கோலது செலுத்திச்
சகல சனத்தையுந் தாய்தந்தை போல
சகல சனத்தையுஞ் சந்ததி போல
வைத்து ரட்சிக்கு மகராசன் தன்ம 35
சத்திய மாய்அரிச் சந்திரனைப் போலப்
புலிக்கொடி விருதுளான் [8]புகழுட னரசு
செலுத்திமன் னவனெங்கிற [9]திசைபடைத் தானே.

மன்னனின் குலத்தைச் சார்ந்தவர்கள் அன்பையே தங்கள் உள்ளமாகக் கொண்டவர்கள்; அதையே மாறி மாறிப் பேசுபவர்கள்; நாள்தோறும் மூன்று வேளையும் செய்யப்படும் நியமநிட்டைகளைத் தவறாது செய்பவர்கள். மன்னனிடத்தும் உண்மையான நல்லறிவு நிலைத்திருக்கும். மன்னனைத் தவிர அந்தணர், வைசியர், வேளாளர் என்னும் குலத்தைச் சார்ந்த மக்கள் அனைவரும் இறைவனைப் போற்றித் துதித்துச் செழிப்புடன் வாழ்ந்தார்கள். பிற மக்களும் இறைவனைத் துதித்து மனநிறைவுடன் பெருமை பெற்று வாழ்ந்து வந்தார்கள். ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு தெருவிலும் வாழ்ந்துவரும் பலவகைத்தொழில் செய்யும் மக்கள் அனைவரும் குறைவின்றி வாழ்ந்து வந்தார்கள்.

இறைவனின் திருக்கோயிலிலுள்ள மண்டபங்களின்மீது உயர்ந்த கோபுரங்கள் விளங்கின. திரு அழகாபுரிப் பட்டினமோ இது என்று இந்திரனும் குபேரனும் வியந்து உரைப்பார்கள். அத்தகு வளம் நிறைந்த திருவாரூரில் இருந்து அரசு புரிந்து வருகின்ற சோழ மன்னவன், பனிக்குப் பகைவனான சூரியவமிசத்திலே தோன்றியவன். அவன் பெயர் இராசேந்திரன்; பெரும் புகழுக்குரிய உள்ளத்தை உடையவன் ; என்றும் தெய்வீக உணர்வு உள்ளவனாய்ச் சிறிதும் பொய் பேசாதவனாய் ஆண்மை நிறைந்து வாழ்ந்து வந்தான். மக்களின் வருமானத்தை ஆறு பங்காகச் செய்து ஒரு பங்கையே தாம் உண்ண வேண்டும் என்பது நீதிநூல் கருத்து. நற்பண்புகளையுடைய சான்றோர் இக்கருத்தை எடுத்துச் சொல்ல அதைக்கேட்டு மன்னவன் தன்னுடைய நாட்டில் பயிரிடும் குடிமக்களுக்கு ஐந்து பங்கும் தனக்கு ஒரு பங்கும் என்ற முறையைக் கையாண்டு ஆறில் ஒரு கடமையே அரசு வரியாக ஏற்று வந்தான். வடக்கே கோதாவரி முதல் கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய திசைகளின் தன் நாட்டுக்குட்பட்ட இடங்களில் ஆறில் ஒரு கடமையே பெற்றுச் செங்கோல் நடத்தி வந்தான். மக்கள் அனைவரையும் தன்னுடைய பெற்றோர் போலவும், உற்றார் உறவினர் போலவும் கருதி அவர்களைப் பாதுகாத்து வந்தான். சத்தியத்தில் அரிச்சந்திரனைப் போல விளங்கிப் புலிக்கொடியையே தனது அரசு சின்னமாகக் கொண்டு புகழுடன் ஆண்டு வந்தான்.

சந்தியானம் - சந்தியாவந்தனை - மூன்று வேளையும் செய்யப்பெறும் நியம நிட்டைகள். திரிகுடி - மூன்று குலத்தவர் - சத்திரியர் தவிர்த்த அந்தணர், வைசியர், வேளாளர் என்னும் முக்குடியினர். செகம் - நிலவுலகம். பலித்தல் - செழித்து வளர்தல். மகதேவர் - மகாதேவர், சிவபெருமான். நித்தம் - நாள்தோறும். நிறைவு - பெருமை, மனநிறைவு. யோசனை - எல்லை அளவு. சாயல் - ஒப்புமை. தனபதி - குபேரன். அளகைப்பதி - அழகாபுரிப்பட்டினம், குபேரனது

நகரம். பார் - பூமி. பனிப்பகை - சூரியன். வங்கிஷம் - வமிசம். கீர்த்தி - புகழ். சிவக்கியானம்- தெய்வீக உணர்வு. வசனம் - பேச்சு. ரூபன் - உருவம் உடையவன். போதனர் - எடுத்துச் சொல்லும் சான்றோர். தெட்டாண்மை - வருமானம். கடமை - குடியிறை (அரசுவரி). கவுதமி - கௌதமி - கோதாவரி. குணக்கு - கிழக்கு. குடக்கு - மேற்கு. சந்ததி - வமிசம். விருது - கொடி.

சு. சொல் - 1. யானமும் 2. வளம்பெத்திடுந் 3. பணிப்பகை 4. துரைச்சோழ 5. சினுக்கியான 6. அதேதுமோர் 7. யென்னுங் 8. புகளுட 9. திசைப்படைத்.

The ruler and the ruled

15. The Kinsmen of the King
Were unduly kind and compassionate
And strictly said their prayers thrice
As enjoined in the scriptures.
Besides the dutiful King
The repository of wisdom and knowledge,
The brahmins, the Vaiciyās and the Vēḷāḷās
Were equally god-fearing and led sane lives.
The others not included in the above group
Also led pious and exemplary lives
With great elan and contentment.
All the segments of society
Had found fulfilment
And basked in the sunshine of joy.
The towers of the temples and other structures
Were so lofty and magnificent
That Intiraṉ and Kupēraṉ were prone to wonder
Whether it was Aḷakāpuri, the celestial dream city.
The ruler Rācēntiraṉ
Hailed from the dynasty of the Sun,
The sworn enemy of snow and mist.
Pious and manly, he set great store by integrity
And was deservedly famous and popular.
On the sage counsel of the wise and elderly,
He apportioned to himself one sixth of the revenue
And depended upon it for his living,

Leaving the rest to the tillers of the soil
In all the regions under his control
Including those abutting Kōtāvari in the North,
He collected only one sixth of the income as tax,
Thus discharging his duties with great sense of justice.
Treating his subjects as parents and kinsmen,
The upright king with the tiger on his flag staff
Assured them of security and protection.

வசனம் - பின்னு மெப்படிக் கொத்தவனெனில். (3)

Prose : To enumerate the other sterling qualities of the King.

(மன்னவன் பண்பு) **சம்பை**

16. வார்த்தைதனிற் பதினெட்டு வார்த்தைதனில் வல்லவன்
கீர்த்தியே பூஷண கிரீடபதி மன்னன்
சொற்பனத்தில் பொய்ச்சொல்லாத் துரைசோழ ராசேந்திரன்
எப்பொழுதுந் திருநீறு ஈடிலாம லணிவோன்
நாமமது தரித்துசிவ நாமமதுந் துதித்துவிஷ்ணு 5
நாமமதும் புகழ்ந்துதிசை நாமமதும் படைத்தோன்
வித்தைதனி லேகல்வி வித்தையு முயித்தியவில்
வித்தையும் நிருத்தமிடும் வித்தையுமுண் டானோன்
பூசைதனி லேரம்ய பூசைசிவ பூசையரி
பூசைகதிர் பூசைகுரு பூசைதினம் புரிவோன் 10
இளமைதனை யெழுதுமை எனவெண்ணி மதமெலா
முளமதி [1]லடக்கவறி வுள்ளகுண சீலன்.

மன்னன் இராசராசன் பதினெட்டு தேசத்தார் பேசும் அங்கம், அருணம் முதலாய பதினெட்டு மொழிகளையும் பேசும் திறன் வாய்ந்தவன். புகழ் ஒன்றையே தனது அணிகலனாகக் கொண்டவன்; முடிதரித்து விளங்கியவன்; கனவிலுங்கூடப்பொய்ச் சொல்லி அறியாதவன்; எக்காலமும் திருநீறு அணிந்து விளங்குபவன்; வைணவரிடும் திருமண்ணாகிய நாமம் அணிவதிலும் தயங்காதவன்; சிவபெருமானின் பெயரை எக்காலமும் சொல்லி வருபவன்; திருமாலின் பெயரை உச்சரிப்பதிலும் சிறிதும் தயங்காதவன்; இத்தகு குணங்களால் நாற்றிசையிலும் பெரும் புகழ் படைத்து வாழ்ந்து வந்தான். கல்வி, போர், வில், நடனம் ஆகிய பலவகையான கலைகளிலும் வல்லவனாகி விளங்கினான்.

சிவபூசை, திருமால் பூசை, சூரியபூசை, குருபூசை ஆகியவற்றை முறையாகச் செய்து உள்ளம் மகிழ்ந்து வந்தான். தனது இளமைப் பருவத்தை எழுதும் மைபோல பாவித்துச் சிறிதும் கர்வமடையாமல் உள்ளத்தை அடக்கி வாழுந்திறமையில் சிறந்த அறிவும் குணமும் உள்ள சான்றோனாக விளங்கி வந்தான்.

வார்த்தை – மொழி. பதினெட்டு வார்த்தை – அங்கம், அருணம், கலிங்கம், கம்போசம், கொங்கணம், கோசலம், கௌசிகம், சிந்து, சீனம், சோனகம், திரவிடம், துளுவம், பப்பரம், மகதம், மராடம், வங்கம் ஆகிய பதினெட்டு நாடுகளிலும் பேசப்படும் பதினெட்டு வகை மொழி பூஷணம்– அணிகலன், ஆபரணம். கிரீடபதி – முடிதரித்த மன்னன். சொற்பனம் – சொப்பனம் – கனவு; அது இரண்டாம் அவத்தை. அவத்தைஐந்து. அவை – சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பன. சாக்கிரம் – விழிப்புநிலை; சொப்பனம் – கனவுநிலை; சுழுத்தி (சுழித்தி) – மயங்கிய தூக்கநிலை; துரியம் – தூயநிலை; துரியாதீதம் – மிகத்தூயநிலை. நாமம் – வைணவர் இடும் திருமண். திசைநாமம் – பெரும்புகழ்; எல்லாத்திசைகளிலும் போற்றப்படும் புகழ். உயித்தியம்– யுத்தம்; போர். வில்வித்தை – விற்போர்க்கலை. நிருத்தம் – நடனக்கலை. இரம்மியம் – உள்ளநிறைவு, மகிழ்ச்சி. அரிபூசை – திருமால் பூசை. கதிர்பூசை – சூரியவணக்கம்.

சு.சொல் – 1. லடக்கவரிவுள்ள.

The Qualities of the King

16. Well versed in eighteen languages,
With fame alone as embellishment,
So scrupulously honest
That even in dreams he would'nt lie
Ever wearing sacred ash on forehead,
Not averse to the Vaiṣṇava symbol either,
Uttering incessantly the name of Civaṉ,
With equal reverence for Tirumāl,
A connoisseur of fine arts and lover of learning,
Expert wielder of the bow,
King Rācēntiraṉ lived famously,
A punctilious performer of worship
To Civaṉ, Tirumāl and preceptor,
He lived a sane life
Viewing youth as transitory,
Delible like ink and so without pride,
The king was a paragon of virtues.

(அமைச்சர் இருவர்) திரிபுடை

17. நீதியுந் தெய்வ நேசமு தன்ம
 நிலையும் வளர்த்திடு சோழ பூபதி
யான வன்சமஸ் தான மந்திரி
 யவர்க ளிருவர்
ஒருவன் பெயர்சகல கலைவல் லவன் 5
 ஒருவன் பெயரோ நீதி பூஷணன்
இருவர் [1]களையுமந் திரிகளாய் வைத்துத்
 தரணி யாண்டான்
இரண்டு மந்திரி [2]களையுமெந் நேரந்தன்
 னண்டையே வைத்துக் கொண்டு மன்னவன் 10
வண்டு ளாதன் மானுக் குரந்தந்த
 விண்டு போலே
ஜனரட்சகன் [3]பக்த சனசம் பாவின
 னனைவர் களுக்கும் நல்லவன் - தன்
மனைவி யேமனை வேறு [4]மின்னாரைத் 15
 தாய்தங்கை நெஞ்ச மமைப்போன்.

முறைமை தவறாத அரசாட்சியும் இறையன்பும் அருள் உள்ளமும் இயற்கையாகவே பெற்று நாட்டில் அப்பண்புகளை வளர்த்துவரும் சோழ மன்னனின் அரசவையில் சகலகலை வல்லவன், நீதிபூஷணன் என்னும் பெயர்களையுடைய அமைச்சர்கள் இருவர் இருந்தனர். திருத்துழாய் மாலையையும் திருமகளாகிய இலக்குமியையும் தன் மார்பகத்திலே தாங்கியிருக்கின்ற திருமாலைப்போலச் சோழமன்னன் அமைச்சர்கள் இருவரையும் எந்நேரமும் தன் அருகிலேயே இருக்கச் செய்தனன்.

மக்களைக் காப்பதில் பெரும் பொறுப்புள்ளவன்; மிகுந்த அன்போடு மக்களால் பெரிதும் போற்றப்பட்டவன்; வேண்டியவர், வேண்டாதவர் என்ற பாகுபாடின்றி எல்லோருக்கும் மிக நல்லவனாக விளங்கியவன்; தன் மனைவியைத் தவிர்த்த பிற மகளிரைத் தன் தாய்போலவும், உடன் பிறந்த சகோதரி போலவும் கருதி வாழ்ந்தான்.

நீதி - அரசமுறைமை. தெய்வநேசம் - இறையன்பு. தன்மம் - தருமம். பூபதி-மன்னவன்; பூ-பூமி, நிலவுலகம். பதி - தலைவன். சமஸ்தானம் - நகரம், அரசவை. தரணி - நிலவுலகம். அண்டை - அருகே. மான் - பெண். உரம் - மார்பு. விண்டு - திருமால். இரட்சகன் - பாதுகாப்போன். சம்பாவினன் - போற்றுதலுக்குரியவன். மின்னார் - மகளிர்.

சு.சொல் - 1. களையுமைந்திரி 2. களையுமென்னேரந் 3. பக்த்தசன 4. மின்னாரெத்தாய்.

The two ministers

17. Just in all his actions,
Devout and kind,
The king had two ministers:
Cakalakalai vallapaṉ and Nitipūṣaṇaṉ
Whom he always kept by his side
Like Tirumāl sporting on his chest
The holy garland and spouse Lakṣmi.
Always engrossed in the welfare of his subjects,
The noble king deservedly popular
Viewed all women save his wife
As mothers and sisters.

வசனம் – இப்படித் தர்மமுந் தானமும் பூசையும் [1]நேசமுங் கல்வியுங் [2]கேள்வியும் அன்பும் குணமும் பெரும் பிரகாசமும் உதார தத்துவ வீரிய பராக்கிரமுஞ் சகல ஐச்வரியமும் படைத்த ராசேந்திர சோழனிடதேவி எப்படிக் [3]கொத்தவளெனில் (4)

சு.சொல் – 1. நேசவுங் 2. கேழ்வியும் 3. கொற்றவ.

Prose: Let us now describe the spouse of this king who was pious, charitable, brave and prosperous.

(அரசமா தேவி) ஏகதாளம்

18. மாதரி லேகலை மாது – மதன்ரதி
மாதுக் கமலபதி மாதெனு மாது
பாதத் தகடதனில் ரத்தின – மணியது
பதித்தது போலே வழித்திய மாது
பார்த்திப ராசகு மாரரதி – ராசேந்திர 5
பார்த்திபன் மனதினுக் கேற்றபொன் மாது
[1]வஞ்சனை யறியா வஞ்சி – [2]யமுர்தகுண
மிஞ்சி யரசனோடு கொஞ்சிய மாது
அறிவினிலே மந்திரி அழகினி லேதிரு
பொறுமையி லேபுவி புண்ணிய மாது. 10

அரசமாதேவியானவள் மகளிர்க்கெல்லாம் கலைமகள் போல விளங்குபவள். இன்பரதியாக விளங்குபவள்; திருமாலின் தேவியாகிய இலக்குமியை நிகர்த்தவள்; தகடு

போன்ற பாதவடிவங்களில் இரத்தின மணிகளைப் பதித்தது போன்ற அழகினை உடையவள், அரசமகளாக விளங்கிய தேவி, இராசேந்திர மன்னனின் உள்ளம் விரும்புகின்ற திருமகளாகவும் விளங்கினாள். உள்ளத்தில் சூது, வாது சிறிதும் இல்லாத தேவியாக விளங்கினாள். தேவாமிர்தத்தையொத்த இனிய குணத்தையுடைய அவள் அரசனோடு கொஞ்சிக்குலாவுவதில் இன்பமாதாகவும், அறிவூட்டுவதில் சிறந்த அமைச்சராகவும், அழகிலே திருமகளாகவும், பொறுமையிலே புவி மகளாகவும் விளங்கினாள்.

கலைமாது - கலைவாணி, சரஸ்வதி. மதனரதி - இன்பமூட்டும் ரதிபோன்றவள். கமலபதி- திருமால். பாதத்தகடு - பாதத்தின் கீழ்ப் பாகமாகிய வடிவம். பார்த்திபன் - மன்னன். வஞ்சனை - மாய உள்ளம். வஞ்சி - பெண். திரு - இலக்குமி. புவிமாது - பூமாதேவி.

சு. **சொல்** 1. வஞ்சினை 2. யமுறந்தகுண.

The Queen

18. She stood out like the Goddess of Learning
In the assembly of women,
As devoted as Lakṣmi to Tirumāl,
Aesthetically sublime like Rati,
Her unmatched beauty
Letting out shine like precious stones
Studded on flat feet,
The sweetheart of king Rācēntiran̲,
Simple to the core
And sans worldly guiles.
Her pleasing manners were nectarlike,
Patience equalling that of Mother Earth,
A good counsellor to the king,
Liberal in connubial felicity.

(அரசி - பட்டமாதேவி) சம்பை

19. புந்திமகிழ் வாகியிந்தப் பூமியோர் சொலியழைக்கப்
பைந்தொடிமின் னார்பெயரும் பட்டமா தேவி
கோலமயி லாள்முருகு மாலைமுடி யாளிரத
பாலினுரை யாள்பெயரும் பட்டமா தேவி
அன்னநடை யாள்பூச்செண் [1]டென்னுமுலை யாள்கிளிகள்
[2]பன்னுமொழி யாள்பெயரும் பட்டமா தேவி.

நாட்டு மக்களெல்லாம் உள்ள மகிழ்ச்சியோடு அரசமாதேவியைப் பட்டமாதேவி என்னும் பெயரால் அழைத்து வந்தனர். தேவி அழகிய மயில்போல விளங்கினாள். புதிய மலர்களாலான மாலையைத் தலையிலே சூடியிருப்பாள்; இனிய பால் போலும் சுவைபடப் பேசுபவள்; அன்னம் போன்று நடப்பவள்; பூச்செண்டு போன்ற நகில்களைப் பெற்றவள்; கிளி மொழிபோலும் சொற்களைப் பேசுபவள் ஆவாள்.

புந்தி - அறிவு, உள்ளம். கோலம் - அழகு. முருகு - அழகு, இளமை, மணம். இரதம் - இனிமை. பன்னுதல் - பேசுதல்.

சு.சொல் - 1. டென்றுமுலையாள் 2. பன்றுமொழியாள்.

The Queen known as Paṭṭamātēvi

19. Called Paṭṭamātēvi by the populace,
She was verily a graceful peacock.
Always wearing fresh flowers on her locks,
Her speech was sweet like milk,
Her lilt as elegant as that of the parrot.
Endowed with breasts like bouquets,
Her gait was swanlike.

(மன்னனுந் தேவியும் மகிழ்ந்திருத்தல்) **திபதை**

20. [1]இத்தனை யுவமையு மெழிலதும் படைத்த
பத்தினி யுற்றமா தேவிதுரை ராசேந்திர
சோழபூ பதிமேல் மிகுத்திடும் பட்டமாதேவி
நினைதனக் கெழில்பேர் [2]நேர்த்தியதா கப்பல
பணிதி தரித்திடும் பட்டமா தேவி 5
குணமும் வணக்கமுங் கொஞ்சிய மொழியும்
யிணறு சொருகிய கூந்தலிட வடிவமதும்
பசுமஞ்சள் வதனமும் பவளச்செவ் வாயும்
குசகிரித் தாமரைக் குமுளமே போலும்
அஞ்சு விரலினுக் கடங்கிய விடையம் 10
பஞ்சினு மெத்தெனும் பாதமும் பொன்னா
பரணமும் பட்டுப் பட்டா வளியும்
இரதியோ ரம்பையோ இனியமே னகையோ
திருமகளோ தேவேந் திரன்மனை யாளோ
பரிவுள பாண்டவர் பங்கில் லாளோ 15

மண்ணுபெண் மைக்குப்பெண் மையலே கொள்ள
எண்ணவே யுலகினி லெவர்களுந் துதிக்க
மையே மறுவன மறுமறு வில்லாள்
வையகம் புகழ்பட்ட மாதேவி யாரும்
சுகுருத ராசேந்திர சோழனு மொன்றி 20
யாக மிரண்டுசீ [3]வாத்த மொன்று
போகபோக் கியத்துடன் பூரித்துக் கொண்டு
மாலுந் திருவும்போல் மதனு மிரதிபோல்
பாலுந்தே னதுபோல் பழமுஞ்சக் கரைபோல்
பூவும் மணமும்போல் பொருந்தியொன் றாகி 25
நாவினி லேதியாக ராயரை நினைத்துத்
தேவருக் [4]கருச்சனை திரிவேளையும் நடத்தி
யாவருக் கும்நன்மை யாயுல கெல்லாம்
அரசு செலுத்தியே யாறிலோர் பங்கு
வரிகொண்டு குடிகள் வாழ்ந்திடச் செய்து 30
. . . . விதப்பெய ரன்பத்
தாறுதே சத்தில் [5]அனேகராச் சியங்கள்
நாடு படைத்த விராசேந்திர சோழன்
பாடும் [6]புலவர்தம் பக்கத்தி லிருக்க
ஆசீர் வதித்துநல் லட்சதை கொடுக்கும் 35
பூசுரற் காதனம் போட்டிரு மென்ன
மறுமண்ட லத்துள மன்னவர் வந்து
திறைகப்பங் கட்டியே சேவித்து நிற்க
பட்டர் புகழ்ந்திடப் பலவாத்தி யங்கள்
கொட்டி [7]முழங்கக் கொலுமண்ட பத்தில் 40
அழகுசிங் காதனத் தின்மிசை யிருந்து
வழகுசக் கரக்குடை யருகே பிடிக்க
மின்னார்வெண் சாமரை வீசமெல் லியர்கள்
பொன்னாலங் கொண்டுமுன் போய்ப்பணி மாற
ஆனைசே னைகளெதி ராய்வந்து காண 45
மானபூ ஷணனரி வாக்கிய ராசேந்திர
சோழகோன் போதனை சொல்லும் பெரியோர்கள்
[8]கேள்வியுஞ் சிவகதைக் [8]கேள்வியுங் கேட்டுக்

கொண்டுல [9]கெங்குந்தன் கோவெனப் [10]பார்த்துக்
கொண்டுபுண் ணியவழி கொண்டெந்த நாளும் 50
தன்மமே நித்தியம் தன்மமே முத்தி
தன்மமே யதிபலந் தன்மமே உறவு
தன்மமே செயமெனத் தானிருந் தனனே.

பலவகை உவமைகளுக்கும் எடுத்துக்காட்டாய், சிறந்த அழகோடு விளங்கிய பட்டமாதேவியானவள் மன்னன் மீது கொண்டுள்ள மிகுந்த அன்பைப் போலவே அழகிய பல அணிகலன்களையும் தரித்திருந்தாள். உயர்ந்த குணமும் பணிவும் இனிய மொழியும் பெற்றிருந்த அவள் மலர்களோடு முடிக்கப்பெற்ற கூந்தலையும், பசுமஞ்சள் நிறத்தோடு கூடிய முகத்தையும், பவளம் போன்று சிவந்த வாயையும், தாமரை மொட்டுக்களைப் போன்ற நகில்களையும் உடையவளாய் உலக அறிவைத்தன் ஐந்து விரலுக்குள் அடக்கி விளங்கினாள். அவளது பாதங்கள் பஞ்சைக் காட்டிலும் மென்மையாய் விளங்கின. தேவகன்னியர்களாகிய இரதி, இரம்பை, மேனகை, திருமகள், இந்திராணி, ஆகியோருள் ஒருத்தியோ என்னுமாறு அவளுடைய அழகும் ஆபரணங்களும் பட்டாடைகளும் விளங்கின. அவள் பாண்டவர் மனைவியாகிய திரௌபதையோ என்று எண்ணுமாறு விளங்கினாள். இந்த நிலவுலகப் பெண்களே அவள் அழகைக்கண்டு மையல் கொள்ளுவார்கள். இவ்வாறு மக்கள் யாவரும் போற்றக்கூடியவளாய் விளங்கிய பட்டமாதேவியார் நற்குணங்களையுடைய இராசேந்திர சோழனுடன் இணைந்து உடல் இரண்டு உயிர் ஒன்று என்று போற்றுமாறு எல்லா வகையான இன்பங்களையும் பெற்று மகிழ்ச்சியோடு வாழ்ந்திருந்தாள். அவர்களுடைய வாழ்க்கை, திருமாலும் திருமகளும் போலவும், மன்மதனும் இரதியும் போலவும், பாலும் தேனும் போலவும், பழமும் சர்க்கரையும் போலவும், பூவும் மணமும் போலவும் இணைந்து பொருந்தி இருந்தது; அவர்கள் இருவரும் இறைவனாகிய தியாகேசரை எக்காலமும் உள்ளத்திலே நினைத்தவர்களாய் மூன்று வேளையும் அருச்சனை முதலிய இறைப்பணிகளை நடத்தி வந்தார்கள், மக்கள் மகிழ அரசு செலுத்தினார்கள், ஆறிலொரு பங்கே இறை வரியாக வாங்கினார்கள், நாட்டின் பலபகுதிகளையும் தங்கள் ஆட்சிக்குட்படுத்தி ஆண்டுவந்தார்கள், பரந்த நாட்டைப் பெற்ற இராசேந்திரனைப் புலவர் பெருமக்கள் புகழ்ந்து பாடி வாழ்த்தினார்கள். அந்தணர்கள் அரிசி முதலான மங்கலப்பொருள்களாகிய அட்சதை அளித்து வாழ்த்தினார்கள். அந்த அந்தணர்களுக்கு ஆசனம் கொடுத்து அமரச் செய்தான். பரந்த பிறநாடுகளிலுள்ள மன்னர்களெல்லாம் வந்து கப்பம் கட்டி வணங்கி நின்றார்கள். பாடுவோர் பாடிப் போற்றினார்கள். மங்கல இசைக்கருவிகள் முழங்க அரசவையில் சிங்காதனத்தின் மீது வீற்றிருந்தான் மன்னவன். அருகில் வெண்கொற்றக்குடைபிடிக்க, மகளிர் வெண்சாமரை வீசினார்கள்; சிலர் மங்கல நீர் கொண்டு ஆரத்தி எடுத்தார்கள். யானை முதலான படைகள் எதிரில் வந்து வணங்கி நின்றன. மானத்தையே அணிகலனாகக் கொண்டு சத்திய வாக்கையே பேசும் மன்னன், சான்றோர்களின் அறவுரை, சிவகதை முதலான பலவகைக் கேள்வியறிவில் ஊறியவனாகி, உலக முழுவதற்குமுரிய அரசநெறிமுறைகளை மேற்கொண்டு, புண்ணியச் செயல்களாகிய நற்செயல்களையே மேற்கொண்டு அரசு செலுத்தினான். தருமமே நிலையானது; முத்தி

தருவது; மிகுந்த வலிமை தருவது; உயர்ந்த சுற்றமாக இருப்பது; வெற்றியைத் தேடித்தருவது என்னும் கருத்துகளை உள்ளத்திற் பதித்து ஆட்சிபுரிந்து வந்தான்.

எழில் - அழகு. நேர்த்தி - சிறப்பு. பணிதி - பணதி - அணிகலன்கள், இணறு - மலர். வதனம் - முகம். குசகிரி - நகில்கள். விடையம் - செய்தி. பட்டாவளி - பட்டு + ஆவளி; ஒழுங்கு. பங்கில்லாள் - பங்கு + இல்லாள்; இல்லாள் - மனைவி. மை - கண்ணுக்குத் தீட்டும் மை. மறுவன - குற்றமுடையன. மறு - வேறு. மறு - குற்றம். சுகுருத - சுகிர்த - நற்குணமுடைய. ஆகம் - உடல். சீவாத்தம் - சீவன் + ஆத்தம்; சீவன் - உயிர் உள்ளது; ஆத்தம் - ஆத்துமம் - உயிர் போகம் - இன்பம். போக்கியம் - செல்வம். பூரித்தல் - மகிழ்தல். திரிவேளை - மூன்றுகாலம். அட்சதை - மங்கல அரிசி. பூசுரர் - அந்தணர்; பூ-பூமி; சுரர் - தேவர். ஆதனம் - ஆசனம், இருக்கை மண்டலம் - நாடு. திறை - அரசிறை, கப்பம். பட்டர் - பாடுவோர். சக்கரக்குடை - வெண்கொற்றக்குடை; அரசச் சின்னங்களுள் ஒன்று குடை. ஆலம் - மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்த மங்கலநீர், பூஷணன் - அணிந்தவன் அரிவாக்கியம் - உண்மைச்சொற்கள். கோ - அரசன். நித்தியம் - நிலையானது.

சு.சொல் - 1. யித்தனை 2. நேத்திய 3. வாற்ற 4 கர்ச்சனை 5. அனேகராச்யாயகள் 6. புலவர்தன் 7. முழக்கக் 8. கேழ்வியு 9. கெங்குந்தன் 10 பாத்து.

The King and the Queen enjoying conjugal felicity

20. The Queen symbolising poetic similes
On beauty and grace,
The beloved of the king,
Had many admirable traits.
The very embodiment of sweetness and light,
She always wore flowers in her locks.
Her face had the freshness of turmeric,
Her lips were coral red
And breasts resembled lotus buds.
She concealed within her five fingers
The mass of worldly wisdom.
Gifted with tender feet like cotton
And clothed in costly silk,
She easily passed for a celestial woman:
Rati, Rampai, Mēṉakai or Intirāṇi.
Sometimes one was deluded to believe
That she was Tiraupati, the wife of the Pāṇṭavās.
Her beauty was so tempting

That it drew earthly women towards her.
The ideal couple Rācēntiraṉ and his Queen
Invited comparisons with
Tirumāl and Tirumakaḷ,
Cupid and Rati,
Milk and honey,
Fruits and sugar
Flower and fragrance.
Ever thinking of Tiyākēcar,
They seldom failed to pray thrice.
Prudent and fair in their acts,
They collected only one sixth of the proceeds as tax.
Their meritorious deeds
Made poets praise them
And brahmins accorded dignified seats
Liberally bless them with sanctified rice.
The vassal kings in all obedience
Paid their taxes punctually,
While those inclined to sing
Sang eulogising the couple.
While the king sat on his mighty throne
And musicians played on instruments,
The royal umbrella remained unfurled
And maids of honour fanned him.
With holy water formal worship was done,
When elephants from the royal army
Lined-up in respectful submission.
The King's reign, a by-word for righteousness
Had deep roots in ancient lore like tales of Civaṉ,
And in the wisdom of the elderly.
That righteousness and good deeds
Alone would contribute to worldly success and deliverance
Were his watchwords.

வசனம் - பின்னையும் எவ்விதம் மன்னவ னுலகுபரிபாலனஞ் செய்து பாலித்திருந்தனன், (5)

Prose : More details on polity.

(மக்கள் மகிழ்ச்சி) திரிபுடை

21. [1]மாநி லந்தனிற் குடியெல் லாரையும்
வருஷத் தொருநா ளழைத்து விருந்திட்டு
மான மாம்வெகு மானஞ்செய் தென்ன
வார்த்தை புகல்வான்
அடிக்குங் [2]காற்றுக்கு மெரிக்கும் வெயிலுக்கு 5
மதிக மாரிக்கு [3]மதிர்ந்து விழுமந்த
யிடிக்கும் பயமதல் லாமல் மற்றொரு
சங்கையில்லை யுங்களுக்கு
யிங்கு நீங்களெல் லாருஞ் சுகத்துட
னிருக்கில் நாம்சுகித் திருக்கி றோமெனத் 10
தங்க முடிமன்னன் குடிக்கெல் லாமிகத்
தண்மை யுரைத்தான்.
அரசன் புகழ்வதுங் குடிகள் மகிழ்ந்திறை
யவனைப் பணிவது மாதி யுகத்தினு
பெரிய தாமென வுரைக்கும் படிவெகு 15
பேர்பெற் றிருந்தான்
மனது குறையுள்ள பேர்க ளுண்டென்று
வாயி னாற்சொல்லக் காண வரியது
தினமுங் களிப்புட னிருப்ப தேயந்தத்
தேச மெல்லாம். 20

தங்கமுடி தரித்த சோழமன்னன் நாட்டு மக்கள் அனைவரையும் ஆண்டுக்கு ஒருநாள் அரண்மனைக்கு வரவழைப்பான். அனைவருக்கும் சிறப்பான விருந்தளித்து அவரவர்கள் தகுதிக்கு ஏற்ப மரியாதை செய்து அன்பளிப்புகள் பலவற்றைக் கொடுத்து உபசரிப்பான். பிறகு மக்களை நோக்கித் தன்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுவான். பெருமக்களே! மிகப்பலமாக வீசும் காற்று, எரிக்கும் வெயில், சோவென்று கொட்டும் மழை, பெருஞ் சத்தத்தோடு விழும் இடி ஆகியவற்றுக்கே நீங்கள் பயப்படவேண்டும். இந்த நாட்டில் அவற்றைத் தவிர வேறு எதற்கும் அஞ்சவேண்டாம். நீங்கள் நலத்தோடும் மகிழ்ச்சியோடும் இன்பத்தோடும் வாழ்வீர்களேயானால் அதுவே

எனக்குப் பேரின்பம் தருவதாகும் என்று அன்போடு கூறுவான். மன்னனின் புகழுரையைக் கேட்ட மக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைவார்கள். மன்னனைப் போற்றி வணங்குவார்கள். இவ்வாறே ஆண்டுதோறும் விருந்து நிகழ்த்தி மக்களால் பெரிதும் போற்றப்பட்டவனாக அரசு செலுத்தி வந்தான். அனைவரும் எக்காலமும் மிகுந்த மகிழ்ச்சியோடு இருப்பதைத் தவிர உள்ளத்தில் சிறிது குறைபட்டுக் கொண்டார்கள் என்று சொல்ல முடியாதபடி ஆட்சி அமைந்திருந்தது.

மாநிலம் - பரந்தபூமி, ஆட்சிக்குட்பட்ட நாடு. மானம் - பெருமை, மரியாதை. வெகுமானம் - அன்பளிப்பு. சங்கை - அச்சம், பயம். தண்மை - இனிமை.

சு.சொல் - 1. மானிலந் 2. காத்துக்கு 3. மதிந்து

The happiness of the populace

21. The King wearing the golden crown
Invited his subjects to the palace
Once in a year to fete them.
Besides entertaining them with rich food,
He also gave them suitable gifts.
Addressing them he would say
That they need not harbour any fear
Save for the fierce wind, the scorching sun
Heavy rain and peals of thunder.
If the people lived with contentment,
He was sure to find fulfilment.
The king's words always gladdened the people
Who hastened to thank him.
Thus meeting his subjects annually
The king ruled firmly
Winning in the process high praise
From a fully satisfied populace.

(அரண்மனைமுன் ஆராய்ச்சிமணி) ஏகதாளம்

22. தேசம் புரக்குமகா ராசன் மனசிலா
லோசனை செய்திந்த காசினி தனிலே

மனக்குறை யுள்ளவர் சொல்லிக்கொள் ளவேநம்மிட
சமுக்கமெட் டாதென மனைக்குமுன் னாக
தூணிரண் டூணித் துலாங்கொடுத் ததுமக்கள் 5
பாணிதனக் கெட்டவே பதித்தனன் மணியை
காட்சியிற் கண்முன் காணவே பெரிய
ராக்ஷிமணி யதன்ன யமைத்தன னரசன்
குற்றங் குறையுள ரசைத்திட வேயந்த
சத்தம் வினவிவி சாரித்திடு வோமென 10
ஆட்டிய னிம்மொழி யறியவுலக மெங்குந்
தோட்டியி னால்முறை [1]சாற்றுவித் தனனே.

நாட்டு மக்கள் அனைவரும் தங்கள் மனக்குறைகளை மன்னனிடத்திலே நேரில் எடுத்துச் சொல்ல அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதை ஆழ்ந்து சிந்தித்த நமது அரசர், அரண்மனையின் முன் இரண்டு தூண்களை நட்டுக் குறுக்கே துலாக்கோல் ஒன்றினை அமைத்து மக்கள் கைகளுக்கு எட்டுமாறு ஆராய்ச்சி மணியொன்றினை அமைத்திருக்கிறார். எல்லோர் கண்ணுக்கும் நன்றாகத் தெரியுமாறு மிகப்பெரிய மணியாக அதனை அமைத்திருக்கிறார். தங்கள் குறைகளை மன்னனிடம் முறையிட விரும்பும் குடிமக்கள் யாராயிருந்தாலும் அந்த மணியை அசைத்து ஓசை உண்டாக்கலாம். அதைக்கேட்ட உடனே மன்னன் அவர்களை அழைத்து விசாரித்து வேண்டிய நீதி வழங்குவார். இது அரசன் ஆணை என்று பறை சாற்றுவோன் மூலம் அறிவிக்கச் செய்தான் அவைத்தலைவன்.

புரக்கும் - பாதுகாக்கும். காசினி - பூமி, நாடு. சமுக்கம் - சமூகம், முன்னிலை மனை- அரண்மனை. ஊணி - நட்டு. துலாம் - குறுக்குகட்டை பாணி - கை. ராட்சிமணி - இராட்சதமணி, மிகப்பெரிய மணி. ஆட்டியன் - ஆட்டுவோன், தலைவன். தோட்டி - பறை அறைவிப்போன் சாற்றுவித்தல் - பறையறையச்செய்தல்.

சு.சொல் - 1. சாட்டிவித்

The Bell of Justice

22. Feeling that his subjects with grievances
Should have direct access to his presence,
The king erected two massive columns
With an impressive cross beam
And suspended from it a big bell
Visible to all and sundry.
Whoever wanted to represent a vexation,
Was free to shake the bell and ring it.

In a jiffy the person would be summoned
And the king would mete out justice.
The installation of the bell was made public
Through a tom - tom by the headman.

(நாட்டில் நீதிமுறை) **திபதை**

23. இப்படி யாக விராசேந்திர சோழன்
நட்புட னேயிந்த ராச்சிய பாரம்
பறித்தன பூவும் பரிமளம் போல
விருத்தியா யெவர்களும் வீறியே வாழக்
குறைவிலா திருக்கின்ற கொற்றவன் தன்னை 5
மறைவினி லென்னசொல் வழங்குதோ வென்றே
யொற்றா னரைவிட் டுரைகள்சோ தித்துக்
குற்றமில் லாதசொற் கூறவே கேட்டு
நல்லதெல் லாந்தியா கர்அருட் கடாக்ஷம்
அல்லதுண் டோவென் றவன்மகிழ்ந் திருக்கக் 10
கூற்றான வனுங்கை கூப்புவா னுலகில்
மாற்றா நிலையொரு மனைமக்கள் போல
எல்லோரும் பாக்கியவா னில்லார்க ளில்லை
நல்லோர்க [1]ளேகிருபை நாட்டமுள் ளவரே
காராளர் நித்திய காலமுஞ் சிவனை 15
யாராதனை செய்யு மன்பருக் கன்பாய்க்
கண்ணப்ப னென்னவே கைவழக் குண்டாய்
விண்ணிலிப் படியினு மெய்க்கீர்த்தி யாகி
நவமாய் விளங்கு மிராச்சிய மெல்லாஞ்
சிவதல மெங்குஞ் சிறப்பாய் நடக்கும் 20
புண்ணிய ராசேந்திர பூபதி நாட்டில்
எண்ணம் விசார மெவருக்கு மில்லை
யவனிராச் சியத்தி லனியாய மில்லை
அவனிராச் சியத்தி லரும்பய மில்லை
(உயிர்களின் வாழ்க்கை முறை)
களவில்லை எண்ணைக்குங் கலகம தில்லை 25
குளிகள்மண் டுகமோர் குகைக்குள்ளே வாழும்

ஆனையு முதலையு மருந்துமோர் தடத்தில்
பூனையு மெலியுமெய் பொருந்தியே வாழும்
கோழியும் பருந்துமோர் கூண்டிடை சேரும்
யாளியுஞ் [2]சிங்கமு மாதரித் திருக்கும் 30
பசுவும் புலியுமன் பாயுற வாடும்
நிசையுளந் தன்மரா சேந்திர சோழன்
பூமியிற் குற்றம் புகன்றிட வென்றால்
பூமலரே பறிப்போம் பயிர்களை யெடுப்போம்
குலைவாழை [3]வெட்டுனுங் கொய்யுனுங் கீரை 35
[4]நிலக்காரை பொற்றுனுங் கரும்பரை யுண்ணும்
எள்ளிலுப் பைப்பருப் பிது[5]செக் குபாதி
கொள்ளு மிரும்பனற் கொண்டடி யுண்ணும்
நெல்லது குத்துண்ணும் நெய்யுரு குண்ணும்
புல்லது மாட்டுக்குப் போசன மாகும் 40
கரிபரி சிவ்வங்கி [6]கட்டுப்பட் டிருக்கும்
[7]அரிவைய ரிடைக்குறை யல்லாமல் மற்றக்
குறையில்லை யாவர்க்குங்
குறையொண்ணு மில்லை
தங்கள் தங்களிட சகலர்தம் மனையில் 45
மங்கள நித்திய விவாக முளதாய்
வசந்த மாட்டிய [8]பரிமளங் கமக்குமுன்
வசந்தனும் [9]வசந்தனும் உடை யுலாவ
வாலிபர் வாலிப மாறா தக்கிசை
யாறுள மரனங் காலை யுலாவ 50
வேதியர் வளவெலா மிகுமறை யோசை
யாதியர் வளவெலா [10]மார்ப்பத்துந் துமிகள்
வீணைவாத் தியங்களு மேளவாத் தியமும்
பூணுமின் னார்சிலம் போசையு [11]மிகுத்த
கல்விவல் லோர்சிவ கதையரி கதையும் 55
சொல்ல வெல்லாரும் சொற்கொள்ளு வாரும்
யீசனை யங்கத் தினிலவ தரித்தோர்
பூசையும் நேசமும் புராணவாக் கியமும்

வீதியி னெருக்கமும் வீதியி னழகும்
வீதியி லணியணி விளங்கிய தெங்கும் 60
அவரவர் வீட்டு அருங்கொல்லை தனிலே
நவரச மாகிய [12]நாரத்தை விளாவுங்
கிச்சிலி மாதுளை கிடாரம்வெண் [13]ணீற்றுப்
பச்சைப்பா திரியும் பலாவுமா மரமும்
மஞ்சளு மிஞ்சியும் வாழையுங் கமுகும் 65
மிஞ்சிய கறிகளும் வேண்டிய துண்டு
செறிபூ வனத்திடை தேனது பாயும்
நிறைவாழை யின்கனி நெய்யது சிந்தும்
பலவின் கனிவெடி பட்டமு தொழுகும்
சலசத் தலரினெய் தடமெல்லாம் பரவும் 70
அல்லியும் நெய்தலும் மரவிந்த மும்போல்
எல்லவ ருஞ்சுகித் திருந்தனர் தாமே.

இராசேந்திர சோழன் புதிய மலரும் அதன் மணமும்போல நாட்டு மக்களோடு அன்போடும் நட்போடும் வாழ்ந்து வந்தான். மக்கள் செழிப்போடும் பெருமையோடும் எவ்விதக் குறைவுமின்றி வாழ மன்னவனும் மகிழ்ந்திருந்தான். நாட்டு மக்கள் தன் ஆட்சியைப் பற்றி என்ன பேசுகிறார்கள் என்பதை ஒற்றர் மூலம் சோதித்துப் பார்த்தான். மக்கள் மன்னனைப் போற்றியே பேசுகிறார்கள் என்று கூறிய ஒற்றர்களின் சொல்லைக் கேட்டு எல்லாம் தியாகராசப்பெருமானுடைய திருவருள் அல்லது வேறில்லை என்று மகிழ்ச்சியடைந்தான்.

சோழ மன்னனுடைய ஆட்சியில் கூற்றுவனும் வணங்கி நிற்பான். மக்கள் அனைவரும் ஒரே குடும்பத்தினர் போல எல்லாச் செல்வமும் பெற்றிருந்தார்கள். நல்லவர்களாக, அருள் உள்ளம் படைத்தவர்களாகத், தங்கள் வேளாண்மைத் தொழிலில் சிறந்தவர்களாக விளங்கிய மக்கள் அனைவரும் சிவனடியார்களாகிய தொண்டர்களிடம் கண்ணப்பனைப்போல வாரிவழங்கும் அன்புடையவர்களாய் வாழ்ந்து வந்தார்கள். தேவர்களும் போற்றுமாறு நாடுமுழுவதும் செழிப்பாய் விளங்கியது. சைவ ஆலயங்கள் எல்லாவற்றிலும் பூசைமுறைகள் சிறப்புற நடந்தன. மக்களிடம் வருத்தமோ நியாயமற்ற நிலையோ பயமோ சிறிதும் காணப்படவில்லை.

மக்களிடம் என்றும் திருடோ, கலகமோ இருந்தது இல்லை. நாட்டில் பாம்பும் தவளையும் ஒரே குகையில் வாழ்ந்தன; யானையும் முதலையும் ஒரே குளத்தில் நீர் அருந்தின; பூனையும் எலியும் மிக நெருங்கியே இருந்தன; கோழியும் பருந்தும் ஒரே கூண்டில் வசித்தன; யானைமுகத்தோடு கூடிய யாளியும் சிங்கமும் ஒன்றையொன்று விரும்பி வாழ்ந்தன; பசுவும் புலியும் உறவாடித் திரிந்தன.

சோழனது நாட்டில் இருந்த குற்றங்களைப் பற்றிக் கூறுவது என்றால், பறிக்கப்பட்டவை செடியிலிருந்த மலர்கள் மட்டுமே; பிரித்து எடுத்து எறியப்பட்டவை பயிர்களிலிருந்த களைகள் மட்டுமே; வெட்டப்பட்டவை வாழைக்குலைகள் மட்டுமே; அறுத்து எடுக்கப்பட்டவை கீரைகள் மட்டுமே; அடித்து நொறுக்கப்பட்டவை தரையில் போடப்படும் காரைகள் மட்டுமே; அரைக்கப்பட்டவை ஆலையில் கொடுக்கப்பட்ட கரும்புகள் மட்டுமே; அவதிக்குள்ளானவை செக்கில் கொடுத்து ஆட்டப்பட்ட எள்ளும் இலுப்பைப் பருப்புகளுமே; நெருப்பில் காய்ச்சி அடிக்கப்பட்டது இரும்பு மட்டுமே; குத்தப்பட்டது நெல் மட்டுமே; உருக்கப்பட்டது நெய் மட்டுமே; மாடுகளுக்கு உணவானது புல் மட்டுமே.

யானையும் குதிரையும் ஒட்டைச்சிவிங்கியுமே கட்டப்பட்டிருந்தன. மகளிரின் இடைமட்டுமே மெலிந்து குறைபட்டிருந்தது. வேறுயாருக்கும் எவ்விதக்குறையும் இருந்ததில்லை.

ஒவ்வொருவர் இல்லத்திலும் நாள்தோறும் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். வசந்த நீராட்டுவிழா நடத்தி எங்கும் மணம் நிறைந்திருக்கும். தென்றல் வீசும். காற்றில் மன்மதன் உலவி வருவான். இளைஞர்கள் தங்கள் இளமைமாறாது அவற்றில் ஈடுபட்டிருப்பார்கள். காலை நேரத்திலே எழுப்பப்படும் இசையாற்றில் உலவி வருவார்கள். அந்தணர்களின் இருப்பிடம் எல்லாம் வேதஒலி மிகுந்திருக்கும். பிற மக்கள் வாழிடம் எல்லாம் வீணை, மேளம், துந்துபி ஆகியவற்றின் இனிய ஒலி மிகுந்திருக்கும். மகளிரின் சிலம்போடை ஒலிக்கும்.

கல்வியில் வல்லவர்களின் இருப்பிடங்களில் சிவகதையும் அரிகதையும் சொல்லுவோரும், அதைக் கேட்போரும் எப்பொழுதும் கூடியிருப்பார்கள். இறைவனை உள்ளத்தில் தாங்கியிருப்பவர்கள் இறைப்பணியும் புராண பிரசங்கமும் நிகழ்த்துவார்கள், தெருக்கள் அழகும் நெருக்கமும் ஒழுங்கும் உடையனவாய் விளங்கும்.

ஒவ்வொரு வீட்டின் கொல்லைப்புறத்திலும் சுவைமிக்க நாரத்தை, விளா, கிச்சிலி மாதுளை, கிடாரம், திருநீற்றுப்பச்சை, பாதிரி, பலா, மா, மஞ்சள், இஞ்சி, வாழை, கமுகு போன்ற மரங்களும் செடிகளும் நிறைந்திருக்கும். காய்கறிகள் வேண்டிய அளவு விளையும். அழகான பூஞ்சோலைகளில் தேன் நிறைந்து பாயும். பழுத்த வாழைக்குலைகளிலிருந்து நெய் வடியும். பலாப்பழங்கள் வெடித்து அமுதைச் சிந்தும் தாமரை மலரின் தேன் வழிகளில் நிறைந்து கிடக்கும். நாட்டில் நிறைந்திருக்கும் அல்லி, நெய்தல், தாமரை ஆகிய அழகிய மலர்களைப் போல மக்கள் அனைவரும் உள்ள மகிழ்ச்சியோடு வாழ்ந்திருந்தார்கள்.

பரிமளம் - மணம். வீறுதல் - பெருமை அடைதல். ஒற்றானர் - ஒற்றர், வேவுபார்ப்போர். கூற்றுவன்-எமன். காராளர் - வேளாளர். கைவழக்கு - வாரி வழங்குதல். நவம் - புதுமை. விசாரம் - வருத்தம். அவனி - பூமி. எண்ணைக்கும் - என்றைக்கும் என்பதன் கொச்சைச்சொல். குளிகன் - பாம்பு. மண்டூகம் - தவளை. தடம் - குளம், நீர்நிலை. யாளி - யானை முகம் கொண்ட இருமுக மிருகம். கொய்யுணும் - கொய்யப்படும், பறிக்கப்படும். காரை - சுண்ணச்சாந்து. அரையுணும் - நசுக்கப்படும், அரைக்கப்படும். இலுப்பை - ஒருவகை மரம். உபாதி - வாதை,

வருத்தம். அனல் - நெருப்பு. போசனம் - உணவு. கரி - யானை. பரி - குதிரை. சிவ்வங்கி - ஒட்டகச்சிவிங்கி. கட்டுப்படுதல் - கட்டப்படுதல். இடை - இடுப்பு. ஒண்ணுமில்லை - ஒன்றுமில்லை என்பதன் கொச்சைச்சொல். சகலர் - பலர். வசந்தம் - தென்றல், மணம். கமக்கும் - மிகுதியாகும். வசந்தன் - தென்றல், மன்மதன் வாடை - காற்று. வளவு - பகுதி, வாழிடம். மின்னார் - மகளிர். கொல்லை - தோட்டம். நவரசம் - ஒன்பது சுவை. பூவனம் - பூஞ்சோலை. சலசம் - தாமரை. அலர் - மலர். அரவிந்தம் - தாமரை.

சு.சொல் - 1. ளேகிருபை 2. சிங்கமும்மாதரித் 3. வெட்டினுங்கொய்யுணுக்கீரை. 4. ணலக்காறை 5. செக்குப்பாதி. 6. கட்டுபட்டிருக்கும் 7.அருவையரிடக்குறையல்லாமல் மத்த 8. பறிமளங் 9. வசந்தனும் 10. மாற்பத்துந் 11. மிகுற்ற 12. நாற்தை 13. ணீத்துப்.

Justice obtaining in the land

23. Like fresh flower and its fragrance
Rācēntiraṉ had good rapport with his subjects.
Happy was he to learn
That the populace led lives of contentment
From the report of spies
He could gather that all was well
And so thanked Lord Tiyākēcar for His blessings.
So sound was his rule
That even mighty Death stood before him
With head hung in humility.
Like a closely- knit family,
The subjects lived in peace and harmony.
Most of them, tillers of the land
Were soft hearted and compassionate,
To Caiva savants they extended a warmth
Similar to that of legendary Kaṇṇappar.
The sanity and happiness of the people
Drew praise even from the celestials.
Formal worship in Civaṉ temples
Was done with great fervour,
Security being the order of the day,
Baseless fears and panic had ceased to be;
Thefts and rifts were unknown,

Peaceful co-existence between rivals prevailed,
The snake and the frog shared the same cave,
Elephant and crocodile drank from the same tank.
Seldom did the cat and rat fall out
The eagle and the hen lived in the same cage,
The *Yāḷi* and the lion were good friends,
The cow and the tiger moved together.
To describe the law and order situation
The following illustrations would suffice.
Nothing else was plucked except flowers,
Nothing was wrested except weeds,
Nothing was cut except bunches of bananas,
Nothing was chopped except spinach
Nothing was smashed except stone and sand.
Sugar candy alone was squashed
Gingelly oil and cereals alone felt force
When they were crushed in the mill;
Beaten to shape was molten iron only,
Pounding was done only to raw paddy
And melting to butter alone.
Bondage was felt only by elephants, horses and giraffes,
Since they were securely tethered,
Slenderness was confined to the waists of women,
No one had any grievance to complain of.
Auspicious events were frequent in homes,
The festival of spring was celebrated with gaiety,
The gentle breeze carried in its fold
The carnival spirit of the Lord of love,
Which made youth immerse itself in it
And retain eternally its vernal bloom.
Wherever the brahmins lived,
The Vētās reverberated their sacred sound,
Elsewhere instruments like *Viṇai, Tuntupi* and drum,

Spread sweet and melodious notes.
The streets were clean and orderly
Contributing to a pleasing ambience.
In the backyard of the houses
Stood trees and plants as varied as
Citrus, wood- apple, pomegranate jack, areca
Besides ginger and auspicious turmeric
Vegetables grew in profusion
And the orchards over - flowed with honey.
Bunches of bananas and jack fruits
Dripped heavenly manna
While the people lived in perpetual bloon
Like the lily, lotus and other flowers.

(அரசனுக்குக் குழந்தைச்செல்வ மில்லாக்குறை) **கந்தபத்தியம்**

24. [1]சுந்தர ராசேந்திர சோழன்
அந்தமா யுலகெலா மரசுசெய் திருக்கில்
தந்துணை யாளுத ரத்தோர்
மைந்தரில் லாமையாற் மனதுநொந் தனனே.

நாடு முழுவதையும் ஒருசேர இணைத்து அரசுபுரிந்துவரும் இராசேந்திரசோழன் தன்மனையாளுக்குக் குழந்தைச் செல்வம் இல்லை என்றெண்ணி உள்ளம் வருந்தியிருந்தான்.

சுந்தரம் - அழகு. உதரம் - கருப்பை, வயிறு.

சு.சொல் - 1. சுந்திர.

The king childless

24. King Rācēntiraṉ who ruled the country,
With a great sense of integration,
Felt highly crest-fallen
At the thought that his wife had borne no child

வசனம் - மனது நொந்த ராசேந்திரசோழன் புத்திர வாஞ்சையினாலே கர்த்தாவைத் தன்னிலே மனத்திலென்ன மென்றுரைப்பான். (6)

Prose : How did king Rācēntiraṉ express his longing for a child to the Almighty?

(இறைவனைப் போற்றி வேண்டுதல்) **தரு**

25. பார்வதி மனோகரா பூரா - பரசு
வேதகிரி பட்டணத்தி லுற்ற வொளிவே
தேவர்களெல் லாந்தொழும் பதாம்புயா - சங்கர
சலஞ்சீர்த்தணி தியாக ராயனே
கிஞ்சுக சடாதரா விரஞ்சின மாலினுக்கு - முயர் 5
கேவல மளித்த பரனே - நீ
வஞ்சனை [1]பண்ணாமலென் சஞ்சலந் துலைக்கஒரு
மைந்தனருள் தியாக ராயனே
போகியிழை யாயகில பொதியக மாகியெங்கும்
பூரணம தானபரனே - என் 10
சோகமது தீரவுஞ் சுதாகரனுண் டாகவுந்
துணைசெயுந் தியாக ராயனே
[2]பத்தியான வர்க்குமவ பத்தியான வர்க்குமுன்
பதத்தினை யளித்த பரனே - உன்
சித்தம திரங்கியொரு புத்திர னெனக்குதவி 15
செய்யவேணுந் தியாக ராயனே
சூரியன் முன்னேபனி [3]நில்லாதது போலவே - யடிமைத்
தோஷம தெல்லா [4]மகற்றியே
சீருட னிருந்திரு வரருடனென் பேர்விளங்க
சேயுதவுந் தியாக ராயனே. 20

உமையம்மையின் மகிழ்ச்சிக்கு உரியவராகி விளங்கும் பூரணனே! மழுவாயுதம் ஏந்தி வேதகிரி என்னும் திருக்கழுக்குன்றத்திலே எழுந்தருளியிருக்கும் ஒளிமிக்கவனே! தேவர்கள் வணங்கும் திருவடித் தாமரைகளை உடையவனே! திருப்பாற்கடலில் உண்டான நஞ்சினால் ஏற்பட்ட தீமையையொழித்து அந்த நஞ்சினைத் தாங்கியவனே! தியாகராசப்பெருமானே! செந்நிறம் உடைய சடாமுடியைத் தரித்தவனே! உன்னைப் பெரிதும் விரும்பிய திருமாலுக்கு உயர்ந்த பெருமையை அளித்த தலைவனே! எனக்குக் கொடுமை செய்யாமல் என் துன்பமெல்லாம் ஒழிய ஒரு குழந்தைச் செல்வத்தைக் கொடுத்தருளுவாயாக! இந்திரன் முதலான தேவர்கள் பூசிக்குமாறு திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளி எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனே! உம்மிடத்தில் உண்மையான அன்பு செலுத்துவோர், அல்லாதோர் அனைவருக்கும் உன் பதத்தை அடையும் பெரும்பேற்றினை அளித்துவரும் தயாபரனே! என் துன்பமெல்லாம் நீங்கி நான் மகிழ்ச்சி அடையுமாறு உன் உள்ளம் இரங்கிப் புத்திரப்பேறு பெறும் பாக்கியத்தை எனக்கு அருள்புரிவாயாக!

சூரியன்முன் நில்லாத பனியைப்போல எனக்கு உண்டாகியிருக்கின்ற தோஷமெல்லாம் நீங்கி என்னுடைய சந்ததி விளங்க உன்னுடைய பெயரும் புகழும் விளங்கக் குழந்தைச் செல்வத்தை அருள்புரிவீராக!

மனோகரம் - மகிழ்ச்சி. பூரம் - பூரணம், முழுமை. பரசு - கோடலி, மழுவாயுதம். வேதகிரி - திருக்கழுக்குன்றம். சங்கரசலம் - விஷத்துன்பம். சங்கரம் - நஞ்சு. சலஞ்சீர்த்தல் - பகைமையை நீக்குதல். கிஞ்சுகம் - செந்நிறம். தரன் - தரித்தவன். வாஞ்சினம் - விருப்பம். கேவலம் - பெருமை. வஞ்சனை - வஞ்சகம், கொடுமை. சஞ்சலம் - துன்பம். போகி - இந்திரன். பொதி - சிற்றம்பலம். சுதாகரன் - சந்திரன், மகன். அவபக்தி - அன்பின்மை. சித்தம் - உள்ளம். திருவரர் - மேலோர், தேவர்கள்.

சு.சொல் - 1. பண்ணாமல்லென் 2. பத்தியானவாகுமவ 3. நில்லாது 4. மகத்தியே..

Praying to the Lord

25. Lord gladdening the heart of Umai,
Bright one wielding the axe
Who goes by the name Vētakiri at Tirukkaḻukkuṉṟam
Whose lotus feet are worshipped by the Gods,
The one who ate poison
Which arose when the ocean of milk was churned
Thereby destroying all evil,
My lord Tiyākarācar
Whose matted locks are red,
Who elevated Tirumāl to a higher state
When the latter showed great love,
Kindly relieve my distress
By blessing me with a child.
Omniscient one, worshipped even by Intiraṉ,
Who sanctifies Tiruccirrampalam,
Great one who assures salvation
Both to the devout and the deviates,
Show mercy on me,
And bless me with a child.
May all the evil that is my lot be dispelled
Like the mist before the sun

And a child given,
Who shall perpetuate my line
Singing Thy glory.

(7)

வசனம் - எனச் சொல்லிப் பின்னுமென்ன சொல்லுவான்.

Prose : What more did he say?

(இறைவனின் அருஞ்செயல்களை எடுத்துக்கூறுதல்) ஏலச்சிந்து

26. மாதா வந்துன் னாதாரம்பால்
நீதா வென்னவே தான்தந்தாய்
சூதிலா மறையி லோதுதே [1]அப்படிக்கொத்த
தாதாவே தியாகராயனே!

எச்சிலிட்ட வேடனுக்கு மெச்சியே வரமளித்தாய் 5
அச்செயலைப் போலே என்மீதுங் கருணைசெய்து
ரக்ஷியுந் தியாகராயனே!

வில்லாலே யடித்தவர்க்குங் கல்லாலே கொடுத்தவர்க்கும்
நல்லபடியே யிரக்ஷித்தா யுனைப்போலே தெய்வஞ்
சொல்லவுண்டோ தியாகராயனே! 10

வள்ளலே சிகத்தினுள்ள வாழ்வெல்லா மெனக்குத்தந்தாய்
பிள்ளையொன் றில்லாமல் போனதென் உமக்குநெஞ்சில்
கள்ளமோ தியாகராயனே!

தீபமுன் னிருட்டுமுண்டோ [2]தேவனே யுனைத்துதித்தும்
பாபமென்னைச் சேரலாகுமோ என்மீதுமக்குக் 15
கோபமோ தியாகராயனே!

நாயினேன் பிழைகளெல்லாந் தூயனே பொறுத்திப்போது
சேயனை யுதவ வேணுங்காண் - ஆரூரில்தோற்றுங்
காயனே தியாகராயனே!

தான் ஊட்ட விரும்பிய இறைச்சி உணவைக் கடித்துப் பதம்பார்த்து இறைவனாகிய உனக்கு ஊட்டினார் கண்ணப்பர். வேடர் குலத்தவராகிய அவருடைய அன்பைப்பாராட்டி அவருக்கு உன் திருவடிகளைத் தந்தாய். கரும்பு வில்லில் பூட்டப்பட்ட மலர் பாணத்தை ஏவி உன்னுடைய யோக நிலையைக் கலைத்தான் மன்மதன். தன் இனத்தவர் புகழுமாறு உள்ளன்போடு கல்லால் அருச்சித்து வந்தார் சாக்கிய நாயனார். அவர்களுக்கும் சிறந்த முறையில் அருள்புரிந்தாய். அவர்களுக்குச் செய்த செயல்களைப் போலவே என்மீதும் கருணை கொண்டு எனக்கு அருள்புரிவாயாக.

திருவாரூரில் எழுந்தருளியிருக்கின்ற தியாகராசப்பெருமானே! எல்லாம் அளிக்கும் பெருமானே! உலக இன்பங்கள் எல்லாவற்றையும் குறைவில்லாமல் எனக்களித்து இருக்கிறாய். ஆனால் குழந்தைப்பேறு இல்லாத ஒரு குறையை எனக்குள் வைத்ததற்குக் காரணமென்ன? உனது உள்ளம் கபட உள்ளமா? ஒளி தரும் விளக்கின் முன்னால் இருள் நிற்பதுண்டோ? இறைவனே! நாள்தோறும் உன்னைப் பூசித்து வருகின்ற எனக்கு இந்தக் குறை வந்து சேரலாமா? நாயினைப் போன்ற அடியேன்மீது என்ன கோபம்? என்னை அறியாமல் செய்த பிழைகளை எல்லாம் பொறுத்தருளிக் குழந்தைச் செல்வம் ஒன்றைக் கொடுத்தருளுமாறு வேண்டுகிறேன்.

எச்சிலிட்டவேடன் - கண்ணப்பநாயனார். வில்லாலே அடித்தவன் - மன்மதன் (அருச்சுனன் எனவும் கொள்ளலாம்). கல்லாலே கொடுத்தவர் - சாக்கியநாயனார். சிகத்தில் - செகத்தில் என்பதன் திரிபு. செகம் - உலகம்

சு. சொல் - 1. அப்படிக்கொற்ற 2. தேவனையுனை.

Enumerating the Lord's deeds

26. Thou were good enough to assure Bliss
To Kaṉṉappar, the hunter
Who tested and tasted the meat
Before serving it to Thee!
Salvation was given
To Cupid who disturbed Thy trance
With his arrow
Released from a bow of flowers;
Also to Cākkiya Nāyaṉār
Who worshipped Thee with crude stones
Much praised by men of his tribe
Why don't you extend to me
The same divine grace?
Tiyakarācar, the presiding deity of Tiruvārūr,
The one who liberally bestows boons,
I have been blessed with all creature comforts,
But why did you deny me a child?
Are your motives so underhanded?
But can darkness stand face to face with light?
Shall misery be the lot of One

Who is regular with his prayers?
Why are you angry with me
Who am as insignificant as a cur?
Forgive all my lapses
And bless me with a child!

வசனம் - இப்படிப் பரமனை ஒப்பில்லா மன்னன் துதி செய்து பின்னையுஞ் சோகமென் செய்வான். (8)

Prose : After offering such a prayer, what more happened to the sorrow - laden king?

(சான்றோரின் ஆறுதல் மொழி) **திபதை**

27. நானென்ன செய்குவேன் நம்பனுக் கன்புதானில்லை
யான் செய்த தன்மமுங் காணேன்
பரவுப காரம் பாத்திர மாச்சோ
பெரியவர் வாழ்த்திய பேச்சும்பொய் யாமோ
குடிகுடி கோத்திரங் குலவங்கி ஷத்தில் 5
அடியடி பிள்ளையில் லாதவ ரில்லை
எனக்கறு பதுவய தேறிச்சு தின்னம்
மனக்குறை தீரவோ மைந்தரைக் காணேன்
என்னபாக் கியமிருந் தென்செயப் பூமி
தன்னையாண் டெனவெகு தனம்படைத் தென்ன 10
மெத்தைமேல் மெத்தையும் வீடுமுப் பரியுஞ்
சித்திரகூ டத்திலுஞ் [1]செழித்திருந் தென்ன
பிள்ளையில் லாமனை பேய்மனை யாகும்
பிள்ளையில் லாதவூண் [2]பிருதிவிக்கொப் பாகும்
தனையனெ டாதகை தருவுக்கு நேராம் 15
தனையனெ டாப்புசந் சத்திலாக் கண்டை
சுதன்மேல் விழுந்து தொடாவுடற் கட்டை
சுதன்சொற் கேளாச்செவி சுத்தமே யில்லை
எனவிரா சேந்திர னிப்படிச் சலிக்கில்
மனைவியா கியபட்ட மாதேவி வந்து 20
தேவரே சிந்தனை செயிலாவ துண்டோ
பாவியா யிருவரும் பாரிலுற் பவித்தோம்

யிட்டுப் பிறந்ததெட் டிவ்வள வென்று
மட்டில்லாத் துயர்தனை மாற்றிநீர் தேறும்
நாழியைக் கொண்டுநா ணாழிமொள் ளென்னு 25
ஆழியி [3]லழுத்தினு மதிகமுண் டாமோ
அரசேயும் மாலினு மறியாத நீதி
யுரைசெய்வ [4]தென்னவென் றுத்தமி கூறப்
பாங்குளி பெரியவர் பல்கலை தெரிந்தோர்
தேங்கிய புகழிரா சேந்திரபூ பதியே 30
எத்தனைதான் புண்ணிய மெத்தனை தன்மம்
நித்தமுஞ் செய்திடும் நிறுமைவீ ணாமோ
உமக்கேன் கவலை உமக்கேன் துயரம்
[5]உமக்கென விசார முமக்கென்ன வெண்ணம்
புற்றிட மாகிய புண்ணியர் தானே 35
புத்திரனுண் டாகவிப் போதருள் செய்வார்
எனப்பெரி யோர்சொல விறையவன் வினவி
மனப்பரி வொடுதெளி வாயிருந் தானே.

நான் செய்த தருமச்செயல்கள் எல்லாம் என்னவாயிற்று என்பதை அறியமுடியவில்லை. பிறருக்குச் செய்த உபகாரங்கள் எல்லாம் தகுதி அற்றனவாக ஆகிவிட்டன. சான்றோர் மனம்மகிழ்ந்து வாழ்த்திய வாழ்த்துக்கள் எல்லாம் பொய்யாகிவிட்டன. எம்பிரானாகிய இறைவனுக்கு என்மீது சிறிதும் கருணை பிறக்கவில்லை. என் நாட்டில் குழந்தைச் செல்வம் இல்லாத குடிமக்களே இல்லை. என்னுடைய வம்சத்திலும் இதுவரை மக்களில்லாக்குறை யாருக்கும் இருந்தது கிடையாது. ஆனால் எனக்கோ அறுபது வயதாகிறது. என் உள்ளம் மகிழுமாறு ஒரு குழந்தைச் செல்வத்தை இதுவரை நான் அடையவில்லை எனக்கு எல்லாவகைச் செல்வங்களும் இருக்கின்றன. இருந்தும் என்ன பயன்? இந்த நிலவுலகத்தை ஆளுவதனால் பயன் என்ன? பெருஞ்செல்வம் படைத்திருந்தும் பயனில்லை. மெத்தை மேல் மெத்தையும், அரண்மனையும் மாட மாளிகைகளும் சபா மண்டபங்களும் இருந்து என்ன பயன்? பிள்ளை இல்லாத வீடு பேய்கள் வாழும் வீடே ஆகும். பிள்ளை இல்லாமல் உண்ணும் உணவு மண்ணுக்கு ஒப்பாகுமல்லவா? குழந்தையைத் தொட்டுத் தூக்காத கைகள் மரத்திற்குச் சமமாகும். குழந்தையைச் சுமக்காத தோள்கள் பலமற்ற வெற்று ஓலைக்குச் சமமாகுமே! குழந்தையானது மேலே விழுந்து புரளாத உடம்பு மரக்கட்டையே ஆகும். குழந்தையின் மழலைச்சொல் கேளாத காதுகள் செவிடுகள் அல்லவா என்றெல்லாம் பேசிக்கொண்டு மனக்கலக்கம் அடைந்தான் மன்னன்.

அப்போது பட்டமாதேவியானவள் அரசனை நாடி வந்தாள். ஐயனே! இவ்வாறு சிந்தித்து வருந்துவதால் ஏற்படும் பயன் என்ன? நாம் இருவருமே பாவிகளாய் இந்த

வுகைத்தில் பிறந்து விட்டோம். நாம் பிறந்ததன் பயன் இவ்வளவு தான் என்றெண்ணித் தங்கள் துயரத்தை மாற்றிக்கொள்ளுங்கள்; மனம் நிம்மதி பெறுங்கள். முகக்கும் நாழியாகிய படியினைக் கொண்டு நான்குபடி அளவுள்ள நீரை மொள்ளவேண்டுமென்று அந்தப் படியினைக் கடலில் அழுத்தி முகந்தாலும் அந்தப் படியளவுக்கு மேல் நீர் கிடைக்காதல்லவா? தங்களுக்குத் தெரியாத நியாயம் ஒன்றினை நான் சொல்லப்போகின்றேனா என்றெல்லாம் ஆறுதல் கூறினார்.

அருகில் இருந்த பல கலைகளிலும் வல்லவர்களாகிய சான்றோர்கள் மன்னவனைப் பார்த்து புகழ்மிக்க மன்னவனே! அளவற்ற தருமங்களையும் புண்ணியச் செயல்களையும் நாள்தோறும் செய்துவரும் தாங்கள் பொறுத்திருப்பது பெரும் பயனைத்தரும். உமக்கு எந்தவித வருத்தமும் தேவையில்லை; வேறு வகையான துன்பமோ எண்ணமோ வேண்டாம். புற்றை இருப்பிடமாகக் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற இறைவன் தங்களுக்குக் குழந்தைச் செல்வம் தோன்றத் திருவருள் புரிவான் என்று கூறித் தேற்றுவித்தார்கள். மன்னவனும் அவர்கள் சொற்களைக் கேட்டு மனப்பக்குவம் அடைந்து தெளிவுபெற்று அமைதியானான்.

நம்பன் - நம்பிரான், இறைவன். பரஉபகாரம் - பிறர்க்குச்செய்யும் உதவிகள். பாத்திரம்- தகுதி. கோத்திரம் - குலம். வங்கிஷம் - வமிசம். வெகுதனம் - பெருஞ்செல்வம். உப்பரி - உப்பரிகை - மாடிவீடுகள். சித்திரகூடம் - அரசவை மண்டபம். பிருதிவி - பூமி. தனயன் - மகன். தரு - மரம். நேர் - ஒப்பு, சமம். புசம் - தோள். கண்டை - ஓலை. சுதன் - மகன். சலித்தல் - கலங்குதல். பார் - பூமி. உற்பவித்தல் - பிறத்தல். தேறுதல் - தெளிவடைதல். நாழி - படி. ஆழி- கடல். பாங்குளி - அருகில். நித்தம் - நாள்தோறும். நிறுமை - தாமதம். விசாரம் - வருத்தம். பரிவு - பக்குவம்.

சு.சொல் - 1. செழுத்திருந் 2. பிறிதிவிக் 3. லமித்தினு 4. தென்னவென்னுத்தமி 5. விமக்கென்.

The consoling words of elders

27. The King spoke in grief:
I wonder why my charitable acts
And kind gestures have failed
To yield any fruit.
The blessings of the wise
Have been belied.
The Almighty has no mercy
For my miserable plight.
No one in this land
Is without issues.

Even in my hoary dynasty
Infertility and barrenness are unknown.
Though I have completed three score years,
The Lord has not given me a child.
What is the use of wealth, crown
Or palaces and mansions,
If there is no infant to give solace?
A house devoid of a babe
Verily becomes the abode of the devil.
Food eaten sans company of child
Is as bad as dust,
Hands that do not fondle a babe
Are wooden ones,
Shoulders that fail to carry children
Lack strength and verve
Like flimsy roofs made of palm leaves.
Ears that do not hear the prattle of the young,
Are stone-deaf ones.
While the King bewailed thus in agony
The Queen came and spoke:
What is the use of these sad musings?
We two are born as sinners.
Reconcile yourself to your lot
And forget the consuming grief.
With tiny measuring units
One cannot draw out unlimited quantities
Of water even from an ocean.
I am not uttering anything new
That is not known to you.
Now the elderly folk spoke:
Revered King, it is wise to wait patiently
For your kind and noble acts to fructify,

Is sure to rescue you.
The speech of the elders
Helped the King to live down grief
And hope for a better morn.

(மன்னன் கனவில் மைந்தன்) சம்பை

28. ஆழிசூ ழுலகுபரி பாலனஞ்செய் ராசேந்திர
சோழன்மனை யாளொடுவை போக[1]முடனே வாழியே
செயமுள விராசேந்திரன் துயிலிலர னார்வந்து
தயவுடனிப் போதுசந் ததிதந்தோ [2]மென்றார்
பத்திமற வாதசிவ பத்தனே யுனக்கினிய 5
புத்திரனுண் டாகுதென் றுரைத்தனர் தியாகர்
பண்டார மாய்நீற்றுப் பழங்கோமேது விடையேறிக்
கொண்டாரிவ னும்விழித்துக் கொண்டானப் போது.

கடலால் சூழப்பட்ட இந்நிலவுலகத்தினை ஆண்டு வருபவனாகிய இராசேந்திர சோழன் தன் மனைவியாகிய பட்டமாதேவியோடு மகிழ்ச்சியாக இருந்து வந்தான். ஒரு நாள் வெற்றிக்குரிய அந்த மன்னனின் தூக்கத்தில் தியாகராசப்பெருமான் தோன்றினார். சிவபக்தியிலே சிறிதும் மனம் மாறாத, என்றும் மறவாத பக்தனே உமக்குப் புத்திரப்பேறு அளித்தோம் என்று கூறியவராய்த் திருநீறு பூசிய பண்டாரத்தைப் போன்ற வடிவத்தோடு இடபவாகனத்தின் மீது அமர்ந்த கோலத்தில் காட்சி தந்தார். மன்னவனும் திடீரென விழித்துக் கொண்டான்.

ஆழி - கடல். பரிபாலனம் - ஆளுகை. வைபோகம் - இன்பம். துயில் - தூக்கம். அரனார் - சிவபெருமான். சந்ததி - குழந்தைப்பேறு. நீறு - வெண்ணீறு, திருநீறு. விடை - இடபவாகனம், எருதுவாகனம்.

சு.சொல் - 1. முடன் 2. மென்னார்.

The dream of the King

28. Rācentiraṉ, the ruler of the country
Encircled by the sea
Spent his days happily
With queen Paṭṭamātēvi.
Then one day he had a dream
In which appeared Lord Tiyākēcar

'Devotee with single minded loyalty to Me,
You shall soon be blessed with progeny'.
So spoke the Almighty
Clad in the robes of a mendicant
Wearing the sacred ash
And riding the divine bull;
The King woke up with a jerk.

(தேவி கர்ப்பமடைதல்) ஏகதாளம்

29. கண்ட கினாவது பெண்டொடு சொலியோர்
மண்டல பூபதி வாழ்ந்திருந் தானே
மதிசூ டியசிவ னருளால் துரைமக
ளதுவே குளிசந் ததியுண் டானாள்
சிந்தை யானது தெளிந்திட வேமுதல் 5
மைந்தனுண் டாகினள் சுந்தர மாது
வேந்தன் ராசேந்திரன் மனத்தில் மகிழவே
ஏந்திழை கெற்பனை போந்தது காலம்.

மன்னவனாகிய இராசேந்திரன் தான் கண்ட கனவினைப் பட்டமாதேவியிடம் எடுத்துச் சொல்லி மகிழ்ச்சியோடு வாழ்ந்திருந்தான். பிறை சூடிய சிவபெருமானின் அருளால் அந்தக் குளியலிலேயே அவளுக்கு மகப்பேறு உண்டாயிற்று. பட்டமாதேவி கர்ப்பமடைந்தாள். தேவியின் முதல்பேறு அதுவே. மன்னவன் மனம் தெளிந்து மகிழ்ச்சியடைந்து அரசு செலுத்தி வந்தான். சிலகாலம் கழிந்தது.

கினா - கனவு என்பதன் கொச்சைச் சொல். சொலி - சொல்லி என்பதன் இடைக்குறை. பூபதி - மன்னன். மதி சூடியவன் - பிறை அணிந்த சிவபெருமான். குளி - தலைமுழுக்கு சுந்தரம் - அழகு. ஏந்திழை - பெண். போந்தது - சென்றது, கழிந்தது

The Queen conceives

29. The King spoke to the Queen about the dream
And was immensely happy.
Thanks to the blessings of the lord wearing the crescent,
The Queen conceived forthwith.
Relieved of his deep- seated grief,
The King continued to rule.

(தேவியின் மகப்பேறு) திபதை

30. வைய்யமெங் கனுமிந்த வார்த்தையைக் கேட்டுத்
தெய்வமிப் போது ராசேந்திரன் பங்கில்
[1]நின்றது மகிழ்ச்சி நிறைந்ததென் றுரைக்க
வென்றிமன் னவனு மிகமகிழ் வெய்தி
பூரித்துக் கொண்டொரு புசமிரு புசமாய் 5
நாரிக் கொற்றம் நல்கிய சிவனை
மாலையுங் காலையும் மத்தியா னத்தும்
சாலவே புகழ்ந்ததி சந்தோஷ முடனே
யீசரா கியதியா கேசருக் கதிக
[2]பூசைப் படித்தரம் போதவுண் டாக்கி 10
[3]வேண்டிய திரவியம் மேலவர்க் களித்தே
ஆண்டவ னடிமைத்தம்பி ரான்களுக் கதிக
செல்வங் கொடுத்து ராசேந்திர னிருக்க
வல்லியர் தொழும்பட்ட மாதேவி பத்து
மாதமுஞ் சென்று வயிற்றிடை நொந்து 15
தாதியர் பாங்கியர் தன்னரு கிருக்கக்
காரண மூர்த்தி கருணையா லிளமைச்
சூரியன் போலொரு சுதனையீன் றனளே.

பட்டமாதேவி கர்ப்பமடைந்தாள் என்ற வார்த்தையைக் கேட்டார்கள் குடிமக்கள். இறைவன் மன்னவன் பங்கில் குடிகொண்டுவிட்டான்; மன்னவன் மனமும் மகிழ்ச்சியால் நிறைந்தது என்றெல்லாம் பேசிக் கொண்டார்கள். அரசனும் மன மகிழ்ச்சியோடு ஒவ்வொரு தோளும் இரண்டிரண்டு தோள்களாக விளங்குமாறு பூரிப்படைந்தான். தன் தேவிக்கு வெற்றியை அளித்த சிவபெருமானைக் காலை, மாலை, உச்சிப்பொழுது ஆகிய மூன்று வேளைகளிலும் புகழ்ந்து துதித்தான். அந்தத் தியாகராசப் பெருமானுக்குப் பூசை, நைவேத்தியங்கள் குறைவில்லாது நடைபெற நிலையான ஏற்பாடுகளைச் செய்தான். சான்றோர்களுக்கும் இறைவனது அடியவர்களாகிய பக்தர்களுக்கும் அந்தப் பக்தத் திருக்கூட்டத்தாரின் தலைவர்களுக்கும் மிகுதியான செல்வத்தை வாரி வழங்கினான்.

மாதர்கள் எல்லாம் போற்றி வணங்கும் பட்டமாதேவியின் கர்ப்பம் பத்துமாத வளர்ச்சியையுற்றது. செவிலித் தாயர்களும் தோழியர்களும் தேவியின் அருகிலே இருந்து வந்தார்கள். குழந்தைச் செல்வத்தை அருள்புரிந்த தியாகராசனின் திருவருளால் பட்டமாதேவி சூரியனைப் போன்ற ஒளிமிக்க ஆண்மகன் ஒருவனைப் பெற்றெடுத்தாள்.

வையம் - நிலவுலகம், உலக மக்கள். வென்றி - வெற்றி என்பதன் மெலித்தல் விகாரம். நாரி - பெண். கொற்றம் - வெற்றி. மத்தியானம் - உச்சிவேளை. படித்தரம் - நிபந்தனை, ஏற்பாடு. போத - மிகுதியாக. மேலவர் - சான்றோர். தம்பிரான் - திருக்கூட்டத்தலைவன். வல்லியர் - கொடி போன்ற மகளிர். தாதி - செவிலித்தாய். பாங்கி - தோழி.

சு.சொல் - 1 நின்றுது மகிட்ச்சி நிறைந்துதென் 2. பூசை படித்தரம் 3 வேண்டியத்திரவியம்.

The Queen delivers

30. When the populace knew
That the Queen had conceived,
They breathed a sigh of relief,
Exclaimed that at last the gods
Had condescended to cast their glance on the king
Making him enjoy felicity.
The Queen, beloved of the women folk,
Completed ten months of pregnancy,
With maids of honour always at her beck and call.
The blessings of Lord Tiyākarācar
Bore fruit when she was delivered of a bonny boy,
Who was bright as the sun.

(இரத்தினம் போன்ற மகன்) சிந்து

31. புத்திரனுற் பவித்தா - னிப்போ - [1]இரத்தினம் போல
அத்தன் தியாக ரருளாலே - புவிமேல் - சிலைபோலே - யொரு
(புத்திரன்)
தாய்தந்தை யருள்ளஞ் சந்தோஷம் பூரிக்கச்
சேயென்று தான்விளங்கச் - சீராய் - வெகுநேராய்
திசைபேரா - யொரு (புத்திரன்) 5
கொஞ்சிக் கோதாட்டவுங் குவலயத் தோருக்கும்
நெஞ்சிற் கவலையது நீங்கக் - குடிதாங்க - புகழோங்க - வொரு
(புத்திரன்)
பட்டமா தேவிமுலைப் [2]பாலுண்ண வுந்துரை
கட்டளை யாய்ப்புவி [3]காக்க - நெஞ்சேற்க - [4]சன்மார்க்க - வொரு
புத்திர னுற்பவித்தா - னிப்போ - [1]இரத்தினம் போலே. 10

தியாகராசப் பெருமானுடைய திருவருளால் பட்டமாதேவி இரத்தினம் போலவும் பொற்சிலை போலவும் அழகுவாய்ந்த ஆண்மகவு ஒன்றினைப் பெற்றெடுத்தாள். மன்னனும் தேவியும் உள்ளம் பூரிக்கவும், இன்பமாய்ப் பேசிக் கொஞ்சிச் சீராட்டி மகிழவும், நாட்டு மக்கள் எல்லோரும் புகழ்ந்து கொண்டாடவும், பட்டமாதேவியிடம் தாய்ப்பால் உண்ணவும், நல்லொழுக்கத்திலே வளர்ந்து சோழநாட்டின் அரசு பொறுப்பை ஏற்கவும் தகுதிவாய்ந்தவனாக அக்குமரன் விளங்கினான்.

உற்பவித்தல் - பிறத்தல். அத்தன் - தலைவன், அய்யன். நேர் - தகுதி. கோதாட்டல் - சீராட்டுதல் குவலையம் - நிலவுலகம். சன்மார்க்கம் - நன்னடை, நல்லொழுக்கம்.

சு. சொல் - 1. றத்தினம் 2. பாலுண்டவுந் 3. காற்க 4. சன்மாற்க.

The gem of a son

31. The child born merited praise
As he provided joy to king and queen
Made them exchange pleasantries,
Provided the loyal populace with occasion for pride
And the mother to suckle it endearingly.
Brought up in a strictly moral atmosphere,
The child showed promise
Of ruling the extensive country
With a high sense of responsibility.

(மன்னன் இனிப்பு வழங்குதல்) **திரிபுடை**

32. மகன்பிறந் திடவே யப்போ தந்த
மன்னவன் கமலங்கள் போலவே - முகம்
மலர்ந்தொரு சித்திர சாலையிற்
மகிழ்வோ டிருந்தே
சர்க்கரை யும்நவ தானிய விரைகளுந்
தமனியமும் பட்டும்
பிராம ணாதியருக் கெலாங்கொடுத் தனுப்பிச்
சங்கம ருக்குங் கொடுத்தான்
தன்ம சந்ததி போலவே - பிள்ளை
தானுற் பவிக்கவே
தேசதே சத்து மன்னனே வலினாற்
சர்க்கரை யெங்கும் வழங்கினாரே

தனதுபதி யாரூரி லிருக்கின்ற சகலத்

தோருக்கும் சர்க்கரை தந்தே

பின்னை மனது மகிழ்வா யெண்ணை 15

வசந்தமும் புனைவித் தானே

மந்திரி களுக்கும் பிரதானி களுக்கும்

பின்வணங்கிச் சேவிக்கும் பெரும்பதா திக்கும்

தந்தனன் வெகுமான முச்சிதம் - விந்தையாக.

மகன் பிறந்த செய்தியை அறிந்த மன்னவனின் முகம் தாமரை மலர்போல மலர்ச்சியடைந்தது. உடனே சித்திரமண்டபமாகிய அரண்மனைப் பகுதியில் மகிழ்ச்சியோடு சென்றமர்ந்தான். அந்தணர், வீரசைவ சமயத் திருக்கூட்டத்தார், நாட்டு மக்கள், திருவாரூர் குடி மக்கள் ஆகிய பலருக்கும் சர்க்கரை போன்ற இனிப்புப் பொருள்களையும் பொன், பட்டு ஆகியவற்றையும் வாரி வழங்கச் செய்தான். தன்னுடைய உயர்ந்த வமிசம் விளங்க மகன் பிறந்தான் என்ற மகிழ்ச்சியினால் எண்ணெய்க்காப்பு முதலிய சடங்குகளைச் செய்து உடனிருந்த அமைச்சர்கள், அரசு அதிகாரிகள், தன்னைத் தொழுது வணங்கும் பெரும் படைவீரர்கள் ஆகிய அனைவருக்கும் தகுதி வாய்ந்த உயர்ந்த பரிசுப் பொருள்களை எல்லாம் வாரி வழங்கினான்.

கமலம் - தாமரை மலர். சித்திரசாலை - அரசன் வீற்றிருக்கும் தனி மண்டபம். தமனியம்- பொன். சங்கமர் - வீர சைவதிருக் கூட்டத்தார். தன்மசந்ததி - நீதி தவறாத பரம்பரை. ஏவல் - கட்டளை. சகலத்தோர் - அனைவரும். பிரதானி - அரசு அதிகாரிகள். பதாதி - படை. உச்சிதம்- தகுதி, மேன்மை.

The King distributing sweets

32. When the king was told of the birth of a son,
His face blossomed like a lotus,
Forthwith he sought the mansion of pleasure
And ordered the distribution of sugar and sweets
To brahmins, Caiva savants and the populace.
In his ecstasy that a son had been born
To continue and perpetuate the distinguished lineage,
He arranged for the bangle ceremony and other rites,
Distributing gifts liberally
To ministers, officials and loyal soldiers.

(அரசனின் ஆலயத் திருப்பணிகள்) திபதை

33. அத்திரு வாரூரி லாலய முண்டாய்
எத்தனை யிருக்குமோ எதுக்குமன் பாக
அபிஷேகஞ் செய்வித் தடிதொழு தேத்திச்
சுபதீப தூபஞ் சொரியெனச் சொரிந்து
தன்னையாட் கொண்ட தயாள தியாகர் 5
மன்னுமா லயந்[1]திரு மதில்மண் டபங்கள்
கோபுரந் [2]தூண்கள் கொடிக்கம்ப மெல்லாம்
பூபதி [3]பொற்பூச்சுப் பூசுவித் தரனார்
பூசைக் குடங்களும் பொன்னாலுண் டாக்கி
[4]யீசர்க்குத் தேங்கா யிளநீரி னாலும் 10
பாலினுந் தேனினும் பழத்தினு முதகத்
தாலினு மபிஷேக [5]மாட்டுவித் தரனை
மல்லிகைச் சரங்களும் வாசனைக் கொழுந்தும்
வில்வமும் தியாக விமலருக் கணிந்து
தேரலங் காரமாய்ச் சிங்காரஞ் செய்து 15
வாரூர் தியாகரை யதன்மிசை [6]யேற்றி
மேளவாத் தியங்களும் வீணைவாத் தியமும்
நாக சுரங்களு மூத
வளமறை யோர்வேத வாக்கிய மார்ப்பக்
கிளிமொழி யாரெதிர் கேளிக்கை யாட 20
வித்துவ செனங்கள் விபரீத மாகச்
சித்திர கவிகளால் தியாகரைப் புகழ
விலக்கமி லாக்குடை யேந்திப் பிடிக்கத்
தலத்தையெல் [7]லாஞ்சுற்றிச் சுவாமியார் .தம்மைக்
கோயிலி லேவைத்துக் கொற்றவன் கொலுவி 25
லேயிருந் தேபினு மென்செய்கு வானே.

திருவாரூர் நகரில் எத்தனை ஆலயங்கள் உண்டோ அத்தனை ஆலயங்களுக்கும் திருமஞ்சன நீராட்டுவித்தற்கு ஏற்பாடு செய்தான் மன்னன். திருமஞ்சனமாட்டித் தீபதூபம் முதலியன கொடுக்கச் செய்து தனக்கு அருள்புரிந்த தியாகராசப் பெருமானின் திருக்கோயில், அதன் திருமதில், மண்டபங்கள், கோபுரம், தூண்கள், கொடிக்கம்பங்கள் ஆகிய எல்லாவற்றையும் புதுப்பித்துப் பொற்சுண்ணம் பூசச் செய்து அழகுபடுத்தினான். இறைவனுடைய பூசைக்கு நீர்எடுக்கப் பொற்குடங்களை

வாங்கி வைத்தான். தேங்காய், இளநீர், பால், தேன், பழம், நீர் போன்றவற்றால் தியாகராசப் பெருமானுக்கு முழுக்கு செய்வித்தான். மல்லிகைமாலைகள் மணங்கமழும் மருக்கொழுந்து, வில்வம் போன்றவற்றை அணிவித்தான். அலங்காரம் செய்யப்பட்ட தேரின் மீது தியாகராசப் பெருமானை அமர்த்தச் செய்தான். மேள வாத்தியங்கள், வீணை, நாகசுரங்கள் போன்றவை முழங்க அந்தணர்கள் வேதம் ஒலிக்க, மகளிர் ஆடிவர, புலவர் பெருமக்கள் சித்திரகவிகளால் பெருமானைப் புகழ, அன்பர்கள் இறைவனுக்குக் குடை ஏந்தி வர ஏற்பாடு செய்தான். இத்தகு அழகிய கோலங்களோடு திருவாரூர் திருத்தலத்தை வலம் வரச் செய்தான். இறுதியாக இறைவனுடைய திருவுருவத்தை ஆலயத்தில் எழுந்தருளச் செய்து மன்னவன் கொலுமண்டபத்திலே வந்து வீற்றிருந்தான்.

எதுக்கும் - எல்லாவற்றிற்கும். அபிஷேகம் - திரு மஞ்சனம், முழுக்கு. தீபதூபம் - விளக்காலும் கற்பூரம் முதலியவற்றின் புகையாலும் அருச்சனை செய்தல். தயாளர் - அருட்குணம் உடையவர். உதகம் - நீர். கொழுந்து - மருக்கொழுந்து. விமலர் - தூயவர். நாகசுரம் - ஊதுகுழல், இசைக்கருவி. ஆர்த்தல் - ஒலித்தல் கேளிக்கை - மகளிர் விளையாட்டு. வித்துவ சனங்கள் - கற்றறிந்த சான்றோர். சித்திரகவி - கவிவகை நான்கில் ஒன்று; அவை ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என்பன. விலக்கம் - மாற்றம், நீக்கம்.

சு.சொல் - 1. மதிள் 2. தூணுகள் 3. பொறப்பூச்சு 4. யீசற்க்குத் 5. மாட்டிவித் 6. யேத்தி 7. லாஞ்சுத்திச்

Service to the Lord

33. The King arranged for the ceremonial bath - ritual
In all the temples of Tiruvārūr.
After formal worship with pomp and luxury,
The temple of Lord Tiyākēcar, the giver of the son
Was thoroughly renovated.
Walls, mantaps, towers and columns
Were painted afresh and beautified.
Golden vessels were bought for the *pūjai* of the lord,
And prayer offered with coconut, milk, honey, plantain and water.
The idol was decorated with garlands
Wrought of jasmine, bilva and fragrant herbs,
The richly - dressed God was mounted on chariot
And taken round the sacred precints of Tiruvārūr,
To the accompaniment of instrumental music,
Vedic chants by brahmins, dances by women
And recitation of eulogies by poets.

The much - embellished umbrella
Was held aloft by the devout.
After installing the deity in the temple,
The King retired to court.

(அரசன் செய்த அறச்செயல்கள்) சம்பை

34. தூராதி மன்னவர்வந்து சுதனுண்டோ வென்[1]வவர்க்குக்
காரானை பரிசிவிகை கனமாகக் கொடுப்பன்
ராசேந்திரனே சுதனுண் டாச்சுதோ வெனக்கேழ்க்கும்
வேதாந்த வேதியர்க்கு [2]விடுவானொரு கிராமம்
[3]கற்றபுல வோர்க்குந்துர கஞ்சிவிகை யும்பளிக்கை 5
யத்தமுந் [4]தான்தரும் சத்திய குணாளன்
பசியுடனே யரதேசி பரதேசி வந்தவர்க்குச்
சுகியுடைய சாதமிட்டுத் தூசுங்கொடுத் திடுவன்.

அண்டைநாட்டு மன்னவர்களும் வெகு தூரத்து நாட்டு மன்னர்களும் வந்து மன்னவனே மகன் பிறந்திருக்கிறானாமே என்று கேட்டு மகிழ்ச்சியைத் தெரிவிப்பார்கள். உடனே அவர்களுக்கு யானை, குதிரை, சிவிகை போன்ற பெரும் பரிசுகளை அளித்து மகிழ்வான் மன்னன். அவ்வாறு வந்து செய்தி வினவும் வேதம் உணர்ந்த அந்தணர்களுக்கு ஒரு கிராமத்தையே நன்கொடையாக அளித்து விடுவான்; கற்றறிந்த புலவர்களுக்குக் குதிரை, சிவிகை, பொன் ஆகியவற்றோடு மானியமாக நிலமும் கொடுத்துதவுவான்; பசியோடு வரும் உள்ளூர், வெளியூர்களைச் சார்ந்த யாசகர்களுக்கு வயிறார உணவிட்டு ஆடைகளையும் கொடுத்துதவுவான்.

தூராதி - தூரம் + ஆதி வெகுதூரத்து நாடு முதலியன. காரானை - யானை உம்பளிக்கை - உமபிளிக்கை - மானியநிலம். அத்தம் - பொன். அரதேசி - உள்ளூர்க்காரன். பரதேசி - வெளிநாட்டவா. தூசு - ஆடை.

சு.சொல் - 1 வவற்க்கு 2. விடுவ்வானொருக்கிராமம் 3. கற்றப்புலவோர். 4. தானதானதரும்.

The King's acts of Righteousness

34. Kings from far and near
From foreign lands and adjacent countries
Who felicitated king Rācēntiraṉ,
Were presented with elephants, horses and palanquins,
For Vētic brahmins who greeted him,
He gave possession of a whole village

The poets were honoured with
Horses, palanquin and gold,
Besides land to cultivate.
Beggars from within and without
Were abundantly fed and clothed.

(நாட்டு மக்களை மகிழ்வித்தல்) திரிபுடை

35. காசி வாழ்பர மேசு ரன்முத
[1]வீசராலைய மெங்குண்டோ அந்தத்
தேச மெங்கணுங் காணிக்கைகள் மன்னன்
செலுத்தி னானே

தனது தேசத்துக் குடியெல் லாரையும் 5
வருக வழைத்தனன் விருந்திட் டேயவர்
மனது மகிழவெல் லார்க்கும் பாகைகள்
வழங்கி னானே

கவியைப் பாடுவர் கண்ணை மறைப்பவர்
கம்ப மேறி வினோத மாடுவர் 10
யிவர்கள் தமக்கிர ணியமு தவினது
விலக்கமுண்டோ

சாலை சோலைதண் ணீர்ப்பந்தலும் புதிசா
யெவ்வி டத்துமுண் டாக்கியே அன்ன
சாலையுஞ் [2]சொர்ண சாலை யும்புதி
தாக வமைத்தான் 15

பால லோசன நீல கண்ட
பராப ரன்வர வீதி தனையதி
கோல மாய்க்கடைத் தெருவிஸ் தாரமாய்க்
கூட்டி யமைத்தான்.

பரமேஸ்வரன் எழுந்தருளியிருக்கின்ற காசித் திருத்தலம் முதலாக இறைவனுடைய ஆலயங்கள் எங்கெங்கு இருக்கின்றனவோ அந்த இடங்களுக்கெல்லாம் மன்னவன் பல அன்பளிப்புகளைத் தட்சணையாகக் கொடுத்தருளினான். தன் நாட்டு மக்களை எல்லாம் அரண்மனைக்கு வரவழைத்து அனைவருக்கும் விருந்தளித்தான். மேலும் அவர்கள் மனம் மகிழுமாறு நிலப்பகுதிகள் பலவற்றை வழங்கினான். கவிபாடும் கவிஞர்கள், கண்கட்டிவித்தை செய்வோர், கம்பத்தில் ஏறி அற்புதச் செயல்களைச் செய்து

காட்டுவோர் போன்ற நாட்டுப்புறக் கலைஞர்களுக்குப் பொன்னையும் பொருளையும் வாரி வழங்குவதில் சிறிதும் தயங்கினானில்லை.

மக்கள் நடமாடும் சாலைகள், மக்கள் கூடும் சோலைகள் போன்ற எல்லா இடங்களிலும் தண்ணீர்ப் பந்தல், அன்ன சாலை, சொர்ணசாலை ஆகியவற்றை அமைத்து மக்களுக்குத் தருமம் பல செய்தான்.

நீலகண்டனாகிய பரமேஸ்வரன் உலாவருகின்ற தெருக்களையெல்லாம் மிக அழகாக அலங்கரித்துக் கடைத் தெருக்களை அகலப்படுத்தி ஒழுங்காக அமைத்தான்.

காசி - கங்கைக் கரையில் உள்ள ஒரு திருத்தலம்; மோட்சத்திருத்தலங்கள் ஏழினுள் ஒன்று; அவை - அயோத்தி, அவந்தி, காசி, காஞ்சி, துவாரகை, மதுரை, மாயை என்பன. இவை சப்தபுரி எனவும் வழங்கும். காணிக்கை - தட்சணை, வெகுமானம். பாகை - நிலப்பகுதி, தலைப்பாகை எனினும் அமையும். கண்ணை மறைப்பவர் - கண்கட்டி வித்தை என்னும் ஜால வித்தைகளைச் செய்வோர். இரணியம் - பொன். பாலலோசன நீலகண்டன் - சிவபெருமான். உலோசனம் - கண். கோலம் - அழகு. விஸ்தாரம் - அகலம், பரப்பு.

சு.சொல் - 1. வீசுராலைய 2. சொற்ண.

Cheering the public

35 The King sent his thanks - giving offer
To the sacred shrine of Civaṉ at Benares
And to all the temples where the lord was consecrated
Invited cordially his country-men to the palace
Fed them well and gave them lands.
Poets, magicians and performers of acrobatics
Along with other folk artists
Were liberally given rich gifts and gold.
In such places where men gathered in large numbers,
Busy highways and orchards,
He built water - fountains and feeding choultries.
All the streets through which Civaṉ
Was taken in ceremonial procession
Were richly and colourfully decorated.

வசனம் - இந்தப்படி ராசேந்திரசோழன் சபா மண்டபத்திலிருந்து சகல தருமம் பண்ணிக் கொண்டிருக்கப் பட்டமாதேவி பாலனைக் கொஞ்சுவள். (9)

Prose : While the king was preoccupied with acts of richteousness, the Queen was busy fondling the child.

(தேவி மகனைக் கொஞ்சுதல்) **அர்த்தசந்திரிகை**

36. பாலனைக் கரத்தில் பாங்குட னெடுப்பள்
சோலையிற் கிளியெனச் சொலிமுத்த மிடுவள்
முழுக வாட்டியே முலையது கொடுப்பள்
அழகு பெறவிழியி லருமையை யிடுவள்
பலப்பல மணிகளைப் பாங்குட னணிவள் 5
கலகல வெனத்தண்டை காலினுக் கிடுவள்
சுட்டிகட் டுவள்முகச் சுந்தரம் பார்ப்பள்
கட்டி யணைத்துக்கொண்டென் கண்ணே யென்பள்
யித்தனை நாளு மெங்கிருந்தீ ரென்பள்
சித்தமுண் டாச்சுதே தியாகருக் கென்பள் 10
சூரிய வங்கிஷத் துரையே யென்பள்
காரண மாய்வந்த கன்னியே யென்பள்
உனைப்பெற் றேயினி யெனைப்பெறு மென்பள்
மனத்துய ரானது மாறிச்சு தென்பள்
யீச ரளித்தவிளங் கிளியே யென்பள் 15
ராசேந் திரன்மக னாரே வென்பள்.

மன்னன் நற்கருமங்களிலே ஈடுபட்டிருக்கப் பட்டமாதேவி குழந்தையை முறையாகக் கையிலே ஏந்தி முத்தமிட்டுக் கொஞ்சத் தொடங்கினாள். முதலில் முறையாக நீராட்டித் தாய்ப்பால் ஊட்டினாள். விலையுயர்ந்த அணிகலன்களைப் பூட்டினாள். காலில் தண்டையும், தலையில் நெற்றிச்சுட்டியும் அணிந்து கண்ணுக்கு மைதீட்டிக் குழந்தையின் முகஅழகைப் பார்த்து மகிழ்ந்தவளாய்க் கட்டியணைத்தபடியே கண்ணே! சோலைக்கிளியே! இத்தனை நாள் எங்கேயிருந்தாய்? தியாகேசப் பெருமானுக்கு இப்பொழுதுதான் அருள் பிறந்தது. சூரிய வமிசத்தில் தோன்றிய செல்வமே! இறையருளால் வந்து பிறந்த இளஞ்செல்வமே! இனி எங்களுக்கு எந்தவிதக் கவலையுமில்லை; எங்களுடைய துன்பமெல்லாம் நீங்கிவிட்டது என்றெல்லாம் கூறிக் கொஞ்சி மனமகிழ்ந்தாள்

பாங்கு - முறை, அழகு. சொலி - சொல்லி என்பதன் இடைக்குறை. முழுக வாட்டுதல்- நீராட்டி முழுகச் செய்தல். மை - கண்மை. சுட்டி - நுதலணி, நெற்றிச்சுட்டி. சுந்தரம் - அழகு. சித்தம் - மனம். கன்னி - இளமை.

The Queen fondling the baby

36. While the king was giving away gifts,
The Queen was cuddling the baby,

She gave it a ceremonial bath,
Fed it for the first time
Adorned it with jewels like anklet
And ornaments for the hair,
Applied collyrium to the eyes,
Hugged it lisping endearing words:
My darling, lovely parrot,
Whither were you till now?
Lord Tiyākēcar blessed me rather belatedly.
Darling of the Solar dynasty,
The supreme gift of the great lord,
We do not have any more worries;
All our sorrow is dispelled!

(இரத்தினத் தொட்டில் அமைத்தல்) ஏகதாளம்

37. பட்டமா தேவியும் [1]பார்த்திப னுடனொரு
தொட்டில் வேணுமிந்தச் சுதனுக்கென் றுரைத்தாள்
அரசனுந் தூதரை யழைத்தே மாந்தா
புரியாள ருக்கின்று புகல்வீ ரென்றான்
[2]சொன்னசொல் லாம்படித் தூதருஞ் சொல்லவே 5
அன்னவர் தங்கையி லாந்தொழி லாலே
[3]இரத்தின மழுத்திய தொட்டிலொன் றமைத்தந்தக்
கொற்றவன் மகிழவே வைத்தன ரெதிரே
மெச்சிமன் னவனந்த வீரபஞ் [4]சாளர்க்கு
உச்சித முங்கொடுத் [5]துடுகூறை போர்த்து 10
இவுளியுங் கொடுத்து[6]வெற் றிலைதுவர்க் காய்கொடுத்
தவர்களை மன்னவ னனுப்பினன் பரிவால்.

பட்டமாதேவியாகிய அரசியார் மன்னனிடத்தில் மகனுக்குத் தொட்டில் போட வேண்டும் என்று கூறினாள் உடனே அரசன் தூதுவரை அழைத்தான்; மாந்தாபுரியில் வாழும் பஞ்ச கம்மாளராகிய கலைஞர்களுக்குச் செய்தியைச் சொல்லியனுப்பினான். அதன் படியே தூதுவரும் சென்று கூறினர். கம்மாளராகிய பொற்கொல்லர் தங்களுடைய தொழில் திறன் முழுமையும் பயன்படுத்தி இரத்தினம் பதித்த தொட்டில் ஒன்றைச் செய்து மன்னவன் முன்னே கொண்டு வந்து வைத்தனர். மன்னவன் மகிழ்ச்சியடைந்து அந்தப்

பொற்கொல்லருக்கு வேண்டிய வெகுமானங்களைக் கொடுத்துப் பொன்னாடை போர்த்தி வெற்றிலைப் பாக்கு முதலான மரியாதைப் பொருள்களையும்; ஏறிச் செல்வதற்கான ஒரு குதிரையையும் கொடுத்து அன்போடு அவர்களை அனுப்பி வைத்தான்.

பார்த்திபன் - அரசன். சுதன் - மகன். மாந்தாபுரியாளர் - மாந்தாபுரி என்னும் பகுதியில் வாழ்வோர். வீரபஞ்சாளர் - பஞ்சகம்மாளர் என்னும் பொற்கொல்லர். உச்சிதம் - தகுதி, வெகுமானம். உடுகூறை - ஆடை. இவுளி - குதிரை. துவர்க்காய் - பாக்கு. பரிவு - அன்பு.

சு.சொல் - 1. பாற்த்திப 2. சொன்னச்சொல் 3. றத்தின 4. சாளற்கு 5. துடுகறை 6. வெத்திலை.

Making a cradle studded with gems

37. When Paṭṭamātēvi wanted a cradle to be made,
The king sent word to the goldsmiths at Māntāpuri
Through a responsible emissary.
The goldsmiths lost no time in executing the orders,
Made a cradle using all their talent,
Studded with costly and precious gems,
And brought it to the king.
Immensely overjoyed became the king,
Who honoured the craftsmen with gifts,
Gave them a golden shawl and betel leaves
Along with a horse for them to ride.

(வீதிவிடங்கனென்று பெயர் சூட்டுதல்) சம்பை

38. வேதசாஸ் திரத்தில் வல்ல வேதாந்த
வேதியர் தபோதனரை - நல்லநா - ளோதுமென வுரைத்தான்
சாஸ்திரவழி யாயோகம் [1]பார்த்துமறை யோர்சொல்லக்
கீர்த்திமன் னன்[2]சுதனைத் - தொட்டி - லேத்தின னப்போது
இடம்புரந்த ராசேந்திர னீன்றபெயர் வீதி 5
விடங்கனென்று வேதாந்த வேதியரிட் டாரே
அந்தணர் தபோதனர்க்கும் ஆதிபனப் போதுநல்ல
குந்தங்குடை [3]கொடுத்துச்சொர்ணங் கொடுத்துவிடை கொடுத்தான்
மன்னன்முக சாலைதன்னில் வந்திருந்த பேர்க்கெல்லாம்
[4]சொர்ணமடிக் கட்டிஎடுத்துச் [5]சூறைவிடுத் தானே. 10

வேதங்களிலும், சாத்திர முறைகளிலும் தேர்ந்தவர்களாகிய அந்தணர், முனிவர் ஆகியோரை அழைத்துக் குழந்தையைத் தொட்டிலிலிடுவதற்குரிய நல்லநாள் பார்த்துச் சொல்லுமாறு பணித்தான். அவர்களும் முறையாகப் பலவகைப் பொருத்தங்களுங் கூடிய ஒருநாளைக் குறித்துச் சொன்னார்கள். அந்த நல்ல நாளிலே குழந்தையைத் தொட்டிலிலிட்டு அக்குழந்தைக்கு வீதிவிடங்கன் என்ற பெயரையும் சூட்டினர். மன்னவன் மகிழ்ந்து அந்தணர்களுக்கும், முனிவர்களுக்கும் பொன்னும், பொருளும் வழங்கி அனுப்பினான். மேலும் அங்கு வந்திருந்த அனைவருக்கும் பொன் முதலானவற்றை வாரி வழங்கி மகிழ்ந்தான்.

தபோதனர் – முனிவர். யோகம் – பொருத்தம், பலன். ஆதிபன் – அரசன். குந்தம் – ஒருவகை நிதி. குடை – கொடை. முகசாலை – எதிரில். மடிக்கட்டுதல் – பரிதானம் கொடுத்தல். சூறை – கொள்ளை விடுதல், வாரி இறைத்தல்.

சு.சொல் – 1. பாற்றுமறை 2. சுதனைதொட்டி 3. கொடுத்து சொற்னங் 4. சொற்ன்னமடி 5. சூரை.

The child named Vitiviṭaṅkaṉ

38. The King requested brahmins and saints
Well - versed in ancient lore
To suggest an auspicious day
For the so-called cradle ceremony
When the day was fixed
After elaborate astrological calculations
The child was put in the cradle
And named Vitiviṭaṅkaṉ.
Brahmins and sages were given
Plenty of gold and goods,
Even others who were present
Were given rich and precious gifts.

வசனம் – இந்த விதமாய் 'ராசேந்திரசோழன் சிந்தை மகிழ்ந்து செழித்தங்கிருக்கப் பட்டமாதேவியும் பாலகனிருக்குந் தொட்டிலை யாட்டி யென்ன சொல்லுவள் தானே. (10)

சு.சொல் – 1. ராசேந்திரச் சோழன்.

Prose : When King Rācēntiraṉ was at the peak of bliss, what did Paṭṭamātēvi say rocking the cradle?

(தாலாட்டில் மகன் வடிவம்) **சிந்து**

39. ஐயனே கண்வளரு மண்ணலே கண்வளரு
மனங்க வடிவே கண்வளரும்
துய்யனே ராசேந்திர சோழபூ பதிதந்த
சுதனே லோகாதி பதியே (ஐயனே)
சோகமதெல் லாமப்பா லேகியே யழிகச் 5
சந்தோஷம் தளர்வ வாரூர்த்
தியாகரரு ளாலுலக மேககுடை யாயாண்டு
வாகைபெற வந்த [1]துரையே (ஐயனே)
குலம்விளங்க மனைவிளங்க குவலயமெல் லாம்விளங்கக்
கோகனகஞ் சூழு மாரூர்த் 10
தலம்விளங்கத் தாய்தந்தை தனக்குச்சிவ கதிவிளங்கத்
தரவந்த [2]வமுத பலமே (ஐயனே)
இடங்கனர சாளவல்ல துரைசோழ ராசேந்திர
னிகமெல்லா மிகுதனமே
துடங்குகினு மதிலுநால் மடங்குசெய்கு வீர்வீதி 15
விடங்கரே விமல ரருளே
ஐயனே கண்வளரு மண்ணலே கண்வளரு
[3]மனங்க வடிவே கண்வளரும்.

தொட்டிலில் இட்ட குழந்தையைத் தாலாட்டத் தொடங்கினாள் தேவி. சோழ மன்னவன் பெற்றெடுத்த மகனே! ஐயனே! அண்ணலே! மன்மத வடிவமே! இந்த நாட்டின் தலைவனே! எங்களுடைய துன்பமெல்லாம் ஒழிந்து மகிழ்ச்சி மிகுதியாகத் திருவாரூர் தியாகராசர் திருவருளால் இந்த நாட்டை ஒரு குடைக்கீழ் அரசுபுரிந்து வெற்றி பெற வந்த துரையே நீ கண் வளர்வாயாக.

சோழர் குலம் விளங்க, மன்னன் மனை விளங்க, இந்நிலவுலகமெல்லாம் விளங்க, செந்தாமரை மலர் நிறைந்து நிலவளம் மிகுந்த திருவாரூர்த் தலம் விளங்க, பெற்றோர்களாகிய எங்களுக்குச் சிவகதி விளங்க எல்லா வகைச் சிறப்புகளையும் எங்களுக்கு அளிக்க வந்த அமுதமே நீ கண் வளர்வாயாக.

இந்த நாட்டை ஆண்டுவரும் சோழ பூபதியின் நிலவுலகமெல்லாம் பெருஞ் செல்வம் நிறைந்தது. அதை மேலும் நான்கு மடங்காகப் பெருகச் செய்யும் திறன்வாய்ந்த வீதிவிடங்கனே! இறைவனின் அருட்செல்வமே கண் வளர்வாயாக.

அனங்க வடிவு - மன்மத வடிவம்; அனங்கன் - அங்கன் x அனங்கன் - உருவமில்லாதவன். லோகாதிபதி - உலகம் போற்றும் அதிபதி - தலைவன், மன்னன். லோகம் -

உலகம். சோகம் - வருத்தம். ஏகருடை - ஒப்பற்ற ஒரு குடை; குடை - வெண்கொற்றக்குடை, ஆட்சி நடத்துதல். வாகை - வெற்றி. குவலயம் - நிலவுலகம். கோகனகம் - செந்தாமரை. கோ+ கனகம் - செம்பொன் எனினும் அமையும். கனகம் - பொன். சிவகதி - மோட்சம். இகம் - இவ்வுலகம். விமலன் - தூயவன், இறைவன்.

சு.சொல் - 1. துறையே 2. வழுற்த 3. மணங்க.

The lullably reflecting the child's glory

39. The Queen began to sing a lullaby;
Progeny of the Cōḻa King, darling boy,
As handsome as Cupid, tomorrow's ruler,
The one destined to rule the whole country,
Thanks to the blessings of Tiyākarācar
May you prosper!
Nectar of the heart!
Adding glory to the Cōḻa country,
Nay, the whole world,
Under whose rule Tiruvārūr,
Abounding in lotuses is to prosper,
The one assuring us of salvation,
The abode of all good traits,
May you live long!
The Cōḻa country abounds in wealth
Which would increase four - fold
Under your able leadership,
Darling Vitiviṭaṅkaṉ!
May you enjoy prosperity!

(மன்னன்மகனுக்குக் கல்வி) திபதை

40. இந்தட வொப்பனை யிட்டுமைந் தனுக்குக்
கந்தரக் குழலினாள் காதலாய் வளர்க்க
வீதி விடங்கனெவ் விதம்பிர பலமதாய்
மேதினி தன்னிலே விளங்கினா னென்னில்
செங்கீரைத் தண்டு செழுத்தியாய் வளர்ந்த 5
பொங்கமாய்த் துரைசோழ பூபதி பாலன்

[1]தவழ்ந்தம் புவிதனிற் தத்தடி யிட்டுப்
பிவிஞ்சிட் [2]டரண்மனை பற்றி யுலாவி
மாதா பிதாமன மகிழவே மழலை
யோதி நாளேறி யொருவய தாகி 10
நாளொரு வண்ணமும் நாளொரு வடிவும்
நாளைக்கு [3]நாள்பினும் நாயக னாகி
வயதுஅஞ்சு மாகி வளர்ந்திடுஞ் சுதனைத்
துயரில்லா ராசேந்திர சோழபூ பதியும்
பள்ளிக் கூடத்தினில் படிப்பிக்க வேண்டி 15
தெள்ளிமை யாய்க்கல்வி சீருட னறிந்த
வாத்திமை யாளரை வருக வழைத்துப்
போர்த்தனன் பட்டாடை பொன்னினா பரணம்
தந்தனன் கரிபரி தண்டிகை சிவிகையுந்
தந்தும் பளிக்கையு முதவியே வேந்தன் 20
செல்வக்கு மாரனையும் சிங்காரஞ் செய்து
[4]பல்லக்கி லேற்றிப் பவனி யுலாத்தி
அமிர்த யோகத்தி லருஞ்சுதன் தன்னை
யுமதையா வென்றவ னோதவைத் தானே.

மேகத்தைப் போன்று கரிய, அடர்ந்த கூந்தலை உடையவளாகிய பட்டமாதேவியானவள் தன்மகனைப் பலவகையாக அலங்கரித்து அன்போடு வளர்த்து வந்தாள். சோழ மன்னனின் மகனாகிய வீதிவிடங்கனோ செங்கீரைத் தண்டானது வளர்வது போலச் செழுமையாகவும், அழகாகவும் வளர்ந்து தரையில் தவழ்ந்து தத்தித் தத்தி அடி எடுத்து வைத்து அரண்மனையில் உலவி வரத் தொடங்கினான். பெற்றோர் மனம் மகிழுமாறு மெல்லிய மழலைச் சொற்களைக் கூறி வந்தான். நாளொரு வண்ணமும் நாளொரு வடிவுமாய் வளர்ந்து ஐந்து வயதை எட்டினான்.

மகிழ்ச்சி மிகுந்த மன்னவன் தன் மகனுக்குக் கல்வியறிவையூட்ட வேண்டும் என்று கருதிக் கல்வியில் தெளிவுபெற்ற ஆசிரியர் ஒருவரை வரவழைத்தான். அவருக்குப் பட்டாடை அணிவித்துச் சிறப்பு செய்து பொன்னாலான பல அணிகலன்கள், யானை, தேர், சிவிகை, தண்டிகை ஆகியவற்றைக் கொடுத்துச் சிறப்பித்தான். அரசுமானியமாகச் சிறிது நிலத்தையும் அளித்தான். பிறகு நற்செயல்களுக்குரிய நல்ல வாரமும், நட்சத்திரமும் கூடிய அமர்தயோக தினத்தில் தன் செல்வ மகனுக்கு அலங்காரம் செய்யச் செய்து அவனைப் பல்லக்கில் ஏற்றி உலாவரச் செய்தான். ஆசிரியரிடம் தன் மகனை ஒப்படைத்து இவன் உம்முடையவன் என்று கூறிக் கல்வி கற்பிக்கச் செய்தான்.

இந்தடவு – இவ்வாறு. ஒப்பனை – அலங்காரம். கந்தரம் – மேகம் பிரபலம் – புகழ். செழுத்தி-செழிச்சி – வளமை. பொங்கம் – பொலிவு, அழகு. அம்புவி – அழகிய பூமி. மழலை – முழுமை பெறாத

மென்சொல். தெள்ளிமை - தெளிவு. உம்பளிக்கை - உம்பிளிக்கை - அரசு மானியம். பவனி - உலா. அமிர்தயோகம் - நல்ல வாரமும் நட்சத்திரமும் கூடிய நாள்.

சு.சொல் - 1. தவந்தம் 2. டரமனை 3. நாழ்ப்பினும் 4. பல்லக்கிலேத்தி.

Education for the prince

40. The Queen with locks as dark
As the gathering clouds,
Enjoyed dressing up the child
In colourful and gorgeous clothes,
While he, the son of the Cōla king,
Grew up with amazing vitality
Like the stalk of red spinach.
Slowly he began to crawl on the floor,
His movements were gentle and rhythmic,
The day soon came when he tread on the palaces expanse
And lisped sweet - nothings,
While time flew and he grew into
A healthy child aged five
To give him proper training and education
The king pitched upon a preceptor,
Presented him with a silken robe,
Also jewels wrought in gold,
Elephant, chariot and palanquin
Along with some land to cultivate.
On a day held auspicious
For the commencement of any good work,
The prince was made to wear costly attire
And circle the town in a palanquin.
The boy was then handed over to the teacher
With the words: I entrust him to you
For sound training of the mind.

(தெருக்களில் வீதிவிடங்கன்) **சம்பை**

41. அன்றுமிகு [1]சொர்ணங்க ளன்னதானம் பகிர்ந்து
என்றுமொரு சீரா யிருந்தான் பிரானும்
நேயமுட னேகலையும் நிறைவேற வேயோதி
யாயுதவித் தாண்மையுமச் சேயன்பழகி னானே
கூறுபரி கரியேறிக் கொண்டுவிளை யாடியுள்ளந் 5
தேறிய குமாரன்பதி னாறுவய தானான்
மற்றுமிருக் கின்றதுரை மக்களுட னேராச
புத்திரன்வெளிப் [2]புறப்பட்டா னத்தலத்தைப் பார்க்க
வந்துதெரு [3]வீதியினில் மைந்தனுல வியபோது
சுந்தரமின் னார்கள்[4]பார்த் தெந்தடவு சொல்வார் 10
காமனோ மயிலேறுங் கந்தனோ கந்தரிட
மாமனோ சானகி மணாளனிவன் தானோ
தாரகா வனத்திடையிற் தனித்துலவுஞ் சிவனாமென்
றாரூர்மின் னாரெல்லா மதிமோக மானார்.

தன் மகன் கல்வி பயிலத் தொடங்கிய அந்த நல்ல நாளில் மன்னன் சொர்ணதானம், அன்னதானம் முதலான தருமங்களைச் செய்து மகிழ்ந்தான். மன்னன் மகனாகிய வீதிவிடங்கன் கலைகளில் மிகவும் ஈடுபாடு கொண்டவனாகி அனைத்துக் கலைகளிலும் தேர்ச்சிபெற்றான். வில்வித்தை, வாட்பயிற்சி போன்ற ஆயுதப் பயிற்சிகளிலும் வல்லவனானான். குதிரையேற்றம், யானையேற்றம் முதலியவற்றிலும் சிறந்த பயிற்சிபெற்ற வீதிவிடங்கன் உள்ளந் தெளிவடைந்தவனாகிப் பதினாறு வயதை அடைந்தான்.

மன்னன் மகனாகிய வீதிவிடங்கன் அமைச்சர் முதலான அரசவைச் சான்றோர்களின் மக்களுடன் சேர்ந்து நகரத்தைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டான்.

அவன் தெருக்களின் வழியாகச் சென்றபோது அவனைப் பார்த்த அழகிய பெண்கள் பலர் அவன் அழகில் ஈடுபட்டவர்களாகி, இவன் மன்மதனோ மயில் வாகனனாகிய ஆறுமுகனோ என்று ஐயமுற்றார்கள். சிலர் இவன் முருகனின் தாய்மாமனாகிய திருமாலோ சீதாபிராட்டியின் கணவனாகிய இராமபிரானோ என்று அதிசயித்தார்கள். மேலும் சிலர் தாருகாவனத்தில் உலவிவரும் சிவபெருமானோ என்று மயங்கினார்கள்.

பகிர்ந்து - பங்கிட்டு, பங்கிட்டளித்து. பிரான் - தலைவன், மன்னன். ஓதி- கற்று. ஆயுதவித்தாண்மை - ஆயுதவித்தை, போர்க்கலப் பயிற்சி. தேறிய - தெளிவடைந்த, துரைமக்கள்- தலைவர்களின் மக்கள். தலம் - நகரம். சுந்தரம்- அழகு. மின்னார் - மின்னலைப் போன்றவர்கள், மகளிர். கந்தரிடமாமன் - திருமால். சானகி - சீதை. சானகிமணாளன் - இராமபிரான். தாரகாவனம்-

தாருகவனம். தேவதாருவனம் - பிருகு முதலான முனிவர்கள் தவஞ்செய்த வனம். இந்த வனத்திலிருந்த முனிவர்களும் முனிவர் தேவியரும், கருமமே பலன் தருவது; கற்பே உயர்ந்தது; தெய்வம் என்பதே தேவையில்லாதது என்றெல்லாம் எண்ணி இறைவனை இகழ்ந்திருந்தனர். இந்த எண்ணத்தை நீக்க விரும்பிய சிவபெருமானும் திருமாலும் முறையே பிட்சாடன மூர்த்தியாகவும் மோகினியாகவும் திருக்கோலங்கொண்டு இந்த வனத்தில் தோன்றினர். தோன்றிய அவர்களில் பிட்சாடனமூர்த்தி முனி பத்தினியர் முன்பாகவும் மோகினி முனிவர்கள் எதிரிலுமாகச் சென்றனர்.

மோகினியின் அழகில் மயங்கிய முனிவர்கள் தங்கள் நியமத்தில் தவறினார்கள். பிட்சாடன மூர்த்தியின் அழகில் ஈடுபட்ட முனிபத்தினியர் அவர் பின் செல்லத் தொடங்கினர் என்பன தாருகவனச் செய்திகள்.

சு. சொல் - 1. சொற்னங்க 2. பிறப்பட்டா 3. வீதினில் 4. பாற்தெந்தடவு.

Vitivitaṅkaṉ going round the town

41. *On the auspicious day the son began* his studies,
The king distributed wealth and gold
Fed the poor and the needy
And many other acts of righteousness.
The son became an adept in wielding the bow and the sword,
Picked up horse riding and elephant ride
And attained the age of sixteen
The prince in the company of the ministers
And other royal retinue
Formally went round the streets of the town
When many women attracted by his figure
Wondered whether he was Lord Cupid
Or Āṟumukaṉ, perhaps Murukaṉ's uncle Tirumāl,
Or Rāmaṉ, the spouse of revered Citai;
Others were led to believe that he was Civaṉ
Wandering in the Tāruka forest.

வசனம் - மெல்லியர் வீதிவிடங்கரைப் பார்த்து மையலால் பின்னையும் வார்த்தையென் சொல்வார். (11)

Prose : *What did the women who fell for Vitivitaṅkaṉ say?*

(மகனைக்கண்ட மங்கையர் பேச்சு) **நாடகத்தரு**

42. சேரப்போய்க் கொங்கை யானையைக் காட்டிச்
சிறுநகை செய்துஅழைப் போமோ
மாரைப் பாரென் முகத்தினைப் பாரென்று
வாலக் குமாரனைக்கேழ்ப் போமோ
தூரப் போனபின்னென் செய்குவோ மிப்போ 5
தோகையர் கூடிவளைப் போமோ
பேரைக் கேட்டவன் மீது சங்கீதப்
பிரபந்தங்கள் சொல்லிப்புகழ் வோமோ
சமுதாளி யைக்கேட் டதுசாக் காகத்
தழுவிப் பிடித்துத்தணி வோமோ 10
உமதூ ரெவ்விட மென்றுகேட் டெங்க
ளூருக்கு வந்துபோமென் போமோ
எமதாசை வசமல்ல [1]காணின் றிரவுக்
கிருமெனச் சொல்வோமோ
அமையா திச்சை [2]யின்றைக்கெல் லாமவ 15
ணண்டையில் வாங்காதிருப் போமோ.

அரசகுமாரனின் அழகில் மயங்கிய பெண்கள், அவன் இவ்விடத்தைவிட்டுச் சென்றுவிட்டால் என்ன செய்வது? இப்போதே அந்த இளம் வாலியன் எதிரில் சென்று அனைவரும் சூழ்ந்து அவனை வளைத்துக் கொள்ளலாம். அவனருகில் சென்று, புன்னகை செய்து, கொங்கையாகிய யானையைக் காட்டி, என்னைப்பார், என் முகத்தழகைப்பார் என்றெல்லாங் கூறலாம். அவன் பெயரைக் கேட்போம்; அப்பெயரை வைத்து அவனைப் புகழ்ந்து பாடல்களைச் செய்து பாடலாம். அவனுடைய உடைவாளைக் கேட்பதுபோலச் சென்று ஆசைதீர அவனைத் தழுவிக்கொள்ளலாம். தங்கள் ஊர் எது என்று கேட்டு, எங்களூருக்கு வந்து செல்லுங்கள் என்று கேட்டுக்கொள்ளலாம். அங்கு வந்த பின் எங்கள் ஆசையை எங்களால் கட்டுப்படுத்தமுடியவில்லை; இன்று தங்கிச் செல்லுங்கள் என்று கூறலாம். இன்றைக்கெல்லாம் பேசினாலும் ஆசை அடங்காது எனவே இன்று முழுவதும் அவனை விட்டு நீங்காமல் அவனுடனேயே இருக்கலாம் என்றெல்லாம் மனம் போனவாறு பேசிக்கொண்டார்கள்.

சிறுநகை – புன்முறுவல். வாலக்குமாரன் – இளம் வாலிபன். சமுதாளி – கத்தி, உடைவாள். சாக்கு – போலிக்காரணம். தணிதல் – ஆசைதீர்தல். வசம் – கைவசம், கீழ்ப்படிதல். இச்சை – ஆசை. அண்டை – அருகு. வாங்குதல் – நீங்குதல்.

சு.சொல் – 1. காணிண்ணிரவுக் 2. யிண்ணைக்கெல்.

The talk of the women

42. The women were anxious that
The comely young man might leave soon
Throwing them in downright despair.
Would it not be discreet to surround him,
Tempt him with our elephantine breasts
Utter words of passion, sweet - nothings:
Look at me dear, examine my face.
We would ask him his name
And build love songs around it,
Which we shall render melodiously.
We would ask him for his sword
And embrace him on the sly.
We would gain upon him slowly
By asking his place of birth,
Invite him to our town
Disclose our surging passions
And insist on his further stay.
Our lust would not cool
Even if we keep his company the whole day,
We would rather try to retain him for ever.
So ran the mad prattle
Of the love - lorn lasses.

வசனம் - பின்னுமே தென்னச் சொல்லி மோகிப்பர். (12)

Prose : What more did they prattle in the heat of their passion?

(மங்கையர் ஆசை) **தரு**

43. மாலாகி மேல்விழுந்து லீலா விநோதவகை
நாலா வுபாயமும் பண்ணா லிருப்பானோ
மாரா சோழாதிப குமரா எங்கள்மனைக்கு
வாரீ ரொருமுத்தந் தாரீரென் போமோ

வேறேது சிந்தையினி யாறாதென் றுப்பரிகை 5

ஏறாமல் நெஞ்சுபல கூறாகினார்.

அவன்மீது மையல்கொண்ட நாம் அவன்மீது விழுந்து பலவகையான இன்ப விளையாட்டுகளை விளையாடினால் இவ்விடம் விட்டு நீங்காமல் இருப்பானோ? மன்மதனே! சோழமன்னன் மகனே! எங்கள் வீட்டுக்கு வரவேண்டும்! வந்து ஒரு முத்தம் தரவேண்டும் என்று கேட்டாலென்ன? இவ்வாறு பலவாறு பேசி மனம் ஆறுதலடையாதவர்களாய் மேல் மாடிக்கு ஏறிச் செல்லாமல் வருந்தி நின்றார்கள்..

மால் - மயக்கம். லீலாவினோதம் - இன்பவிளையாட்டு. உபாயம் - தந்திரம். பண்ணால் - செய்தால். மாரன் - மன்மதன். ஆறாது - தணியாது. உப்பரிகை - மேல்மாடம்.

The idle prattle of the love - lorn women

43. If we pounce on him with passion
And play pleasant tricks of love,
Would he care to remain for ever?
Would it be more prudent to address him,
Dear Cupid, progeny of the Cōḻa king,
Why don't you visit my house
And kiss me hot
So that my lust would cool?
Indulging in such vain talk,
The women stood below
Without making it for the first floor.

வசனம் - இந்தட வாரூர்ப் பட்டணமெல்லாம் மைந்தனைப் பார்த்து மையலாலுருக ராசகுமாரனை வேசியர் ஸ்திரீகள் ஆசை கொண்டங்கனென் பேசுவாரென்னில். (13)

Prose : While all the women of Ārūr spoke such words of passion, how did the whores react?

(மையல் கொண்ட மகளிர் கூற்று) சிந்து

44. மைய்யலானோ மெம்மைச்சேர வாரீரா துரையே
வெய்ய வன்குல சுகேந்திரா வீதி
விடங்கபோ கேந்திரா
[1]வித்தை கற்ற சமர்த்தை யாமறியத்
தொடுத்தறி வித்தி டீரோ (மையலா) 5
பூதலத்துமன் னர்க்கெல்லாம் புருஷசிகா மணியே

ஆதரித் தோமும்மைத் தானே ஆகையால்
தேவரீ ரிப்போ ஆசையின் படியே
சுகந்தருவீ ரிசைந்து (மையலா)
[2]பிரயாச மென்ன நாரி யடவியிற் சிகாரி 10
வந்த மன்னவர் தாரி
வசமா யுனக்குத் தாறோம் (மையலா)
போன பட்சி ரெண்டு தங்கி
எங்களிடங் கலந்து
வணங்க சாகரமுங் கொடீரோ (மையலா) 15
புண்ணிய ராசேந்திர சோழபூபதி சுதனே
பண்ணிய தவமெமக்குப் [3]பலித்தது தேவர்தேவே
பாட்டு மேல்விளை யாட்டு மாய்மய
லோட்டு வீர்மத னாட்டி போலேமைய
லானோ மெம்மைச்சேர வாரீரா துரையே. (மையலா) 20

சூரியகுலத் தலைவ்னே! இன்பந்தரும் வீதிவிடங்கனே! துரையே! உம்மீது மையலானோம். நீர்கற்ற வித்தைகளையெல்லாம் நாங்கள் அறிந்து இன்பமடையும் படியாக எங்களிடம் காட்டி எங்களை மகிழ்ச்சியடையச் செய்யமாட்டீரா?

இந்த நிலவுலகத்திலுள்ள மன்னர்களுக்கெல்லாந் தலைவனாக விளங்கும் ஆண்சிங்கமே! உம்மீது அன்புகொண்டோம். மனமகிழ்ந்து எங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவீர்! இதில் தங்களுக்கு வருத்தமேன்? பெண் வேட்டையில் சிறந்தவனே! நாட்டு மன்னவருக்கு உரிமையுடையவனே! இன்பமாகக் கலந்து இணையாகப் பறந்து திரியும் பறவையைப்போல எங்களைச் சேர்ந்து இன்பக்கடலில் மூழ்கச் செய்யமாட்டீரா?

சோழ மன்னனின் மகனே! தலைவனே! இதுவரை நாங்கள் செய்து வந்த தவத்தின் பலன் தங்களைக் கண்ட இன்றுதான் நிறைவேறியிருக்கிறது. தேவமங்கைபோல ஆடலும் பாடலும் நிகழ்த்துவோம். தங்கள்மீது மோகங்கொண்ட எங்களைச் சேர்ந்து ஆசையை நிறைவேற்றுங்கள்.

வெய்யவன் - சூரியன் சுகேந்திரன் - சுக இந்திரன் - சுகம் தரும் தலைவன். போகேந்திரன் - போக இந்திரன் - இன்பம் தரும் தலைவன். புருஷசிகாமணி - சிறந்த ஆண்மகன். பிரயாசம் - வருத்தம். நாரி - பெண். சிகாரி - வேட்டை. தாரி - தரித்தவன், உடையவன். சாகரம்- கடல் சுதன் - மகன் மதனாட்டி - ஆட்டி - பெண் - இன்பம் தருபவள்.

சு.சொல் - 1. விற்றைகற்ற சமற்றை. 2. பிறையாச 3. பலித்துது.

Women in love

44. Head of the Solar dynasty!
Vitiviṭaṅkaṉ! the perennial source of pleasure!

We have fallen for you, dear one.
Why don't you display your aesthetic skill
And provide us with thrill and excitement?
Leader of the kings of the Earth!
Brave one! we wish, you condescend
To satisfy our deep - seated craving.
Master of seduction! Noble prince!
Like love - birds revelling in pleasure,
Why don't you unite with us
And provide exhilaration?
Son of the Cōḻa King! Born leader!
Your very sight has brought us
Fulfilment, our protracted penance
Has at last borne fruit,
We beseech you to clasp us
Who can sing and dance like celestials.

(வீதிவிடங்கன் வீடு திரும்புதல்) ஏகதாளம்

45. வேசிய ரிவ்வித மாசைகொண் டுரைக்கக் குமாரனும்
வீசினன் போர்வை மதத்த [1]வேசியர்க்கு
மன்னவன் மகனொரு பதக்கந் தனைக்கொடுத்
தப்பால் நடந்தனனே
போத விராசர்கள் புத்திர ருடனே 5
வீதி விடங்கன் வீட்டில்வந் தனனே.

வீதிவிடங்கன்மீது ஆசைகொண்டு மயங்கிப்பேசிய மகளிருக்கெல்லாம் போர்வையையும் பதக்கத்தையும் வழங்கிவிட்டு, உடன் வந்த அரண்மனைக்குரிய தன் நண்பர்களுடன் கூடி அரண்மனையை வந்து அடைந்தான்.

மதத்தல் - மயங்குதல்.

சு.சொல் - 1. வேசியற்கு

Vitiviṭaṅkaṉ returns to his abode

45. When the whores uttered
Such passionate words,

Vitiviṭaṅkaṉ gave them shawls and jewels
And hastened to the palace
In the company of his friends.

(மன்னன் தன் மகனுக்குக் கூறும் அறிவுரை) **சம்பை**

46. இந்தவச னங்கேட்டு ராசேந்திர பூபதியும்
மைந்தனுழி வந்தென்ன வார்த்தையுரைத் திடுவான்
அறியாத நீநம்மை யறியாம லூரெல்லாம்
வெறிபோலத் திரிவரோ குறியல்ல [1]வென்றான்
தெரியாத படியினாற் தெருவிலேகி யின்னம்
மரியாதி யல்லமனை மரியாதி ரென்றான்.

நிகழ்ந்த செய்திகளை யெல்லாங் கேட்டான் சோழ மன்னன்; வீதிவிடங்கனிடத்தினிலே வந்தான். மகனே! நீயோ அறியாப் பருவத்தையுடையவன்; உலக நிகழ்ச்சிகள் எதையும் அறியாதவன். தந்தையாகிய என்னிடம் கூறாமல் நகரத்திலெல்லாம் சுற்றித்திரியலாமோ? எந்தவித நோக்கமும் இல்லாமல் இப்படித் தெருக்களில் சுற்றித் திரிவது வெறிபிடித்த செயலல்லவா? இது நல்ல செயல் அன்று; இனி இவ்வாறு தெருக்களில் செல்வது நம் பெருமைக் குரியது ஆகாது எனவே இனி அரண்மனையைவிட்டுச் செல்லாதே என்று கூறினான்.

உழி -அருகில், இடம். அறியாதவன் - ஒன்றுந் தெரியாதவன்; அறியாமை மூவகைத் தீமைகளில் ஒன்று - அவை - அறியாமை, ஐயம், திரிபு என்பன. நம்மை - நாம் என்னும் தன்மைப்பன்மை, உருபேற்க 'நம்' என்றாயிற்று; சிறப்பு கருதி தீன் என்னும் ஒருமையில் பயன்படுத்தப்பட்டது. வெறி - மூர்க்கம், பயித்தியம். குறி - நன்மை, முறை. மரியாதி - மரியாதை என்பதன் கொச்சை; வரம்பு, ஒழுக்கம். மனை - வீடு.

சு.சொல் - 1. வென்னான்.

The King's advice to his son

46. When the King knew of
Vitiviṭaṅkaṉ's city tour
And the happenings thereof,
He chose to address him:
Dear son, you are very innocent
And ignorant of worldly ways;
Is it not highly improper
To go round the town without my knowledge?

Aimless roaming about
Is the lot of the insane,
This is not anything commendable
And does not become of a prince.
In future such a course of action
May please be avoided.

(மகன் மன்னிக்க வேண்டுதல்) **ஏகதாளம்**

47. கொற்றவன் கூறக் குமாரன்கை [1]வீக்கியே
புத்தி புத்தியென் றுரைத்தன னறிவோன்
நினைவின் படிதிரிந்த நேரத்தைத் தேவரீர்
மனது சமியுமென்ன வணங்கினன் சிறுவன்
தந்தையும் சுதனிட சற்குண மறிந்தே
[2]நந்தமி லும்பல வந்தனென் றமைந்தான்.

மன்னனாகிய தந்தை கூறியதைக்கேட்டான் மகன், உடனே கைகளைக் கட்டியவாறே புத்தி புத்தி என்று கூறினான். அறிவுடையவனாகிய வீதிவிடங்கன் தந்தையை நோக்கி என் மனம்போனபடி திரிந்த என்னுடைய தவறான செயல்களைத் தாங்கள் பொறுத்தருள வேண்டும் என்று கூறி வணங்கினான். மன்னவன் தன் மகனின் நற்குணங்களை அறிந்தவனாதலின் நம்மைக் காட்டிலும் மகன் திறமைசாலி என்று உணர்ந்து அமைதியடைந்தான்.

வீக்குதல் - கட்டுதல். அறிவோன் - அறிவுடையோன் சமித்தல் - பொறுத்துக் கொள்ளுதல். சற்குணம் - நல்லபண்பு. நந்தமிலும் - நம் தம்மிலும் - நம்மைக் காட்டிலும். பலவந்தன் - திறமையுள்ளவன். அமைதல் - அமைதியடைதல்; மனநிறைவடைதல்.

சு.சொல் - 1. விக்கியே 2. னந்தமிலும்.

The son craving pardon

47. On hearing the King's sermon,
The son submissively folded his hands
And sought his pardon.
Yes, Vitiviṭaṅkaṉ, the wise boy
Saluted his father after craving apology.
Knowing the merits of his son,
The father was proud and felt
That the son excelled him in discretion.

வசனம் - மன்னனும் தேவியும் மகனுக்குப் புத்தி பண்ணியே சுகித்துப் பார் புரந்திருந்தார். (14)

Prose : The King and the queen found delight in offering timely advice to the son and in moulding him properly.

(சிவபெருமான் தேவர்களை அழைத்தல்) **திரிபுடை**

48. இன்ன [1]வாறிவன் இருக்க மேருவு
தன்னில் வாழ்சிவனார் மகிழ்ந்து
மன்னன் [2]மேல்கிருபை வாரி யாகியே
யன்ன காலைநந்தி தேவரை
யழைத்துத் தேவர்கள் வந்து நம்பதி 5
சேரவே தெய்வத் துந்துமியை
முழக்கென்ன முழக்கினர் விந்தை யாக

சபையி லாடிய நாத னார்சொன்ன
விபர மாம்படி நந்தி பேரிகைக்
குபகு பவென முழக்குத லெல்லா 10
ருக்குங்[3] கற்பித மாகி
ஏக நாதனைக் காண வந்தவர்
வாக னந்தனி லேறி வந்துமை
பாக னார்பதம் சேவித்தார் [4]பிரிய
மாக வேதான். 15

வந்து வணங்கிய தேவர் களைவெள்ளை
நந்தி வாகனர் வாழ்த்தி யிருமென்று
சிந்தை [5]கூர்ந்துரை கூறத் தேவர்கள்
பந்தி யாகயிருந் தெல்லாரும் பராபரா
கங்கை யின்[6]அணங்கு சடைமுடி யாயுன் 20
மகிமையைஅறிந்திலோம் சிவனே யென்றே
பின்னும் வருந்தி யுரைப்பார்.

சோழன் மகிழ்ச்சியோடு அரசுபுரிந்து வருகிறபோது திருக்கயிலாய மலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் சோழனின் ஆட்சிமுறைகளைக் கண்டு மனமகிழ்ச்சியடைந்தவராய் மன்னன் மீது தன் அருளைப் பொழியத் தொடங்கினார். உடனே தன் துவாரபாலகராகிய நந்திதேவரை அழைத்தார். தேவர்களெல்லாம் நம் தலமாகிய திருக்கயிலாயத்துக்கு வரவேண்டும் என்று பேரிகையறைந்து தெரிவியும் என்று கட்டளையிட்டார்.

திருச்சிற்றம்பலத்திலே திருநடம் புரிந்தவராகிய சிவபெருமானது ஆணையின்படி நந்திதேவரும் பேரிகை முழக்கித் தேவர்களுக்குத் தெரிவித்தார். நந்திதேவரின் முழக்கத்தைக் கேட்ட தேவர்கள் அனைவரும் செய்தியறிந்து அவரவர் தத்தம் வாகனங்களில் ஏறிப் புறப்பட்டு வந்தார்கள். உமாதேவியாரைத் தம் இடது பாகத்திலே தாங்கியிருப்பவராகிய சிவபெருமானைக் கண்டார்கள். மிகுந்த அன்போடு அவர்தம் திருவடிகளில் வணங்கினார்கள்.

நந்திவாகனராகிய சிவபெருமான் தம்மை வணங்கிய தேவர்களை வாழ்த்தினார். மனமகிழ்ச்சியோடு அவர்களை அமரச்செய்தார். அவ்வாறே அவர்களும் வரிசைவரிசையாக அமர்ந்தார்கள்.

அவர்கள் இறைவனைநோக்கி ஒப்பற்றவனாகிய எங்கள் தலைவனே! கங்கையைத் தரித்த சடாமுடியையுடையவனே! சிவபெருமானே! தங்கள் பெருமைகளையெல்லாம் அறியாதவர்களாகவே இருந்துவருகிறோம் என்று கூறி வருந்தினார்கள்.

மேருவு - மேரு - பொன்மயமாகிய மலை. இங்கே கயிலாய மலையைக் குறித்தது. கிருபைவாரி - கருணைக்கடல். அன்னகாலை - அப்பொழுது. நந்திதேவர் - சிவபெருமானின் வாகனமாகவும், துவாரபாலகராகவும் இருப்பவர்; சிவபெருமானின் நேரடி முதல் மாணாக்கருமாவார் நம்பதி - நமது நகரம்; கயிலாயம். தெய்வத்துந்துமி - தேவருலகப் பேரிகை சபையிலாடியநாதன்- சிவபெருமான். சபை - திருச்சபை; சிதம்பரத்திலுள்ளது. இது சிற்சபை, கனகசபையென இரு வகைப்படும். இவற்றுள் கனகசபையே சிவபெருமான் ஆனந்தத் தாண்டவஞ்செய்த திருச்சபை. இந்த ஆனந்தத்தாண்டவம் ஐவகைத் தொழிலின் பொருட்டு நிகழ்த்தப்பட்டது. ஐவகைத்தொழில்கள்- படைத்தல் (சிருட்டி), காத்தல் (திதி), அழித்தல் (சங்காரம்), மயக்கம் (திரோபவம்), அருளல் (அனுக்கிரகம்) என்பன. குபகுபவென - ஒலிக்குறிப்பு. கற்பிதம் - கட்டளை. ஏகநாதன் - ஏகநாயகன், ஒப்பற்ற தலைவன்; சிவபெருமான். சிந்தை கூர்ந்து - மனம் விரும்பி. பராபரன் - பரன் + அபரன் - பரன் - முன்னவன்; அபரன் - பின்னவன்; ஒப்பற்றவன். அணங்கு - சத்தி,தேவி.

சு.சொல் -1.வாரிவன் 2.மேல்கிறுபை 3.கற்புதாகி 4.பிறிய 5.கூர்ந்துறை 6. அனங்கு.

Lord Civaṉ invites the Gods

48. Lord Civaṉ, the one who had His abode
In Mount Kailas,
Felt elated at the just rule of the Cōḻa King
And showered on him His blessings.
The Lord summoned his gate keeper Nanti
And ordered him to invite by tom - tom
All the tēvās to Mount Kailas.
Obeying his master

Who had performed the cosmic dance at Tiruccirrampalam,
Nanti forthwith beat the drum
And conveyed the message.
The Gods lost no time
In reaching Civan's abode
On their respective vehicles,
Espied the Lord with spouse on left,
Paid obeisance to Him.
The Lord riding Nanti, the bull,
Blessed the assembled Gods liberally
And bade them take their seats.
The Gods, in turn, eulogised Civan:
Matchless leader, the one wearing Ganges
On the matted locks, Civan, the great,
We regret for not fully realising all Thy glories!

(தேவர்கள் அழைத்த செய்தி யாதென வினவுதல்) சிந்து

49. சிவனே யெமையழைத்த [1]சேதிசொல்ல வேணும்
[2]செவிப்பொறி யோசை கொண்டோம்
தேவரீர் பாதமுங் கண்டோம் (சிவனே)

பூமியிற் புதுமை யுண்டோ - போகவுந் தயவு முண்டோ
தேமமிகு [3]கொன்றைத்தார் சேது சடாதரா (சிவனே) 5

நடனம் புரிந்த ராயா - நாயகி பவானி நேயா
விடையேறி வாழு மீசா - வெள்ளிமலை வாசா (சிவனே)

நாகமே யுரத்த ணிந்தோய் - நாகமே பணியு கந்தோய்
நாகமண்ட நாக மர்னீர் - நாவிற் பெரிய ரானீர் (சிவனே)

காசியெழு முதல னந்தம் - யீச ராகவே யிருந்து 10
பூசை கொண்ட தேவா - தேவர்புகழு மானு பாவா
சிவனே எமையழைத்த சேதிசொல்ல வேணும்.

ஐயனே! தாங்கள் பேரிகைமுழக்கித் தெரிவிக்கச் சொன்ன செய்திகளைக் கேட்டோம். உடனே புறப்பட்டு வந்து தங்கள் திருவடிகளைக் கண்டு வணங்கினோம் தேன்நிறைந்த கொன்றைமாலையை யணிந்தவனே! சிவந்த சடாமுடியை யுடையவனே!

பொற்சபையிலே நடம்புரிந்த எங்கள் தலைவனே! அம்மை பார்வதி தேவ்வியின் நாயகனே! இடபவாகனத்தையுடைய இறைவனே! வெள்ளியங்கிரியாகிய கயிலையிலே எழுந்தருளியிருப்பவனே! பாம்பினை மார்பிலே மாலையாகவும், கைகளிலே ஆபரணமாகவும் அணிந்தவனே! மலைகளெல்லாம் நெருங்கி உயரும்படியான பரந்த வானவெளியாகி நின்றவனே! பிறழ்தலில்லாத நாவினை யுடையவனே! காசி முதலான ஏழு திருத்தலங்களிலும் எழுந்தருளி அன்பர்களின் பூசைகளை ஏற்றுக் கொள்ளுபவனே! தேவர்களெல்லாம் புகழும் பரமஞானியே! சிவபெருமானே! எங்களை யழைத்ததன் காரணம் என்ன? பூலோகத்தில் ஏதேனும் புதுமை நடந்துள்ளதா? நாங்கள் பூலோகம் செல்ல வேண்டிய நல்ல செயல்கள் எவையேனும் உள்ளனவா கூறியருளுங்கள்.

சேதி – செய்தி. செவி – காது. பொறி – உறுப்பு. தேமம் – ஈரம்; தேன்சொரிதலால் ஏற்படும் ஈரம். சேது – செம்மைநிறம். சடாதரன் – சிவபெருமான்; சடை – தரன் – தரித்தவன். ராயன் – தலைவன், அரசன். பவானி – பார்வதிதேவி. நேயன் – அன்பன். விடை – இடபவாகனம். வெள்ளிமலை – கயிலைமலை. உரம் – மார்பு. பணி – ஆபரணம். நாகம் – மலை, ஆகாயம். காசிமுதலனந்தம் – காசி முதலான சத்தபுரி – ஏழுதிருத்தலம் – அவை – அயோத்தி, அவந்திகை, காசி, காஞ்சி, துவாரகை, மதுரை, மாயை என்பன. மானுபாவன் – மஹாநுபாவன் – பரமஞானியானவன்.

சு.சொல்– 1. சேதிச்சொல்ல 2. செவிபெரியோசை 3. கொண்ணைத்.

The Gods want to know why they were summoned

49. Sir, we heard Thy urgent message
Delivered on the drum,
Forthwith we started
And hastened to pay Thee
Our respectful homage.
The wearer of the *Konrai* garland
Whose matted locks are red!
The supreme leader who performed
The cosmic dance in the Golden Assembly!
Loving spouse of Goddess Pārvati!
The rider of the bull
Living in snowy Kailas!
The wearer of the dreadful snake
Round the neck and the arms!
The one with a chaste tongue
Who accepts worship at Benares

And at seven other shrines!
The great god eulogised by lesser Gods,
The omniscient one, Lord Civaṉ,
Please enlighten us on this sudden summoning.
Has anything new happened on earth,
Are we to do any service thither?

வசனம் - விண்ணவ ரிப்படி விமலரைக் கேழ்க்கையில் அண்ணலுமமரருக் கியாதெனச் சொல்லுவார். (15)

Prose : When the gods asked Civaṉ thus, how did he react?

(சோழனை நம்பதிக்குக் கொண்டு வரலாமா என வினவுதல்)

ஏகதாளம்

50. நம்பதி தொறும்பவன் நம்பதி யானவன்
அம்புவி தனிலதி கம்புகழ் புரிவோன்
ஆரூர் தனிலெமக் கானவ னுலகெங்கும்
பேரா யிருப்பவன் [1]பிரபல வுதாரன்
திறமுள ராசேந்திர பூபதி தனக்குத்
திருவொடு நம்பதி தரமான தாச்சு
வானவர் யாவர்க்கும் மனதோ மனமின்றி
யானது வோசொல் [2]லென்றார் கயிலாசர்.

தேவர்களின் நகரமாகிய நமது பதிக்கு உரியவனாய்த் தோன்றியவன்; நம்பதிக்கு உரியவனாகவே இருந்து வருபவன்; அழகிய நிலவுலகத்தில் பெரும்புகழ் பெற்ற நகரமாகிய திருவாரூர்த் திருத்தலத்திலே நமக்கு வேண்டிய பூசைமுறைகளை மேற்கொண்டு நம்மிடம் மிகுந்த அன்போடு வாழ்பவன்; உலகமெங்கும் பெரும்புகழ் படைத்தவன்; மக்களிடத்திலே அன்புசெலுத்தி மிகவும் திறம்பட அரசுபுரிந்து வருபவன்; இராசேந்திரன் என்னும் பெயர் பெற்றவன். அந்த மன்னவனுக்குப் பெரும்பேறளித்து நம் பதியில் இடந்தரலாம் என்று நினைக்கிறேன். தேவர்களாகிய உங்களுக்கு இதில் விருப்பமிருக்கிறதா? இல்லையா என்பதைக் கூறுங்கள் என்று வினவினார் கயிலாசநாதர்.

பவன் - தோற்றுபவன்; தாமாயுண்டானவன். உதாரன் - கொடையாளன்; வீரன்.

சு.சொல் - 1. பிறபல 2. லென்னார்.

Fetching Cōḻaṉ to the land of bliss

50. Spake Civaṉ: King Rācēntiraṉ richly deserves
To be admitted to the celestial regions,

Devout is he and punctilious
In the performance of worship
At the temple in Tiruvārūr.
Deservedly popular with his subjects
And exceedingly just in administration
He is fit enough to be elevated
To the happy and coveted regions of bliss.
I should like to know
Whether, you, the gods, concur with me,
Observed the Lord of Mount Kailas.

(தேவர்களின் இசைவு) சம்பை

51. அரனாரிப் படிக்கூற வமரரெல் லாமரனைச்
சரணார்த்தி செய்தே தமக்குச்சம் மதமதென்றார்
தேவரீர் நினைத்தபடி செய்வதே யிதுகவ்வை
தேவரீர் வருந்தலே னேவுமெமை யென்றார்
அப்பணை தந்தீராகி லரசனை யின்னாழிகையி
லப்புஷ்ப ரதந்தான்கொண்டு போயழைத்து வாறோம்.

உங்களுக்குத் தடை ஏதும் உள்ளதோ என்று கேட்ட சிவபெருமானின் திருவடிகளிலே தேவர்கள் யாவரும் வணக்கம் செய்து கூறத்தொடங்கினார்கள். ஐயனே! தங்கள் விருப்பம் எதுவோ அதுவே எங்களுக்கும் சம்மதம். எனவே தாங்கள் நினைத்தபடி செய்யச் சிறிதும் தயங்கவேண்டாம். இந்தச் செயலைப் பற்றி எங்களுக்குக் கட்டளை இடுங்கள். தங்கள் ஆணை பிறந்தவுடனே சென்று சோழமன்னனை மலர்த்தேரில் இங்கு அழைத்து வந்து விடுகிறோம் என்று கூறினார்கள்.

சரணார்த்தி - திருவடிகளில் வணங்குதல். அடைக்கலமடைதல். கவ்வை - காரியம். ஏவுமெமை - எமை ஏவும் - எங்களை அனுப்புங்கள். அப்பணை - ஆணை.

The Gods agree

51. The Gods fell at the feet of Lord Civaṉ
Who asked them whether they minded
His giving bliss to King Rācēntiraṉ.
Sir, we are ready to abide by your wish
Hesitate not to act on it,

Command us and we shall fetch forthwith
The Cōḷa King in a chariot of flowers.

(தேவர்களைப் பசுவாகவும் எமனைக் கன்றாகவும்
வடிவெடுக்கச் செய்தல்) திரிபுடை

என்ன வானவர் புகழக் கைலையி லீசனார்
மன்னு மமரரேகேள்
சொன்னபடி யனைவரும் வந்தே பசு
வென்னவேணும் என்றுகூற
வெல்லோரு மரகர விலத்துவார் 5
நல்லதென் றிசைந்தனர்
கன்றதா யிருமென்று காலனை
யண்ணல் கூற
நாயினேன் செய்த [1]பாவத்தா லெம
னாயினேன்பழி தீரவும்மிட 10
சேயனா வதற்கென்ன புண்ணியஞ்
செய்தன னடியேன்.

தேவர்கள் புகழ்ந்து கூறியதைக் கேட்டான் இறைவன். தேவர்களே! நீங்கள் கூறியபடியே, நீங்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு பசுவாக உருவெடுக்க வேண்டும் என்றார். உடனே தேவர்கள் அரகரா என்று ஒருமித்துக் கூறியவர்களாய்த் தங்கள் விருப்பப்படியே ஆகட்டும் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்தார்கள்.

இறைவன் எமதர்மனை நோக்கி நீர் பசுவின் கன்றாக உருவெடுக்க வேண்டும் என்றார். ஐயனே! அடியேன் செய்த பாவத்தால் எமன் என்னும் இப்பதவியைப் பெற்றிருக்கிறேன். தங்கள் அருளால் தங்களின் மகனாகத் தோன்றுவதற்குப் பெரும் புண்ணியம் செய்தவனாவேன் என்று கூறி மகிழ்ந்தான்.

மன்னுதல் - நிலைபெறுதல். விலத்துதல் - கோஷமிடுதல், நீங்குதல். காலன் - எமன்

சு.சொல் - 1. பாவத்தாலிமனாயினேன்.

Ordering the gods to assume roles

52. On hearing the words of the Gods,
The Lord said: Look tēvas, you shall
Jointly assume the form of a cow.
The Gods greeted the lord with *'Arakara'*

And agreed to execute his orders.
Civaṉ now adressed Yamaṉ: You should
Forthwith turn yourself into a calf.
Yamaṉ felt highly flattered
And observed that his earlier sins
Had made him the despicable lord of death
And it would be a rare privilege
To be born as the divine son!

வசனம் - இப்படி வானவர்கள் எமனுங்கூட எப்படியிருந்திட உமையவள் பாகன் திசையுள்ள ராசேந்திரனிடத்துக்குப் பசுவென்னும் ரூபமெப்படியது கொண்டார். (16)

Prose : **While the tēvās and Yamaṉ were thus instructed, Umai also contributed her mite to the making of a cow.**

(தேவர்கள் பசுவின் உறுப்புகளாதல்) **திபதை**

53. தாமே முகங்கண்கள் சந்திர சூரியர்க
ளாமே யிருகொம்பவ் வரியும் பிரம்மாவும்
அண்டஞ் செவியெட் டரவமுங் குடலா
யொண்டுஞ் [1]சதுர்மறை யுலவுநால் பாதமா
மீது முதுபடி வினாயக மூர்த்தி 5
வாதை யமர்ந்துபின் வாலாக வீச
வயிறு [2]பராசத்தி மடிதன்ம தேவி
யெயிறிடு கணங்களே [3]யின்புற் றிருக்க
நாவாறு [4]சாஸ்திரம் நாற்றிசை முலைகள்
தேவாதி பர்கொளுஞ் சிவஞான மேபால் 10
நதிகோ மியம்மகா லக்ஷிமி [5]யுற்பனம்
விதிமனை யாள்சரண மேயுரு வாகும்
பாவனை யாகமுப் பத்துமுக் கோடி
தேவரெல் லாருஞ் சிரோசமு மாகத்
துல்வெள்ளை யாய்ப்பசுத் தோற்றமாய்க் கொன்றை 15
வில்வந் தரிப்பவர் வேடம தாகிச்
செங்கோற் கடவுளோர் [6]சேங்கன்று மாகிச்
சிங்கார வெள்ளித் திகிரிவாழ் வேந்தன்

வயணமாய்ப் பசுவின் வடிகொண் டிறங்கப்
பயணமாய்ச் சமையங்கள் பார்த்திருந் தனரே.

சிவபெருமானது கொள்கையின்படி இறைவன் தாமே முகமாகிய உறுப்பாக உருவம் தாங்கினார். தொடர்ந்து சந்திரனும் சூரியனும் இரண்டு கண்களாயினர். திருமாலும் பிரம்மாவும் பசுவின் இரண்டு கொம்புகளாயினர். பரந்த ஆகாயமே காது ஆயிற்று. எட்டு பாம்புகளும் பசுவின் குடலாயின. நான்கு வேதங்களும் பசுவின் நான்கு பாதங்களாயின. விநாயகமூர்த்தி பசுவின் வாலாயினார். பராசக்தி பசுவின் வயிறாகவும், தருமதேவதையாகிய இயக்கிதேவி பால்சுரக்கும் மடியாகவும் உருவாயினர்.

சிவத்தொண்டர்களாகிய பூதகணங்கள் பசுவின் பற்களாயின. ஆறுசாத்திரங்களும் நாவாகவும், நான்கு திசைகளும் மடிக்காம்பாகவும் உருவாயின. தேவர்கள் போற்றும் சிவஞானம் பாலாயிற்று. தேவநதி கோமியமாயிற்று. இலக்குமியே பசுவின் உற்பத்தித் தானமாயினள். தேவியாகிய உமையம்மை பசுவின் கால்களாக உருவெடுத்தாள். முப்பத்து முக்கோடி தேவர்களும் பசுவின் உடலில் காணும் மயிர் ஆயினர். இத்தகு உருவில் கொன்றை மாலையையும் வில்வத்தையும் அணிந்தவராகிய சிவபெருமான் முழுமையானதொரு வெள்ளைப் பசுத்தோற்றமாய் வடிவமெடுத்தார். நீதியை உடையவனாகிய எமதருமன் சேங்கன்று வடிவமானான். வெள்ளியங்கிரியாகிய கயிலாய மலையிலே எழுந்தருளியுள்ள இறைவன் பலராகிய உறுப்புகளோடு கூடிய பசு வடிவில் பூலோகத்தை நோக்கிப் புறப்படத் தொடங்கினான்.

அரி - திருமால் அண்டம் - ஆகாயம். எட்டு அரவம் - எட்டு பாம்புகள். அவை - அனந்தன், கார்க்கோடகன், குளிகன், சங்கபாலன், தக்கன், பதுமன், மகாபதுமன், வாசுகி என்பன. இவை எட்டுத்திக்கிலும் பூமியைத் தாங்குவன. பூமியின் இடைப்பகுதியை சேடன் தாங்கி நிற்கும். சதுர்மறை - நான்கு வேதங்கள். அவை - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பன. பராசத்தி- ஐந்து சத்திகளுள் ஒன்று. ஐந்து சத்திகளாவன - சிற்சத்தி, பராசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என்பன. மடி - பசுவின் பால் சுரக்கும் பகுதி. தன்மதேவி - தருமதேவதை, இயக்கிதேவி, கணங்கள் - சிவத்தொண்டர்களாகிய பூதகணங்கள், எயிறு - பல். ஆறு சாத்திரம் - வேதாந்தம், வைசேடிகம், பாட்டம், பிரபாகரம், பூருவ மீமாம்சை, உத்திர மீமாம்சை என்பன. நதி - தேவநதி, கங்கை. உற்பனம் - பிறப்பிடம். சரணம் - கால். விதிமனையாள் - மனைவியாகிய உமாதேவி. சிரோசம் - மயிர். செங்கோற் கடவுள் - எமன். சேங்கன்று - ஆண்கன்று. சிங்காரம் - அழகு. வெள்ளித்திகிரி - வெள்ளியங்கிரி, திகிரி - மலை. வயணம் - வகை. வடி - வடிவம், உருவம்.

சு.சொல் - 1. சதைமறை 2. பாரகத்தி 3. யின்புத்திருக்க 4. சாஸ்த்திரம் 5. யுற்தபனம் 6. சேங்கண்ணு.

Tēvas become the organs of the cow

53. Civaṉ became the face of the cow,
The Sun and the moon its eyes;
Tirumāl and Piramaṉ turned into horns,
The expansive horizon into ears.

The divine snakes became the intestines,
The four vētās, the feet,
Lord Vināyakar, the tail
Goddess Parācakti, the belly
While the Goddess of Righteousness became the udder.
The emissaries of Lord Civan̲ became the teeth,
The Six schools of knowledge, the tongue,
The four directions turned into teats
While 'Civan̲ knowledge' held sacred by the Gods
Turned into sweet milk.
The divine river became urine used for purification,
While Lakṣmi took on the role of the generative organ.
Umai turned Herself into the cow's legs,
The thousand odd Gods of the pantheon into hairs.
Thanks to the blessings of Civan̲
Wearing garlands of *Kon̲rai* and *Vilvam*,
A white cow soon materialised!
Yaman̲, a by-word for fairplay
Assumed the form of a calf.
Thus Lord Civan̲, the resident of Mount Kailas,
Marched towards the earth as a cow
Composed of diverse divine parts.

வசனம் - இப்படிச் [1]சருவசீவ தயாபரன் [1]சருவ தேவதையுங் கூடித் தாமொரு பசுவும் எமனொரு [2]சேங்கன்றுமாக ராசேந்திர சோழனுக்குப் பதவி கொடுக்கத் திருவுளம் [3]பற்றியிருக்க யிப்பால் திருவாரூரிலே நடந்த சமாசார [4]மேதெனில் (17)

சு.சொல் - 1. சறுவ 2. சேங்கண்ணு 3. பத்தி 4. மேதனில்.

Prose : Thus while the merciful Civan̲ and all-righteous Yaman̲ assumed the forms of Cow and calf to give salvation to Rācēntira Cōl̲a, let us see what happened at Tiruvārūr.

(தியாகேசருக்குத் திருவிழா ஏற்பாடுகள்) **திரிபுடை**

54. பூமி புகழ்ரா சேந்திர பூபதி
சோம சேகர மூர்த்தி மேல்வெகு
நேம மாய்வெகு பூசை படித்தரந் - தாமுண்டாக்கி

ஆல முண்ட தியாக ராயர்க்கு
லீலை யாய்க்கொடி [1]யேற்றி யேயதி 5
காலை யுந்திரு மாலை யுந்தெருக் - கோலம் வரவே

பத்து நாள்[2]திரு நாளு மதிபிர
பலத்து டன்செய்ய வேண்டி மன்னவன்
எத்திசையி லுளகுடி யெல்லாரை யுங்கொற் - றவரையும்

வேளுக் கனையவ னேவி யேதூதர் 10
போயழை யென்ன வே[3]திரு
நாளைப் பார்க்கவந் தார்[4]பிர சைகளே - ராளமாக

ஊருக் காட்டிய தேச தேசத்தி
லுள்ள மன்னவ ரெவருந் திருவா
ரூருக் கேவரப் பயண மாகினர் - காரைப்போலே 15

ஏழு மேகமுங் கூடி யேமழை
தூவ வந்தது போல வேயிந்தச்
சோழ பூபதி நகரைச் சார்ந்தன - ராழிபோலே.

மக்களால் பெரிதும் பாராட்டப்பெற்ற சோழமன்னவன், சோமசேகர மூர்த்தியாகிய சிவபெருமான் மீது மிகுந்தபற்று உடையவனாகிச் சிறந்த பூசைமுறைகளுக்கு வேண்டிய நிவந்தங்களை உண்டாக்கினான். மேலும் நீலகண்டராகிய தியாகராசப் பெருமானுடைய ஆலயத்தில் விழாக்கொடியினை ஏற்றி விடியற்காலையிலும் மாலை நேரத்திலும் தெருக்களில் இறைவனுடைய உருவம் ஊர்வலமாக வரச்செய்து பத்துநாள் திருவிழாவினை மிகச் சிறப்பாகச் செய்யவேண்டும் என்று விரும்பினான். முருகவேளை நிகர்த்தவனாகிய மன்னவன் தன் விருப்பத்தின் படி எல்லாத் திசைகளிலுமுள்ள மன்னவர்களையும் மக்களையும் நேரில் சென்று அழையுங்கள் என்று தூதுவருக்கு ஆணை பிறப்பித்தான். அதன்படி சோழநாட்டை அடுத்த பல நாடுகளிலுமுள்ள மக்களும் மன்னவர்களும் அந்தத் திருவிழாவைக் காணவேண்டுமென்று மிகுந்த ஆவலுடன் திருவாரூரை நோக்கிப் புறப்பட்டார்கள். கார்காலத்திலே ஏழு மேகங்களும் கூடி மழை பொழிவதற்கு வந்தது போலவும், பெருங்கடல் தோன்றியது போலவும் வந்த அந்த மக்கள் சோழநாட்டை அடைந்தார்கள்.

சோமசேகரர் - பிறைசூடிய சிவபெருமான்; சோமம் - சந்திரன்; சேகரம் - தலை. நேமம்-முறை. படித்தரம் - நிபந்தனை, கட்டளை. ஆலம் - நஞ்சு. லீலை - திருவிளையாடல். கொற்றவர்-மன்னவர். வேள் - முருகவேள், மன்மதனெனினுமாம். பிரசைகள் - குடிமக்கள். கார் - மேகம். ஏழுமேகங்கள் - ஆவர்த்தம் (நீரைப் பொழிவது), காளமுகி (கல்லைப்பொழிவது), சங்காரித்தம்

(மலரைப்பொழிவது), சம்வர்த்தம் (மணியைப்பொழிவது), துரோணம் (மண்ணைப்பொழிவது), நீலவருணம் (தீயைப்பொழிவது), புட்கலாவர்த்தம் (பொன்னைப்பொழிவது) ஆகியவை. ஆழி-கடல்.

சு.சொல் - 1. யேத்தி 2. திருனாளுமதிபிறபலத்துடன் 3. திருனாளை 4.பிறசைகளேறாளமாக.

Festival for Tiyākarācar

54. Deservedly popular with the masses,
A fervent devotee of Civan̲,
Also known as Cōma Cēkaran̲,
The King, besides drawing rigorous codes
For the formal worship of the Lord,
Envisaged a huge festival
For the One who consumed poison
And went by the name Nīlakaṇṭan̲;
He wanted to hoist the ceremonial temple flag,
And take round the lord in festive procession,
Along the streets of Tiruvārūr.
To execute this grand plan,
The King, the very image of Murukan̲,
Ordered his emissaries to invite personally
The rulers and the subjects of various countries.

(திருவிழாவில் நீதிபூஷணனுடன் வீதிவிடங்கன்) திபதை

செகந்துதி செய்யு மிராசேந்திர பூபதியும்
[1]மகன்தனை யழைத்தே மகுட மணிந்து
கடுக்கன் சரப்பணி கடக மோதிரமும்
தொடுக்கும் [2]நிசாரங்கி சுவர்ணநூ லிழையால்
வீசவெண் சாமரை மிகுபரி கரிதேர் 5
தேசிக மாகவே செழிப்புடன் தந்து
[3]நீதிபூ ஷணனையந் நேரமே யழைத்து
வீதி விடங்கரை விடாதகை யாய்நீ
கூடவே கொண்டுபோய்க் கொன்றைமா லையன்தே
ரோடவே நடப்பித் தொருபத்து நாளும் 10

திட்டவட் டங்களாய்த் தியாகரா யருக்குக்
கட்டளை யென்னென்ன காரிய முண்டோ
அதுகண்க ளாயிருந் தையர்கலி யாணம்
சதுர்வே தியர்சொலுஞ் [4]சாஸ்திர முறையால்
நடத்துவை திருநாள் நடக்கையில் மனுக்க 15
[5]ளடர்த்தியி னாலாளை யாள்நெருக் காமல்
துஷ்டர்கள் சண்டை [6]தொடங்கிறில் லாமல்
அஷ்டதிக் குங்காவ லாளரை வைத்துக்
கண்காட் சியிலொரு களவுபோ காமல்
பொன்காய்த்த தாபரம் போலவுங் குளத்தில் 20
அல்லியும் நெய்தலு மரவிந்த மொன்றாய்ப்
புல்கி யிருப்பது போலவும் நமக்குஞ்
சுபகீர்த்தி மோட்சஞ் சுகுர்தபுண் ணியமும்
விபரீத மாகிமேன் மேலுமுண் டாக
மதிமந்திரி யெதிராக வள்ளல் காரியத்தில் 25
பதியா யிருந்து பராமரி [7]யென்று
உச்சித பூஷண முதவியவன் வந்து
மெச்சிமந் திரியுடன் மண்டபத் திருந்து
பாலமந் திரியும் ராச குமாரனும்
மேளமுந் தாளமும் வீணையு மார்ப்ப 30
காலையும் மாலையுங் கனகத்தே ரமர்ந்து
அந்தந்த வாகனம் அவரவர் அமர
தெருவெல் லாம்விழாக் கோலங்க ளோடு
ஒவ்வொரு நாளுமுயர் சோதிமய மாகி
ஒன்பது நாளும் அன்பாயுண் டாச்சு. 35

மக்களால் பெரிதும் போற்றப்படுபவனாகிய சோழமன்னன், மகன் வீதிவிடங்களை அழைத்தான். அவனுக்குக் காற்சட்டை முதலான உயர்ந்த ஆடைகளையும், காதணி, சரப்பளி, கைவளை, மோதிரம் போன்ற பல அணிவகைகளையும் அணிவிக்கச் செய்து தலைக்கு மகுடமும் அணிவித்து அலங்காரம் செய்தான். பொன்னாலான இழைகளையுடைய வெண்சாமரை வீசச் செய்தான். அவனுக்கு வேண்டிய சிறந்த தேர், யானை, குதிரை ஆகியவற்றையும் அழகுற அமைத்துக் கொடுத்தான். நீதிபூஷணன் என்னும் அமைச்சனை அழைத்து வீதிவிடங்களை அவனிடம் ஒப்படைத்து, அவனை விட்டு விலகாமல் கூடவே அழைத்துச் சென்று, கொன்றை

மாலையணிந்தவராகிய தியாகராசப் பெருமானின் தேர்த்திருவிழாவினைப் பத்துநாளைக்குச் சிறப்பாக நடத்திவருக என்று கட்டளையிட்டான்.

பத்துநாள் திருவிழாவுக்கும் சாத்திரமுறைப்படி என்னென்ன பூசைமுறைகளைக் கையாளவேண்டுமென்று வேதவேதியர்கள் கூறுகிறார்களோ அவற்றையெல்லாம் செப்பமாக நடத்துவதற்கான செயல்களிலே கண்ணுங்கருத்துமாக இருந்து இறைவனின் திருக்கலியாண விழா நிகழும் வரை நடத்தி வையுங்கள் என்று அமைச்சருக்கு ஆணையிட்டான்.

திருவிழாக்கள் நடைபெறுங்காலத்தில் மக்கள் வெள்ளம் பெருகி ஒருவரோடொருவர் மோதிக்கொள்ளாதவாறு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள்; எட்டுத்திசையிலும் பலத்த காவலாளர்களை நிறுத்திக் கொடியவர்களால் சண்டை சச்சரவுகள் நிகழாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்; விழாவில் நடைபெறும் பலவகையான கண்காட்சிகளில் எந்தவிதத் திருட்டும் நடவாதபடி கண்காணிக்கச் செய்யுங்கள் என்றெல்லாம் நீதிநெறிகளை எடுத்துக்கூறினான்.

பொன்விளையும் பூமியைப்போல நமக்குப் பெரும்புகழ் உண்டாகச் செய்யுங்கள். காலையில் மலரும் தாமரையும் இரவில் மலரும் அல்லியும் மாலையில் மலரும் நெய்தலுமாகிய பலவகை மலர்களும் ஒரே குளத்தில் ஒன்றையொன்று சார்ந்து வளர்வது போல நமக்கு மங்கலமாகிய புகழும், நற்கருமங்களால் உண்டாகும் பெரும் புண்ணியமும் உண்டாகி அவற்றின் பயனாய் மோட்சம் என்னும் பெரும்பேறு உண்டாகுமாறு நற்செயல்களில் ஈடுபட்டு, அவற்றிலேயே ஊன்றியிருந்து செயல்படுத்தச் செய்வீர்களாக என்று கட்டளையிட்டான். மேலும் மிக உயர்ந்த ஆபரணம் முதலான பொருள்களைக் கொடுத்து உதவினான். இவ்வாறு அவர்களைத் திருவிழா நடத்த அனுப்பி வைத்தான். அமைச்சர் மகனும் இளவரசனாகிய வீதிவிடங்கனும் தத்தம் வாகனங்களில் ஏறிப் புறப்பட்டார்கள். அப்போது மேளதாளங்களும் வீணையும் மங்கலமாகச் சிறந்த ஒலி எழுப்பின. தெருக்களில் நாள்தோறும் அதேபோன்ற இசைகள் காலையும் மாலையும் முழங்கத் தேர்களில் ஏறிச் சென்று வந்தார்கள். விழா நாட்களில் தெருக்களெல்லாம் விழாக்கோலம் பூண்டிருந்தன. எங்கும் ஒளிமயமாகக் காட்சியளித்தது. இவ்வாறு ஒன்பது நாட்கள் சிறப்பாக விழா நடந்து முடிந்தது.

செகம் – நிலவுலகம்; நாட்டு மக்களுக்கு ஆகிவந்தது. மகுடம் – முடி; இளவரசனுக்குரிய முடி. கடகம் – கைவளை. நிசாரங்கி – காற்சட்டையாகிய உடை. சுவர்ணம் – சொன்னம் – பொன். பரி – குதிரை. கரி – யானை. தேசிகம் – அழகு. விடாதகை – பிடித்தபிடியாக, பிரியாமல். கொன்றைமாலையன் – சிவபெருமான். திட்டவட்டம் – செம்மை. கட்டளை – முறை. ஐயர் – சிவபெருமான். மனுக்கள் – மக்கள். அஷ்டதிக்கு – எட்டுத்திசை. தாபரம் – பூமி; தாவரம் எனினுமாம். அரவிந்தம் – தாமரை. புல்கி – இணைந்து, சேர்ந்து. சுபகீர்த்தி – நற்புகழ். சுகுர்தம்–சுகிர்தம் – நல்வழி. பராமரித்தல் – பாதுகாத்தல். உச்சிதம் – அரிய, உயர்ந்த. கனகம் – பொன். சோதி – ஒளி.

சு.சொல் – 1. மகந்தனை 2. நிசாறங்கிசுவற்ன 3. நீதிபூஷணையன்னேரமே 4. சாஸ்த்திர 5. ளடத்தியினா 6. துடங்கி 7. யெண்ணு.

Vitiviṭaṅkaṉ and Nītipūṣaṇaṉ to conduct the festival of the lord

55. The Cōla King loved by the masses
Summoned his son Vitiviṭaṅkaṉ,
Gave him rich and luxurious robes,
Jewels like ear rings, bracelets and rings
Along with a bejewelled crown,
Also a decorated chariot, elephant and horse,
Ordered ceremonial blowing with bedecked fan,
Entrusted prince Vitiviṭaṅkaṉ
To the parental care of Nītipūṣaṇaṉ
And wanted them to celebrate with pomp
The festival of Lord Tiyākarācar
Which would last for ten full days.
He further ordered the minister
To consult the scholarly pundits
And carry out all the rituals
As enjoined in the ancient lores
Till the last day when the ceremonial wedlock
Of the lord would be celebrated.
He wanted the minister
To take steps against fights and brawls
Common during crowded festivals;
Also the stationing of sentinels in eight directions
To check shady and suspicious elements,
Besides controlling thefts and mischief
At public shows and exhibitions.
Let our reputation enhance
Like the yield of fertile land,
Let auspicious fame
And the fruits of noble acts
Blend harmoniously
Like the peaceful co-existence

Of lotus, lily and neytal
In the waters of the same tank;
Let good and kind acts multiply
Assuring us of bliss in heaven
So saying the king gave as gifts
More jewels and precious things.
Soon the prince, Vitiviṭaṅkaṉ
And the son of the minister
Set out in their respective chariots
To celebrate the lord's festival,
While instrumental music echoed
Auspicious and sweet songs.
For nine days the town
Reverberated with the pleasing melody in *Viṇai*
And other instruments
When the prince and the minister's son
Went round the well - lit town
In grand ceremonial procession.

(பத்தாம்நாள் திருவிழா) திரிபுடை

56. நஞ்சுண்பான் [1]திருநாள் பத்தாந்திரு நாளுந்
திருவாட்சி யென்றே தேசத்து மிச்சமாய்
வந்து கூடினா ரன்றைக்கு - இச்சையாக

[2]கொன்றை தரித்த தியாக ராயரை
[3]என்றுந் தெரிசனம் பண்ணப் பலனென்று 5
[4]அன்றைத் தெரிசனங் காணவந்தவ - ரெண்ணொணாதே

வாற கும்பினர் [5]வாறதைக் கடிமழை
வாரி யோசையு மறைக்குங் காணதை
நூறு கண்கொண்டு பார்க்கி லும்நிறை - வேறுமோதான்.

பத்தாம் நாள் திருவிழா தொடங்கியது. அது நஞ்சுண்ட கண்டனாகிய தியாகராசப் பெருமானின் நல்லாட்சி தொடங்கும் நாளின் விழாவாகக் கொண்டாடப்படுவது. இந்த நிறைவு விழாவினைக்காண ஒன்பதுநாள் விழாவிற்கு வந்தவர்கள் தவிர்த்து

மிகுதியிருந்த நாட்டுமக்களெல்லாருமே விருப்பத்தோடு வந்து குவிந்தார்கள். தியாகராசப் பெருமானை என்றைக்கு வந்து துதித்தாலும் வணங்கியதன் பலனைப் பெறலாம் என்ற எண்ணம், அன்று வந்து கூடிய மக்களுள்ளத்தில் நிலைபெறாமல் போயிற்று. இன்றைய தரிசனமே பெரும்பலன்தரும் தரிசனமாகும் என்று அனைவருமே கருதும் படியாகக் கூட்டம் வந்து குவிந்து கொண்டிருந்தது. அவ்வாறு வந்துகொண்டிருக்கும் மக்களின் ஒலி, பேரிடியோடுகூடிய பெருமழையின் ஒலியையும், கடலலையின் பேரொலியையும் அடங்கச்செய்து விட்டது. அந்த மக்கள் வெள்ளத்தைக்காண ஒவ்வொருவருக்கும் நூறுகண்களிருந்தாலும் போதாது என்ற நிலை உருவாகிவிட்டது.

நஞ்சுண்பான் - நீலகண்டனாகிய சிவபெருமான். திருவாட்சி - இறைவனின் அரசு நடைபெறும் நாள். இச்சை - விருப்பம். வாற - வருகிற என்பதன் கொச்சைச்சொல். கடிமழை - இடிமுழக்கத்தோடு கூடிய பெருமழை. வாரி - கடல்.

சு.சொல் - 1. திருனாழ்ப்பத்தாந் 2. கொண்ணை 3. எண்ணுந் 4. அண்ணைத் 5. வாறத்தை.

The Festival on the tenth day

56. The Tenth day of the festival
Was celebrated as the auspicious beginning
Of benign rule by Tiyākarācar.
Save those who had come from elsewhere
To witness the festival,
All the others graced the occasion
Strengthening the view that worship then
Was more efficacious than at anyother time.
The rumble of the crowd was enough
To drown the clatter of rain with thunder
Or the roar of the mighty sea.
Hundred eyes were inadequate
To behold the streaming crowd.

(பத்தாம்நாள் திருவிழாவில் ஆடல் பாடல்கள்) திபதை

57. அன்றைய ராத்திரி யாதித்தன் பொழுது
சென்றபின் தெருவெலாந் திருவிளக் [1]கேற்றி
குத்து விளக்குங் குடவிளக் [1]கேற்றி
வித்தெழில் காள விளக்கினை [2]யேற்றி

வீதியெல் லாந்திரு விளக்கலங் காரம் 5
வீதியிற் [3]கின்னரை வீணை தம்புரு
ராவணாஸ் தம்மத் தளத்துடன் பாடல்
கோவென்ன சத்தமக் [4]கோஷ்டமல் லாமல்
பாகுத ராட்டமும் பாரியவை யறசு
லோகமு மணியணி சூழ்ந்தங் கிருக்க 10
[5]வேஷ தாரிகள் விந்தையாய்க் கூத்தும்
[6]மாழை விச்சித்திரம் பண்ணிய பேரும்
செந்தமிழ்ப் பாவலர் [7]சிவசாஸ் திரமாங்
கந்த புராணத்தின் கதையருத் தஞ்சொல்லப்
பரிவுமன் புஞ்சிவ பக்தியு மிகுத்தோர் 15
[8]அரகரா வென்றதை [9]யமுதமாய்க் கொள்ள
பஞ்சவரம்புவி பறித்ததைச் சொல்ல
நெஞ்சிசைந் தேயதை நினைவில்வைப் பவரும்
மகிதல மளந்தபூ வண்ணனார் கதையைப்
புகலவே கேட்டுளம் பொங்கிவாழ் பவரும் 20
[10]பூவையர் பதத்தினிற் பொற்சிலம் பணிந்து
மேவிய நடன வினோதங்கள் செய்ய
வாலிபப் பெண்களின் மஞ்சள் வாடையிலே
வாலிபக் காளைகள் மையல்கொள் வாரும்
புழுகுசவ் வாதுகில் பூசுமி[11]னாரி 25
னெழிலினுக் கேமன திளகிநிற் பாரும்
ஆசையினால் பெண்கள் அருகில்வந் தவர்கள்
பேசிய பேச்சுக்குப் [12]பிரீதியுரைப் பாரும்
திங்களு மன்றதி செயக்காந்தி யாகப்
பொங்கி எழுந்து பூமழை பொழியத் 30
[13]தென்றலுக் கதிபதி சிலைகொண்டு நிற்கத்
[14]தென்றலு மெல்லெனத் தெருவெலா முலாவ
அப்படி யாகிய வாரூர் தலத்துக்
கொப்பிட பூமியி லுண்டெனப் போகா
நேசந் தாங்கிய நீதிபூ ஷணனும் 35
ராச குமாரனும் நகரிவிட் டதிக

சேனையு மானையுஞ் சிவிகை [15]தேரணியும்
ஆனையின்மேல் நகாரது டமடம [16]வென்ன
குதிரைமேல் மேளங்கள் கொம்புச்சின் னங்கள்
கதிர்பெறு நாக சரங்கள்கைத் தாளம் 40
[17]இவையொடு திமிதிமென் [18]றீசரால யத்தில்
கவரி யசத்திடக் காவலன் புதல்வன்
பரிவுடன் தியாகரைப் பாதம் பணிந்து
திருநீறு பத்திரி தீர்த்தமுங் கொடுக்க
வாங்கிக்கொண் டிப்புறம் [19]வந்துநூற் றுக்கா 45
[20]லோங்கிய மண்டபத் துள்ளிருந் தனரே.

பத்தாம் நாள் திருவிழா தொடங்கியது. மாலைநேரம்; சூரியன் மறைந்தான். தெருக்கள் தோறும் விளக்கொளி பரவியது. வீடுகளில் திருவிளக்கும் குத்துவிளக்கும், குட்விளக்குமாகப் பலவகை விளக்குகளை யேற்றி அழகுபடுத்தினார்கள். நாட்டுச் சின்னத்தை எடுத்துக்காட்டும் முறையில் அடுக்கடுக்கான சிறு விளக்குகளின் மூலம் நாட்டுச் சின்னத்தைக் காட்டினார்கள். இவ்வாறான திருவிளக்குகளை ஏற்றி அழகுபடுத்தியதோடன்றி, கின்னரம் என்னும் வீணை, தம்புரு, இராவணஅஸ்தம் என்னும் வீணை, மத்தளம் போன்ற இசைக்கருவிகள் ஆங்காங்கு இசைக்கப்பட்டன. இசைக்கருவிகளோடு இணைந்து பாடல்கள் பாடப்பட்டன. இவற்றின் ஒலி எங்கு பார்த்தாலும் ஒலித்துக்கொண்டிருந்தது. ஒருபுறம் பாகவதர்கள் ஒன்று கூடி இறைப்பாடல்களைப்பாடி பாட்டுக்கேற்ப ஆடிவந்தார்கள். மற்றும் ஒரு கூட்டத்தார் வடமொழிச் செய்யுளாகிய சுலோகங்களால் இறைவனது புகழ்பாடிவந்தார்கள். இவர்கள் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து வர வழியில் பிறர் நடந்து செல்லவும் முடியாதநிலை ஏற்பட்டது. மேலும் பலவகையான வேடமணிந்து ஆடிய வியக்கத்தக்கக் கூத்துகள் பல நிகழ்ந்தன. சிலர் கண்கவரும் புதுமையான செய்கைகளைச் செய்து காட்டினார்கள். தமிழ்ப்பாவலர் சிலர் சைவ நூல்களுள் சிறந்ததான கந்தபுராணக்கதையை எடுத்துக்கூறி விளக்கினார்கள். சிவபக்தியில் ஊறிப் பக்குவமடைந்த அன்பர்கள் பலர் அக்கதையைக் கேட்டு அனுபவித்து 'அரகரா' வென்று அடிக்கடி புகழ்ந்து வந்தார்கள். பாண்டவர்களின் நாட்டைக் கைப்பற்றிய, பாரதத்தின் சூதாட்டப்பகுதி ஒருபுறம் எடுத்துக்கூறப்பட்டது. பலர் அதைக்கேட்டு உள்ளம் உருகி நின்றார்கள். மாபலிச் சக்கரவர்த்தியை அடக்கத் திருமால் வாமன வடிவங்கொண்டு தம் ஓரடியால் இந்த நிலவுலகத்தை அளந்து நின்றார் என்ற கதையைச் சில பாவலர்கள் எடுத்துக்கூறி வந்தார்கள். மக்கள் பலர்கூடி அதைக்கேட்டு உள்ளம் நொந்து நின்றார்கள்.

மகளிர்பலர் தங்கள் கால்களில் பொன்னாலான சிலம்புகளை அணிந்தவர்களாய்ச் சிறந்த நடனங்களை நிகழ்த்தினார்கள். அந்த நடனக்காட்சியைக் காணப் பருவப் பெண்களும் இளங்காளையர்களும் கூடியிருந்தார்கள். அவர்களுள் பருவ மங்கையர் பூசியிருந்த மஞ்சள் மணத்தில் பலவாலிபர் மயங்கி நின்றார்கள். புனுகுஞ் சவ்வாதும் அகிலுமாகிய மணப்பொருள்களைப் பூசியிருந்த பெண்களின் அழகில் மனமுருகிச் சொக்கி நின்றார்கள் சிலவாலிபர்கள். ஆசையோடு நெருங்கி வந்து தாமாக வலிய பேச்சுக் கொடுத்த பெண்களுக்குச் சில காளையர் மிகுந்த மகிழ்ச்சியோடு பதில் கூறினார்கள்.

முழுமதியானது அன்றைய தினத்தில் அனைவரும் வியந்து பாராட்டுமளவில் ஒளிவீசியது. அந்த ஒளியின் மிகுதி நிலவிலிருந்து மலர்மாரி பொழிவதுபோல் இருந்தது. தென்றலின் தலைவனான மன்மதன் மலரம்புகளோடு கூடிய கரும்புவில்லை ஏந்திவரத் தெருக்களில் தென்றலானது உலவி வந்தது. இத்தகு சிறப்பு ஆரவாரங்களோடு கூடிய திருவாரூர்த் திருத்தலத்திற்கு ஒப்பான வேறொரு நகரம் இந்த நிலவுலகத்திலே இருக்கிறது என்று சொல்லவே முடியாது.

இளவரசனாகிய வீதிவிடங்கனும், அவனுக்குத் துணையாக உடன் வந்திருந்த அமைச்சன் நீதிபூஷணனும் அரசமாநகரமாகிய நாட்டுத் தலைநகரை விட்டுப் புறப்பட்டார்கள். தேர், யானை, குதிரை, காலாட்படை, சிவிகை ஆகிய அனைத்துப் படைகளும் உடன்புறப்பட்டன. யானையின் மீது பொருத்தப்பட்ட நகார் என்னும் முரசு ஒலித்து வந்தது. குதிரைகளின் மீது ஏற்றப்பட்ட மேளங்களும், கொம்புச் சின்னமாகிய ஊது கொம்புகளும், நாகசுரம் என்னும் ஊதுகுழல்களும், கைத்தாளங்களும் முறையாக இசைத்து வந்தன. இத்தகு பரிவாரங்களோடு இளவரசனும் அமைச்சனும் ஆலயத்தை அடைந்தனர்.

இருபுறமும் கவரிவீசிவர இளவரசனாகிய வீதிவிடங்கன் உள்ளம் நிறைந்த அன்போடும் பக்தியோடும் தியாகேசப்பெருமானின் திருவடிகளிலே வணங்கினான். முறையாகப் பூசை செய்வோர் திருநீறும் பச்சிலையும் திருமஞ்சன நீருமாகிய பிரசாதங்களைக் கொடுக்க அவற்றைப் பெற்றுக்கொண்டு வெளியில் வந்து அமைச்சரும் பிறரும் சூழ நூற்றுக்கால் மண்டபத்திலே தங்கினான்.

ஆதித்தன் - சூரியன். குடவிளக்கு - குடத்திலிடும் விளக்கு, திருமணக்காலங்களில் ஏற்றி வைப்பது. காள விளக்கு - நாட்டுச் சின்னத்தின் வடிவில் ஏற்றப்படும் விளக்கு; சோழர்களுக்குரிய புலி வடிவில் அமைந்த விளக்கு. கின்னரை - கின்னரம் - வீணை. ராவணாஸ்தம்- இராவணாஸ்தம் என்னும் வீணை. பாகுதர் - பாகவதர் - வைணவச் சமய பக்தர்கள். இயவை - வழி. சுலோகம் - வடமொழிச் செய்யுள், புகழ். மாழை - அழகு. பரிவு - பக்குவம். பறித்தல் - அபகரித்தல். மகிதலம் - நிலவுலகு. பூவண்ணன் - திருமால். புழுகு - புனுகு. பிரீதி - பதில். காந்தி - ஒளி. தென்றலுக்கதிபதி - மன்மதன். சிலை - வில். நகரி - அரசமாநகர். நகார் - முரசு. நாகசரம் - நாகசுரம் என்னும் ஊதுகருவி. பத்திரி - பச்சிலை.

சு.சொல் - 1. கேத்தி 2.யேத்தி 3.கின்றரை 4. கோஷ்ட்டமல் 5.வேஷத்தாரிகள் 6. மாழைய் 7. சிவசாஸ்த்திரம் 8. அரகர 9. யமுற்தமாய் 10. பூவையிற் பதத்தினிற்ப் 11.னாரின்னெழிலினுக் 12.பிறிதியுரைப் 13.துண்ண 14. தெண்ணலுமெள்ளத் 15. தோணியும் 16. வென்க 17. யிவையொடு 18. நீசராலையத்தில் 19. வந்து நூத்துக்கால் 20. வோங்கிய.

Music, Dance and Merry - Making

57. The Tenth day festival began
In all glory.
At sunset various types of lamps were lit:
Tiruviḷakku, Kuttuviḷakku and *Kuṭaviḷakku.*

The array of small lamps
Projected the logo of the state, the tiger.
Instruments as varied as the *Kiṉṉara Viṇai*,
Tampuru, Irāvaṇa Hastam and drum were played;
Sweet songs also rent the air.
The professional singers sang devotional lyrics
Accompanied by suitable dances.
Some chose to praise the Almighty
In verses composed in Sanskrit
While the crowd swelled unbelievably
Making free movement difficult and arduous.
Folk dances were galore
With actors donning diverse roles.
Pundits proficient in Tamil
Gave discourses on *Kantapurāṇam,*
The classic work on Caivism,
Punctuated with shouts of *Arakara*
From the devout and the holy
The story of the game of dice
Which cost the Pāṇṭavars their kingdom
Was narrated with poignancy and verve
Moving the listeners to tears.
The tale of Mahāpali
Whose pride was humbled by Tirumāl
In the guise of a midget
Measuring the universe in a single pace
Was also told with great emotion.
Women wearing anklets of gold danced with gay abandon,
To the great delight of young men and women;
The unguents used by them at their toilet
Sent a wave of thrill among the youth,
A few were enraptured by the smell

Of civet and other perfumes
And stood totally stupefied.
Some enjoyed talking with women
Who lovingly volunteered to speak.
The silvery rays of the full moon
Falling on the earth below
Verily looked like a shower of flowers.
Cupid, the lord of the gentle breeze
Was very much present and active
With his arrows wrought of flowers.
The magnificent sight Tiruvārūr bore,
Stood unmatched and unparalleled!
Prince Vitiviṭaṅkaṉ and Nītipūṣaṇaṉ
Left the capital
Accompanied by the various units of the army
Charioteers, fighters on elephant, cavalry and infantry;
The ceremonial drum on the elephant
Was played incessantly,
The other instruments on horseback
Were also blown such as horn and pipe,
Followed by the royal retinue,
The prince and minister stepped into the temple.
While courtiers fanned from either side,
Vitiviṭaṅkaṉ with true love and devotion
Offered worship at the feet of Tiyākarācar
And was given god's prasad:
Sacred ash, holy water and green leaves
Which he received with great humility.
On coming out he expressed his desire
To stay with the ministers
In the massive hall with hundred columns.

(திருமணச் சடங்குகள்) திரிபுடை

58. ஐயர் தமக்கபி ஷேக மதிசயஞ்
செய்து திருமணக் கோல மாயதி
வைப வங்களுஞ் சடங்கு முடித்துப்பின் - கையிலேந்தி
வேத கோஷ்டங்க [1]ளார்ப்பத் திருவட்சி
[2]மீதி லமைத்தலங் கார மாலைகள் 5
போத வேதரித் தாரம் பாலிகை
சோதி தனக்கும் வேந்தன் சுதனொடு
நீதி பூஷணன் மேவித் தியாகரைச்
சேவித் தேதிருச் சாந்து சாற்றுவித்
தார்புற்றிடங் கொண்ட [3]சுவாமி யாருக்கு. 10

பத்தாம் நாள் திருவிழாவில் தியாகேசப் பெருமானுக்குச் சிறப்பான திருமஞ்சனம் முதலான பூசைச் சடங்குகளை முடித்துப் பெருமானின் திருவுருவத்தைத் திருமணக்கோலமுடையதா யலங்கரித்துத் திருவட்சியாகிய தண்டிகையின் மீது அமைத்தார்கள். வேத வேதியர்கள் இறைவனின் புகழ்பாடி ஆரவாரிக்க, அம்பாலிகையாகிய தேவியாருக்கும் தியாகேசப் பெருமானுக்கும் மாலைகளைச் சூட்டித் திருமண விழாவினை முடித்தார்கள். இளவரசனாகிய வீதிவிடங்கனும் அமைச்சன் நீதிபூஷணனும் புற்றிடம் கொண்டவராகிய இறைவனின் திருமண விழாவில் கலந்து கொண்டு, இறைவனின் திருவடிகளில் வணங்கித் திருச்சாந்தாகிய சந்தனம் முதலான மணப்பொருள்களை இறைவனுக்கு அணிவித்து மகிழ்ந்தார்கள்.

ஐயர் - தலைவர், சிவபெருமான். அபிஷேகம் - திருமஞ்சன நீராட்டு. வைபவம் - சிறப்பு. திருவட்சி - தண்டிகை. அம்பாலிகை - உமாதேவி. புற்றிடங்கொண்டவர் - தியாகராசப்பெருமான்.

சு.சொல் - 1. ஆற்பபத் 2. மீதிலமைற்றலங் 3. சுவாமியாற்க்கு

The marriage rituals

58. After rushing through auspicious rituals
Like *Tirumañcaṉam,*
The Lord dressed as bridegroom
Was mounted on the decorated palanquin.
While the brahmins eulogised the Almighty,
The Lord and his spouse were garlanded
Which fittingly wound up the marriage rites.
Prince Vitiviṭaṅkaṉ and Nitipūṣaṇaṉ

Witnessed the gorgeous wedlock,
Offered worship at the feet of Civaṉ
And applied sandal paste to the sacred body
With great gusto and delight.

(இறை உருவங்களை வாகனங்களில் ஏற்றுதல்) சம்பை

59. கொழுந்துமதி முடியானைக் கோலங்காட்ட வேயப்போ
தெழுந்தருளப் பண்ணினார் தொழும்பரெல் லாரும்
வாரணனைப் பெருச்சாளி வாகனத்தின் மேலேற்றி
நாரணனை வைதேகி யார்மிசை வைத்தார்கள்
அயிலவனை மயிலேற்றி யருளவந் தவதரித்த
வயிரவனைக் குரைமுகத்து வாகனத்தி லமைத்தார்
பின்னுமுள தேவர்தமை [1]சொர்ணமானம தேத்திப்
பன்னுமறை யோர்கவரி தன்னையெதிர் வீச.

இறைத் தொண்டர்களாகிய திருவாரூர் அன்பர்கள் பிறைச் சந்திரனைத் திருமுடியிலே தரித்தவனாகிய தியாகேசப்பெருமானின் உலாக் காட்சிக்குரிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார்கள். உடனே பணியாளர்களாகிய தொண்டர்களைக்கொண்டு இறைவனின் திருவுருவத்தை எழுந்தருளச் செய்தார்கள். யானை முகத்தவனாகிய விநாயகப்பெருமானைப் பெருச்சாளி வாகனத்தின் மீது எழுந்தருளச் செய்தார்கள். திருமாலின் திருவுருவத்தை இலக்குமிபிராட்டியாருடன் எழுந்தருளச் செய்தார்கள். வேலவனை மயில் வாகனத்தில் அமர்த்தி, தேவியின் அருளால் தோன்றிய வயிரவமூர்த்தியைக் குதிரை முகத்து ஊர்தியில் ஏற்றினார்கள். பிற இறையுருவங்களை சொர்ண விமானத்தில் ஆரோகணிக்கச் செய்தார்கள். இந்தத் திருவுருவங்களைத் தொடர்ந்து வேத அந்தணர்கள் கவரிவீசி வந்தார்கள்.

கொழுந்துமதி - பிறைச்சந்திரன் கோலம் - அழகு, உலா. தொழும்பர் - தொண்டர்களாகிய பணியாளர். வாரணன் - யானை முகத்தோன்; விநாயகன் - வாரணம் - யானை. வைதேகி - சீதையின் பெயர் - திருமகளைக் குறித்தது. அயிலவன் - வேலவன்; முருகபெருமான். அயில் - கைவேல். வயிரவன் - சிவமூர்த்தங்களுள் ஒருவன். குரைமுகம் - குதிரைமுகம். சொர்ணமானம் - பொன் விமானம். மறையோர் - வேத அந்தணர்.

சு.சொல் - 1. சொற்னமான

The idols of the Gods set on vehicles

59. The devout citizens of Tiruvārūr
Made arrangements for the procession of Tiyākēcar
Who wears on his matted locks, the crescent.

Servants were ordered to fetch the idol of the lord.
The Elephant - God was put on his vehicle, the bandicoot
And Tirumāl by the side of his spouse Ilakkumi.
While Vēlavar was made to ride the peacock,
Vayiravamūrtti, the blessed progeny of Umai,
Was mounted on a vehicle with the horse's face.
All the other gods were put on vehicles of gold.
And the brahmins well - versed in lores
Preoccupied themselves with fanning the idols.

(இறைவனது உலாக்காட்சி) **திபதை**

60. [1]குடைகொடி கோலேந்திக் கொண்டது லக்ஷம்
துடிமேள முந்தேவ துந்துமி யார்ப்ப
பந்தமெண் ணாயிரம் பகல்வத்தி கோடி
சந்தமா யேணிப்பந் தங்களெண் ணூறு
நாட்டிய மாடிய [2] நாடகப் பெண்கள் 5
கூட்டமோ ராயிரங் கூடி யிருக்கச்
சதுமறைக் [3]கோஷ்டஞ் சமுத்திரம் போலத்
துதிசெய்து தியாகரைச் சூழ்ந்துடன் வரவே
[4]வித்துவர் கவித்துவம் வேணது சொல்லிச்
சத்தியங் காளரைத் தான்மிகப் புகழ 10
விகனதா கியபாண வித்தைகள் காட்டக்
ககன மளாவிய கம்ப பாணங்கள்
சொரியும் புகையினாற் சோம னொளிக்கத்
திரிநேத் திரமுள தேங்கா யனந்தம்
சூறைவிடப் போனது பாக்கியு மதிர்வேட் 15
[5]டாரவா ரங்க ளாரூரெல்லாம் பரவ
ஐயர்வந் தார்திரு வாரூரி லென்றுந்
தெய்வம தாகிய தியாகரே என்றும்
துதிசெயும் ராசேந்திர சோழபூ பதிக்கு
மதலைதந்த யெங்கள் மகதேவ ரென்றும் 20
வெள்ளியங் கிரியில்வாழ் வேந்தனா ரென்றும்
புள்ளிமா [6]னேந்திய புண்ணிய ரென்றும்

மலரோன் சிரத்திலொன்று [7]மாற்றினோ னென்றும்
அலர்கொன்றை மாலை யணிந்தவ ரென்றும்
நீண்டசெஞ் சடையினான் நீலகண் டத்தின் 25
தாண்டவ மாடுந் தயாநிதி யென்றும்
புற்றிட மாகியிப் போதிருந் தெவர்க்கும்
முத்தியைக் கொடுக்குமா மூர்த்தியா ரென்றும்
வண்ணங்க ளாலிந்த வகைவகை யாகச்
சின்னங்க ளால்சொல்லிச் சேவிதஞ் செய்ய 30
மனுக்களிந்த வால வாத்தியங் கேளா
மனுக்கள ....தி வால மணற்கீழ் விழுந்து
பருக்கவா ரூரெனும் பட்டண மெல்லாந்
திருக்கோலம் வந்து திரும்பினர் சுவாமி
ஆலய முட்புகுந் தால மெடுத்துக் 35
கோலமா கியதிருக் கொலுமண்ட பத்தில்
அரகர வெனத்தியாக ராயரைப் போற்றிப்
பரிவுடன் வைத்துப் பணிந்துநின் றனரே.

இறைவனின் திருவுலாவில் பலநூறாயிரம் மக்கள் கூடிவந்தார்கள். அவர்களுள் சிலர் இறைவனுக்குரிய கவிகையாகிய குடையைத் தாங்கி வந்தனர்; சிலர் செங்கோலைத் தாங்கிச் சென்றனர். மற்றையோர் சோழர் சின்னமாகிய புலிக்கொடி யேந்தியவர்களாய்ச் சென்றனர். துடி என்னும் உடுக்கையையும் தேவதுந்துமி என்னும் பேரிகையையும் இசைத்து வந்தவர் பலர். எட்டாயிரம் தீப்பந்தங்களையும், பல நூறாயிரம் வினோதவிளக்குகளையும், எண்ணூறு ஏணிப்பந்தங்களையும் பலர் தாங்கிவர உலாவரும் தெருக்கள் ஒளிமயமாய்க் காட்சியளித்தன.

நாடகமகளிர் ஓராயிரவர் நாட்டியம் ஆடிவந்தனர். நான்கு வேதங்களையும் முறையாக ஓதி வந்தவர்களின் கூட்டம் பெருங்கடல்போலக் காணப்பட்டது. புலவர் பெருமக்கள் உமைபாகனாகிய இறைவனின் புகழ்பாடி இறைவனைச் சூழ்ந்து வந்தார்கள். மிக இலேசாகப் பறந்து செல்லக்கூடியனவாகிய கம்பபாணம் முதலான பலவகை வாணங்களைக் கொளுத்தி அற்புதங்கள் பலவற்றை நிகழ்த்திக் காட்டினார்கள். அந்தப் பாணங்களிலிருந்து வெளிவரும் புகைக் கூட்டங்கள் நிலா ஒளியை முழுமையாக மறைத்துவிட்டன. மூன்று கண்களையுடையனவாகிய தேங்காய்கள் எண்ணமுடியாத அளவில் சூரைவிடப்பட்டன. இத்தகு பேரொலிகளைத் தவிர அதிர் வேட்டு எனப்படும் வெடியொலியானது திருவாரூர் நகர் முழுவதும் ஒலித்துக்கொண்டிருந்தது.

எங்கள் ஐயன் திருவாரூருக்கு எழுந்தருளி விட்டான் என்று எண்ணி மகிழ்ச்சியடைந்த மக்கள், தியாகேசப்பெருமானே! தவறாது பூசித்து வந்த எங்கள் சோழ மன்னனுக்கு மகப்பேறு அளித்த மகாதேவனே! வெள்ளியங்கிரியில் கோயில் கொண்டுள்ள

வேந்தனே! புள்ளிமானைக் கையிலேந்தியுள்ள புண்ணியனே! பிரமனது ஐந்துதலைகளில் ஒன்றைக் கபாலமாக மாற்றிக் கையில் ஏந்தியவனே! கொன்றை மாலையணிந்தவனே! செஞ்சடை மூர்த்தியே! நீலகண்டனே! தாண்டவ நடனமாடுந் தயாநிதியே! புற்றை இருப்பிடமாகக் கொண்டு என்றும் யாருக்கும் முத்தியாகிய பேற்றினை யளித்தருளும் மூர்த்தியே என்றெல்லாம் பலவாறு இறைவனின் திருவருட் செயல்களை எடுத்துச் சொல்லிச் சொல்லி வணங்கினார்கள். மேலும் பலர் இத்தகு புகழ்ச் சொற்களின் ஒலியை ஊன்றிக்கேட்டுணர்ந்தவர்களாய் உணர்ச்சிப் பெருக்கில் தரையில் விழுந்து வணங்கினார்கள்.

இவ்வாறான பெருத்த ஆரவாரங்களுக்கிடையே இறைவன் திருவாரூர் நகர் முழுவதும் திருவுலா வந்து முடித்துக் கோயிலினுட்புகுந்தான். அங்கு இறைவனுக்கு மங்கல ஆரத்தி எடுத்து முடித்தார்கள். அரகரா வென்னும் பேரொலியால் தியாகேசனைப் போற்றித்துதித்த மக்கள் கொலு மண்டபத்தில் இறைவனை இருத்திப் பணிந்து நின்றார்கள்.

துடி - உடுக்கை. துந்துமி - துந்துபி - பேரிகை. பந்தம் - ஒளிவிடும் தீப்பந்தம். பகல்வத்தி - வினோத விளக்குகள். சந்தம் - அழகு. ஏணிப்பந்தம் - ஏணிவடிவிலமைக்கப்பட்ட அடுக்குத் தீவர்த்தி. சதுமறை - சதுர்மறை - நான்கு வேதங்கள். வித்துவர் - புலவர். கவித்துவம் - கவி பாடுந்திறன்; புகழ்ந்து பாடும் பாடல்கள். சத்திபங்காளர் - உமையம்மையை இடது பாகத்திலே தாங்கியவர். விகனது - மிக இலேசானது. ககனம் - ஆகாயம். சோமன் - சந்திரன். திரிநேத்திரம் - மூன்று கண்கள். அனந்தம் - அளவற்றவை. சூரை - சுக்கு நூறாகும் படி தரையில் அடித்து உடைத்தல். அதிர் வேட்டு - மிகப்பெரிய வெடி. மதலை - குழந்தைச்செல்வம். மலரோன் - பிரமன். மனுக்கள் - மக்கள். ஆலம் - மஞ்சள் நீராகிய ஆரத்திநீர்.

சு.சொல் - 1. குடைக்கொடிக்கோலேந்தி 2. னாடகப் 3. கோஷ்ட்டஞ் 4. வித்துவார் 5. டாரவாரவங்க 6. நேந்திய 7. மாத்தினோ.

The Procession

60. The devout gathered in thousands,
Some carried the festive umbrella,
Some the rod of power,
A few held the Cōḻa flag aloft
With the logo of the tiger.
Many played on instruments,
As varied as *Tuṭi* and *Tēvatuntumi;*
With torches galore and fancy lamps,
The streets through which they passed
Looked cheerful and bright.
The danseuses in large numbers

Moved their body and feet gracefully
To the tune of scintillating music;
Those who chanted the Vētās
Resembled the ocean in bulk;
Poets were preoccupied
With praising the lord;
Fireworks added to the colour,
The smoke beclouding the moon;
Thousands of coconuts were broken
While the giant cracker exploded
With a mighty dafening noise!
In the excitement that the Lord
Had come to Tiruvārūr
In grand ceremonial procession,
The populace fell on the floor
And prostrated at the feet of Tiyākēcar
While their mouths numbled
Sacred words of prayer:
Great lord who blessed
Our devout king with babe!
The one residing in *Veḷḷiyaṅkiri*
Holding the stag in His hand!
Wearer of the *Koṉṟai* garland!
The Red - haired god
Who in the past plucked
One of the heads of Piramaṉ
And held the skull in hand;
The benign one credited with the cosmic dance,
Dweller of the snake - pit
Who assures bliss to the pious and faithful,
We are overwhelmed with great ecstasy!
Thus after circling the streets of Tiruvārūr

In gorgeous procession,
The Lord was brought to the temple
Where formal worship was done
Amidst cries of *Arakara*
And other frenzied acts of prayer,
The idol was then brought to the ceremonial hall
Where the devout continued with a long litany.

வசனம் - சுவாமி தியாகராயர் வீதிவலம் வந்து திருக்கோவிலிலே கொலு மகாமண்டபத்தில் அமர்ந்திருந்த பின்பு நாட்டியப் பெண்கள் வந்து நாட்டியமாடிச் சோதி மேற் பண்ணிசையேதெனச் சொல்லினர். (18)

Prose : After Lord Tiyākēcar entered the ceremonial hall and was seated there, how did the danseuse praise the lord while dancing rhythmically?

(ஆடிப்பாடிப் புகழ்தல்) **சிந்து**

61. தேவாதி தேவனே ஆரூரில் வாழுந்
தியாகலிங் கேசனே
மூவுல குந்துதி மூவரு முன்னிட
சேவடியைத் தொழுதே புகழ்வர்
சரபாவ வதார பராக்கிரமனே - யதி 5
கேவல முதவு [1]கிருபாகரா
வம்பர கேசா சர்வேசா
கிரிவாசா - உமைநேசா - யீசா (தேவாதி)

அன்னாழி தன்னிலே பொல்லாமை யான
[2]வமுதத்தை யுண்டவா - நின்று 10
உலகேழு மளந்தவனுந் திசையென் [3]றுரையறிந்ததி
லுயர்ந்தவரா மென்று ரைத்தாய்
தெளிவித்தாய் - சகலத்தாய் - பலவற்றா யுற்றாய்! (தேவாதி)

தென்புலி யூரனே - நடனஞ் செய்த
அம்பல வாணனே 15
நம்பின முன்பத மென்பவருக் குதவும் - புவி
தந்திடு [4]செம்பிர மெல்லா மனத்தின்படி

தந்துபதம் பெறுவித்திடு சம்பு சவுந்தரா
சங்கரனே சமுசாரா - மகமேரா
[5]வுபகாரா - தயாபர ராரூரா 20 (தேவாதி)
அகியெனு பூஷணா பருதிமதி கனவிலோசனா
பகலவ னாகிய மரபினி லேவரு
செகபதி ராசேந்திர பூபதி - மனமகிழ்
பெறவே வரமருளிய வரவை
முகமதி லேமுதல் முகமிது வாகிய 25
[6]மூர்த்தி - சுபகீர்த்தி - [7]வளர்பூர்த்தி
[8]சரணார்த்தி போற்றி தேவாதி தேவனே.

தேவர்களின் தலைவனே! திருவாரூரில் இலிங்கவடிவமாக எழுந்தருளியுள்ள தியாகேசனே! மூவுலகத்தோராலும் போற்றப்படுகின்ற பிரமனுந் திருமாலும் உருத்திரனுமாகிய மூவரும் எக்காலத்தும் உன்னுடைய திருவடிகளைப் புகழ்ந்து போற்றி வணங்கி வருகிறார்கள். எண்காற்புள் உருவமெடுத்து நரசிங்க மூர்த்தியின் தோலை உரித்தணிந்த சரப மூர்த்தியே! முத்திப் பேற்றினை அளிக்கவல்ல கருணாமூர்த்தியே! பரந்த வெளியாகிய ஆகாயத்தையே இருப்பிடமாகக் கொண்ட இறைவனே! வெள்ளியங்கிரியில் எழுந்தருளி உமாதேவிக்கு ஒருபாகத்தையளித்து மகிழ்விக்கும் இறைவனே!

திருப்பாற் கடலில் பிறந்த நஞ்சாகிய அமுதத்தையுண்டு தேவர்களைக் காத்தவனே! உலகங்களையெல்லாம் அளந்தவனாகிய திருமால் உந்திக் கமலத்தால் உயர்ந்தவரென்ற பேச்சைக் கேட்டுப் பிரமனும் திருமாலும் வியக்கத்தக்க முறையில் சூறைக்காற்றாக மோதி அவர்களை வருத்தி இருவராலும் துதிக்கப்பட்டவனே!

தென்னாட்டுப் புலியூராகிய சிதம்பரத்திலே கோயில் கொண்டுள்ளவனே! அங்கு, திருச்சிற்றம்பலத்திலே திருநடனஞ்செய்து அம்பலவாணன் என்னும் பெயர் பெற்றவனே! உன்னுடைய திருவடிகளையே துணையாகக்கொண்டு வாழ்கிறோம் என்று உண்மையாக நம்பும் அடியவர்களுக்கு உதவி செய்பவனே! இந்த நிலவுலகத்து இன்பமெல்லாவற்றையும் அவரவர் விரும்பியவாறு கொடுத்தருளிப் பெரும்பேறு பெறச் செய்யும் இனியவனே! உலகப் பற்றுகளுக்குத்துணைபுரியும் சங்கரனே! மகமேருவில் எழுந்தருளி அனைத்து உதவிகளையும் செய்யும் அருட்குண வளளலே! திருவாரூர்த் தியாகேசனே! பாம்பாகிய ஆபரணத்தை யணிந்தவனே! சூரிய சந்திரர்களைக் காட்டிலும் மிகப்பரந்த கண்களையுடையவனே! சூரிய குலத் தோன்றலாகிய இந்த நிலவுலகத் தலைவன், சோழமன்னனின் மனம் மகிழுமாறு மகப்பேறு பெற வரமளித்து உதவி அதன் பயனையறிந்து மகிழும் முகத்தையுடைய மூர்த்தியே! நற்புகழுக்குரியவனே! முழுமுதல்வனே! உன்னுடைய திருவடிகளே அடைக்கலமென்று போற்றுகிறேன்..

லிங்கேசன் - லிங்கம் + ஈசன் - இலிங்க வடிவில் எழுந்தருளியுள்ள இறைவன். மூவுலகு- பூமி, அந்தரம், சுவர்க்கம் என்பன. மூவர் - பிரமன், திருமால், உருத்திரன் ஆகியோர். சரபம் -

எண்காற்புள்; சிம்புள் பறவை. கேவலம் -பேறு. கிருபாகரன் - அருட்குணமுடையவன். அம்பரம்- பரந்தவெளி. கேசம் - வீடு, இருப்பிடம். கிரி - மலை. அன்னாழி - ஆழி கடல்; திருப்பாற்கடல் எனக்கொள்ளப்பட்டது; (அன்னம் - உணவு, பால் என்னும் பொருளில்) பொல்லாமை - கொடுமை. உந்தி - திருமாலின் உந்திக்கமலமாகிய கொப்பூழ் (வாயு புராணச் செய்தி உரையாகக் கொடுக்கப்படுகிறது) தென்புலியூர் - சிதம்பரம்; புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாதர் பூசித்த திருத்தலம் என்பதால் பெற்றபெயர். அம்பலம் - திருச்சிற்றம்பலம், சிதம்பரம். சம்பீரம் - அசைவு. பதம் - பேறு; இறைத்திருவடியடைதல். சம்பு - இறை. சவுந்தரம் - அழகு. சமுசாரம் - உலகப்பற்று. அகி - பாம்பு. விலோசனம் - கண். பகலவன் - சூரியன். செகபதி - தலைவன்; செகம் - நிலவுலகம். வரவை - விளைவு. சரணார்த்தி - அடைக்கலம்.

சு.சொல் - 1. கிறுபாகர 2. வமுற்தத்தை 3. றுறை 4. செம்பிறமெல் 5. வபகாரா 6. மூற்த்தி 7. வளர்பூற்த்தி 8. சரணாற்திபோற்தி.

The Dancers Eulogise

61. Leader of the Gods,
Tiyākēcar who is in the form
Of a holy icon at Tiruvārūr,
Who is eternally worshipped by Piramaṉ Tirumāl and Civaṉ,
Benign one capable of giving salvation,
The great power who as an eight - legged animal
Tore apiece the skin of the Man - lion and
Wore it under the name Carapa,
Almighty, who has the wide expanse as his abode,
The presiding deity at *Veḷḷiaṅkiri*
Who has offered part of his body to spouse Umai,
The Saviour of the Gods
Who consumed vile poison
Which emerged from the milky ocean!
Great god, who on knowing
That Tirumāl excelled by virtue of his holy navel,
Blew like a typhoon against Him and Piramaṉ
And was eulogised by them!
The lord who is worshipped
In the temple at Citamparam
Which goes by the name Teṉpuliyūr,

Who, by performing the cosmic dance
Earned the name Ampalavāṇaṉ,
The saviour of those who truly seek,
The bestower of creature comforts,
The beacon- light of mundane living
With his holy abode in Mount Mēru,
Tiyākēcar of Tiruvārūr,
Wearing the snake as a jewel,
The one possessed of divine eyes
Brighter than the Sun and the moon,
Who blessed the Cōḻa King,
Tracing descent from the Solar dynasty
With a worthy progeny
And happy thereof,
The God deserving great praise,
I prostrate at Thy feet!

வசனம் - இவ்விதம் போற்றி யிணங்கிய லீலையவ்விதத்தால் பின்னும் யாதெனச் சொல்லுவார். (19)

Prose : What more did the dancers say?

(இறைவனை மோகித்தல்) சிந்து

62. மோகங் கொண்டாள் தியாகரே - உன்மே -
லெங்கள்பெண்-மோகங் கொண்டாள் தியாகரே
மோகந் தனில்திசை யோகஞ் செய்யவல்ல
வேகமுண் டிவளிட ஸ்தனேக 'மெந்நாளினும்
நிறுவாக மிவளை யனுபோகங் கலந்தும்மிட 5
பாகங்கொள் வீரே - காமச்-சோகங்களா லதிக (மோகங்)

கல்லாமை கற்ற பேரிலு மதிகமாகக்
கல்லாமை கற்ற மாதுகாண்
வெல்லாண்மைக் காரியென்று சொல்லாள்
குணத்தில்வெகு - நல்லாள் 10

முச்சுடர்முன்னே - நில்லாள் - புருவ
முன்கை வில்லா ளெழில் மிகுந்த பல்லா
ளிவளுமுனக் கில்லா [2]ளெந்நேர முன்னை -
யல்லாமல் வேறெண் ணாதாள். (மோகங்)

தூணுஞ் சுதன்சுதர் காண் 15
கண்டம்பை யம்பு தூணிக்
கடக்கி றானவன் காணி
[3]லெவர்க்கும் பிரமை பூணி
மயக்கும் பொன்னி ராணி
பெண்சோனைச் சுருத்தாணி 20
பின்னையு மோபட் டாணி
கொட்டாலை பேசும் வீணி
லோபிக் கெல்லாம் மார்பி லாணி
யுமைக் கண்டிவள்
நானிலத்தை வளைத்து (மோகங்) 25

கொண்டகருங் கவரியாம் - உமக்கு மனங்
கொண்டபடி யெல்லாஞ் செய்வாள்
தொண்டு படவறிவு முண்டு
முலைகள் புஷ்பச் செண்டு
விழிகறுத்த வண்டு துடைகதலித் தண்டு 30
செய்ய யோதியிவளைக் கொண்டு
சுகித்தவழிக் குண்டு ஆகையா னும்மைக்கண்டு
மனங்களித்து மோகங் கொண்டாள் தியாகரே
உன்மே லெங்கள் பெண் மோகங்
கொண்டாள் தியாகரே. 35

தியாகராசப் பெருமானே! எங்கள் மகள் தங்கள் மேல் காதல் கொண்டிருக்கிறாள். காதல் விளையாட்டில் பலவகை உபசாரங்களைச் செய்து இன்பமூட்டும் அறிவுத்திறன் இவளிடம் உண்டு. இவளுடைய நகில்களும் எந்நாளும் இன்பமூட்டுவனவாகும். மிகவும் பொறுப்பும் திறமுமுடைய இவளைக் கலந்து சுகித்துத் தங்களுடைய ஒருபாகத்தில் அமர்த்திக் கொள்ளுங்கள்.

தங்களுக்கென்று தனித்திறம் எதையும் கற்றறியாத பெண்களைக் காட்டிலும் மிகுதியாகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் மயக்கப் பண்பைப் பெற்றவள் இவள்.

இன்பமளிப்பதில் மிகுதிறமுடையவள் என்று தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளமாட்டாள். மிகவும் நற்குணமுடையவள். சூரியன், சந்திரன், தீ ஆகியவற்றின் ஒளி இவள் ஒளியின் முன் குன்றிப் போகும். வில்லினைப் போன்ற புருவமும், அழகிய முன்னங்கையும், ஒளி மிகுந்த பற்களும் இவளழகை மேலும் உயர்த்திக் காட்டும். தங்களின் இல்லத்தலைவியாக இருக்க விரும்பும் இவள் தங்களையே நினைத்திருப்பதைத் தவிர வேறு எண்ணமெதுவுமில்லாதவளாக இருந்து வருகிறாள்.

மலர்பாணமாகிய அம்புகளைத் தாங்கிய மன்மதனானவன் எறிகின்ற அம்புகளுக்கு ஆட்பட்ட சிறந்த பற்றுக்கோடுடைய ஆடவர்களும், இளைஞர்களுங்கூட இவளைக் கண்டு மயங்குவார்கள். கண்டவர்கள் எல்லாம் வியக்கும் பண்பும் உடலும், அவர்களை மயக்கும் அழகும் உடையவளாய்ப் பொற்சிலையைப் போலக் காணப்படுவாள். எப்பொழுதும் அவளையே நினைக்கின்ற உள்ளத்தை உண்டாக்கும் சுறுசுறுப்பும், இனிய பேச்சும் உடையவள். ஈயாத உலோபிகளும் தங்கள் பொருளை இழக்குமாறு செய்யும் திறமை உடையவள். இத்தகு அழகிய எங்கள் மகள் உம்மைக் கண்டதிலிருந்து இந்த உலகத்தையே மறந்து இருக்கின்றாள்.

கவரிமான் கருநிறத்தைப் பெற்றது போன்ற கொண்டையை உடைய இவள் தங்கள் மனம் கோணாதபடி நடந்துகொள்ளும் தொண்டு உள்ளம் படைத்தவள்; சிறந்த அறிவும் உடையவள். மலர்ச்செண்டு போன்ற தனங்களும், கரியவண்டு போன்ற விழிகளும், வாழைத் தண்டினை ஒத்த தொடைகளும் வாய்க்கப்பெற்ற இவள் நடையில் அன்னம், விரைவில் கவரிமான் என்று கூறத்தகுந்தவள். இவள் உம்மைக் கண்டு மனம் மயங்கி மோகம் கொண்டு இருக்கிறாள்.

திசையோகம் - மயக்கும் பண்பு. விவேகம் - அறிவுத்திறன். நிறுவாகம் - நிருவாகம்- பொறுப்பு. முச்சுடர் - சூரியன், சந்திரன், தீ ஆகிய ஒளிகள் தூண் - பற்றுக்கோடு. அம்புத்தூணி- அம்பறாத்தூணி, அம்புகளைத் தாங்கும் பெட்டி. சோனை - சொரிதல், விடாமழை. கொட்டாலை- கொட்டாவை - கொட்டாவி விடுதல், உள்ளம் ஏங்குதல். கவரி - கவரிமான். கதலி - வாழை. ஓதி- ஓதிமம் - அன்னம், கவரிமான்.

சு.சொல் - 1. மென்னாளினும் 2. ளென்னேர 3. லெவற்க்கும் பிறமை.

Loving the Lord

62. Lord Tiyākarācar, our daughter has fallen madly for you!
She is an adept at coquettish love - play
And tends to indulge with great discretion.
Her breasts are a perennial source of pleasure,
Enjoy her and make her part of your self.
She is more zealous in surrendering herself
Than those ignorant of feminine wiles,
A paragon of virtues, she is much brighter

Than the sun and the moon,
Her bow - like eyebrows, graceful hands
And silvery teeth enhance her appeal
Her thoughts are perpetually hitched on attaining Thee!
Verily a statue wrought of gold,
With tempting features and winning manners,
She is the despair of all young men.
Her speech and looks are so ravishing
That they fill one's mind fully and for ever.
Even the most parsimonious shall turn liberal
At her bloom and shapeliness.
Ever since she cast eyes on Thee
She has given up every other thought.
Inspired by a supreme sense of service and sacrifice
And diligent by nature,
This girl with dark locks like a yac
Shall be a good companion to Thee!
Eyes as dark as the beatle
And bouquet - like breasts,
Thighs resembling plantain trunks
And graceful in her gait like swan,
She is desperately in love with Thee!

(திருவிழா முடிந்து அனைவரும் செல்லுதல்) திபதை

63. பரமர்முன் [1]னபிநயம் படித்துநின் றாடி
[2]யரிவையரே மங்களா ரத்தியு மெடுத்துச்
சோபனஞ் சொல்லிச் சுபமண்ட [3]பத்தில்
தீபலோச னருக்குத் திருக்கண் வளரத்
தாலாட்டுப் பாட்டதுஞ் சாத்தியிப் [4]புறத்தில் 5
கோலாட்டம் போட்டிடுங் கோதைமா ருக்குப்
[5]பார்த்த நேரமதெலாம் [6]பார்த்து லோபிகள்தான்
தூத்து மண்டபத்திற் துலைந்தது போலக்

கடிதியி லேகினார் காசினி தன்னில்
வடிவிலாக் கீர்த்தியை வளர்க்கும்நல் லோர்கள் 10
தினந்தமிழ் வித்துவ செனங்களை [7]வளர்க்க
மனந்தய வாகிய மாபாலர் தாமும்
ஆதவன் தன்வங்கி ஷாதிசந் ததியாம்
வீதி விடங்கரும் மெல்லியர் தமக்கு
உச்சித பூஷண [8]முடுகூறை கொடுத்து 15
மெச்சியே யவர்களை விடைகொடுத் தனுப்பி
மன்னவன் பிள்ளையும் மந்திரி தானும்
அன்னிய ருந்தம் [9]மரண்மனை புகுந்தார்
பாரதூ ரத்துப் பரசையெல் லாரும்
சேரு மிடத்தினிற் சேர்ந்திருந் தார்கள் 20
குணக்குந் [10]தெற்குக் குடக்குத் தரத்துக்
கணக்கிலாப் பிரசை கண்வளர்ந் தார்கள்
வஸ்துரா சேந்திரன் வார்த்தையின் படியே
கஸ்துவந் தடிக்கடி காவலாள் காக்க
நீலா சலமென நித்திரை செய்யீர் 25
காலா யுதங்[1]கொக்க ரேயெனக் கூவ
காரிருள் கண்டிடக் கண்ணெல்லா மலரப்
பூருவத் திசைதனிற் புரவியே முடைய
தேரினி லேறியே செங்கதிர் வரவே
[12]யாரவா ரங்களா யனைவரும் மலர்ந்து 30
செனமெல்லா மரகர சிவசிவ வென்றே
வனசம தென்ன மலர்ந்திருந் தனரே.

தியாகராசப்பெருமான் முன்பு நடனமாடிச் சிறப்பித்த மங்கையர் இறைவனுக்கு மங்கல ஆரத்தி எடுத்து முடித்தார்கள். ஆரத்தியின்போது நெற்றிக்கண்ணை உடையவராகிய இறைவனுக்குச் சோபனப் பாடலாகிய வாழ்த்துப் பாடலைப் பாடி அவர் துயில்கொள்ளுமாறு தாலாட்டுப் பாடல்களை முறையாகப் பாடி முடித்தார்கள். இவை நடைபெறும்பொழுது மற்றொரு புறத்தில் மங்கையர்கூடி கும்மி, கோலாட்டம் முதலியவற்றையும் நிகழ்த்திக் காட்டினார்கள். இறுதியாக உலோபிகளிடமிருந்த பொருள்களெல்லாம் தொலைந்து போனதுபோல விழாவிற்கு வந்திருந்த புகழ்மிக்க சான்றோர்களும், தமிழ் வளர்க்கும் புலவர் பெருமக்களும், அன்பும் அருட்குணமுமுடைய நல்லோர்களும், சூரியவமிசத்தில் தோன்றிய மன்னர் சந்ததியினரும் அந்த மண்டபத்தை விட்டு மிக விரைவாகச் செல்லத் தொடங்கினார்கள். மன்னன் மகனாகிய வீதிவிடங்கன்

விழாமண்டபத்தில் ஆடல்பாடல்களை நிகழ்த்திய மகளிர் அனைவரையும் புகழ்ந்து பாராட்டி உயர்ந்த ஆடை, அணிகலன்களைக் கொடுத்து அனுப்பி வைத்தான். பிறகு அமைச்சனும் தானுமாகத் தன் சேனை, பரிவாரங்களுடன் அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

தூரதேசத்திலிருந்து வந்திருந்த சான்றோரெல்லாம் அவரவர்கள் செல்லவேண்டிய இடத்தை நோக்கிச் செல்லத் தொடங்கினார்கள். நான்கு திசையிலிருந்தும் வந்திருந்த மக்கள் கூட்டம் எல்லாம் அங்கேயே படுத்து உறங்கத் தொடங்கினார்கள். மன்னவன் கட்டளைப்படி ஊர்க் காவலாளர்கள் இரவு முழுவதும் மக்கள் கூட்டத்தைக் காத்து வந்தார்கள். நீலமலையே உறங்குவது போன்று மக்கள் நிம்மதியாக உறங்கினார்கள். விடியற்காலம் வந்தது. சேவற் கோழிகள் 'கொக்கரக்கோ' என்று கூவத்தொடங்கின. இருளானது சிறிது சிறிதாக மறையத் தொடங்கியது. உறங்கிய மக்களின் கண்கள் மலரத் தொடங்கின. ஏழு குதிரைகளைப் பூட்டிய தேரிலே ஏறிக் கதிரவனானவன் கிழக்குத் திசையிலே காட்சி அளித்தான். மக்கள் அனைவரும் தாமரை மலர் போன்ற முகமலர்ச்சியோடு அரகரா! சிவசிவா! என்று கூறி ஆரவாரிக்கத் தொடங்கினார்கள்.

ஆரத்தி - மஞ்சள் நீரால் செய்யப்படும் நீராஞ்சனம். இது சோடச உபசாரங்களுள் ஒன்று. சோடசம் - பதினாறு. அவை: அடைகாய்தரல், அமுதமேந்தல், ஆசமன நீர்தரல், ஆடை சாத்தல், கருப்பூரத்தீபமேந்தல், கால்கழுவ நீர்தரல், கைகழுவ நீர் தரல், தவிசளித்தல், தேய்வைபூசல், நறும்புகை காட்டல், நீராட்டல், மஞ்சளரிசி தூவல், மந்திர மலரால் அருச்சித்தல், மலர்சாத்தல், முப்புரி நூல் தரல், விளக்கிடல் என்பன பதினாறு வகை வழிபாடுகளாகும். சோபனம் - வாழ்த்து. தீபலோசனர் - சிவபெருமான், நெற்றிக்கண்ணை உடையவன்; லோசனம் - கண். மாபாலர்-சான்றோர். ஆதவன் - சூரியன். உச்சிதம் - மேன்மை, உயர்வு. கூறை - சேலை. பரசை - பரிசு, புதிதாக வந்தவர். குணக்கு - கிழக்கு. குடக்கு - மேற்கு. உத்தரம் - வடக்கு. பிரசை - குடிமக்கள். கஸ்து வருதல் - பார்வையிட்டுச் சுற்றி வருதல். காலாயுதம் - கோழி, சேவல். பூருவத்திசை - கிழக்குத்திசை. புரவி - குதிரை. செங்கதிர் - சூரியன். வனசம் - தாமரை.

சு.சொல் - 1. னபினயம் 2. யருவையரே 3. லத்தில் 4. புரத்தில் 5. பாத்த 6. பாத்து 7. வளக்க. 8. முடுகறை 9. மரமனை 10. தெற்க்குக்குடகு. 11. சொக்கரே 12. யாரபாரங்களா.

All depart after the festival

63. The dancers who performed before the lord
Completed their final act of benediction,
Sang lullabies to the one with three eyes
So that He can sleep in peace,
Elsewhere some maides were preoccupied with
Dances like *Kummi* and *Kōlāṭṭam*.
Like the money of a miser getting drained
The crowd of elders, Tamil savants and virtuous folk

And the descendants of the Solar dynasty
Left the hall at a fast pace.
Prince Vitiviṭaṅkaṉ gave clothes and jewels
To the various artists who graced the festival
After smothering them with rich tributes.
Then along with the ministers and the retinue
Retired to the precints of the palace.
Noble souls who had come from afar
Left for their respective destinations,
People who had come from all directions
Chose to sleep in the hall itself.
Under the orders of the king,
The sentinels kept strict surveillance.
Since they were totally free from all fear,
They slept soundly like the blue hills.
Morning was heralded
By the crowing of the cock
And darkness got dispelled
By slow degrees.
Now the Sun-god riding a chariot
Drawn by eight mighty horses
Appeared in the Eastern horizon
And the faces of the people brightened
Like full - blown lotuses.
They gave vent to their intense joy
By chanting a litany for the Lord:
Arakara, Civa Civa!

(மன்னனின் மகிழ்ச்சி) திரிபுடை

64. மன்னவன் முகமலர்ச்சி யாய்நித்திய
மானவனுஷ் டானமு முடித்துத்
தானங்கள் தன்மங்களைச் செய்து மகிழ்ச்சியாய்
கொலுச் சபையி லிருந்தான்

கங்கை சூடுந் தியாகர் கலியாணங்க 5
எின்றுடன் முடிவ தோவெனத்
துங்க மன்னவன் கேட்டிருந்தனன் - திங்கள் போலே
தேச தேசத்து மன்னர் குடிபடை
ராச பூபதி தன்னைக் கண்டு நம்
வாச மதுசொல்ல வேணு மெனவவ - ராசையாக 10
மன்னு மாரூர்த் தியாகராயர் விவாகமது
கண்டுதெரி சித்தோமினி மன்ன னாகிய
சோழ பூபதி தன்னைக் காண்போம்.

சோழ மன்னன் நாள்தோறும் தவறாது மேற்கொள்ளுவதும், நிலைபேற்றுக்குக் காரணமானதுமான வழிபாட்டு முறைகளை யெல்லாம் முடித்து, மிகுந்த மகிழ்ச்சியுடையவனாய்த், தான, தருமங்கள் பலவற்றைச் செய்தான். பிறகு உல்லாச மண்டபத்திலே சென்று அமர்ந்து அமைச்சர் முதலானவர்களைப் பார்த்துத் தியாகேசப் பெருமானின் திருக்கலியாண விழாக்கள் இன்று முடிவுபெறும் நாளல்லவா என்று வினவினான். அப்போது,

விழாவிற்கு வந்திருந்த பலநாட்டு மன்னர்களும் குடிமக்களுமாகச் சேர்ந்து சோழ மன்னனைக் கண்டு தம்முடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வமுடையவர்களாகித், திருவாரூர், தியாகேசருடைய திருமணத்தைக் கண்டு தரிசித்து மகிழ்ச்சியடைந்தோம். இனிச்சோழ மன்னனைக் காண்போம் என்று முடிவெடுத்தார்கள்.

நித்தியம் - நிலைபேறு, நாள்தோறும். அனுஷ்டானம் - வழிபாட்டு முறைகள். கொலுச்சபை - மகிழ்ச்சியாய் வீற்றிருக்கும் மண்டபம். துங்கம் - தூய்மை, மேன்மை. வாசம் - மகிழ்ச்சி.

The King is happy

64. The King after completing
His daily rituals and prayer
Indulged in acts of charity
With overwhelming ecstasy.
Then he retired to the hall of pleasure
And queried the minister:
Is not today the concluding day
Of the lord's bridal festival?
Meanwhile the kings of various countries

And the masses of men
Who had witnessed the marriage of Lord Tiyākēcar
With great elan
Wanted to meet the Cōḻa king
And convey their deep - felt gratitude.

(பலநாட்டு மன்னர்களின் வாழ்த்து) **திபதை**

65. என்று வந்தவர்க ளிராச பூபதியை
யன்றுகண் டாரெனி லம்புவிக் கெல்லாம்
சுபமெய்த வேதஞ் சொலுபிரா மணரும்
தபவலு வான தபோதன ரெல்லாம்
முந்திவந் தரசன் முகத்தினைக் கண்டு 5
சுந்தரத் துரையே சுகிபவ வென்று
ஆசீர் வதித்துநல் லக்ஷதை கொடுத்துப்
பூசுரர் வேந்தனைப் புடைசூழ்ந் திருக்கப்
பரராச் சியத்துள [1]பார்த்திப ரான
துரைராச பூபனைச் சூழ்ந்துகொண் டவர்கள் 10
கொங்கண ராரியர் குரூதமி லாடர்
[2]சிங்கண மீழமாந் திரைகொச்சி நாடர்
வங்காளங் கேகை மகராட்டி நிஷதை
சிங்கார மானகாஷ் மீரயவ் வனமிஸ்த்
திரிநாய கங்குரு க்ஷேத்திர [3]மிதிலை 15
திருவடி திரவடஞ் சீனிநேப் பாளம்
கலிங்கரு மாட்டியங் குடகஞ் சார்பதி
தெலுங்குகன் னடமாலி சிந்துபந் தகமும்
சங்கரமுத் திரைபாஞ் சாலியா றாட்டை
யங்கம் [4]விதர்ப்பை காந்தாரை கேதாரை 20
காரா கமுகங் காமிகர் னாடஞ்
சீராக விளங்குகுண் டலிநீல கண்டம்
மண்புகழ் [5]கேரள மலுக்க துலிக்கும்
பொன்புகழ் குந்தள பூமியு மன்பத்
தாறுதே சத்திலு மடவுட னிருந்து 25
காறுபா றுகள்செய்யுங் காவல ரெல்லாம்

பராபரன் போலருள் பார்த்துல காளும்
துராதுரை ராசேந்திர சோழபூ பதியைக்
கண்டு வணங்கிமுன் காணிக்கை வைத்துக்
கண்ட மனைத்திரு கைகட்டி நிற்கில் 30
அரசரெல் லாரையு மருகிரு மென்று
பரிவுடன் வார்த்தை பகர்ந்துச் சிதங்கள்
உடுகூறை பல்லக்கு வாபரி நல்ல
குடைகளுந் தந்தனன் கொற்றவன் மகிழ்ந்து
[6]திறமுள சங்கம தீட்சை யளிக்குங் 35
குருபதி யாய்வரீர் கோமா னெழுந்து
திருவடி பணிந்தவர் திருநீ றளிக்க
வரகர வென்றிலா டத்தினி லணிந்து
தேசிக ருக்குப்பொன் சிவிகைபொன் விசிறி
போசனத் துக்கொரு பூண்டியுந் தானு 40
நந்திவா கனத்திரு நாதரா னவரை
வந்தனஞ் செய்தவர் மடந்தனுக் கனுப்பிப்
பத்தர்கள் சித்தர்கள் பரமஞா னியர்சொல்
லுத்தரங் கேட்டவர்க் குச்சித முதவிப்
பாரவித்து வாங்கிஷப் [7]பார்த்திபன் சமூகம் 45
சேரவந் தரசன்மேல் சிந்துவண் ணங்கள்
பாடவே யுச்சிதப் பல்லக் களித்து
கோடி தனம்பரி குடைகளுந் தந்தான்
சகலவித் தையிலுஞ் சமத்தர்கள் வந்து
செகபதி மெச்சவே திறமைகள் காட்ட 50
கன்னடர் தெலுங்கர்கள் கைகட்டி நிற்க
மன்னிய [8]ரொருபுறம் வந்துகண் டிருக்கப்
பட்டுவார் வேந்தனைப் பார்த்து மகிழ்ந்து
[9]அஷ்ட ஐயிசுவரிய சாமார்த்தியா பராக்கு
[10]துஷ்டநிக் கிரக[11]சிஷ்டி சுமங்களா பராக்கு 55
[12]நிஷ்ட நேமத்ததி ரூபா பராக்கு
அஞ்செழுத் ததனைநீரு மகலா பராக்கு
நெஞ்சுளத் திருத்திய நிருபா பராக்கு

ருத்திராட்ச மாலிகை ரூபா பராக்கு
சித்தாந்த மேசிவத் தியானா பராக்கு 60
பூலோக தெய்வ புரந்திரா பராக்கு
பாலர்க் கிரீட பதியே பராக்கு
அலர்க்கணை யேவு மனங்கா பராக்கு
புலிக்கொடி விருதுள புருஷா பராக்கு
புண்ணிய ராசேந்திர பூபா பராக்கு 65
நண்ணிய சொல்லினில் ராமா பராக்கு
பராக்கு பராக்கெனப் பலவிதஞ் சொல்லிப்
பராக்கு பராக்கெனப் பட்டர்கொண் டாட
ஆயுதஞ் சேவுக ராதிபன் சமூகம்
போய்ச் சலாஞ்செய்திப் புறம்வந்து நிற்க 70
ராயபேரிகை டமாய நாற்திசை யார்ப்பச்
சாயமறை மெல்லியர் தான்வந் தசைப்ப
பூச்சக் கரக்குடை புரவல னருகே
[13]காய்த்தபொன் மலையெனக் காந்தியாய்த் துலங்க
[14]வாறபேர் கோடியம் மன்னனப் பணையால் 75
[15]போறபேர் கோடியிப் புதுமையா யன்றைக்
கதிகால மிப்படி யாக மன்னவனல்
விதமாய்க் கொலுவினில் வீற்றிருந் தனனே.

இந்த நிலவுலகம் முழுமையும் என்றும் மங்களகரமாக, மகிழ்ச்சியாக விளங்கவேண்டும் என்று விரும்பித் திருமறைகளாகிய வேதங்களை ஓதி வரும் அந்தணரும், தவ மகிமை வாய்ந்த முனிவர் பெருமக்களும் முதலில் அரசனைக் கண்டார்கள். உள்ளத்தூய்மை வாய்ந்த மன்னவனே! 'எல்லா நலன்களும் பெற்று நெடிதுவாழ்வாயாக' என்று வாழ்த்தி மங்கலப் பொருள்களைக் கொடுத்தார்கள். இவ்வாறு வாழ்த்திய அந்தணரும் பிறரும் அரசனைச் சூழ்ந்திருக்கும் போதே மற்றைய நாட்டு மன்னர்களும் வந்து அரசனைச் சூழ்ந்து கொண்டார்கள். கொங்கணர், ஆரியர், கொடியவர்களாகிய இலாட தேசத்தார், சிங்கள மொழியைப்பேசும் ஈழநாடாகிய இலங்கை நாட்டவர், கடல் சூழ்ந்த கொச்சி நாட்டவர், வங்காளம், கேகயம், மகராட்டிரம், நிடதம், அழகிய காஷ்மீரம், யவனம், கலப்புமிக்கதாகிய குருஷேத்திரம், மிதிலை, தென்கோடி நாடாகிய தமிழ்நாடு, சீனம், நேபாளம், கலிங்கம், மராட்டியம், குடகு, தெலுங்கு, கன்னடம், மாலி, சிந்து, பந்தகம், சங்கமுத்திரை, பாஞ்சாலம், ஆறாட்டை, அங்கம், விதர்ப்பம், காந்தாரம், கேதாரம், காரகம், கமுகம், காமிகம், கருனாடகம், குண்டலி, நீலகண்டம், கேரளம், துலுக்கம், குந்தளம் ஆகிய நாட்டு மன்னவரும் மக்களுமாகிய ஐம்பத்தாறு தேசங்களிலி

ருந்து வந்தவர்கள் அனைவரும் சூழ்ந்து கொண்டார்கள். விழாவின் சிறப்புகளை யெல்லாம் எடுத்துக் கூறிப் பாராட்டினார்கள். பராபரனாகிய அந்தச் சிவபெருமானைப் போன்ற அருட்குணமிக்கவனாகி உலகாளும் சோழமன்னவனை நேரில் கண்டு வணங்கினார்கள். தாங்கள் கொண்டு வந்திருந்த காணிக்கைப் பொருள்களையெல்லாம் சோழமன்னன் முன்வைத்தார்கள். கழுத்துவரையிலுமாக இரண்டு கைகளையுங் கட்டிக்கொண்டு நின்றார்கள். சோழ மன்னன் அவர்கள் யாவரையும் அன்போடு அருகில் அமரச்செய்தான். உயர்ந்த ஆடைகளுங் குடைகளும் பல்லக்குகளுமாக வழங்கினான். சிறந்த விரத நியமங்களை எடுத்துக்கூறி உபதேசம் செய்யும் சக்திபெற்ற வீரசைவ குருமார்களை அணுகி அவர்தம் திருவடிகளிலே வணங்கினான். அவர்கள் அளித்த வெண்ணீற்றைப் பெற்று 'அரகரா' வென்று கூறியவாறே நெற்றியிலணிந்தான். அந்தக் குருமார்களுக்குப் பொற்சிவிகை, பொன்னாலான விசிறி அவர்கள் தங்குவதற்குரிய இருப்பிடம் ஆகியவற்றை அளித்து, இறைவனுக்கு நிகரான அவர்களின் திருவடிகளில் வணங்கித் தான் கொடுத்த பொருள்களுடன் அவர்களை மடங்களுக்கு அனுப்பிவைத்தான். அதேபோலச் சிறந்த இறையன்பர்கள், சித்தர்கள், உயர்ந்த ஞானம் பெற்றவர்கள் போன்ற சான்றோர்களின் தேவையறிந்து ஏற்ற உயர்ந்த பொருள்களை வழங்கினான்.

அடுத்து பொறுப்பும் கடமையும் மிகுந்த புலவர்கள் அரசனை நெருங்கினார்கள்; பலவகை வண்ணங்களமைந்த பாடல்களையும், சிந்துநடைப் பாடல்களையும் பாடிப் புகழ்ந்தார்கள். அவர்களுக்கும் உயர்ந்த பல்லக்கு, குதிரை, குடை, கோடிக் கணக்கான பணம் ஆகியவற்றை வழங்கினான். பலவகையான வித்தைகளில் வல்லவர்கள் வந்து மன்னவன் வியந்து புகழும்படியான பல் வித்தைகளைச் செய்து காட்டினார்கள். தொடர்ந்து கன்னடர்களும் தெலுங்கரும் வந்து கைகட்டி வணங்கி நின்றார்கள். பெருமைமிக்க சான்றோர் பலர் வந்து வாழ்த்தினார்கள். பாடகர் பலரும் வந்து மன்னனைக் கண்டு மகிழ்ச்சியடைந்தவர்களாகி, எண்வகைச் செல்வங்களையும் பெற்றவனே! திறமைமிக்கவனே! தீயோரை அழித்து நல்ல ஒழுங்கை நிலைநிறுத்தும் தலைவனே! மனம், மொழி, மெய்களை ஒருநிலை நிறுத்தி மேற்கொள்ளும் நியம முறைகளில் சிறிதும் தவறாதவனே! 'நமசிவய' என்னும் ஐந்தெழுத்தை உச்சரிப்பதில் என்றும் தவறாதவனே! அந்த ஐந்தெழுத்தை நெஞ்சத்திலிருத்திய தலைவனே! உருத்திராட்ச மாலையை அணிந்து, சைவசமயத் தருக்க முடிவுகளின் அடிப்படையில் சிவபெருமானைத் தியானித்துப் பூவுலகின் இறைவனாக இருந்து பாதுகாப்பவனே! இளைஞர்களின் தலைவனாகவும், மலர் பாணத்தால் ஆசையை யுண்டாக்குகின்ற மன்மதனாகவும் விளங்குபவனே! புலிக்கொடியுடைய சோழ மன்னவனே! சொல் தவறாமையில் இராமனை நிகர்த்தவனே! உனக்குப் பராக்கு கூறுகின்றோம் என்று கூறிப் புகழ்ந்தார்கள். ஆயுதம் தாங்கிய வீரர்களின் தலைவனாகிய சேனைத் தலைவன் வந்து முறையாக வணக்கம் செய்து ஒதுங்கி ஒருபுறம் நின்றான். அரச பேரிகைகள் நாற்புறமும் முழங்கின. அழகுங் கல்வியும் நிறைந்த மகளிர் பலர் பூச்சக்கரக்குடையுடைய மன்னவனருகில் வந்து நின்றார்கள். பொன் காய்த்த மலையைப் போன்று மிகுந்த ஒளி வீச நின்ற அவர்கள் கவரி வீசினார்கள். இப்படி மன்னனின் பேருதவி பெற வருபவர்களும், மன்னனின் ஆணைப்படி பரிசுகளைப் பெற்றுச் செல்லுபவர்களுமாகக் கோடிக் கணக்கான மக்கள் நடமாடும் புதுமை விளங்க மன்னவன் உல்லாச மண்டபத்தில் வீற்றிருந்தான்.

அம்புவி - நிலவுலகம். தபோதனர் - முனிவர். தபம் - தவம் - தவசு; இது இராசதகுணங்களுள் ஒன்று - அவை - கல்வி, கேள்வி, ஞானம், தருமம், தவம், தானம், நலம், பேணல் என்னும் எட்டு; புண்ணியத்தோற்றங்களுள் ஒன்று - அவை - ஒழுக்கம், கல்வி, கொடை, தவம் என்னும் நான்கு. சுகிபவ! - எல்லாச் செல்வங்களுடன் வாழ்க! அட்சதை - மங்கல அரிசி. பூசுரர் - அந்தணர். புடை - அருகு. பரராச்சியம் - பிறநாடு. குரூதம் - குரோதம் - உட்பகை; காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் அறுவகையான உட்பகைகளுள் ஒன்று. கேகை -கேகயம். நிஷதை - நிடதம். சிங்காரம் - அழகு. சீனி - சீனம். காறுபாறுகள் - காறுபாறிகள் - அதிகாரமுடைமை. காணிக்கை - அன்பளிப்பு. சங்கமதீட்சை - வீரசைவ உபதேசம். இலாடம் - நெற்றி. பூண்டி - சிற்றூர், இருக்கை எனினுமாம். சித்தர் - அணிமா முதலிய எட்டுஞ் சித்திக்கப் பெற்றவர் ; அவை - அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராசத்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன; இவை கைவரப்பெற்றவர். இவை முறையே, ஆன்மாபோலாதல், மகத்துவமாதல், கண்டிப்புள்ளவற்றை யுருவவல்லனாதல், இலகுத்துவமாதல், வேண்டுவன அடைதல்,, நிறையுளனாதல், ஆட்சியுளனாதல், தன்வசமாக்க வல்லனாதல் என்னும் தன்மையன. உச்சிதம் - உயர்ந்தவை. பாரம் - பொறுப்பு, கடமை. வித்துவாங்கிசம் - புலவர் கூட்டம். சிந்து, வண்ணம் என்பன சந்தப்பாடல்கள். பட்டுவார் - பட்டர்கள் - பாடகர்கள். அஷ்ட ஐசுவரியம் - எண்வகைச் செல்வம்; அவை - அரசாங்கம், மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை என்பன. நிக்கிரகம் - அழித்தல். சிஷ்டி - ஒழுங்கு, படைப்பு. நிஷ்ட நேமம் - மன, மொழி, மெய்களால் அசையாது இருக்கும் முறை. அஞ்செழுத்து - நமசிவய. மாலிகை - மாலை. சித்தாந்தம் - சைவசமயத் தருக்க முடிவு. புரந்திரன் - பாதுகாப்பவன் (புரந்தரன்); இந்திரன். விருது - அடையாளக்கொடி சேவுகராதிபன் - சேனைத்தலைவன் ராயபேரிகை - அரசமுரசு. சாய - சாயல்- அழகு பூச்சக்கரக்குடை - பூமிச்சுற்றாகிய குடை; மன்னனின் சின்னங்களுள் ஒன்று. புரவலன் - பாதுகாவலன் காந்தி - ஒளி. அப்பணை - ஆணை.

சு.சொல் - 1 பாற்தீபரான 2. சிங்கன 3. மிதுலை 4. விதற்பை 5. சோள 6. திரமுள 7. பாற்திபன் 8. றொருபிறம் 9. அஷ்ட்ட 10. துஷ்ட்ட 11. கிஷ்ட்டி 12. நிஷ்ட்ட 13.காச்சப்பொன் 14. வறபேர்கொட்டி 15. போறவேர்கொடியிப்.

The greetings of the Kings

65. The Brahmins well - versed in lores
Who pray for the welfare of the world
And sages who excel in spiritual wisdom
First met the king and greeted him,
Presenting him with auspicious things.
The kings of the following fifty four countries
Gathered round the king: Koṅkaṇam, Āriyam,
Ilāṭam, Īḻam, Kocci, Vaṅkāḷam, Kēkayam,
Makārāṭṭiram, Niṭatam, Kāṣmīr, Yavaṉam,
Kuruṣēttiram, Mitilai, Tamiḻnāṭu.

Ciṉam, Nēpālam̲, Kaliṅkam, Marāṭṭiyam,
Coorg, Teluṅku, Kaṉṉaṭam, Māli,
Cintu, Pantakam, Caṅkamuttirai,
Pāñcālam, Āṟāṭṭai. Aṅkam,
Vitarpam, Kāntāram, Kētāram,
Kārakam, Kamukam, Kāmikam,
Kārṉāṭakam, Kuṇṭali, Nīlakaṇṭam,
Kēraḷam, Tulukkam and Kuntaḷam.
They spoke glowingly of the festival
Cataloguing its many merits.
They personally paid obeisance to the Cōḻa king
As meritorious as Lord Civaṉ,
Placed before him their gifts,
And stood with folded hands.
The king beckoned them to sit by his side
And gave them costly robes, umbrellas and palanquins.
Then he prostrated before the Caiva preceptors.
Qualified, to dole out spiritual advice.
He meekly accepted the sacred ash
Wore it on his forehead
Uttering with great faith, *Arakarā*!
The teachers were given
Gifts as varied as golden fans,
Palanquins and comfortable abodes.
After prostrating at their holy feet
He bade adieu to them
Who returned to their respective mutts.
Other pious and holy men
Were also given lovely presents
Each according to his need.
The poets who sang his glories
Were also given horses, palanquins and wealth.
Next came the acrobats

To exhibit their skill
Followed by the Kaṉṉaṭikās and Telugūs
Who stood with folded hands.
Many elderly men greeted the king
Followed by the musicians
Who variedly sang his merits:
Lord of the eight types of wealth!
The much - abled One!
The destroyer of evil and
The restorer of order and harmony!
The great one who practises co-ordination
In thought, word and deed!
The great King who never fails to utter daily
The mystic incantation of Five words!
The wearer of the *Rutrākṣa* beads
Who strictly adheres to the tenets of Caivism
And applies it in day to day work
Thereby elevating oneself to almost godhead on earth!
The great saviour of men!
The leader of the youth
Who is capable of arousing passion
Like proverbial cupid with his arrows!
Great monarch who has the tiger
As his logo in the state flag!
In integrity, a second Rama!
We have immense pleasure
In greeting you and offering our felicitations!
Next came the chief of the Army
Who paid homage to the King
And retired to the place earmarked.
The trumpets struck pleasant notes
From all the directions.
Enlightened damsels with elegant looks

Lined up near the King
Who sat below a canopy of flowers.
Those bright girls
Who looked like a hillock of gold
Fanned the monarch with great devotion
Thus sat the King in the hall of pleasure
Extending help to those who sought
And distributing rich gifts and mementos.

(மறுநாட்காலை திருவனந்தல் நடத்தத் திட்டமிடுதல்) திரிபுடை

66. மன்ன னிவ்வித மிருக்க வேதுரை
மகனு மந்திரியுந் தளபதியும்
அன்னல் காலையில் தியாகருக்குத்
திருவனந்தல் நடத்த
கால மேதுரை மகனு மந்திரியும் 5
ஆல கண்ட னுக்குத்திரு வனந்தலைக்
கோலமாய்ச் செய்ய வேண்டி யதிடிறிய
லீலையாகதம் பதியெல்லா ரையுமொரு
கும்பு கூட்டெனக் கூறியே சம்பிரமாய்த்
திருவ னந்தல் சேவிக்க யின்பமாகி. 10

சோழ மன்னன் மகிழ்ச்சியோடு தான தருமங்கள் செய்து வீற்றிருக்க, மன்னன் மகனாகிய வீதிவிடங்கன், அமைச்சன், சேனைத்தலைவன் ஆகியோர் கூடினார்கள். அன்றைய விடியற்காலை நேரத்தில் நஞ்சுண்ட கண்டராகிய தியாகேசருக்குத் திருவனந்தல் விழாவினை மிகச் சிறப்பாக நடத்தவேண்டுமென்று திட்டமிட்டார்கள். அவ்விழாவில் இன்பமாய் உடன் சுற்றி வருவதற்காகக் கணவன் மனைவியராகிய தம்பதியர் எல்லோரையும் ஒருங்கே கூடிவரச் செய்யுங்கள் என்று கட்டளையிட்டுத் திருவனந்தலில் இறைவனை வணங்கி மகிழக் காத்திருந்தார்கள்.

தளபதி - சேனைத்தலைவன். திருவனந்தல் - நித்திரைத் திருவிழா; தாலாட்டல். ஆலம் - விஷம். கோலம் - அழகு . தம்பதியர் - கணவன் மனைவியர். கும்பு - கூட்டம். சம்பிரம் - மகிழ்ச்சி.

Planning the ceremony called 'Putting the Lord to sleep'

66. While the Cōḻa king was busy
With charitable acts
Vitiviṭaṅkaṉ, minister and army chief

Met in the morning to plan
The ceremony of 'Putting the lord to sleep',
Orders were issued
To fetch all married couple
Who would add grace to the occasion.
After offering prayers to the lord,
They kept waiting.

(திருவனந்தலுக்குப் புறப்படுதல்) சம்பை

67. வீதி விடங்கருக்குத் - தேர் விந்தையாய்க் கொண்டு வந்து
மாதிசையி [1]லேகுவித்து மாலைச் சரமணிந்து
மிருகராச னைத்திசையில் விசித்துப்புலிக் கொடிவிசித்து
மருவுபுள கிதபிறப்பில் வரிசை யாய்ப்பதித்து
மணியணிந்து வலங்கார மாயிருந்த [2]தேர்மீதுக் 5
கிணையிலா [3]வேந்தன்மக னேறினா னழகாய்
நீதிபூஷ ணனுமைந்த னிடதுபக்கத் தினிலிருந்து
நீதிதனை டேமதலைக் காதி லுரைகூற
ஆனைசேனை கள்குதிரை யானதுவெல் லாமன்ன
னானவனை யிருபுறமுஞ் சோனை யெனச்சூழ 10
பட்டுவார் [4] புகழ்ந்தேத்தப் பாவாணர் கவிபாட
[5]அஷ்டதிசை யிலுமேள [6] .ார்ப்பரித்து முழங்க
பஞ்சவாத் தியமுழங்கப் பலவிருது தான்பிடிக்க
வஞ்சலஞ்ச லாய்ச்சிவிகை யாதிபர முன்னடக்க.

வீதிவிடங்கன் திருவனந்தலுக்குப் புறப்படுவதற்காக அழகிய தேரினைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். ஒருபுறம் குதிரைகளைக் குவித்தார்கள். பலவகையான மாலைகளால் தேரானது அரங்காரம் செய்யப்பட்டது. தேரின் ஒருபுறம் சிங்கக்கொடியையும் மற்றொரு புறம் புலிக்கொடியையுங் கட்டினார்கள். மேலும் மகிழ்ச்சியூட்டும் அலங்காரப் பொருள்களை வரிசைவரிசையாகப் பொருத்தினார்கள். பலவகை மணிகளைக் கட்டினார்கள் இவ்வாறு அலங்கரிக்கப்பட்ட தேரின்மீது வீதிவிடங்கன் ஏறியமர்ந்தான். அமைச்சன் நீதிபூஷணன். தேரிலேறி வீதிவிடங்கனின் இடதுபுறத்திலமர்ந்தான். சிறந்த நீதிகளையெல்லாம் வீதிவிடங்கனுக்குக் கூறி வந்தான். யானை, குதிரை, காலாள் முதலிய படைகள் தேரின் இருபுறமும் பெருமழை போலச் சூழ்ந்துவந்தன. இசைவாணர்களும், பாவாணர்களும் முறையே பல பாடல்களையும் கவிகளையும் பாடிப் புகழ்ந்து பாராட்டி வந்தார்கள். எட்டுத் திக்குகளிலும் மேளவாத்தியங்கள் முழங்கின. ஐந்து வகையான இசைக்

கருவிகள் ஒலிக்கப் பல வகையான கொடிகளைத் தாங்கிவந்தார்கள். வரிசை வரிசையாகத் தாங்கிவரும் சிவிகைகள் பல முன்னே சென்று கொண்டிருந்தன. இவ்வாறு இறைவனாலயத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

மா- குதிரை. சரம் - சிறுமாலை. மிருகராசன் - சிங்கம். விசித்தல் - கட்டுதல். மருவுதல் - பொருந்துதல் புளகிதம் - மகிழ்ச்சி. சோனை - மழை. பட்டுவார் - பட்டர்; புகழ்பாடுவோர். பஞ்சவாத்தியம் - ஐந்துவகையான இசைக்கருவிகள். அவை - தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக்கருவி, கஞ்சக்கருவி என்பன. விருது -கொடி. அஞ்சல் - தாங்கல்

சு.சொல் - 1. லேகிவித்து 2. தேர்மீதிக் 3. வேந்தன்மகன்னேறி 4 புகழ்ந்தேற்றப் 5. அஷ்ட்ட 6. மாறற்பரித்து.

Starting for the ceremony

67. To enable the prince attend the ceremony,
A beautiful chariot was got ready
Horses lined up;
The chariot was decorated with
Flowers of diverse colours.
On one side of the chariot was a lion
While on the other side, the Cōḻa flag
Containing the logo, tiger, flew majestically.
Bells, beads and other decorative articles
Were used to embellish the chariot.
Vitiviṭaṅkaṉ mounted the chariot
With Nītipūṣaṇaṉ on the left side.
The minister was preoccupied with sermons
Replete with moral truths and ideas.
Elephants, horses and men of the infantry
Paraded on either side of the chariot
Verily like a torrential shower.
Poets and musicians rendered sweetly
Songs of eulogy and praise.
From the eight directions reverberated
The pleasing sound of instruments,
Five types predominantly conspicuous.

While the palanquins went ahead,
Flags of various types added to the grandeur.
Thus moved the grand procession
Towards the shrine of Tiyākēcar.

(தேரின்முன் இறைவனாகிய பசு) **ஏகதாளம்**

68 தேருங் கடகடென்னத் தெருவினி லோடவே
பாரிய கொடிச்சீலை பளபள வென்னும்
[1]பணியுள தேர்பட படவென நடந்திட
மணிகளெல் லாங்கண கணவென வதிரும்
களையெழு தேரதுக் கதலந்த தும்மான 5
மெழும்பியே பானுவை மறைத்ததுதா னிழலாகும்
யிவ்விதமாய்ச் சிறுவ னேகையி லேசிவன்
அவ்வியம் விளைத்திட வரவென வாறார்
உமையவள் [2]பங்க னுருப்பசு வடிவாய்ச்
சமையம்பார்த் திந்தச் சமையத்தில் வாறார் 10
ஆள நினவுகொண்டே [3] வாதிசரு வேசுவரன்
வேளையிது வினவவ் வேளையில் வாறார்,

வீதிவிடங்கன் அமர்ந்துள்ள தேரானது தெருவில் விரைந்துசென்று கொண்டிருந்தது. பெரியபெரிய துணிக்கொடிகள் ஒளிவீசின. இறைவனின் திருவனந்தலை நடத்தச் செல்லும் தேரானது மிக விரைவாக ஓடும்போது அதில் கட்டப்பட்ட மணிகள் ஒலித்தன. அழகும் ஒளியும் மிகுந்த அந்தத் தேரானது ஓடுவதனால் ஏற்பட்ட தூசுப்புகையானது ஆகாயம் வரையி லெழுந்து பரவியது. அதனால் சூரியஒளி மறைந்து எங்கும் நிழலாயிற்று.

இவ்வாறு வீதிவிடங்கன் செல்லும்போது தியாகேசப் பெருமான் தாம் கருதிய இரகசியச் செயலைச் செய்யத் தொடங்கினார். உமையவளின் பங்கிலுள்ளவனாகிய அப்பெருமான் நல்ல சமயம் பார்த்துச், சோழமன்னனை ஆட்கொள்ளும் பெரிய நோக்கத்தோடு, பாம்பு புறப்பட்டது போலப் பசுவடிவில் தோன்றிப் புறப்பட்டு வருகிறார்.

பாரிய - பெரிய. சீலை - துணி. பணி - தொழில். அதிர்தல் - ஒலித்தல். களை - அழகு, ஒளி, கதலல் - அசைதல். தும் - தூசு, துகள் பானு - சூரியன். அவ்வியம் - வெளிப்படாத செயல். அரவு - பாம்பு ஆள - ஆட்கொள்ள. ஆதிசருவேசுவரன் - சிவபெருமான்; பரம்பொருள்.

சு. சொல் - 1. பனியுள 2. பங்கன்னுருப் 3. வாதிசறுவேசுரன்

The Lord in the form of a cow in front of the chariot

68. The chariot of Vitiviṭaṅkaṉ
Was moving fast at break-neck speed.
With flags flying aloft majestically
And bells tied to the chariot jingling,
The vehicle moved inordinately fast
Raising a whirlpool of dust
Which touched the very skies
Beclouding the entire horizon.
While Vitiviṭaṅkaṉ was racing,
The great God was busy with His secret move.
The loved one of Umai, Civan,
Assumed the form of a cow
And emerged like a hissing snake
With the ulterior motive of giving salvation
To the benevolent Cōḷa King.

(திருவாரூர்த் தெருவில் தன் கன்றுடன் பசு) **திபதை**

69. பரமேசு வரனெனும் பசுவதப் போது
தரைமே லிழிந்திம தர்மக்கண் ணுடனே
அம்புவி புகழ்திரு வாரூரி லெய்தி
வம்புய மிகுங்கம லாலயத் [1]தடைந்து
கண்ணுடன் தானும் கங்காசல மருந்தி 5
மண்ணதைக் கொப்பினால் வாரி யிறைத்துச்
சமுத்திரக் கோமியஞ் [2]சாணமு மிட்டு
வமத்திய நடையினி லாரூரை நோக்கித்
தெத்தது கடந்து [3]தெருவினும் புகுந்து
சத்து படாவெனத் தான்மிரண் டதுவே. 10

பரமேசுவரனாகிய அந்தப் பசுவானது பூமியில் இறங்கியது. உடன் எமதர்மனாகிய கன்றையும் அழைத்து வந்தது. நாடெலாம் புகழும் சிறப்புடையதும், தாமரை நிறைந்த கமலாலயம் என்னும் பெயருடையதுமாகிய திருவாரூரை யடைந்த அப்பசுவானது தன் கன்றுடன் சென்று தாமரைக்குளத்தில் நீர் அருந்தியது. தன் கொம்பினால் மண்ணைக்கிளறி வாரியிறைத்தது. ஆறாக ஓடித் தேங்குமளவில்

கோமியத்தையும் சாணத்தையும் இட்டது. மதம் பிடித்ததுபோல மிரண்டு அங்குமிங்குமாக ஒழுங்கில்லாத நடையோடு எதிரில்பட்ட பெருந்தடைகளையெல்லாம் உடைத்துக்கொண்டு தெருக்களின் வழியாக எந்தவிதப் பலனும் இல்லாமல் ஓடிவந்தது.

இழிந்து - இறங்கி. இமதர்மன் - எமதர்மன். புவி - பூமி. எய்தி - அடைந்து. கண்ணு - கன்று என்பதன் கொச்சைச்சொல் கங்காசலம் - கங்கைநீர், தீர்த்தகுளத்துத் தண்ணீரைச் சுட்டியது. கொப்பு - கொம்பு. அமத்தியநடை - ஒழுங்கில்லாத நடை. தெத்து - நடை. சத்து - பலன்.

சு.சொல் - 1. தடந்து 2. சாணாமு 3. தெவினும்.

The cow and the calf in the street of Tiruvārūr

69. Lord Civan̲ in the guise of a cow
Descended on earth from the skies
With God of death as its calf.
On reaching Tiruvārūr
Famed for ponds with lotuses,
He rushed to one such pond
Along with the calf
And drank the waters greedily.
Madly the cow dug into the earth
With its pointed horns
And scattered the dust everywhere,
Answered the call of nature
Flooding the place with urine and dung,
Aimlessly ran across the streets
Breaking all obstacles as though in rut.

(பசுவுங் கன்றும் வீதிவிடங்கன் வரும் தெருவில் வருதல்) **ஏகதாளம்**

70. மிரள மிரளக்கண்ணை விழித்துக்கொண் டழகுள
தெருவினில் வந்தது - பரபர வெனவே
காதை நெறித்துக்கொண்டு கண்ணுட னேவரில்
வீதி யிலிது புதிதெனச் சொல்வார்
ஆட்டியன் மகன்வரு [1]மார வாரமதைக் 5
கேட்டுப் பசுவுங்கண்ணு மோட்டமிட் டதுவே
சன்னதித் தெருவினைத் தாண்டியிப் பாலந்த
மன்னவன் வருகின்ற வாடையி லோடும்

காட்டுக்குள் [2]ளேமனுக் கண்கள் படாப்பசு
வாட்டம தாய்ப்பசுபெரு வோட்டம தாச்சு 10
பேரிசைப் பேரிகை தெருவு களுடனே
பாரிய துரைமகன் [3]வாற தெருவிலே
மனது கலங்கியே மடிகள் குலுங்கியே
நினவின்றி யேகும்பி னில்வந்த போது.

பசுவானது தன் கன்றுடன் அழகிய தெருவில் வரத்தொடங்கியது. அப்போது அது கண்களை மிரள மிரள விழித்துப் பார்த்துக்கொண்டும், காதுகள் சிலிர்க்க நிமிர்த்து நிறுத்திய படியும் மிகவும் பரபரப்பாக ஓடி வந்தது. தெருவில் கண்டவர்கள் இப்பசு புதியதாக இருக்கிறது; திருவாரூரைச் சேர்ந்தது அல்ல என்று பேசிக்கொண்டனர். மன்னன் மகனாகிய வீதிவிடங்கன் வரும் ஆரவாரத்தைக் கேட்டுப் பசுவுங் கன்றும் மிரண்டு ஓடத் தொடங்கின. சந்நிதித் தெருவின் வழியாக ஓடி, அத்தெருவைக் கடந்து மன்னன் மகன் வரும் தெருவின் பக்கமாக ஓடின. கூட்டங்கூட்டமாக வரும் மக்கள் கூட்டத்தின் கண்களில் படாமல், வெகு சாமர்த்தியமாகப் பெரு ஓட்டம் ஓடிய பசு பேரிகை முதலான வாத்தியங்கள ஒலிக்க மன்னன் மகன் வருகின்ற தெருவிலே நுழைந்தது. அப்போது அப்பசு தன் நினைவில்லாததாகி, மனங்கலங்கி, மடிகள் குலுங்க மக்கட் கூட்டத்தினிடையே புகுந்து ஓடியது.

நெறித்தல் - சிலிர்த்தல், நிமிர்ந்துநிற்றல். ஆட்டியன் - தலைவன், மன்னன். ஆரவாரம்- பேரொலி. சன்னதித்தெரு - சந்நிதித்தெரு வாடை - தெரு. மனு - மக்கள். மடி - பால் சுரக்கும் பகுதி. கும்பு - கூட்டம்.

சு.சொல் - 1. மாரபாரமதை 2. ளேமனுக்கண்கள்ப்படாப் 3 வாரத்தெரு.

The cow and the calf in the path of the prince

70. The cow moved along the streets
Accompanied by its darling calf.
Its eyes betrayed fear,
Its ears stood erect.
Its mad running
Drew comments from the people
That the animals did'nt belong to Tiruvārūr,
But had trespassed from elsewhere.
On hearing the tumult
Caused by the royal chariot,
The cow and the calf ran in panic

Across the street opposite the shine
And touched the pathway
Through which the prince was expected.
Without attracting the swelling crowd
The animals shrewdly advanced
To the street where the drums heralded
The approach of the prince.
Totally bewildred and losing its wits,
The cow tore across the crowd,
Its rich udders oscillating violently.

(கன்று தேரின்முன் விழுந்து கதறி உயிர்விடுதல்) குறள்தரு

71. கும்பினி லேவந்த பசுவுங் கண்ணையுங்
கோலுந் தடியும் பிடித்தப்போ
குறுக்குப் பாய்ந்து மறிக்கவே - யொரு
கும்மாள மிட்டுத் துள்ளியே
சம்பெ னும்பசு வந்த வழியைத்தான் 5
திரும்பிக்கொண் டோடச்சே
சமனெனுங் கண்ணுந் திரளிலே துள்ளி
யெவர்கள் கண்ணையு மூடியே
அம்பு போலவே பறந்து தேர்முன்
னாக வேயதியுள் சகட்டிலே 10
அகப்பட்டோ யுட லரைபட்டோ - உயி
ரானதும் விட்டு மாளவே
(வீதிவிடங்கனின் வருத்தம்)
கொம்பித் தோளு முருளவே - கண்ணுங்
கூப்பிட்ட சத்தங் கேழ்க்கவே் 15
குருசில் மகனுந் தேரை விடுத்துக்
குதித்தன னந்த க்ஷணத்திலே
தேரை விட்டிவன் குதிக்கவே
மந்திரியுங்கூடக் குதித்தனன்
சேங்கண் ணொருகூழாய்க் கண்ணவத்தில். 20
செத்துக் கிடந்ததைக் காணவே

பாரி லடித்து வீழ்ந்து சுதனும்
　　படபட படவென் றுருண்டுமே
[1]பார்த்தியோவப கீர்த்தியென் றந்தப்
　　பாலன் மூர்ச்சை யாயினான் 25
தாரை பூரிபேரி மேள சத்த
　　மெல்லா மப்போ தடக்கினார்
சகல செனமும் வீதிவிடங்க
　　ரிடமதில் வந்து மேவினார்
தாரி மந்திரி வீதிவிடங்கர் 30
　　தம்மை யெடுத்துத் தழுவியே
தனது மார்புடன் சாத்திக் கொண்டனன்
　　தலை வளைத்துக்கொண் டிருந்தனன்
இருந்த மந்திரி துரைகு மாரனுக்
　　[2]கினிய மூர்ச்சை தெளியவே 35
ஏலம் சுக்கும் பன்னீரு பஞ்சிலிட்
　　டிருசெ விக்கும்வைத் தூதியே
வருந்தி யிருக்கில் [3]மூர்ச்சைத் தெளிந்து
　　மன்னனளித்த சுதாகரன்
மலர்க்கண்ணால் கிடக்கை பார்த்து 40
　　வாயி லடித்துக் கொள்வான்
விரிந்து விரிந்து தேம்பித் தேம்பி
　　விழியி லேபுன லொழுகுவான்
விம்மி விம்மி மந்திரியுங் கூட
　　விடுவன் புனலை விழியிலே 45
பரந்து துடித்திப் [4]படிதுக் கிக்கிற
　　பார்த்தி பன்மகன் முன்னிலே

(பசு கன்றிடம் வருதல்)

பசுவும் வாற வேளையது
　　வெப்படி வருது பாருமென
புதிய பசுவும் சிறிது தூரம் 50
　　போய்த் திரும்பிக்கொண் டலறியே
பொன்னுந் திருவு மலையு மதிரப்
　　புயலி டித்தது போலவே

கதறிக் கூப்பிட் டம்மாவம் மாவெனக்
　　　கண்ணைத் தேடிக் கொண்டுதான் 55
கனத்த திறனில் வருக வேவழி
　　　விலங்கி யிருந்த [5]மனுவிலே
எதிர்வந் தவரைத் துரத்திப் பாய்ந்தங்
　　　கிருப்பவ ருள்ளந் திகைக்கவே
எல்லார் மனதுங் கலங்கித் திடுக்கிட் 60
　　　டேங்கி நடுங்கத் திடுதிடென்
றதிரக் கும்பினில் நூறி யரச
　　　னளித்த புதல்வன் முகத்துமுன்
னாக வந்துயம் மாவென் றழைத்தே
　　　யாவுங் கண்ணிட [6]மேவிற்றே. 65

கூட்டத்தில் வந்த பசுவையும் கன்றையும் மக்கள் கோலும் தடியும் கொண்டு குறுக்கே சென்று அடித்துத் துரத்த முயற்சி செய்தார்கள். அப்பொழுது சிவபெருமானாகிய பசுவும் கன்றும் துள்ளிக்குதித்து வந்தவழியே திரும்பி ஓடின. அப்பொழுது எமன் என்னும் கன்றானது மக்கள் கூட்டத்திலே துள்ளிக் குதித்து யார் கண்ணிலும் படாதபடி வில்லிலிருந்து வெளிவரும் அம்பைப்போல மிக விரைவாகப் பறந்து சென்று தேரின் முன்னே சக்கரத்தின் அடியிலே விழுந்தது. அந்தச் சக்கரத்திலே அகப்பட்டு உடல்நசுங்கி உயிரை விட்டது.

கொம்பை உடையதாகிய அந்தக் கன்றானது தேரின்கீழ் உருண்டபடியே பெருஞ் சத்தத்தையும் உண்டாக்கியது. அதைக் கேட்டவுடனே வீதிவிடங்கன் தேரிலிருந்து கீழே குதித்தான். அவனைக்கண்ட அமைச்சனும் உடன் குதித்தான். சேங்கன்றானது நசுங்கிக் கூழாகிக் கண்டவர்கள் மனம் நோகுமாறு செத்துக்கிடந்ததைக் கண்ட வீதிவிடங்கன் பூமியில் விழுந்து கடகடவென உருண்டபடியே அய்யோ! பலரும் நிந்திக்கும் படியான பெரும்பழி உண்டாகி விட்டதே என்று கூறி மூர்ச்சையாகி விட்டான். உடனே மேளதாளங்களின் ஓசையெல்லாம் அடங்கிப் போயிற்று. மக்கள் அனைவரும் வீதிவிடங்கனைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டார்கள். அமைச்சன் வீதிவிடங்கனைத் தூக்கி எடுத்துத் தன் மார்போடு அணைத்துக் கொண்டான். அப்போது மன்னன் மகனின் தலை தொங்கிக்கிடந்தது. அமைச்சன் ஏலம், சுக்கு, பன்னீர் ஆகியவற்றைக் கலந்து பஞ்சிலே தோய்த்து அவன் காதுகளிலே வைத்து ஊதினான் சிறிது நேரத்தில் வீதிவிடங்கன் மூர்ச்சைத் தெளிந்து கண்களைத் திறந்து பார்த்தான். மீண்டும் கன்றின் கோலத்தைக் கண்டு வாயிலடித்துக் கொண்டு தேம்பித்தேம்பி அழுது கண்ணீர் விட்டான். அமைச்சனும் விம்மி விம்மி அழுதபடியே கண்ணீர் விட்டான்.

அழுது வருந்துகின்ற வீதிவிடங்கன் முன்னே பசுவானது மெல்லமெல்ல நடந்து வந்தது. சிறிது தூரம் வந்தவுடன் அவனைப் பார்க்காமல் திரும்பிக் கொண்டு நிலமும்

மலையும் அதிரும் படியாக மேகம் இடித்தது போலக் கதறி அம்மா! அம்மா வென்று சத்தமிட்டுக் கன்றைத் தேடியது. தேடியபடியே முரட்டுத் தனமாக நுழைந்த பசுவானது விலகியிருந்த மக்களிலே எதிர்ப்பட்டவர்களைத் துரத்திப் பாயத் தொடங்கியது. அங்கே இருந்த அனைவரும் திகைத்துத் திடுக்கிட்டு நடுங்குமாறு கூட்டத்தினுள் புகுந்து அவர்களையெல்லாம் நசுக்கி நொறுக்கியபடியே வீதிவிடங்கன் முகத்திற்கு முன்னே வந்துநின்ற அப்பசு, இறந்துகிடந்த தன்கன்றை நெருங்கியது.

மறித்தல் - தடுத்தல். கும்மாளம் - துள்ளிக் குதித்தல். சம்பு - சிவபெருமான். சமன் - எமன். சகடு- சக்கரம். அரை படுதல் - நசுங்குதல். கொம்பி - கொம்பை உடையது. குருசில் - தலைவன், அரசன். சேங்கன்று - ஆண்கன்று. கண்ணவம் - கண்டவர் வருந்துதல். அபகீர்த்தி- பெரும்பழி, நிந்தை. தாரை - நீண்ட கொம்புபோன்ற கருவி. தாரி - உடையவன். சுதாகரன் - மகன், சுதன். புனல் - நீர். துக்கித்தல் - வருந்துதல். திரு - செல்வம். புயல் - மேகம். நூறுதல்- நசுக்குதல். ஆ - பசு. மேவுதல் - அடைதல்.

சு.சொல் - 1. பாத்தியோ 2. கினியமூற்சை 3. மூற்சை 4. படிதுக்கிற 5. மணுவிலே 6. மேவித்தே

The calf run over by the chariot

71. The cow and the calf
Which ploughed through the crowd
Were chased with sticks and rods of wood
The divine beings in disguise
Hurriedly tried to retrace their steps,
When all on a sudden
The calf unexpectedly ran pell - mell
Like arrow released from bow
And fell prostrate below the chariot wheel.
Got crushed and lay dead!
While the wheel rode on it speedily,
The calf let out a wail of agony
Which so distressed Vitiviṭaṅkaṉ
That he forthwith jumped from the vehicle
Followed by his loyal minister.
Seeing the calf reduced to gory pulp
Vitiviṭaṅkaṉ rolled on the earth
Ejaculating that he had done a hellish deed,

Earning blame and sin and swooned.
The drums stopped playing
And in the lull men gathered round the prince.
The minister lifted Vitiviṭaṅkaṉ
Whose head had almost drooped
And hugged him close to his chest.
He applied the mix of cardamom, dry ginger and rose water to cotton
And blew it into the ear of the prince
Which restored him to normalcy.
Vitiviṭaṅkaṉ opened his eyes
And saw the mangled body of the calf
Which made him cry hysterically,
The minister also wept profusely.
The cow came close to Vitiviṭaṅkaṉ
Suffering greatly in mind,
Retraced its steps pathetically,
Its deep voice echoing concern for the calf.
Vainly searching for the young one
It madly butt its head against the crowd
Ploughed through the mass of men
Crushing them most miserably
Till it came face to face with the prince
By whose side lay the dead calf!

வசனம் - வந்த பசு எந்தவிதமா யிருந்து தென்னில் (20)

Prose : The description of the cow.

(பசு இடிபோலக் கதறுதல்) **ஏகதாளம்**

72. காரணப் பசுசேங் கண்ணிட மேனியைச்
சீருடன் மோந்து திரேகத்தை நக்கி
மோட்சப் பசுவுங் கண்ணைமோந்து மோந்துகொண்டே
பேட்சியி னாலங்கே யாட்சிய தாச்சு

தலையை வளைத்துக் கொம்பில்தானந்தச் சேங்கண்ணை 5
யுலவ வெழுந்திரென்று பலசைகை செய்யும்
எழுந்திரா தனுகண் டிதுவும் படுத்துக்கொண்டு
குழந்தை யெனவேமுலை கொடுத்தது வாயில்
உண்ணா ததுகண் டுடனே எழுந்திருந்து
கண்வா யினில்விழக் கறந்தது பாலைக் 10
குடியா ததுகண்டு கோவுள மானது
மடிவா யங்கனே யிடிபோலக் கதறும்
மாடு கதறுமென்ற வாய்மைய தாய்ப்பசு
மாடு கதறிமுகம் வாடின தாச்சு.

கன்று இறப்பதற்கு வழிவகுத்த பசுவானது சேங்கன்றின் உடலை முகர்வதும் நக்குவதுமாகிய செயல்களால் தன் உரிமையையும் வருத்தத்தையும் காட்டத் தொடங்கியது. தலையை வளைத்துத் தன் கொம்பினால் கன்றைப் புரட்டியபடியே வெளியிலே உலாவச செல்லலாம் எழுந்திரு என்பது போலச் சைகைகள் செய்தது.

கன்று எழுந்து வராததைக் கண்டபசு தானும் அதன் அருகில் படுத்தபடி குழந்தையாகிய கன்றுக்குப் பாலூட்டிப் பார்த்தது. கன்று பாலையும் குடிக்கவில்லை என்பதறிந்து, தானே எழுந்து வாயிலும் கண்ணிலும் விழுமாறு பாலைச் சொரியவிட்டது.அப்போதுங் கன்று குடிக்காததைக் கண்ட பசுவானது மனம் வருந்திக் கதறத் தொடங்கியது. கதறிக்கதறி முகம் வாடச் சோர்ந்து நின்றது.

சேங்கண்ணு - சேங்கன்று - ஆண்கன்று. மோட்சப்பசு - தேவலோகத்துப்பசு; இறைவனாகிய பசு பேட்சி, யாட்சி என்பன எதுகை நோக்கி வந்த மொழியடுக்குச் சொற்கள். கண்வாய் - உம்மைத்தொகை. கோ - பசு. மடிவு - வருத்தம்; உயிர் விடும் நிலையடைதல் வாய்மை - உண்மை; வழக்காறு.

The Cow letting out a cry like thunder!

72. The cow which was instrumental
For the tragic end of the calf
Was smelling and licking it
Thereby revealing its sense of loss
It vainly tried to raise the calf with horns,
Rolled it topsy - turvy and by gestures tried to convey
Its desire to roam and ramble in its company.
Since the calf did not get up,
The cow lay by its side

And tried to feed it.
It spilt the milk on the mouth and eyes,
But the calf refused to budge.
Sensing something untoward
The cow was smitten with grief,
Bellowed loudly
And stood a figure of sorrow.

(வீதிவிடங்கன் தான் பெரும்பாவியானேன் என வருந்துதல்)

திபதை

73. ஆவது போனபின் னாதியன் குமாரன்
பாவியி லுமரும் பாவிநா னென்று
எவ்வுயி ருக்கு மிமராச னலவோ
யிவ்வுயி ருக்குநா னெமனா யிருந்தேன்
தேவதாப் பசுதந்த சேங்கண்ணைக் கொண்ண 5
பாவமிப் பிறப்பிலே பரிகார மாமோ
பசுமன மானது[2] பரந்ததை யோவப்
பசுவின் [3]சிசுவுக்குப் பாதக னானேன்
இண்ணிந்தத் தேர்தனி லேறிநான் வந்து
கண்ணினைக் கொல்லவே காதக னானேன் 10
திரளுக்கெல் லாங்கண்கள் தெரியாமல் போச்சு
திரளுக்குள் ளேவந்த சேங்கண்ணை யெவருங்
கண்டவ ரில்லை யாகாசம தாக
மண்டிய பெரும்பழி வந்ததே யெனக்கு
அண்டத்தில் வருகினும் யாவர்க்குத் தோற்றும் 15
பிண்டத்தில் வந்து [4]பிறந்ததோ காணேன்.

(என்ன தவறு செய்தேனெனத் தவித்தல்)

அம்பிகை பாகருக் கன்பு தப்பினனோ
நம்பின பேரை நட்டாற்றில் விட்டேனோ
ஆரூர்த் தியாகருக் கதிகசந் தோஷம்
வாராமல் கோபம் [5]வளர்ந்ததோ காணேன் 20
திருநாள் நடத்தையில் தியாகராய ருக்குக்
குறையாச்சு தோவென்னக் குற்றஞ்செய் தேனோ

யிப்பிறப் பேனெடுத் தேனுல கத்தில்
யிப்பிறப் பேனெடுத் தேனிந்தப் பாவி
தன்ம கதிர்த்திரன் தன்னிட [6]வயிற்றில் 25
கன்ம தரித்திரத்தின் கால்வர லாமோ.

(பாவம் நீங்க வழி என்னவென்று ஏங்குதல்)

மனுபிறப் பாக வரவேயொண் ணாது
மனுபிறப் பாகில்நல் வழிதேட வேணும்
பாவத்தைக் கண்களில் [7]பார்த்ததுக் கிந்தச்
சீவனை விடுவதே சித்தாந்த முத்தி 30
பத்திரை யந்தணர் பாவையர் சிசுவை
வதைத்திடிற் பாதகஞ் சாற்றிட வென்றால்
ஒவ்வொன்றுக் காயிர முயர்ச்சியாய் வளரும்
யெவ்விதத் தாலிந்த விடைகூறித் தீர்ப்பேன்.
சடுதியி லிடித்துத் தலைமேல் விழுந்த 35
படியது வாகிய பழிக்கென்ன செய்வேன்
முலையுண்ணுங் கண்ணை முகித்த பாவங்கள்
துலைவதென் னாளிந்தத் தோஷங்க ளையோ
சோழன் சுதன்சிவன் சோபன நாளில்
வாழுங் குழாய்க்கண்ணை வதைத்தன னென்று 40
பூமியி லுள்ளவும் புகலவு மாச்சு
பூமியில் நம்மிட புகழதும் போச்சு
நம்முட வங்கிஷ ராசாக்க ளெல்லாம்
செம்மையாய்க் கீர்த்தியைத் தேடிப் படைத்தார்
என்னிட தந்தைக் கியானுற் பவித்துச் 45
சின்னமாய்ச் சீர்த்தி தேடினே னுலகில்
பிள்ளை பிறக்கில் பெரும்புக ழுண்டாம்
பிள்ளை பிறக்கப் பெரும்பழி யாச்சு.

(தெய்வத்திடம் முறையிடுதல்)

தெய்வமே வெள்ளித் திகிரியில் வாசா
தெய்வமே யாரூர் தியாகலிங் கேசா 50
சந்திர கிரீட சடாதரா வெள்ளை
நந்தி வாகன தெய்வ நாயகா பரம

சிவனே அரகர தேவதத் துவனே
நவமான பாவமென் னயனமுன் னுறுமோ
[8]சருவசீ வாத்தும தயாபர மூர்த்தி 55
[8]சருவத் திலும்நிரஞ் சனமான தேவா
செனனதுஞ் சுதலிலா தேசமு மில்லா
மனுநினை வினிலறி வாயகா ரணனே
பராபரனே நீயென் பங்கினி லிலையோ
பராபரனே யிந்தப் பழிவந்த தென்ன 60
அடியேனு மிப்பழிக் காளான தென்ன
அடியே னிதுக்கென் றவதரித் தேனோ
யேதெனச் சொல்லுவே னீன்றவ னுக்கு
ஏதெனச் சொல்லுவே னென்னைப்பெற் றவர்க்குச்
சொல்லவே [9]நெஞ்சு துடிதுடிப் பார்கள் 65
சொல்லவே [10]வயிற்றிற் சுறுக்கிடும் நெருப்புச்
சந்ததி வாறதைநற் சந்தோஷஞ் சொல்ல
சிந்தைகொள் ளாமலித் தீமைய தாச்சு
என்னசெய் வேனென வேங்கித் தளர்ந்து
மன்னவன் சுதன்மதி மறந்துநின் றானே. 70

பசுவானது ஒருபுறம் கதறிக்கிடக்க, மன்னன் மகனாகிய வீதிவிடங்கன், நான் பாவிகளுக்கெல்லாம் பெரும்பாவியாகிவிட்டேன். எந்த உயிரையும் போக்குபவன் எமராசனேயாவான். ஆனால் இந்தக் கன்றின் உயிருக்கு நானே எமனாகிவிட்டேன். தெய்வீகப் பசுவின் கன்றைக் கொன்ற பாவத்துக்கு இப்பிறவியில் பாவநிவர்த்தி கிடைக்குமா? ஐயோ! இந்தப் பசுவின் மனமானது பரிதவித்ததைப் பார்த்தேனே! இதன் சிறுகன்றுக்குத் துரோகம் செய்துவிட்டேனே! இன்று இந்தத்தேரில் ஏறிவந்து இதன் கன்றினைக் கொன்ற கொலையாளனாகிவிட்டேனே! இவ்வளவுபெரிய கூட்டத்தில் யாருக்குமே கண்தெரியாமல் போயிற்றே! இவர்களுக்கிடையே வந்த இக்கன்றை யாருமே பார்க்கவில்லையே! இப்படி ஒரு பெரும்பழி எனக்கு ஆகாய வழியாக வந்து சேர்ந்து விட்டதே! ஆகாயத்தின் வழி வந்திருந்தாலும் யாருடைய கண்ணுக்காவது தெரிந்திருக்குமே! கருவிலிருந்தே பிறந்துவிட்டதோ தெரியவில்லையே!

உமையம்மையைத் தன் இடதுபாகத்திலே கொண்ட இறைவனுக்குத் தொண்டு செய்வதில் ஏதேனும் தவறு இழைத்து விட்டேனோ? என்னை நம்பி வந்தவருக்கு உதவிசெய்யாமல் தவிக்க விட்டு விட்டேனோ? கடமை தவறிய என் மீது திருவாரூர் தியாகேசப் பெருமானுக்குக் கோபம் அதிகமாகிவிட்டதோ? திருவிழாக்காலங்களில் செய்யவேண்டிய பூசைமுறைகளில் ஏதேனும் குறைவைத்து விட்டேனோ? வேறு ஏதேனும் தவறுகளைச் செய்துவிட்டேனோ? பாவியாகிய நான் இந்தப் புண்ணியபூமியில் ஏன்

பிறந்தேன்? மக்களால் போற்றப்படும் தருமவானாகிய மன்னன் வயிற்றில் தீவினையும் பாவமுமே உருவான வறியவன் வழித்தோன்றலாகப் பிறக்கலாமோ?

மனிதனாகப் பிறக்கவே கூடாது. அப்படிப் பிறந்தால் நல்ல செயல்களிலே ஈடுபட வேண்டும். பாவச் செயல்களைப் பார்த்துவிட்டாலே இந்த உயிரை விட்டுவிடவேண்டும் அதுவே முத்திபெறும் வழியாகும். பசு, அந்தணர், மகளிர், குழந்தைகள் ஆகியோருக்குத் துன்பமிழைத்தால் பெரும் பழிவந்து சேரும். அப்பழியான செயல் ஒவ்வொன்றுக்கும் ஆயிரம் பாவமாக வளரும். இதற்கு அளவிட்டுக் கூறவே முடியாது. திடீரென்று ஏற்பட்ட இப்பெரும்பழிக்கு நான் என்ன செய்வேன்? ஐயோ! பால் குடிக்கும் இளங்கன்றைக் கொன்ற பாவங்களும் தோஷங்களும் என்றைக்குத் தீரும்? சிவபெருமானின் சோபனமாகிய திருவனந்தல் திருநாளில் சோழமன்னன் மகன் வாழவேண்டிய இளங்கன்றைக் கொன்றுவிட்டான் என்று மக்களெல்லாம் பேசுவார்களே! இந்த நிலவுலகத்தில் நம்முடைய புகழ் அடியோடு அழிந்துவிட்டதே! சோழர் வமிசத்தில் வந்த மன்னர்களெல்லாம் பெரும் புகழைத் தேடிவைத்துச் சென்றிருக்கிறார்களே! நான் பிறந்து சோழவமிசத்துப் புகழ் என்னுடைய தந்தைக்கு வராதபடி அழித்துவிட்டேனே! பிள்ளை பிறந்தால் பெரும்புகழ் உண்டாகுமென்பார்களே! ஆனால் நான் பிள்ளையாய்ப் பிறந்து பெரும்பழியல்லவா உண்டாகிவிட்டது!

இறைவா! வெள்ளியங்கிரிவாசா! திருவாரூர்த் தியாகேசா! இளம் பிறையாகிய சந்திரனை முடியாகச் சடையில் தரித்தவனே! வெண்ணிறமான எருதாகிய நந்தியை வாகனமாகப் பெற்றவனே! தெய்வங்களின் தலைவனே! பரமசிவனே! அரகரா! தெய்வவல்லபனே! புதியபுதிய பாவங்கள் என் கண்முன் தோன்றுவது முறையோ! உலக உயிர்களிடத்தில் கருணையுள்ள தலைவனே! உலகப்பொருள்கள் எல்லாவற்றிலும் நிறைந்திருப்பவனே! பிறப்பு இறப்பு என்பது இல்லாதவனே! தனக்கென்ற ஓரிடத்தைப் பெறாது எங்கும் நிறைந்திருப்பவனே! மக்கள் உள்ளத்தின் அறிவுக்குக் காரணமானவனே! எல்லாவற்றிலும் உயர்ந்தவனே! நீ எனக்குத் துணையாகமாட்டாயா? ஏன் இந்தப் பழியை எனக்கு வரச்செய்தாய்? அடியவனாகிய நான் மட்டும் இப்பழிக்கு ஆளாக நேர்ந்ததன் காரணம் என்ன? இப்பழியை அடையவேண்டுமென்றே நான் பிறந்தேனா? என்னைப் பெற்றவருக்கு என்ன காரணம் சொல்லுவேன்? கன்றைக் கொன்ற செய்தியைச் சொன்னாலே போதுமே! நெஞ்சுதுடிக்கப் பதறுவார்களே! வயிற்றிற் தீ பற்றியெறிவது போலப் பதறுவார்களே! பிள்ளை பிறப்பதே பெற்றோருக்கு மகிழ்ச்சியையுண்டாக்க வல்லவா? ஆனால் என் செய்கை தீமை உண்டாக்குமாறு ஆகிவிட்டதே! இதற்கு என்ன செய்வேன் என்று பலவாறு புலம்பிய வீதிவிடங்கன் தன்னை மறந்து நின்றான்.

ஆ-பசு. இமராசன் – எமன். தேவதாப்பசு – தெய்வீகப்பசு. கொண்ண – கொன்ற என்பதன் கொச்சை. பரிகாரம் – பிராயசித்தி – நிவர்த்தி – பறந்தது – பரிதவித்தது, துக்கித்தது. பாதகன் – துரோகி. இண்ணிந்த – இன்றிந்த. காதகன் – கொலைகாரன், எமன். திரள் – மக்கட்கூட்டம். ஆகாசம் – ஆகாயம். மண்டுதல் – வந்துசேர்தல். அண்டம் – ஆகாயம். பிண்டம் – கரு. நட்டாறு – நடுஆறு. நடத்தை – செய்முறை. கதிர்த்திரன் – ஒளியுடையவன்; புகழ்மிக்கவன். கன்மம் – தீவினை. கால் – தோன்றல், வழிவருதல். மனுபிறப்பு – மக்கட்பிறவி. சீவன் – உயிர். சித்தாந்தம்

- சைவசமயத்தருக்க முடிவு. பத்திரை - பசு. சிசு - இளங்குழந்தை. படி - வாசற்படி. நிகை. முகித்த - முடித்த, கொன்ற. சோபனம் - வாழ்த்து, மங்களம். குழாய்க்கன்று - குழவியாகிய கன்று; இளங்கன்று. வங்கிஷம் - வமிசம். உற்பவித்தல் - தோன்றுதல், பிறத்தல். சின்னம் - அழிவு. சீர்த்தி - புகழ். சடாதரன் - சிவபெருமான்; சடை தரித்தவன். தேவதத்துவம் - தெய்வீகவல்லடம். நவம் - புதியது. நயனம் - கண். நிரஞ்சனம் - நிறைவு. செனனம் - பிறப்பு. துஞ்சுதல் - தூக்கம்; இறப்பு. சந்ததி - பிள்ளை.

சு.சொல் - 1. பாவியிலும் மரும்பாவினானென்று. 2. பரந்துதையோ 3. சிசுவிக்குப் பாதகநானே 4. பிறந்துதோ 5. வளர்ந்துதோ 6. வயத்தில் 7. பாத்துதுக்கிந்த 8. சறுவ 9. னெஞ்சு 10. வயத்திற்.

Vītiviṭaṅkaṉ repenting

73. While the cow was bewailing its loss,
Vitiviṭaṅkaṉ felt miserable
As he had become a great sinner.
It is usually given to Yaman to snatch lives,
But alas, I have caused the death of a calf.
Can I get redemption on the earth for this lapse?
I have witnessed the agony of the mother
To whose young one I have done great injustice.
Riding this chariot, I have become a killer,
How come no one in the crowd saw the calf?
Did the slur on my reputation originate in the skies,
Even then it would'nt have gone unnoticed,
Perhaps the genesis was sudden and mysterious.
Was there any serious lapse in my worship
Of Civaṉ who keeps Umai on his body?
Did I fail to provide succour
To the needy who came to me?
Is Tiyākēcar of Tiruvārūr angry with me?
Did the lord find anything wanting
In the rituals of the festival?
A vile sinner like me
Has no place in this holy land!
It is a shame that I am the son

Of a king loved by one and all
For his unnumbered acts of charity.
One shouldn't be born as man at all,
If born, good deeds should mark one's life.
The very sight of evil should provoke one
To shed his mortal coils,
Which act leads to sure salvation.
Cruelty to cow, brahmin, women and babes
Shall result in great sin
Which sin shall multiply beyond count or measure.
How shall I redeem myself from the infernal offence
Of killing a suckling calf?
Men shall curse me for this deed
With venomous words: Look, the prince
Has killed a calf on the festive day of Lord Civaṉ,
Surely our reputation shall suffer a set-back.
The popularity of the Cōḻa lineage
Has really come under a cloud.
Instead of adding to the glory of my dad,
I have pulled down his prestige
And done him irreparable harm.
Oh Lord, the resident of Veḷḷiaṅkiri hills!
Tiyākēca of Tiruvārūr!
The one wearing the crescent on his matted locks!
The rider of the divine bull Nanti, white in colour!
The Lord of Lords! Paramaciva! Arakara!
Is it right to expose me to sin?
Kind one! The omniscient deity!
The one devoid of birth and death!
The source of all knowledge! The superior one!
Won't you come to my rescue?
Why did you make me perpetuate evil

And bring slur to my father's name?
What explanation shall I offer to my dad?
The heinous deed of which I am guilty
Shall rudely shock my father
And kindle flames of disgust in the pit of his stomach.
Children are born to redeem their parents,
But alas, my lot has been different;
So wailed the helpless Vītiviṭankaṉ.

வசனம் – மறந்து நின்ற வீதிவிடங்கன் பின்னையுமேதெனச் சொல்லிப் பிறலாபிப்பான். (21)

Prose : More details of Vitiviṭankaṉ's lament.

(தான் இந்த விழாவிற்கு வந்ததற்காக வருந்துதல்) **தரு – சிந்து**

74. என்னசெய் வேனென்னை யறியாதே வந்த
கன்மமுந் தொலைந்திடப் போகாதோ
வன்மமாய்த் தெய்வமு [1]மொன்றாய்க் கூடி – யிந்த
வழி [2]செய்ததே – எனக்குத் தேடி (என்ன)

இன்றையத் தினம்வீட்டி லிராதே – தேரி 5
லேறிவந்தே னென்மனந் தோணாதே
யிந்தக்கண்ணை வேதைசெய்ய வந்தேனோ – யிது
கஞ்சனா ரெழுத்துமிப் படித்தானோ (என்ன)

[3]ஆர வாரமாகத் தேரி லேறியிந்த 10
ஆவினிடகண் வயிற்றைப் பீறி
அபசாரமுஞ் செய்தேனே யிந்தத்தோஷம் – என்
தாய்தகப்பன் கேழ்க்கில் வெகு திரேஷம் (என்ன)

வங்கிஷத்தி லில்லாவபு கீர்த்தி – யிப்ப
வளர்த்தே னெல்லாருமிது சாற்றி – யவர்
செங்கைகொட்டி தானகைக்க லாச்சு 15
யிந்தவினை தெரிந்திடாமற் போச்சு (என்ன)

[4]பத்துநாள் திருநாளுஞ் செய்தபோது – ஒரு
பாதகமு மில்லை யின்றைக் கேது – யிந்தத்

தத்துக்கள் கொணர்ந்துவிட லாமோ - சிவ
சங்கரா வுமக்குச்சரிப் போமோ (என்ன) 20

கண்ணில் மணற்சொரிந்தாப் போலே - என்
காயமெல் லாம்நோகு தொருக்காலே - வெள்ளிக்
குண்ணிலே குடியிருந் துயர்வந்த
புண்ணிய வாரூர்த் தியாகராயா (என்ன)

[5]கர்த்தனே யுமக்குங் கபடாச்சோ - யிந்தக் 25
கலிகால வண்மை மிஞ்சிப் போச்சோ - ஒரு
புற்றிடங்கொண் டெல்லவர்க்குந் தாயாய் - வந்த
புண்ணிய வாரூர்த் தியாகராயா (என்ன செய்வேன்)

ஐயோ! இந்தப் பெரும் பாவமாகிய தீவினை எனக்குத் தெரியாமலே வந்து சேர்ந்ததே! இப்பழி வருவதற்கு இறைவனும் வைராக்கியமாய்த் துணையாக இருந்து விட்டானே! இன்று அரண்மனையிலேயே இருந்துவிடாமற் போனேனே! இந்தக் கன்றைக் கொல்லவோ தேரில் ஏறி வந்தேன்? என் தலையில் பிரமன் இப்படியும் எழுதினானோ?

வெகு ஆடம்பரமாகத் தேரிலேறிவந்து இந்தப் பசுவின் கன்றினுடைய வயிற்றைப் பிளந்து பெரும்பாவத்தைச் செய்து விட்டேனே! இப்பாவச் செயல்பற்றி பெற்றோர் அறிந்தால் பெருந்துன்பமல்லவா நிகழும்! இது சோழ வமிசத்தில் இதுவரை நடைபெறாத பெரும்பழியல்லவா? கேட்பவர்கள் ஏளனமாகக் கைகொட்டிச் சிரிக்கும்படியாகிவிட்டதே! முன்பே இது எனக்குத் தெரியாமற் போயிற்றே! பத்து நாள் திருவிழாவும் ஒரு குறைவுமின்றி நடந்து முடிந்தது. இன்று இப்படி ஒரு துன்பத்தை உண்டாக்கிவிட்டாயே! இறைவா! இது உமக்கு ஏற்குமா?

வெள்ளியங்கிரியிலெழுந்தருளிய திருவாரூர்த் தியாகேசனே! கண்ணில் மணலைக் கொட்டியது போல என் உடம்பு முழுவதும் வலியெடுக்கிறதே! இறைவனே! புற்றிடங்கொண்டவா! மக்களின் தாயாக விளங்கி அருள்புரியும் புண்ணியவானே! இந்தக் கலிகாலப் பண்புக்கேற்ற வஞ்சனை உள்ளத்தைப் பெற்றுவிட்டாயா?

வன்மம் - வைராக்கியம், பகைமை. வேதை - கொலை, துன்பம். கஞ்சனார் - பிரமன். கண்- கன்று என்பதன் கொச்சைக்குறைச்சொல். அடசாரம் - தீச்செயல், பாவச்செயல். சாற்றுதல்- சொல்லுதல். நகைத்தல் - சிரித்தல். பாதகம் - துரோகம், தீமை. தத்து - எதிர்பாராத துன்மரணம். வெள்ளிக்குண்ணு வெள்ளியங்கிரி; குண்ணு - குன்று என்பதன் கொச்சைச்சொல். கபடு - கபடம்- வஞ்சகம்.

சு.சொல் - 1. மொன்னாய்க் 2. செய்துதே 3. ஆரபாரமாக 4. பத்துனாட்த்திருநாளும் 5.கற்த்தனே.

Repenting for participating in the festival

74. Alas, I have become a vile sinner
Without being aware of it consciouslv.

The Almighty seems to be an accomplice
To the act of sin visiting me.
I should have wisely stayed back
And avoided this calamity.
Did I ride a chariot to kill an innocent calf?
I wonder why fate has decreed so.
Pompously driving the chariot
I have caused death to a poor animal
And thereby become a great sinner.
My parents would be terribly upset
When the sad news reaches them.
Such a slur has never been cast
On the distinguished Cōḻa lineage.
Would not every one point his finger of scorn
Blaming me for the obnoxious act?
How I wish I had an inkling of it!
After the completion of the festival
In all glory
Why did you, Almighty, lay at my door
This hateful blame? Does it become of you?
Tiyākēcar, the deity of the silvery hills
With abode at Tiruvārūr,
The distress of my body
Is worse than eyes filled with sand
Oh god, living in the snake pit,
A mother to the populace,
Have you also taken to the wicked wiles
Of the *Kali* age?

வசனம் – இப்படிப் புலம்பி [1]இருதயந் தளும்பித் தற்பரனைப் பின்னும் எப்படிச் சொல்வான் (22)

சு.சொல் – 1. இருதையந்.

Prose : Appealing to the Almighty most pathetically.

(நான் செய்த தவறு யாது என இறைவனிடம் மீண்டும் முறையிடுதல்)

சிந்து

75. நானுமக் கென்செய்தேனின் னாளிலப கீர்த்திவர
ஞாயமோ தியாகராயா – நீ
நமக்குள் ளானதெய்வம் நின்பதத்தை மறவாத
நெஞ்சினேன் வஞ்சனையதாய் (நானுமக்)

[1]வருநாளும் சுகமளித்து ஒருநாளைக் கிடர்கொடுத்து 5
வருத்தவுமக் கடுக்குமோதான்
திருநாளி லேயுமக்குக் குறையென்ன செய்தேன்
தேவி பவானி நேயா (நானுமக்)

நல்லாரைப் பெரியவரை ஞானிகளை [2]யோதுவித்த
நாதாவை யேதா கிலுஞ்சொல் 10
லவங்களா யுரைத்து மனனோகப் பொல்லாங்கு
தொடுத்தே னோகுடி கெடுத்தேனோ (நானுமக்)

ஆசைசொல்லித்தினம் போக்கி யடுத்தபோ தில்லையென்
றாகடியம் பண்ணி னேனோ
தாசிகளை நடந்துகொண்டு கவிவாணர் கவிகேட்டுத் 15
தாராத கொடும் பாவியோ (நானுமக்)

பாரெல்லாம் புகழ்படைத்த ராசேந்திர பூபதிக்கிப்
பாவிதனை யேனுதவினீர்
சீரெல்லாம் [3]படைத்ததிரு வாரூரில் குடிகொண்ட
தெய்வமே தியாகராயா 20
நானுமக் கென்செய்தே[4]னிந் நாளிலப கீர்த்திவர
ஞாயமோ தியாகராயா

தியாகராசப் பெருமானே! எங்கள் குலதெய்வமே! உன்திருவடிகளை என்மனம் என்றுமே மறந்ததில்லையே! வஞ்சனையாக நான் உனக்கு என்ன துரோகம்செய்தேன்? இன்று இப்படி ஒரு பழியை உண்டாக்கிவிட்டாயே! வாழ்நாள் எல்லாம் இன்பத்தைக் கொடுத்து வாழவைத்த நீயே இன்றைக்கு இப்படி வருத்துவது உமக்கு நீதியோ? பார்வதி தேவியின் தலைவனே! திருவிழாவில் நான் உமக்கு என்ன குறை வைத்தேன்? நல்லவர்கள், பெரியவர்கள், ஞானிகள், கற்பித்த சான்றோர்கள் போன்றவர்களின் மனம் நோகுமாறு வீண் வார்த்தைகள்பேசித் தீங்கு செய்தேனா? அவர்கள் குடிக்கு அழிவு தேடினேனா?

ஆசை வார்த்தைகள் சொல்லி அவர்கள் வந்து நாடியபோது இல்லையென்று கூறிக் கொடுமை செய்தேனா? தாசிகளிடம் தகாதபடி நடந்தேனா? கவிஞர்களின் பாடலைக்

கேட்டுவிட்டு அவர்களைப் பாராட்டிப் பொருள் வழங்குவதில் தவறு செய்தேனா? உலகம்புகழும் சோழ மன்னனின் மகனாக இந்தப் பாவியை ஏன் பிறக்கச் செய்தாய்? பெருமை பெற்ற திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகேசப் பெருமானே இன்று எனக்கு இந்தப் பழிச்சொல் வரச்செய்தது நியாயமா?

பதம் - திருவடி. அடுக்குமோ - தகுமா. பவானி - பார்வதிதேவி. நாதா - சான்றோர். அவம் - வீண். ஆகடியம் - கொடுமை.

சு.சொல் - 1. வருனாளும் 2. யோதிவித்த 3. படைந்ததிரு 4. ஙின்னாளிலப.

What lapse am I guilty of?

75. Lord Tiyākēcar, my family deity!
I have seldom failed to worship you,
What treachery am I guilty of
To wear this cross?
You, who on me bestowed unlimited bliss,
Have robbed me of it.
Is it fair?
Tell me, the lord of revered Pārvati,
What was my serious guilt?
Did I hurt the feelings
Of elders, scholars or preceptors?
Was I guilty of destroying
Their home and security?
Did I deny them anything
When they fervently appealed to me?
Did I insult the professional dancers
Or fail to reward the bards
Who sang my praise?
Why did you make this unworthy man
Progeny to the noble Cōla king?
Tiyākēcar of Tiruvārūr,
Is it proper that I be made
To shoulder undeserved blame?

வசனம் - அரச குமாரன் இந்த வாய்ச் சலிக்கப் பரிவுள மந்திரி பதிலுரை சொல்வான். (23)

Prose : The minister's reply to the remarks of the prince.

(இது மனமறியாப்பழி என்று அமைச்சன் மகன் கூறுதல்) **ஏகதாளம்**

76. பாவமே தான்கண்ணில் பார்த்தது வலியவந்த
சீவனைக் கொன்றிடில் மேவி யிராது
காதினாற் கேட்டிந்த தீமைசெய் தால்வெகு
பாதக மானது துலையாதெந்த நாளும்
நெஞ்சறி யாப்பழி மிஞ்சிவந் தாலதுக் 5
கஞ்சுவ ரோவெகு வஞ்சனை போலே
பசுங்கண் ணிப்போநம் பதாதியிற் பிசகியே
நசுங்குண்டு போனதுக்கு நாமென்ன செய்வோம்
மத்தியிலே கண்ணும் வண்டியி லகப்பட்டுச்
செத்ததுக் கேனிந்த சிந்தை விசாரம் 10
நாமாய் வலியக்க [1]நாஸ்திபண்ணா லப்பழி
போமோ வெனச்சொல்லிப் புலம்பிட வேணும்
யீதொரு பழியெனக் [2]குரோதநெஞ் சாயினை
யாதிப னருளிய வீதி விடங்கா!

வீதிவிடங்கனே! தேர் வருவதைப் பார்த்திருந்தும் தானே வலியவந்து விழுந்தது இந்தக்கன்று. இந்தக் கொலையால் நமக்குப் பாவம் வராது. நேரில் பார்த்திருந்து இந்தக் கொடுமையைச் செய்திருந்தால் நிச்சயமாகப் பாவம் வந்து நம்மைச் சேரும். இது மனமறிந்து செய்த பிழையன்று. இதற்காக வருந்தவேண்டாம். பசுங்கன்று தானேவந்து தேர்க்காலில் சிக்கி மாண்டதற்கு நாமென்ன செய்வது? வலிய நாமே கொன்றிருந்தால்தான் இப்பழி நீங்குமா என்று வருந்தவேண்டும். இந்தப் பழிக்காக வருந்த வேண்டாம் என்று கூறினான் அமைச்சன்.

சீவன் - உயிர். மேவுதல் - வந்து பொருந்துதல். பசுங்கண் - பசுங்கன்று. பதாதி - காலாட்படை; இங்குத் தேரைக்குறித்தது. விசாரம் - வருத்தம். நாஸ்தி - அழிவு. குரோதம் - பகைமை. ஆதிபன் - அரசன்.

சு.சொல் - 1. நாஸ்த்திபண்ணால்ப்பழி 2. குறோத

Killing not deliberate

76. Said the minister's son:
The killing of the calf shall not make us sinners
As the calf wantonly fell before the chariot.
If only we had seen the calf advancing
And tread on it,

Sin would have visited us.
As the killing was not deliberate
We need not feel repentant.

(அமைச்சன்மகன் பழிக்குப் பரிகாரங்கூறுதல்) **சம்பை**

77. ஆனாலு மிந்தப்பழிக் காளாயினோ மிதுக்கு
நானா விதமுமெண்ணப் போனால் விசாரம்
வருபாதை தனில்வந்த பழிகாரணந் துலைக்கப்
பரிகாரஞ் சொல்லுகிறேன் துரையே யிப்போது
ஆவினிடக் கண்ணை யெடுத்துக்கம லாலயத்தில் 5
மேவிப்படிந் தேதியாகர் கோவில்வல மேகி
பாலாலுந் தேனாலுநம் பரமருக்கபி ஷேகஞ்செய்து
நூலாடை யாசையென்ன மேலாருக் களித்து
சதபத்து வேதியர்க்குச் [1]சம்பிரமுட னேஅன்ன
முதவிச்சிவ தீர்த்தங்கொள்ள வொடுங்குமந்தப் பாவம் 10
ஏகநாயகன் தியாக ராயரைப் போற்றினால்
ஏகோபிதப் பழிபாவம் போகுங்கா [2]ணையா.

கன்றைக்கொன்ற பழிக்கு ஆளாகிவிட்டோம். இது பற்றியே நினைத்து வருந்தவேண்டாம். வரும் வழியில் நடந்துவிட்ட இந்தப் பழிக்கான பாவம் தொலைய ஒரு பரிகாரம் சொல்லுகிறேன். இறந்துவிட்ட கன்றைச் சுமந்து கோயிலுக்குச் சென்று வலம்வந்து, தியாகேசப் பெருமானுக்குப் பாலாலுந் தேனாலும் திருமஞ்சனஞ் செய்து, பெரியோருக்கு ஆடையளித்து, ஆயிரம் அந்தணருக்கு அன்னதானம் செய்து, இறைவனைப் போற்றி அவன் அருள் தீர்த்தத்தை உட்கொண்டால் நம்மை வந்தடைந்த பழியும் பாவமும் நீங்கிப்போகும் என்று கூறினான் அமைச்சன்.

நானாவிதம் - பலவகை. பாதை - வழி. கண்ணை - கன்றை அபிஷேகம் - திருமஞ்சனம், முழுக்கு. மேலார் - சான்றோர் ஒடுங்கும் - அழியும். ஏகநாயகன் - ஒப்பற்ற தலைவன். ஏகோபிதம் - சேர்ந்துவந்தவை

சு.சொல் - 1. சம்பிறமுட 2. ணைய்யா.

Minister's son suggests expiation

77. It is true we have killed the calf,
But brooding on it is vain and pointless.
I shall suggest a way
To expiate the sin
And redeem ourselves of the guilt

Let us carry the calf to the temple
Circle the sanctum - sanctorum of Tiyākēcar
Offering milk and honey as tokens of worship,
Besides giving clothes to elders
And feeding a thousand brahmins.
After worshipful prayer
If the holy water is sipped,
All the guilt would melt and disappear.

(அரசனுக்குச் சொல்லாமல் திருவனந்தலை முடிப்போம் எனல்)

திரிபுடை

78. இந்த [1]வார்த்தையைத் துரைக்கும் பிறப்பித்
திடாமலேதிரு வனந்தலும் செய்து
வந்து நம்மனை சேருவோ மிது - சிந்தையென்ன

ஆளு நாயகன் திருவ னந்தல்செய்
வேளை போகுது காணிப்போ பசுக் 5
காளை தனையெடுத் தடக்கச் சொலு - தூதாளரோடே

எண்ணி எண்ணிநெஞ் சேங்குறீ ரிதுக்
கென்ன சிந்தனை போமையா சொன்ன
வண்ண மாம்படி பூசைதன்மமும் - பண்ணுமென்றார்

ஆலிசம் பண்ணத் தேவையில்லை யிந்த 10
வடவதே செய்ய வேணுமெனச் சொல்லிக்
கோல மந்திரி குமாரன்தனக்கிது - [2]கூறினானே.

கன்று இறந்த செய்தியை அரசனுக்கு எடுத்துக் கூறாமல் திருவனந்தல் திருவிழாவை முடித்து அரண்மனைக்குச் செல்லுவோம்; இதுவே சிறந்த செயலாகும் என்று கூறிய அமைச்சன் தியாகேசப்பெருமானின் திருவனந்தலுக்குரிய காலம் கடந்துபோகிறது; தூதரை அழைத்து முதலில் பசுங்கன்றையெடுத்து அடக்கஞ்செய்யச் சொல்லுங்கள்; மீண்டும் மீண்டும் நடந்ததை நினைத்து வருந்தவேண்டாம்; பூசை முறைகளுக்குரிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள்; சிறிதும் தாமதிக்காமல் நான் சொன்ன முறைப்படி செய்யுங்கள் என்று கூறினான் அமைச்சன்.

பிறப்பித்தல் - எடுத்துச் சொல்லுதல், தெரியப்படுத்துதல். அடக்கச்சொல் - அடக்கம் செய்யச்சொல். தூதாளர் - தூதுவர், பணியாளர். சொன்னவண்ணம் - கூறியபடி. ஆலிசம் - தாமதம். அடவு - முறை.

சு.சொல் - 1. வாற்த்தையை 2. கூறிநானே.

Winding up the festival without the king's knowledge

78. Said the minister: Let us complete
The Tiruvaṉantal festival
Without disclosing to the King
The sad demise of the calf
So saying he summoned a messenger
And bade him bury the calf
As the time for the festival was nearing.
Let us not revert to the sad event
And sink in eternal sorrow,
But proceed with the rituals
Without any further delay.

வசனம் – நீதி பூஷண னென்பவனறிந்து ஓதிய மொழியெலா முளக்கொள்ளாமல் காந்தன் குமாரனோர் கதையது சொல்வான். (24)

Prose : Paying little heed to the words of Nitipūṣaṇan, the prince narrated a story.

(நானே பாவத்தை ஏற்கவேண்டும் என்பதற்கு வீதிவிடங்கன் கூறும் கதை) **திபதை**

79. யவ்வன தேசத் ததிபதி யானோன்
யவ்வனம் போனபின் னடவி புகுந்து
பரம பதம்பெறப் பண்ணினான் தபசு
புரியவ னிருகண்ணும் புதைத்திரு செவியும்
அடைத்துப் புவியிற்கோ டானது கிழித்தவ் 5
விடத்தி லிருந்தெந்த வேளையுஞ் சிவன்மேல்
நைவுள [1]மாய்ச்சுற்றி நாலு திக்கினுங்
கைகுவித் திப்படிக் காட்டிலெப் போதும்
நிலைகொலு வாயவன் நின்றுகொண் டிருப்பன்
மலைவனத் தேவதை மாபூசை செய்ய 10
வேட னொருவனவ் விடத்திற்பொங் கலையிட்
டாடது வெட்டவோ [2]ராடுகட்டு வித்தான்
[3]இஷ்டதே வதைபொங்க லிட்டபின் னாடு
வெட்டவந் தானது விடுவித்துக் கொண்டு

செடிவிட்ட மோத்தையைத் தேடிக்கொண் டிவனும் 15
விடுபட்டு வந்திடும் வேளையிற் தபசு
செய்பவ னைக்[4]கண்டு திவணஞ் சரணோ
வையாயிவ் விடத்திலோ ராடுகண் டிலையோ
யென்னத் தவஞ்செய்பவ னிச்சையி லரனார்
தன்னைத் தொழுபவ [5]னஸ்தந் தன்னையெடுத் 20
தானத் திசைபோச்சு தென்று அறியச்சொன்
னானென்றுரை தந்தவேடனு மோடியே பார்க்கில்
அப்படி யேகைக் ககப்பட்ட தாடு
கொப்பனக் கொணர்ந்தவன் கொன்றானவ் வாட்டை
அப்பழி தவமிருந் தவருக்கே வைத்தார் 25
யிப்பழி யேதென்றிவ் விறையவன் சிவனைக்
கேட்டிடும் போதிந்தக் கீர்த்திய தால்கை
காட்டினை யேயுனைக் [6]காக்கும தென்றார்
கண்டிலேன் கேட்டிலேன் காணாத தோஷம்
உண்டுபண் ணீரெம் முருத்திரா வென்ன 30
ஆண்டவன் சொல்லவவனோ ராடாய்ப் பிறந்து
தாண்டி வரிற்சிவந் தருகிறோ மென்று
வறிவுட னிவன்தனை யாட்டுக் குட்டியதாய்ப்
பெறுமுல கத்தினில் பிறப்பித்தா னீசன்
அப்படி யேபிறந் தாடா யிருக்கச் 35
சொற்புத்தி யாலொரு துரையாகம் பண்ணான்
அனுதினமும் பத்தா டாகத்தில் வீழும்
தினமுஞ்செம் மணிகளைச் சேவகர் வந்து
விலைக்குக்கொள் வாரந்த வேளையி லிதுவும்
விலைப்பட் டிவர்செயும் [7]வேள்வியைப் பார்த்துக் 40
கொற்றவ னிப்படிக் கொல்லும்பா தகத்துக்
கெத்தனைப் பாதக மிதுவென நகைக்கில்
கொல்விக்கு மரசன்கைக் குட்டியைத் தொழுது
வில்வக் கொழுந்துமேன் மேலு மணிந்து
நகைத்த விதங்களை நவிலுவீ ரென்று 45
வகைப்படக் கேழ்க்கச்செம் மணிக்குட்டிச் சொல்வான்

சொல்கிறேன் சொன்னபின் [8]துளக்கிறே னென்று
வல்லவா நீசத்திய வசனமே சொன்னால்
நவவிக மானதை நான்சொல்வே னென்று
அவசிய மப்படி யாகுதென் றாசன 50
முற்றுடன் கேழ்க்கவே முலையூட்டுங் குட்டி
சத்திய மாய்ச்சொல்லுந் தான்தவம் பண்ணி
வந்த விருத்தாந்தம் மன்னனுக் குரைத்து
யிந்தட வாய்வதைத் [9]திடுவதுனக் கியம்பி
முடியுமோ வென்றியான் முறுவல்செய் தேனென் 55
றறிவுடன் சொல்லவே யாமென வென்றிக்
கூறின படியந்தக் குட்டியைத் தடுத்துப்
பேறிலா [7]வேள்வியைப் பின்னங்கள் செய்து
மன்னவ னெப்பவு மயேஸ்வரர் பூசை
தன்னையே [10]பிரபலமாய்ச் செகமெல்லாங் கொடுத்துச் 60
சிவனையே யருச்சனை செய்துகொண் டிருக்கில்
சிவன்வந்து தோன்றியிச் செகபதி தன்னைப்
பழியெலாந் தந்துநம் பதவிவா வென்றார்
ஒழியுமோ வென்னை யொரேபழி யாகத்
[11]தீர்த்துநம் பதவியிற் சேர்த்திட ரென்று 65
வார்த்தை யிவன்சொல மகாதேவ ரோமென்
றிவனைச் சிறுத்தொண்ட னில்லாள் வயிற்றிற்
பவஞ்செய்து வித்தந்தப் பழிவாங்கிக் கொண்டார்
ஆகையி னாலெந்த னால்வந்த தீங்கைப்
பாகென வேயனு பவிப்பனென் றானே. 70

யவன நாட்டுத் தலைவன் ஒருவன் வயது முதிர்ந்தபின் இறையடியை யடையவேண்டித் தவம் மேற்கொள்ள விரும்பினான். உடனே காட்டிற்குச் சென்று ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தேர்ந்தெடுத்துச் சுற்றிலும் கோடிட்டு வரையறுத்துக்கொண்டான். அங்கு அவன் தன் இரு கண்களை மூடிக் காதுகளையும் அடைத்துக்கொண்டு எந்த நேரமும் சிவபெருமானையே நினைத்து உள்ளம் உருகியவனாகித் தன் கைகளைக் குவித்தபடியே நான்கு திசையிலும் சுற்றிச் சுற்றிக்கொண்டே ஒரு இடத்தில் நிலைபெற்று நின்றவாறு தவம் செய்து வந்தான்.

அவ்விடத்தருகில் வேடுவன் ஒருவன் வந்தான். காட்டுத்தேவதைக்கு பொங்கலிட்டுப் பூசைசெய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, பூசையில் பலிகொடுக்க ஒரு ஆட்டையும் அங்கே கொண்டுவந்து கட்டி வைத்தான். பொங்கலிட்டு முடித்தபின் பலிகொடுப்பதற்காக

ஆட்டைக் கட்டியிருந்த இடத்திற்குச் சென்றான். அந்த வெள்ளாட்டுக் கிடாவானது கட்டிய கட்டிலிருந்து தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டிருந்தது. . வேடுவன் அதைத் தேடிச் சென்றான். அங்கே தவம்செய்து கொண்டிருந்த யவன நாட்டுத் தலைவனைப் பார்த்தான். ஐயா! இங்கே தங்களை வணங்குகிறேன். இந்த வழியில் ஒரு ஆடுவரக் கண்டீர்களா என்று கேட்டான். இறைவனை நோக்கித் தவம் செய்துகொண்டிருந்த யவனன் வணங்கிய நிலையிலிருந்த தன் கையை எடுத்து 'இத்திசையில் போயிற்று என்று கூறிக் கையை நீட்டிக்காட்டினான். அத்திசையில் தேடிச்சென்ற வேடுவனுக்கு ஆடு கிடைத்துவிட்டது. பிடித்துவந்து பலியும் கொடுத்து முடித்தான்.

தவம் செய்துகொண்டிருந்த யவன மன்னன்முன் இறைவன் தோன்றியபோது நீ கைகாட்டினாய். ஆதலால் அந்த ஆட்டைக் கொன்ற பழி உன்னையே சாரும் என்று கூறினான். நான் அந்த ஆட்டைக் கண்டதுமில்லை; அதுபற்றிக் கேட்டதுமில்லை. ஆண்டவா! இல்லாத ஒரு பழியை என்மீது சுமத்துகிறீரே என்று முறையிட்டுக் கொண்டான் யவனன். இறைவன் யவனனை நோக்கி நீ ஒரு ஆடாய்ப் பிறந்து அப்பிறவியைக் கடந்து வரும்போது உமக்குச் சிவபதம் தருகிறோம் என்று கூறி யவனனை ஆட்டுக்குட்டியாய்ப் பிறவியெடுக்கச் செய்தான்.

யவனன் ஆடாகப்பிறந்து வளர்ந்து வரும்போது அரசன் ஒருவன் சிலர் சொன்னதைக்கேட்டு யாகம் செய்யத்தொடங்கினான். அந்த யாகத்தில் நாள்தோறும் பத்து ஆடுகள் பலிகொடுக்கப்பட்டு வந்தன. நாள்தோறும் பணியாளர்கள் வெள்ளாடுகளை விலைக்கு வாங்கிச் சென்றார்கள். அவற்றுள் ஒன்றாக யவனனாகிய இந்த ஆடும் விலைக்கு வாங்கப்பட்டது. யாக சாலைக்குக் கொண்டு சென்றபோது, யாகத்தைப் பார்த்த ஆடு, இப்படி ஆடுகளைக் கொல்லும் கொலைச் செயலால் மன்னனுக்குப் பெருந்தீங்கு ஏற்படுமே! இது எவ்வளவு பெரிய கொடுஞ்செயல் தெரியுமா என்று கூறி ஏளனமாகச் சிரித்தது.

உடனே யாகம் செய்து, ஆடுகளைக் கொல்லச் செய்துவரும் அரசன் இந்த ஆட்டுக் குட்டியைப் பார்த்து வணங்கினான்; பூசைக்குரிய வில்வ இலைகளை மேலும் கட்டினான்; நீ ஏளனமாகச் சிரித்த சிரிப்புக்குரிய காரணத்தை எனக்குக் கூறுவாயாக என்று பணிவாகக் கேட்டுக் கொண்டான். அதன்படி தான் யவன மன்னனாக இருந்து தவம் செய்து ஆட்டுக்குட்டியாய்ப் பிறந்த வரலாற்றை எடுத்துக் கூறிய ஆட்டுக்குட்டி, இப்படி நீ ஆடுகளை வதைப்பது உன் யாகத்துக்குச் சரியோ என்று எண்ணியே சிரித்தேன் என்றது. உடனே மன்னன் வேள்வியை நிறுத்தினான்; ஆட்டுக்குட்டியை வேள்வியிலி டுவதையும் நிறுத்தினான்; தொடர்ந்து மகேசுவரனுக்குப் பூசை செய்யத் தொடங்கினான்; நாடு முழுவதும் மகேசுவரபூசை நடக்குமாறு ஏற்பாடுகளைச் செய்தான். இறைவன் தோன்றிச் சிவபதவியை உமக்குத் தருகிறோம் என்று கூறிச் சிறுத்தொண்ட மன்னனின் மனைவி வயிற்றில் மகனாகப் பிறக்கச் செய்து அவனுடைய பழியைப் போக்கினார் என்ற கதையைக் கூறிய வீதிவிடங்கன் என்னால் வந்த பழியை நானே அனுபவிப்பதே நீதி என்று கூறினான்.

யவ்வனதேசம் - யவனநாடு; கிரேக்கநாடு. யவ்வனம் - இளமை, அழகு. அடவி - காடு. புதைத்தல் - மூடுதல். நைவுளம் - இரக்கம் நிலைகொலு - நிலையூன்றி நிற்றல். மோத்தை-

வெள்ளாட்டுக்கிடாய்; ஆண் வெள்ளாடு. இவணம் - இங்கு. அஸ்தம் - கை. கொப்பன - குப்பென - கபீரென்று என்பதன் ஒலிக்குறிப்பு. சொற்புத்தி - பிறர் சொல்லுவதை நம்பும் பண்பு; சிந்தனை செய்யாமை. வீழும் - பலியாகும். நகைக்கில் - சிரிக்க. வில்வம் - சிவபூசைக்குரிய இலை. நவிலுதல் - சொல்லுதல். துளக்குதல் - விளக்குதல். நவவிகம் - புதியமுறை. விருந்தாந்தம்- வரலாறு. செகபதி - அரசன்; செகம் - பூமி. பவம் - பிறப்பு. பாகு - பங்கு, கற்கண்டு.

சு.சொல் - 1. மாய்ச்சுத்தினாலுதிக்கினுங் 2. ராடுகெட்டுவித் 3. இஷ்ட்ட 4. கண்டுதிவன் 5. ஸஸ்த்தந் 6. கார்க்கு 7. வேழ்வியைப் 8. துளைக்கிறே 9. திடுவதுறக 10. பிறபலமாய் 11. தீற்த்துநம்.

Vitivitaṅkan̲ narrates a story to own sin

79. A Yavan̲a King advanced in years
Made up his mind to do penance
And achieve liberation.
Off he went to the forest
Chose a spot and demarcated it
By drawing lines on all sides.
Closing tightly his eyes and ears
He prayed heartily to Civan̲
Rotating his folded hands respectfully
Retaining his feet on the ground.
A hunter happened to come there
Who tethered a goat within bow - shot
Earmarked for sacrifice
To the deity of the forest.
On his return from prayer
After offering holy rice to the deity,
He found that the goat had bolted.
The hunter who went in search
Ran into the Yavan̲a King
Saluted him respectfully
And asked him about the goat.
The king absorbed in penance
Showed his hand in some direction
Indicating the way taken by the animal.

Lo and behold! the hunter recovered the animal
And offered it to the deity.
Lord Civaṉ now appeared before the King
And blamed him for the goat's death,
As he had pointed his hand in some direction
Leading to the recovery of the animal
And its sad end.
The Yavaṉa king denied all knowledge
And appealed to the Lord for mercy,
But the unforgiving God
Wanted the King to be born as a goat
Before he attained to liberation.
While the Yavaṉa King
Grew up as a goat,
Another King performed a sacrifice
Wherein ten goats were killed daily
To appease the Gods.
Among the goats bought for sacrifice
Was the Yavaṉa King turned animal.
At the sacrificial altar
The goat felt that harm would befall the King
Who was butchering animals.
It expressed its horror
At the cruelty perpetrated
And laughed contemptuously.
Hearing the guffaw of the goat
The King saluted it
And tied round its neck bilva leaves
Used for formal prayer and worship.
The Yavaṉa King turned goat
Narrated his pathetic tale
And wondered whether it was right
To take the lives of animals

In the name of sacrifice.
The King cried halt to killing,
Began worshipping Civaṉ
And arranged for prayers
In the length and breadth of the country.
Civaṉ pleased with the king's gesture
Appeared in person before him
And granted him liberation
By blessing him to take birth
As the progeny of King Ciṟuttoṇṭa
Thereby absolving him of guilt and sin.
Winding up the narrative
Vitiviṭaṅkaṉ observed
That justice and fairplay
Demanded his taking the blame
For the tragic death of the calf.

வசனம் - அரசன் குமரனிவ் வார்த்தை சொல்லிப் பரிவுடனிதுக் கோருபாயமென் *சொல்வான்,* (25)

Prose : What more did Vitiviṭaṅkaṉ say?

(பெற்றோரிருக்க நான் எந்த முடிவும் எடுக்கக்கூடாது எனல்)
திரிபுடை

80. வேந்த னாகிய சோழ பூபதி
விளவ வேசொல்லி யனுப்பி னாலதுக்
காய்ந்து காரியம் பார்த்து மனமது - போந்து புரிவான்

எம்மிலே செய்யக் கடவ தல்ல
இராச பூபதிக் [1]கறிவித் தாலவர் 5
தம்மிலே யென்ன செய்கி னும்புகழ் - நன்மை யாகும்

நமக்குச் சரிப்படி நடக்கை நடப்பது
ஞாய மல்லரா சேந்திர பூபதி
தமக்கெச் சரிக்கை பண்ணா லதுக்குள் - தமத்தி விடுவார்

அன்னை தந்தையில் லாத பேரவ 10
ரவர்மனப்படி செய்ய லாமெமக்
கன்னை தந்தைய ரிருக்க நாமொன்று - பண்ண லாமோ.

என்னுடைய தந்தையாகிய சோழமன்னருக்கு உடனே செய்தியைத் தெரிவித்து விடவேண்டும். அவர் நன்றாகச் சிந்தித்துச் செய்ய வேண்டியது என்ன என்பதை முடிவு செய்வார். நானாக எதையும் செய்யக்கூடாது. மன்னர் செய்யும் முடிவே நன்மை தருவதாகவும், புகழுக் குரியதாகவும் இருக்கும். நமக்குத் தோன்றியபடி எந்த முடிவையும் எடுப்பது நீதியாகாது. அவர் விருப்பம் போல் முடிவெடுக்கட்டும். மேலும் பெற்றோர் இல்லாதவர்களே தங்கள் விருப்பம்போல் முடிவெடுப்பார்கள். எனக்கோ என் பெற்றோர்களே முடிவெடுப்பார்கள்; நானாக எதுவும் செய்யக்கூடாது என்றான் வீதிவிடங்கன்.

ஆய்தல் - ஆராய்ந்து பார்த்தல். தமத்துதல் - விருப்பப்படி செய்தல்

சு.சொல் - 1. கறிவிற்றாவரதம்மிலே.

Let father decide!

80. Said the prince: I should inform
My father urgently of the tragedy
And seek his advice
Which would be sound and well thought out.
I should never act on my own
Which would be grossly unethical.
The decision of the King
Is bound to be good and correct.
Only those lacking parents
Rely on their own decisions,
Whereas I am bound to abide
By the sage counsel of my father.

(நிகழ்ந்ததைத் தந்தைக்குச் சொல்லியனுப்புதல்) சம்பை

81. வீதிவிடங் கருமப்போ தூதர்களை யழைத்திந்தச்
சேதிநம் [1]பிதாவினுட னோதுமென வுரைத்தான்
அட்டியா யிருக்காம லதிசீக்கிர மேநம்மைத்
தொட்டுவந்த கதையெல்லாம் விட்டுவெளி யாக

யதுவிதென விவரமா யெம்மையர் தாமறிய 5
மதிவல்ல ரேயிந்தக் கதையெலாந் தெரியச்
சொல்லுவீ [2]ரவரதற்கென் சொல்கின்றா ரோவதனைச்
சொல்லுவீர் நமக்குவந்து நல்லறிவி னோரே.

வீதிவிடங்கன் தூதுவரை யழைத்தான். அறிவுள்ள சான்றோரே! சிறிதும் தாமதிக்க வேண்டாம்; விரைந்து சென்று தந்தையைக் காணுங்கள்; இங்கு நடந்த செய்திகளை யெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துக்கூறி விளக்குங்கள்; அவர் என்ன பதில் சொல்லுகிறார் என்பதை உடனே வந்து எனக்குச் சொல்லுங்கள் என்றுகூறி அனுப்பினான்

சேதி - செய்தி; நிகழ்ச்சி. பிதா - தந்தை. அட்டி - தடை.

சு.சொல் - 1. பிதாவினுடன்னோது 2. ரவரதற்க்கென்.

Informing the King

81. Vitiviṭaṅkaṉ summoned a messenger
And addressed him : Noble Sir,
Without any further delay
Run up to father and post him
With all relevant information
And let me know his reaction.

(தூதுவர் வருத்தத்துடன் செல்லுதல்) திரிபுடை

82. இவனுமிப் படிச்சொல்லத் தூதுவ ரெங்கிலாத்
[1]துயரங்க ளாயிந்தக் கவலைதனை
என்னமென்று துரையிடக் காதிலுரைப்போம்
பூரிப்பா கியசோழ பூபதிபொன் முகந்தனைப்
பார்த்துக் கண்டவன் 5
சேரப்போ யென்னமென்று சொலவிந்தச் சேதிதனையே
வீணிலே வந்த பழியின் [2]வார்த்தையை
வேந்தனுட னேசொல்ல வேமனம்
பூணுவோ மென்றந்த தூதரிருவர்கள் போவதானார்.

வீதிவிடங்கனின் கட்டளையை ஏற்ற தூதுவர்கள் வருத்தத்திற்குரிய இந்தச் செய்தியை மன்னரிடம் எப்படிச் சொல்லுவது என்று வருந்தினார்கள். எப்போதுமே மகிழ்ச்சியோடு இருக்கும் சோழமன்னரின் முகத்தைக் கண்டு பழகிய நாங்கள் இப்போது

இந்தச் செய்தியை நேரில் சென்று எப்படிச் சொல்லுவது என்று வருந்தினார்கள். இறுதியாக, இப்பழி எதிர்பாராமல் வந்து சேர்ந்தது என்பதை எப்படியாவது' சொல்லி விடுவோம் என்று துணிந்தவர்களாய்ச் சென்றார்கள்.

சேரப்போய் - அருகில் சென்று; நேரில் சென்று.

சு.சொல் - 1. துயருங்களா 2. வாற்த்தையை.

The messengers in a fix

82. The messengers were in a fix
How to break the tidings to the King,
The embodiment of eternal happiness.
At last they decided to underscore
That the tragedy happened unexpectedly.

(பசு ஆராய்ச்சி மணியடித்த நிகழ்ச்சி) **திபதை**

83. தூதுவ ரிப்படித் துயரமாய் வருகில்
ஆதிபன் தன்சமஸ் தானத்தில் நல்லோர்
பூருவந் துரைகள் புரந்ததும் புரவி
தாரியிற் சேர்ந்ததுந் [1]தன்மசாஸ் திரமும்
புண்ணிய வழிகளும் பூபதி கேட்டுக் 5
கண்ணிலா னந்தங் கசிந்திட விருந்தான்
இருக்கையில் வடகிழக் கினிற்பல்லி சொல்ல
வருக்கியே மன்னவ னதேதெனக் கேழ்க்க
கெவுளி தெரிந்தவர் கேட்டமன் னனுக்குக்
கவலை கலர்ப்பனை களிப்புமுண் டென்றார் 10
கேட்டு ராசேந்திரன் கிலேசமா யிருக்க
ஓட்டமாய்ப் பசுவப்போ தோடியே வந்து
[2]அரண்மனை முன்னில்வா [3]ழாராய்ச்சி மணியை
அரியய னைத்தொட் [4]டசைத்ததப் போது
கண்டை யசங்கிக் கணீலென்ற சத்தம் 15
மண்டலா திபனும் மகாசபை யோரும்
கேட்டர சன்கிடு கிடுவென நடுங்கி
நாட்டமும் பூத்துநன் நாவு முலர்ந்து

புணர்ப்பெலாம் வேர்வைகள் பொங்கிமூர்ச் சையதாய்க்
கணப்பொழு திருந்து களையது தெளிந்து 20
எத்தனைக் காலமா யிருக்குதிம் மணியின்
சத்தமோர் தினத்தினுந் தான்கேட்ட தில்லை
யின்றைக் கதிசெய மென்னமோ வுலகில்
யின்றைக்குள் ளேவிளை வென்னமோ வறியேன்
என்று சபையைவிட் [5]டிப்புறம் வரவே 25
பன்றுமன் னவனுடன் நடந்தனர் பெரியோர்
நல்லவர் ஞானிகள் ராசாதி பதிதான்
செல்லும் விடத்தினிற் சிந்தையாய் வந்தார்
அருமையாய்க் காணவே யாராய்ச்சி மணியை
மருவியெல் லோர்களும் மன்னனும் பார்த்தான் 30
கண்டன வங்கொரு கபிலை யிருந்து
கண்டையைப் பினுமந்தக் காவலன் காண்க
[6]வசைத்ததம் மாவென் றழைத்தது பின்னும்
அசைத்ததவ் வரச னருகினி லேகி
[7]நின்றது மன்னவன் நெஞ்செலாங் கலங்கிக் 35
கொன்றக லாயுதக் கொள்கையாய்ச் சோர்ந்து
இதுக்கென்ன கவலையோ யிதுக்கென்ன துயரோ
யிதுக்கென்ன மாரியோ வெப்படி யறிவோம்
மேயு மிடத்தினில் மேய்ப்பவ ரில்லையோ
ஆயனா ரோவிது யார்வீட்டுப் பசுவோ 40
வாயிலாச் சாதி மனத்துயர் தன்னை
நேயமா யெப்படி நிலைதெரிந் திடலாம்
மாந்தர்சொன் னாலந்த வசனத்தைக் கேட்டு
வேந்தனென் [8]பவனும் விசாரிக்க லாகும்
திசைதப்பி வந்து சிவன்போல [9]நின்ற 45
பசுவுக்கு நாமெப் படிபரா மரிப்போம்
சத்திய தர்மமாய்ச் சகலமா னவர்க்குங்
குற்றமில் லாமல்செங் கோல்நடத்தி யிருந்தும்
விருதாக் கவலை யின்றையி லாச்சு
தரந்தர மாய்ச்செய்த தன்மம்பொய் யாச்சு 50

தென்னென்று சொல்லலா மிப்பசுக் குறையை
என்னென்று சொல்லலா மிதின்விசா ரத்தை
யென்னிலே யறிகுவ தெப்படி யென்று
மன்னவ னங்கே மயங்கிநின் றானே.

தூதுவர் செய்தியை எப்படிச் சொல்லுவது என்ற வருத்தத்தோடு வந்துகொண்டிருந்தபோது மன்னவன் அரசவை மண்டபத்தில் சான்றோர்களுடன் அமர்ந்து அவர்கள் சோழ வமிசத்தின் பூர்வீக வரலாறுகளையும், மன்னர்களின் ஆட்சிமுறைகளையும், தருமசாஸ்திரங்கள், புண்ணிய கருமங்கள் போன்றவற்றையும் எடுத்துக்கூறக்கேட்டு, உள்ளம் உருகியவனாய் அவற்றில் ஆழ்ந்திருந்தான். அப்போது அவன் அமர்ந்திருந்த இடத்துக்கு வடகிழக்குத் திசையில் பல்லி சொல்லும் சத்தம் கேட்டது. அந்தப் பல்லி சொல்லுக்குப் பலன் யாது என அரசன் கேட்க, கவுளி சாஸ்திரமறிந்தவர் ஒருவர் துன்பம் கலந்த ஒரு பெருமகிழ்ச்சி ஏற்படவிருக்கிறது என்று மன்னனிடம் கூறினார். அதைக்கேட்ட மன்னன் சிறிது அச்சமுற்றவனாகி வருத்தத்தோடு இருந்தான். அந்த நேரத்தில் கன்றை இழந்த பசுவானது ஓடிவந்தது. அரண்மனை வாயிலில் இருந்த ஆராய்ச்சி மணியை நோக்கியது; திருமாலும் பிரமனும் ஆகிய தன் இரு கொம்புகளினால் அம்மணியைத்தொட்டு அசைத்தது. அந்தப் பெரியமணியானது அசைந்து ஆடிக் கணீரென்ற சத்தத்தை உண்டாக்கியது. அரசனும் அவையோரும் ஆராய்ச்சிமணியின் சத்தத்தைக் கேட்டனர். கேட்டவுடன் அரசனுக்கு நடுக்கம் உண்டாயிற்று; கண்கள் நடுக்கத்தால் விரிந்தன, நாக்கு உலர்ந்து போயிற்று; உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது; இந்த நிலையில் மன்னன் மயங்கி மூர்ச்சையாகி விட்டான்.

சிறிது நேரத்தில் மூர்ச்சை தெளிந்த மன்னன் ஐயோ! இந்தமணி நீண்ட காலமாய் இங்கு இருக்கிறதே! இதுவரை ஒருநாளும் இதன் சத்தத்தைக் கேட்டு அறியோமே! இன்றைக்கு அதிசயமாக இதன் ஒலி கேட்கிறதே! உலகில் இன்றைக்கு என்ன நடந்துவிட்டதோ தெரியவில்லையே என்றெல்லாம் கூறி வருந்தியவனாய் அவையைவிட்டு வெளியிலே வந்தான். சபையிலிருந்த சான்றோர் அனைவரும் மன்னனைத் தொடர்ந்து வந்தார்கள். வெளியில் வந்த அரசனும், அரசனுடன் வந்த நல்லவர்களும் பேரறிஞர்களும் ஆராய்ச்சிமணியைப் பார்த்தார்கள். அங்கு நின்றிருந்த சிவப்புநிறப் பசுவானது மீண்டும் மன்னவன் நேரில் காணுமாறு அந்த மணியை அசைத்து, அம்மாவென்று அழைத்தபடியே அரசனருகில் சென்று நின்றது. பசுவின் நிலையைக்கண்ட மன்னவன் உள்ளம் வருந்தியவனாகி, ஒரு உயிரைக் கொன்றுவிட்டு விலகி நிற்கும் ஒரு ஆயுதத்தைப்போலச் சோர்வடைந்தான். இந்தப் பசுவுக்கு நேர்ந்த துன்பம் என்னவோ? நம்மால் அறியமுடியவில்லையே! இதை மேய்க்க மேய்ப்பவர் இல்லையோ? இது கோயிலைச்சேர்ந்த பசுவோ? யாருக்குச் சொந்தமானதோ? வாய்பேச முடியாத இந்தப் பசுவின் துன்பத்தை அறிவது எப்படி? மனிதர்கள் வந்து தங்கள் குறைகளைச் சொன்னால் மன்னனால் விசாரிக்க முடியும். எப்படியோ வழிதவறி வந்து சிவபெருமானைப் போல நிற்கும் இந்தப் பசுவுக்கு எப்படிப் பாதுகாப்பு அளிப்பது? நீதி தவறாமல் ஆட்சி செய்து வரும் எனக்கு இன்று ஒரு பெருங்கவலை நேர்ந்துவிட்டதே! ஆய்ந்தாய்ந்து செய்த தருமங்கள் இன்று பொய்த்து விட்டனவே! இப்பசுவுக்கு ஏற்பட்ட குறையும் வருத்தமும் என்னவென்று அறிய முடியும்? இவ்வாறு பலவகையாகச் சிந்தித்தபடியே தன்னை மறந்து நின்றான் மன்னன்.

ஆதிபன் - அரசன். சமஸ்தானம் - அரசவை மண்டபம். பூருவம் - முன்னோர் வரலாறு. துரைகள் - மன்னர்கள். புரத்தல் - காத்தல். தாரி - உடையவர். அருக்குதல் - அஞ்சுதல். கலர்ப்பனை - கலந்தது. கிலேசம் - அச்சம், வருத்தம். அரியயன் - திருமாலும் பிரமனும்; பசுவின் கொம்பாக உருவெடுத்தவர்கள். அரியயனைத் தொட்டு - அரியயனால் தொட்டு என்பது வேற்றுமை மயங்கி நின்றது. கண்டை - பெரியமணி. நாட்டம் - பார்வை, கண். புணர்ப்பு- உடல். விளைவு- நடக்கவிருப்பது. ஞானி - பேரறிஞன். மாரி - உபாதி, நோய். ஆயனார் - கோவிற்பசு. விருதாக்கவை - வீண்வேலை.

சு.சொல் - 1. தன்மசாஸ்த்திரமும் 2. அரமனை 3. ழாராக்ஷிமணி 4. டசைத்துதப்போது 5. டிப்புரம்வரவே 6. வசைத்துதம்மா 7. நின்றுது 8. பவனாம் 9. நின்று.

The Cow rings the bell of justice

83. While the messengers hastened to the King,
He was sitting in the assembly
Listening to elderely men
Tracing the glories of the past,
The illustrious Cōḻa lineage,
The polity of the Kings
And their many acts of philanthropy.
Then was heard the click of a lizard
From the North - East direction!
The King expressed his desire
To know the ominous significance of the click.
Men who knew about it
Said that the click of the lizard
Forecast sorrow mixed with great joy
Which struck fear and anxiety
In the mind of the king.
Just then the bereaved cow
Madly ran to the bell of justice
Hanging at the portals of the palace
And butt it with its two horns
Which were Piramaṉ and Tirumāl in disguise.
Hearing the loud clang of the bell,
The King was overcome with panic,

His eyes widened, tongue dried
And sweat flowed profusely
Which ultimately made him swoon.
When he regained consciousness,
He spoke with a sense of alarm:
The bell of justice is there since long
But none has ever rung it.
I wonder what big calamity
Has suddenly befallen the world.
The elders and the gentry
Who accompanied the king
Cast their glance on the bell
Which was once again rung by the cow
With a wild scream of pain and agony.
When the cow came near the King,
He was crest - fallen
Like a weapon which had its prey.
What ails this dumb creature
Is shrouded in mystery.
Is there no shepherd
To feed it and look after it?
Does it belong to any temple?
How can I delve into its grief
Since it cannot speak out?
Like lord Civaṉ who once lost His way,
The cow has come seeking help.
Always fair and just in my acts
I am saddened at the turn of events.
All my righteous actions
Have failed to yield any fruit.
Indeed I am perplexed how I can help the cow
Immersed in inconsolable grief.

(வீதிவிடங்கனிடமிருந்து தூதுவர் வருதல்) ஏகதாளம்

84. ஆதிப னிப்படி யாய்முன் னிருந்திட
வீதி விடங்கரிட தூதுவ ரிருவர்
வந்துரா சேந்திர மன்னனை வணங்கியே
சிந்தனை யாச்சுது தேவரீ ரென்றார்
தயவுள நிருபர் சடுதியிலே வந்த 5
துயர்தனைச் சொலமனப் பயமெமக் கென்றார்
தெளிவுள ராசேந்திரன் வந்த தூதரைக்
களவின்றிச் சொலுமெம தளவஞ்ச வேண்டாம்
புத்திரன் போல்நமக் குற்றவரே கிருபை
வைத்துநம் மோடந்த [1]விரத்தியைச் சொல்லும் 10
போந்தவன் தூதரைப் புகழ்ந்து புகழ்ந்துமிகத்
தாழ்ந்தசொல் [2]லுரைத்துவிருத் தாந்தமே தென்றார்.

மன்னவன் பலவாறு சிந்தித்து இருக்கும்போது, வீதிவிடங்கன் அனுப்பிய தூதுவர் இருவரும் வந்து மன்னனை வணங்கி ஐயா! மிகவும் அன்புள்ளவராகிய இளவரசருக்குச் சிறிது நேரத்தில் ஏற்பட்டுவிட்ட பெருந்துன்பத்தைச் சொல்ல மிகவும் அஞ்சுகிறோம்; எப்படிச் சொல்லுவது என்று தயங்குகிறோம் என்றார்கள். மனத்தெளிவு உள்ளவனாகிய மன்னன், தூதுவரை நோக்கி, எம்மிடத்தில் பயப்படவேண்டாம்; நடந்ததை ஒளிவு மறைவு இல்லாமல் கூறுங்கள்; நீங்கள் என்னுடைய மகனைப்போல மிகவும் வேண்டியவர்களாவீர்கள்! தயவுசெய்து நடந்த நிகழ்ச்சியை விளக்கமாகக் கூறுங்கள் என்று கேட்டுக்கொண்டான்.

சிந்தனை - தயக்கம். நிருபர் - அரசர் (வீதிவிடங்கன்) களவு - ஒளிவுமறைவு; மறைத்தல் உற்றவர் - வேண்டியவர். விரத்தி - விருத்தி - விருத்தாந்தம் - நடந்தசெய்தி.

சு.சொல் - 1. விற்த்தியை 2 லுரைத்துவிற்த்தாந்தமே.

The arrival of the messengers

84. When the King was standing aghast
The messengers of the prince arrived.
After saluting the King, they spoke:
Sir, we hesitate to disclose
The mishap that has befallen the prince,
The embodiment of kindness and love.
The King noted for his sobriety said:

Fear not to speak the truth
As I look upon you as my own progeny,

(தூதுவர் பசுங்கன்று இறந்த செய்தி கூறுதல்) சம்பை

85. நிசமதாய்க் கேளுமும்மிட சிசுதேரில் போகச்சே
பசுவுமொரு கண்ணுமாய்த் [1]திசைபிசகி வந்து
வீதிதனி லேவீதி விடங்கரொடு தேரோடும்
போதிந்தப் பசுவுங்கண்ணும் சூதளவ தாக
மண்டுதிரள் விழியெல்லாம் மறைத்தந்தச் சேங்கண்ணு 5
வண்டிதனிற் தகிலினறுங் [2]குண்டது திரேகம்
திரள்விழியெல்லாம் மறைத்துத் தேர்வண்டிக் காலிலே
யரைபட்டுக் குழாய்க்கண்ணுயி ரானதகன் றதுவே
தேவரீர் தமக்கறிக்கை செய்யவே யங்கிருந்து
பாவியே மிருவர்வந்து பகர்ந்தோமென் றாரே. 10

மன்னவரே! கேளுங்கள்! நடந்த உண்மையைச் சொல்லுகிறோம். தங்கள் மகனான வீதிவிடங்கன் தேரில் போகும்போது தெருவில் ஒரு பசுவுங்கன்றும் ஓடிவந்தன. அவை இந்தப் பகுதியைச் சார்ந்தவை அல்ல. எங்கிருந்தோ இடந்தெரியாமல் வந்திருக்கின்றன. தேரோடுந் தெருவிலிருந்த மக்கட்கூட்டத்தின் கண்களில் படாமல் மிக வேகமாக ஓடிவந்தன. அவற்றுள் சேங்கன்று மட்டும் இமை கொட்டும் நேரத்திற்குள் துள்ளிக் குதித்தோடித் தேர்க்காலில் சிக்கியது. அதன்மீது தேர்ச்சக்கரம் ஏற, கன்று நசுங்கி இறந்து போயிற்று வருந்தத்தக்க இந்தச் செய்தியைத் தங்களுக்குக் கூறவே பாவிகளாகிய நாங்கள் இருவரும் ஓடிவந்தோம் என்று தூதுவர்கள் கூறினார்கள்

நிசம் - உண்மை. சிசு - குழந்தை. பிசகி - தவறி. சூதளவு - மாயமாய், வஞ்சகமாக. மண்டுதிரள் - நிறைந்திருந்த கூட்டம். தகிலி - உள்ளே பாய்ந்து. நறுங்குண்டது - நசுங்கியது. குழாய்க்கண் - சிறுகன்று, குழந்தைக்கன்று பாவியேம் - பாவிகளாகிய நாங்கள்; தன்மைப்பன்மை.

சு.சொல் - 1. திசைபிசக்கி 2. குண்டுது.

Disclosing the death of the calf

85. Revered king, lend us your ears!
We shall recount the events
As they happened quite faithfully.
When your son was riding the chariot,
A cow and a calf suddenly appeared in the street
Which obviously did not belong to this locale,

But had come from elsewhere.
They ran about the place
Without drawing the attention of the crowd.
The unfortunate calf gambolled in gay abandon
And was caught in the wheels of the vehicle,
Reduced to miserable pulp.
We, sinners rushed here
Only to break this piece of bad news.

(மன்னனின் வருத்தம்) ஏகதாளம்

86. தூதுவ ரிப்படிச் சொல்லவே மன்னவன்
மேதினி மேல்விழுந் தியாதியல் லாதே
வடவையில் விழும்புழு வாறாய மன்னவன்
கடகட வெனப்புரண் டிடியெனக் கதற்றி

மூர்ச்சையில தாய்நகை முகமது வாடிப்பின் 5
மூர்ச்சை தெளிந்தென்ன மொழிகுவன் ராசன்
அரகர சிவசிவ வரனே என்றிரு
கரமத னாலவ னிருசெவி மறைத்தான்

பாவமா கியபழி வருமோ அரகர
சிவனே எனமனந் திடுக்கிட்டுத் திகைத்தான் 10
குலத்திலில் லாப்பழி வரத்தகுமோ வென்று
நிலத்தினி லேதலை யிடித்தன னிறைவன்

ஆரியன் விழிமறைத் தாரைகொண் டானவன்
சேரவல் லாருமவ் வாரிய தானார்

தூதுவர் கூறிய செய்தியைக் கேட்டான் மன்னன். உடனே மயங்கிப் பூமியில் விழுந்தான்; ஊழித்தீயில் புழுவினைப்போலத் துடித்தான்; கடகடவெனப் புரண்டான்; இடியிடிப்பது போலக் கதறினான்; மூர்ச்சித்துத் தன் நினைவை இழந்தவனானான்; புன்முறுவலோடு கூடிய அவன் முகம் வருத்தத்தால் வாடிக்கிடந்தது. பிறகு சிறிது மூர்ச்சை தெளிந்தவனானபோது, அரகரா! சிவசிவா! அரனே! என்று இறைவனை விளித்தவாறே தன் கைகளால் இரண்டு காதுகளையும் பொத்திக் கொண்டான்.

சிவனே! இப்படிப் பெரும்பழியும் பாவமும் வந்து சேர்ந்ததே என்று மனம் நடுங்கினான். இதுவரை சோழ வமிசத்திலேயே இப்பழி நேர்ந்ததில்லையே என்று கூறித் தலையை நிலத்தில் மோதிக்கொண்டான். சோழமன்னனாகிய அவனது விழிகளில்

நீர்த்தாரை பெருகிப் பார்வையை மறைத்தது. அவனைச் சார்ந்திருந்த அனைவரும் சோழன் நிலையையடைந்தார்கள்.

யாதி - நினைவு. வடவை - ஊழித்தீ. கதற்றி - கதறி - அழுது. ஆரீ - சோழன். தாரை- நீர்த்தாரை. ஆரியது - சோழனைப்போல

The King blaming himself

86. On hearing the sad tidings,
The king fell down with a thud.
Like a worm
Caught in the inexorable fire of fate,
He writhed in agony and rolled madly.
He let out a thunder - like scream
And lost consciousness.
His ever smiling face
Was now clouded in misery.
When he regained consciousness,
He repeated the names of the lord
Arakara, Civa Civa, *Arane*
And closed both his ears.
Almighty Civan, why should such a blame
Befall the distinguished Cōḻa family?
Never has similar accursed thing
Happened to my predecessors.
So saying he hit his head hard
Against the ground, smitten with great grief.
Tears rolled down his cheeks
Which visibly upset his men as well.

(அரசன் தன்னையே நொந்து கொள்ளுதல்) திபதை

87. இப்படி மன்னவ னிருதயங் கலங்கித்
தற்பரா சங்கரா [1]சகலபிரா ணேசா
தேவனே கயிலைத் திகிரியில் வாசா
தேவனே யாரூர்த் தியாகலிங் கேசா

நந்திவா கனருட நாயகா வளருஞ் 5
சந்திர கிரீட சடாதரா வுரக
கங்கணா விஷமுண் டந்தரா வடியார்
வங்கணா புவிதா வணங்கிய பாதா
தாகிக் [2]கொன்றை தரித்தமார் பினனே
போதன் முராரியும் பூருவந் தேடக் 10
கிடையாத வஸ்துவே கெவுரிமோ கனனே
அடியார்க் கடியவ னானசங் கரனே
வேத புராண வினோத விர்த்தாந்த
காதையி னப்பாற் கடந்த காரணனே
ஏழை பங்காள [3]மயேஸ்வரா வென்ன 15
வாழ்வுதந் தாயொரு மதலையைத் தந்து
சுபகீர்த்தி தன்னைத் துலைத்தெந்த நாளும்
அபகீர்த்தி யேபாட மாச்சுது நமக்குப்
பிள்ளை பிறந்து பெரும்பழி யாச்சு
பிள்ளை பிறந்துநம் [4]பிரபலமே போச்சு 20
மலக்குழிக் கேக வழியது வாச்சு
துலைக்கவொண் ணாப்பெருந் தோஷங்க ளாச்சு
என்குலத் தாரினி லிப்படி யெங்கும்
[5]புன்கணக் காயவரும் போனவ ரில்லை
மகனையிட் டேபழி [6] வந்ததிப் போது 25
மகனிட்ட தீங்கு மறப்பதெப் போது
சேங்கண்ணைக் கொல்லவோ தேரேறிப் போனான்
சேங்கண்ணுக் கிவனொரு தென்திசைக் கோனோ
ஆவின் கண்ணுக்கன் றவதரித் தானோ
பாவியிப் பிள்ளைநம் பால்வர லாமோ 30
தகாதவன் தோற்றத் தகுமோ நமக்குப்
மகாபாவ மாச்சுதெவ் வாறுசெய் திடுவோம்
பெருத்த பூமியில்முன் பிறப்பினி லேயான்
துரத்தனஞ் செய்துமா தோஷஞ்செய் தேனோ
கவினாம் படியே கடமைகொள் ளாமல் 35
அவதூறு போட்டனி யாயஞ்செய் தேனோ

வெறுமை நீங்கியிட விளையாததுக் கெல்லாம்
யிறைகொண்டு குடிகளை யீடழித் தேனோ
வேதியர் சங்கமர் விஷ்ணுதொண் டர்களை
யாதறி [7]யாமற்பொன் னாதரித் தேனோ 40
பரத்தையைக் கூடிப் பணத்தைக் கொடாமல்
முறித்துக்கொண் டோடிப்போய் மோசம்பண் ணேனோ
தேசிகர் தம்மைப் பழித்தேனோ நமக்கு
[8]வாசனை கற்பித்த வாத்தியார் மனது
[9]நோகவுரைத் தேனோ [10]நொண்டிமொண் டிகளை 45
யாகடியம் பண்ணி [11]யலைச்சல்கொண் டேனோ
பசிமிண்ட தான பரதேசி களுக்குப்
பசியாற வன்னம் படைத்தில னோதான்
கன்னியர் ஸ்திரிகளைக் கைகலந் தேனோ
அன்னியர் ஸ்திரிகள்மே லாசைகொண் டேனோ 50
வித்துவ செனங்கள் கவித்துவம் கேட்டு
[12]வஸ்து தராமற் சும்மாயிருந் தேனோ
நம்பின பேரை நடுக்கானந் தன்னில்
அம்பலமாய்க் கைவிட் டவதிகண் டேனோ
பள்ளிக்கூ டத்தினிற் படிப்பிக்க வைத்த 55
பிள்ளைக் கிடையிலே பிடித்துக் கொண்டேனோ
ஊமை குருடரை யுபத்திரவம் பண்ணி
நேம [13]நிஷ்டையரை நெறிகுலைத் தேனோ
தன்னவர் தங்களைத் தானர்ச்சி யாமல்
அன்னியர்க் கிரணமுண் டாய்க்கொடுத் தேனோ 60
புரோகிதர் தன்னைப் [14]புறமிட்டுக் கொண்டோர்
பிராணிகளை வதைப்பித் தேனோ குழந்தைப்
பாலைப்பிள் ளைக்கஞ்சி கேட்பார்க் கில்லையென்று
மாலைகொண் டரவை வளர்த்துவிட் டேனோ
ஆண்டவ னுடைமையை யனுபவித் தமரில் 65
வேண்டிய போதிப்பால் மீண்டுவந் தேனோ
தாய்க்கும் பிள்ளைக்குந் [15]தகவுசொன் னேனோ
தீய்க்குத் தரமனை தெகிக்கவிட் டேனோ

வலசை யெடுக்கவோர் மாறு தேசத்திற்
கலகமிட்டுக் கொள்ளைக் கலாதிசெய் தேனோ 70
சிவத்தி யானங்களைச் சிவபூ சிதரை
யவத்தி யானங்க ளாயாதுசெய் தேனோ
எவரிடுஞ் சாபமோ எழுத்தின் படியோ
தவறாம லெம்மிடஞ் [16]சார்ந்ததே பழியும்
அரகர தியாகரே அய்யரே யென்று 75
துரைசோழ ராசனுந் துயரங்கொண் டானே.

உள்ளங்கலங்கி வருந்திய மன்னவன், சிவபெருமானே! சங்கரா! எல்லா உயிர்களுக்குந் தலைவனே! கயிலைமலையில் எழுந்தருளியுள்ளவனே! ஆரூர்த் தியாக லிங்கேசனே! நந்தி வாகனனே! பிறைமுடியுடையவனே! சடாமுடியோனே! பாம்பாகிய ஆபரணத்தை அணிந்தவனே! நஞ்சுண்ட கண்டனே! அடியவர் நேசனே! புவிமகள் வணங்கும் திருவடிகளையுடையோய்! கொன்றைமாலை அணிந்தவனே! பிரமனும் திருமாலும் தேடியறியமுடியாத அரும்பொருளே! கவுரிமணாளா! அடியார்க்குந் தொண்டு செய்பவனே! வேதங்களும் புராணங்களும் கதைகளும் கூறும் பொருள்களையெல்லாம் கடந்து நிற்பவனே! ஏழைகளின் துணைவனே! மயேஸ்வரா!

எனக்குக் குழந்தைச் செல்வத்தை யளித்து, அக்குழந்தையின் மூலம் என் பெரும்புகழை இழக்கச் செய்துவிட்டாயே! குழந்தை பிறந்ததால் எனக்குப் பழியும் பாவமும் உண்டாகித் தூய்மை தொலைந்தது. சோழர் குலத்தவர் எவரும் இத்தகு இழிநிலையடையவில்லை. மகனால் வந்தபழியுந் தீங்கும் இனி நீங்குமா? சேங்கன்றுக்கு என் மகன் எமனாகிவிட்டானே! பசுங்கன்றைக் கொல்லவென்றே பிறந்த இவன் என் முன்வரலாமா? தீயவன் முன் தோன்றுவதும் பாவமல்லவா?

இந்தப் பரந்த நிலவுலகத்தில் முற்பிறப்பில் ஆட்சிசெய்து பெரும் பாவங்களைச் செய்தேனோ? புகழ்படக் கடமைகளைச் செய்யாமல் பழிக்குரிய அநியாயங்களைச் செய்தேனோ? விளையாத நிலங்களுக்கு அரசுவரி வாங்கிக் குடிமக்களை வருத்தினேனோ? அந்தணர், சங்கமர், வைணவத் தொண்டர்கள் ஆகியோருக்கு உதவிசெய்யாமல் செல்வத்தை முடக்கி வைத்தேனோ? பரத்தையரைச் சேர்ந்து, பணம்கொடுக்காமல் மோசம் செய்தேனோ? குருவையும் கற்பித்த ஆசிரியரையும் மனம் நோகச்செய்து விட்டேனோ? கை, கால் குறைந்தவர்களை ஏளனம் செய்து கொடுமை செய்துவிட்டேனோ? பசியோடு வந்த யாசகருக்கு அன்னமிடாமல் பட்டினி போட்டேனோ? திருமணமாகாத பெண்கள், அன்னிய மகளிர் ஆகியோரை விரும்பினேனோ? புலவர் பெருமக்களின் கவிகளைக் கேட்டுவிட்டு அவர்களுக்கு உரிய பொருள் கொடுக்காமற் போனேனோ? நம்பினவர்களை நடுக்காட்டில் விட்டுத் துன்பமடையச் செய்துவிட்டேனோ? பள்ளியில் படிக்கும் பிள்ளைகளின் படிப்பைக் கெடுத்தல், ஊமையர், குருடர் ஆகியோருக்குத் தொல்லை கொடுத்தல், மனம், மொழி, மெய்களால் உறுதியான நியமங்களைச் செய்வோரை முறை தவறச் செய்தல், வேண்டியவருக்கு உதவாமல் பகைவர்களுக்குப் பொருளை வாரி

வழங்குதல், புரோகிதரைப் பழித்தல், பிராணிகளைத் துன்புறுத்துதல், குழந்தைகளுக்குக் கஞ்சி கேட்டவர்களுக்கு இல்லை என்று கூறுதல், மயக்கங்கொண்டு பாம்புகளை வளர்த்துவிடுதல் ஆகிய கொடுஞ்செயல்களைச் செய்து விட்டேனோ?

இறைவனுக்குரிய பொருள்களை அனுபவித்தல், போருக்குச் சென்று போர் செய்ய வேண்டிய நேரத்தில் விலகி வந்து விடுதல், பெற்ற தாய்க்கும் மகனுக்கும் அறிவு சொல்லுதல், நல்லகுடும்பம் வாழ்ந்திருந்த வீட்டைத் தீக்கு இரையாக்குதல் போன்ற பாவச்செயல்களில் எதையேனும் செய்துவிட்டேனோ? பகைவர் நாடுகளில் கூட்டம் கூடி நாட்டைக் கெடுப்பதற்குரிய வழிவகைகளைத் தூண்டிவிட்டுக் கலகம் செய்து, கொள்ளையிட்டு அந்நாடுகளைக் கெடுத்து விட்டேனோ? சிவத்தியானம், சிவபூசை ஆகியவற்றை மேற்கொள்ளும் அடியவர்களின் பக்தியைக் கெடுத்துச்சிறிதும் சிந்திக்காமல் அவர்களது பூசை முதலியவற்றைப் பயனில்லாமல் செய்துவிட்டேனோ? ஐயனே! எம்மை வந்தடைந்த இந்தப்பழி யாரிட்ட சாபத்தால் வந்ததோ அறியேன்! அல்லது என் தலையெழுத்தே இப்படி யமைந்து விட்டதோ அதுவும் தெரியவில்லையே என்று பலவாறு முறையிட்டுப் புலம்பினான் மன்னன்.

இருதயம் – மனம். தற்பரன் – சிவபெருமான், பிராணேசன் – தலைவன், பிராணன் – உயிர். திகிரி – மலை. வளருஞ் சந்திரன் – பிறை நிலவு. கிரீடம் – முடி. சடாதரன் – சடாமுடி யுடையவன், சிவபெருமான். உரகம் – பாம்பு, அந்தரன் – இறைவன், வங்கணன் – தோழன், போதன் – பிரமன் முராரி – திருமால். கெவுரி – கௌரி – பார்வதி. மதலை – குழந்தை. சுபகீர்த்தி– நல்லபுகழ். அபகீர்த்தி – பேரிழிவு. பிரபலம் – புகழ். மலக்குழி – தூய்மை அழிவு; இழிவு. துலைத்தல்– தொலைத்தல் – அழித்தல். ஒண்ணா – ஒண்ணாத – முடியாத புளம் – குதிரை. தென்திசைக்கோன்– எமன். கோன் – அரசன். துரத்தனம் – துரைத்தனம் – அதிகாரம். இறை – அரசு வரி தேசிகர்– குரு. ஆகடியம் – கொடுமை, பரிகாசம். நிட்டை – மனம், மொழி, மெய்களசைவின்றி இருத்தல். நேமம் – நியமம். தன்னவர் – தம்மைச் சார்ந்தவர். இரணம் – பொன் அமர் – போர். தகவு – அறிவு. உததரம்– உயர்வு. தெகித்தல் – தகித்தல் – கொளுத்துதல். வலசை – கூட்டம். கலாதி – கலகம், சணடை அவம் – வீண், பயனில்லாமை. ஆயாது – ஆராயாமல், சிந்திக்காமல் எழுத்து – விதி.

சு.சொல் – 1. சகலபிறாணேசா 2. கொன்றைத்தரித்த 3. மயேஸ்பரா 4. பிறபலமே 5 புன்க்கணக் 6. வந்துதிப் 7. யாமறப்பொன் 8. வாசனைக்கற்பித்த 9. னோகவுரைத் 10. னொண்டி 11. யலச்சல் 12. வஸ்த்து 13. நிஷ்ட்டையரை 14. பிறமிட்டுக் 15. தகுவுசொன் 16. சார்ந்துதே.

The king blaming himself

87. The distressed king addressed the Almighty:
Lord Civan̲, Caṅkaran̲, the controller of lives,
The one with abode in Mount Kailas,
Tiyākaliṅkēcar of Ārūr!
The rider of the sacred bull,
Wearer of the crescent with matted locks,

Wearer of the serpent and *Konrai* garland,
The refuge of the devotees,
The One whose greatness evades Tirumāl and Piraman
The wearer of the Yac Skin
The One beyond the reach of Vētā's and Purāṇās,
The helper of the needy, the lord of lords!
You have robbed me of my reputation
By blessing me with a child;
My spotless life has been sullied!
A slur unknown in the great Cōla lineage!
Will I be absolved of this sin?
My Sun who has killed an innocent calf
Has no claim to come near me,
Since it is vile sin even to see wicked folk.
Did I commit lapses in my earlier birth
As a ruler of this land?
Was I guilty of shirking duty?
Did I collect tax from arid land?
Without offering it to brahmins and Vaishnava savants,
Did I keep my wealth locked?
Did I cheat any whore
Of her rightful wages?
Did I hurt my preceptors?
Or ridicule the physically disabled?
Did I starve any beggar?
Did I harbour evil thoughts
Against maidens and women other than wife?
Did I cheat poets of their due?
Or let down people who trusted me?
Did I harm the studies of children
Hurt the blind and the dumb?
Did I ever force the austere

To give up rites and rituals?
Did I distribute wealth
To the enemies of my kinsmen?
Or did I find fault with priests,
Hurt animals or fail to feed hungry children
Or deliberately let loose snakes to prowl about?
Did I misuse God's dues
Or abstain from combat
When the urgency was there?
Did I mislead any mother and son
Or destroy any home where harmony prevailed?
Did I create turmoil in the land of the enemies
By carefully - planned intrigues,
Amassed their wealth and destroy them?
Did I create set-backs to Caiva savants
In their daily worship of the Lord
And thereby nullified their acts of prayer?
Lord, really I am in a fix,
I do not know
The curse under which I am labouring,
Or is it all my fate?
So wailed the unhappy king.

வசனம் - துயரங் கொண்ட சோழ ராசேந்திரன் சிவனையேதென சிந்தை நொந்திடுவன் (26)

Prose : Sorrow - laden Rācēntiran blames the lord.

(அரசன் இறைவனை நொந்து கொள்ளுதல்) **சிந்து**

88. பாலக னாலிந்தப் [1]பழிவந்ததே யெந்தப்
படி துலைப்பேன் சிவனே
சந்ததி வேண்டின சிந்தையெல் லாமுரு
குந்துயர் வரலாச்சே (பாலக)

சொற்பனத் தினிலன்று சுதன்தந் தீரெனக் 5
கற்பனை யளித்தனையே (பாலக)

கூறின படிபிள்ளை கொடுத்தெனக் குப்பழிக்
[2]காரனை யுதவினையே (பாலக)

கபடம தாயிந்தக் கன்மியை வரவிட்ட
விபர மறிகிலேனே (பாலக) 10

நானொன்று நினைந்திட நீரொன்று முடித்தது
ஆனந்த மோபரனே (பாலக)

பொறுபொறு மென்றென்னைப் பரமசிவா நெஞ்சில்
கறுவிக்கொண் டிருந்தீரோ

பாலக னாலிந்தப் பழிவந்ததே யெந்தப் 15
படிதுலைப்பேன் சிவனே.

சிவனே! என் மகனால் வந்த இந்தப் பழியை எப்படிப் போக்கப்போகிறேன்? அன்று மகன் வேண்டும் என்று வேண்டிக் கொண்ட என் மனம் இன்று உருகி வருந்துகிறதே! உனக்கு மகன் ஒருவனைத் தந்தோம் என்று கனவில் கூறினீர்களே! அது வெறுங் கற்பனையாகி விட்டதே! நீங்கள் கூறியபடியே மகனைக் கொடுத்தது போல ஒரு பழிகாரனைக் கொடுத்துவிட்டீர்களே!

இந்தப் பழிகாரனைக் கொடுத்த தங்கள் வஞ்சகச் செயலுக்கு என்ன காரணம் என்பது தெரியவில்லையே! நான் நினைத்தது ஒன்று; தாங்கள் முடித்தது வேறு. இது தருமமோ? சிவபெருமானே! பொறு! பொறு! உன்னை என்ன செய்கிறேன் பார் என்று பகைமை கொண்டிருந்தீர்களோ? இந்தப் பழியை எப்படிப் போக்குவேன்.

சந்ததி - மகவு. சொற்பனம் - சொப்பனம் - கனவு. சுதன் - மகன். கபடம் - வஞ்சனை, தந்திரம் கன்மி - பாவி. கறுவுதல் - பகைமை கொள்ளுதல், கோபித்தல்

சு.சொல் - 1. பழிவந்துதே 2 காறணை.

The King blames Civan

88. Lord Civan, how am I going
To redeem myself of the blame
Brought on me by my son?
Time was when I longed for an issue,
But today my mind is beclouded
Because of my son's rash act.
Your blessing of a worthy progeny
Has lost its significance.
Instead of blessing me with a son,

You have given me a delinquent!
Why did you play on me
This dishonourable trick?
My dreams ran counter
To your deed.
Does it become of you, my lord?
Did you harbour hatred against me
And wait to wreak revenge?
Alas, how I am to find redemption
From this abonimable sin?

வசனம் - சிவனையே நொந்து தேகங்களுருகிக் கவலையாய்ப்பின்னு மென்ன காரியஞ் சொல்வான் (27)

Prose : What more did he say after blaming the lord?

(மன்னன் எடுத்த முடிவு) **சம்பை**

89. [1]அந்நாளி லெனக்குப் பிள்ளை யளிக்கிலிது வருமென்று
[2]சொன்னால் சுதனைநா ளிந்நாள்வைப் பேனோ
பூடகங்க ளாயிந்த நாடகங்க ளாட்டியென்னைப்
பாடுபட விதித்தவிதி தேடியறி யேனே
கோணாத கீர்த்திக்கிடை [3]யூறுதரும் பிள்ளையென்று 5
காணாமல் நல்லறிவு தோணாமற் போச்சு
வழிக்குவழி யாய்விளைந்த வல்வினைக்கு மன்னவனும்
பழிக்குப்பழி கொடுக்கநெஞ்சில் திடப்படுத்திக் கொண்டான்
பார்த்திபனுந் தன்மகனைப் [4]பதிலுக்கந்தத் தேரடியில்
மாய்த்துவிடு வதுநல்ல கீர்த்தியென்று சொன்னான். 10

எனக்குக் குழந்தைச் செல்வத்தைக் கொடுத்த அன்றைக்கே இந்தநாளில் இது நிகழும் என்று என் கனவிலாவது கூறியிருந்தால் இதுநாள் வரை அவனை உயிரோடு வைத்திருக்க மாட்டேனே! என் தலை விதி வெளிவேஷமாகவே நாடகமாடிவிட்டது; என்னை இப்பழியில் மூழ்கச் செய்துவிட்டது. என்றும் இழிவு ஏற்படாத என் புகழுக்குத் தீங்கு ஏற்படுத்தும் மகன் இவன் என்பது என் அறிவுக்குத் தோன்றாமற் போய்விட்டது என்றெல்லாம் எண்ணி வருந்திய மன்னவன், இவ்வாறு நிகழ்ந்து விட்ட தீவினைக்குப் பழிக்குப்பழி வாங்கியே தீர வேண்டும் என்று முடிவெடுத்தான். கன்று இறந்த அந்தத் தேர்ச்சக்கரத்தின் கீழே கிடத்தித் தன்மகனைக் கொன்றுவிடுவதே புகழைத் தேடித்தரும் செயலாகும் என்ற முடிவுக்கு வந்தான்.

பூடகம் - பூட்டகம் - வெளிவேஷம். கோணுதல் - வளைதல்; நேர்மையிலிருந்து தவறுதல். இடையூறு - தடை. வல்வினை - தீவினை; வலிய ஊழ்; ஊழ்வினை. மாய்த்தல் - இறக்கச்செய்தல்.

சு.சொல் - 1. அன்னாளில் 2. சொன்னாய்ச் சுதனைனானின்னாள்வைப் 3. கூறுதரும் 4. பதிலுகந்ததேரடியில்.

The King's decision

89. If only you had warned me in dream
On the day you blessed me with progeny
Of the impending calamity,
I would not have allowed my son to live.
Fate in camouflage
Has fooled me
And pushed me into the wild abyss.
How is it that it never struck me
That my son would fetch me dishonour?
So thinking, the king decided
To expiate his sin
By demanding eye for eye
He wanted his son to be crushed
Under the same wheels of the chariot
Which killed the calf.
He strongly felt
That his reputation would enhance
By such a just act.

(சான்றோர் கூறும் ஆறுதல் மொழி) **ஏகதாளம்**

90 என்னவே பெரியவ ரினியவர் சொல்லுவர்
மன்ன னேயிது தன்மம தல்ல
[1]வாராப் பழிவரில் வாமதே வரடி
[2]யாரா தனைசெய்யில் தீரா வினைபோம்
யீதொரு பழியா யீன்ற சுதாவைச் 5
சமாதிசெய் திடிலென்ன சாதக மையா

நேசவி ராம னிராசர் வதைசெய்து
பூசையி னாலத்தி போக்கின னையா
பஞ்சவரய்வர் களுஞ்செய்த பாவமெல் லாஞ்சிவன்
தஞ்சமுண் டாக்கித் திரஞ்சிவ மானார் 10
ஆகையி னாலிந்தப் பாதகந் துலைந்திட
தியாகரைப் பூசிக்கி லேகும தென்றார்
தேறிய பெரியவர் கூறிய வசனத்தை
மீறிமன் னவனென்ன [3]மாற்றுரை சொல்வான்.

அரசவையிலிருந்த நல்லவர்களாகிய சான்றோர்கள் மகனைக் கொன்றுவிடுவது என்ற முடிவுக்கு வந்த மன்னவனைப் பார்த்து மன்னவனே! தாங்கள் எடுத்த முடிவு நியாயமானது அன்று. நீக்கமுடியாத பெரும்பழி நேர்ந்துவிட்டபோது சிவபெருமானின் திருவடிகளைப் பூசித்து வணங்கினால் ஊழ்வினையால் ஏற்பட்ட பழிகள் யாவும் விலகிப்போகும். அதிலும் எதிர்பாராம லேற்பட்ட இது ஒரு பெரும்பழியுமன்று. ஈன்ற மகனைக் கொல்லுவதால் என்ன பயன் ஏற்படப் போகிறது? இராமபிரான் பல அரசர்களை வதைத்துக் கொன்றான். சிவபூசையை மேற்கொண்டு கொன்ற பாவத்தைப் போக்கிக் கொண்டானல்லவா? பஞ்ச பாண்டவர்கள் செய்த கொலைப் பாவங்கள் எல்லாம் நீங்க வேண்டி சிவபெருமானைத் தஞ்சமடைந்து, பூசித்து முத்திபெற்றார்களல்லவா? எனவே தாங்களும் தியாகேசரைப் பூசித்துப் பாவம் நீங்க வழிதேடுவதே முறையாகும் என்றனர். ஆனால் மன்னன் அவர்கள் கூறியதை ஏற்காமல் மறுப்புக் கூறத் தொடங்கினான்.

தன்மம் – தருமம்; நியாயம். வாராப்பழி – வரக்கூடாத பெரும்பழி. வாமதேவர் – சிவபெருமான்; வாமம் – சிவனது ஐந்து முகங்களுள் ஒன்று. அவை – ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்பன. அடி– திருவடி, பாதம். ஆராதனை – பூசை, வணக்கம். சுதா – சுதன் · இராசகுமாரன். சாதகம் – பயன், காரியசித்தி. அத்தி – பாவம். திரம்– உறுதி.

சு.சொல் – 1. வாராய்ப்பழி 2. யார்தனைச்செய்யில் 3. மாறுரை சொல்வான்.

The consoling words of the elders

90. The elders in the King's assembly
Were not for killing the prince.
They addressed the King:
Revered Sir, we are afraid
That your decision is not sound.
Worship of Civaṉ
Would help cancel sins
Born of adverse fate.

Your son's act is not blameworthy
As it was not deliberate.
Do you think anything can be achieved
By killing your loving son?
Sri Rāmaṉ killed many kings
And sought expiation in Civan worship
The Pāṇṭavās were also absolved of guilt
By propiating Civaṉ.
You can also get redemption
By praying to the Lord.
But the king refused to comply
Making the following retort.

(மன்னவன் மறுப்பு) சம்பை

91. பொங்குமுட னேநமது வங்கிஷத்தி லொருமூன்று
சங்கமது புவியாண்ட துங்கமுடி மன்னன்
    வனசாரி போயிருக்கில் மனதேவ ரீஸ்வரியுந்
    தனுவேறு [1]கொண்டுபட்சி யெனவோடி வந்து
யீசனொரு வேடனென விறைவியொரு குருவியென 5
ராசனிட [2]மடியில்வந் தாசமுனக் கென்ன
    முரடனந்தக் குருவிதன்னை முடுக்கிவந்து கேழ்க்க
    யரசனுந் தரேனெனக் கிராதனென் சொல்வான்
அக்ககத்துக் குச்சரியாயுன் னாகந்தனை யுதவில்விடு
மிக்கவல்ல வன்கீர்த்தி தக்குமுனக் கென்றான் 10
    சொன்னபடி யேகொடுக்கச் சூலபாணி யனப்போ
    மன்னவனை மெச்சினான் தன்னுள மகிழ்ந்து
பற்குணனை யடைந்த [3]பன்றிக்காக யரனுடன்
பராக்கிரமுட னமர்செய்து நோக்கமதுண டானான்
    ஆகையால் தனையடைந்த வாத்துமத்தைக் காப்பதே 15
    யோகமதுண டாய்வினைக ளேகுமென லாகும்
இப்பழிக்குஞ் சந்ததியை யீந்துகொடுத் தால்கயிலைத்
தற்பரனுக் [3]கிதயமதி லற்புத மாகும்.

சான்றோர்களே! புகழ்மிக்க நமது சோழ வமிசத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன் நமது நாட்டையாண்ட வெற்றிமுடி மன்னன் ஒருவன் வனவேட்டைக்காகச் சென்றிருந்தான். அப்போது சிவபெருமானும் உமாதேவியும் முறையே வேடனாகவும் புறாவாகவும் வடிவமெடுத்து வேடனானவன் புறாவைத் துரத்தி வருவது போல அக்காட்டிற்குள் வந்தார்கள். வேடுவனால் துரத்தப்பட்ட அந்தப் புறாவானது அரசனுடைய மடியில் வந்து அமர்ந்து அபயம்! அபயம் என்றது. முரட்டுத்தன்மையுடையவனாகிய வேடுவன் அந்தப் பறவையைத் துரத்தி வந்து, அரசனைக் கேட்டான் மன்னன் அடைக்கலம் வந்த புறாவைக் கொடுக்க மறுத்து விட்டான். உடனே அந்த வேடுவன் அந்தப் பறவைக்குச் சரியாக உன்னுடைய உடல் தசையைக் கொடுத்தால் நான் விட்டு விடுகிறேன்; உனக்கும் நல்ல புகழ் உண்டாகி நிலைக்கும் என்றான். மன்னவனும் வேடன் விரும்பியவாறே தன் தசையைக் கொடுத்தான். வேடனாகிய சிவபெருமானும் மகிழ்ந்து மன்னவனைப் பாராட்டினான். இதேபோல,

அருச்சுனன் தவம் செய்து கொண்டிருந்த போது அவனிடம் அடைக்கலம் புகுந்த பன்றிக்காக, வேடனாக வந்த சிவபெருமானுடன் போர் செய்யத்துணிந்தான் இவற்றால் நாமறிவது என்ன? அடைக்கலம் என்று நம்மையடைந்த உயிர்களைக் காப்பாற்றுவதே நமது கடமை. அதுவே தீவினைகளைப் போக்கி நல்ல உயர்வைத் தேடித்தரும். அதேபோல நமக்கு ஏற்பட்ட இந்தப் பழிக்கும் மகனைப் பலிகொடுப்பதே இறைவனுக்கு மகிழ்ச்சியை யுண்டாக்கும் என்று கூறினான் மன்னவன்.

பொங்கம் - பொலிவு, அழகு. சங்கம் - பலநூற்றாண்டுகாலம் துங்கம் - வெற்றி, தூய்மை தனு - உடல், வடிவம். குருவி - இங்குப் புறாவைச் சுட்டியது, சிபிச் சக்கரவர்த்தியின வரலாறு ஆசம் - இருப்பிடம், புகலிடம். முடுக்குதல் - துரத்துதல். கிராதன் - சிவபெருமான், வேடன்: சிவபெருமானாகிய வேடுவன் அக்ககம் - அ+ககம், அந்தக்ககம்; ககம் - பறவை ஆகம் - உடல். தக்கும் - நிலைக்கும். சூலபாணி - சூலாயுதத்தைத் தாங்கிய சிவபெருமான பாணி - கை. பற்குணன் - அருச்சுனன்; பங்குனி உத்தரத்தில் பிறந்ததால் பெற்ற பெயர். பராகக்கிரம- பராக்கிரமம்- வீரம், வல்லமை ஆத்துமம் - உயிர் யோகம் - உயர்வு.

சு.சொல் - 1. கொண்டுபஷ்ஷி 2. மடியில்வாகாசமுனக் 3. பண்ணிக் 4. கிதையமதி

The King's retort

91. Elders, listen!
Way back in the past,
Many centuries ago,
A victorious Cōḻa King went for hunting.
Then Civaṉ disguised as a hunter
Came chasing Umā tēvi
In the guise of a dove.
The helpless dove sought refuge

In the lap of the Cōḻa king
And cried 'Protect, protect'.
The cruel hunter wanted the king
To return his dove.
The king refused to part with the bird
Already given refuge.
The hunter was willing to forget the dove
If the king gave enough flesh from his body
Measuring up to the weight of the bird.
The hunter added such an act
Would enhance the king's reputation.
The king did as he was bidden
Which won praise and acclaim from Lord Civaṉ.
Again,
When Arccuṉaṉ was doing penance
He gave asylum to a boar.
Civaṉ in the disguise of a hunter
Claimed the animal
Which resulted in a grim fight.
What is the lesson driven home?
That it is our bounden duty
To shield those who seek help and refuge
Similarly, to escape from calumny
The son has to be sacrificed
Which act will be commended by the lord.

(தேவி நிகழ்ந்ததைக் கூறுமாறு மன்னனிடம் வேண்டுதல்) திரிபுடை

92. என்று மன்னவன் தேவி யார்மனைக்
கேகும் போதுமுன் னோடித் தூதுவர்
மன்னன் வருவது சொல்ல வெழுந்தெதிர் - நண்ணித் தொழுதாள்
வசதி தனிலந்த வரசன் போயுற்று
மனைவி யேநவம் வினவி வாயென்று 5
வசைக ளாலொரு பிசகு [1]வந்ததுன் - மகன்தன் னாலே

கற்ப காலமுந் துலைக்கொ ணாதென
வற்ப காரியம் பிள்ளை தேடித்துச்
சொற்ப காரிய வசன முன்னுடன் - சொல்லு வேனோ

என்று காவலன் கூற மனைவியும் 10
எதிருத் தரமொன்று கூறி னேன்பிள்ளை
யின்றுதா னென்ன [2]செய்ததோ சொல்லு - மன்ன ரேறே

தேவ ரீர்தமக் கிந்த மனக்குறை
யாவ தேதுநம் பால னால்வந்த
பாவ மேதுசொல் வீரென் மேலொரு - கோபம் வேண்டாம் 15

உமக்கென் னாணையெந் தனைக்கொல்வீ ரொன்று
மொளித்தி டாமல்சொல் [3]லென்ன வரசனும்
நமக்குச் சமையமி தாமென்றே சொல்லத் - துவக்கி னானே.

சான்றோர் சொல்லுக்குப் பதில் கூறிய மன்னவன், அரசமாதேவியின் அரண்மனையை நோக்கி நடந்தான். அரண்மனைக்குப் புறப்பட்டதையறிந்த தூதுவர்கள், முன்னால் ஓடிச்சென்று தேவிக்குக் கூறினார்கள். அரசமாதேவி மன்னவன் எதிரிலே வந்து வணங்கி வரவேற்றாள். அரண்மனையுட் சென்று அமர்ந்த அரசன் தேவியைப் பார்த்து தேவி! உன்னுடைய மகனால் ஒரு புதிய பழி நேர்ந்துள்ளது. அவன் செய்துள்ள அந்த இழிவான செயலால் ஏற்பட்ட பெரும் பாவத்தை உலகம் அழியும் வரை நீக்கவே முடியாது. அதை உன்னிடம் எப்படிச் சொல்லுவேன் என்று கூறித் தயங்கினான்.

மன்னர்களின் தலைவரே! என்மீது கோபித்துக் கொள்ள வேண்டாம். என்மீது ஆணையாகச் சொல்லுகிறேன்; தவறு இருந்தால் என்னைக் கொன்று விடுங்கள். தங்களுக்குத் துன்பம் தரும்படியாக நம் மகன் என்ன தான் செய்து விட்டான்? இன்று அவன் செய்துவிட்ட பாவச்செயல்தான் என்ன? ஒன்றையும் மறைக்காமல் எனக்குச் சொல்லுங்கள் என்று கேட்டுக்கொண்டாள் தேவி. இதுவே தக்க சமயம் என்று கருதிய மன்னன் சொல்லத் தொடங்கினான்.

நண்ணுதல் - அடைதல். வசதி - இருப்பிடம், இடச்சுகம். நவம் - புதுமை. வினவுதல்- கேட்டாராய்தல். பிசகு - தவறு. கற்பகாலம் - உலகமுடிவுகாலம். அற்பம் - இழிவு. சொற்பம் - சிறியது, இழிவானது. ஏறு - ஆண்சிங்கம், உயர்வு.

சு.சொல் - 1. வந்துதுன் 2. செய்துதோ 3. லென்ற.

The Queen requests the king to recount the events

92. After addressing the elders,
The king went seeking the Queen.

The messengers ran in advance
And informed the queen
Of the King's impending arrival.
The Queen appeared before the king
And paid her obeisance.
After seating himself
The King spoke to the Queen:
Darling, your son has cast a slur
On our reputation.
His ignoble act has brought blame
On us and lowered us in the public eye.
The sin resulting from his act
Cannot be wiped easily.
I wonder how to break the news
Said the king falteringly.
Great King! Avoid anger,
If anything untoward has happened
You are free to kill me!
What obnoxious act is our son
Guilty of?
What sin has he committed
To earn your wrath?
Tell me the truth
Without concealing anything.
When the queen spoke so
The king utilised the opportunity
To disclose the shameful act.

(மகனால் வந்த இழிவை மன்னன் கூறுதல்) **சம்பை**

93. குணத்துக் கமுதே யெந்தன் குடிக்கு விளக்கே நமது
மனத்துக் கிசைந்தது செய்யும் கனத்த புத்தி மானே
சோதியார் சோபனத்தை வீதிவிடங் கரைவிடுத்து
நீதியாய் நடத்துமென்று காதலா யமைத்தேன்

[1]பத்துநாட் திருநாளும் பரமர்தனக் கானபின்பு 5
மற்றாநாள் திருவனந்தல் வழக்கமிடப் போனான்
திரளாகக் கொண்டிவனும் தேரேறிப் போகிலொரு
நிரையும் நின்கண்ணுமாய்த் தெருவோடி வந்து
[2]ஆரவா ரத்தில்மிரண் டாவேறு வழிபோய்க்கண்
தேரடியில் திகிலியிரு கூறாகிப் போச்சாம் 10
இந்தவச னந்தூத ரியம்பிடா முன்கபிலை
வந்துமணி தனையசைத்துச் சிந்தித்துக் கண்ணீரை
சந்ததியுண் டாச்சுதெனச் சந்தோஷித் திருந்தமே
சந்ததியி னாற்பழிகள் வந்துபுகழ் போச்சு
பஞ்சிலழ லொளித்திருந்து பற்றினாற் போல்நமக்கு 15
நெஞ்சிலழ லாச்சுதிதுக் கென்செய்வோ மென்றான்.

அமுதம் போன்ற குணத்தையுடையவளே! என் குடி ஒளிவிட்டுப் பிரகாசிக்க விளக்காய் நிற்பவளே! நான் விரும்பியதை நிறைவேற்றும் அறிவுடைய்வளே' தியாகேசப் பெருமானின் மங்கல வாழ்த்துத் திருவிழாவாகிய சோபனத் திருவிழாவை முறையாக நடத்தி முடிக்குமாறு அன்போடு வீதிவிடங்கனுக்குக் கட்டளையிட்டேன். முதல் பத்துநாள் திருவிழாவைச் சிறப்பாகவே இறையன்போடு செய்து முடித்தான். இறுதிநாள் திருவனந்தல் திருவிழாவாகிய தாலாட்டுத் திருவிழாவை நடத்தச் சென்றான்; ஆரவாரத்தோடு கூடிய மக்கட் கூட்டம் திரண்டுவரத் தேரில் சென்றிருக்கிறான் அப்போது ஒரு பசுவும் அதன் கன்றும் தெருவில் ஓடிவந்திருக்கின்றன. மக்கள் ஆரவாரத்தால் மிரண்டு பசுவானது ஒருபுறம் ஓடிவிட்டிருக்கிறது. கன்று மட்டும் பயந்து ஓடித் தேரடியில் சிக்கி இரு கூறுகளாகி நசுங்கிவிட்டிருக்கிறது. இந்தச் செய்தியைத் தூதுவர் வந்து சொல்லுவதற்கு முன்பாகவே செந்நிறத்தோடு கூடிய தாய்ப்பசு வந்து, அரசவையின்முன் இருந்த ஆராய்ச்சிமணியை அசைத்துக் கண்ணீர் விட்டு நின்றது.

நமக்குக் குழந்தைச் செல்வம் கிடைத்துவிட்டது என்று மிகுந்த மகிழ்ச்சியோடு இருந்தோம். அதே குழந்தைச் செல்வத்தால் நமக்குப் பெரும் பழியும் பாவமும் உண்டாகிவிட்டது. இருந்த பெருமையெல்லாம் ஒழிந்து போயிற்று. பஞ்சில் நெருப்பானது ஒளித்திருந்து திடீரெனப் பற்றிக் கொண்டது போல நம்முடைய நெஞ்சு பற்றி எரிகிறது இந்தக் கொடுமைக்கு என்ன செய்வது என்று கூறி வருந்தினான் மன்னன்.

கனத்த – உயர்ந்த. சோதியார் – ஒளியுடையவர், தியாகேசர் சோபனம் – வாழ்த்து காதலாய் – அன்போடு திருவனந்தல் – நித்திரை, தாலாட்டு. நிரை – பசு நின்கண்ணும் – தன்கன்றும் என்றிருத்தல் வேண்டும். ஆ – பசு. கண் – கன்று. திகிலி – அஞ்சி, பயந்து சிக்கி சிந்தித்து – சிந்திற்று – சிந்தியது; கண்ணீர் விட்டது. அழல் – நெருப்பு.

சு.சொல் – 1. பத்துநாட்த்திரு 2. ஆரப்பாரத்தில்.

The King reveals the sinful act

93. Woman with a nectar - like disposition!
The light of my lineage!
The one who can read my thoughts
And execute them!
I issued orders to our son Vitiviṭaṅkaṉ
To conduct the lord's festival
Which he did gloriously
During the first ten days.
On the last day he went to celebrate
The ritual where the lord is lulled to sleep.
Surrounded by a surging crowd,
He went riding a chariot
When a cow and a calf ran in his path.
Panic - stricken by the wild bedlam of the crowd
The cow fled in some remote direction
While the poor calf was caught underneath the chariot
And crushed beyond recognition.
Even before the messengers reported to me,
The cow came and rang the bell of justice,
Shedding tears of pain and agony.
Happy were we at the birth of a boy
But he has now brought us blame and disgrace.
Our reputation has been sullied
Beyond redemption.
Like cotton catching fire from hidden blaze
Our hearts are scorched with sorrow.
I am at a loss for words
Moaned the miserable king.

(பட்டமாதேவியின் வருத்தம்) திபதை

94. கணவனிப் படிசொல்லக் காதினிற் கேட்டக்
கணமவள் நெஞ்சுகள கலிக்கம தென்ன

வயிறு பகீரென்று மண்டி யெரிந்து
தியரிடி யாய்மார்பு திடுக்கிட் டயர்ந்து
தனுவெல்லாம் [1]வேர்த்துநாத் தண்ணீர் வராமல் 5
நினைவெலாங் கலங்கியே நெடுமூச் செறிந்து
மைந்தனைப் பெறுமென்றெவ் வண்ணமா யலைந்து
நொந்தனன் வுடலெலாம் நொந்து பரந்து
பிள்ளையா லிப்பழி பிறந்திட லாமோ
பிள்ளையி னாலிந்தப் பேரிடி வருமோ 10
கவலையைத் தீர்த்திடுங் கண்மணி நமக்குக்
கவலையுண் டாக்கிய காரண மென்ன
தவம்பண்ணி வந்த சந்ததி நமக்கின்று
அவம்பண்ண நினைவுகொண் டானன தென்ன
கீர்த்தியில் லாவப கீர்த்தியைத் தேடி 15
வார்த்தையுண் டாகவே மதிவந்த தென்ன
வீதி விடங்கரே மிக்கதெள் ளமுதே
ஏதுசெய் தீர்புத்தி யில்லையோ வுமக்கு
கண்ணெதிர் வருகையில் கண்தெரி யாதோ
கண்ணகப் படவெங்கைக் கண்ணா யிருந்தீர் 20
படிப்புஞ் சமத்தும் பழுதாக்கி விட்டீர்ப்
பழிக்குளில் லாப்பழிப் பாதக னானீர்
மகனெனப் பெற்று வளர்த்ததுக் கிந்த
வகைசெய்தீ ரென்றைக்கும் மாறா திருக்க
அரகர தியாகராயரே யாரூரில் வாழ்வே 25
யரவில்ல மேயாட்சி யானசங் கரனே
ஐமுகத் தினிலமு தாகிய வடிவே
செய்பவத்தீ வினையெலாந் தகித்திடுஞ் சுகியே
கங்காளங் கட்செவி கத்திகை யுரனே
கெங்கா தராபசுங் கெவுரிமோ கனனே 30
அண்டரண் டங்கள் அகிலங்கள் யாவும்
உண்டுசெய் திடவுஞ்சற் பூதன மெல்லாம்
பரிக்கவுங் கரிக்கவும் பார்த்திப னான
வுருத்திர னேவெளி யுருவான பரனே

தொழிலுக் கொருவிழி தோற்றமுண் டானிபரி 35

[2]செழுமைக்கண் ணெங்கள்மேல் தியாகரே பாரீர்

நீர்தந்த சேயின்மேல் நிஷ்டூர மாமோ

நீர்தந்த சேயின்மேல் நிபம்வர லாமோ

பிள்ளைவல் லவனியான் பெரும்புகழ்ச் செல்வம்

உள்ளதுந் தியாகரே [3]யும்மதே யலவோ 40

நமக்கென்ன சிந்தனை நன்மைதுன் மைகளும்

உமக்கென்று நெஞ்சினி லுகந்திருந் தோமே

தெய்வமே வஞ்சனை செயிலென்ன செய்யத்

தெய்வமே சீறிலெத் தேசத்திற் கேக

மைந்தனே. நீயென் [4]வயிற்றிலேன் பிறக்கச் 45

சிந்தை மகிழ்ந்தனித் தியரிடி யாச்சு

மாதாசெய் பாவங்கள் மக்களுக் கென்பார்

மாதா வலோநான் மகாபாவி கண்டீர்

இப்பிறப்பி லொன்று மில்லைமுன் பிறப்பில்

எப்பழி செய்தனோ யென்பாவி நானோ 50

கண்டனைப் பழித்தொரு காளைமேல் மனது

கொண்டுதிரிந் தேனோ [5]கொலைகள்செய் தேனோ

பதிதனக் கிசைந்த படிநட வாமல்

சதிபண்ணித் தாயகந் தானிருந் தேனோ

பிள்ளைமேல் பிள்ளைப் பீடையே னென்று 55

தள்ளியே நானும் தான்பொசித் தேனோ

மக்கள்செய் குற்றம் மனத்தில்வை யாமல்

வெக்குவே றாக வெளியில்விட் டேனோ

[6]ஏற்கவந் தவர்களை யேசாது மேசித்

தாக்குடன் வீதியிற் தள்ளிவிட் டேனோ 60

பரதேசி கள்வரப் பார்த்த [7]கன்றே

தெருவாசல் பத்திரஞ் செய்துகொண் டேனோ

என்ன பாவமோ யின்னதென் றறியேன்

என்று [8]புகன்றிதற் கென்னதான் செய்வேன்

என்னவே மன்ன னிராசேந்திர சோழன் 65

பன்னியாற் கென்ன பகரலுற் றானே.

மகனால் நமக்குப் பெரும்பழி உண்டாகிவிட்டது என்று கூறிய மன்னனின் பேச்சைக்கேட்ட பட்டமாதேவியின் மனம் பதறியது; கண்கள் கலங்கின; வயிறு பகீரென்று எரிந்து களைப்பு உண்டாயிற்று; மார்பு திடுக்கிட்டது; உடல் முழுமையும் வியர்த்துக் கொட்டியது; நாக்கு வறண்டு போயிற்று; தேவிதன் நினைவிழந்து பெருமூச்சு விடத் தொடங்கினாள்.

ஐயோ! மகனைப் பெற்றெடுக்கப் போகிறோம் என்று எப்படியெல்லாம் துடித்தேன்; பலவகையான வலியையெல்லாம் தாங்கிக்கொண்டேன். உடல் வருந்திப் பெற்றெடுத்த பிள்ளையால் இன்று இப்படி ஒரு பழி நேர்ந்துவிட்டதே! பேரிடியாகிவிட்டதே! கவலையெல்லாம் தீர்க்க வேண்டிய மகன் பெருந்துன்பத்தை உண்டாக்கிவிட்டதற்குக் காரணம் என்ன? தவமிருந்து பெற்ற பிள்ளை வீண்பழியை ஏற்படுத்தியது எதனால்? புகழைக் கெடுத்துப் பெரும்பழியைத் தேடித்தருமளவில் இவன் அறிவுகெட்டுப் போனதற்குக் காரணம் என்ன?

மகனே வீதிவிடங்கா! அமுதமே! அறிவுகெட்டு என்ன காரியம் செய்துவிட்டாயடா? கண்ணெதிரில் வந்த கன்று உன் கண்ணுக்குத் தெரியாமற் போயிற்றா? பசுங்கன்றானது தேரின் கீழ் அகப்பட்டுச் சாகக் கண் குருடாகிவிட்டதா? நீ கற்ற கல்வியையும் உன் திறமையையும் வீணாக்கிக் கொண்டுவிட்டாயா! பழியிலடங்காத பெருந்துரோகியாகி விட்டாயே! என்றும் அழியாத பழியை உண்டாக்கிவிட்டாய்

அரகரா! திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகேசரே! புற்றிடங்கொண்ட பெருமானே! ஐந்து முகங்களால் இன்பமளிக்கும் வடிவினனே! இப்பிறவியில் செய்யும் பாவச்செயல்களையெல்லாம் அழித்திடும் செல்வனே! எலும்பையும் பாம்பையும் மாலையாக அணிந்த பெருமானே! கங்கையைச் சடையில் அணிந்தவனே! பார்வதி மணாளா! தேவருலகத்தையும் இந்த நிலவுலகத்தையும் தோற்றுவிப்பவனே! உயர்ந்த அரச போகங்களாகிய செல்வங்களையெல்லாம் காக்கவும் அழிக்கவும் வல்லவனே! உருத்திர மூர்த்தியே! பரந்த வெளியாக உருவானவனே! மூவகைத் தொழிலுக்கும் முக்கண் படைத்தவா! காக்கும் பார்வையை எங்கள் மீது செலுத்தக்கூடாதா? எங்கள் மகன் தாங்கள் அளித்த செல்வனல்லவா? அவன்மீது இக்கொடும்பழி எதற்கு?

தியாகேசரே! பிள்ளை மட்டுமன்று;; நாங்கள் பெற்ற பெரும்புகழும் செல்வமும் பிறயாவும் உமக்கே உரியவையல்லவா? நமக்கென்ன கவலை? நல்லவையுங் கெட்டவையும், நன்மையும் தீமையும் தங்களுக்கே உரியவை என்றல்லவா எண்ணியிருந்தோம்! நாங்கள் நம்பிய தெய்வமே வஞ்சனை செய்து, எங்கள் மீது கோபங்கொண்டால் நாங்கள் வேறு எங்கே செல்லுவோம்?

மகனே! நீ என் வயிற்றிற் பிறந்ததால் எங்கள் மகிழ்ச்சி தொலைந்தது; கலக்கம் வந்து சேர்ந்தது. தாய் செய்தது தனையரைக் காக்கும் என்பார்கள். ஆனால் நான் தாய் அல்ல; பெரும்பாவியாகிவிட்டேன். இப்பிறப்பில் பாவம் எதுவும் செய்யவில்லை. முன்பிறவியில் என்ன பாவஞ் செய்தேனோ அறியேன்! கொண்ட கணவனைப் பழித்து வேறொரு இளைஞனுடன் சுற்றித்திரிந்தேனோ? வேறு கொலைகள் செய்தேனோ? கணவன் விரும்பியவாறு நடந்து கொள்ளாமல் துரோகம் செய்து தாய் வீட்டிலிருந்து விட்டேனோ?

பெற்ற பிள்ளைகளைத் தள்ளிவிட்டு நான் மட்டும் தனித்து உணவு உண்டேனோ? பிள்ளைகள் செய்த தவறுகளை உள்ளத்தோடு வைத்துக் கொள்ளாமல், பிறரிடத்தில் பெரிதுபடுத்திக் கூறினேனோ? பிச்சை என்று வந்தவர்களை வாயில் வந்தபடி திட்டி அடித்துத் துரத்தி விட்டேனோ? பரதேசிகள் வருவதைப் பார்த்துவிட்டு உள்ளே சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டேனோ? என்ன பாவம் செய்தேன்? இன்று இப்பாவம் வந்து சேர்ந்தது! ஒன்றுமே புரியவில்லையே என்று பலவாறு புலம்பிய தேவியைப் பார்த்து மன்னவன் கூறுகிறான்.

அக்கணம் - அப்பொழுது உகளல் - தத்தளித்தல். கலிக்கம் - கண்ணிலிடும் மருந்து; கண்ணீர். தியரிடி - சோர்வு தனு - உடல். பேரிடி - பெருந்துன்பம். அவம் - வீண், பயனற்றது. அபகீர்த்தி - இகழ்ச்சி. மதி - அறிவு. கண் - கன்று. வெங்கை - கொடுமை பாதகன் - பாவி, துரோகி மாறாது - அழியாமல். அரவில்லம் - புற்றிடம். அரவு - பாமபு இல்லம் - வீடு. பவம்-உலகம், பிறப்பு தகித்தல் - எரித்தல். சுகி - செல்வம் பெற்றவன்; நோயிலான். கங்காளம் - எலும்பு கட்செவி - பாம்பு; கண்ணையே காதாக உடையது கத்திகை - மாலை உரம் - மார்பு கங்காதரன் - கங்கையைத் தரித்தவன். அண்டரண்டம் - தேவருலகம் அகிலம் - நிலவுலகம். பூதனம் - உலகச்செல்வம்; அரசசெல்வங்கள் பரித்தல் - காத்தல், தாங்குதல். கரித்தல் - எரித்தல் வெளி - பரந்த வெற்றிடமாகிய ஆகாயம். தொழில் - முத்தொழில். அவை. படைத்தல், காத்தல், அழித்தல் நிஷ்டூரம் - கொடுமை. நிபம் - பழி. சீறுதல் - கோபித்தல். மாதா - தாய். கண்டன் - கணவன், தலைவன். பதி - கணவன சதி - துரோகம். பீடை - தரித்திரம். பொசித்தல் - புசித்தல், உண்ணுதல். வெக்குவேறாக - தனித்தனியாக. ஏற்றல் - பிச்சைபெறுதல். தாக்கு - அடி. பத்திரம் செய்தல் - தாளிட்டுக்கொள்ளுதல் பன்னுதல் - கூறுதல்.

சு.சொல் - 1 வேற்றுநாத் 2. செழிமைக்கண்ணெங்கள்மேல்த் 3. உம்முதே. 4. வயத்தி 5 குலைகள் 6 ஏர்க்க 7. கண்டே 8. புகன்றிதுக்.

The Queen's sorrow

94. When the Queen heard the disgrace
That had become their lot
Thanks to their loving son,
She was deeply disturbed,
Felt sick in the pit of her stomach,
Palpitation and fatigue followed
While profuse sweat soaked the body.
She sighed most painfully
And was almost faint.
Alas, how I longed for a son
And put up with great physical pain
But all in vain since great blame has befallen us

Like a shattering thunder bolt.
Why did my son,
Instead of wiping sorrow
Become the source of grief?
How did he become so indiscreet
As to invite calumny and blame?
Darling son, Vitiviṭaṅkaṉ!
Nectar of my heart!
How did you miss the calf
That was before your eye?
Were you so stone blind
As to run the wheels on the animal?
Indeed your knowledge and talents
Have suffered a serious setback.
You have become a traitor
Bringing slur on the family.
Arakara! Tiyākēcar of Tiruvārūr!
The dweller in the snake pit!
The five - faced one bringing joy!
The destroyer of earthly sins!
The wearer of snakes and bones!
The one keeping Ganges on His matted locks!
Spouse of Pārvati!
The creator of heaven and earth!
One who can make and destroy wealth!
Ruttiraṉ! Gifted with three eyes for three deeds!
Why don't you cast your glance on us?
Is not our son your precious gift,
Then why make him shoulder blame?
Tiyākēcar, not only our son,
But all our possessions are yours.
We laboured under the illusion
That since every thing belongs to you,

We can be blissfully care - free.
If the trusted God fails us
Whither is our refuge?
Son, our happiness at your birth
Is fearfully blasted.
A mother's deeds are believed
To save the son from mishap.
But I have ceased to be a mother
And become a despicable sinner.
Though not guilty of lapses in this birth,
I might have sinned in earlier ones.
Did I remain unfaithful
To my wedded husband
By clanderstinely seeking the company of youth?
Did I commit murders?
Did I remain with my mother
Deserting my husband?
Did I gorge food without feeding children?
Did I indiscreetly tell the world the shortcomings of my issues?
Did I chase beggars who sought alms?
Or lock myself in
When guests from far - away knocked at the door?
What was my guilt?
I am really in a fix,
Lamented the sad Queen.
Then spoke the king as follows:-

(மகனைக் கொன்று பழிதீர்ப்போமெனல்) சம்பை

95. உண்டுபசி தொலைவதன்றி யோதனத்தை முடிமீது
[1]கொண்டுசுழன் றாலக்கடு மண்டுபசி போமோ.
எண்ணியெண்ணி யழுதாலும் எப்பிறப்பு பிறந்தாலும்
பண்ணபழி பாதகங்கள் கொண்ணகுலை போமோ

வீதிவிடங் கரைப்பதிலுக் கேதேரில் பசுக்கண்பழி 5
பாதகமும் போமோக்ஷ சாதகமுண் டாகும்
இப்போதும் பிள்ளைத்தேரில் தகந்துகொடுத் தால்கீர்த்தி
தப்பாதிவ் வுலகில்நமக் கொப்பாரு முண்டோ
இருவர்களு மனதொவ்வி யிசைந்துகொடுத் தாலந்தப்
பரமசிவ னேநமக்குக் கருணைமிகப் புரிவான் 10
கள்ளங்கப டில்லாமல் காதலாய் வளர்த்தெடுத்த
பிள்ளையென்று பாராம லுள்ளபடி சொல்வாய்
உன்மனது மென்மனது மொருமித்தால் பழிதீரும்
என்னசொல்கிறாய் சொல்லென்று மன்னவனுங் கூற.

உணவை உண்டால்தான் பசி தீரும். அவ்வாறன்றி அந்த உணவைத் தலையின் மீது வைத்துச் சுமந்து கொண்டு திரிந்து வந்தால் நமக்கு உண்டாகியிருக்கிற கொடுமையான, மிகுந்த பசி தீர்ந்துவிடுமா? தீராதல்லவா? அதுபோல பழிக்கு உரியதாகிய கொலை முதலான பாவச்செயல்கள் பலவற்றையும் செய்துவிட்டு அவற்றையே நினைத்து நினைத்து அழுதாலும் அந்தப் பாவங்கள் நம்மைவிட்டுப் போகாது. பிறவிகள் பல எடுத்தாலும் அவை தொடர்ந்தேவரும் என்பார்கள் வீதிவிடங்கனை அந்தத் தேர்க்காலிலிட்டுக் கொன்றால்தான் செய்த பாவம் ஒழியும்; மோட்சப்பிறப்பும் கிடைக்கும் எனவே இப்போதே அவனைத் தேர்க்காலிலிட்டு நசுங்கச் செய்வோம். இச்செயலுக்கு நாம் இருவருமே சம்மதிக்க வேண்டும் அப்படிச் செய்துவிட்டால் நமக்குப் புகழ் உண்டாகும்; இறையருளும் கிடைக்கும்.

சூதுவாது தெரியாமல் மிகுந்த அன்போடு வளர்த்தெடுத்த பிள்ளையாயிற்றே யென்று யோசியாமல் உன் மனத்திலுள்ளதைச் சொல். நம் இருவர் மனமும் விரும்பிச் செய்தால் தான் பழிதீரும். என்ன சொல்லுகிறாய் என்று மன்னவன் பட்டமாதேவியைக் கேட்டான்.

ஓதனம் - உணவு, சோறு முடி - தலை கடும்பசி - அகோரமான, கொடுமையானபசி மண்டுபசி - மிகுந்த, நிறைந்த பசி. கொண்ணகுலை - கொன்ற கொலைச்செயல் பசுக்கண் - பசுவின் கன்று சாதகம் - பிறப்பு தகத்தல் - தகர்த்தல் - நசுங்கச்செய்தல். ஒவ்வுதல் - பொருந்துதல்.

சு.சொல் - 1. கொண்டு சுழண்டாலக்.

Agreeing to kill the son

95. Food will appease hunger
Only if it is eaten,
If it is carried on the head
If shall become a burden.

Brooding over the killing
Or shedding profuse tears
Would not absolve us of sin.
It is likely to haunt with a vengeance
In succeeding births.
Crushing Vitiviṭaṅkaṉ under the chariot wheels
Is the only way to redemption.
Let us execute it forthwith
Which shall enhance our standing and reputation.
Forgetting that he is the apple of our eye,
Speak out what you feel about it.
Unless we act in unison,
The great sin cannot be eradicated,
Said the King to the sorrowing queen.

(பட்டமாதேவியின் வருத்தம்) ஏகதாளம்

96 கூறிய மொழிக்கவள் கூறு கொண்டதுய
ரேறிச் சிவசிவவென் றேங்கினள் மிகவே
பரமசிவா யென்ன பழிவிளைத் தீர் . . .
அரகர சிவனேயென்று கதறலுற் றாளே
அரகர வெனவிரு கண்களி லும்புனல் 5
சரசர வெனவர வுருகுவள் தானே
மனகரிப் பானது மாறிமன துருகித்
தனகிரி மேல்மழைத் தாரைவிட் டனளே
வையக மாளவும் வாழவும் முண்ணவுஞ்
செய்கிலை யொத்துஞ் சிறுவனே யென்பாள் 10
மாணிக்க மேயும்மை மாய்த்துவிட் டெம்முயிர்
காணிக் கிருப்பதென்ன காரண மென்பாள்
புத்திர னேயும்மைப் போக்கிப்பின் னென்னுயிர்
வைத்திருந் தினியென்ன பெறுமெனக் கென்றாள்
முத்தே நவமணியே ரத்தின மேயுன் 15
சித்தம் வரயில்லை தேவரீ ரென்பாள்

மைந்தனைக் கொல்பசு [1]மாடெம னாகவே
வந்ததென் வயிற்றெரி யெந்தட வாறும்..

தன் விருப்பத்தைக் கூறவேண்டுமென்று அரசன் கேட்டவுடன் தேவி சிவசிவா என்று கூறிப் பெருந்துன்பமடைந்தாள். சிவபெருமானே! இந்தப் பெரும்பழியை உண்டாக்கிவிட்டீர்களே என்று கதறிக் கண்களில் கண்ணீர் விட்டுத் தனக்குத்தானே மனமுருகி வேதனையடைந்தாள். உள்ளத்து எரிச்சல் மாறியவளாய் உள்ளமுருகி அழுத கண்ணீர் மழைபோல அவள் மார்பை நனைத்தது. மகனே! இந்த நிலவுலகத்தை ஆட்சி செய்யவுமில்லை; வாழ்க்கையை அனுபவிக்கவுமில்லை; நல்ல உணவை உண்டு மகிழவுமில்லை; இந்த வயதில் உன்னைப் பலிகொடுத்துவிட்டு இந்த உலகத்தில் இருந்து என்ன பயன்? உன்னை அனுப்பிவிட்டு, என் உயிர் இருந்து என்ன சுகத்தைக் காணபோகிறது? மகனே! முத்தையொத்தவனே! நவரத்தினங்களுக்குச் சமமானவனே! இரத்தினம் போன்றவனே! உன் மீதுள்ள பாசத்தால் மனம் வரவில்லையே! நான் என்ன செய்வேன்! என் மைந்தனைக் கொல்லும் எமனாக இந்தப்பசு வந்து சேர்ந்ததே! என் வயிற்றெரிச்சல் நீங்குவதற்கு வழி உண்டா? என்று பலவாறு முறையிட்டாள் தேவி.

கூறுகொள்ளுதல் - அமர்த்துதல், நிலைகொள்ளுதல். கதறுதல் - கூவியழுதல். புனல்- நீர் (கண்ணீர்), உருகுதல் - இளகுதல், இரங்குதல். கரிப்பு - உறைத்தல், எரிச்சல் தனகிரி - தனமாகிய மலை. தனம் - நகில். மழைத்தாரை - நீர் வடிதல். ஆளல் - ஆட்சிபுரிதல். காணி - நிலம். ஆறுதல் - ஆறுதல் அடைதல்

சு.சொல் - 1. மாடெமநாகவே.

The sorrow the Queen

96. When the King sought the Queen's views
She said 'Civa Civa'
Overwhelmed with sorrow.
Almighty lord, why did you make my son
The victim of great blame
Exclaimed the mother
With tears welling up.
While thus she appealed to God,
The flowing tear drops fell on her chest.
Dear son, you never ruled the country
Nor enjoyed life.
Even choice food was rarely eaten.
What is the use of my living
After losing you?

Do you think I shall relish things
After your departure?
My son as pure as pearl
And the nine precious gems!
My affection for you is too deep
To think of any drastic action.
Cursed be the cow
That has come as the lord of death!
Can I hope to be relieved of sorrow?
So wailed the sorrowing mother.

வசனம் – இப்படிப் புலம்பிப் பார்த்திபற்குக் கற்புடையாளென்ன ஒப்பரை சொல்வாள். (28)

Prose : After wailing thus, what more did the chaste woman say?

(தேவி என் உயிரைத் தருகிறேன் எனல்) சம்பை

97. கண்மணியை மாய்த்துலகிற் கண்முன்னா ளிருப்பதில்லைத்
[1]தண்மொழியி னாளெந்தனைச் சரிசொல்லு மென்றாளே
சந்ததியைக் கொடுத்திடவென் சிந்தைசற்று மொவ்வாது
எந்தனையப் பழிக்குப்பழி தந்திடுமென் றாளே
திருவாக்குக் கெதிர்வாக்குச் செப்பறியே னின்று
வருவாக்கின் படியெனக்கு மன்னியுமென் றாளே.

கண்ணின் மணி போன்றவனாகிய மகனைப் பலியாக்கிவிட்டு இந்த உலகில் உயிர்வாழ்வது முடியாத காரியம். தாயாகிய என் உயிரை அவன் உயிருக்குச் சமானமாக எடுத்துக்கொள்ளுங்கள். என்னுடைய வமிசத்தைக் காக்கவந்த மகனைப் பலிகொடுக்க என் மனம் சிறிதும் சம்மதிக்கவில்லை. எனவே பழிக்குப்பழி என்னுயிரை எடுத்துக்கொள்ளச் செய்யுங்கள். இன்றுவரை தங்கள் பேச்சை எதிர்த்து ஒரு வார்த்தையும் பேசியறியேன். இன்று இப்படிப் பேச நேர்ந்து விட்டதற்காக என்னை மன்னித்து விடுங்கள என்று கூறினாள் தேவி.

கண்மணி – கண்ணின் கருமணி. இங்கு மகனுக்கு உவமையாயிற்று. தண் – குளிர்ச்சி. சந்ததி – பிறப்பு. ஒவ்வுதல் – விரும்புதல்.

சு.சொல் – 1. தன்மொழியினா.

The Queen willing to give up her life

97. After losing my son
As precious as the pupil of the eye,

I cannot hope to live.
I wish you take my life
Instead of his,
As the very thought of sacrificing the son,
Who has come to save the noble lienage
Is totally inconceivable and revolting.
If justice demands eye for eye
You are free to take my life.
Sir, never have I so far contradicted you,
So let me crave pardon
For trespassing my limits.

வசனம் - பாரி யிப்படிச் சொலப் பார்த்திப னிங்கே வாரும் பெண்ணே யென்று வார்த்தை யென் சொல்வான். (29)

Prose : On hearing her words, how did the king react?

(மன்னன் தேவிக்குப் புத்திமதி கூறுதல்) **திரிபுடை**

98. மதலைதனைக் கொடுத்திடவுன் மனதுவரா தல்லோ
சொல்லக் கேளுன் வயிற்றினில்
மதலை [1]யிருக்கினந் நாளும் நீயுண்ட - பதமதருந்தும்

விட்டு வெளிப்பட வேவே றாச்சுபின்
வேண்டி நீயுண்ட சாரம் புகுதில்லை 5
யிட்டு வளர்த்திட வேணுங் காண்துரை - பட்டமாதே

பருகு மன்னமு மருகு மளவதும்
நமத லாலரு கினபின் னோபுவிக்
கொருவதா யப்புறம் போகுதே பின்னை - யேது நம்முடன்

பிண்டத் தினில்வந்து பிறந்த மனுக்களைக் 10
கண்டன் பிடித்துத்தன் னூருக்கே யவன்
கொண்டு போறதுந் [2]திரேக மழிவதுங் - கண்டிலாயோ

வாழ்வி லேமன [3]மகிழ்ச்சி யாகினை
மகனைச் [4]சாக்கிட்டிப் போது வந்திடும்
தாழ்வி லேமனந் தளர்ச்சி யாயினை - யேழைமனையே 15

புல்லு மரத்தினி லேறி னாலந்தப்
புல்லு மீதினி லிறங்க வேணும
தல்ல வென்றுபின் கிளையுண் டோவரக் - கல்விமானே

மன்னவனின் பட்டத்தரசியே! நீ உன் குழந்தையை இழக்க மனந்துணியவில்லை. ஒன்று சொல்லுகிறேன் கேள்! குழந்தை உன் வயிற்றில் கருவாய் இருக்கும் நாள் வரையில் தான் அது உன்னைச் சேர்ந்தது; உன் உணவை அதுவும் சேர்ந்து உண்ணும். உன் வயிற்றை விட்டு வெளியேறியது முதலே அது வேறு நீ வேறு ஆகிவிடுகிறீர்கள். அதன் பிறகு நீ விரும்பியுண்ட உணவின் சத்துப்பொருள் அக்குழந்தையின் உடலில் புகுவது இல்லை. நீயே ஊட்டித்தான் வளர்க்கவேண்டும்.

உண்ணும் உணவும், ஒழுகும் ஒழுக்கமும் நமக்குச் சொந்தமான தல்லாததாகி நம்மை விட்டே விலகிவிடுகின்றன. அதன்பிறகு இந்த நிலவுலகத்திற்குச் சொந்தமாகி விடுகின்றன. பிறகு அவை நமக்கு உரியவையாகா நம் கருவிலிருந்து பிறந்த மக்களை அந்த உயிருக்குரிய தலைவன் நம்மிடமிருந்து பிரித்துத் தன் ஊருக்கே கொண்டு போய் விடுகிறான்; அப்போது இந்த உடல் அழிந்து போகிறது; இது நீ அறியாதது அன்று.

அறியாமையுள்ள மனைவியே! நீ இந்த உலக வாழ்க்கையிலே மிகவும் மகிழ்ச்சி கொண்டுவிட்டாய். அதனால்தான் மகனால் இப்போது வரவிருக்கும் மகிழ்ச்சியற்ற வாழ்க்கையிலே மிகவும் சோர்வடைந்து காணப்படுகிறாய்.

கல்வியிற் சிறந்தவளே! புல்லாகிய மரத்தின் மீது ஏறினால் அந்தப் புல்லின் வழியே இறங்கியாக வேண்டுமேயல்லாது இறங்கிவர வேறு ஒருகிளை கிடைக்காது. இது போன்றே நம் வாழ்க்கையும் நிலையில்லாதது என்று கூறித் தேற்றினான் மன்னன்.

மதலை - குழந்தை. பதம் - உணவு. சாரம் - சத்துப்பொருள். புகுதில்லை - புகுவது இல்லை. இட்டு - ஊட்டி, அளித்து. துரை - மன்னன். பருகுதல் - உண்ணுதல். அருகுதல் - சேர்தல். ஒருவுதல் - நீங்குதல். பிண்டம் - கருப்பம், கரு. கண்டன் - தலைவன், உரியவன். சாக்கிட்டு - சாக்காகச்சொல்லி; போக்குச்சொல்லி. மனை - தேவி, மனைவி.

சு. சொல் - 1. யிருக்கினன்நாளும் 2. தேரேகம் 3. மகிழ்சி 4. சாக்கிட்டுப்போது.

The King doles out advice

98. Noble Queen! You are reluctant
To part with your son.
Listen!
The child is your integral part
Only so long as it is in the embryo
Since it shares food with you.
The moment it leaves your body,
It attains to a new identity.

Thereafter it does not suck nutrients
From your corporeal frame;
You have to feed it!
Thereafter you have no hold
On its eating and actions,
Since the child ceases to be yours
And becomes one with the human race.
A time comes when the lord
Who gave life takes it
And the body rots.
Ignorant lady, you have fallen victim
To the snare of worldly life
Which accounts for the sorrow
At the prospect of losing your son.
Enlightened one! The climbing grass which coils round the tree
Seldom becomes its branch
But recoils and decays.
So is our life,
Transitory and ephemeral
Said the king
And tried to console his grieving wife.

வசனம் - இன்னது சொல்லி யிவள்மனந்தேறப் பின்னையு மன்னவனென்ன மென்றுரைப்பான். (30)

Prose : What more did the king say to console his wife?

(வாழுங்காலம் பற்றிய மன்னவன் கூற்று) **ஏகதாளம்**

99. நொடிரெண் டாயிரத் [1]தெழுநூ றுழன்றிடப்
படிமா னவர்கணக் கிடுவது சாமம்
[2]அதுனா லிருபோழ் ததுண் டொருதின
மதுமுப் பதுவரி லதுவொரு மாதம்
மாதங்கள் [3]பன்னிரெண்டு வரிலொரு வருஷமென் 5
றோது வர்க்கலி யுகத்துப் புகல

நாலு லக்ஷமுமெண் ணான்கா யுரஞ்சமை
கோல மாய்வரும் பாலுகந் தனிலே
இதைரெட்டித் திப்படி யேவ ளர்ந்திடும்
பதினெட் டுகமதுண்டிப் படிரெட்டிப் பாகும் 10
இப்படித் தினமுக மெண்பத் தெட்டுவரில்
பொற்புவி மன்னனுக்குச் சொற்பன ராவாம்
ராவொரு முப்பது மேவிடி லமாநம்
தாவவீ ராறு சமைந்தது வருஷம்
வருஷம் நூறாயிரம் வருவதோ ருகமது 15
திருகநூ றாயிரம் வரிற்பிர ளையமாம்
பிரளையம் நூறாயிரமு மோராயிரம் வருவது
பெருக்க மென்றுரை செய்குவார்கள்
பெருக்கமொரு பத்தெட்டு தரத்துவந் தால்சுகம்
அருக்குஞ் சுகமிருப தாயிரத் துடனே 20
முன்னூ றுழன்றிடில் முகிலவர் கண்ணுக்குத்
தன்னா யசுசரி யன்னாழப் பிரளையம்.

2700 நொடி கொண்டது ஒரு சாமம். அது எட்டு கொண்டது ஒரு நாள். நாள் 30 சென்றால் ஒரு மாதம். மாதம் 12 சென்றால் ஒரு ஆண்டு. இது கலியுகத்தில் கணிதவல்லுநர் கணக்கிடும் முறையாகும். 4,32,000 ஆண்டுகள் சேர்ந்தது ஒரு பாலுகம் என்பர். இதை இரட்டிக்க அது ஒரு யுகமாகும். அதாவது 8,64,000 ஆண்டு கொண்டது ஒரு யுகம். 18 யுகம் கொண்டது தினமுகம். அந்தத்தின முகம் 88 கொண்டது பொன்னுலக அரசனின் ஒரு இரவாகும். அந்த இரவு 30 நடப்பது அமாநம். அது 12 கொண்டது ஒரு ஆண்டு. அந்த அமரஆண்டு நூறாயிரம் நடப்பது ஒரு யுகம். யுகம் நூறாயிரம் வருமேயானால் அது பிரளயம் எனப்படும். 101 ஆயிரம் பிரளயம் ஒரு பெருக்கம் என்பார்கள். பெருக்கம் 18 வந்தால் சுகம். சுகம் 20300 கடந்தால் தேவர் ஆயுளுக்குரிய ஆழப்பிரளயம் எனப்படும்.

உழலுதல் - கடத்தல், சுழலுதல். படிமானவர் - தகுதிவாய்ந்தவர், கணித நூல்வல்லோர் சாமம் -71/2 நாழிகை நேரம் (3 மணி நேரம்) சமைகோலம் - சேர்ந்த வடிவம், ஆண்டு வடிவம். பாலுகம் - யுகம். பொற்புவி - பொன்னாடு, தேவருலகு. யுகம் - கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என நான்காம். இவை சதுர்யுகம் எனப்படும். இவற்றுள்,

கிரேதாயுகம் 17,28,000 ஆண்டு கொண்டது; திரேதாயுகம் 12,96,000 ஆண்டு கொண்டது;

துவாபரயுகம் 8,64,000 ஆண்டு கொண்டது; கலியுகம் 4,32,000 ஆண்டு கொண்டது;

இந்த சதுர்யுகம் 1000 கழிந்தால் பிரமனுக்கு ஒரு பகல்; மேலும் 1000 சென்றால் ஒரு இரவாம். இப்படி 360 பகல் இரவு கொண்டது ஒரு பிரம ஆண்டு. இந்த ஆண்டு 100 சென்றால் பிரம ஆயுள் முடிவாகும். இந்த அளவைகள் மேற்பாடலடிகளில் ஒத்துக்காணப்படவில்லை.

சு.சொல் - 1. தெழுநூறுழண்டிடப் 2. அதனாலொருபோழ்தது 3. பனிரெண்டு.

The King explains the span of life

99. Two thousand seconds constitute a *Cāmam*
Out of which eight go to mark a day.
The month consists of thirty days,
And twelve months make a year.
This is how the experts in mathematics
Of *Kaliyuka* calculate.
Four hundred and thirty two thousand years
Constitute a *Pālukam,*
If doubled, this becomes *Yukam.*
Eighteen *Yukams* go to make *Tiṉamukam,*
Eighteen *Tiṉamukams* are there
In the night of the King of the golden land.
Thirty such nights make *Amānam*
And twelve *Amānams* make a year.
One hundred and thousand years are there in a *Yukam,*
And another one hundred and thousand years would see the dissolution.
Hundred and one such result in the great flood.
After eighteen great dissolutions comes bliss or *Cukam,*
And if the number of bliss days exceeds two thousand three hundred
The era of greater dissolution follows!

(சிவபூசை முடியுங் காலம்) சம்பை

100. இருபத்தே ழாயிரமு மெழுநூறு வரும்பொழுது
பிரமனா யுசுமப்போ சரியாகு மென்பார்
அந்தநா ளெழுநூ றமர்ந்திடிலு ரோமமுனி
தந்திரேக மதிலொன் றுதிர்ந்திடு மராட்டம்
செகமெல்லா முதிர்ந்து கிளைத்தபோ தவருக் 5
கொருமாச மாச்சுது அந்தமாசம் பன்னிரெண்டு
கூடிலொரு வருஷமாய்க் கொண்டுநூ றாயிரத்துக்
கோடிவந்த போதவர்க்குப் பாடுவந்து நேரும்

அக்கணக்க தாய்க்கோடி யணுகிறதூரு வாசருக்கு
மிக்கதின மொன்றாச்சு தக்கணக்கு மேலே 10
நவகோடி நாளிருந்து [1]நாஸ்தியா வராகிலத்
தவமுனிக்குந் தினமொண்ணா [2]மவைமீது பார்க்க
யிந்தடவதா யொன்றுக்கொன் றேற்றமாய் ரிஷிகோடி
சிந்தியிடும் போதுபிறகு சிவபூசை முடியும்.

இருபத்தேழாயிரத்து எண்ணூறு ஆண்டு முடிந்தால் பிரமனின் ஆயுளும் முடியும். பிரமனின் ஆண்டு எழுநூறு நடக்கும் போது உரோமமுனி என்பவரின் உடம்பிலிருந்து ஒருமுடி உதிர்ந்துபோகும். இவ்வாறு உடல் முழுமையும் முடி உதிர்ந்து மீண்டும் முளைக்கும்போது அவருக்கு அது ஒரு மாதம். அந்த மாதம் 12 சேர்ந்தால் ஒரு ஆண்டு. அந்த ஆண்டு நூறாயிரத்து ஒரு கோடி நிகழும்போது உரோமருக்கு முடிவு நிகழும். உரோமரின் ஆண்டுப்படி கோடி ஆண்டு நடைபெறும் போது தூருவாச முனிவருக்கு ஒரு நாள் முடியும். இக்கணக்குப்படி ஒன்பது கோடிநாள் வாழ்ந்து முடிவு பெறுவார். இவ்வாறு தவமுனிவருக்கு ஒரு நாளாக நாட்கள் வளர்ந்து கொண்டே போகும். இவ்வாறு ஒரு கோடி ரிஷிகளின் காலம் முடிவுறும்போது சிவபூசையும் முடிவுபெறும்.

ஆயுசு - ஆயுள், வாழ்நாள். மராட்டம் - உடல்முடி. செகம் - உலகம் - இங்கு உடல் முழுமை என்க. பாடு - முடிவு. நவம் - ஒன்பது. நாஸ்தி - முடிவு. சிந்துதல் - சிதறுதல். முடிவுபெறுதல்.

சு.சொல் - 1. நாஸ்த்தியாவராகி 2. மவைமீதுபாற்க்க.

When would Civaṉ worship end?

100. Piramaṉ's life span is twenty seven thousand eight hundred years;
When Piramaṉ passes through the seven hundreth year,
Sage Rōmamuṉi would shed a hair.
When all the hair from his body is dropped
And new hair grows all over,
The time taken is a month.
Twelve such months make a year.
After a lapse of one crore and one year,
Sage Rōmar would shed his mortal coils
When Rōmar year touches one crore,
It would be synonymous with one day
In the life span of Sage Turuvācar.
He would end his life

At the end of nine crore years.
When one crore sages complete their life span
Civan worship would cease to be.

(முனிவர்களின் வயது) திரிபுடை

பூசையா யிரமுடிக்கி [1]லகஸ்தியன் புலத்தியன்
அங்கிராக்கன் வசிஷ்டன்
காசிபன் சனக்குமாரன் சகரனீசஞானி
சோதிமுனி கெணநாதமுனி சம்பாதிமுனி
சிவயோகமுனி சித்தி 5
நாதமுனி பதஞ்சலி வியாக்கிரம பாதமுனிக்கு
நாளொன் [2]றாகுமந் நாளெண்ணா யிரங்கோடிதாம்
வரப்பாடு வரும்பினும்
மீளவா யிரஞ்செனன மெடுக்கில் காளமேக
வண்ண னாற்கொரு தினமதா மந்த 10
வகையிலா யிரங்கோடி
தண்ணிப் பிரளயமது வோராயிர மெண்ணிக்கையினால்.

சிவபூசை ஆயிரம் முடிவுபெறுகிறபோது அகத்தியன், புலத்தியன், அங்கிராக்கன், வசிட்டன், காசிபன், சனக்குமாரன், சகரன், ஈசஞானி, சோதிமுனி, கணநாதமுனி, சம்பாதிமுனி, சிவயோகமுனி, சித்திநாதமுனி, பதஞ்சலியார், வியாக்கிரபாதர் ஆகிய முனிவர்களுக்கு ஒருநாள் ஆகும். அந்த நாள் எண்ணாயிரங்கோடிவரின் அவர்கள் காலம் முடிவுபெறும். மீண்டும் இவ்வாறு ஆயிரம் பிறவி எடுத்தால் நீலமேக வண்ணனாகிய திருமாலுக்கு ஒருநாள் முடிவுபெறும். இந்த வகையிலான ஆண்டு ஆயிரங்கோடி வெள்ளப்பிரளய காலமாகும். இப்படிக் காலஅளவைக்கோர் அளவில்லை என்பர்.

அகத்தியன் - குறுமுனியாகப் பிறந்து கடல்நீரை உண்டு வற்றச் செய்தவர்; பேரகத்தியம், சிற்றகத்தியம் என்னும் இலக்கண நூல்களை இயற்றியவர்; தொல்காப்பியர் முதலான பன்னிருவருக்குத் தமிழ் இலக்கணம் கற்பித்தவர்.

புலத்தியர் - பிரமனின் மானசீக புத்திரர். தவத்தால் புகழ்பெற்ற முனிவர். அங்கிராக்கன் - இவரும் பிரமனின் மானசீக புத்திரருள் ஒருவர். சம்வர்த்தனன், பிரகஸ்பதி ஆகியோரின் தந்தையாவார்.

வசிட்டன் - சூரியவமிசத்து மன்னர்களின் குருவாய் விளங்கியவர்.

காசிபன் - மரீசி முனிவரின் மகன். பரசுராமர் செய்த யாகத்தில் பூமியைத் தானமாகப் பெற்றவர். இதனால் பூமிக்குக் 'காசினி' என்னும் பெயர் உண்டாயிற்று என்பர்.

சனக்குமாரன் - சனத்குமாரன் - திருமாலின் அமிசமாகத் தோன்றி சதச்சிருங்கமலையில் யோகத்திருந்தவன். நந்திதேவரிடம் உண்மையறிந்தவன். சனத்குமாரசங்கிதை என்னும் நூலை இயற்றியவன்.

சகரன் - பாகுகன் புத்திரன். அரசனாயிருந்து அசுவமேதயாகம் செய்தவன்.

கணநாதர் - கணாதரர் - வைசேடிகமதாசாரியராய் இருந்து நொய்யைப் புசித்து வாழ்ந்தவர். தர்க்கசாஸ்திரம் இயற்றியவர்.

சம்பாதிமுனி - அருணன்புத்திரன். அனுமன் முதலிய வானரர்க்கு இராவணன் செய்தியை அறிவித்தவன்.

பதஞ்சலி - ஆதிசேட அவதாரம் ; அத்திரி - அநசூயை ஆகியோர் மகனாய்ப் பிறந்தவர். சிதம்பரத்தில் வியாக்கிரபாதருடன் இருந்து சிவபெருமானின் நடன தரிசனங்கண்டவர். பாணினி சூத்திரத்திற்கு உரை கண்டவர். அவ்வுரையில் சந்திரகுப்தன், புஷ்பமித்திரன் ஆகியோர் அவையை எடுத்தாளுகிறார்

வியாக்கிரபாதர் - மத்தியந்தன முனிவரின் புத்திரர். சிவபூசைக்குரிய மலரைத் தூய்மையாக எடுக்க நகங்களில் கண்பெற்றவர். மரம் ஏறும்போது வழுக்காமலிருக்க புலிக்காலும் கையும் பெற்றவர். உபமன்னிய முனிவரை மகனாகப் பெற்றவர். ஈசஞானி, சோதிமுனி, சிவயோகமுனி போன்றோர் சிறப்புகள் கிடைக்கவில்லை.

காளமேகவண்ணன் - திருமால், கரியமுகில போன்றவன்.

சு.சொல் - 1. லகஸ்த்தியன் 2. றாகுமன்நாளெண்.

The age of saints

101. When Civaṉ worship touches thousand,
It is just one day for saints like
Akattiyaṉ, Pulattiyaṉ, Aṅkirākkaṉ,
Vaciṭṭaṉ, Kācipaṉ, Caṉakkumāraṉ,
Cakaraṉ, Īcañāṉi, Cōtimuṉi,
Kaṇanātamuṉi, Campātimuṉi,
Civayōkamuṉi, Cittinātamuṉi,
Patañcali and Viyākkirapātar
When Civaṉ worship crosses eight thousand crores,
The life span of the sages would end.
Tirumāl would complete one day
When the sages take birth a thousand times.
The great dissolution synchronises
With the completion of thousand crores.

(இறைவர்களுக்குரிய ஆண்டுகள்) **சம்பை**

102. மாத மாகிய கோடி வருகவே - யதுவுமொரு
பூத வாதம தாமப் பூதவாதமுமே
[1]கோடிக்குகப் பிரளயங்கள் கூடுமது
கோடிவரிற் குடிக்குமகாப் பிரளயங் கோடியதுவாகும்
தணந்தெழுந்து வரும்பூத சங்கரரா மதுகோடி 5
அனந்தந்தர் திரும்பிலொரு வனந்தசங் காரம்
அதுமூன்று கோடிதா மெதிரான போதுவிஷ்ணு
விதிமாள்வ னென்றுரைக்குஞ் [2]சதுர்வேதந் தானே
விருத்தியுள்ள மால்கோடி விளைந்துவரும் போதந்த
வுருத்திரனுக் கொருகடிகை நிரைத்துதந்த நேரம் 10
[3]அதின்மீதி லுருத்திரனுக் [4]காயசுநூ றாய்ச்சந்த
விதிமாய பறியமிதந்துச் சுதனாகத் தோன்றில்
யீசுவரனுக் கோரணுவு மில்லை யாகையா
லீசுவரனை யன்றிமற்ற தாலைதம தலவே.

ஒருகோடி மாதங்கள் கொண்டது ஒரு பூதவாதமாகும். பூதவாதம் கோடிமுடிய யுகப்பிரளயம் நடைபெறும். யுகப்பிரளயம் ஒரு கோடி சென்றால் மக்களுக்கு அது ஒரு கோடி மகாப்பிரளயமாகும். அது கோடியாகில் ஐம்பெரும்பூதங்களின் அழிவு நிகழும். மீண்டும் கோடானுகோடி ஆண்டுகள் நிறைந்து அது மூன்று கோடியின் எதிர்கோடியானால் அது திருமாலின் முடிவுகாலம். திருமாலின் கோடி ஆண்டுகள் சேர்ந்தால் உருத்திரனுக்கு ஒரு நாழிகையாகும். முறையான அந்த நேரப்படி உருத்திரனுக்கு ஆயுள் நூறு ஆனால் அவன் விதி முடியும். மீண்டும் தப்பிப் பிறவி தோன்றலாம். ஆனால் ஈசுவரனுக்கு ஒரு அணுவளவும் சேதமில்லை. எனவே ஈசுவரனையன்றி அழியாநிலை பெறுவோர் ஒருவருமிலர். இவையாவும் சதுர்வேதக்கூற்றுகளாகும்.

தணத்தல் - பிரிதல்; தணந்தெழுதல் - மீண்டுந் தோன்றுதல். சங்காரர் - போர்செய்வோர். அனந்தர் - முடிவில்லாதவர். சதுர்வேதம் - நான்குவேதங்கள். மால் - திருமால். கடிகை - நாழிகை. நிரைத்தல் - ஒழுங்குபடுத்தி நிறுத்துதல். ஆயசு - ஆயுள், வாழ்நாள். பறிய - தப்ப (மீண்டும்).

சு.சொல் - 1. கோடிக்குக்கப்பிரளயங் 2. சதுற்வேதந் 3. அதின்மீதுலுருத்திர 4. காயசுநூறாயசந்த 5. யீசுவரனை.

The calendar for the Gods

102. *Pūtavātam* consists of one crore months,
At the end of this would occur the great dissolution,

When this touches the figure one crore,
It is mighty dissolution for the populace.
During this period the five elements
Would get destroyed.
When the period gets multiplied to some billions,
The life span of Tirumāl would end.
One crore years of Tirumāl
Would constitute a second for Ruttiraṉ.
If Ruttiraṉ touches hundred years
As per this calculation,
His life - span also would end.
Again He might take birth,
But He never gets totally destroyed
According to the four Vētās,

(தேவியின் மனந்தெளிவடைதல்) திபதை

103. இன்னது மன்னவ னில்லவள் தமக்குப்
பன்னி யுரைத்துநம் பவிசேஷ மெம்மாத்
திரமில்லை [1]யாகையால் சிற்றடி தன்னை
யுரமென்று நம்பினா யுத்தம மல்ல
வருந்தியென் றுரைத்திடும் வசனத்தைப் போக்கி 5
மைந்தனென் றீண்டு வளர்ந்ததே போதும்
[2]ஒண்ணுதலே நேர முண்டான விடத்தில்
தன்னவ ரன்னியர் [3]தான்பார்க்கப் போமோ
[4]சித்தமொன் றாகிய சேங்கண் பழிக்குப்
புத்திரனை யொப்பிடப் பொருந்திச்சொல் லென்றான் 10
[5]எனச்சொல விவளுக்கு [6]மிருதயந் தெளிந்து
மனத்திட மாயென்ன வார்த்தைசொல் லுவளே.

இவ்வாறு உலக இயற்கை நியதிகள் பலவற்றைப் பட்டமாதேவிக்கு எடுத்துக் கூறிய மன்னன் நம்முடைய எதிர்காலமும் வாழ்நாளும் இவற்றுள் மிகச்சிறிதளவே அல்லவா? நம்முடைய காலடிகள் நிலையானவை என்று நம்புவது நல்லதல்ல; இதற்காக நீ வருந்துவதும் சரியல்ல; உன்னுடைய துயரத்தை விட்டொழிக; ஒளிபொருந்திய அழகிய நெற்றியையுடைய தேவி! இதுவரை நமக்கு மகன் என்று நம்மிடம் வளர்ந்ததே போதும்.

இப்படி ஒரு சிக்கலான சோதனை வந்துவிட்டபோது நமக்கு வேண்டியவர் என்றோ வேண்டாதவர் என்றோ வேறுபாடு பார்ப்பது நீதியாகுமா? பசுவின் கன்றாகிய சேங்கன்றைக் கொன்ற பழிக்குப் பழியாக நம் மகனைப் பலி கொடுத்தேயாக வேண்டும் என்ற பதிலை மனம் விரும்பிச் சொல்லுவாயாக என்று கேட்டுக்கொண்டான். தேவியும் ஒருவாறு மனம் தெளிவடைந்தாள். மனத்திடத்தோடு சொல்லத் தொடங்கினாள்.

இல்லவள் - இல்லாள். மனைவி. பன்னுதல் - மீண்டும் மீண்டும் கூறுதல். பவிசேஷம் - எதிர்காலம். சிற்றடி - சிறுகால்சுவடு. நிலையில்லாதது என்னும் பொருளது. உரம் - வலிமை; (வலிமை வாய்ந்தது என்று எண்ணுதல்). உத்தமம் - நல்லது. ஈண்டு - இங்கு. ஒண்ணுதல் - ஒளிபொருந்திய நெற்றி; நெற்றியை உடையவளுக்கு ஆகி வந்தது; அண்மைவிளி. சேங்கண் - சேங்கன்று.

சு.சொல் - 1. யகையால்ச்சிற்றடி 2. ஒன்னுதலே 3. தான்பாற்கப் 4. சிற்றமொன் 5. எனசொல்லிவளுக்கு 6. மிருதயங்தெறிந்து.

The Queen's mind is clear

103. The King who thus sermonised
Stressed the shortness of human life.
It is idle to imagine
That our footprints on earth would last
Vain is it to sorrow on this account,
Therefore I beseech you not to grieve
Lady with a bright forehead,
Let us content ourselves
With the happy days that our son spent with us.
Now that there is a crisis,
One should be very objective,
Scrupulously shed personal feelings
So that our verdict would be fair and impartial.
Please approve of my decision
To sacrifice our son at the chariot wheels
Who is guilty of the offence
Of killing an innocent calf.
The queen saw reason in the king's speech,
Reconciled herself to her lot and spoke.

(மகனைக் கொல்லத் தேவி விருப்பம் தெரிவித்தல்) சம்பை

104. தெள்ளுபுகழ் தேவரீர் செப்பியவி சேஷம்நான்
[1]தள்ளினதை நீர்பொறுத்துக் கொள்ளுமெனப் பணிந்தாள்
வேந்தனே புவிவிளங்க வீதிவிடங்க ரைத்தேரி
[2]லூர்ந்துவிடும் போமென்றா ளேந்திழையப் போது
இன்னவுரை யிவள்கூற யிதுவேளை யென்றந்த 5
மன்னவனுங் கொலுவிருக்கு மண்டபத்தில் வந்தான்
நிருபனுமப் போதந்த நீதிபூஷணனை யிங்கு
வரவழையு மென்றுதூ தரையனுப்பி னானே
தூதுவரும் போயரசன் சொன்னபடி சொலியழைக்கில
நீதிபூ ஷணன்மனத்தி லேதிகில தாகி 10
வந்துரா சேந்திரனை வணங்கிநின்ற போதந்த
மந்திரியை [3]யேயந்தவர சனுந்தழுவிக் கொண்டு
யிருமென்றுட் காரவைத்து யின்றுவந்த பாவத்துக்கு
பரிகார மெந்தப்படி பண்ணுவோ மென்றான்
தேவரீர்க் [4]கேற்றபடிசெய்வ தேகருும மென்னி 15
லாவதே தெனவுரைக்கிற் கோவுமென்ன சொல்வான்
சொல்வார்த்தைக் கெதிர்வார்த்தை சொல்லாமல் நான்சொன்ன
சொல்வார்த்தைப் படியாக வெல்வாயிப் போது
வாராத பாவத்துக்கு மைந்தனைத்தந் தாலொழியத்
தீராது காண்மனது தாராள மாக. 20

மன்னவரே! தெளிவான கருத்தையும் உயர்ந்த புகழையுமுடைய தாங்கள் கூறிய முடிவை எதிர்த்துப் பேசிவிட்டதற்கு என்னை மன்னியுங்கள். இந்த நிலவுலகத்தில் நம்முடைய புகழ் என்றும் நிலைபெற்று நிற்கவேண்டும். எனவே வீதிவிடங்கரைத் தேர்க்காலில் கிடத்திக் கொல்லுங்கள்; விரைவில் செல்லுங்கள் என்று கூறினாள் தேவி தேவி இம்முடிவைச் சொன்னவுடனே மன்னவன் கொலுமண்டபத்திற்கு வந்தான். தூதரைப் பார்த்து அமைச்சர் நீதிபூஷணனை அழைத்து வாருங்கள் என்று கட்டளையிட்டான். தூதுவர் வந்து கூறியவுடன் அமைச்சர் திடுக்கிட்டார். உடனே புறப்பட்டு வந்து மன்னனை வணங்கி நின்றார்.

அமைச்சரைத் தழுவிக் கொண்ட அரசன் அவரை உட்காரவைத்து, இன்று ஏற்பட்டுவிட்ட பாவத்துக்கு என்ன பரிகாரம் செய்வது என்று வினவினான். தங்கள் முடிவு எதுவோ அதன்படியே செய்வதற்குத் தடை எதுவுமில்லை. தங்கள் கருத்து யாது என்றார் அமைச்சர்.

நான் சொல்லுவதை எதிர்த்துப் பேசாமல் உடனே சொன்னபடி செய்ய வேண்டும். என்றுமில்லாமல் வந்து நேர்ந்துவிட்ட இந்தப் பெரும்பாவத்துக்கு ஈடாக மகன் வீதிவிடங்கனைப் பலியாக்த் தந்தால் தான் மனம் நிம்மதியடையும் என்றான் மன்னன்.

தெள்ளு - தெளிந்த. புவி - பூமி. ஊர்தல் - செலுத்துதல். நிருபன் - மன்னன். திகில்- திடுக்கிடுதல், பயம். பரிகாரம் - பிராயச்சித்தம், போக்குதற்குரிய செயல். கோ - அரசன்.

சு.சொல் - 1. தள்ளினத்தை 2. லூந்துவிடும் 3. யேயந்தவரனுந் 4. கேத்தபடி.

The Queen wants her son to be killed

104. Revered king, I seek your pardon
For initially contradicting You,
Whose thinking is clear and just
Our reputation should not suffer any set back
Because of any wrong act.
I wish you proceed quickly
To get our son crushed by the chariot wheel
On hearing the queen's words
The king rushed to the assembly
Instructed the messengers to fetch Nitipūṣaṇaṉ
Who arrived as a much - shocked man
And paid obeisance to the king.
The minister was hugged by the king
And asked to take his seat.
He then wanted to know from the minister
How the sin of killing the calf
Could be expiated.
The minister said that he would simply
Concur with the King's decision
Which was bound to be fair and just.
Spoke the king:
Carry out my commands forthwith
Without contradicting me.
For the mighty sin
That has unexpectedly befallen us
Expiation consists in sacrificing the prince!

(மகன்மீது தேரைச் செலுத்துமாறு மன்னன் ஆணையிடுதல்)

திரிபுடை

105. தேக்கும் புகழ்கொண்ட வீதி விடங்கரைத்
தேரி லரைத்துக்கண் பழியைத் துலைத்துநீ
சீக்கிரமாய் வரவேணு மென்னவன் - பாக்கிய மென்றான்
நமக்குள் ளானவ [1]னான்நீ யிந்த
நடத்தைதவி ரப்போறாய் கண்டா யென்று 5
குமுக்குங் கூட்டி யுச்சிதமுங் கொடுத்துக்கண் - சிமிட்டினானே
ஆனை சேனைகள் சூழவே மந்திரி
யான வன்தெரு வீதி நடக்கையில்
ஞான வானவர்க ளெல்லாரு மிதுபழி - யானதென்றார்
மாய்ச்சுப் போடுற பேச்சுவனா ரேங்குவ 10
ளரவான பெண்டுக ளெல்லாருந் துயர்கொண்டு
காச்சு மூச்சென்று கதறினார் பிள்ளை - போச்சென்றுருகி
மாட்டுக்காய் [2]பெற்ற மகனைக் கொல்வது
கேட்டி லோங்கதை தனிலுமென் றெங்கும்
கூட்டங் கூட்டிக்கொண் [3]டரற்றினார்கட - லாட்டம்போல 15
பரிச்ச லாயந்த வீதி வீதியும்
பாலன் மேல்பழிச் சாருமோ வென்று
திரிச் . . . . வையேவென்று - யிரைச்சலானார்.

மிகுந்த புகழுக்குரியவராகிய வீதிவிடங்கரைத் தேர்க்காலிலிட்டு நசுங்கச்செய்து கன்றினால் ஏற்பட்ட பழியைப் போக்கி வருக என்று அமைச்சருக்குக் கட்டளையிட்டான் மன்னன். நீதியைக் காப்பதில் நீ எனக்கு உதவியானவன். எனவே இந்தக் கட்டளையை மீறக்கூடாது என்று கூறி வேண்டிய உதவியைச் செய்து பெருமைப்படுத்தினான்.

ஆணையை நிறைவேற்றுவது என்பாக்கியம் என்று கூறிய அமைச்சர் யானை முதலான படைகள் சூழத் தெருவழியே செல்லத்தொடங்கினார். அதைக் கண்ட சான்றோர்கள் இது பெரும்பழிக்குரிய செயல் என்று கூறி வருந்தினார்கள். இது வருத்தத்திற்குரிய பேச்சு என்று கூறி ஏங்கினார்கள். சுற்றியிருந்த மகளிர் எல்லோரும் பிள்ளை போச்சே என்று கூறிக் கதறினார்கள். மக்கள் கூட்டங் கூட்டமாகக் கூடி ஒரு மாட்டின் உயிருக்காக மகனைக் கொல்லுவது என்ற செய்தியைக் கதையிலும் கேட்டறியோம் என்று கடலோசை போலக் கதறினார்கள். வீதிவிடங்கனைப் பற்றி நன்கு அறிந்த அந்தத் தெருக்களில் இப்படி அச்சிறுவன் மீது அடாத பழி வந்து சேர்வது பொருந்துமோ என்று கூறிக் கூச்சலிடத் தொடங்கினார்கள்.

தேக்கும்புகழ் - நிறைந்தபுகழ். கண் - கன்று என்பதன் கொச்சை குமுக்கம் - உதவி, தொகை. உச்சிதம் - உயர்வு, பெருமை. மாய்ச்சல் - வருத்தல். அரற்றுதல் - பேரொலிசெய்தல். பரிச்சல் - பரிச்சயம், பழக்கம்.

சு.சொல் - 1. னான்னீயிந்த 2. பெத்த 3. டரத்தினார்.

The King's order

105. Vītiviṭaṅkaṉ with spotless reputation
Shall be crushed under the wheels of the chariot!
This act alone would redeem us
Of the great and vile sin.
As you are equally anxious
To mete out even - handed justice
I order you to carry out my command
Without contradiction or hesitation.
The minister said that it was a privilege
To execute the orders of the king,
And walked through the street
Followed by the elephant force and other fighting units.
The elders exclaimed with trickling tears
That killing the prince was a horrendous act
Which deserved downright condemnation.
The public at large felt miserabie
At the prospect of losing a young man.
People gathered in small groups
And thundered that killing a man
For the unfortunate death of a calf
Was unknown even in wild tales.
Their expression of displeasure
Resembled the roar of the sea.
The agitation gathered momentum
Wherever the prince was held in esteem.
Is it not incongruous that a noble soul
Shall fall victim to mighty blame?

(மக்கள் கதறுதல்) ஏகதாளம்

106. ஐயோ [1]சுதனுக்கென் றாவெங் கிருந்தது
மெய்யாய் முடித்திடு மோவென வழுவார்
கூற்றுவப் பசுவந்து கொன்றிடு மென்றொரு
சாத்திரக் காரரும் [2]பார்த்துரை யாரே
மதியள வாம்படி வருவதுண் டோயிந்த 5
விதியள வாம்படி விளங்குமென் பார்கள்
அத்தி மலர்ந்திடு மதிசயம் போல்வந்த
புத்திர [3]னார்க்கிந்த தத்தெய்த லாமோ.

ஐயோ! மகன் உயிரை வாங்கவென்றே இந்தப் பசு வந்திருக்கிறதே! இதுவரை இது எங்கேயிருந்தது? மகனைக் கொல்லுவது உண்மையாகவே நடந்துவிடுமோ? இப்படி ஒரு பசுவே எமனாக வந்து வீதிவிடங்கரைக் கொன்றுவிடும் என்று எந்த சோதிடரும் கூறவில்லையே! அறிவின் திறத்துக்கு ஏற்றவாறு நடைபெறுவது உண்டா? இல்லையே! விதியின்படிதான் எதுவும் நடைபெறும் என்பார்களே! அது உண்மைதானா? அத்தி பூத்தது என்றால் ஆச்சரியப்படுவார்கள்! ஆனால் உண்மையில் அத்தி பூத்தது போலவே மகனுக்கு இந்தக் கண்டம் வந்துவிட்டதே! இவ்வாறு மக்கள் கதறினார்கள்.

ஆ - பசு கூற்றுவப்பசு - எமனாக வந்த பசு மதி - அறிவு விதி - தலைவிதி, தலையெழுத்து. அத்தி - அத்திமரம். தத்து - கண்டம்; உயிர்போகும் நிலை.

சு. சொல் - 1. சுதனுக்கென்னாவெங்கிருந்துது. 2. பாத்துரை 3 நார்க்கிந்த

The populace bewail

106. What a pity, a cow has come from nowhere
To end the life of the prince.
Where was it all the time?
No soothsayer ever foresaw
That a cow shall be responsible
For the premature death of the prince.
Nothing can be delved by reason
When all events are controlled by fate.
Indeed a great tragedy has befallen the prince
Bewailed the loving populace.

(மக்கள் அங்கலாய்ப்பு) **திபதை**

107. மற்று முளாரிந்த வார்த்தையைக் கேட்டு
சித்தமு நேசமுந் திகிலெடுத் தலறிக்
கண்ணிலே காணாக் கடும்பழி வந்து
நண்ணுமோ வென்று நடுங்குவார் சிலபேர்
அரகரா விதுவநி யாயந்தா னென்று 5
யுருகி யுருகியே யுறங்குவார் சிலபேர்
பசுவுக் கிவனென்ன பாதக முன்னா
லிசைவித் திருந்ததோ வென்பார்கள் சிலபேர்
பாதகத் திலும்வெகு பாதக னானோன்
ஆதிப னேயென் [1]றரற்றுவார் சிலபேர் 10
பாலனைப் பழிக்குப் பழிகொடுத் தவரை
ஞாலத்தி லெங்கும் நாம்கண்ட தில்லை
என்ன வவற்கெதி ரெழுத்தின் படியே
பண்ணுமந்தி யாலென்ன பண்ணலா மென்பார்
துரைசெய்த [2]தன்மமும் சுகிர்த கர்மமும் 15
பரவுப காரமும் பலிக்கிலை யென்பார்
திருநாள் நடத்திய சிறுவனுக் கிப்போ
தொருநாளைக் கொள்ளை [3]யுகந்ததே யென்பார்
நடத்துஞ் சிவன்திரு நாள்முடி வினிலே
பிடித்துதோ யெமனிந்தப் பிள்ளையை யென்பார் 20
சிவன்திரு நாளினைச் செய்த குமாரன்
சிவகதி யின்றைக்குச் சேருதோ. வென்பார்
மோக்ஷம் தனக்கென்ன மோக்ஷமோ யிந்தக்
காக்ஷியைக் கண்கொண்டு காண்பாரா ரென்பார்
பழிவந் திடிலது பரிகாரத் துக்கொரு 25
வழியில்லை யோயென்ன வாறாச்சு தென்பார்
சிவசிவ சிவயிந்த சேதிகேட் டாலும்
பவமெய்து மென்றகம் பதுங்கிநிற் பாரும்
புத்திரன் கவலையாய் புலம்பின ராசா
சித்தமு மொத்துதோ சிவனே யென்பாரும்

நினைந்து நினைந்து கண்ணீர் விடுவோரும்
கனிந்து கனிந்து கலங்கிநிற் பாரும்
பாலனைப் போலினிப் பார்ப்பமோ வென்று
மாலைமாலைக் கண்ணீர் வழிந்துநிற் பாரும்
[4]பார்த்தியோ யிப்பழிப் [5]பற்றறக் காசி 35
யாத்திரை போலமென் றாசரிப் பாரும்
பரமேஸ் வரனுக்குப் பட்சம தில்லை
பரமேஸ் வரன்பட்சம் [6]பாழ்த்ததென் பாரும்
விதியாள ளிப்படி விதித்ததென் பாரும்
அதுநில வரமான வார்த்தையென் பாரும் 40
அயனா ரெழுத்தள வல்லாமல் வேறு
பயனாவ துண்டோவிப் படியேயென் பாரும்
கனவிற் சிவன்தரக் காளையைப் பெற்றான்
கனவாய் [7]முடிந்ததிக் கதைதானென் பாரும்
வேண்டா மெனச்சொல்லி வேந்தனைப் போய்நாம் 45
வேண்டினால் பிள்ளையை விடுவனென் பாரும்
பரியாசம் வேந்தனைப் [8]பார்த்தவ னுக்குத்
தெரியாத நீதியோ செப்பவென் பாரும்
அங்கரா மென்று ஏங்கார மெடுத்துப்
பிராந்திகொண் டேபேய் பிடித்துநிற் பாரும் 50
யினியென்ன வாழ்வென் றிறையவ ளளித்த
தனையனை நினைத்துத் தனித்தழு வாரும்.

(மக்கள் தியாகேசரிடம் முறையிடுதல்)

ஆரூர்த் தியாகரே யரசன் சுதாவைச்
சீராகக் [9]காப்பாய் செயலாயென் பாரும்
[10]செய்ததே யாரூர்த் தியாகரிம் மாத்திரம் 55
செய்கில் லையெனத் திட்டிக்கொள் வாரும்
அவரவர் பாவங்க ளவரவர்க் காகும்
யிவன்செய்த பாவங்க ளிதுவாச்சென் பாரும்
பிள்ளைகளைப் பெற்ற பேதை களுமனந்
துள்ளி யலறித் துடித்தழு வாரும் 60
பெற்றவள் மனது [11]பிடித்ததோ வென்று
கத்திக்கொண் டுரத்திக் குமிறிநிற் பாரும்

நல்லோர் பெரியவர் களுடங் கலங்கி
எல்லாஞ் சிவன்செய லென்றிருப் பாரும்
[12]பார்த்திபன் மகனையோ பாடுசெய் வதுதான் 65
பார்த்திட வேசிலர் பயணமா வாரும்
தண்ணீர் மத்தியிலுள்ள தாமரை போலே
எண்ணவொண் ணாச்சென மெல்லாந் துக்கிக்க
நீதிபூ ஷணனுமந் நேரமே யேகில்
ஆதியன் குமார னமைச்சனைக் கண்டு 70
நம்மைய [13]ரும்முட னென்சொன்னா ரென்னக்
கம்மியே மந்திரி கழறலுற் றானே.

மேலும் பலர் வீதிவிடங்கருக்கு ஏற்பட்ட நிலையைக் கேள்விப்பட்டு உள்ளம் திடுக்கிட்டார்கள். கண்ணால் காணாமலேயே பெரும்பழி நேர்ந்து விட்டதே என்று சிலர் நடுங்கினார்கள். அரகரா! இது அநியாயம் என்று கூறிச் சிலர் உள்ளம் உருகினர். முற்பிறவியில் இந்தப் பசுவுக்கு என்ன தீங்கு செய்தானோ என்று கூறியவர்களுமுண்டு. அரசனே துரோகம் செய்துவிட்டான்; மகனை இப்படிப் பழிவாங்கியவர்களை உலகத்தில் எங்குமே பார்த்ததில்லை; அவரவர் தலையெழுத்தின்படியே நடக்கும் முடிவுக்கு என்ன செய்ய முடியும்? மன்னவன் செய்த தருமங்களும் புண்ணியச் செயல்களும் பரோபகாரங்களும் பலனில்லாமல் போய்விட்டனவோ? திருவிழா நடத்திய சிறுவனுக்கு ஒரேநாளில் இந்த முடிவு ஏற்பட்டு விட்டதே! சிவபெருமான் திருவிழா முடிவில் எமன் பிடித்துவிட்டானே! சிவனுக்குத் திருவிழா நடத்திவிட்டு இச்சிறுவன் சிவகதி சேருகிறானோ? மோட்சம்! என்ன மோட்சமோ! இந்தக் காட்சியை யார் காண்பது? இவ்வாறு பலரும் வருந்தி, நொந்து பேசிக் கொண்டார்கள்.

இந்தப் பழிக்குப் பரிகாரம் எதுவும் இல்லையோ? மகனில்லாமல் வருந்திய மன்னனுக்கு எப்படி மனந்துணிந்ததோ? இந்தச் சிறுவனைப் போல வேறு ஒருவனை இனி பார்க்கப்போகிறோமோ? இவ்வாறு பலவாறு பேசிய பலர் மனங்கலங்கிக் கண்ணீர் பெருக, சிவசிவா! இதைக் கேட்டாலும் பாவம்வந்து சேரும் என்று வீட்டிற்குள்ளே பதுங்கிக் கொண்டார்கள்

இந்தப் பழி தீர காசியாத்திரை போவோம் என்று வழிபாடு செய்தார்கள் சிலர் இறைவனுக்கே கருணை இல்லை; இறைவனது கருணை உள்ளம் பாழாகிவிட்டது; விதிப்பயனே இப்படி நடந்துவிட்டது; அதுவே உண்மை! பிரமன் எழுதிய படிதானே நடக்கும்? வேறு பயனை எதிர்பார்க்கலாமா? கனவினால் பெற்ற பிள்ளையின் கதியே கனவாய் முடிந்துவிட்டதே! பிள்ளையைக் கொல்ல வேண்டாமென்று மன்னனிடம் வேண்டிக்கொண்டால் விட்டுவிடுவாரே! மன்னருக்குத் தெரியாத நீதியா? நாம் சொல்லவேண்டுமா? இவ்வாறு மனம்போனபடி பேசிப் பேய்பிடித்தவர்களைப் போல மயங்கி நிற்பவர்களும் இனி என்ன வாழ்க்கை என்று மகனை நினைத்து அழுபவர்களுமாகிச் செயலற்றிருந்தார்கள்.

திருவாரூர்த் தியாகப்பெருமானே! மன்னன் மகனைக் காப்பாற்றமாட்டாயா? இவ்வாறு சிலர் வேண்ட, செய்ததே அவன்தானே! இந்த அளவு செய்வார் வேறு யார் என்று திட்டினர் சிலர். இவன் செய்த பாவம் இப்படி முடிந்தது என்று சமாதானம் கூறினர் சிலர். பிள்ளைகளைப் பெற்றவர்கள் துடித்து அழுதார்கள். பெற்றவளுக்கு எப்படி மனம் வநதது என்று உள்ளங்குமுறினர் பலர். எல்லாம் சிவன் செயல் என்று இருந்தவர்களுமுண்டு. மன்னன் மகனுக்கு அளிக்கப்படும் தண்டனையை நேரில் பார்க்கப் புறப்பட்டவர் சிலர். தண்ணீரில் தாமரைபோல் மனந்தத்தளித்தனர் சிலர்.

அப்போது அவ்விடத்திற்கு நீதிபூஷணன் வந்து சேர்ந்தான். அமைச்சரைக் கண்ட வீதிவிடங்கன் அரசன் என்ன கூறினார் என்று கேட்க அமைச்சன் உள்ளங்கலங்கி, தாழ்ந்த குரலையுடையவனாகிச் சொல்லத் தொடங்கினான்.

நண்ணுதல் - அடைதல். பாதகம் - துரோகம். இசைவித்தல் - உண்டாக்குதல, செய்தல் ஆதிபன் - அரசன். அந்தி - முடிவு. சுகிர்தகர்மம் - புண்ணிய காரியம். பரவுபகாரம் - பரோபகாரம்- பிறருக்குச செய்யும் உதவி. உகந்தது - வந்து பொருந்தியது. சிவகதி - மோட்சம். பரிகாரம் - பாவநீக்கம். பவம் - பாவம், அழிவு. அகம் - வீடு. பற்று - ஆசை. ஆசரித்தல் - வழிபடுதல், செயல் மேற்கொள்ளுதல். பட்சம் - இரக்கம். பாழ்த்தல் - அழிதல். நிலவரம் - நிலை, செய்தி. அயனார் - பிரமன். பரியாசம் - ஏளனம். பிராந்தி - மயககம். சுதா - மகன். பேதை - பெண். உரத்தி - உரக்க, பலமாக. குமுறல் - கொதித்தல். ஐயர் - தலைவர், அரசர். கம்முதல் - குரல் ஓசை குறைதல். கழறல் - சொல்லல்

சு.சொல் - 1. றரத்துவார் 2. தற்மமும்சுகிற்த 3. யுகந்துதே 4 பாத்தியோ 5. பத்தறக் 6. பாழ்த்துதென் 7. முடிந்துதிக் 8. பாத்தவனுக்கு 9. காற்பாய் 10 செய்துதே 11. பிடித்துதோ 12. பாற்திபன் 13. ரும்முடன்னென்

The sorrow of the citizens

107. Many sorrowed deeply
For the unfortunate predicament of Vitiviṭaṅkaṉ.
He had become blameworthy
Even before he was consciously aware of it.
Arakarā! This is highly unjust
Ejaculated a few.
The reaction of the king's subjects
Was sad, but varied.
Some attributed the unexpected killing
To deeds of an earlier birth.
Some blamed the king
For contemplating vengeance on his son.

The fatalists took a resigned attitude
Since nothing can be done on events predetermined.
Alas, exclaimed a few,
The good deeds of the King
Have failed to yield any fruit.
Some wondered why the prince should die
At the end of an auspicious festival.
Perhaps he is earmarked for liberation,
But liberation at what cost?
Who can witness the sight of gory killing
In the name of justice and fairplay?
The populace continued to speak
Pathetically about the fate of the prince.
Is there no expiation for this sin?
How come the king has decided to kill his own son
For whom an equal cannot be found?
The timid ones felt a chill in their heart
At the thought of the impending punishment
And wisely chose to remain indoors.
The pious decided on a trip to Benares
To expiate the offence against God.
A few wondered whether the supreme power
Had ceased to be all - merciful.
Others blamed the hand of fate
Which is inexorable.
The boy born after an auspicious dream
Has verily turned into a passing dream!
Would it be prudent to persuade the king
To spare the life of the youngster?
But who are we to tell the king
Whose sagacity is unimpeachable?
Many among the good citizens
Lost their basic faith in life

And cursed their lot as denizens of the earth.
They fervently appealed to Lord Tiyākēcar,
But realised the futility of prayer
Since even the act of prayer
Originated in the Almighty!
Parents wept profusely
Wondering how any mother could give consent
To the act of vengeance.
Some were curious to witness the killing
While a few remained unmoved
Like drops of water on the lotus leaf.
Then dropped in minister Nitipūṣaṇaṉ
Who was requested by the prince
To reveal the king's verdict
Which he did in a feeble voice,
Emotion choking him.

(அமைச்சர் அரசன் ஆணையை மறுத்துப் பேசுதல்) சம்பை

108. எனையழைத்துப் பினையொன்று மியம்பய்யா யேனிந்த
வினையெஞ்செய் தாயென்று விளம்பினா ரதுக்கு
பசுவுதனை விட்டதுண்டு பழிவந்து [1]சார்ந்ததுண்டு
பிசகுவந்து போச்சுதிந்தப் பிழையாச்சு தென்றேன்
[2]நல்லதுக் கேற்றபடி நடந்துபோ வெனச்சொன்னார் 5
நல்லதென்றேன் பின்னையொரு பொல்லாமையு மில்லை
யிந்தட விவனுக்குச் சொல்லி என்னைப்போ லரசனுக்கு
[3]மந்திரியா யனேகம்பேர் வந்துசூழ்ந் திடுவார்
ராசசந் ததியொருவ னாச்சுதே நம்பிராண
னேசரிச் சொல்வோமென் றாலோசனையி லெண்ணி 10
நாமுமிந்தத் தேரேறி நடத்தினோ மாகையால்
நாமுமிந்தப் பழிதுலைக்க ஞாயமதென் றிசைந்தான்.

இளவரசே! மன்னர் என்னையழைத்து என்ன நடந்தது? என்னிடம் ஏன் கூறவில்லை என்று கேட்டார். பசுவந்தது; கன்று இறந்து அதனால் பழி நேர்ந்து விட்டது; எப்படியோ இத்தவறு நேர்ந்துவிட்டது என்று பதில் கூறினேன். முறையாக என்ன செய்ய

வேண்டுமோ அப்படியே செய் என்று கூறிவிட்டார் மன்னர். அப்படியே ஆகட்டும் என்று கூறி வந்துவிட்டேன். கடுமையாக மன்னர் எதுவுங் கூறவில்லை என்று வீதிவிடங்கனிடம் கூறினார் அமைச்சர். அதன்பிறகு தமக்குள் முடிவெடுக்கிறார்.

அரசனுக்கு என்னைப்போல அமைச்சர் பலர் வந்து சேர்வார்கள். ஆனால் வீதிவிடங்கரோ அரசபரம்பரைக்குரிய பிள்ளை ஒருவரே. கன்றின் உயிருக்கு நம் உயிரே நிகரானதாகும். மேலும் இந்தத் தேரில் இருந்து தேரைச் செலுத்திச் சென்றவர்களிலே நாமும் ஒருவராவோம். எனவே இந்தப்பழியை நீக்க நமக்கும் உரிமையுண்டு என்று முடிவெடுத்தார் அமைச்சர்.

வினையெம் - வினயம் - வஞ்சகம், செயல். பிசகு - தவறு. பொல்லாமை - தீங்கு. ராசசந்ததி - அரச பரம்பரை, அரசமகன். பிராணன் - உயிர்.

கு.சொல் - 1 சார்ந்துதுண்டு 2. நல்லத்துக் 3. மந்திரியாகனேகம்.

The minister speaks concealing the king's orders

108. Noble prince, the king summoned me
And asked for a report.
I spoke to him about the death of the calf
And the undeserved blame
That has become your lot
He ordered me to take such action
As bifitted the crime.
Let me assure you emphatically
He did not utter a single unkind word.
After addressing the prince
The minister pondered on the course of action
That he should take.
Mused the minister,
The king can always find
A substitute for me
To function as his minister.
But it would be impossible
To replace his noble son.
Is not my life as good as that of the prince
To recompense the life of the calf?

After all, I was also in the chariot
When the calf was killed
And so equally guilty and blameworthy!
The minister strongly felt
That he had every right to expiate.

(நீதிபூஷணன் தானே கத்தியால் குத்திக் கொள்ளுதல்) ஏகதாளம்

109. இந்தடவாய் மந்திரி யெண்ணிக்கொண்டே கண்ணு
சிந்திய விடத்தினில் வந்துதன் னுரத்தில்
சுரிகையி னாற்குத்திச் சோரி சொரிந்திட
தரைதனில் வீழ்ந்தன னரகர வென்றே
அங்கனே வீதி விடங்கரும் [1]பார்த்துக் 5
கசங்கின பூவெனக் குமுங்கின னுடலம்
ரத்தத்தைப் பார்த்தந்த ராசகுமா ரற்குச்
சித்தத்தில் துயர்மலை யத்தனை யாச்சே.

அமைச்சர் தம் உயிரைக் கொடுப்பதே சரியாகும் என்று மனத்தில் திட்டமிட்டபடியே வந்தார் கன்று தேர்ச்சக்கரத்தில் விழுந்து உயிர்விட்ட இடத்தை அடைந்தவுடனே தம் மார்பில் தாமே கத்தியால் குத்திக் கொண்டார். இரத்தம் பெருக அரகராவென்று கூறியபடியே தரையில் விழுந்தார். அமைச்சரைப் பார்த்த வீதிவிடங்கர் கசங்கிய மலரைப்போல உடம்பு அதிர சோர்ந்து போனார். அமைச்சரின் உடலில் பெருகிய இரத்தத்தைப் பார்த்துப் பெருந்துன்பம் அடைந்தார்.

கண்ணுசிந்தியவிடம் - கன்று இரத்தம் சிந்தி, உயிர்விட்ட இடம் உரம் - மார்பு. சுரிகை- கத்தி, உடைவாள். சோரி - இரத்தம. சொரிதல் - கொட்டுதல் குமுங்குதல் - அதிர்ச்சியடைதல்.

சு.சொல் - 1. பாத்துக்

Nītipūṣaṇaṉ stabs himself

109. The minister resolved quite firmly
That he should give up his life
To redeem the sin of killing the calf.
When he reached the spot
Where the calf was run over,
He stabbed himself deep in the chest,
Uttered the holy name of the lord

And fell on the floor.
On seeing the minister dropping,
Vitiviṭaṅkaṉ got unnerved
Verily became a crushed flower.
Great sorrow overtook him
On seeing the gush of blood.

(வீதிவிடங்கன் வருத்தமடைந்து மன்னனுக்குச் செய்தியனுப்புதல்) **திரிபுடை**

110. என்னைக் கொல்லச்சொல்லி யனுப்பி னான்துரை
என்னைக் கொன்றிட மாட்டாமல் மந்திரித்
தன்னைத்தான் குத்திகொண்ட பழிக்கென்ன - மென்று சொல்வேன்

நீதி பூஷணன் வந்த தும்துரை
வீதிவிடங்கரைக் கண்டதும் பின்பு 5
சேத மானதும் விவரமாய் எங்க - ளாதிபதிக்கு

விரைவிற் போய்ச்சொல்லு வீரென்றே சொல்லி
வீதி விடங்கனு மனுப்பத் தூதுவர்
அரகரா யிந்தப் [1]படிவிளைந்தது - பிரம னெழுத்தோ

நம்மை யிதுக்கென்று [2]விதிப்பித் தான்பிரம்மன் - நா 10
மென்ன செய்குவ மென்றத் தூதுவர்
தம்மி லேமன துருகி யுருகியே - விம்மி நடந்தார்

நடந்து போயர சனைக்கண் டேயிப்ப
நடந்த சேதியைக் கேளு மின்றிங்கே
நடந்த சேதியைச் சொல்லவே மன்னன் - இடிந்துவிழுந்தான். 15

அரசர் என்னைக் கொல்லுமாறு கட்டளையிட்டு அமைச்சரை அனுப்பினார். ஆனால் அமைச்சரோ என்னைக் கொல்ல விரும்பாமல் தம்மைத்தாமே குத்திக் கொண்டுவிட்டார். இந்தப்பழி வேறு என்னையடைந்தது. இப்பழிக்கு நான் என்ன செய்வேன்? இவ்வாறு வருந்திய வீதிவிடங்கன் தூதுவரை அழைத்து, அமைச்சர் இங்கு வந்ததும், என்னைக் கண்டு பேசியதும், பிறகு தம்மைத்தாமே குத்திக் கொண்டு இறந்துவிட்டதுமாகிய செய்திகளை மன்னரிடம் கூறுங்கள் என்று அனுப்பினான்.

அரகரா! இதெல்லாம் பிரமனின் படைப்பா? இச்செய்திகளையெல்லாம் சொல்லுவதற்கென்றே எங்களைப் படைத்தானோ? இவ்வாறெல்லாம் பேசி மனமுருகியவர்களாய்ச் சென்ற தூதுவர், மன்னனைக் கண்டு செய்தியைக் கூறினார்கள். மன்னவன் மேலும் மனமிடிந்து சோர்ந்து விழுந்தான்.

சேதம் - உயிர்ச்சேதம், அழிவு. ஆதிபதி - ஆதிபுன், அரசன். விதிப்பித்தல் - நியமித்தல். விம்முதல் - தேம்பிஅழுதல். இடிதல் - உடைதல்.

க.சொல் - 1. படிவிளைந்துது 2. விதிப்பிற்றான்.

Sorrowing Vitiviṭaṅkaṉ sends word to the King

110. Said the prince:
The King sent the minister
To execute the death sentence on me,
But alas, the noble soul reluctant to take my life
Has stabbed himself to death.
Again I have become an accursed one,
Whither am I to look for redemption?
Overwhelmed with great grief
He summoned the messengers
And asked them to report to the king
The sad end of the minister.
Exclaimed the unhappy messenger;
Arakarā! Is it our lot to carry
Only doleful tidings to the king?
When at last the king was told of the minister's death,
He became a sadder man and fainted.

வசனம் - விழுந்த ராசேந்திரன் எழுந்திருந்தங்கே கண்ணீர் ததும்பக் கலங்கியென் சொல்வான். (31)

Prose : What would the fallen Rācēntiraṉ speak when he regains his consciousness?

(மன்னன் தன்னையே நொந்துகொள்ளுதல்) **சிந்து**

111. என்ன செய்குவேன் அரகரா - என்ன செய்குவேன்
தன்னில் [1]வாற வினையில்லை நம்மைத்
தான்தொட்டு [2]வந்ததிக் கல்லை
யின்னில மெங்கு மிகழ்ந்தெந் தனைச்சரி
மன்னவர் நந்தம்மைச் - சின்னவ னென்பார் (என்ன) 5

பாலகன் செய்தது பாதி - குறை
பாதிக்கும் [3]நாமுத்தர வாதி
ஆலச மாயினிச் சாலஞ்செய் தாலது
கோலமல் லக்கண் சாலமென் பார்கள் (என்ன)

யீசனை பூசனை செய்துஞ் - சுகித் 10
தித்தனைநா [4]ளீந்ததும்
வாசனை கற்றும் பரசுப னெனமுன்னை
யோசனை தோணாமல் மோசம்போ னேனே (என்ன)

நாமே செயும்பரி காரம் - யிது
நம்மாலே தப்பின நேரம் 15
ஏமாறி னோங்கொல்லப் போமோவென் றேமந்திரி
யேமாறி னான்யிப்ப போமாறு [5]நாமே (என்ன)

உலகுக்கெல் லாமொளி [6]யானீ - ரொரு
வுரகத்தி லேகுடி யானீர்
தலமுற் றிருந்திடுந் தலைமைத் தியாகரே 20
[7]சலமுற்றிந் நாளிந்தப் பலனைத்தந் தீரே
என்ன செய்குவேன் அரகரா - என்ன செய்குவேன்.

சிவனே! என்ன செய்வேன்! இந்தக் குழப்பங்களெல்லாம் தாமாக வந்தனவல்ல! நமக்கு நாமே உண்டாக்கிக் கொண்டவையே யாகும். எனக்கு நிகரான இந்த நிலவுலக மன்னரெல்லாம் என்னை மிகவும் சிறியவன், அற்பன் என்று இகழ்ந்து பேசுவார்களே! மகன் செய்தது ஒரு பகுதியே; ஆனால் முழுமைக்கும் நாமே பொறுப்பாகிறோம். சோம்பலினால் இனிமேலும் தாமதம் செய்வது அழகாகாது. அது வீண் மாயவித்தை என்று கூறி விடுவார்கள்.

பலநாள் தவம் செய்து பெற்ற மகனோடு இவ்வளவுநாள் மகிழ்ச்சியாக இருந்தது போதும் இதுவரை அவன் அறிவீனத்தைப் பற்றி தெரிந்து கொள்ளாமல் போனேன். அவன் பிறர்பொருளே என்பதைச் சிறிதும் சிந்திக்காமல் தவறு செய்துவிட்டேன். மகன் செய்த பழிக்குப் பரிகாரமாகிய இந்தத் தண்டனையை நானே நிறைவேற்றியிருக்கலாம். தவறி ஏமாந்துவிட்டேன். நாம் கொல்லலாமோ என்று எண்ணியே மந்திரியிடம் ஒப்படைக்க அவனும் நாம் கொல்லலாமோ என்று மாறிவிட்டான். என்ன செய்வேன்!

தியாகேசப்பெருமானே! உலகத்திற்கெல்லாம் ஒளிதருபவனே! பாம்பின் புற்றையே இருப்பிடமாகக் கொண்டவனே! திருவாரூர்த் திருத்தலத்தின் தலைவனே! பிடிவாதமாக எனக்கு இப்பெரும் பழியைத் தந்துவிட்டீரே! என்ன செய்வேன் என்று கூறி வருந்தினான் மன்னவன்.

தன்னில்வாறது - தானாகவருவது. கல்லை - பிணக்கு, குழப்பம். உத்தரவாதி - பொறுப்பாளன். ஆலசம் - சோம்பல். கண்சாலம் - கண்கட்டிவித்தை, மாயாசாலம். கோலம் - அழகு. உரியமுறை. வாசனை - அறிவும் அறிவீனமும். பரசுபன் - பிறர்பொருள் உரகம் - பாம்பு - (பாம்புப்புற்று). சலம் - கோபம், பிடிவாதம்.

சு.சொல் - 1. வார 2. வந்துதிக்கல்லை 3. உத்திரவாதி 4. ளீந்துதும் 5. ணாமே. 6. யானீர்றொரு 7. சலமுற்றின்னாளிந்த.

The king blaming himself

III. Spake the king in sorrow:
Lord Civan̲, I am really helpless!
All this muddle is my own making!
I am worried that all the other kings
Would look down on me with contempt.
Though the guilt is that of the son,
I am likely to be blamed.
No more time should be wasted,
I may be branded a hypocrite
If action is not taken forthwith.
Let me content myself
With the the pleasant days I spent with my son.
It is a pity I never realised
That he is so indiscreet.
My doting is to blame
Which seldom realised
That he does not really belong to me.
Casting aside sentiment,
I should have executed the punishment
Which I failed to do.
I entrusted the work to the minister
Which has boomeranged on me,
Since he had his own reservations.
Lord Tiyākēcā! The one shedding light!
The dweller in the snake pit!

The presiding deity of Tiruvārūr!
Why did you thrust on me this blame?

வசனம் - தன்னிலே யிவ்விதந் தானொந்துகொண்டு பின்னையு மெவ்விதம் பிறலாபிப்பன். (32)

Prose : After soliloquising for a while, the king continued with his lament.

(மன்னன் இறைவனிடம் முறையிடுதல்) **சிந்து**

112. ஏனிப்படி செய்தீர் அர்கரா - யேனிப்படி செய்தீர்
ஏனிப்படி செய்தீ - ரென்னை
யேச விந்தப்பூமி - பசு
மேனிப் பரமேஸ்வரி விளங்குஞ் சிவகாமி - அவள்தா
னெப்படிநெஞ் சிசைந்தா ளிதையவபி ராமி 5
தெனைப்பழி போடென்றீர் தியாகராய சுவாமி (ஏனிப்படி)
நீதந்தவ ராதே - யிதுவரை - சேதம்பட ராதே - புவி
நாதனென் றிருந்துமிந்த [1]நாளிலவ மாச்சு - உன்
பாதம்நம்பி னேனுக்குப் பலன்மெய்யாதே போச்சு - யிம்
மேதினியில் மானவற்கு மெத்தவுமேச் சாச்சு - யிக் 10
காதகங்கள் காட்டிப்பழிக் காரணநீச் சாச்சு (ஏனிப்படி)
குற்றம்வர லாச்சே - யும்மிடச்
[2]சித்தங்கிருபை போச்சே - சதா
நித்தமு முனைத்தொழுது நேசமற வேனே - வெகு
பத்தியா யிருந்தும்பழி பாவத்துக்கா ளானேன் - என் 15
புத்தியும் விவேகமும் புறங்கழித்துப் போனேன் - உன்
சத்திய மகுத்துவத்தைத் தானுமறி யேனே. (ஏனிப்படி)
எண்ணந் துலைவானேன் - மனத்தினில்
குண்ணும் படியானேன் - ஒரு
கண்ணும்பசு வாகிவந்த காரணவி னோதா - அமு 20
துண்ணும்பர மாத்துமா வுனக்குத்தெரி யாதா - நிலை
நிண்ணெனை யிரட்சியாமல் நீருமிந்தச் சூழா - புகழ்
திண்ணமான வாரூர் தியாக ராயா - நாதா
ஏனிப்படி செய்தீர் அரகரா!

இறைவனே! ஏன் என்மேல் இப் பழியைச் சுமத்திவிட்டீர்? இந்தவுலகமே என்னைப் பழிக்குமே! பசுமேனியையுடையவள், பரமேஸ்வரி, சிவகாமி, நல்ல இதயமுடைய அபிராமி, அந்த அன்னையாரும் இந்தப் பழியைச் சுமத்த மனம் விரும்பிவிட்டார்களே!.

இதுநாள் வரையில் நான் நீதி தவறினேனில்லை; என் நாட்டில் அழிவு எதுவும் நடந்ததே கிடையாது. இந்த நிலவுலகத்தின் தலைவன் என்று புகழ்பெற்றிருந்தேன். ஆனால் இன்று அவையாவும் வீணாயின. தியாகேசனே! உன் திருவடிகளையே துணையாக நம்பியிருந்த எனக்கு எல்லாம் பொய்யாகி விட்டது. மானமுடைய வீரனுக்குப் பெரும்பழியும் இழிவும் ஏற்பட்டுவிட்டது. இந்தக் கொலையான பெரும்பழிக்குரிய காரணமாகவும் நிலைத்துவிட்டது.

இறைவனே! இப்படி ஒரு பழி ஏற்படவும் தங்களுடைய உள்ளத்தில் திருவருளும் இல்லாமற் போயிற்று. எக்காலும் உன்னை வணங்கித் துதிக்கும் கடமையில் தவறினேனில்லை. அப்படி இருந்தும் பெரும்பழியும் பாவமும் வந்து சேர்ந்து விட்டன. என் அறிவும் திறமையும் முழுமையாகத் தோற்றோடிப் போய்விட்டன. தங்களுடைய மேன்மைகளை யெல்லாம் இதுவரை அறியாமற் போனேன்.

ஐயனே! என்னுடைய உண்மையான எண்ணமெல்லாம் குன்றிப்போய் விட்டன கன்றும் பசுவுமாக வருவதற்குரிய மூலகாரணனான தலைவனே! தேவாமிர்தத்தை ஏற்கும் பரம்பொருளே! திருவாரூர் தியாகேசப்பெருமானே! எனக்குத் துணையாக இருந்து அருள்புரிவீர் என்று நம்பினேன். தாங்களும் இந்தப் பழியைச் சுமத்தி என் புகழை அழிக்க விரும்பினால் நான் என்ன செய்வேன் என்று இறைவனிடம் முறையிட்டுக் கொண்டான் மன்னன்.

ஏசுதல் - வைதல், பழித்துத் திட்டுதல். இதயம் -உள்ளம். நீதம் - நீதி. சேதம் - உயிர்ச்சேதம், அழிவு. நாதன் - தலைவன். அவம் - வீண். மெய்யாதேபோதல் - பொய்த்துப்போதல். மானவன்- மானமுடையவன், வீரன். காதகம் - கொலை. விவேகம் - பகுத்தறிவு. புறங்கழித்தல் - தோற்றோடல். மகுத்துவம் - மகத்துவம் - மேன்மை. குண்ணுதல் - குன்றுதல், கெடுதல் நிண்ணு-நின்று,இருந்து.

சு.சொல் - 1. ளாளிலவ 2. சிற்றங்கிறுபை.

Appealing to the Lord

112. Almighty Lord!
It is a pity you have brought
Shame on me.
I stand humiliated
Before the whole world.
Mother of the Universe, Paramēsvari!
Apirāmi with a kind heart!

How did you give your consent
To the thrusting of sin on me?
So far I have never been unjust,
No sinful deed has been done in my land,
I was proud of my standing
Which has now been eclipsed.
Tiyākēcā, your fervent devotee
Has been made to eat humble pie.
An honourable man
Has experienced a mighty fall!
Great lord, how is it you have forsaken me
At the hour of trial?
I have never failed in offering prayers
Yet great shame has become my lot.
Revered Sire, all my lofty ideals
Have been brutally shattered!
Lord who willed that the cow should cause me grief!
Great one fond of nectar!
Tiyākarāca of Tiruvārūr!
I fondly hoped you would stay by me,
But alas, my hopes have been blasted.
If it is your wish that I suffer
I am totally helpless!

வசனம் - இன்னு மென் சொல்லுவான் (33)

Prose : What more did he say?

(மன்னன் தியாகேசரிடம் தன்னை மன்னிக்க வேண்டுதல்) **சிந்து**

113. தியாக ராயரே சாகரத்தை நீந்தென் - றென்னைத்
[1]தள்ளினீ ரெல்லாரு முன்னே (தியாக)
யித்த னைத்துயர் செய்தீரே - முத்தியைத் தருகுவீரோ (தியாக)
கண்பழிக்குப் பிள்ளையாச்சே - காரண மிப்படி யாச்சே (தியாக)
சற்றேனுங் கடைக்கண் பாரும் - சுவாமியுன் பாதாரந் தாரும் (தியாக) 5

சின்னறிவே [2]னிந்நாள் துள்ளுந்

தீங்கெல்லாம் பொறுத்துக் கொள்ளும் (தியாக)

[3]கர்த்தனே தெய்வம்நீ யொன்றே

கருணைசெய்து [4]காப்ப தென்றேன் (தியாகராயரே)

தியாகேசப் பெருமானே! மக்கள் முன்னிலையில் என்னைக் கடலில் தள்ளி விட்டு நீந்தி வா என்கிறீர்! பெருந்துன்பத்திற்குள்ளாக்கிவிட்டீரே! எனக்கு முத்தி தருவீரா? கன்றைக் கொன்றவன் எங்கள் மகனாயிற்றே! திருவருட்பார்வை செலுத்தி உங்கள் திருவடிகளையடைய அருள்புரியுங்கள்! சிற்றறிவுபடைத்த என்னுடைய தீயசெயல்களைப் பொறுத்து அருள்புரிந்து என்னைக் காத்தருள்வீராக என்று வேண்டினான் மன்னன்.

சாகரம் - கடல். முத்தி - மோட்சம். கண் - கன்று. கடைக்கண் - திருவருள். பாதாரம் - திருவடி

சு.சொல் - 1. தள்ளிநீரெல்லாரு 2. னின்னாள் 3. கறதனே 4. காறபதென்.

Seeking God's pardon

113. Lord Tiyākēca!
You have pushed me into mid sea
Before the populace
And want me to swim ashore.
Such great suffering is my lot
That I wonder whether I would get liberation.
After all, the killer of the calf
Is my own flesh and blood!
How I wish you cast your kind glance on me,
Forgiving my trespasses.

(அமைச்சனின் முடிவைத் தேவிக்கு உரைத்தல்) சம்பை

114. [1]இந்தடவதாய் மன்னவன் யீசுவரனை நொந்துகொண்டு
சிந்தையுடனே அரசன் தேவிமனை வந்தான்
பிள்ளைதனை [2]வளர்த்திந்நாள் கொள்ளைகொடுத் தோமென்று
உள்ளமுருகி [3]நேத்திர வெள்ளமது பாய
யிருந்தவளை ராசேந்திர னென்னடி நமக்கென்று 5
திரும்பிவந்த [4]வபகீர்த்தி யறிந்தபடி யிலையோ
வினவிடாய் மந்திரிக்கு வெகுமானந் தந்தனுப்பி
தனையனிட்டு வந்தபழி தனையகற்று மென்றோம்

நல்லதென்று போய்ப்பிள்ளை நளினமுகம் பார்த்தவனைக்
கொல்லமன மின்றியிவன் வல்லுயிரை மாய்த்தான் 10
நீதிபூ ஷணன்பழிக்கு [5]நிறைகொடுக்க நாமாச்சென்
றாதிபன்சொலவப் போதுதுரை மாதலறி வீழ்ந்தாள்.

வருத்தமடைந்த மன்னவன் பலவாறு இறைவனை நொந்துகொண்டு, பட்டமாதேவியின் அரண்மனைக்கு வந்தான். இவ்வளவு நாட்களாய்ப் பிள்ளையை வளர்த்துப் பறிகொடுத்துவிட்டோமே யென்று மனம் வருந்திக் கண்ணீர் பெருக உள்ளம் நொந்துகிடந்த தேவியைக் கண்டான். தேவியை நோக்கி, மீண்டும் நமக்கு வந்த இழிவைப் பார்த்தாயா? கேள்!

மகனால் ஏற்பட்ட பழியைப் போக்குவாயாக என்று ஆணையிட்டு வேண்டிய பொருளையுங் கொடுத்து அமைச்சரை யனுப்பினோமல்லவா? நம்மிடம் சரி! அப்படியே ஆகட்டும் என்று கூறிச் சென்ற அமைச்சர், பிள்ளையின் களங்கமற்ற முகத்தைப் பார்த்து, அவனைக் கொல்ல மனமில்லாமல் தம் உயிரையே போக்கிக் கொண்டிருக்கிறார். அந்த நீதிபூஷணனுடைய உயிருக்கு நியாயம் கொடுத்துச் சரிசெய்ய வேண்டாமா? நாம் தானே செய்தாக வேண்டும் என்று கூறினான் மன்னன். தேவியானவள் மீண்டும் அலறி விழுந்தாள்.

நேத்திரவெள்ளம் - கண்ணீர்ப்பெருக்கு. வெகும்ானம் - அன்பளிப்பான பொருள். தனையன் - மகன். நளினம் - இங்கிதம், களங்கமற்றது. வல்லுயிர் - அரிய உயிர். நிறை - நியாயம், உறுதி.

சு.சொல் - 1. இந்தடதாய் 2. வளத்தின்னாள் 3. யநெற்றிர் 4. வபகீற்தி 5. நிரைகொடுக்க.

Disclosing the death of the minister to the Queen

114. The sorrowing King
Cursing God's unkindness
Went to the palace of the queen
Where he saw her sunk in grief
Lamenting the fate of her son
Brought up with so much care.
The King chose to address the Queen:
Dear one, do you know that
We have again become great sinners.
I sent the minister with enough resources
To take steps to redeem us from guilt.
Though he agreed to execute my order,
He could not since the innocent face of our son

Moved him to pity and tears.
Look, instead of killing the boy,
He has killed himself.
Is it not our bounden duty
To recompense his untimely death?
On hearing this sad piece of news,
The Queen fainted.

(தேவியின் வருத்தம்) ஏகதாளம்

115. திடுக்கிட் டெழுந்திருந்து தேவரீ ருடனே
யடிக்கட்டை யாவனு [1]மடிமையு மென்றாள்
நரபதி யேயிந் தப்பழி வருமோ
அரகர சிவனேயென வுருகினள் மிகவும்
ஐயோ சிவனேநமக் கருளென்ன செய்தனர் 5
பொய்யாய் [2]முடிந்தது வைபோக மெல்லாம்
மைந்தனிட் டேபழி மலையா [3]யனைவருஞ்
சிந்தவு மாச்சுது சிவனிட செயலோ
யிருதலைக் கொள்ளி [4]யெறும்பது போல்மெத்த
விரிதுய ராய்ச்சிவ விசேஷத்தி னாலே 10
திண்டிக்கு ளெளியதுஞ் [5]சிந்த வலியதும்
மண்டிக்கொண் டாலென்ன மனத்துய ராச்சு
[6]போனதெல் லாமொரு புழுதியி லனுபவிப்ப
வானது மாந்தர மானது வாச்சு.

மன்னன் கூறியதைக் கேட்ட தேவி திடுக்கிட்டு ஐயனே! அமைச்சன் தங்கள் கட்டளைக்குக் கீழ்படிபவன்; தங்களுடைய அடிமையும் ஆவான் என்று கூறியவளாய், அரகரா! சிவபெருமானே! மீண்டும் ஒரு பழியா? இறைவா! எங்களுக்கு என்ன அருள்புரிந்தாய்? எல்லாம் வீணாய் முடிந்து விட்டதே! எங்களுடைய பெருவாழ்வு முழுமையையும் எங்களுக்கு மகனைக் கொடுத்து அழித்துவிட்டீர்களே! இருதலைக் கொள்ளியிடையே சிக்கிய எறும்புகளாகி விட்டோம். மிகுந்த துன்பம் வந்து சேர்ந்துவிட்டது. சிவனுக்குச் செய்த திருவிழாவின் பயனாக அரசுக்கே கேடு வந்துவிட்டது. மிகச்சிறியனவெல்லாம் அழிய, பெரும்பழி வந்து நிறைந்துவிட்டது போன்ற துன்பம் வந்து சேர்ந்துவிட்டது. எல்லாவற்றையும் புழுதியே அனுபவிக்கப் பரந்தவானமானது மேகஞ்சூழ்ந்தது போன்று ஆகிவிட்டது என்று கூறி வருந்தினாள்.

அடிக்கட்டை - அடங்கி நடத்தற்குரியவன், அடிமை. நரபதி - மக்கள் தலைவன். வைபோகம் - பெருவாழ்வு. திண்டி - அரசு. சிந்துதல் - கெடுதல். மண்டுதல் - நிறைதல். வான்- ஆகாயம். மாந்தரம் - மந்தாரம் - மேகம்சூழ்தல்.

சு.சொல் - 1. மடுமையு 2. முடிந்துது வைபோகம்மெல்லாம் 3. யனவருஞ் 4. யெரும்பது 5. சிந்தவிலியதும் 6. போனதெல்லாம்மொரு.

The Queen's sorrow

115. Spake the Queen:
Sire, the minister is your subordinate
Supposed to carry out your commands!
But alas, great lord, *Arakarā!*
His unexpected death has placed
Another blame at our door.
Almighty, vain is your boon
Of blessing us with a bonny boy!
All is lost now
And we are in a fix.
The glorious festival of Lord Civaṉ
Has struck at the roots of the Kingdom.
Our predicament resembles
The beclouded sky
Where dust rules the roost.

வசனம் - இத்தனைத் துயரா யிருதயம் புண்ணாகி நொந்துதன் கணவனுக் கெந்தடவுரைட்டாள். (34)

Prose : How could the sorrow, laden queen speak to her husband?

(அமைச்சன் உயிருக்கு ஈடாகத் தன் உயிரைத்தர தேவி விரும்புதல்) திரிபுடை

116. தேவரீர்க் கடியா ளல்லோ[1]நான்
தேவரீர்தமக் கடுத்த பழிக்கெந்த
னாவிதனைத் [2]தருவேனிந் நாழியிற் - போவதென்றாள்

பன்னிதனை யொற்றியாக்க விலைக்கிறையம்
படுத்தமாய்க்கப் பத்தாவின் சுதந்திர 5
மென்று புகலுவ ராகையால்நான் - சொன்னபடியே

மந்திரிபழி தனக்கென்னைக் கொடுத்தொரு

மந்திரிதனை வைத்துக்கொண்டிவ் வுலகத்தை

யந்தமாய்ப் [3]பரிபாலனஞ் செய்ய - சிந்தை செய்குவீர்

மன்னவா நான்சொன்ன படிசெய்ய 10

மனதுகொள்ளு மென்றா ளப்போதந்த

மன்னவன் மனையாட்டி வார்த்தையைமறுத் - தென்புகல்வான்.

தேவி மன்னனைப் பார்த்து, ஐயனே! நான் தங்களின் அடியவள்; தங்களுக்கு வந்த பழிக்கு என் உயிரைத் தருகிறேன்; இப்பொழுதே என் உயிர் போகட்டும்.

மனைவியை ஈடாக வைக்கவோ விலைக்கு விற்கவோ உயிரைக் கொல்லவோ கொண்ட கணவருக்கு முழுச்சுதந்திரம் உண்டு என்பார்களே! எனவே நான் வேண்டிக் கொண்டபடியே மந்திரியால் ஏற்பட்ட பழிக்கு என் உயிரைப் பலியாக்கிவிட்டு, வேறொரு அமைச்சரை நியமித்து இந்நிலவுலகத்தை ஆட்சிபுரிய அருள்புரியுங்கள். அரசே! நான் சொன்னபடி செய்யுங்கள் என்று கேட்டுக்கொண்ட தேவியின் வேண்டுகோளை மறுத்து அரசன் கூறுகின்றான்.

ஆவி - உயிர். பன்னி - தேவி, மனைவி. ஒற்றி - ஈடுவைத்தல். மாய்த்தல் - கொல்லுதல். பத்தா - கணவன். பரிபாலனம் - அரசாட்சி.

சு.சொல் - 1. னான் 2. தருவேனின்னாழியிற். 3. பரிபாலஞ்செய்ய.

The Queen offers her life in recompense

116. Revered sire, as your loving dependant,
I am willing to give up my life
To wipe off the blame
That has befallen you.
A husband is empowered
To sell his wife,
Nay, even take her life!
Allow me to lay down my life
As recompense for the minister's death.
Find a new minister
And continue with the ruling.
The king turned down the queen's request
And addressed her with love.

(மன்னன் தன் பழியைத் தானே ஏற்கவேண்டும் எனல்)

ஏகதாளம்

117. காரண மாக கங்காதரனார் பரி
பூரண மாயிந்த புதுமைகள் செயச்சே
பழிகார ணத்துக்குப் பாரியைக் கொடுத்தந்தப்
பழியெந்தப் பிறப்பினில் பரிகரித் திடுவேன்
தன்னால் வரும்வினை தான்கழிப் பதுநன்மை 5
யென்னா லாங்கவை யுன்னா லாமோ
பேதாய்நீ சொன்ன பேச்சிந்த லோகத்துக்கு
நீதா சார மிப்போதா காதே
சகலவல் லவன்தனைச் சந்ததியாக் கொண்டிவ்
வுலகந் தனைப்புரந்து சுகமுடனி ரென்றான். 10

திருமுடியில் கங்கையைத் தரித்தவனாகிய சிவபெருமான் ஏதோ ஒரு காரணத்திற்காக இந்தச் சோதனைகளைச் செய்து வருகிறான் எனக்கு ஏற்பட்ட பழிக்காக என் மனைவியின் உயிரைக் கொடுத்தால் அதனால் வரும்பழியை எந்தப் பிறவியில் போக்குவேன்? என்னால் ஏற்பட்ட பழியை நானே போக்குவதுதான் நீதி. தேவி! நான் செய்யுஞ் செயல்களை உன்னால் செய்யமுடியுமா? நீ சொல்லுவது இந்த உலக நீதியாகாது. நீதிபூஷணனின் மகனாகிய சகலவல்லவனையே நம் சந்ததிக்குரியவனாக ஏற்றுக்கொண்டு இந்த நிலவுலகத்தை ஆட்சி செய்து சுகமாக வாழ்ந்திருப்பாயாக என்று; கூறினான் மன்னன்.

பரிபூரணம் - முழுமை செயச்சே - செய்யச்சே - செய்யும்பொழுது. பாரி - மனைவி. பரிகரித்தல் - போக்குதல் கவை - செயல். நீதம் - நீதி. சகலவல்லவன் - நீதிபூஷணன் மகன். புரத்தல் - பாதுகாத்தல்.

The king wants to shoulder the blame

117. Spake the King:
We do not know
Why the great lord
Who wears the Ganges on His matted locks
Is making us face tribulations.
If I take your life
To redeem my sin,
Will it not be yet another sin
To be atoned for?

In which birth of mine
Shall I expiate the new sin?
Dear one, justice demands
That I pay for my lapses.
Your suggestion is unethical
And violates the principle of fair-play.
I suggest you adopt Nitipūṣaṇaṉ's offspring
As your own
And rule the kingdom with his aid.

(சகலகலைவல்லவன் என்னும் அமைச்சனை நாடாளச் சொல்லுதல்) **சம்பை**

118. சகலகலை வல்லவனைத் தானழைத்து ராசேந்திரன்
சுகமுடனிப் புவியாண்டு சுகித்திருமென் றானே
நந்தேவி தனக்குச்சுத னாகவே நீயிருந்து
சிந்தாகுல [1]மில்லாட்குத் தேற்றுவையென் றானே
என்றுசொல்ல மந்திரியு மிகுகண்ணீ ரூற்றாகி 5
வென்றிமன்ன [2]ரேயானு மொன்றுவனென் றானே
நல்லறிவு தேவரீர் நடந்தபின்பு நானிந்த
[3]புல்லறிவ னென்றுலகு புரக்கும்வகை யுண்டோ
குலிகையில் [4]லாவீட்டில் திஷ்டியு மட்டவை
குலாவுவது போலடியேன் பூவுலகை யாளல் 10
வேங்கையிருந் திடுமிடத்தில் [5]வெருகைவைத்த கதையாச்சென்
றேங்கியழு தான்மந்திரி யோங்கிவலு வாக.

தேவிக்கு அறவுரை கூறிய மன்னன் நீதிபூஷணனின் மகனாகிய சகலவல்லவனை அழைத்தான். பட்டமாதேவியாருக்கு மகனாக உடனிருந்து, அவர்களுடைய மனக்கவலைகளைப் போக்கி என்னுடைய இடத்திலே இருந்து நாடாண்டு மகிழ்ந்திருப்பாயாக என்று கூறினான். இதைக் கேட்ட அமைச்சன், கண்களில் நீர்பெருக, மன்னரைப் பார்த்து வெற்றிக்குரிய மன்னவரே! தங்கள் ஆணையைச் சிரமேற்கொள்ளுகிறேன். ஆனால் பேரறிவு படைத்த தாங்களாட்சி புரிந்த நாட்டில், சிற்றறிவு படைத்தவனாகிய அடியேன் ஆட்சிசெய்வது என்பது பொருந்துமா! அடியேன் இந்த நிலவுலகை ஆள்வது என்பது பெண்களில்லா வீட்டில் பாம்பு முதலான உயிர்கள் உலவித் திரிவது போன்றது ஆகும் அல்லவா? மேலும் இந்தச் செயல் ஒரு பெரிய வேங்கைப்புலி இருக்கவேண்டிய இடத்தில் ஒரு காட்டுப்பூனையை கொண்டுபோய் வைத்ததற்குச் சமமாகிவிட்டது என்று கூறிக் கண்ணீர்விட்டு அழுதான்.

புவி - பூமி. நந்தேவி - நம் + தேவி - பட்டமாதேவி. சுதன் - மகன். சிந்தாகுலம் - சிந்தை + ஆகுலம்; சிந்தை - மனம். ஆகுலம் - கவலை. இல்லாள் + கு - இல்லாட்கு - மனைவிக்கு. தேற்றுவ - ஆறுதல் செய்க. ஒன்றுதல் - இசைதல். புல்லறிவு - சிற்றறிவு. புரத்தல் - காத்தல். குலி - மனைவி, பெண். திட்டி - பாம்பு குலாவுதல் - உலவுதல். வேங்கை - புலி. வெருகு-பூனை.

சு.சொல் - 1 மில்லாழ்குத் 2. ரேயானும் மொன்றுவ 3. புல்லறிவுனென்று 4 லாவீட்டில்த்திஷ்ட்டியு 5. வெருதை.

As king Cakalakalai vallavan̲ to rule

118. After delivering a sermon to the queen
The king summoned the minister's son
Cakalakalai vallavan̲
And asked him to be a surrogate son to the queen
Ruling the kingdom with diligence.
On hearing the appeal,
The minister's son spoke
Tears welling up profusely:
Revered sire, I am bound to obey you.
But will I not be unequal to the task
Since I do not measure up to your wisdom?
My ruling the Kingdom in your place
Would be like snakes prowling about in a house
Lacking the protective care of a woman
Can a wild cat be a substitute
For a ferocious tiger?

(தேவியிடம் அமைச்சனை மகனாக ஏற்கச் சொல்லுதல்) **ஏகதாளம்**

119. இப்படித் துயர்செய்யு மிவனைமன் னவன்சொல்வான்
எப்படி யும்புவி [1]புரப்பவன் நீதான்
நம்மிட சொற்படி நடந்தனை யேயிப்ப
உம்மிட வாய்சொன்ன [2]துறுதிபற் றென்றான்
பூவையே நீபெற்ற புத்திரி யாய்க்கொண்டு
பூவுல காளெதிர் வாய்மைசொல் லாதே.

மன்னன் ஏங்கியழுதுக் கொண்டிருந்த அமைச்சனைப் பார்த்து, அமைச்சரே! எவ்விதமாயினும் இந்த நாட்டை நீதான் ஆட்சி செய்தாக வேண்டும்; இதுவரை எம்முடைய

ஆணையின்படி நடந்துகொண்டாய்; இனிமேல் உம்முடைய ஆணையே நாட்டிற்கு நல்லதைச் செய்யும்; நல்லதையே பின்பற்றுவாயாக என்று கூறினான். பட்டமாதேவியைப் பார்த்து, பூவையே! சகலவல்லவனையே நீ பெற்ற மகனாக ஏற்றுக்கொள்! எதிர்வார்த்தை எதுவும் சொல்லாமல் இந்த நாட்டை ஆண்டுவருவாயாக என்று கூறினான்.

புத்திரி - மகள்; இங்கு - புத்திரன் என்றிருத்தல் வேண்டும் எதிர்வாய்மை - மறுத்துக்கூறுதல்.

சு.சொல் - 1. புறப்பவநீதான் 2. துறிதி.

Appealing to the queen to adopt the minister's son

119. The King spoke to the minister's son
Who was sunk in deep sorrow:
Honourable son, I want you
To take over the reins of government.
All these years you carried out
My commands and orders.
Hereafter your actions shall be
The guiding force of the state.
May I appeal to you
To always uphold virtue?
Addressing the queen, the King said:
Let Cakalakalai vallavan
Take the place of your son.
Without raising any objections,
Begin ruling the kingdom in right earnest.

வசனம் - இவ்விதம் மந்திரிக்கும் தம்மிட தேவிக்கும் வேண்டிய வுபசரணை சொல்லி, நல்லோர் பெரியோர்களுக்கும் அவரவர்க்கேற்ற விசேஷஞ் சொல்லி, சபாமண்டபத்திலே வந்து தம்மிட சேனைபரிவாரத்துக் கெல்லாஞ் சொல்லத்தக்க வசனத்தைச் சொல்லி, சகல ஆஸ்பதமும் மந்திரி வசம் பண்ணுவித்து, ராசேந்திரசோழனும் பட்டத்தானை மேலேறிக் கொண்டு வீதியில் நடக்கும்போது துரை பெண்சாதி பட்டமாதேவி எப்படியிருந்தனள். (35)

ஆஸ்பதம் - பொறுப்பு, புகலிடம்.

Prose : In what state was the queen, when the king rode through the streets on the royal elephant, after handing over charge to the minister and completing the other formalities with soldiers and elders?

(தேவியின் வருத்தம்) **சிந்து**

120. சங்கரா உமக்கிப்போ சந்தோஷ மாச்சுதே
தமியேன் கெட்டழ லாச்சுதே
அங்க மிரண்டுயி ரொன்றா மதுபோலவே
யிருந்த வரசனையுந் துலைய நினைந்தீர் (சங்கரா)

புத்திரனைப் பறித்துக்கொண்டு போனதுமல் லாலெனது 5
புருஷனை யிவ்வழி செய்தியே
இத்தலத்தி லிருப்பதுமக் [1]கிதயம்பிடி யாமலே
யிதிக்கமே நடத்தி னீரே (சங்கரா)

வீறுபுக ழாய்வேந்தன் வீதிவிடங் கருமிருந்த
விடமெல்லாம் [2]பார்த்தளவிலே 10
நீறுதண லாயெனது நெஞ்செலாங் கொளுந்தியுயிர்
நில்லாம லலைமோதுதே (சங்கரா)

மாறுமோ மனத்துயர மாளுமோ என்காய
மாண்டு மண்ணாகிலும்
ஆறுமோ ஆறாது ஐயோயிந் தக்குறையும் 15
புவிக்கெங் காகிலுமுண்டோ (சங்கரா)

என்னையொரு சீவனையு மிவ்வண்ண மாய்த்தவிக்க
வெண்கண்ண னெழுதினானோ
யின்னாளி லிந்தடவி லீடழிப்ப தாய்க்கயிலை
யீசனெண்ணிய வெண்ணமோ 20
சங்கரா வுமக்கிப்போ சந்தோஷ மாச்சுதே
தமியேன்கெட் டழலாச்சுதே.

இறைவனே! உடல் இரண்டு உயிர் ஒன்று என்பார்களே, அதுபோலவே வாழ்ந்தோம். ஆனால் அரசனை என்னிடமிருந்து பிரித்து விட்டீர்களே! முன்பு என் மகனைப் பிரித்து விட்டீர்கள்; இப்பொழுது கணவனையும் இவ்வாறு செய்துவிட்டீர்கள். நாங்கள் இந்தத் திருத்தலத்திலே வாழ்ந்திருப்பது தங்களுக்குப் பிடிக்கவில்லை போலும்!

பெரும்புகழ்வாய்ந்த மன்னனும் என்மகனும் உலவிய இடத்தை எல்லாம் பார்க்கும்பொழுது என்னுடைய மனம் கொழுந்துவிட்டெரியும் நெருப்பைப் போலப் பற்றி எரிகிறது. உயிர் அலைமோதுகிறது. என்னுடைய துயரம் நீங்குமா அல்லது உடலே அழியுமா? நான் மாண்டு மடிந்து மண்ணோடு மண்ணாகக் கலந்து போனாலும் என் மனம் ஆறவே ஆறாது. இந்தக் குறைபாடு பூமியில் இதுவரை யாருக்குமே வந்ததில்லை

இந்த ஒரு உயிரை மட்டும் இப்படித் தவிக்குமாறு பிரமன் எழுதிவிட்டான். இந்த நாளில், இந்த வகையில் ஈடழிய வேண்டும் என்று கயிலைவாழ் இறைவன் எண்ணிவிட்டான் போலும்! நடந்த நிகழ்ச்சியை எல்லாம் பார்த்துவரும் இறைவனே! நான் இவ்வாறு கெட்டு அழிவதைப் பார்த்தபிறகு மகிழ்ச்சிதானே என்று புலம்பினாள் தேவி.

தமியேன் - தனித்த நான். அங்கம் - உடல். இதயம் - மனம். இதிக்கம் - இப்படி. வீறுபுகழ்-பெரும்புகழ். நீறுதணல் - எரிந்த நெருப்பு. கொளுந்துதல் - பற்றுதல். காயம் - உடல். ஆறுதல் - தணிதல்; ஓய்தல் சீவன் - உயிர். வெண்கண்ணன் - பிரமன், எண் கண்ணன் எனினும் அமையும்.

சு.சொல் - 1. கிதையம் 2. பாத்தளவிலே.

The Queen's grief

120. Great lord Civā!
.My loving husband and I
Lived in utmost harmony
Enjoying perfect connubiality,
With two distinct bodies, but one soul
Great lord, earlier you were instrumental
In separating my son from me.
Now you are trying to take my husband also
Which makes me surmise
That you do not relish my presence
In the holy town
Of which you are the presiding deity.
My soul shall always burn in agony
At the sight of places
Dear to my husband and son.
Is there any end to my suffering,
Won't the body get destroyed?
Even if I am reduced to dust
After my demise
My soul shall not find any peace.
I wonder why the lord of Kailai
Has singled me out to wear the cross.
Oh God, are you deriving malicious pleasure
From my undeserved woes?

(மன்னன் தெருவழிச்செல்ல திருவாரூர் மக்கள் வருந்துதல்)

திபதை

121. மாதிந்த வண்ணமாய் மனத்துயர் கொண்டு
[1]போதுமென் னுயிரினிப் பொன்றுவே னென்றும்
ஆதர வார்நமக் காசையிங் கென்ன
நீதியு மல்லாநாம் நிலத்தினி லிருக்கக்
புருஷனைப் பிள்ளையைப் போக்கிய பின்பு 5
தரணியி லிருப்பது தன்மமே யல்ல
பாவி யிருக்கப் படாதுல கத்தில்
பாவி யிருந்தெப் பலனினி யென்று
புரவலன் தேவி புலம்பியே யிருக்கப்
புரவலன் வீதியிற் போவது கண்டு 10
ஆரூ ரெனும்பட் டணத்திலெல் லாரும்
[2]பேரார வாரமாய்ப் புறப்பட்ட கும்பு
கோவென்ற சத்தமக் கோமழை சிந்தி
யாவருஞ் சூழ்ந்துகொண் டரசனுக் குரைப்பார்
தேவரீர் பிள்ளைதான் சேங்கண் பழிக்காய்ப் 15
போவதென் றாச்சு பூபால னேநீர்
மந்திரி பழியுஞ் [3]சுமந்ததென் றேநும்
பொந்தியை விடுவது புகழ்ச்சியே யல்ல
ஆட்டியன் சொற்படி யமைச்ச னிணங்கிக்
கேட்டு நடப்பது [4]கீர்த்தியா மந்திரி 20
யானவன் துரைசொன்ன தைத்தள்ளித் தானே
போனவ னுக்கென்ன பூபனே பழிகள்
வேண்டா மெனச்சொல்லி வேந்தனை வெகுவாய்
வேண்டி வேண்டித் தழுவிப் பிடிப்பாரும்
தந்தைபோ லெங்களைத் தற்காத்து ரக்ஷித் 25
தெந்த நாளுஞ்செழிப் பெய்தவே யுலகைக்
காத்தவ ரேயிது காரண முமக்கு
[5]வாய்த்ததோ வெனமுகம் வாடிநிற் பாரும்
மைந்தன் பிதாயிரு வருக்குமொன் றாக
[6]வந்ததைப் பாரென்று வசனிக்கும் பேரும் 30

எமக்கெப் படிஐயோ விறைவாவென் றேங்கிக்
குமுக்கென்று மார்பினில் குத்திக் கொள்வாரும்
துரைபோன பின்னென்ன சுகமென்று கூட
மரணா கதிசெய்ய மனந்துணி வாரும்
குமுறிக் குமுறியே கொள்ளொணாத் துயராய்க் 35
கமறிக் கமறிக் கலங்கிநிற் பாரும்
[7]வயிறுங் குடலது மண்டி யெரிந்து
நயனஞ் சிவந்துதள் ளாடிநிற் பாரும்
தெய்வந்தா னென்னென்று [8]செய்ததை யையோ
தெய்வமே யெனமனந் தேறிநிற் பாரும் 40
தன்மதா னஞ்செய்யுஞ் சத்திய துரைக்குக்
கன்மமே யென்றுளங் கல்லையா வாரும்
பாழும் பசுவந்து பழிபோட்டு வேந்தன்
வாழ்வைக் குலைத்திட [9]வந்ததென் பாரும்
கூற்றுவப் பசுவினால் [10]கொற்றவன் வாழ்க்கை 45
[11]பாழ்த்ததென் றேயுடல் பதைத்தழு வாரும்
பேரிடி யாய்வந்து பிறக்குமோ வென்று
மாரடி யாய்க்கண்ணில் மழைசொரி வாரும்
புண்ணிய முஞ்சிவ பூசையுந் தன்மம்
பண்ணியு மென்னதான் பாழாச்சென் பாரும் 50
தேவனைத் தொழுமிரா சேந்திர [12]னார்க்குப்
பாவமெப் படிவந்து [13]படர்ந்ததென் பாரும்
பாவமா கினுமந்தப் பரமேஸ் வரன்தான்
நீவொணா தோவென்று நிகழ்த்திநிற் பாரும்
யங்கிது புதுமையா மென்றழு தேங்கி 55
யங்கனே [14]நினைவுநீச் சற்றுநிற் பாரும்
நாமுந் துலைந்திட நாளாச்சு தென்று
பூமியில் வீழ்ந்து புரண்டழு வாரும்
சிவசிவ சிவசிவ தியாகரா யாயிவ்
வவதியேன் ராசனுக் களித்தாயென் பாரும் 60
கண்ணில்லை யாரூர்த் தியாகருக் கென்று
மண்ணை யெடுத்துவாய் மாறிக்கொள் வாரும்

வேந்தனைப் பார்த்து விழிநீ ருதிர்த்துக்
கோந்தங் கனேமெய் துவண்டுநிற் பாரும்
மன்னனைத் தோற்று மனமுந் தரிச்சு 65
யின்னமு மிருக்கவோ வென்றழு வாரும்
விண்பூத்த மீனென விழியிமைக் காமல்
கண்பூத்துக் காயங்க ளாய்த்துநிற் பாரும்
குடிகளெல் லாமிந்தக் கொற்றவ ரிருந்த
படியினால் வேண்டிய பாக்கியம் படைத்தோம் 70
இப்படிக் கொத்த ராசேந்திரன் போலே
ஒப்புவ மைக்குத்தா னுதவுமோ வுலகில்
யீரேழு சென்ம மெடுத்தபோ தினிலும்
நேராகு மோயிந்த நிருபனென் பாரும்
கலியுக [15]முடிந்ததோ காணப் படாதென் 75
றலையும்நெஞ் சாகியே யலைந்துழல் வாரும்
பரராச்சி யத்துள் பார்த்திபர் சோழ
துரையெனும் பழியைத் துலைக்குறோம் நாங்கள்
என்று மன்னவ னருகினி லிருந்துரைக்கி
லொன்றுஞ்சொல் லாததுக் குருகிநிற் பாரும் 80
தேறிய வறிவினோர் சிவபத்தி யுள்ளோர்
வீறிய வீஸ்வரன் விளையாட்டென் பாரும்
கடலைக் கடைந்தவக் காலத்தி லெந்தப்
படிசத்த மாச்சுதோ பரிசேயெல் லாரும்
அப்படி யாயிரைந் தழுதழு துருகிக் 85
கப்பி யலறவே காவல னானோன்
யித்தனை யுஞ்செவிக் கேறாது போல
புத்திர னிடத்துக்குப் புரவலன் செல்ல
வீதி விடங்கரும் வேந்தனைக் கண்டு
பாதகம் வந்ததைப் பரிகரி யென்றே 90
முகத்தெளி வாயிதே மோக்ஷம தென்று
தகப்பனார் தன்னிரு தாள்பணிந் தானே.

பட்டமாதேவி இறைவனிடத்து முறையிட்டு அழுது, நமக்கு இவ்வுலகத்தில் உதவி செய்பவர்கள் இனி யாரும் இல்லை; இங்கு ஒன்றிலும் நமக்கு ஆசையுமில்லை; மகனையும் கணவனையும் இழந்த பிறகு இந்தப் பூமியில் உயிரோடு இருப்பது

நீதியுமில்லை; தருமமுமாகாது. பெரும்பாவியாகிய நான் இந்த உலகத்தில் வாழ்ந்துதான் என்ன பயன் என்றெல்லாம் புலம்பித் தவித்தாள்.

அப்போது மன்னவன் திருவாரூர் தெருவழியாகச் சென்று கொண்டிருந்ததைப் பார்த்த மக்கள் கூட்டம் கூட்டமாய்க் கூடி ஆரவாரம் செய்தபடி அரசனைச் சூழ்ந்து கொண்டார்கள். அரசனைப் பார்த்து, அரசே! கன்றின் பழிக்காகத் தங்கள் மகன் உயிர்விட வேண்டும் என்று முடிவு செய்தீர்கள். மந்திரி இறந்த பழியும் வந்து சேர்ந்தது என்று தாங்களும் உயிரைவிட நினைப்பது நல்லதல்ல. மன்னவன் சொன்னதை ஏற்று அதன்படி செய்வதே அமைச்சரின் கடமையாகும்; அதுவே அமைச்சருக்குப் புகழ் தருவதுமாகும். ஆனால் அரசன் சொன்ன கட்டளையை மீறித் தானாக உயிர்விட்ட அமைச்சனால் பழி எதுவும் வந்துவிடாது என்றெல்லாம் கூறி மன்னனைத் தடுத்தார்கள். ஒரு சிலர் அரசே எங்களுக்குத் தந்தை போல இருந்து காத்து அருள்புரிந்து செழிப்பாக வாழச் செய்தீர்கள். தங்களுக்கு இப்படி ஒரு பழி நேர்ந்து விட்டது என்று கூறி வருந்தினார்கள். தந்தைக்கும் மகனுக்கும் ஒரு சேர வந்த பழியைப் பாருங்கள் என்று கூறி அய்யோ! இறைவா! என்று கதறி மார்பில் அடித்துக் கொண்டவர்கள் ஒரு சிலர். அரசன் போனபின்பு நமக்கு என்ன வாழ்க்கை என்று இறக்கத் துணிந்தவர்களும், மிகுந்த வருத்தத்தோடு உள்ளங்கலங்கி வயிறும் குடலும் எரிய கண்கள் சிவக்க தள்ளாடியபடியே அய்யோ! தெய்வமே! என்று கூறிக் கதறியவர்களும் பலர்.

தான தருமங்கள் பலவும் செய்து சத்தியத்தையே கடைபிடித்துவந்த மன்னனுக்கா இந்த நிலை என்று கூறி மனம் கலங்கினவர் சிலர். பாழாய்ப் போன பசுவானது வந்து வீண்பழியைச் சுமத்தி அரசன் வாழ்வைச் சீரழித்து விட்டதே! எமனாக வந்த அந்தப் பசுவால் அரசன் வாழ்க்கை பாழாயிற்றே! பல புண்ணிய காரியங்களையும் சிவ பூசைகளையும் தானதர்மங்களையும் செய்திருந்தும் அரசன் நிலை இவ்வாறாயிற்றே என்றெல்லாங் கூறி உடல் பதைக்க மார்பில் அடித்துக்கொண்டு கண்ணீர்விட்டு அழுதவர்களுமுண்டு.

இறைவனையே தொழுதுவரும் மன்னவனுக்குப் பாவம் எப்படி வந்து சேர்ந்ததோ! அப்படியே வந்தாலும் அந்த இறைவன் அந்தப் பாவத்தைப் போக்கக் கூடாதோ என்றெல்லாம் அழுது தங்களை மறந்து பூமியில் விழுந்து புரண்டு அழுதவர்களாகி சிவ சிவா! அரசனுக்கு இந்தத் தொல்லையை ஏன் கொடுத்தாய்? ஆரூர்த் தியாகேசருக்குக் கண்ணில்லையோ என்று கூறி அரசனைப் பார்த்துப் பார்த்துக் கண்ணீர் விட்டபடியே உடல் துவண்டு அங்கேயே அசையாமல் நின்றவர் சிலர். அரசனை இழந்து, அந்த இழப்பைத் தாங்கிக் கொண்டு இன்னமும் உயிரோடு இருக்க வேண்டுமா என்று கூறியவாறு நட்சத்திரங்களைப் போல கண்ணிமைக்காமல் உடல்சோர்ந்து நின்றவர் பலர். இந்த அரசனால் நாமெல்லாம் பெரும் பாக்கியம் பெற்று வாழ்ந்து வந்தோம். இவரைப் போன்றவர்கள் வேறுயாருமே இல்லை. ஈரேழு பிறவி எடுத்தாலும் இந்த மன்னவனுக்கு ஒப்பாவார் யாரும் இருக்க முடியாது. கலியுகமே முடிந்து விட்டது போலும்! பிற நாட்டு மக்களிடம் சோழனுக்கு நேர்ந்த பழியைப் போக்கிக் காட்டுவோம் என்று பலவாறு பேசிக்கொண்டார்கள். இவற்றையெல்லாம் கேட்டிருந்த மன்னனோ வாய்திறந்து எதுவும் சொல்லவில்லை. அறிவு சான்ற சான்றோர்களும் சிவபக்தர்களும் இதெல்லாம் இறைவன்

விளையாட்டு என்று கூறிக் கடலைக் கடைந்தபோது ஏற்பட்ட ஒலியைக் காட்டிலும் பேரொலி உண்டாகுமாறு அழுது அழுது உருகினார்கள். இவ்வளவையும் சிறிதும் காது கொடுத்துக் கேட்காத அரசன் மகனிருந்த இடத்தை அடைந்தான். வீதிவிடங்கனும் அரசனைக் கண்டு பழி நேர்ந்து விட்டதற்கு மன்னியுங்கள் என்று கூறியவாறு முகத்தெளிவோடு இதுவே பெரும்பேறு என்று எண்ணியவனாய்த் தந்தையின் திருவடிகளிலே விழுந்து வணங்கினான்.

பொன்றுதல் - அழிதல். ஆதரவு - உதவி. தரணி - நிலவுலகம். புரவலன் - பாதுகாப்போன்; மன்னன். ஆரவாரம் - பேரொலி. கோமழை - ஒலியாகிய மழை. பூபாலன் - அரசன். பொந்தி - உடல். ஆட்டியன் - ஆட்டுவோன், தலைவன், அரசன். பூபன் - அரசன்.பூ- பூமி. வசனித்தல் - பேசிக்கொள்ளுதல். மரணாகதி - மரணமடைதல்; இறத்தல். மண்டுதல் - மிகுதல், நெருங்குதல். நயனம் - கண். கன்மம் - பாவம். கல்லை - பிணக்கு, மாறுபாடு. மாரடி- மாரடைப்பு, சோர்வு. தேவன் - இறைவன். நீவுதல் - துடைத்தல். நினைவுநீச்சு - எண்ணம், சுயநினைவு. கோந்தல் - மனக்கோளாறடைதல். மெய்துவண்டு - உடல்வாடி. தரிச்சு - தரித்து - சகித்து. மீன் - விண்மீன், நட்சத்திரம். காயம் - உடல். ஆய்த்தல் - அசைத்தல். ஒப்புவமை - ஒப்பு - சமம்; உவமை - சமம்; ஒரேபொருள் தரும் சொற்களின் கூட்டு. ஈரேழு - பதினான்கு. சென்மம் - பிறவி. நேர் - ஒப்பு. நிருபன் - மன்னன். பரராச்சியம் - பிறநாடு. பார்த்திபர் - மன்னர். பரிசு - போல (அப்பரிசு - அதுபோல) பரிகரித்தல் - காத்தல், பொறுத்துக்கொள்ளுதல்..

சு.சொல் - 1. போதுமென்றுயிரினிப் 2. பேராபாரமாய்பிறப்பட்ட 3. சுமந்துதென்றேனும் 4. கீற்த்தியா 5. வாய்த்துதோ 6. வந்ததைதைப் 7. வயறுங் 8. செய்துதை 9. வந்துதென்பாரும் 10. கொத்தவன் 11. பாழ்த்துதென்றே 12. ணாற்குப் 13 படந்துதென் 14. நினவுநீச் 15. முடிந்துதோ.

The grief of the citizens at the sight of the king

121. The queen while appealing to the Gods
Underscored her utter helplessness,
Her indifference to worldly things
And the futility of prolonging life
After losing one's son and husband.
Meanwhile the king was passing through
The thorough-fares of Tiruvārūr
Surrounded by a throng of Citizens
Who greeted him vociferously.
Some chose to address the king:
Sire, you first decided
That your son shall die

For an offence against God.
Hearing the death of the minister,
You have volunteered to lay down your life
Which is highly improper.
A minister is bound to obey the King
Which shall add to his stature.
Who can blame the King
For the self - willed action of the minister
In taking his life?
It is a pity that undeserved blame
Has been placed at your door
Who have been more than a father to us.
In the name of the Almighty
The citizens expressed serious concern
At the sad predicament of the King and his son.
There were some among the populace
Who expressed sorrow by beating on their breasts.
A few emotional ones wanted to kill themselves
As life would lose its charm
After the demise of a good ruler.
Alas, what misery, exclaimed some,
Feeling it deeply in the pit of their stomach.
Their gait faltered
And eyes turned blood - red.
The sorrowing populace expressed its sympathy
In ways as varied as there were men:
Some catalogued the philanthropic acts of the King,
His sterling integrity, exemplary life
And lamented that all had gone to waste.
Some blamed the cow
Which had played the role of the lord of death
And shattered the King's life
Marked by kind deeds and acts of worship

The sentimental ones in the populace
Demonstrated their misery
By shedding copious tears
And beating on their breasts.
Some wondered why the pious king
Was subjected to such untold misery.
Is it not in the hands of the lord
To mitigate grief?
Has Tiyākēcar become blind
As he is not taking cognizance of the king's plight?
Why should we drag on our lives
After the death of the King
Observed some and stood with unwinking eyes
Like the stationary stars.
We enjoyed bliss under the benign rule of the King,
Can we find another like him?
The fervent Caiva savants
Who threw themselves into a tantrum,
Consoled themselves with the thought
That everything was the act of God,
Whose ways were mysterious and beyond human ken.
Ignoring the weird reactions of the citizens
The King went near his son.
Vitiviṭaṅkaṉ utilised the opportunity
To salute his father
And crave apology for the sinful act.

வசனம் - பணிந்த பிள்ளையைப் பார்த்திபன் கட்டியணைத் தெடுத்துக் கொண்டங்கேது சொல்வான் (36)

Prose : Hugging his son passionately, what did the King say?

(பணிந்த மகனுக்கு மன்னன் அறவுரை) சம்பை

122. அரிதாகச் சிவனரு ளாசைமகனே யுன்னைப்
பெரிதாக வளர்க்கச்சிவன் பறியாமல் போனான்

காசினியை நீயாள கயிலைமலை மேல்வாழும்
யீசனார் தமக்குமன மில்லாமல் போச்சு
நமக்குரிமை செய்துபல நாடுராச்சி யம்புரக்க 5
[1]உமக்கிஷ்டம் பொறாம லெமக்கும்வழி யாச்சு
மந்திரிபழி நமக்காச்சு மைந்தனே யாவளித்த
மைந்தன்பழி யுமக்காச்சு வள்ளலரு ளாலே
இவரவர்கள் செய்தார்க [2]ளென்றெண்ண வேண்டாம்
பரமசிவ னருளென்றே - மனது - தெளிந்துகோ மகனே 10
உம்மாலும் பழியில்லை எம்மாலுங் [3]குறைவில்லை
யம்மானைப் பிடித்தவர்செய் [4]தாரென்றறி கோமகனே
இன்னவழி [5]யாய்முடிந்த திருவருக்குங் கதியாச்சு
தென்னவழி சொல்கிறீ ரேதுபுத்தி [6]யென்றான்.

சிவபெருமான் அருள்புரிய மிகவும் அருமையாய்ப் பிறந்த அன்புக்குரிய மகனே! பெரும்புகழுக்குரியவனாக உன்னை வளர்க்க அந்தப் பெருமான் துணைபுரியவில்லை நீ இந்த நிலவுலகததை ஆட்சிசெய்ய கயிலைவாழீசனுக்கு மனமில்லாமற் போயிற்று நமக்கே உரிமையுடையவை என்று பல நாடுகளைச் சேர்த்து நீ அரசுபுரிவது அவனுக்குப் பொறுக்கவில்லை போலும்! அதுவே எங்களுக்கும் காரணமாயிறறு. மந்திரி இறந்த பழிவந்து சேர்ந்தது கன்று இறந்த பழி உனக்கு வந்து சேர்ந்தது. எல்லாம் இறைவனால் நேர்ந்தவை. மகனே! இவர்களால் வந்தபழி; அவர்கள் பழி சுமத்தி விட்டார்கள் என்று யார் மீதும் தவறாக நினைக்காதே எல்லாம் இறைவன் செயல் என்று எண்ணி மனம் தெளிவு பெறுக உன்னால் பழி வந்துவிடவில்லை; என்னாலும் எந்தக் குறையும் நிகழ்ந்துவிடவில்லை. எல்லாம் மானை ஏந்தியவராகிய இறைவனது செயலே என்று எண்ணுக. நம் இருவருக்குமே இக்கதி நேர்ந்துவிட்டது. நீ என்ன சொல்லப்போகிறாய் என்று கேட்டான் மன்னன்

பறிதல் - வெளிப்படுதல, துணையாதல், காசினி - நிலவுலகம். புரத்தல் - பாதுகாத்தல் ஆவளித்தல் - மைந்தன், பசுவின் கன்று அம்மான் - அந்தமான். மானைப்பிடித்தவன் - சிவபெருமான்.

சு.சொல் - 1. உமக்கிஷ்ட்டம் பொராமலே 2. ளென்ன வேண்டாம் 3. குறவில்லை 4. தானென்றறி 5. யாய்முடிந்துதிருவருக்குங் 6 யென்னான்.

The king's advice to his son

122. Son, born of the blessings of Civan!
God is not favourably inclined
To moulding you as a reputed personality.
He does not wish that you should

Hold sway over a big kingdom.
The death of the minister
Has worsened the situation
And reflects on us adversely.
Perhaps our doting on you too much
Accounts for the mishap that has befallen you.
But all are the acts of God,
So do not blame any one.
Find cheer in the thought
That God is the great prime - mover.
All the unfortunate happenings
Are the work of the Almighty
Holding in His hand the divine stag.
While bowing to divine will,
I should like to elicit your reaction.

(தங்கள் ஆணையை நிறைவேற்றுங்கள் என மகன் கூறுதல்)

திரிபுடை

123. புத்தி சொல்லென்று தந்தை கேட்டிடும்
போதி லேசிவ மனத்த னாகிய
புத்திர னானவன் தேவ ரீர்க்கென்ன
புகல்வ னென்று
சனக ரேயிந்தச் செனனம் நீரிறைக் 5
[1]குமிழிமாத்திர மில்லை யிதைநம்பி
கனவிலுஞ் சத்திய நீதி தன்மத்தைக்
கவரொ ணாதே
மின்னைப் போலெண்ணொ ணாத செனனமிம்
மேதினியி லெடுத்துழல்வ [2]தெந்தன் 10
தன்னைப் போலவர் கடக்க [3]மாதவர்க்
குன்னிப் பாரும்
கண்ணின் பழிக்கென்னைத் தேரி லூர்ந்தந்தக்
கடனைக் [4]கழித்துப்பின் தேவ ரீர்மனம்

எண்ணப் படியென்ன மோசொல் வேண்யிது 15
பண்ணு மென்றான்
மைந்த னென்முகம் பார்த்து வேறொரு
சிந்தை செய்யப்போ நீரய்யா [5]கிருபை
யெந்தன் மேல்கொண்டிப் பழியைத் துலைப்பது
உந்தன் பாரம் 20
தாம சங்களல் லாமல் செயுமென்று
தந்தை [6]தாள்பினு மைந்தன் பணியவே
பூம ரங்களி லொழுகுந் தேனெனப்
புனல் விழியிலே.

எப்போதும் சிவபெருமானையே துதித்து வருபவனாகிய வீதிவிடங்கன், புத்திசொல் என்று தந்தை கேட்டவுடனே தந்தையே! தங்களுக்கு நான் என்ன சொல்லப் போகிறேன்! நீர்இறைக்கும் போது உண்டாகும் நீர்க்குமிழி போன்றது இந்த மனிதப்பிறவி. இது நிலையானது என்று எண்ணி, சத்தியம், நீதி, தருமம் போன்றவற்றில் தவறிவிடக் கூடாது. இந்தப் பிறவி மின்னலைப் போன்று தோன்றி மறையும் ஒன்று. இது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. நான் இப்பூமியில் இப்பிறவி எடுத்து அலைவதை நினைத்துப் பாருங்கள். கன்றினால் ஏற்பட்ட பழிக்கு என் மீது தேரைச் செலுத்தி முதலில் தங்கள் கடமையை முடியுங்கள். பிறகு தாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று நினைக்கிறீர்களோ அதன்படிச் செய்யுங்கள். என் முகத்தைப் பார்த்து மகனாயிற்றே என்று எண்ணிவிடாதீர்கள். என்மீது கருணை வைத்து என்மீது ஏற்பட்ட பழியை நீக்குங்கள். இது தங்கள் கடமை. காலங்கடத்தாமல் உடனே நிறைவேற்றுங்கள் என்று கூறி மீண்டும் தந்தையின் திருவடிகளில் விழுந்து வணங்கினான். மலர் நிறைந்த மரங்களிலிருந்து தேன்வடிவதுபோல இருவர் கண்களிலும் கண்ணீர் பெருகியது.

சனகர் - தந்தை. செனனம் - பிறவி. நீரிறைக்குமிழி - நீர்க்குமிழ். கவர்தல் - கடத்தல், பறித்தல், மின் - மின்னல். உழலுதல் - அலைதல். உன்னுதல் - நினைத்தல். கண் - கன்று. கிருபை - கருணை, இரக்கம். பாரம் - கடமை. தாமசம் - காலங்கடத்துதல். பினும் - மீண்டும். புனல் - நீர்.

சு.சொல் - 1.குமிளி 2.தெனரன் 3.மாதவற்குன 4.கழித்தந்தப்பின் 5.கிறுபை 6. தாள்ப்பினு.

The Son wants the royal order to be carried out

123. When the fervent devotee of Civaṉ
Vitiviṭaṅkaṉ was asked to speak
He uttered the following words:
Respected Sire, what is there to say

Except that life is like a bubble
Which forms when water is churned.
Assuming this to be transitory and short lived,
One should not give up truth, justice or righteousness.
Life will not last
As it is like a flash of lightning.
Its course evades analysis
As is evident from the happenings in my life
Which have left me totally crushed.
Sir, first you seek redemption from the death of the calf
By running the chariot over me .
When once you have done your duty
You are free to act as you like.
Let not parental affection
Desist you from right action.
May I beseech you
To take quick steps
To redeem me from vile sin?
When the son fell at the father's feet
Tears like honey drops
Fell from the eyes of both.

(மன்னன் தேரில் ஏறுதல்) சம்பை

124. கதகதென வரவேந்தன் கனிந்து மகனேயுன்னை
பதைபதைக்கத் தேரிலெந்தப் படிதுலைப்பே னென்றார்
சந்ததியை வளர்த்தெடுத்த தந்தையே நமனாக
வந்தவிதி யென்னபர மாத்துமா வென்றான்
கண்ணிலிந்தக் கண்காட்சி காண்பனோ – சிவசிவா 5
பண்ணகுறை யேதெனவப் [1]பசுவந்த தப்போது
பசுராச பூபதியைப் பார்க்கும்விழி நீர்சொரியும்
திசைதிசையும் [2]பார்க்குங்கண்ணைச் சிமிட்டாமல் விழிக்கும்

முன்னாக வந்துபெரு மூச்சுவிட்டம் மாவென்று
மன்னான ராசேந்திரன் மனதுதெளி வானான் 10
ஆவினிட வறிவைப்பா ரரகரா வெனப்புகழ்ந்து
கோவுங்குதித் [3]தேறினான் மாவுலவுந் தேரில்.

மன்னன் மகனைப் பார்த்து மகனே! நீ துடிதுடிக்க உன் மீது எப்படித் தேரைச் செலுத்திக் கொல்லுவேன்! இறைவனே! பெற்று வளர்த்த தந்தையே மகனுக்கு எமனாக வருவதும் விதிப்பயனா? சிவசிவா! இந்தக் காட்சியை நானே காண்பதா? அப்படி நான் செய்த தவறுதான் என்னவோ என்று பலவாறு ஏங்கினான்.

அப்போது அங்கு வந்த பசு அரசனைப் பார்ப்பதும், கண்ணீர் வடிப்பதுமாக நின்றது; மீண்டும் அங்கு மிங்குமாகப் பலதிசைகளிலும் பார்த்தபடி கண்ணிமைக்காமல் விழித்தது; அரசன் எதிரில் வந்து நின்று பெருமூச்சு விட்டு அம்மா! வென்று கத்தியது. பசுவின் செயல்களைக் கண்ட மன்னன் மனந்தெளிந்தான். அரகரா! பசுவின் அறிவைப் பார் என்று புகழ்ந்தபடியே குதிரைகள் பூட்டப்பட்டிருந்த தேரின் மீது பாய்ந்து ஏறினான்.

கதகதென - விரைவுக்குறிப்பு. கனிதல் - மனமுருகுதல். சந்ததி - மகன். நமன் - எமன் பரமாத்துமா - தூய அறிவு, கடவுள். ஆ - பசு. கோ - அரசன். மா - குதிரை.

சு.சொல் - 1. பசுவந்துதப்போது 2 பாற்குங் 3. தேறிநான்.

The king mounts the Chariot

124. Spake the King:
Dear son, how can I run the chariot
Over your body
Which would writhe in pain?
Great God, Is forcing a father to play Death's role
The result of past deeds?
Civa, Civa! how can I withstand the sight
Of my son dying in pain and agony?
What evil deed am I guilty of
That I am obliged to kill my own son?
While the king mused confusedly,
The cow stared at the king
Shedding copious tears.
Casting its look here and there,
It stood with a stony stare.

Sighing deeply it let out
The scream *Ammā*,
Which was painful and heart - rending
The actions of the agitated cow
Cleared the beclouded mind of the king.
Arakarā! The cow is reminding me of my duty
Said he and mounted the chariot hurriedly
Drawn by a bevy of horses

(யாவரும் கதற அரசன் தேரேற்றிக் கொல்லுதல்) திபதை

125. தேரேறி மன்னவன் சிவனைத் தியானித்துத்
தேரூரும் பாகனைச் சீக்கிரம தென்ன
வீதி விடங்கரை வேந்த ரழைத்துப்
போதுகா ரியமெனப் புகலவே மைந்தன்
நகைமுக மாய நளினம்போல் மலர்ந்து 5
திசையெட்டும் நோக்கியே தெண்டனிட் டாரூர்க்
குஞ்சர மூர்த்தியைக் கோடித்துப் போற்றி
யஞ்செழுத் தினையுன்னி யாதிசங் கரனைக்
கயிலாச வாசனைக் களிச்சிலோ சனனைப்
பரிவுட னேபரா [1]பரவஸ்து தன்னைத் 10
திருவருள் [2]பாரென்மேல் தியாகரே யென்றும்
நெடுமா [3]லிணையடி நெஞ்சினி [4]லிறுத்தி
படியளக் குமபி ராமியைப் போற்றி
யெத்தேவர் களையு மேகமாய் நினைத்து
முத்தேவ ரூபனை [5]முகம்நோக்கிப் பணிந்து 15
தந்தையே சரணெனத் தான்முடி [6]யிறைஞ்சி
தந்தவ ளுக்குமோர் சரணது கூப்பி
நல்லோர் பெரியவர் நாட்டிலுள் ளோர்கள்
எல்லார்க்கும் வந்தனை யேகமாய்ச் செய்து
வடக்குத் தலையும் தென்வாடைக் கால்நீட்டிப் 20
படுத்திடும் போதந்தப் பிரசைக ளெல்லாங்
கண்ணிலே நீர்கத கதவென விடுத்துக்
கண்ணைமூ டிக்கொண்டு கனக்கவே யெழுநது

எவரு மழுதிடு மிசைஎல் லார்க்குஞ்
செவிடுபட் டுள்ளந் திகைத்துமெய் மறக்க 25
வேதாந்த வேதியர் விஷ்ணு பக்தர்கள்
நாதாந்த நாதியர் ஞானியோ கியர்கள்
நிலைகொலு வாய்நின்று நீலோற் பலத்தில்
பலபலென் றுதிர்த்துப் பரமனே யென்ன
அரனடி யார்களெல் லாருமப் போது 30
அரஅர அரஅர அரவென்று சொல்ல
நிலவிய வேந்தனும் நிமடீ கரித்து
சலதியாய்ப் பாகனைத் தானேவ வவனும்
நவமணித் தேர்தனை நடத்தவே மைந்தன்
சிவசிவா வென்றுதன் சீவன்விட் டானே. 35

தேரிலே ஏறிய மன்னவன் இறைவனை வணங்கினான். தேர்ப்பாகனைப் பார்த்து விரைவாகச் செலுத்துக என்று கூறினான். வீதிவிடங்கனையழைத்து தேர்செலுத்தும் வேலை தொடங்குகிறது என்று கூறினான். உடனே வீதிவிடங்கன் தாமரை மலர் போன்று முகம்மலர, புன்முறுவலுடன் எட்டுத் திசைகளையும் நோக்கி வணங்கினான். கணபதியைத் துதித்தான்; 'நமசிவய' என்னும் ஐந்தெழுத்தை உச்சரித்தபடியே ஆதிசங்கரனும் கயிலாசவாசனும் நெற்றிக் கண்களையுடையவனும் இரக்கமுடையவனும், பராபரப்பொருளாய் விளங்குபவனுமாகிய இறைவனை நினைத்துத் தியாகராசப் பெருமானே! என்மீது கருணை செய்யுங்கள் என்று வேண்டினான். திருமாலின் திருவடிகளை மனமாரத் துதித்தான். அபிராமியன்னையை வணங்கினான். மூன்று தேவர்களின் வடிவங்கள் முதலான அனைத்துத் தேவர்களையும் வணங்கினான். தந்தையின் திருவடிகளைத் தலைதாழ்த்தி வணங்கித் தாயையும் நினைத்துக் கைகூப்பினான். நாட்டின் நல்லவர், பெரியோர் ஆகிய அனைவரையும் வணங்கி வடக்கே தலையும் தென்திசையில் காலுமாக வைத்துத் தரையில் படுத்தான். இக்காட்சியைக் கண்ட குடிமக்கள் கண்களிலே நீர் பெருகக் கண்களை மூடியவர்களானார்கள். அவர்கள் அழுத சத்தம் காதுகள் செவிடுபடும்படியாக இருந்தது. மெய்மறந்து நின்றார்கள்.

இந்த விதமாக வேதமுணர்ந்த அந்தணர்கள் திருமாலடியவர்கள், ஞான நெறிகளையுணர்ந்த சான்றோர், ஞானியர், யோகியர் ஆகிய பலரும் அசையாது நின்று கண்ணீர் வடித்தவர்களாய்ப் பராபரனே என்று ஓசையெழுப்பினார்கள். சிவனடியார்களோ அரகரா வென்று ஒலியெழுப்பினார்கள். அரசன் பாகனை நெருங்கி விரைவுபடுத்தினான். தேர்ப்பாகன் நவமணிகளால் அலங்கரிக்கப்பட்ட தேரை வீதிவிடங்கன் மீது செலுத்த மகன் சிவசிவா என்று கூறியபடியே உயிர்விட்டான்.

ஊர்தல் -செலுத்துதல். போது - காலம். நளினம் - தாமரை. குஞ்சரமூர்த்தி - விநாயகன். கோடித்தல் - பிரார்த்தித்தல். அஞ்செழுத்து - நமசிவய. உன்னுதல் - நினைத்தல். லோசனன் - கண்களையுடையவன். நெடுமால் - திருமால். தந்தவள் - பெற்றெடுத்த தாய். வாடை - திசை. பிரசை - குடிமக்கள். வேதாந்த வேதியர் - வேதமோதும் அந்தணர். நாதாந்தம் - ஞானநெறி.

நாதியர் - சான்றோர். நீலோற்பலம் - நீலமலர் - கண்கள். நிமடீகரம் - நெருக்கம். சலதி - சலுதி. சீக்கிரம். சீவன் - உயிர்.

சு.சொல் - 1. பரவஸ்த்து 2. பாரெரன்மேல்த்தியாகரே 3 லினையடி 4. லுறித்தி 5. முகம்னோக்கிப் 6. யிறஞ்சி.

The king kills his son

125. After ascending the Chariot,
The King bowed to the Almighty
And ordered the charioteer
To drive Quickly
He informed his son
That the vehicle was ready to move.
When the prince heard this,
His face beamed like a lotus.
He saluted the eight directions,
Paid obeisance to Kaṇapati,
Uttered the five - lettered Namacivāya,
And offered prayers to the lord
Residing in Mount Kailas,
The three - eyed one
Kind beyond words
Who goes by the name Tiyākēcar.
He then meditated
On the holy feet of Tirumāl,
Bowed to mother Apirāmi,
And the other gods in the pantheon.
Next he paid respects
To his father and mother.
After saluting the elders,
He lay down on the earth
With his head pointing to the North
And legs to the South,.
On seeing the painful sight,

The populace closed its eyes.
The wails of agony they let out
Were loud and deafening.
The brahmins well - versed in Vētās
And elderly folk familiar with lores,
The Yogis and other holy men
Stood motionless
Uttering divine names.
The Caiva savants
Also invoked the Almighty
By shouting *Arakarā*
With great devotion and fervour.
The King ordered the charioteer
To accelerate the pace.
And lo, the vehicle with clinging bells
Ran over the body of the prince
Who mumbled the name of Civan̲
With great sincerity and involvement.

(பசுவுங் கன்றும் மறைதல்) **சம்பை**

126. தன்மகனைத் தேரடியிற் சதிக்கவே தெய்வப்பசு
மின்னெனவே [1]மறைந்ததந்த வெள்ளிமலை நோக்கிக்
கூற்றுவன்கண் ணானதுந்தன் குடிக்குக்குடி போச்சுதந்தப்
பார்த்திபனுந் தேரிழிந்து பார்த்தானப் போது
நிரையும்சேங் கண்ணினையும் நிருபன் [2]பார்த் தரகரா 5
பரமசிவன் செயலிந்தப் பசுபோன தென்றான்
பழிக்குப்பழி வாங்கிக்கொண்டு பசுபோச்சு தென்றுதன்
பழிக்கு மந்திரி யிறந்தவழிக் கேகினானே
சிதைந்திறந்த மகன்முகத்தைத் தான்திரும்பிப் பாராமல்
பதிந்துநடந் தேமந்திரி பழிதுலைக்க விசைந்தான். 10

அரசன் தன் மகனைத் தேர்ச்சக்கரத்தில் கிடத்தி அழித்தவுடனே சிவபெருமானாகிய தெய்வப்பசு வெள்ளியங்கிரியை நோக்கி மின்னலைப் போல மறைந்தது. எமனாகிய கன்றும் எமனுலகத்தையடைந்தது. தேரைவிட்டிறங்கிய மன்னன் பசு, கன்று ஆகியவற்றின் செயலைப் பார்த்தான். இந்தப் பசு சென்றது சிவன் செயலே

என்று எண்ணினான். இப்பசு பழிக்குப் பழிவாங்கிக் கொண்டுபோய் விட்டது. இதே போல என் பழியைத் தொலைக்க வேண்டுமே என்று அமைச்சன் இறந்த இடத்தை நோக்கி நடந்தான். அமைச்சனால் ஏற்பட்ட பழியைப் போக்கவேண்டுமென்ற எண்ணத்தில் தேர்க்காலில் சிதைந்து இறந்துபட்ட தன் மகனைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் நடந்தான்.

சதித்தல் - அழித்தல். மின் - மின்னல். இழிந்து - இறங்கி. நிரை - பசு.

சு.சொல் - 1. மறைந்துதந்த 2. பாத்தரகரா.

The cow and the calf vanish

126. The moment the king ran the chariot
Over his darling son,
The divine cow disappeared
And went towards the silvery mountains.
The lord of death in the guise of a calf
Also vanished and reached His abode.
On noticing the disappearance of the animals,
The King interpreted it as the act of Civan.
Spake the King:
The cow has wreaked vengeance,
But I am left in the lurch.
So saying he walked towards the place
Where the minister lay dead.
Since his thoughts were fully occupied
With the sin following the minister's death,
He did not care to look at his son
Lying as pulp, crushed by the chariot.

வசனம் - யிந்தப்படி ராசேந்திர சோழன் கண்ணின் பழிக்கு மகனைத் துலைத்துப் பசுவுங் கண்ணும் மறைந்து போனது [1]தனக்கேற்கப் பழி வந்தபடியினாலே மறைந்து போச்சுதென்று நம்மாலே வந்த [2]பழியை நாமே துலைப்போமென்று மந்திரியிறந்த விடத்தினிலே வந்து எந்தடவாகினான். (37)

சு.சொல் - 1. தனக்கேற்க்கப் 2. பழியே.

Prose : After the cow and the calf disappeared, the king wanted to expiate the sin caused by the death of the minister and so went to the place where he lay dead.

(மன்னன் இறைவனை வேண்டிக்கொள்ளுதல்) திரிபுடை

127. ஆனை முகவனை யுன்னினான் - தெய்வ
யானை பங்கனை எண்ணினான் - பர
னான தியாகலிங் கேசர் பூவடி - தியானமானான்

பரமனே ஓம் நமசிவாயா
பராபரா வெனக்கருள் செய்வா யென்று 5
பருதிதனையு மப்போது தொழுதனன் - கருணையாக

சகல தேவர்க்குஞ் சரணஞ் சரணமென்ன
[1]சாற்றினா னிந்தச் சபைக்குச் சரணென்று
[2]புகலவே சபையா ரெல்லார்களும் - புலம்பலானார்

புத்திரனை யுயிர்மடித்த நீரினி - பூமிக் 10
கிருக்கவொண் ணாதோ வெங்கள்
கொற்றவா தலையெழுத் திதோவெனக் - கோவென்றழுதார்

ஐயையோ ஐயையோ வநியாயச் சாவிதென்றே
யெல்லோர் களுங்கையை முகத்தினில் மூடிச்
சலிப்புடன் கதறியழுவார். 15

அமைச்சன் உயிர்விட்ட இடத்தை அடைந்த அரசன் விநாயகனை உள்ளத்தில் நினைத்துத் துதித்தான். தெய்வானையின் மணாளனாகிய ஆறுமுகனைத் துதித்தான். தியாகேசப்பெருமானின் திருவடிகளை உள்ளத்தில் நினைத்து, ஓம் நமசிவாயா! பரமேஸ்வரா! பராபரா எனக்கு அருள்புரிவாயாக என்று தியானித்தான். சூரியபகவான் முதலான அனைத்துத் தேவர்களையும் சரணம், சரணம் எனக்கூறி வணங்கினான். இறுதியாக அங்குக் கூடியிருந்த சான்றோர்களைப் பார்த்துச் சபையோருக்கு வணக்கம் என்று கூறியவுடன் சான்றோர் அனைவரும் அழத்தொடங்கிவிட்டார்கள்.

எங்கள் மன்னவா! பழிக்கு அஞ்சி மகனின் உயிரைப் போக்கிவிட்டீர்கள். இனியாவது தாங்கள் உயிரோடு இங்கு இருக்கக்கூடாதா? இதுவும் தலைவிதியோ? ஐயோ! இது அநியாயச்சாவு அல்லவா என்று கூறியபடியே முகத்தைக் கைகளால் மூடியபடியே 'கோ'வென்று கதறியழுதார்கள்.

ஆனைமுகவன் - விநாயகன். பங்கன் - மணவாளன். பூவடி - மலர்போன்ற திருவடி. தியானம் - உள்ளத்தில் நினைத்துத்துதித்தல். பருதி - கதிரவன், சூரியன்.

சு.சொல் - 1. சாத்தினானிந்தசபசைக்குச் 2. புகழவே.

The King praying to the Almighty

127. When the King reached the spot
Where the minister lay dead,
He offered prayers to Lord Viṉāyakar,
Eulogising Him.
He then sang the praise of Āṟumukaṉ,
The divine son of Tēvayāṉai.
Meditating on Lord Tiyākecar,
He muttered *Namaccivāya,*
Paramēcuvaraṉ, Parāparaṉ
And fervently sought His help
He paid obeisance to the Sun - god
And the other deities in the pantheon
Lastly, he saluted the elders
Which moved them to tears.
Spoke they:
Revered King, you have taken the son's life
To escape blame and calumny.
We wish you stop with that
And don't contemplate taking your life,
Mysterious are the workings of fate!
Unable to reconcile themselves to the minister's death,
Smacking of great injustice,
The elders wept profusely,
Covering their faces with hands.

(அரசன் தன்னைத்தானே குத்திக்கொள்ள, தடுத்தல்) சம்பை

128. இத்தனையும் வேந்தன்செவிக் கெதுவு மேறினதில்லை
ருத்திரனைத் [1]துதித்துகையில் பத்திரத்தை யெடுத்தான்
நுண்ணிழை சுரிகைமார் [2]நோக்கவே பரமசிவன்
மன்னனை யாரே ஆரேயென் றுளமகிழ்ந்து
இந்திரனை யனுப்பி நின்றுசுதன் மந்திரியைச் 5
சந்திரசே கரனாரும் தானனுப்பி னாரே

மேலெடுத்த சூரிதனைத்தே வேந்திரனும் பற்றியிடவிரு
பாலிடத்துஞ் சுதன்மந்திரி பாணிதனைப் பிடித்தார்
அரசன்கண்டிப் போதிதென்ன வாச்சரிய மென்னவே
கரம்பிடித்த விருவர்களுங் கழறுவரப் போது 10
[3]ஏகநாயகன் கயிலையில்பர னெங்களை யழைத்து
யேகுமிதோ வாறோமென் றியம்பின ரென்றார்கள்
ஆயிரங்கண் ணுடையவனும் [4]ஆதிநாயகனா ரென்னைப்
[5]போயிருமென் றார்தாம்பின் பாய்வருவ மென்றார்
ஆகையால் யான்வந்தேன் அரசேயெனப் புகலச் 15
சோகந்தெளிந் தேகளிப்பு சாந்தம தானார்.

மக்கள் கதறிக் கூறியவற்றுள் ஒன்றையும் மன்னன் செவிகொடுத்துக் கேட்கவில்லை. சிவபெருமானை வணங்கியபடியே கையில் வாளையெடுத்தான். கூர்மையான அந்த வாளை மார்புக்கு நேரே கொண்டுபோனான். மன்னன் கத்தியால் குத்திக் கொள்ளத் துணிந்ததைக் கண்ட சிவபெருமான் மகிழ்ச்சியடைந்தவராகி, மன்னனின் தற்கொலை முயற்சியைத் தடுக்குமாறு இந்திரனை ஏவிவிட்டு, அவனுடன் வீதிவிடங்கனையும் அமைச்சரையும் அனுப்பிவைத்தார். மன்னன் தன்மார்பருகே கத்தியைக் கொண்டுபோனபோது அந்தவாள் மார்பில் படாதபடி தடுத்துப்பிடித்தான் தேவேந்திரன். அரசனின் இருபுறத்திலும் வந்துநின்ற மகனும் மந்திரியும் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டார்கள்

மன்னன் இது என்ன ஆச்சரியமாக இருக்கிறதே என்று வியப்படைந்தான் கயிலைவாசனாகிய இறைவன் யாம் இதோ வருகிறோம்! முதலில் செல்லுங்கள் என்று கூறி எங்களை அனுப்பினார் என்றார்கள் மகனும் மந்திரியும்

அரசே! 'நீ போயிரும்' என்று என்னை அனுப்பிவிட்டுத் தாம் பின்பு வருவதாக ஆதிநாயகன் கூறினார் ஆகையால் நான் வந்தேன் என்று தேவேந்திரனுங் கூறினான். இவற்றையெல்லாங் கேட்ட மன்னன் வருத்தம் நீங்கியவனாய் மகிழ்ச்சியும் அமைதியுமடைந்தான்.

உருத்திரன் - உருத்திர மூர்த்தியாகிய சிவபெருமான். பத்திரம் - வாள், நுண்ணிழை - கூர்மையான. சுரிகை - வாள், கத்தி. சூரி - கத்தி. பாணி - கை. கழறுதல் - கூறுதல். ஆயிரங்கண்ணுடையவன் - தேவேந்திரன். சோகம் - சோர்வு, வருத்தம். சாந்தம் - அமைதி.

சு.சொல் - 1. துதித்துகையில்ப் பத்திரத்தை 2. னோக்கவே 3 ஏகனாயகன் 4 ஆதினாயகனா 5. போயிருமென்னார்தாம்.

The King prevented from stabbing himself

128. The King paying no heed to the appeal of the citizens
Drew his sword after praying to Civan.
When he was about to stab himself,

Civaṉ happy at his action
Despatched Lord Intiraṉ
To prevent the king's suicide,
Along with Vitiviṭaṅkaṉ and Nītipūṣaṇaṉ.
While Intiraṉ snatched the King's sword,
Directed against his chest,
The other two tightly held his hands.
When the King stood wonder - struck,
Intira revealed his mission
And said that the Lord would appear shortly.
On hearing the words of Intiraṉ,
The King was beside himself with joy.

(பட்டமாதேவி மகிழ்ச்சியடைதல்) திபதை

129. இந்திர னிப்படி யிசைத்துவித் திருந்தான்
மைந்தனும் தன்னிட மந்திரி தானும்
வேந்தனைத் தொழுதுயிவ் வேளையி லரனார்
வாய்ந்திடு மிடபத்தின் வாகன மேறி
வருகிறா ரென்றுதன் மகன்மந்திரி சொல்ல 5
யிருதயம் பூரித் திறையவ னிருக்கச்
சகல செனங்களுஞ் சந்தோஷ மாகி
முகமெல்லா மலர்ந்திடு முளரிபோ லானார்
பரிவுள்ள தூதுவர் பட்டமா தேவி
[1]யரண்மனைக் கேகியிங் கானவிருத் தாந்தம் 10
வகைவகை யாய்ச்சொல்ல மாதுமப் போது
முகமலர்ந் தாள்தியாக மூர்த்தியே யென்று
அளவற்ற பூரிப்ப தாய்த்துரை மாதும்
வெளிப்பட்டிப் பால்வந்து விச்சித்திர மான
பல்லக்கி லேறியே பாவையர் சூழச் 15
செல்வப்பொற் றாமரைத் தேவியார் வந்து
மன்னனைப் புதல்வனை மந்திரி தன்னைப்
பொன்னுல காளும் புரந்தரன் தனையுங்

கண்டவ ளாகியே கணவனைத் தொழுது
[2]அண்டர் மகிழ்ச்சியா யங்கிருந் தனளே. 20

இந்திரன் தன்னை இறைவன் அனுப்பிய செய்தியை எடுத்துச் சொல்ல, வீதிவிடங்கனும் அமைச்சனும் மன்னனைத் தொழுது நின்றனர். அப்போது இடபவாகனத்தின் மீது இறைவன் வருவதையறிந்த மகனும் மந்திரியும் அச்செய்தியை மன்னனுக்கு அறிவித்தார்கள். மன்னன் மனம் பூரிப்படைந்தான். மக்கள் எல்லோருமே மகிழ்ச்சியடைந்து தாமரை மலர்போல முகமலர்ச்சியடைந்தார்கள். அன்பும் இரக்கமும் கொண்ட தூதுவர்கள் மிக விரைந்து அரண்மனைக்குச் சென்றார்கள். பட்டமாதேவியைக் கண்டு நிகழ்ந்த செய்திகளை எடுத்துக் கூறினார்கள். முகமலர்ச்சியும் பூரிப்புமடைந்ததேவி தியாகேசப்பெருமானே என்று கூறியவாறே புறப்பட்டாள். அழகான பல்லக்கில் ஏறி மகளிர் சூழ வந்து மன்னனும் மகனும் மந்திரியும் தேவேந்திரனும் ஒன்று கூடியிருப்பதைக் கண்டு அளவற்ற மகிழ்ச்சியோடு கணவனைத் தொழுதுநின்றாள்

இசைத்தல் - கூறுதல். இடபம் - எருது; சிவபெருமானின் வாகனம் இறையவன் - மன்னன் முளரி - தாமரை. பரிவு - அன்பு, இரக்கம் விருத்தாந்தம் - செய்தி புரந்தரன் இந்திரன் அண்டர் - வானோர், தேவர்.

சு.சொல் - 1. யரமனைக் 2 அண்டர்மகிக்ஷியாய்யங்கிருந்.

The Queen happy

129. While Intiran said that he had been despatched
By the great lord Himself,
Vitiviṭaṅkaṉ and Nitipūṣaṇaṉ
Stood on either side of the King
Saluting him with submissiveness.
Soon the King was informed
Of the arrival of Lord Civaṉ
Riding the holy bull.
The King and his subjects overjoyed,
Their faces beamed like lotuses.
The messengers of the king, kind and gentle
Rushed to the queen with happy tidings.
The exultant queen thanked Tiyākēcar
And started in a palanquin
Followed by her female retinue.
At the sight of her husband

In the company of Lord Intiran
And noticing her son and the minister,
She saluted the king with great joy.

வசனம்– இப்படிச் சகலமான பேரும் அதிக சந்தோஷமாய்ச் சிவன் வரவு பார்த்துக் கொண்டிருக்கப் பரமேஸ்வரானவர் எப்படி வருகிறாரென்னில். (38)

Prose : When all were happy and waiting for Civan, how did He appear?

(தேவர்கள் மன்னனைப் பாராட்டிக் கூறுதல்) **சம்பை**

130. ஈசனார் யிமையவரை ஏகமாய்க் கூட்டியா
லோசனைபண் ணாரெவரும் ஆசைமன தாகி
நரபதியி லேயிந்த ராசேந்திரன் போலவே
றொருவர்களு மில்லையெனச்சுரர் விம்மித மானார்
மாலிருந்து ராசேந்திர மன்னனுக்கு [1]நும்பதவி 5
பாலிபர மேஸ்வரா கோலமுட னென்றார்
தாமோ தரன்சொல்லத் திகிரியில்வாழ் பரமர்
தாமே மகிழ்ந்து போவோமென் றாரே
குன்றவில்லி யானவருங் கோலவிக்கி னேஸ்வரனை
[2]எண்ணிமனத் தினிலுன்னி முன்னடவு மென்றார். 10

கயிலாயம் அடைந்த சிவபெருமான் தேவர்கள் அனைவரையும் அழைத்து ஆலோசனை நடத்தினார். தேவர்கள் அனைவரும் ஒரே கருத்தையுடையவர்களாய் பூலோகத்தில் வாழ்பவர்களில் சோழ மன்னனுக்கு ஒப்பானவர்கள் எவருமே இல்லையென்று பெருமிதத்தோடு கூறினார்கள். அவர்களுள் திருமால் சிவபெருமானைப் பார்த்துப் பரமேஸ்வரா! சோழமன்னனுக்கு உம்பதவியாகிய சிவபதவியைக் கொடுத்துப பெருமைப்படுத்துங்கள் என்று கூறினார்.

திருமால் கூறியதைக் கேட்ட கயிலாசவாசர் மகிழ்ச்சியடைந்து நாமே செல்லுவோம்; புறப்படுங்கள் என்று கூறினார். குன்றை வில்லாக ஏந்தியவராகிய சிவபெருமான் விநாயகனை மனத்தால் நினைத்து அழைத்து நீ முதலில் செல் என்று ஆணையிட்டார்.

ஏகம் – ஒன்று. நரபதி – மக்கள்தலைவன் விம்மிதம் – பெருமிதம். மால், தாமோதரன் என்பன திருமாலைக் குறித்தவை. பாலித்தல் – அருள்புரிதல், கொடுத்தல். திகிரி – மலை குன்றவில்லி – மேருமலையை வில்லாக ஏந்திய சிவபெருமான். உன்னுதல் – நினைத்தல்.

சு.சொல் – 1. னும்பதவி 2. எண்ணிமனதினிலுண்ணி.

The Gods praise the King

130. Civaṉ went to His abode in Mount Kailas,
And summoned the other gods.
He invited their views
On the Cōḻa King's liberation.
All vouched unanimously
For the excellence of the King
Who remained unmatched
In qualities of head and heart.
Tirumāl, the spokesman of the Gods said,
Paramēcuvaraṉ, kindly elevate the king
To Civaṉ status.
Happily reacting to their views
Civaṉ said: Let us all go.
He then meditated on Lord Vināyakar
And ordered Him to give the lead.

(தேவர்கள்சூழச் சிவபெருமான் புறப்படுதல்) திரிபுடை

131. ராசத கிரிவா ழீஸ்வரன் வெள்ளைநந்தி
வாகன மேறியே காதச ருத்தி
ராதிபர் சூழவே யஷ்டதிசை - வுள்ளோரும்

சூழ மாலயன் சூழத் தேவர்கள்
சூழ மாதவர் சூழ நாரதர் 5
சூழ வேலவர் சூழக் கந்திருவர் - சூழவேதான்

எவரு மவரவர் வாக னந்தனி
லேறி யேவெள்ளி மலையில் வாழ்பவர்
சிவனோ டெய்தின ரரக ராவெனப் - புவியை [1]நோக்கி

சத்த மாதர்கள் சத்த கன்னிகள் 10
சத்த ரிஷி சந்திர சூரியர்கள்
சித்திவித் தியாதரர் சூழ வேசிவன் - அந்தியாக

நீலகண் டந்திரி நேத்திர முங்கங்கை
    நிறைந்த சடையும் பவானி யொருபுறங்
கோல மாகிக் குலாவ வேயதி - கோலமானார் 15

மலர்ந்த வதனமுங் கையி லேந்திய
    மானும் மழுவுங் கபால சூலமுந்
துலங்கு தாம்ரைப் பதமு மாய்ச்சிவன் - தோன்றிநடந்தார்

கயிலாய வாசனாகிய இறைவன் வெண்ணிறமான இடபவாகனமாகிய நந்திவாகனத்தில் ஏறினான். உருத்திரர் பதினொருவர், அட்டதிக்குப்பாலகர், திருமால், பிரமன், மற்றத் தேவர்கள், தவசியர், நாரதர், முருகன், கந்திருவர் ஆகிய பலரும் அவரவர்களுக்குரிய வாகனங்களில் அமர்ந்து அரகரா என்று கூறியவாறே சிவபெருமானைச் சூழ்ந்து பூமியை நோக்கிப் புறப்பட்டார்கள். சத்தமாதர்கள் எனப்படும் ஏழு தேவியர்கள், ஏழு முனிவர்கள், சந்திரன், சூரியன், நித்திய யோகத்தில் சித்தி யோகமுடைய வித்தியாதரர் ஆகியோரும் இறைவனைச் சூழ்ந்து வந்தார்கள்.

இறைவனோ நீலகண்டமும், நெற்றிக்கண்ணும் கங்கையைத் தரித்த சடாமுடியும் உடையவராகி உமாதேவியார் ஒருபுறம் அமர அழகிய வடிவத்தோடு புறப்பட்டார். அப்போது அவர் மலர்ந்த முகத்தையுடையவராய், மான், மழுவாயுதம், கபாலம், சூலம் ஆகியவற்றைக் கையில் பிடித்தவராய்த் தாமரை மலர் போன்ற திருவடிகள் விளங்கத் தோற்றமளித்தார்

ராசதகிரி - பெரியமலை, கயிலாயம். வெள்ளைநந்தி - இடபவாகனம். ஏகாதசருத்திரர்- உருத்தரர்பதினொருவர்; அவர்கள் - அரன், ஈசானன், உருத்திரன், கபாலி, சங்கரன், சௌமியன், நீல லோகிதன், பவோற்பவன், மகாதேவன், விசயன், வீமதேவன் என்போர் சத்தமாதர்கள் - (சத்த கன்னியர்) - பிராமி, இந்திராணி, காளி, கௌமாரி, நாராயணி, மகேசுவரி, வராகி ஆகிய ஏழுமாதர்கள் இவர்களுக்கு முறையே அன்னம், யானை, பேய், மயில், கருடன், இடபம், சீயம் (சிங்கம்) என்பன வாகனங்கள். சத்தரிஷி - அத்திரி, ஆங்கீரசன், கௌதமன், சமதக்கினி, பரத்துவாசன், வசிட்டன், விசுவாமித்திரன் ஆகிய ஏழு முனிவர். அகத்தியர் முதலான எழுவரையும குறிப்பிடுவா. சித்தி- நித்திய யோகங்களில் ஒன்று; அவை தினயோகம் முதலான 27. வித்தியாதரர்- கந்தருவர், திரிநேத்திரம் - முக்கண். பவானி - பார்வதி மழு - சிவன் ஆயுதம். கபாலம் - தலையோடு யதம் -பாதம்.

சு.சொல் - 1. னோக்கி.

Civan starting in the company of the gods

Civan residing in Mount Kailas
Rode on his white bull.
He was accompanied by eleven Ruttirars,
The lords of the various directions,

Tirumāl, Piramaṉ, Murukaṉ
Nāratan̲ and other saints and savants
Each riding his respective vehicle.
Uttering the name of the Almighty,
They proceeded towards the earth.
Seven goddesses, seven sages,
Moon, Sun and Vittiyātarar knowing the Yogas,
Also followed the Lord.
With his neck tainted blue,
Eye in the forehead,
Wearing mother Ganges on matted locks
Holding Umai on the left side,
Civaṉ, the majestic one, made his way to the earth.
With a beaming countenance,
Holding stag, skull and trident,
He was the picture of grace,
His lotus feet adding to His beauty.

(சிவபெருமானுடன் பரிவாரங்கள்) ஏகதாளம்

132. [1]நந்தி பிரம்பெடுத்து நடநட வெனத்தெய்வ
தந்திரந் தனைச்சொல்லித் துந்துமி [2]யார்ப்ப
யிமையவரைக் கடுமென நந்தி பேரிகை
டமடம டமடம டமவென [3]வார்ப்ப
பம்பம் பம்மெனச்சங்குப் பணியது [4]மார்ப்பவே 5
தும்புரு நாரத ரம்பொடு பாட
தவலி பிரம்மாவிஷ்ணு கரத்தினி லசைக்கவே
பவனிய தாகப் பராபரன் வாறார்
மேனகை ரம்பை [5]திலோத்தமை யூர்வசி
யானவர் நாட்டிய மானது புரிய 10
சோதிக் கதலிவரச் சுரர்களெல் லாம்பாரி
சாதி மழைகளைப் பாரிய தாக.

கயிலைவிட்டு இறைவன் புறப்பட்டபோது, நந்திதேவன் கையில் பிரம்போடு இறைவனைப் புகழ்ந்து புறப்பாடு பற்றிச் சொல்ல தேவபேரிகை முழங்கியது. சங்கு

முதலியன ஒலிக்கத் தேவர்கள் புறப்பட்டனர். நாரதர் தும்புரு இசைக்க, பிரமனும் திருமாலும் கையினால் சைகை செய்து செலுத்த இறைவன் புறப்பாடு தொடங்கியது. மேனகை, ரம்பை, திலோத்தமை, ஊர்வசி ஆகிய தேவமாதர் நடனமாடி வந்தனர். ஒளியானது நிரம்ப தேவர்கள் பாரிசாத மலர் மழை பொழிந்து வந்தார்கள்.

தந்திரம - உரிய தொடர்கள். துந்துமி - பேரிகை. பணி - செயல். தவலி - வெண்மை. சோதி - ஒளி கதலுதல் - அசைதல் பாரிசாதி - பாரிசாதம்.

சு.சொல் - 1 நந்திப்பெரம்பெடுத்து 2. யாற்ப 3. வாற்ப 4 மாற்பவே 5. திலோர்த்தமை

Civaṉ's retinue

132. When Civaṉ ceremoniously started to the earth,
Nanti, holding a cane in hand
Announced formally that the journey had begun
Confirmed by the beat of the divine drum.
Conches were blown
Heralding the start of the other gods.
While Nārataṉ played on the *Tumpuru*
And Piramaṉ and Tirumāl gestured,
The festive visit began,
Rampai, Tilōttamai, Ūrvaci and other damsels
Adding to the ambience
By their graceful dances
And the angels showering *pārijātam* flowers!

(மன்னவன் விருப்பப்படி அனைவரையும் கயிலைக்கு அழைத்துச் செல்லுதல்) திபதை

133. சொரிசொரி [1]யெனப்புஷ்பஞ் சோனையாய்ச் சொரிந்தும்
அரகர வெனத்தேவ ரார்த்திந்த மார்ப்ப
பஞ்சாட் சரத்தில் பதிந்துவாழ்ந் திருக்கும்
பஞ்ஞானத் தத்துவப் பராபரன் வந்தான்
வெள்ளியங் கிரியிலே [2]வீற்றிருந் தடியா 5
ருள்ளம துறைந்த வுருத்திரன் வந்தான்
முப்புரந் தூளெழ முறுவல்தான் கொண்ட
தற்பர னான சதாசிவன் வந்தான்

ஆரண னாரணன் அடிமுடி தேடக்
காரண மாய்நின்ற கடவுளோன் வந்தான் 10

சிலைமார னைப்படைத் [3]தீக்கண்க ளாலே
நிலையோ டெரித்திடும் நின்மலன் வந்தான்

பாலனுக் காகவே பரிவுள மிஞ்சி
காலனை யுதைத்தசங் கரமூர்த்தி வந்தான்

அண்ணாழி தன்னிலே [4]யமுர்தத்தை யுண்டு 15
வெண்ணானிப் போது வெளிப்பட்டு வந்தான்

சிறுத்தொண்டன் மனஞ்சிவன் சோதிக்க வேபிள்ளை
அறுத்தபின் னருள்புரிந் [5]தானிப்போ வந்தான்

பல்லாள் துரைமனம் பாற்றிட வேண்டி
பிள்ளையாய் [6]வந்து பிறந்தோனும் வந்தான் 20

வேடர்கண் ணப்ப [7]னெச்சிலுக் குகந்து
காடது வேங்கையாய்க் காட்சிகொடுத்த கடவுளோன் வந்தான்

[8]சுந்தரர் பரவைக்குத் தூதுசென் றிரவில்
தந்திர மாய்ச்சொன்ன சங்கரன் வந்தான்

[9]விறல்பெற்ற மதுரையில் மேவி மகிழ்ந்து 25
[10]அறுபத்து நால்விளை யாடினோன் வந்தான்

கந்தர மிருண்ட கங்காதர னான
சந்திர கிரீட சடாதரன் வந்தான்

நேயமா கியதுரை நெஞ்சினை யறியப்
போயவன் [11]மேல்பழி போட்டவன் வந்தான் 30

ஆரூ ரிருந்தர சாள்பவன் மகனை
தேரோ டரைப்பித்த சிவனிங்கே வந்தான்

கபிலையுங் கண்ணுமாய்க் காவலன் மனத்தை
யவதியிட் டுத்துய ராக்கினோன் வந்தான்

நிருபனுக் கும்பழி நேராய்ச் சுமத்திப் 35
பரிகரித் திடுமிகு பரிவுளோன் வந்தான்

மைந்தனை மந்திரியை மாயமாய் எழுப்பிச்
சிந்தை வியாகூலந் தேற்றினோன் வந்தான்

பழியாம் படிதந்து [12]பார்த்திபர்க் கென்றும்
அழியாப் புகழ்தந்த சிவனிப்போ வந்தான் 40

வெய்யோனுங் கொழுமையாய் வருவது போல
வையகத் தினில்நிச வடிவாகி வந்தான்
பரமனுஞ் செகத்தினில் பரிந்துவந் தானென்று
பரவிய சின்னங்கள் பலபணி [13]யார்ப்ப
மைந்தன் ராசேந்திர மன்னவன் களிக்கச்
சந்திரசேகரன் தானிப்போ வந்தான்
உழன்றிடு மாவிதா னுடல்வந்த தென்ன
எழுந்தும் கிடந்தும் . . . . . .
சோழரா சேந்திரசோழன் சோதிதான் வணங்கில்
வாழி . . . . . .யணைத்துக் கட்டிக்கொண்டு 50
சகியைக் காதலா . . . .
. . . .
லுன்னைப்போல் நிருபரா ரென்ன மைந்தனு
மன்னுயிர்பாதம் வந்தனை செய்யவே வாழ்த்தி
நார. . . . .யும் பரமேஸ் வரனை 55
[14]யிஷ்டதேவாவென . . . . றும்
எண்ணுமிவ் வண்ணமா யிருமென வாழ்த்திப்
புண்ணியம் சோழ புத்திரன் மந்திரியை
மங்கையைக் கேட்ட வரமெல்லாந் தருவோம்
உங்களுக்கு வேண்டி லுரைத்திடி ரென்ன 60
அடிதொழு தேவெள்ளி யங்கிரி தனிலே
குடியிருந் திடவருள் கூறிடீ ரென்ன
மன்னனைத் தேவியை மகனைமந் திரியைப்
பொன்னிர தத்தினிற் பொந்தி யுடனே
யேற்றிக்கொண் டீஸ்வர னிருந்திடுங் கயிலை 65
சேர்ந்தந்த நால்வருந் திருவடிக் கருகே
ஏதொரு குறைகளில் லாமல்எந் நாளும்
சோதியைப் போலவே சுகித்திருந் தனரே.

தேவர்கள் மலர் மழை பொழிந்து அரகரவெனும் ஒலி எழுப்ப, நமசிவய என்னும் தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டு, திருக்கயிலாயத்தில் எழுந்தருளி, அடியவர்களின் உள்ளத்தில் வீற்றிருக்கும் இறைவன் வருகிறான். எழுந்தருளும் அவன், தன் புன்முறுவலாலே முப்புரத்தை எரித்தவன். திருமாலும் பிரமனும் முறையே திருவடியையும் திருமுடியையுந் தேடிச் செல்லக் காரணமானவன்; கரும்புவில்லையுடைய

மன்மதனைத் தன் நெற்றிக்கண்களால் எரித்தவன்; சிறுவனாகிய மார்க்கண்டனிடம் அன்பு கொண்டு அவன் உயிரை எடுக்க வந்த எமனை உதைத்தவன்; அமிர்தத்தையுண்டவன்; வெண்ணாவலன் என்று பெயர்பெற்றவன்; சிறுத்தொண்டன் தன் மகனை அறுக்கச் செய்து அருள்புரிந்தவன்; கெளரி என்பவளின் கணவன் சந்தேகிக்காதபடி குழந்தை வடிவமாய்த் தோன்றியவன்; கணணப்பரின் எச்சில் உணவை விரும்பியுண்டவன்; சுந்தரருக்காகப பரவையாரிடம் தூது சென்று, அவள் கோபத்தை மாற்றியருளியவன்; சிறப்பு வாய்ந்த மதுரை மாநகரில் எழுந்தருளி அறுபத்துநான்கு அரிய திருவிளையாடல்களை மேற்கொண்டருளியவன்; நஞ்சுண்டு கரிய கண்டத்தைப் பெற்றவன்; சடையிற் கங்கையைத் தரித்தவன்; சந்திரனை முடியில் அணிந்தவன்; சோழனாகிய மன்னனின் உள்ளத்தைச் சோதிக்க அவன் முன்னே போய்ப் பழியைச் சுமத்தியவன்; திருவாரூரில் எழுந்தருளி மன்னன் மகனைத் தேர்க்காலிலிட்டுக் கொல்லச் செய்தவன்; பசுவுங் கன்றுமாய்த் தோன்றி மன்னன் மனத்திற்குப் பெருந்துன்பத்தை உண்டாக்கியவன், அமைச்சனால் மன்னனுக்கே பழியை உண்டாக்கியவன். இத்தகு செயல்கள் பலவற்றையும் செய்து அன்பர் உ ள்ளங்கொண்டவன் வருகிறான் என்று பராக்கு கூறி வருகின்றனர்

அனபர்களைச் சோதித்த அவன் அன்பு உள்ளம் படைத்தவனாதலின் மன்னனுக்கு ஏற்பட்ட பழியைப் போக்கி, வீதிவிடங்கனையும் அமைச்சனையும் திடீரென உயிர்பெறச் செய்து, மனமகிழ்ச்சியை ஏற்படுத்தி, மன்னனுக்கு ஏற்பட்ட பழியைப் போக்கி அழியாப்புகழைக் கொடுத்தருளினான். காலைக் கதிரவன் முழுமையாய்ச் செந்நிறவடிவில் தோற்றமளிப்பதுபோலப் பரிவாரங்கள் சூழ உண்மையான வடிவோடு மன்னவன் மகிழுமாறு காட்சியளித்தான். வெறுமையாய் உலவிவந்த உயிர் உடல்பெற்றது போலத் தோன்றினான்

இவ்வாறு வருகைதந்த இறைவன் பராபரன், உருத்திரன், தற்பரன், சதாசிவன், நின்மலன், சங்கரமூர்த்தி, சங்கரன், கங்காதரன், சடாதரன், சிவன் என்னும் பலவகைப் பெயர்களைப் பெற்றவன். காட்சிதந்த இறைவன் அரசனைப் பார்த்து உன்னைப்போல் மன்னவர் வேறு எவருமில்லை என்று புகழ்ந்தான். உடனே மன்னனும் மகனுமாகிய அனைவரும் இறைவனின் திருவடிகளில் வணங்கினார்கள்.

புண்ணியம் செய்தவர்களாகிய மன்னன், தேவி, மகன், அமைச்சன் ஆகியோரைப் பார்த்து, நீங்கள் வேண்டும் வரம் தருவோம்! விரும்புவதைக் கேளுங்கள் என்றான் இறைவன்.

தேவரீர் எழுந்தருளியுள்ள வெள்ளியங்கிரியில் இருந்திட அருள்புரியுங்கள் என்று வேண்டினர் நால்வரும் அவ்வாறே நால்வரையும் தங்கத் தேரில் அமர்த்திக் கயிலாயத்திற்கு அழைத்துச் சென்றார் இறைவன் அங்கு இறைவனின் திருவடிகளுக்கருகேயே இருந்து சுகித்திருந்தார்கள்.

சொரிதல் - பொழிதல். சோனை - பெருமழை. ஆர்த்தி - மகிழ்ச்சி. பஞ்சாட்சரம் - சைவமகாமந்திரம். முறுவல் - புன்னகை. ஆரணன் - பிரமன் சிலை - வில். மாரன் - மன்மதன் பாலன் - சிறுவன்; மார்கண்டன். காலன் - எமன், அண்ணாழி - உண்ணாக்கு வெண்ணான் - வெண்மையானவன், சிவபெருமான் திருநாமங்களுள் ஒன்று பாற்றுதல் - உரிமைகொள்ளுதல் விறல்-

பெருமை. கந்தரம் - கழுத்து. வியாகூலம் - வியாகுலம் - துன்பம். வெய்யோன் - பகலவன், சூரியன். கொழுமை - செந்நிறம். உழுலுதல் -அலைதல். ஆவி - உயிர். பொந்தி -உடல்.

சு.சொல் - 1. யெனப்புஷ்ப்பஞ் 2. வீத்திருந் 3. தீய்க்கண் 4. யமுற்தத்தை 5. தாரிப்போ 6. வந்துழன்றந்தோனும் 7. வெச்சிலுக் 8. சுந்திரர் 9. விறல்பெத்த 10. அறபத்து 11. மேல்பழிப்போட்டவன் 12. பாற்திபற்கென்றும் 13. யாற்ப 14. இஷ்ட்ட

All are taken to Mount Kailas as desired by the King

133. While the gods rained flowers,
And uttered *Arakara* in crescendo,
Civan̲, the resident of Mount Kailas
Sustained by the words Namacivāya,
The favourite incantantation of savants,
Began his journey to the earth.
To recollect the mighty deeds of the Lord,
He once destroyed the three mythical cities
With his bewitching smile.
He was credited with prodding
Piraman̲ and Tirumāl
To indulge in the fruitless search
Of the divine head and feet.
He once reduced to ashes the love - god cupid
Who wielded a sugar cane bow
By using his third eye in the forehead.
It was he who kicked the lord of death
And saved young Mārkkaṇṭēyan̲
For whom he had a soft corner.
Called by the name Veṇṇān̲,
He swallowed the divine nectar.
In a bizarre way He blessed Cir̲uttoṇṭan̲
After ordering him to cut his own son.
Without raising doubts in the mind of Kauri's husband,
He appeared in the form of a child.
Another great act of His

Was the swallowing of Kaṇṇappar's saliva.
He figured in the dreams of the elders
And finalised the wedlock of Cuntarar.
His brave deeds in the City of Maturai,
Numbering sixty four,
Were too well - known to be repeated.
By consuming deadly poison,
He acquired a neck blue in colour.
He always wore on his matted hair,
The crescent and mother Ganges.
To test the sincerity of the Cōḻa King,
He, in his capacity as the presiding deity of Tiruvārūr,
Made the ruler run the chariot on his son.
Again it was He
Who materialised as the cow and the calf
And robbed the Cōḻa king of his peace of mind;
Made the minister instrumental
In bringing calumny against the King.
The great god with such deeds to his credit,
The beloved of the devotees,
Was descending on the earth,
Let Him be accosted and saluted!
Civaṉ being kind by temperament
Absolved the king of all guilt
Restored life to the minister and the prince,
Radiated happiness every where
And revealed His true form to the king
As glorious as the rising Sun.
Almighty Civaṉ who went by other names
Such as Parāparaṉ, Ruttiraṉ,
Catācivaṉ, Nirmalaṉ, Caṅkaraṉ,
Kaṅkātaraṉ, Caṭātaraṉ and Civaṉ

Declared openly and proudly
That the Cōḻa king remained unequalled
In qualities of head and heart.
The King and the prince
Without losing time
Fell at the feet of the Lord
And craved His mercy.
Lord Civaṉ wanted the blessed souls,
King, queen, prince and minister
To name some boon or the other
Which would be granted forthwith.
All the four desired
That they be allowed to live in the silvery mountains.
The boon was given
And the four were lifted in a golden chariot
To Mount Kailas
Where they enjoyed everlasting bliss.

(சகலகலை வல்லவன் அரசை ஏற்றல்) திரிபுடை

134. ஈச ருறையா ரூரில் வாழ்குடி
யெவர்க ளுங்களிப் பாயக் கதைதினம்
பேசிக் கொண்டு தியாக ராயரைப் - பூசித்திருந்தார்

பொன்னி யாறெந்த நாளி னும்புனல்
பொங்கி யேவயல் விளைந்து குடிகளுஞ் 5
சொன்னங் காய்த்திடுங் பூருக மதென - மன்னிவாழ்ந்தார்

சகல செனங்களுள் தியாக ராயர்தம்
மகிமை யிதுவென்று வசனித் தாரூர்
நகரி லிருக்கின்ற குடியெல் லார்களுஞ் - சுகமோடிருந்தார்

சகலகலை வல்ல மந்திரி மன்னவன் 10
தனக்கு நிகராய் நீதி முறைமையோ
டரசும் புரிந்துகொண் டெவரும் போற்றவே - மகிழ்வோடிருந்தான்.

தியாகேசப் பெருமான் எழுந்தருளியுள்ள திருவாரூர் மக்கள் நாள்தோறும் மன்னனைப் பற்றிய கதையை மகிழ்ச்சியோடு பேசிக்கொண்டு அருள்புரிந்த இறைவனை மறவாது பூசைசெய்து வந்தார்கள். அந்த ஊரின் அருகே ஓடும் பொன்னியாறோ என்றும் நீர் பெருகியோடி வயல்களை விளையச்செய்தது. மக்களோ பொன்காய்க்கும் மரத்தைப் போல விளைவைப் பெற்று எப்போதும் செல்வம் நிறைந்தவர்களாய் நிலையான வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். எல்லாம் தியாகேசப்பெருமானின் திருவருளே என்று அப்பெருமானைப் புகழ்ந்து வாழ்த்தி நகர மக்கள் மகிழ்ச்சியும் நலமும் பெருக வாழ்ந்து வந்தார்கள். சகலகலை வல்லவன் என்னும் அமைச்சன் அரசன் கூறியபடியே நாட்டின் மன்னவனாக இருந்து அந்த அரசனைப் போலவே நீதிமுறைகளைச் செலுத்தி மக்கள் போற்றுமாறு அரசாண்டு வந்தான்.

உறைதல் – வாழ்தல், எழுந்தருளியிருத்தல். பொன்னி – காவிரி. புனல் – நீர். சொன்னம்– சொர்ணம் – பொன். பூருகம் – மரம்.

Cakalakalai vallavaṉ crowned King

134. Repeating God's name and revelling in the legend of the Cōḻa king,
The people of Tiruvārūr
Offered worship to Tiyākecar
The presiding deity of the place.
Thanks to His blessings
River Poṉṉi which ran nearby
Always had water in abundance
Which helped a rich harvest.
The even tenor of the life of the people
Remained steady and undisturbed
Since the yield from the field
Was always rich and promising.
The people were eternally grateful
To Tiyākēcar for their prosperous life.
As ordered by the King,
Cakalakalai vallavaṉ took over the reins of government
And ruled ably and justly.

(வாழ்த்து) சம்பை

135. செவியிலிந்தக் கதைவிதித் தியாகமது வழங்கினோர்க
[1]ளெவையுமனு கூலமாய்ப் புவியில்மிக வாழ்வர்
அன்புற்றிந்தக் கதைவினவ யாவுமுளஞ் செய்தவர்க
ளின்பத்துட னேயதிக சம்பத்துடன் வாழ்வார்
[2]சிறுவரா னவர்கேழ்க்கச் செல்வங்க ளுண்டாம் - பிள்ளைச் 5
சிறுமியா னவர்கேழ்க்கப் பெறுவார் புத்திரனை
கடன்பட்டோர் கடன்தீர்க்கும் காயமதி லேபிணிக
ளுடம்பட்டோர் பிணிதீரும் [3]உள்ளன்புகொண் டோர்க்கே
செல்வமுள ராசேந்திரன் சிவகதிபெற் றதனைக்கேட்
டெல்லவரும் வாழ்கவிதை யியம்பினவரும் வாழ்க 10
ஆசையுட னெழுதினவ ரன்புடனே படித்தவரும்
யீசனருள் படைத்துமகா ராசனென வாழ்க.

தேரூர்ந்த சோழனின் கதையாகிய இதனைக் காதால் கேட்கும் பேறு பெற்றவர்கள் இப்பூமியில் எல்லா நலன்களும் பெற்று வாழ்வார்கள். இந்தக் கதையைக் கேட்க வேண்டுமென்று உள்ளன்போடு விரும்பிக் கேட்டவர்கள் மிகுந்த செல்வத்தோடு இன்பமாக வாழ்வார்கள். சிறுவர்கள் கேட்டால் மிகுந்த செல்வம் உண்டாகும். சிறுமியர்கள் கேட்டால் நல்ல மக்களைப் பெறுவார்கள். இக்கதையைக் கேட்பவர்கள் கடன்பட்டிருந்தால் கடன்தொல்லைகள் தீரும்; உடம்பில் நோய் ஏற்பட்டிருந்தால் அந்த நோய்கள் தீர்ந்து சுகமடைவார்கள்.

சோழ மன்னன் சிவகதிபெற்ற இந்தக்கதையை உள்ளன்போடு கேட்பவர்கள், இக்கதையைக் கேட்குமாறு பிறருக்கு எடுத்துச் சொல்லுபவர்கள் அனைவரும் சிறப்புடன் வாழ்வார்களாக. அன்போடு இதனை எழுதியவர்களும், இதை எடுத்துப் படித்தவர்களும் இறைவன் அருள்பெற்று அரசவாழ்வு வாழ்வார்களாக.

அனுகூலம் - காரியசித்தி வினவல் - கேட்டல். சம்பத்து - செல்வம் காயம் - உடல். பிணி - நோய். சிவகதி - மோட்சம். இயம்புதல் - சொல்லுதல்

சு.சொல் - 1 மெவையுமனுக்கூலமாய் 2. சிறுமையானவர் 3 உள்ளம்பு.

திருச்சிற்றம்பலம்.

Greetings

135. Those who listen to the tale of the Cōḻa king
Would enjoy eternal happiness.
Boys would be endowed with wealth

While girls would beget worthy progeny!
Listeners of this story
Would be freed from debts and diseases.
Those who repeat the narrative
Would also enjoy happiness.
The scribes and the tellers of this tale
Are assured of a princely life!

Tiruccirrampalam

[1]கீலக வருஷம் ஆவணி மாதம் 30 ஆந் தேதி பிரகஸ்பதி வாரம் [2]துவாதசியும் உத்திராட நட்சத்திரமும் துலாலக்கினமும் சோப்ன நாம யோகமும் இந்தச் சுபதினத்தில் [3]ஆரணியில் இருக்கும் சடையப்ப செட்டியார் [4]குமாரன் பஞ்சடை செட்டியார் படிக்கின்ற சோழராச கதை [5]யக்ஷகா்னம் வளவ நல்லூரிலிருக்கும் [6]தொண்டை மண்டலத்தாரில் மன்ன பெருமாள் முதலியார் [4]குமாரன் ஆரிமுத்து எழுதி நிறைந்தது.

[7]முற்றும்

சு.சொல் – 1. கீலகஸ்ரீ ஆவணி **ஸ்ரீ ௩௰** 2. துவாதேசியும் 3. ஆறணி 4. குமாறன் 5. அக்ஷகானம் 6. தொண்டமண்டல 7. முத்தும்.

kīlaka varuṣam Āvaṇi mātam 30ān tēti pirakaspati vāram tuvātaciyum uttirāṭa naṭcatiramum tulālakkiṉamum sōpaṉa nāma yōkamum intac cupatiṉattil Āraṇiyil irukkum caṭaiyappa ceṭṭiyār kumāraṉ pañcaṭai ceṭṭiyār paṭikkiṉṟa Cōḻarāca katai yaṭcakāṉam vaḷava Nallūril irukkum Toṇṭai maṇṭalattāril Maṉṉa Perumāḷ Mutaliyār kumāraṉ Ārimuthu eḻuti niṟaintatu.

Muṟṟum

* * *

துணை நூல்கள்

சுவடிகள்

அ. பதிப்புக்குரிய சுவடி

1. தேரூர்ந்த சோழன் யட்சகானம் ஆர். 4098. தாள், அரசினர் சுவடி நூலகம், சென்னை - 600 005.

ஆ. துணையான சுவடிகள்

2. தேரூர்ந்த நாடகம் டி. 491. ஓலை, அரசினர் சுவடி நூலகம், சென்னை - 600 005.
3. தேரூர்ந்த நாடகம் டி. 492. ஓலை, அரசினர் சுவடி நூலகம், சென்னை - 600 005.
4. தேரூர்ந்த நாடகம் டி. 493. ஓலை, அரசினர் சுவடி நூலகம், சென்னை - 600 005.
5. தேரூர்ந்த நாடகம் ஆர். 3192. தாள், அரசினர் சுவடி நூலகம், சென்னை - 600 005.
6. தேரூர்ந்த புராணம் டி. 611. ஓலை, அரசினர் சுவடி நூலகம், சென்னை - 600 005.
7. தேரூர்ந்த புராணம் ஆர். 2646. ஓலை, அரசினர் சுவடி நூலகம், சென்னை - 600 005.
8. தேரூர்ந்த புராணம் ஆர். 3019. தாள், அரசினர் சுவடி நூலகம், சென்னை - 600 005.
9. தேரூர்ந்த புராணம் வசனம், டி. 413. ஓலை, அரசினர் சுவடி நூலகம், சென்னை - 600 005.
10. தேரூர்ந்த புராணம் வசனம், ஆர். 2646. ஓலை, அரசினர் சுவடி நூலகம், சென்னை - 600 005.
11. தேரூர்ந்த வாசகம் உரைநடை டி. 410. ஓலை, அரசினர் சுவடி நூலகம், சென்னை - 600 005.
12. தேரூர்ந்த வாசகம் உரைநடை டி. 411 - 415. ஓலை, அரசினர் சுவடி நூலகம், சென்னை - 600 005.

இ. பிற சுவடிகள்

13. **ஆமையார் அம்மானை** சுவடி எண் 5. ஓலை, ஆசியவியல் நிறுவனம் சென்னை - 600 119.

14. **தில்லை சிதம்பரநாதன் செந்தில் அந்தாதி** சு. எண் 173. ஓலை, ஆசியவியல் நிறுவனம், சென்னை - 600 119.

அச்சு நூல்கள்

15. **ஆய்வுக் கதிர்**, டாக்டர் தா.வே. வீராசாமி, மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயமுத்தூர் - 1. 1974

16. **இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நாடகம்**, டாக்டர் ஏ.என். பெருமாள், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை - 5. 1988

17. **கமலாலயச்சிறப்பு என்னும் திருவாரூர்ப் புராணம்**, டாக்டர் உ.வே.சா. நூல்நிலைய வெளியீடு, சென்னை. 1961

18. **கம்பராமாயணம் - பால காண்டம்**, உரையுடன், கம்பன் அறநிலையம், கோவை - 37. இல்லை

19. **கலிங்கத்துப் பரணி**, கழக வெளியீடு, சென்னை. 1968

20. **கலைக்களஞ்சியம்**, தொகு. 8, சென்னைப் பல்கலைக்கழகம். 1961

21. **கன்னடியன் போர்**, டாக்டர் ப. சர்வேஸ்வரன், டாக்டர் தி. நடராசன் (பதி), மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை. 1981

22. **சாரங்கதரன் யட்சகானம்**, டாக்டர் பூ. சுப்பிரமணியம் (பதி), ஆசியவியல் நிறுவனம், சென்னை - 119. 1996

23. **சிலப்பதிகாரம்**, டாக்டர் உ.வே.சா. நூல்நிலைய வெளியீடு, சென்னை,1978

24. **சுவடி இயல்**, டாக்டர் பூ. சுப்பிரமணியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 113. 1991

25. **சுவடிப் பதிப்பு நெறிமுறைகள்**, முனைவர் த. கோ. பரமசிவம் (பதி), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1989

26. **திரு அருட்பா**, ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் மடாலயம், திருவொற்றியூர். 1964

27. **திருக்குறள், பரிமேலழகர் உரை**, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை. 1994

28. **திருத்தொண்டர் புராணம்**, ஸ்ரீ குமரகுருபரன் சங்க வெளியீடு, ஸ்ரீவைகுண்டம். 1970

29. **திருவலத்துத்தீபம்**, பகீரதன், கஸ்தூர்பாகாந்தி கன்யாகுருகுலம், வேதாரண்யம். 1980

30. **திருவாரூர்த் திருக்கோயில்**, குடவாயில் பாலசுப்பிரமணியன், திருவாரூர் தியாகராச சுவாமி திருக்கோயில் வெளியீடு. இல்லை

31. **திருவாரூர்**, அ. அறிவொளி, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம். 1983

32. **தென்னாட்டுக் கோயில்கள்**, எம். ராதாகிருஷ்ணப்பிள்ளை, அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை - 4. 1987

33. **தேவாரம், பண்முறை, அப்பரும் சுந்தரரும், I. I.** பாண்டிச்சேரி. 1985

34. **நீலியட்சகானம்**, டாக்டர் பூ. சுப்பிரமணியம் (பதி), ஆசியவியல் நிறுவனம், சென்னை - 119. 1994

35. **பழமொழி நானூறு**, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை - 14. 1961

36. **பெரியபுராணம் - ஓர் ஆய்வு**, அ. ச. ஞனசம்பந்தன், தமிழ்ப் பல்கலைக் கழகம், தத்துவ மையம், காஞ்சிபுரம். 1987

37. **பெரியபுராண விளக்கம்**, பகுதி-I, கி. வா. ஜகந்நாதன், அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை - 4. 1987

38. **மகாவம்சம்**, எஸ். சங்கரன் (மொ. பெ.), சமுதாயம் பப்ளிகேஷன்ஸ், சென்னை - 17. 1986

39. **மணிமேகலை**, கழக வெளியீடு, சென்னை - 1. 1985

40. **முக்கூடற்பள்ளு**, மு. அருணாசலம் (பதி), தமிழ் நூலகம், டி. நகர், சென்னை. 1949

41. **மூவருலா**, டாக்டர் உ.வே.சா. நூல் நிலைய வெளியீடு, சென்னை - 41. 1992

42. **வல்லாளராசன் இசை நாடகம், (யட்சகானம்)**, டாக்டர் எல். ஏ.கே. துர்க்கா (பதி), சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-5. 1985

பாட்டு முதற்குறிப்பு

(எண் - பாட்டு எண்)

சொல்லடைவு

(பாட்டு எண்-வரி; வ-வசனம்)



The Appearance of God

TEXT IN TRANSLITERATION

attimukat tuttamaṉai
nittam niṉai cittamē

(Vināyaka Vaṇakkam)

1. *añcu karattaṉai Āṉai mukattaṉai*
intu yiḷampiṟai pōlu mukattaṉai
nanti makaṉtaṉai ñāṉak koḻuntaṉai
puntiyil vaittaṭi pōṟṟukiṉ ṟēṉē

Vināyakaṉ mutalāṉa kaṭavuḷar vaṇakkam

2. *caraṇam caraṇam*
curēntira vantitā caraṇam
haricati vallapā caraṇam
kecamuka cūracaṅ kārā caraṇam
vikkiṉa vināyakā caraṇam caraṇam
caraṇam cinturavataṉa aiṅkarā caraṇam
mūṣika vākaṉā caraṇam
kecamuka cūracaṅ kārā caraṇam
vallapa nāyakā caraṇam caraṇam
caraṇam parama kuruparā caraṇam
mavuḷiyaṇi maṉōkarā caraṇam
paṉṉiru pucavacīkarā caraṇam
aṟumuka caṇmukā caraṇam
caraṇam tiripura takaṉa paracivā caraṇam
pāla vilōcaṉā caraṇam
kirimakaḷ cakita arakarā caraṇam
cantira cēkarā caraṇam
ālilai mēltuyil ananta cayaṉaṉē caraṇam
nanta pālaṉē caraṇam
vāli marttaṉañcey tīraṉē caraṇam
pāṇā curacaṅ kāraṉē caraṇam
imakiri kumari tiripurāntaki caraṇam
mayēsvari caraṇam
pārvati kevuri cāmpavi caraṇam
tēvi caṭātarī caraṇam

curapi pārpati caraṇam
vētapā rāyaṇi caraṇam
kalaimakaḷ matura vāṇī caraṇam
kāciṉi carasvati caraṇam
pātamu piramaṉ ...... caraṇam
veṇkama lācaṉi caraṇam
vēta purāṇa nāyaki caraṇam
tavaḷa rūpiṇi carasvati caraṇam caraṇam

(cōḻaṉkataiyaip putiyavaṭivil kūṟuvēṉ eṉal) ***Kantapattiyam***

3. *mētiṉimēṟ cupameyti nītiyumuḷa cōḻaṉkatai*
nūtaṉa māka ōtiṉēṉ ñāṉamuṟum
pōtamūrtti vināyaka rātara vālē
ciṅkārat tamiḻ nūlai yaṉaintu-caṅkītattoṭu
cōḻaṉkatai tāṉatu colvēṉ
paṅkāki yirukkumaraṉ ceṅkōlakkaṇ
nāyaka raruḷatu koṇṭē

(yaṭcakāṉamākac collak kollināyakaṉ aruḷ vēṇṭutal) ***Kalittuṟai***

4. *pūvula keṅkum purappōr tamiḻaip purappavarum*
yāvarum nalla vamutā meṉaccolli yātarikkak
kāvala ṉākiya cōḻaṉ kataiyaṣṭa kāṉamentaṉ
nāvi liruntu pukalvā yaruṅkolli nāyakaṉē

(Tiruvalattu vāraṇaṉ tuti) ***Campai***

5. *tērūrnta cōḻaṉkatai ceppavē tiruvalattuk*
kārāṉai mukattutippā ṉeṉkaṇapati caraṇam
paḻikkuppaḻi koṭuttuyarnta parakatiyi laṭaintakatai
moḻikkuttiru valattilvāḻ mukkaṇā caraṇam
cirappākac cōḻaṉkatai ceppavē nallavarukku
varappārun tiruvalattu vāraṇā caraṇam

(Vināyakar tuti) ***Ēkatāḷam***

6. *ippaṭitaṉi leṉakkup palaṉaruḷ ceyyum*
toppai yappar kamalapatam paṇivēṉ
kīrtti tarayeṉaik kāttaruḷē ceyyum
pūrtti viṉāyaka mūrttiyaip paṇivēṉ
pūtala mēṟcuki pūtara mākiya
cōti cutarkaṇa nataṉaip paṇivēṉ

(Yaṭcakāṉam pāṭa Murukaṉ aruḷvēṇṭutal) ***Campai***

7. *matinākam puṉalaṇinta vaḷḷalcēy tiruvallaip*
pativāḻu māṟumukaṉ patampaṇiku vēṉē
vāṉavarka ḷāṉaikkuṟa vaḷḷi kaṇava
ṉāṉavaṉai vallaivē lāyutaṉaip paṇivēṉ
aruṭcōḻa rācaṉkatai yaṭcakā nampukala
tiruvallai vāḻmurukār parivеṉakkuṇ ṭāmē

(Vallanātar tuti) ***Tiripuṭai***

8. *vākai cērtiru vallai mānakar*
vāca nēriḻai valla nāyaki
mōka ṉaṉvalla nāta rirupata
muḷari paṇivēṉ
māttan taṉilama rētta viruvarum
pātti tañciṭavaṉaṟ kōttirai yākavē
pūtta vaṉtiru vallai yīcaraip
pōṟṟip paṇivēṉ
ampa lantaṉi liṉpa māyaṅka
ḷāmpu rintavar vallai taṉiṟpala
vumpar pōṟṟiya valla nātar
pātam paṇikuvēṉ
colli lēporu ḷirukkum pōlnalla
tuṇaicey vāreṉak katika māyttiru
vallai vāḻvalla nāta cuvāmiyai
makiḻntu paṇivēṉē
vāḻvu tarumvalla nāta cuvāmitam
makimai yālrā cēntira ṉākiya
cōḻaṉ kataiyaṭca kāṉa mākavē
collu vēṉē

(Vallanāyaki tuti) ***Aṭatāḷam***

9. *nalla nāyaki tiruva lattiṉil*
nalaṅku lāvum nēriḻai
valla nāyaki pāta tāmarai
vaṇaṅku vēṉē

taruma mēceyyun taruma tēvatai
taruma tāyttiru vallaip pāḻi
nēriḻai yammai pāta paṅkaca
pātam paṇivēṉ
pacumai nāyaki yaruḷi ṉāṟṟeṉ
ticaiyiṟ cōḻaṉ kataitaca
vacaṉa mataiyaṭca kāṉa vitamāy
yicaiku vēṉē.

(Tirumāl tuti) ***Ēkatāḷam***

10. *kuṇaṉē tiruvalat taṉaṉē puraviyu*
vaṇaṉē nārā yaṇaṉē caraṇam
muntāy moḻiya varantā tiruvallai
nantā ḻikarkō vintā caraṇam
civakatai rācēn tiraṉkatai taṉaiyoru
navavitañ colamā tavaṉava ṉaruḷvāṉē

(Ēkavalli vaṇakkam) ***Campai***

11. *cummaimakka ḷellāmpukaḷa vemmaicēti tiruvallai*
tammateṉṉu mēkavalli yammaipatam paṇivēṉ
kaṅkaiyaṇai yiruntukari kālaṉaḻait tiṭavantu
taṅkiṭuvallai yēkavalli yammaiyaruḷeṉak kitamāmē.

(Kalaimakaḷ vaṇakkam) ***Cintu***

12. *nampiṉē ṉuṉpatamē - carasvati*
nampiṉē ṉuṉpatamē
nampiṉē ṉuṉpata nālumuka rācarō ṭaṉpōṭuvāḷ
kaliyāṇi - kalaivāṇi - yuṉaippēṇi (nampiṉē)
vēta purāṇam viṉōtam palappala
pāta maṟupattu nālu kalaikkiyaṉañ
cōti cantattut tōṟṟamuṉ ṭākippiṉ
pōta veṇṭā maraiyai ....nāvil - kuṭimēvil (nampiṉē)
poṉṉula kōrum puviyiluḷ ḷōrkaḷum
paṉṉa varumvēta pāraka ruṅkalvi
taṉṉai yuṇarntakaṉṟa celva mākiṉa

ruṉṉaru ḷēneñci lōta uṇmai tēṭa - kaṭaipāṭa (nampiṉē)
ñālamel lāmpukaḷ rācēntira coḻaṉvi
cālama tāyttaṉma cattiyan tappāmal
pālama tāṇṭu patampeṟṟa naṟkatai
kōlama tāyicai kūṟak - kuṟaimāṟa - niṟaivēṟa
nampiṉē ṉuṉpatamē carasvati
nampiṉē ṉuṉpatamē.

(Pulavarkaḷaip pōṟṟutal) **Tiripuṭai**

13. *tēcameṅ kumpira kāca māmpaṭi*
kāciṉi yōraip pōlavē kalvi
yīca rāṉavar tamaiyel lāntiṉam - pūcaipuri vēṉē

nāṉmo ḻintiṭuṅ kataiyaip pulavōr
nakaitti ḻippurai collāreṉ ṟēyavar
tāṉmo ḻintiṭum moḻicol vēṉavar - calikaiyālē

ñāṉan taṉaiyuṇṭu nāḷai veṟuppava
rarita lōvatu pōlavē muṉpu
coṉṉa kataitamiḻt turaikaḷ valuvāl - colluvēṉē

ampu rācimuṉ ṉeripō lakkai
lāca malaimuṉṉi laṭukkal pōlavuṅ
kumpa muṉinikar pulavar muṉaiyāṉ - kūṟuṅkatai

eṉṟu pulavaruk kupacaraṇai moḻintitu
naṟkaṭai collil mōṭca māṉatil
naṉṟalāmeṉak kūṟuvēṉ toṇṭai nāṭutaṉilē

nāri teyvattuk kēttu lāvalla
nātar vāḻtiru vallai mānakar
vīracaivak kulāti makattaiyaṉ - viḷampukiṉṟāṉ

(Tiruvārūr ciṟappu) **Ēkatāḷam**

14. *mukkaṇ vināyaka mūrtti tayāniti*
tikkatika māṉa tiruvā rūrē
mūvarun toḻumutal mūrtti kayilaimalait
tēva ṉavataritta tiruvā rūrē

purrịta māṉa purāṉtaka ṉatikirupaic
cittan tarittirukkun tiruvā rūrē
pāriṉilē yaṉpar pāvakar mātiyaic
cīraṇa mākkiya tiruvā rūrē
tēvapati rācēṉ tiracōḻa ṉukkumuṉ
civakati yaruḷiya tiruvā rūrē.
cemmaiyā yaracēnalla caturvētatti ṉālpala
teyvamuṅ kuṭikoṇṭa tiruvā rūrē
kalviyuṇ ṭāyciva kaḷaikaluṇ ṭāyveku
celvamuṇ ṭākiya tiruvā rūrē
āṉaikutirai civikai kaṉṉit tēroṭu
cēṉai yatikamuḷḷa tiruvā rūrē
narapati yākiya rācēntira ṉeṟṟura
tirapati yākiya tiruvā rūrē.

(Tiruvārūr makkaḷum maṉṉaṉum) ***Tipatai***

45. *piṉṉaiyu mattalap perumaiyaic colvēṉ*
aṉpait tiritturai yavaṉkulat tavarkaḷ
canti yāṉamup pōtiṉum naṭakkum
rācākka ḷiṭattumeñ ñāṉama tuṇṭu
tirikuṭi yārumic cekamaintar tāmum
paramaṉaip pōṟṟiyē palittuvāḻn tiruppār
maṟṟuḷa cāti makatēvar tammai
nittamum tuticeytu niṟaivuṭa ṉiruppār
yōcaṉaikku yōcaṉai yovvoru vīti
vācamāyp palappala vakaiccāti vāḻum
kōyilmaṇ ṭapamatiṉ kōpuram viḷaṅkuñ
cāyali lintiraṉ taṉapati yellām
aḷakaip patiyeṉṉa lākumap patiyav
vaḷamper riṭuntiru vārūri liruntum
pārāḷu maṉṉavaṉ paṇippakai yāṉa
cūriya vaṅkiṣat turaicōḻa rācaṉ
pērirā cēntiraṉ piṟpala utāraṇa
cīriya kīrttiyē cintaiyi lukantōṉ

ekkālan tāṉuñ civakkiyāṉa vacaṉam
poykkāṉ mikutaṉam puttiṟa rūpaṉ
tāmatam tarma katiivai nālum
pūmiyi luḷḷanaṟ pōtaṉar colavum
tēṟumōr māṉiṭaṉ teṭṭāṉmai taṉṉai
yāṟupaṅ kāyccila vākkiyōr paṅku
tāṉuṇ patuveṉac cāstira vaḻiyāl
tāṉcolak kēṭṭavaṉ taṉṉuṭa tēcam
payiriṭum kuṭikkañcu paṅkutaṉ paṅku
tayavuṭa ṉorupaṅku tāṉāṟi loṉṟu
kaṭamaikoṇ ṭēvaṭa kavutami yeṉṟuṅ
kuṭikoḷ valappuṟaṅ kuṇakkuteṉ kuṭakku
miṭamelā māṟiloṉ riṟaivāṅkik koṇṭu
kuṭaiyoru kuṭaiyāyccēṅ kōlatu celuttic
cakala caṉattaiyun tāytantai pōla
cakala caṉattaiyuñ cantati pōla
vaittu raṭcikku makarācaṉ taṉma
cattiya māyaric cantiraṉaip pōlap
pulikkoṭi viruttuḷāṉ pukaḻuṭa ṉaracu
celuttimaṉ ṉavaṉeṅkiṟa ticaipaṭait tāṉē.

(Maṉṉavaṉ paṇpu) **Campai**

16. *vārttaitaṉiṟ patiṉeṭṭu vārttaitaṉil vallavaṉ*
kīrttiyē pūṣaṇa kirīṭapati maṉṉaṉ
coṟpaṉattil poyccollāt turaicōḻa rācēntiraṉ
eppoḻutun tiruniṟu īṭilāma laṇivōṉ
nāmamatu tarittuciva nāmamatun tutittuviṣṇu
nāmamatum pukaḻntuticai nāmamatum paṭaittōṉ
vittaitaṉi lēkalvi vittaiyu muyittiyavil
vittaiyum niruttamiṭum vittaiyumuṇ tāṉōṉ
pūcaitaṉi lēramya pūcaiciva pūcaiyari
pūcaikatir pūcaikuru pūcaitiṉam purivōṉ
iḷamaitaṉai yeḻutumai eṉaveṉṉi matamelā
muḷamati laṭakkavaṟi vuḷḷakuṇa cīlaṉ

(Amaiccar iruvar) ***Tiripuṭai***

17. *nītiyun teyva nēcamu taṉma*
    nilaiyum vaḷarttiṭu cōḷa pūpati
    yāṉa vaṉcamas tāṉa mantiri
    yavarka ḷiruvar
    oruvaṉ peyarcakala kalaival lavaṉ
    oruvaṉ peyarō nīti pūṣaṇaṉ
    iruvar kaḷaiyuman tirikaḷāy vaittut
    taraṇi yāṇṭāṉ
    iraṇṭu mantiri kaḷaiyumen nērantaṉ
    ṉaṇṭaiyē vaittuk koṇṭu maṉṉavaṉ
    vaṇṭu ḷātaṉ māṉuk kurantanta
    viṇṭu pōlē
    jaṉaraṭcakaṉ pakta caṉacam pāviṉa
    ṉaṉaivar kaḷukkum nallavaṉ-taṉ
    maṉaivi yēmaṉai vēṟu miṉṉārait
    tāytaṅkai neñca mamaippōṉ

(Aracamā tēvi) ***Ēkatāḷam***

18. *mātari lēkalai mātu - mataṉarati*
    mātuk kamalapati māteṉu mātu
    pātat takaṭataṉil rattiṉa - maṇiyatu
    patittatu pōlē vaḻittiya mātu
    pārttipa rācaku mārarati - rācēṉtira
    pārttipaṉ maṉatiṉuk kēṟṟapoṉ mātu
    vañcaṉai yaṟiyā vañci - yamurtakuṇa
    miñci yaracaṉōṭu koñciya mātu
    aṟiviṉilē mantiri aḻakiṉi lētiru
    poṟumaiyi lēpuvi puṇṇiya mātu

(Araci - paṭṭamā tēvi) ***Campai***

19. *puntimakiḻ vākiyintap pūmiyōr coliyaḻaikkap*
    paintoṭimiṉ ṉārpeyarum paṭṭamā tēvi
    kōlamayi lāḷmuruku mālaimuṭi yāḷirata
    pāliṉurai yāḷpeyarum paṭṭamā tēvi
    aṉṉanaṭai yāḷpūcceṇ ṭeṉṉumulai yāḷkiḷikaḷ
    paṉṉumoḻi yāḷpeyarum paṭṭamā tēvi

(Maṉṉaṉun tēviyum makiḻntiruttal) ***Tipatai***

20. *ittaṉai yuvamaiyu meḻilatum paṭaitta*
pattiṉi yuṟṟamā tēviturai rācēntira
cōḻapū patimēl mikuttiṭum paṭṭamātēvi
niṉaitaṉak keḻilpēr nērttiyatā kappala
paṇiti tarittiṭum paṭṭamā tēvi
kuṇamum vaṇakkamuṅ koñciya moḻiyum
iṇaṟu corukiya kūntaliṭa vaṭivamatum
pacumañcaḷ vataṉamum pavaḷaccev vāyum
kucakirit tāmaraik kumuḷamē pōlum
añcu viraliṉuk kaṭaṅkiya viṭaiyam
pañciṉu metteṉum pātamum poṉṉā
paraṇamum paṭṭup paṭṭā vaḷiyum
iratiyō rampaiyō iṉiyamē ṉakaiyō
tirumakaḷō tēvēn tiraṉmaṉai yāḷō
parivuḷa pāṇṭavar paṅkil lāḷō
maṇṇupeṇ maikkuppeṇ maiyalē koḷḷa
eṇṇavē yulakiṉi levarkaḷun tutikka
maiyē maṟuvaṉa maṟumaṟu villāḷ
vaiyakam pukaḻpaṭṭa mātēvi yārum
cukuruta rācēntira cōḻaṉu moṉṟi
yāka miraṇṭucī vātta moṉṟu
pōkapōk kiyattuṭaṉ pūrittuk koṇṭu
mālun tiruvumpōl mataṉu miratipōl
pāluntē ṉatupōl paḻamuñcak karaipōl
pūvum maṇamumpōl poruntiyoṉ ṟāki
nāviṉilē tiyāka rāyarai niṉaittut
tēvaruk karuccaṉai tirivēḷaiyum naṭatti
yāvaruk kumnaṉmai yāyula kellām
aracu celuttiyē yāṟilōr paṅku
varikoṇṭu kuṭikaḷ vāḻntiṭac ceytu
.... vitappeya raṉpat
tāṟutē cattil aṉēkarāc ciyaṅkaḷ
nāṭu paṭaitta virācēntira cōḻaṉ
pāṭum pulavartam pakkatti lirukka

ācīr vatittunal laṭcatai koṭukkum
pūcurar kātaṉam pōṭṭiru meṉṉa
maṟumaṇṭa lattuḷa maṉṉavar vantu
tiṟaikappaṅ kaṭṭiyē cēvittu niṟka
paṭṭar pukaḻntiṭap palavātti yaṅkaḷ
koṭṭi muḻaṅkak kolumaṇṭa pattil
aḻakuciṅ kātaṉat tiṉmicai yiruntu
vaḷakucak karakkuṭai yarukē piṭikka
miṉṉārveṉ cāmarai vīcamel liyarkaḷ
poṉṉālaṅ koṇṭumuṉ pōyppaṇi māṟa
āṉaicē ṉaikaḷeti rāyvantu kāṇa
māṉapū ṣaṇaṉari vākkiya rācēntira
cōḻakōṉ pōtaṉai collum periyōrkaḷ
kēḷviyuñ civakataik kēḷviyuṅ kēṭṭuk
koṇṭula keṅkuntaṉ kōveṉap pārttuk
koṇṭupuṇ ṇiyavaḷi koṇṭenta nāḷum
taṉmamē nittiyam taṉmamē mutti
taṉmamē yatipalan taṉmamē uṟavu
taṉmamē ceyameṉat tāṉirun taṉaṉē

(Makkaḷ makiḻcci) ***Tiripuṭai***

21. *māni lantaṉiṟ kuṭiyel lāraiyum*
varuṣat torunā ḷaḷaittu viruntiṭṭu
māṉa māmveku māṉañcey teṉṉa
vārttai pukalvāṉ
aṭikkuṅ kāṟṟukku merikkuṃ veyilukku
matika mārikku matirntu viḻumanta
yiṭikkum payamatal lāmal maṟṟoru
caṅkaiyillai yuṅkaḷukku
yiṅku nīṅkaḷel lāruñ cukattuṭa
ṉirukkil nāmcukit tirukki ṟōmeṉat
taṅka muṭimaṉṉaṉ kuṭikkel lāmikat
taṉmai yuraittāṉ
aracaṉ pukaḻvatuṅ kuṭikaḷ makiḻntiṟai
yavaṉaip paṇivatu māti yukattiṉu

periya tāmeṉa vuraikkum paṭiveku
pērpeṟ riruntāṉ
maṉatu kuṟaiyuḷḷa pērka ḷuṇṭeṉṟu
vāyi ṉāṟcollak kāṇa variyatu
tiṉamuṅ kaḷippuṭa ṉiruppa tēyantat
tēca mellām.

(Araṇmaṉaimuṉ ārāyccimaṇi) ***Ēkatāḷam***

22. *tēcam purakkumakā rācaṉ maṉacilā*
lōcaṉai ceytinta kāciṉi taṉilē
maṉakkuṟai yuḷḷavar collikkoḷ ḷavēnammiṭa
camukkameṭ ṭāteṉa maṉaikkumuṉ ṉāka
tūṇiraṇ ṭūṇiṭ tulāṅkoṭuṭ tatumakkaḷ
pāṇitaṉak keṭṭavē patittaṉaṉ maṇiyai
kāṭciyiṟ kaṇmuṉ kāṇavē periya
rākṣimaṇi yataṉai yamaittaṉa ṉaracaṉ
kuṟṟaṅ kuṟaiyuḷa racaittiṭa vēyanta
cattam viṉavivi cārittiṭu vōmeṉa
āṭṭiya ṉimmoḷi yaṟiyavulaka meṅkun
tōṭṭiyi ṉālmuṟai cāṟṟuviṭ taṉaṉē.

(Nāṭṭil nītimuṟai) ***Tipatai***

23. *ippaṭi yāka virācēntira cōḻaṉ*
naṭpuṭa ṉēyinta rācciya pāram
paṟittaṉa pūvum parimaḷam pōla
viruttiyā yevarkaḷum viṟiyē vāḻak
kuṟaivilā tirukkiṉṟa koṟṟavaṉ taṉṉai
maṟaiviṉi leṉṉacol vaḷaṅkutō veṉṟē
poṟṟā ṉaraiviṭ ṭuraikaḷcō tittuk
kuṟṟamil lātacoṟ kūṟavē kēṭṭu
nallatel lāntiyā kararuṭ kaṭākṣam
